பண்டைய இலக்கியம் மற்றும் கலைகள் பற்றி இதுவரை நான் ஒன்றும் குறிப்பிடவில்லை. மேதைகள் நிறைந்த இந்த அரங்கில் அதைச் சொல்ல நான் தயங்குகிறேன். தமிழ் இலக்கியத்தின் செழுமையும், வளமையும், புதுமையும், மனித நேயமும் நன்கு தெரிந்ததே. அதேபோலத்தான் வாழ்க்கை நடைமுறைக்குத் தேவையான உலகச் சிந்தனை மற்றும் வழிகாட்டுதல் அடங்கிய மனிதச் சமுதாய முழுமைக்கும் பொருந்துவது திருக்குறளாகும். மனித ஒழுக்கத்திற்கான விதிமுறைகள் அடங்கிய இந்த நூல் எழுதப்பட்டு 18 நூற்றாண்டுகளுக்குப் பின்பு இன்றும் அதே வேகத்துடனும் என்றும் அதே வேகத்துடன் திகழும் சமுதாயத்தைப் பற்றியும், சமூகத் தகுதி பற்றியும் பேசும்போது ஒருவர் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்களின் நிலை பற்றிப் பேசாமல் இருக்க முடியாது. தமிழ் இலக்கியத்திற்குக் கணிசமான அளவு பெண்கள் தங்கள் பங்கை ஆற்றியுள்ளனர்.

சமீபக் காலத்தில் சமூக அரசியல் நடவடிக்கைகளில் அவர்கள் முன்னணியில் இருந்து வருகின்றனர். இந்தியாவில் முக்கியமான காலகட்டங்களில் பெண்கள் நாட்டின் தலைமையை ஏற்று நடத்த முடியும் என்று நிரூபித்துள்ளார்கள். கவிதை, நாடகம், புதினம் ஆகியவற்றில் மட்டும் பெண்கள் போற்றத்தக்க கதாநாயகிகளாக மட்டுமல்லாமல் நாட்டின் உண்மையான வாழ்விலும் அவ்வாறு திகழ்கின்றார்கள். சமுதாய முன்னேற்றத்தின் அடையாளம் சமுதாயத்தில் பெண்களின் நிலையைப் பொறுத்தே உள்ளது என்று ஜவகர்லால் நேரு அடிக்கடி கூறினார்.

சமுதாயத்தில் பெண்களின் முன்னேற்றம், அதிகாரம் அவர்களது கரங்களுக்கு வருதல் ஆகியவற்றில் தமிழகம் இந்தியாவிலேயே முன்னணியில் நிற்கின்றது என்பதைக் காணும்போது மகிழ்ச்சிகரமாக உள்ளது. இந்தியக் கலாச்சார வரலாற்றில் இரண்டு கொள்கைகள் தனித்து நிற்கின்றன. பக்தி மற்றும் உலக மனித நேயம் - தமிழ்க் கலாச்சாரம், இலக்கியம் ஆகியவற்றில் இவை இரண்டும் பண்டையக் காலத்திலிருந்து நவீன காலம் வரை இருந்து வருகிறது. சங்கப் புலவர் ஒருவர் ஒன்று எழுதினார்: "யாதும் ஊரே; யாவரும் கேளிர்!" சாதி, மதத் தடைகளைக் கடந்து பக்திப் பரவசத்துடன் பாடியது இந்தியாவிலேயே

நந்தனாருக்கு இணையாக யாரும் கிடையாது. மனிதநேயத்திலும், பக்திமார்க்கத்திலும் தமிழ்க் கலாச்சாரம் மனித அனுபவங்களின் உச்சத்திற்கே சென்று விடுகின்றது. இத்தகைய உயர்வான எண்ணங்களையும், அனுபவங்களையும் அழகோடும் தெளிவுடனும் தமிழ்மொழியில் வெளிப்படுத்தலாம். பல்வேறு மொழிகளுடன் ஒற்றுமையாகத் திகழும் இந்தியாவின் அங்கமாக இது விளங்குகின்றது. பல்வேறு மொழிகளில் எழுதப்பட்டிருந்தாலும் இந்திய இலக்கியம் ஒன்றாகவே கருதப்படுகிறது. இந்தியாவின் இலக்கியமும், சிந்தனையும் ஒன்றாகித் தன்னுடைய புகழோடு வெளிப்படுவது தமிழ்மொழி ஆகும்.

உலகத் தமிழாராய்ச்சிக் கழகத் தலைவர்
பேராசிரியர் நொபொரு கரஷிமா அவர்களின் பேருரை

இந்தியக் குடியரசின் துணைத்தலைவர் மேதகு திரு.நாராயணன் அவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு செல்வி ஜெயலலிதா அவர்களே, அமைச்சர் பெருமக்களே, உலகின் பல நாடுகளில் இருந்தும் வந்திருக்கும் பேராளர்களே, இந்த மாபெரும் மாநாட்டின் தொடக்க விழாவிற்குத் திரளாக வந்திருக்கும் பெருமக்களே, வணக்கம்!

எட்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ள ஜப்பானிலிருந்து வந்துள்ளேன். என்னைப்போலப் பல தமிழன்பர்கள் உலகின் பல நாடுகளிலிருந்தும், தமிழகத்தில் இருந்தும் இங்கு வந்துள்ளார்கள். உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் தலைவர் என்ற முறையில் உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் சார்பில், வரலாற்றுச் சிறப்புமிக்க சோழர் தஞ்சையில் உங்கள் எல்லோருடனும் கலந்து தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபெறும் வாய்ப்பைப் பெற்றமைக்குப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாடு அரசின் பேராதரவைப் பெற்றுத் தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இம்மாநாட்டைக் கூட்டியுள்ளோம். வள்ளன்மையுடன் எங்களுக்கு உதவ முன்வந்த தமிழக அரசுக்கு, சிறப்பாக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாநாட்டினை ஏற்பாடு செய்யத் துணைபுரிந்த அனைவர்க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழர்கள் தங்கள் பண்பாட்டின் சிறப்பை மேலும் பொலிவாக்க முனைய வேண்டும். தமிழ் மொழியைச் சிறந்த அறிவியல் மொழியாக வளர்க்க வேண்டும். இது என் ஆழ்ந்த விருப்பம். இம்மாநாடு அந்த முயற்சிக்கு உறுதுணையாக அமையும் என நம்புகிறேன்.

'இருபத்தோராம் நூற்றாண்டிற்குத் தமிழ்ப் பண்பாட்டின் கொடை' என்னும் பொருளில் இம்மாநாட்டில் கிட்டத்தட்ட 500 ஆய்வுக் கட்டுரைகள் வழங்கப்படவுள்ளன. இவற்றைப் படைத்தளித்துள்ள பன்னாட்டறிஞர்கள் நம் அன்பிற்கும் நன்றிக்கும் உரியவராவர். அவர் தம் படைப்புகள் நாளைய சமுதாயத்தை மேம்படுத்த உதவும் என நான் ஆழமாக நம்புகிறேன்.

மாநாட்டிற்கு வந்திருக்கும் பிரதிநிதிகள் அனைவரையும் மீண்டும் வரவேற்று அமைகிறேன்.

தமிழ் வாழ்க!

மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் நிறைவு விழா தலைமையுரை

இன்னுயிரினும் இனிய தமிழ் மொழிக்கு நாம் நடத்திய ஐந்து நாள் ஆராதனையின் நிறைவு நாள் விழாவில் கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் காண்பதில் நான் பெருமிதமும் பேருவகையும் அடைகின்றேன்.

தஞ்சைத் தரணியில் ஒரு புறம் வரலாறு காணாத கூட்டம், மற்றொரு புறம் வரலாறு காணாத தமிழ் வளர்ச்சிப் பணிகள். அருந்தமிழையும், பழந்தமிழ்க் கலைகளையும் வளர்த்த தஞ்சைப் பூமி மீண்டும் ஒரு முறை அந்தப் பெரும் பேற்றை இன்று பெற்றுள்ளது. தமிழ்மீது பற்றுக் கொண்ட காவலர்கள் தமிழகத்தை ஆண்டபோது இருந்த தமிழ் காக்கும் உணர்வும், தமிழைப் போற்றும் மாண்பும் மீண்டும் ஒருமுறை இங்கே அரங்கேற்றப்பட்டுள்ளன என்றால், அது மிகையாகாது. கடந்த 5 தினங்களாகத் தஞ்சை மாநகரத்தின் கோலாகலமே இதற்குச் சான்று ஆகும்.

இன்றைய சூழ்நிலையில் ஒரு மொழி, சர்வதேச சமுதாயத்தில் இடைவிடாது நிகழ்ந்து கொண்டிருக்கிற சமூக, பொருளாதார, உணர்ச்சிப்பூர்வமான மாறுதல்களையும், அறிவியல் கண்டுபிடிப்புகளால் ஏற்படுகின்ற அடிப்படைப் பண்பு மற்றும் மதிப்பீட்டு மாற்றங்களையும் எதிர்கொண்டு புதிய மாறுதல்களுக்கு ஏற்பத் தன்னைத் தயார் செய்துகொள்ள வேண்டிய ஒரு சூழ்நிலையில் உள்ளது. புதிய மாற்றங்களை ஒரு மொழியினால் ஏற்க முடியாமல் போனால், அதனால் ஏற்படுகின்ற தாக்கங்கள் அந்த மொழியின் வலிமையைக் குறைத்து விடும். வளமார்ந்த மொழியாக, வழக்கில் என்றென்றும் இருக்கும் மொழியாக மாற வேண்டும் என்றால் நிலைத்த பழைமையும், வளரும் புதுமையும் இரண்டறக் கலந்து இரண்டின் தன்மைகளையும் உள்ளடக்கியதாக அந்த மொழி வளர்ந்து வரவேண்டும். மாற்றம் என்பது தவிர்க்க முடியாத இயற்கையின் விளையாட்டு; இறைவனின் அருட்கொடை. மாற்றங்களுக்குத் தடைபோடுவது என்பது இன்றைய

சர்வதேச அரங்கில் இருந்து நம்மை நாமே தனிமைப்படுத்திக் கொள்வதற்கு ஒப்பான செயலாகும். ஒரு மொழி காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப அனைத்துப் பணிகளையும் செம்மையாகச் செய்யும் திறமையும் வலிமையும் பெற்றால் தான் அந்த மொழி வளர்கின்ற மொழியாக இருக்கும்.

எனவே, தமிழ் மொழி வளர்ச்சியின் கூறுகளை இங்கே அறிஞர்கள் ஒன்று திரண்டு ஆராய்ந்து மொழியின் தனித்தன்மை அழிந்து விடாமலும் அதே நேரத்தில், காலத்தின் தாக்கத்திற்கு ஏற்பத் தன்னைப் புதுப்பித்துக் கொள்வதற்குத் தேவையான ஆற்றலை அதற்கு அளிக்கத் தங்களது அறிவார்ந்த ஆலோசனைகளை வழங்கியுள்ளார்கள். மறைந்து வாழும் பழந்தமிழ் இலக்கிய உணர்வுகளைத் தட்டி எழுப்பி, தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பையும், இலக்கிய மரபையும் இனம் காட்டி உள்ளார்கள். பழந்தமிழ்க் கலைகளையும் நாட்டுப்புறக் கலைகளையும் இங்கே நடத்திக் காட்டி மக்கள் மனங்களில் அவற்றின் மீது ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டை ஏற்படுத்தி உள்ளோம். தமிழ் மொழியின் தாக்கம், நமது வாழ்வியல் முறையிலும் கலை இலக்கியங்களிலும் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றிலும் உண்டு என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காட்டி உள்ளோம்.

இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகளானாலும் தமிழ் மொழி தனது சீரிளமைக் குன்றாமல் அதே தனிப் பண்புகளுடன் திகழ வைக்க இன்றைய வளரும் தலைமுறை உறுதி ஏற்க வேண்டும் என்று இந்த மாநாட்டின் வாயிலாக இன்றைய இளைய தலைமுறையினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஐந்து நாட்களாகக் கோலாகலமாக நடைபெற்ற இந்த எட்டாம் உலகத்தமிழ் மாநாடு தமிழ் வளர்ச்சிக்குப் புதிய பரிமாணத்தையும் ஒரு புதிய உத்வேகத்தையும் அளிக்கும் என்று நம்புகிறேன் அதற்கு முத்தாய்ப்பு வைப்பதுபோல் சில அறிவிப்புகளை இந்த மேடையில் உங்கள் முன் வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

1 1981-ஆம் ஆண்டு ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டின்போது எனது அரசியல் ஆசான் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழ்மொழி வளர்ச்சிக்காக "உலகத் தமிழ்ச் சங்கம்" ஒன்றை ஏற்படுத்தினார்கள். ஆனால், பல்வேறு காரணங்களால் அந்த உலகத் தமிழ்ச் சங்கம் சரியாகச் செயல்படவில்லை. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்று அறிவித்த உலகத் தமிழ்ச் சங்கம் மீண்டும் அதே மதுரையில் புதுப்பொலிவோடும் சிறப்போடும் அமைக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தமிழ்ச் சங்கம், தமிழக அரசின் ஆளுகைக்கு உட்பட்ட ஒரு

நிறுவனமாகவும் அதே நேரத்தில், பல்வேறு அறிஞர்கள் தங்களது கருத்துக்களை எடுத்துரைத்துத் தமிழின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றுகின்ற ஒரு அமைப்பாகவும் அமையும்.

தமிழின் தொன்மையான இலக்கியங்களையும் இலக்கணத்தையும் பராமரிப்பதோடு எதிர் வரும் நூற்றாண்டுகளில் தமிழிலேயே அனைத்துத் துறைகளிலும் கல்வி கற்பதற்கான ஆயத்தங்களைச் செய்வதற்கும் இந்த அமைப்பு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும். மொழி ஆராய்ச்சி, சொற்களஞ்சியம் தயாரித்தல், மொழிபெயர்ப்புகள் ஆகியவை இந்த அமைப்பால் மேற்கொள்ளப்படும்.

2. ஒரு மொழியின் "சொற் பிறப்பியல் அகர முதலி" அதாவது Etymological Lexicon தயாரிப்பது என்பது ஒரு கடினமான பணி ஆகும். பன்மொழியியல் வல்லுநர்களும், பல்துறை அறிஞர்களும் ஒருங்கே சேர்ந்து ஆற்ற வேண்டிய மிகப் பெரிய பணியாகும். "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டம்" இருபதாண்டுகளுக்கு முன்னர்த் தொடங்கப்பட்டிருந்தாலும் இதுவரை இரண்டு பாகங்கள் மட்டுமே தொகுத்து முடிக்கப்பட்டுள்ளன. இன்னும் முடிக்க வேண்டிய பணிகள் ஏராளமாக உள்ளன.

எனவே, இந்தச் "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் ஆய்வு நூல்" திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தி, இன்னும் ஐந்தாண்டுக் காலத்திற்குள் அதாவது 21-ஆம் நூற்றாண்டில் நாம் கால் எடுத்து வைப்பதற்கு முன், "தமிழ்ச் சொற்பிறப்பியல் ஆய்வு நூல்" வெளியிட வழிவகை செய்யப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தமிழில் கலைக்களஞ்சியத்தை உருவாக்கும் திட்டம் 1947-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இருந்தும், இதுவரை 10 தொகுப்புக்கள் மட்டுமே வெளிவந்துள்ளன. அசுர வேகத்தில் முன்னேறிவரும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப இந்தக் கலைக்களஞ்சியங்களைப் புதுப்பிக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டுள்ளதால், இந்தப் பணி இடையிலேயே நின்று விட்டது. பல துறைகளின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு தமிழ்க் கலைக் களஞ்சியத்தை முற்றிலும் புதிய வடிவத்தில் வெளியிடுவதே சாலச் சிறந்தது ஆகும். உலகளாவிய புதுமை வாய்ந்த மிகச் சிறந்த கலைக்களஞ்சியங்களின் அடிப்படையில் தமிழில் புதிய கலைக்களஞ்சியம் ஏற்படுத்துவதற்குத் தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. தமிழ் மொழி அதிகமாகப் பேசுகின்ற மக்கள் வாழும் அயல்நாடுகளில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களில் தமிழுக்கு என்று ஒரு இருக்கையினை A Chair for Tamil Studies ஏற்படுத்தி அதன் மூலம் தமிழை வளர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் இருக்கைகள் ஏற்படுத்துவதற்கான அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் விரைவில் தேர்வு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. தஞ்சைத் தரணியில் தமிழை வளர்க்கின்ற மாபெரும் பணியில் பல காலமாக ஈடுபட்டு வருகின்றது கரந்தைத் தமிழ்ச் சங்கம். அச்சங்கத்தின் மாணவர் இல்லம், தமிழ் பயிலும் மாணவ, மாணவியருக்கான உணவு விடுதி, கூடுதல் நூலகக் கட்டடம் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு 75 இலட்சம் ரூபாய் நன்கொடை தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

6. சங்க கால இலக்கியங்களின் வாயிலாகத் தமிழ்ப் பெண்டிர் சமுதாயத்தில் எத்தகையதொரு சிறப்பான அங்கத்தை வகித்தனர் என்பதை நாம் அறிய முடிகின்றது. எனவே, சங்க காலம் முதல் 20-ஆம் நூற்றாண்டு வரை மகளிர் மேம்பாட்டை ஆய்வு செய்வதற்காக மகளிர் இயல் துறை, அதாவது Department of Women Studies என்ற ஒரு புதிய துறையைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. மயிலாடுதுறையில் உள்ள தர்மபுரம் ஞானாம்பிகை மகளிர் அரசுக் கலைக் கல்லூரியில் "செயல் முறைத் தமிழ்", என்ற புதிய பாடத் திட்டம் இந்த ஆண்டு முதல் துவக்கப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சிக்கு ஊக்கம் தரும் வகையில் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நினைவாக அந்தக் கல்லூரியில் புதிய கட்டடம் கட்டிக் கொள்ள 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. காரைக்கால் அம்மையார் அவர்கள் தமது தமிழ்ப் பண்களால் வகுத்துத் தந்த இசை முறை தான் பல்வேறு திராவிட மொழிகளின் இன்றைய இசை வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கிக் கொண்டிருக்கிறது. கர்நாடக இயல், இசை மேதைகளுக்கும், தேவாரப் பண்ணிசை பாடிய நாயன்மார்களுக்கும் முற்பட்ட காலத்தில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் பாடிய, "நட்டபாடை" பண்ணும், "இந்தள" பண்ணும் அவரது காலத்திற்குப் பின்னால் தமிழ், தெலுங்கு, கன்னடம், வடமொழி, மலையாளம் ஆகிய மொழிகளில் இசையை வளர்த்தவர்களுக்கு முன்னோடியாக, வழிகாட்டியாக விளங்கியது. தென்னக மொழிகளில் பிற்கால இசை

வளர்ச்சிக்கு வித்திட்ட இசை முன்னோடி, மூத்த தமிழ் மகள் காரைக்கால் அம்மையார் அவர்களைத் "தென்னக இசையின் தாய்" என்று வாயாரப் போற்றி மகிழ்வது சாலப் பொருந்தும் என்று கருதுகிறேன். இன்று நாம் மகிழ்ந்து போற்றும் பல்மொழி இசை மேதைகளுக்குத் தனது தமிழ்ப் பண்களால் வழிகாட்டிய காரைக்கால் அம்மையாரைத் "தென்னக இசையின் தாய்" என்று இனி அழைப்போம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

9. 1981-ஆம் ஆண்டு, ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் இறுதியில் புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர் அவர்கள், 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்று முழங்கினார்கள். சீரிய முறையில் நடைபெற்ற இந்த எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டின் விளைவாகத் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு புதிய பரிமாணத்தையும் உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளதை நிரந்தரமாக்கிடவும், அறிவியலிலும் தமிழ்; அனைத்திலும் தமிழ் என்பதை உணர்த்திடவும், "இன்றும் தமிழ்; என்றும் தமிழ்" என்ற புதிய முழக்கத்தை இந்த மாநாட்டின் எழுச்சி முழக்கமாக அறிவிப்பதில் நான் பெருமிதமும் பேருவகையும் அடைகின்றேன்.

இந்த மாபெரும் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகைத் தரவேண்டும் என்று மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்களை நான் நேரில் சென்று அழைத்த உடனேயே இரண்டாவது சிந்தனையின்றிப் பெருந்தன்மையுடன் தனது ஒப்புதலை அளித்தார்கள்

இந்த மாநாடு வெற்றிகரமாக நடைபெற வேண்டும் என்பதற்காக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் மத்திய அரசின் சார்பில், எல்லாவகையிலும் ஒத்துழைப்பை நல்கியுள்ளார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். சில தரப்புகளிலிருந்து, காழ்ப்புணர்வுடன், எதிர்ப்புகள் எழுந்தபோது அவற்றை எல்லாம் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் பொருட்படுத்தவில்லை. மாறாக, தமிழ் மொழியின் மீதும், தமிழக மக்களின் மீதும் தனக்கு உள்ள மதிப்பையும், அன்பையும் வெளிப்படுத்தும் வகையில் மத்திய அரசின் அனைத்துத் துறைகளின் மூலமாகத் தமது ஒத்துழைப்பை நமக்கு அளித்துள்ளார்கள்.

எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் நினைவாக இராசராசன் சிறப்புத் தபால்தலை இன்று இங்கே வெளியிடப்படவுள்ளதற்கும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் எடுத்துக்கொண்ட அக்கறைக்கும், முயற்சிக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்த மாநாடு வெற்றி பெறுவதற்காகத் தனிப்பட்ட முறையில் ஆர்வம் காட்டிய

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களுக்குத் தமிழ்கூறும் நல்லுலகத்தின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டெல்லியில் இருந்து வந்து, இந்த மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்த மாண்புமிகு மத்திய தகவல் தொடர்புத்துறை இணை அமைச்சர் திரு. சுக்ராம் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அகில உலகமே அதிசயிக்கும் வண்ணம் சீரோடும் சிறப்போடும் நடைபெற்ற இந்த மாநாட்டின் வெற்றிக்காக இரவு பகல் என்று பாராது கடுமையாக உழைத்த மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், அண்ணன் எஸ்.டி.எஸ். அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், வாரியத் தலைவர்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், காவல்துறை அலுவலர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு கொண்ட அறிஞர் பெருமக்களுக்கும், கலை வித்தகர்களுக்கும், பள்ளி மாணவிகளுக்கும், அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியப் பெருமக்களுக்கும், பெருந்திரளாக வந்திருந்த பொதுமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பாரதப் பிரதமர்

திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்களின் நிறைவுரை

மத்திய தரைக்கடல் மற்றும் தென்கிழக்கு நாடுகளுக்கும் கப்பல் வாணிபம் நடத்தியவர்கள் முற்காலச் சோழர்கள்; தொடர்ந்து வெளிநாடுகளுடன் வாணிபத்தை வளர்த்தவர்கள். அப்படி மற்ற நாடுகளுடன் வர்த்தக உறவை வளர்த்த நமது மரபு இப்போது தனிமைப்படுத்தும் போக்கை ஊக்குவிக்கக் கூடாது வெளிநாடுகளில் தூதர் நியமித்துக் கலாச்சாரத்தை வளர்த்த சோழ மன்னர்களின் பெருமை என்றுமே நமக்குப் பெருமைப்படத்தக்க அம்சமாகும்.

அரசியல் ரீதியாகத் தீர்க்க தரிசனம் கொண்ட தமிழ் மன்னர்கள் வர்த்தகத்தை வளர்த்தனர். வெளிநாடுகள் சென்று வர்த்தகத்தை நடத்தத் தூதர்கள் நியமித்தனர்.

காவிரிப்பூம்பட்டினம் என்ற பூம்புகாரில் பல சமூகத்தினர் மற்றும் இனத்தினர் கவுரவமாக இணைந்து வாழ்ந்த ஆதாரங்கள் சோழர்களின் பெருமையைக் காட்டுபவை. பல மொழிகளில் பேசினாலும், பலவித வேறுபாடுகள் இருந்தாலும் எவ்விதப் பாகுபாடும் இன்றி வாழ்ந்தனர். ஆகவே தனிமையாக இருக்கும் போக்கைத் தமிழ்க் கலாச்சாரம் வலியுறுத்தவில்லை. ஆகவே வர்த்தகத்தில் தனிப்பட்ட தனித்துவம் தேவை என்பது இன்று ஏற்க முடியாதது.

நமது நாட்டின் வரலாற்றைப் புரிந்து கொள்ளாதவர்கள்தான் தனித்தன்மை தேவை என்று கூற முடியும்.

திராவிட மொழிகளில் தமிழ்மொழி மிகவும் தொன்மை வாய்ந்த - பழைமைமிக்க - புகழ்மிக்க மொழி ஆகும். வளமையான மொழியான தமிழ் பல கருவூலங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. எனவேதான் தமிழர்கள் தங்கள் மொழியைக் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மொழி என்று பெருமையுடன் கூறுகிறார்கள். அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய ஹாரப்பா நாகரிகத்தில் தமிழர்களின் நாகரிகம் பற்றியும் தமிழ்மொழி பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. வால்மீகி

இராமாயணத்தில் தமிழ் மன்னர்களான பாண்டிய மன்னர்களின் பண்பாடு பற்றிக் கூறப்பட்டுள்ளது.

மேலைநாடுகளில் தமிழ்மொழிக்கு நல்ல வரவேற்பு உள்ளது. பல மேலை நாடுகள் தமிழ் மொழியை ஏற்றுக்கொண்டுள்ளன. மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் ஆட்சிமொழியாகவும் தேசிய மொழியாகவும் உள்ளது.

மற்ற மொழிகளின் இலக்கணம் மொழியின் தன்மையை மட்டும் பற்றிப் பேசும்போது தமிழ்மொழி இலக்கணம் மட்டும் வாழ்க்கை நெறியையும் கற்றுத் தருகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பல உயர்ந்த காவியங்களைத் தன்னகத்தே கொண்ட தமிழ்மொழியின் பங்களிப்பு பாராட்டத்தக்கது ஆகும். நாயன்மார்களின் பணி ஆன்மீகத் துறையைச் சேர்ந்தது மட்டும் இல்லாமல் சாதி, சமய வேறுபாடுகளைக் களையும் வகையில் உள்ளது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்மொழியின் பெருமைகளில் திருக்குறளும் கம்பராமாயணமும் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்றார் திருவள்ளுவர், 'காக்கைக் குருவி எங்கள் சாதி' என்று பாடினார் பாரதியார். இதேபோல் 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற உயர்ந்த தத்துவமும் தமிழ்மொழியில் உள்ளது.

இவையெல்லாம் தமிழர்களின் சர்வதேசக் கண்ணோட்டத்தையும் பெருமையையும் உணர்த்துவதாக உள்ளன.

இந்தியாவின் கலை, கலாச்சாரம், பண்பாட்டுப் பெருமையில் தமிழ்மொழியின், தமிழ்நாட்டின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் இந்தத் தஞ்சாவூர் கலை, இலக்கியம், சிற்பம், ஓவியம் ஆகியவற்றில் பாரம்பரியம் மிக்க புகழ் கொண்ட நகரம் ஆகும். இசை மேதைகளான தியாகராஜர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி ஆகியோர் இங்குத்தான் தோன்றினார்கள். தஞ்சைப் பெரிய கோவில் தமிழர்களின் கட்டடக் கலைக்குச் சான்றாக விளங்குகிறது. இங்குத் தயாராகும் ஓவியங்களும், கைவினைப் பொருட்களும் உலகப் புகழ் பெற்றவை ஆகும். தமிழகக் கட்டடக் கலையின் ஆதிக்கத்தை இந்தியக் கட்டடக் கலையிலும், குறிப்பாக விஜயநகரம், கஜுராஹோ போன்ற இடங்களிலும் காண முடியும்.

தமிழ்நாடு கலாச்சாரத்தின் பிறப்பிடமாக விளங்குகிறது. இத்தகைய

பெருமைமிக்க தமிழ்நாட்டை ஆண்ட மன்னர்கள் கடல் கடந்து வாணிபம் செய்துள்ளனர். இதனால் தமிழ்ப்பண்பாடும் வெளிநாடுகளில் பரவி உள்ளது கிரேக்கம் மற்றும் ரோம நாட்டுடன் தமிழகத்துக்கு வர்த்தகத் தொடர்பு இருந்து இருக்கிறது.

நயாகரா நீர்வீழ்ச்சியில் நல்வரவு

உலகிலேயே மிகப் பெரிய நீர்வீழ்ச்சியான நயாகரா நீர்வீழ்ச்சியில் தமிழில் 'நல்வரவு' என்று எழுதி வைக்கப்பட்டு உள்ளது. இதுபற்றி அங்கு உள்ளவர்களிடம் கேட்டபோது உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சியான இங்கு உலகிலேயே மிகவும் பழைமை வாய்ந்த மொழியில் 'நல்வரவு' என்று எழுதி வைத்திருக்கிறோம் என்று கூறினார்கள்.

இது தமிழ்மொழியின் தொன்மையையும் பெருமையையும் புகழையும் எடுத்துக்காட்டும் நிகழ்ச்சி ஆகும்.

தங்க நாணயம்

தமிழர்களின் நாகரிகப் பண்பினையும் தமிழ் மொழியின் பெருமையையும் புகழையும் எடுத்துக்காட்டுவதாக உள்ள இந்த மாநாட்டில், சோழ மன்னனின் தபால் தலையை வெளியிட்டு இருக்கிறேன். விரைவில் இராச ராச சோழனின் உருவம் பொறித்த தங்க நாணயம் வெளியிடப்படும். இதற்கான ஏற்பாடுகளை மத்திய அரசு செய்யும்.

நமது இந்தியக் கலாச்சாரம் பல முகங்கள் கொண்டது. இந்தியாவில் பல்வேறு மொழிகளும் ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்மொழி தொன்மை வாய்ந்தது. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துப் பிறந்த பெருமைமிக்கது தமிழ் என்பதை மறுக்க முடியாது. சோழர் காலக் கல்வெட்டுக்களில் தமிழரின் ஆட்சி குறித்த குறிப்புகள் காணப்படுகின்றன.

தமிழ் நூல்கள் திருக்குறள், பக்தி இலக்கியங்களில் சமதர்மச் சமுதாயப் பார்வை காணப்படுவது பெருமை. அதுபோல் தமிழ்ச்சங்க இலக்கியப் பாடல்களில் இயற்கைச் சூழல் பாதுகாப்பு பற்றிக் காணப்படுகிறது

சங்க காலத்தில் விவசாயத்திற்கு முக்கியத்துவம்

சங்க காலத்திலேயே தமிழர்கள் விவசாய முக்கியத்துவத்தை உணர்ந்து இருந்தனர். தமிழ் மன்னர்கள் நீர்ப்பாசன வசதிகளைச் செய்து இருந்தனர். கரிகால்

சோழன் பாசனத்துக்காகவும், வெள்ளக் கட்டுப்பாட்டுக்காகவும் அணை கட்டினான்.

தமிழ்மொழியும் தமிழ்க் கலாச்சாரமும் பற்றி இங்கு ஆய்வு அரங்குகளில் நடந்த விவாதங்கள் வெறும் விவாதமாக இருக்கக் கூடாது. தேவையான முன்னேற்றம் காணும் வகையில் அந்த ஆய்வுகளைப் பரந்த நோக்கோடு பயன்படுத்த வேண்டும்.

திராவிட மொழிக் குடும்பங்களில் தனது ஆணிவேரைக் கொண்டது தமிழ். மிகவும் பெருமையான மொழி. சிலப்பதிகாரம், மணிமேகலை, பதினெண்கீழ்க்கணக்கு போன்ற மாபெரும் படைப்புகள் உருவான மொழி. திருக்குறள் உலக சமுதாய நெறியைக் காட்டும் சிறந்த நூல். அதனால் இன்றும் மக்களிடம் அதிகமாகப் பேசப்படுகிறது.

தஞ்சை மண்ணில் இசையை வளர்த்த மும்மூர்த்திகள் வாழ்ந்தனர். தியாகராஜ சுவாமிகள், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகிய மூவரையும் அடுத்து அருணாசலக் கவிராயர், முத்துத் தாண்டவர், மாரிமுத்தாப் பிள்ளை ஆகியோர் தமிழ் இசையை வளர்த்தனர். சோழர் காலக் கட்டடக் கலைக்குச் சான்று காட்டும் அரிய படைப்புகள் இங்கு உள்ளன.

தமிழ் மற்ற மொழிகளிடம் இருந்து அரிய கருத்துக்களைப் பெற்றது. சமஸ்கிருதப் பாரம்பரியங்களை ஏற்றிருக்கிறது. அதன் அடிப்படையில் பெரிய காவியங்கள் மலர்ந்தன.

தமிழ் இலக்கியத்துக்கு ஆழ்வார்களும், நாயன்மார்களும் செறிவூட்டிப் பக்திப் பாடல்களைப் பாடினர். சமஸ்கிருதப் படைப்பு தமிழில் எவ்வளவு அழகாக உருவாகும் என்பதற்குக் கம்பராமாயணம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தொல்காப்பியம் வெறும் இலக்கண நூல் அல்ல. வாழ்க்கை நெறிமுறைகளைக் கூறும் நூல். திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு ஆகிய இலக்கியங்கள் தமிழ் மொழிக்குப் பெருமை தருவன ஆகும்.

ஏழைப் புலவரான ஔவையாரும் எண்ணிப்பார்க்கத் தக்கவர். மன்னவர்கள் முதல் அனைத்துத் தரப்பினரும் தமிழ் மொழிக்கு இலக்கியங்களைத் தந்துள்ளனர்.

அறிவியல் தமிழை வளர்க்க வேண்டும் என்று இந்த எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் கூறப்பட்டது. வருகின்ற 21-ஆம் நூற்றாண்டில் நான்காவது தமிழாக, அறிவியல் தமிழ் மலரட்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

என்னை இந்த எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு அழைத்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். இந்த உலகத் தமிழ் மாநாட்டில் அறிஞர்கள் உருவாக்கி உள்ள திட்டங்கள் தமிழுக்கு உயிர் ஊட்டட்டும்.

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டதில் நான் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன். எல்லோருக்கும் என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். ஒன்பதாவது உலகத் தமிழ்மாநாட்டிலும் நான் கலந்து கொள்வேன்.

VOLUME ONE

PROCEEDINGS
மாநாட்டு நிகழ்வுகள்

CONTENTS

Page

PREFACE v

EDITORS' NOTE ix

INTERNATIONAL CONFERENCE - SEMINAR OF TAMIL STUDIES
- A BRIEF HISTORY x

REPORT OF THE EIGHTH INTERNATIONAL CONFERENCE
- SEMINAR OF TAMIL STUDIES xiv

INAUGURAL PRESIDENTIAL ADDRESS BY HON'BLE CHIEF MINISTER
OF TAMILNADU SELVI DR. J. JAYALALITHAA xxiv

INAUGURAL ADDRESS BY HON'BLE VICE - PRESIDENT OF INDIA
THIRU. K.R. NARAYANAN xxix

ADDRESS BY THE PRESIDENT OF INTERNATIONAL ASSOCIATION
OF TAMIL RESEARCH PROF. NOBORU KARASHIMA xxxv

VALEDICTORY PRESIDENTIAL ADDRESS BY HON'BLE CHIEF MINISTER
OF TAMILNADU SELVI DR. J. JAYALALITHAA xxxvii

VALIDICTORY ADDRESS BY HON'BLE PRIME MINISTER OF INDIA
THIRU. P.V. NARASIMHA RAO xliii

முதன்மை ஆய்வுரைகள் / PLENARY PAPERS

1. NOBORU KARASHIMA
Indian Commercial Activities in Ancient and Medieval Southeast Asia ... 3

2. E. ANNAMALAI
A New Paradigm for Tamil Development 27

I

3. HAROLD F. SCHIFFMAN

Aspect and Variability in Tamil 36

4. FRANÇOIS GROS

Language in Tamil History : Change and Innovation 59

5. V.C. KULANDAISWAMY

An inquiry into the sources of Immortality of Tirukkural 71

6. BURTON STEIN

Situating precolonial Tamil Politics and Society 92

சிறப்பு ஆய்வுரைகள் / SPECIAL LECTURES

7. IRAVATHAM MAHADEVAN

Recent trends in early Tamil Epigraphy : An Overview 108

8. ASKO PARPOLA

Evidence for Dravidian Language and Religion in the Indus Inscriptions 139

9. PAUL HOCKINGS

Badaga Epic Poetry 164

10. PAULINE KOLENDA

Caste as Marriage Network : The internal structure of a caste as an Endogamous group 190

11. R.E. ASHER

Tamil Linguistics into the Third Millennium 200

12. S. ARASARATNAM

Commerce, Merchants and Entreprenuership in the Tamil Country: 18th Century 217

13. HARUKA YANAGISAWA

The Growth of Rural Industries in Tamilnadu and their Domestic Markets, 1900-1950 231

14. MUNEO TOKUNAGA

Concept of *Catti* in Śaiva Siddhānta-through a comparison with the Viśiṣṭādvaita Philosophy 246

15. STUART BLACKBURN

Kampaṉ in Kerala : Three lessons learned 261

16. L.B. ALAYEV

To the problem of Tamil Traditional Administrative System (10-13th centuries C.E.) 277

குழு அமர்வுகள் / PANEL SESSIONS

குழு அமர்வு 1 / PANEL SESSION 1

ஹைகூ ஒப்புமை / HAIKU COMPARED

17. இரா. மோகன்

தமிழில் ஹைகூ : ஒரு பறவைப் பார்வை 291

18. நிர்மலா மோகன்

ஹைகூ கவிதைகளில் சமுதாயச் சித்திரிப்பு 306

19. இரா. காஞ்சனா

ஹைகூவும் கவிதை முடிப்பும் 325

20. ம. திருமலை

ஹைகூ கவிதைகளில் இயற்கைப் புனைவு 347

21. C.K. MAHADEVEN

The Meaning of Meaning in Haiku : A Comparative Analysis . . . 364

குழு அமர்வு 2 / PANEL SESSION 2

தலித் இலக்கியம் / DALIT LITERATURE

22. ப. சிவகாமி

தமிழில் தலித் இலக்கியக் கருத்துருவாக்கம் 372

23. ப்ரதிபா ஜெயச்சந்திரன்
தமிழ்க் கவிதைகளில் தலித்தியம் 385

24. ராஜ் கௌதமன்
தமிழ் நாவல்களில் தலித்தியம் 418

25. R. BALACHANDRAN
Narratology of Dalit Text : A Structuralist Analysis of
Sivakami's Palaiyana Kalitalum 451

குழு அமர்வு 3 / PANEL SESSION 3
இலக்கியத் திறனாய்வு : மேற்கும் கிழக்கும்
LITERARY CRITICISM WEST AND EAST

26. கார்லோஸ் - தமிழவன்
இலக்கியத் திறனாய்வு : மேற்கும் கிழக்கும்
கோட்பாட்டுச் சிக்கல்களும் தீர்வுகளும் 457

27. ஜி. நஞ்சுண்டன்
மேற்கத்திய திறனாய்வு நோக்கில் தமிழ்ப் பழங்கவிதை 479

28. எஸ். சண்முகம்
அகம் / புறம் கோட்பாட்டுப் பின்னணியில் மேற்கத்திய கவிதை ... 491

29. ஜி. ரமேஷ் - நாகார்ஜுனன்
மெய்ப்பாட்டியல் நோக்கில் மேற்கத்திய புனைகதை 498

குழு அமர்வு 4 / PANEL SESSION 4
தமிழ், ஜப்பான், கொரிய மொழிகள்
TAMIL, JAPANESE AND KOREAN LANGUAGES

30. சாத்தூர் சேகரன்
தமிழ் மொழியும் கொரிய மொழியும் 522

31. PON KOTHANDARAMAN
A Comparative Study of Dravidian and Japanese (The Velar plosive - k) 533

குழு அமர்வு 5 / PANEL SESSION 5

தற்காலத் தமிழ் வளர்ச்சி

DEVELOPMENT OF MODERN TAMIL

32. வா. செ. குழந்தைசாமி
வளரும் தமிழில் மாற்றங்கள் 542

33. கொடுமுடி ச. சண்முகன்
முதியோர் அறிசுவடி : தமிழ் எழுத்துச் சீர்திருத்த முயற்சிகளின் வரலாறு 553

34. R. RAMAKRISHNAN, K. SRINIVASAN, RAJASEKHAR RAMAKRISHNAN
Tamil in the Roman Script 578

35. K. SRINIVASAN AND M. P. KRISHNARAJ
A Tamil Retreat on the Information Super Highway 585

36. PYNEESAMY PADAYACHY
Simplified Tamil Alphabet 590

குழு அமர்வு 6 / PANEL SESSION 6

கலைச்சொற்களும் கலைச்சொல்லாக்கமும்

TECHNICAL TERMS AND COINAGE OF TECHNICAL TERMS

37. சா. கிருட்டினமூர்த்தி
தமிழ் இலக்கியங்களில் கலைச்சொற்கள் 595

38. சி. செல்வராசு
இன்றைய ஆட்சிக்கு அன்றைய இலக்கியங்களில் காணப்பெறும் ஆட்சிச் சொற்கள் 609

39. ப. அருளி
தமிழில் கலைச்சொல் உருவாக்குவதற்குரிய நெறிமுறைகளில் மீவிரைவுச் சொல்லாக்க முறை 621

40. கோ. முத்துப்பிள்ளை
ஆட்சிமொழிச் செயலாக்கம் 653

குழு அமர்வு 7 / PANEL SESSION 7

அறிவியல் தமிழ் வளர்ச்சி

DEVELOPMENT OF SCIENTIFIC TAMIL

41. நெல்லை சு. முத்து

அடுத்த நூற்றாண்டின் அறிவியல் தமிழ் : கருத்தும் எழுத்தும் . . . 658

42. சு. நரேந்திரன்

கலைச்சொல் வழக்கில் இருமொழி வழக்கு 701

43. மணவை முஸ்தபா

சொல்லாக்கமும் புதிய உத்திகளும் 706

44 அருணா இராசகோபால்

வேளாண்மையில் அறிவியல் தமிழ் 716

குழு அமர்வு 8 / PANEL SESSION 8

தென்னிந்திய வரலாற்றில் நாடார்கள்

NATTARS IN SOUTH INDIAN HISTORY : INTEGRATION OF SOUTH ASIAN AGRARIAN SOCIETY

45. NOBORU KARASHIMA

Nāṭṭavars in Tamilnadu during the Pandyan and Vijayanagar Periods 728

46. Y. SUBBARAYALU

Nattar a Corporate body of Vellala landholders in the Chola Period Tamil Nadu 737

47 TSUKASA MIZUSHIMA

Mirasi System in Pre-colonial South India 756

குழு அமர்வு 9 / PANEL SESSION 9

கல்வெட்டு மற்றும் நாணயங்களின் அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள்

RECENT EPIGRAPHICAL AND NEUMISMATIC DISCOVERIES

48. ஆறுமுக சீதாராமன்

தமிழகக் காசுகள் (அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள்) 769

குழு அமர்வு 10 / PANEL SESSION 10

கட்டடக்கலையைப் பாதுகாத்தல்

CONSERVATION OF ARCHITECTURE

49. V. JAYARAJ

Preservation of Coins in Tamil Nadu 784

குழு அமர்வு 11 / PANEL SESSION 11

தமிழர் புலம்பெயர்வு / TAMILS MIGRATION

50. பழ. முத்தையா

அயல்நாடுகளில் தமிழரும் தமிழும் 798

51. A. KANDIAH

Tamils and Tamil Language in Australia - A brief survey ... 803

குழு அமர்வு 12 / PANEL SESSION 12

தமிழ்நாட்டில் பாலினமும் ஆன்மீகமும்

GENDER AND SPIRITUALITY IN TAMILNADU

52. VIJAYA RAMASWAMY

Gendered Spirituality: A South Indian perspective 820

53. S. RAMARATHNAM

Position of Women in the Domestic Rituals - Sanskrit Sources and the Tamil Tradition 856

குழு அமர்வு 13 / PANEL SESSION 13

தமிழில் தொழில் நுட்ப ஆதாரங்களும் ஆய்வும்

TECHNOLOGICAL RESOURCES AND RESEARCH IN TAMIL

54. P. R. SUBRAMANIAN

Technological Resources and Research in Tamil : Report of the Panel 863

பின்னிணைப்பு / APPENDIX

1. முதல் அறிவிக்கை

FIRST ANNOUNCEMENT 870

2. குழுக்கள்

COMMITTEES 881

3. ஆய்வரங்க நிரல்

ACADEMIC PROGRAMMES 894

பங்கேற்பாளர்

PARTICIPANTS 972

முதன்மை
ஆய்வுரைகள்

PLENARY
PAPERS

1

INDIAN COMMERCIAL ACTIVITIES IN ANCIENT AND MEDIEVAL SOUTHEAST ASIA

NOBORU KARASHIMA

Introduction

It gives me great pleasure to deliver the keynote lecture at this Eighth International Conference-Seminar of Tamil Studies being held at Tamil University in Thanjavur, the ancient capital of the glorious Chola Dynasty. This Conference-Seminar has as its main theme "Contribution of Tamil Culture to the Twenty-First Century", and in consideration of this theme, I have decided to speak today about the Indian commercial activities in ancient and medieval Southeast Asia as revealed from Tamil inscriptions. I believe that the most important contribution that may be expected from the Tamil people to the twenty-first century should lie in the field of cooperation with other peoples in order to bring about the inter-reliance and harmony of all of the world's peoples. The spirit of cooperation and inter-reliance was certainly a significant part of the Tamil cultural tradition.

The recognition of this spirit is important to peoples everywhere. During the twentieth century, each of the world's peoples strived to develop their own society and culture, and many of them including the Tamil people have succeeded in achieving their goals. However, the specific goals were sometimes achieved by each people pursuing its own interests without thinking of the others. And therefore, the next century, we believe, should be the period during which all peoples will cooperate with each other to create global harmony. That can be realized only through the spirit of cooperation and inter-reliance, and I hope that my lecture today will remind us all of the importance of this spirit seen in the Tamil cultural tradition.

Before starting on the topic of the Indian commercial activities, however, let me reflect for a moment on the past studies of Southeast Asian ancient and medieval history. Before World War II, one of the most important and attractive topics in these studies was the "Indianization" of Southeast Asian societies. European scholars like G. Coedes and N.J. Krom argued that the Indian culture brought into Southeast Asia facilitated the state formation there, and Indian scholars like R.C. Majumdar and Nilakanta Sastri supported their arguments by providing more evidence.

World War II, however, interrupted the studies, and after India and Southeast Asian countries had attained their Independence, an entirely different situation arose. In each country, the study of its own past developed rapidly and many new archaeological discoveries were also made, and, more importantly, Southeast Asian historians began to be inclined to explain the state formation in a different way, namely, as the process of the spontaneous development of society independent from Indianization. Comparing to the past studies which overemphasized the aspect of "Indianization" by employing even the expressions such as "Indian colony" or "greater India", this new tendency appearing in Southeast Asian countries is to be appreciated as being more natural and healthy, provided it does not go to the opposite extreme.

In India, as well, much development has been made since its Independence on the study of ancient Indian history. However, scholars in India and Southeast Asia have remained mutually ignorant of the research development made in the other region, as the point of viewing both regions from one angle, such as from the concept of Indianization, has been lost. Although we have to reinterpret the relations between India and Southeast Asia by re-examining the so-called Indianization process, the fact that Indian culture found its way into Southeast Asia remains undisputed. Nobody will deny, therefore, the importance of collaboration of Indian scholars and Southeast Asian scholars in this work of reinterpretation.

With this belief in mind, I organised five years ago an international research project on the reinterpretation of relations between South Asia and Southeast Asia in the ancient and medieval periods [1] and took four Indian scholars to Southeast Asian countries in pursuance of this project. They are specialists in South Indian archaeology, epigraphy and history. Some Japanese specialists also joined us[2] together

with Southeast Asian scholars. In the winter of 1991-92 we visited Vietnam and Laos, in 1992-93 Malaysia and Thailand, and in 1993-94 Indonesia. In each country, with the permission of the respective government, we were able to visit important sites and museums and to have useful discussions on many problems with the native scholars who had been carrying out the studies.[3]

In this lecture I will present to you some of the achievements of our study in this project, especially regarding the interpretation of Tamil inscriptions which we examined in some places.

1. Tamil Inscriptions in Southeast Asia

Oc-Eo in the Mekong delta in Vietnam is famous as an international port of early times, its origin going back to the beginning of the Christian era. Some Roman coins and a Han Chinese bronze mirror were discovered in Oc-Eo and its vicinity in the delta, together with beads and other ornaments and religious objects. Those objects are also found in many other sites in Southeast Asia, particularly in the Malay peninsula, and also in India, especially in the south.

The Sangam Tamil classics and the Greek and Roman literature of the early Christian era provide us with the names of some ancient ports flourishing on the coasts of South India. Arikamedu in the neighbourhood of Pondicherry was one such port being described by Greek writers as Poduke. It was also a manufacturing centre of beads and other similar stone and metal objects, which connect India with Southeast Asia[4]. There is no doubt that some of these objects discovered in Southeast Asia were brought from Arikamedu and other places on the Indian coast, but some others must have been produced locally, though we do not have much evidence for that.

One of the Tamil inscriptions we examined concerns this point. The inscription referred to is preserved in the temple museum of Wat Khlong Thom, Krabi Province, Southern Thailand. Eight Tamil Brahmi letters are inscribed on one side of a small flat rectangular stone (3cm X 7cm X 0.7cm) and read *perumpatan kal* meaning "(This is) the (touch) stone of Perumpatan". *Perum* means big, *patan (pattan)* means goldsmith, and therefore Perumpatan is either the title or the name of a goldsmith who possessed this touchstone. This is the first Tamil inscription of Brahmi script

from the third or fourth century A.D. found in Southeast Asia.

This stone certainly indicates the migration of a Tamil goldsmith from South India. The place where this stone was discovered is famous for yielding a large number of beads and similar objects and is locally called 'bead mound' (Khuan Luk Pat). In the above museum are displayed a number of beads and precious stone ornaments inscribed with north Indian Brahmi script, and also some moulds for making those objects. This place, therefore, seems to have been an important centre for manufacturing them and some Indians were included among the artisans.

Indians seem to have continually crossed the sea to migrate to or visit Southeast Asia, and we have many Sanskrit inscriptions as well as Buddhist and Hindu sculptures relating to this in the post-fifth century Southeast Asia. Records of Chinese pilgrims who crossed the sea as well as the old Malay and Javanese inscriptions of the seventh century testify to the increasing Indian cultural influence. However, we do not have any Tamil inscription from the fifth to the eighth centuries. [5] Our next Tamil inscription comes from Takua Pa, north of Krabi, in the Malay peninsula.

Takua Pa is usually believed to have been the ancient Takkōla mentioned by Ptolemy, though it did not yield beads and other objects similar to those found in Arikamedu and Krabi. Instead, the site in Takua Pa has yielded some art objects belonging to the ninth and tenth centuries. [6] The stone bearing the so-called Takua Pa inscription, now preserved in the Nakhon-Si- Tammarat Museum, is said to have been originally discovered in Kho Khao island together with a stone Vishnu and other statues of South Indian Pallava style. The text of this Tamil inscription was published with a facsimile of the estampage by Nilakanta Sastri, Professor of History, University of Madras. [7] The stone has undergone further damage since that estampage was taken, and some of the letters he read or suggested have gone for ever. However, as there is no substantial difference in our reading of the remaining portion, we may depend on the reading given by Nilakanta Sastri.

This inscription seems to record that a tank was constructed by somebody and put under the protection of *maṇigirāmattār, sēnāmugattār* and another similar body. *Maṇigirāmam* is a famous merchant guild which flourished in Tamil Nadu and Kerala in India from the ninth to the fourteenth centuries.[8] We have many inscriptions

referring to their activities in those areas. To the contrary, we have never come across *senāmugam* in South Indian Tamil inscriptions, but there are a few Javanese inscriptions referring to this body. [9] As this term is found in the enumeration of the terms indicating professional groups such as *hunjamman* (*añjuvaṇṇam* in Tamil inscriptions) and others, we may take it as a merchant community or perhaps their associates such as *vīrakkoḍiyār* in Tamil inscriptions, who worked for the merchants as armed guardsmen. This inscription gives a clear evidence of Tamil merchant activities carried out in Southeast Asia. Nilakanta Sastri suggested the reading of the tank's name as *Sri Avanināraṇam*. If this is the case, the Pallava connection of this inscription may be acceptable, as *Avanināraṇam* is an epithet of Nandivarman III, the Pallava king (AD 846-869). Even otherwise, the date of the inscription can safely be fixed palaeographically in the ninth century.

Chronologically the next Tamil inscription we have examined comes from Barus in north-western Sumatra. The stone was discovered about 1890 in Lubo Tuo (Loboe Toewa) near Barus (Baros), and the estampage was examined by E. Hultzsch, Government Epigraphist of the Madras Presidency, who reported it briefly in *Madras Epigraphy Report* 1891-92. Nilakanta Sastri discussed the problem of the *ainnūṟṟuvar* (five hundred) mentioned in the inscription by examining several South Indian inscriptions referring to it. [10] As he pointed out for the first time in his article, *ainnūṟṟuvar* is another merchant guild that flourished in South India from the tenth to the sixteenth centuries.[11] This big corporate body of merchants that originated in Aihole in Karnataka in the eighth century or so seems to have extended its activities afterwards to Tamil Nadu and Andhra Pradesh, incorporating many other merchant bodies under its banner. It also seems to have kept some groups of soldiers for protection of their commercial activities.

Though Nilakanta Sastri made a fine study of *ainnūṟṟuvar* in his article, he could not read the text of the Barus inscription, as it was not given by Hultzsch in his report. Hultzsch reported it as much mutilated and gave only the date of the inscription (śaka 1010 = AD 1088) and a brief comment on the contents that "it records a gift by a body of persons who are styled < one thousand-five-hundred >". Hultzsch's report was the source for Nilakanta Sastri and has remained the only source for scholars for more than a century. To our surprise, we saw the stone containing the inscription

almost intact in the National Museum in Jakarta in January 1994. Permission was granted to us for taking estampages,[12] and the following is the text and translation tentatively made by Professor Y. Subbarayalu of Tamil University, one of the members of my project mentioned above.

Text

1. svaśti śrī śakarai
2. āṇḍu āyirattup pa-
3. ttuc cellā niṉ
4. ṟa māsit tingaḷ
5. vārōsāna mātaṅ
6. gari vallavat tēsi u-
7. yya koṇḍa paṭ
8. ṭinattu vēḷāpurattu
9. kūḍi niranda dēsi [t tisai]
10. viḷaṅgu disai āyira
11. t tainnūṟṟuvarō
12. m nammaganār nagara sēnāpa
13. pati nāṭṭuceṭṭi-
14. yārkkum patineṇbhūmi
15. dēsi apparkku mā[ve]t-
16. tugaḷukkum nā vaittuk -
17. kuḍutta parisāvadu [ma] rak-
18. . ...
19. l marakkala nāyaṉun kēvi-
20. gaḷum kastū[ri] vilai mu[talagappaḍa]

21. añju tuṇ[ḍā]yam poṉṉum kuḍu-

22. ttu pāvāḍai ēṟakkaḍavadāgavum

23. ippaḍikku [i]kka[l] eḻudi nāṭṭi-

24. k kuḍuttōm patineṇbūmi dēsit tisai viḷa-

25. ṅgu disai āyirattainnuvṟṟuvarōm a-

26. ṟamaṟaveṟka aṟamēy tuṇai.

Translation

(11. I- 4) In the Śaka year 1010 current, month Māsi,

(11. 5-11) We, the Five Hundred of the Thousand Directions known in all countries and directions, having met at Vēḷāpuram in Vārōsu *alias* Mātaṅgari-vallava-dēsi-uyyakkoṇḍa-paṭṭinam

(11. 12-17) decided to grant as follows to "our sons", the *nagara-sēnāpati* Nāṭṭu-ceṭṭiyār, to Patineṇ-būmi-dēsi-appar and to the *māvettugaḷ*.

(11. 17-22) [Each of] the ship's . . ., ship's Captain and the kēvigaḷ shall pay the fee *añju-tuṇḍāyam* in gold according to the price of the *kastūri* and [then only] may step on the "cloth spread". [13]

(11. 23-26) Thus we, the Five Hundred of the Thousand Directions known in every direction in all the Eighteen Lands got this stone inscription written and planted. Do not forget the charity; Charity alone will help you.

This text confirms the date and the brief contents given by Hultzsch in his report, though his reading of the name of the merchant body as "1500" should be corrected to "500" as Nilakanta Sastri suggested. However, it gives us some other new information also. Not only Barus is mentioned in the inscription as Vārōsu, it also had another name in Tamil, namely, Mātaṅgari-vallava-dēsi- uyyakkoṇḍa-paṭṭinam (literally, Paṭṭinam for the welfare of the merchant body blessed by Śiva). The suffix *paṭṭinam* indicates that Vārōsu was a commercial town. It seems to have

comprised a suburb called *Veḷāpuram* in which the merchant body assembled to make a decision. *Veḷāpuram* seems to have stood for the port area,[14] and the decision made by the *ainnuṟṟuvar* members was to grant some monetary contribution to two individuals and *māvettugaḷ,* all of whom are called "our sons".[15] The money should be raised as a proportion of revenue (*añju-tuṇḍāyam*) from the ship's owners (?), ship's captains *(marak kala-nāyan)* and boat rowers *(kēvigaḷ). Marakkala-nāyan* seems to relate to the term marakkāyar used to denote the seafaring Muslim merchants of the Tamil Nadu and Kerala coasts in the later period.[16] Anyway, this reference may be taken as direct evidence for the existence of Tamil merchant shipping. Though Kastūri meaning musk appears in many records as an important commodity, it is not so clear why it is selected as the item for fixing the rate of the fee (*añju-tuṇḍāyam*). Barus was famous for exporting camphor.

The name of Vēḷāpuram also interests us, as it appears in the eulogy (*praśasti*) to *ainnūṟṟuvar* in several inscriptions. Most of them state that their people have been carrying on business in *18 paṭṭinam* (or paṭṭanam), 32 *vēḷāpuram* and 64 *kaḍigai-tāvaḷam.*[17] Though the numbers 18, 32 and 64 are of course fictitious, we know some *paṭṭinams* which were actually related to *ainnūṟṟuvars, like Koḍumbāḷūr alias Kulōttuṅgachōḷa - paṭṭinam,* [18] kulasēkhara paṭṭinam,[19] etc. However, the actual existence of *vēḷāpuram* has never been empirically confirmed so far, and this *Vēḷāpuram* in Vārōsu is the first attested example.

As mentioned earlier, there are many inscriptions in South India recording the activities of ainnūṟṟuvar, and in Sri Lanka also we have six such inscriptions. The find-spots are rather scattered throughout the northern and central parts of the island. Professor Veluppillai who published the texts[20] was able to see only the photographs of estampages and therefore had great difficulty in his work of decipherment, leaving much ambiguity in the reading. However, all of them seem to belong to the eleventh century and concern *ainnūṟṟuvar,* particularly the *vīra-koḍiyār* who were employed as guards of the ainnūṟṟuvar merchants. Three of the six inscriptions seem to record the decision made by the *vīra-koḍiyār* (and also by the *Nāṭṭu-ceṭṭigaḷ* jointly?) relinguishing the right to the collection of certain dues or fees within the towns under their protection.

There are two more so far unnoticed Tamil inscriptions which were examined by us. Though they have no direct connection with commerce, their observation may not be much of a deviation from our topic. One inscription comes from Nakhon Si Thammarat in Thailand in the middle part of the Malay peninsula. The stone bearing the inscription is preserved in a Buddhist temple (Wat Brahma That) and we were not allowed by the temple authority to take estampages or photographs. However, from our observation on the spot and our study of a photograph of the estampage probably taken by the Archaeology Department and displayed in the Nakhon Si Thammarat Museum, we were able to understand the following. The date is either 1183 or 1283. No king seems to have been mentioned. It records that one Danma Sēnāpati made a grant to Brahmanas in three shares. The stone is damaged and imprecatory sentences occupy nearly a half of the remaining part of the inscription. The donor, Danma Sēnāpati, may have been a merchant, but it is not verifiable.

The other one is found in the National Museum in Jakarta. It is on a strangely shaped standing stone like a dance sculpture (height 130cm), the top of which is sculpted with the head of Ganēśa. The location of the find is not ascertainable. [21] The inscription consists of two parts, one in Tamil and the other in Old Javanese. Both are badly worn out, but seem to convey the same contents . [22] It seems to record that some "*sēnāpati rakan dīpaṅkara*" made a charitable deed for the merit of the king named as ''peritu śrī mahārāja" ("paduka śrī mahārāca" in Javanese). Dīpankara is the name of a past Buddha and implies his Buddhist identity. *Rakan* is an Indonesian title given to a big person, and *sēnāpati* in this case seems to have been an army commander or general. The fact that the charity was made for the merit of the king also suggests that the donor was an influential personsage. However, the reason why this inscription was written in Tamil is also unclear. Dīpaṅkara might have been a Tamil. The date calculated from the astronomical data given in the inscription corresponds to AD 1187, 1258 or 1265, but palaeographically the last two are more probable, namely in the latter half of the thirteenth century.

The last inscription coming from Pagan in Myanmar is related to commerce. Though we have still had no occasion to examine this inscription in *situ*, it is published in *Epigraphia Indica*.[23] The stone is well preserved and the text is complete. Though the date is not given, Hultzsch assigned it to the thirteenth century. In the first half

of the inscription a Vaishnavite mantra for righteous conduct is given in Sanskrit. The latter half records in Tamil the construction of a front hall in a Vishnu temple and the installation of a door and a lamp into that hall by Īrāyiran Siṟiyan alias Sri Kulaśekhara Nambi of Magōdayapaṭṭaṇam in Malaimaṇḍalam. The temple in which the hall was constructed is called Nānādēsi-viṇṇagar (Vishnu temple of *nānādēsi*). The name indicates the presence of the merchant guild called *nānādēsi*, the name which was often synonymously employed by the *ainnūṟṟuvar*. Magōdayapaṭṭinam from which the donor came is obviously the famous Chera capital Mahōdayapuram in Kerala (Malaimaṇḍalam).

The above examination of six Tamil inscriptions discovered in Southeast Asia reveal the activities of Tamil merchants organised in corporate bodies such as *maṇigirāmam, ainnūṟṟuvar* and *nānādēsi*. One of the conspicuous features of the activities of those merchant bodies is their noncommitment to any political power. Most of the *ainnūṟṟuvar* inscriptions in South India and Sri Lanka have their own eulogy, instead of that to the king. For the protection of their property and life, they had their own soldiers. Anyway, this non-political character of their organisation must have enabled them to conduct their overseas trade for centuries and to secure their fame.

2. Śrīvijaya/Kaḍāram/San-fo-ch'i Problem

Without referring to the Śrīvijaya/Kaḍāram/San-fo-ch'i problem [24] any account of the activities carried out by South Indian merchants in medieval Southeast Asia may not be complete. However, without going into the problem so much in detail, I should like to show you here the view obtainable from the South Indian side. In this relation, Nāgapaṭṭinam, the famous medieval port on the Coromandel coast, plays an important role. It is well known that Chūḷāmaṇivarman, the king of Śrīvijaya/Kaḍāram, established a Buddhist temple *(paḷḷi)* in Nāgapaṭṭinam, for the maintenance of which Rajaraia I, the then Chola king, granted a village in his 21st regnal year (AD 1006). This is recorded in the so-called Larger Leiden copper plates. [25] Though Chūḷāmaṇivarman is mentioned only as the king of kaḍāram (Kiḍāram) in the Tamil portion of the plates, his son Māṟa-Vijayōttuṅgavarman appearing in the Sanskrit portion, which was added later in the time of Rajendra I, [26] son and

B.Stein who directed attention to the role of extended communities in medieval Tamilnadu, made easier the burden of his critics, having suggested some general conceptions of socio-political structure of South India. Having rejected the conception of a bureaucratic state (what was sufficiently convincing), as well as the feudal conception (what was not so unquestionable), he was inclined to interpret this structure in terms of "segmentary state" and "peasant society and state". Criticism of these conceptions (the most detailed in (Jha 1985)) was provoked, first, with the fact, that Stein went too far beyond the limits of source materials, and second, with the lack of precision in his formulations. For instance, he had no definition for "peasantry". From one side, he wrote his book "about peasants without lords" (Stein 1980, p.V), but the same peasants, the heroes of his book, "must make their terms with those whose superior power commands tribute or taxes, rent or interest" (Stein 1980, p.18). If he thought that the South-Indian state was a state of peasants, by peasants and for peasants, he was most probably wrong. But if the idea was that the upper stratum of

rural folk held position of a dominant caste, i.e. they controlled the land on condition of subordination to supreme power, maintained the upper "lords" with the assignmet from the taxes, and at the same time subordinated lower castes, than this picture at least may be close to reality and may be discussed on the basis of factual materials.

In essence, the problem is if there was a phenomenon of a dominant caste (in sociological sense) in early medieval Tamilnadu, this caste usually concentrates in its hands all or almost all land in a region, has sufficient numerical strength, rather decent ritual status, and caste *panchayats* of such a caste played the role of territorial self-governing bodies for members of all other castes as well. In Tamilnadu the caste fit for this role may be only *vellalas*, and some other castes (*kallars, maravars*) in their respective regions.

The question is whether we can understand large self governed territorial units fixed in inscriptions from Tamilnadu of 10th -13th centuries (as well as the similar units in Karnataka and Andhra approximately in the same period) as analogous to caste-clan landholding clusters in Northern India in much more late period (*chaurasi, khap, pargannah* and others), or they were quite different formations.

Under the Cholas, according to calculations by Y. Subbarayalu, there were 556 *nādus* (in Jayankonda - mandalam, it seems, Kurram was a synonym for *nādu*). At the head of these territories there were some bodies, called *nāttār*. The collectiveness which is ascribed to this agency is based only on the plural form of the word. This body had rather wide prerogatives. First of all, it received king's orders on the allotment of land for Brahmanas, and later on - for temples as well. It is necessary to stress that *nāttār* did not simply accomplish these decrees, but on the basis of them issued their own regulations on behalf of themselves (*nāttārōm*) and precisely these regulations have been engraving on temple walls and must be fulfilled by everyone related to the grant.

Obviously the *nāttār* collectively owned some land, which they could grant (ARE, 58 of 1907; 49 of 1924; 115, 187 of 1939/40; 197 of 1941/42; IPS, No. 385). Sometimes they also buy lands [357 of 1922]. No less obvious is that *nāttār* collected some taxes for themselves and the right to collect was understood as their property which they could donate [483 of 1926] or even sale. The deed of sale of taxes was

formulated as a sale of land on conditions of *naṭṭuiṟayili* [146 of 1935/36].

From the above it is clear that the *nāṭṭār* had certain resources, a treasury, which was filled by rent from common lands and by taxes or cesses customary due to them from (all?) other land of the locality. These resources were spent for organization of festivals [SII, XII, p. 115; 96 of 1906] and for purchase or construction of irrigation facilities. In nāḍu property might be tanks [12 of 1926], canals [SII, pt l, p. 154, 155] and dams [404 of 1911]. Quite probable that *nāṭṭār* belongings in general were known by the term *nāḍāṭci*, which may be contraposed to other existed forms of property - *mīyāṭci* ("superior property", the right of the king and his servants on a part of the crop), *ūrāṭci* ("village property") and *kāṇiāṭci* ("inherited (individual) property") [SII, II, No. 73; III, No. 15; Chatterjee, 1940, p.165].

It is not clear, whether the *nāṭṭār* could regulate the level of general taxation of the locality, i.e. could they or could not restrain its increase. At least they tried to do so [171 of 1940/41]. The *nāṭṭār* were regarded as guarantors of law and order in their localities, therefore they were asked to be witnesses of private transactions and gifts not only on their own territory but on the territories of other *nāḍus* as well [EI, IV, p.297]. They must have also the judicial functions. Probably they had some armed forces, at least a sort of militia, what was nothing exclusive at that time when even merchant corporations had their military contingents. In any case, in the territory close to Tamilnadu a war between two *nāḍus* is mentioned in 1196 C.E. [EC, VI, p.46, No.83].

True, the *nāṭṭār* are mentioned not in every inscription containing grants or other orders of the central power. In order to embrace in full the picture of power structure in that period it is necessary to analyse the cases, first, in which participation of the *nāṭṭār* seemed to be inevitable; second, in which the central power could issue its orders completely ignoring *nāṭṭār*; and third, in which the smaller (in terms of territory controlled, as *ūrār, sabhaiyār, nagarattār*) and broader bodies (professional corporations) decided their problems without reference to *nāḍu*.

But the already collected data, it seems, show, that *nāḍu* was not simply an element of administration, but a peculiar institution occupying a special position vis-à-vis central power. Therefore it looks like omission that N. Karashima in his in

many aspects outstanding book did not pay sufficient attention to this institution. Admitting that "the importance of the *nāḍu* as an ecological and territorial unit in the administration cannot be denied", Karashima believes that it is possible to do without the detailed analyses of its activity, because "in the Chola period, especially in its middle period which coincides with the reign of such powerful kings as Rajaraja I, Rajendra I and Kulottunga I, efforts were made by the kings to built up a centralized administrative network to integrate the state politically by destroying the barriers between *nāḍus* and incorporating them into the imperial administration" [Karashima, 1984, p. XXVI]. It would be difficult to disagree with Karashima as to the "efforts" made by the Great Cholas. But the problem is whether these "efforts" were successful? He notes that "the functions of *nāṭṭār* or *nāṭṭāvar* ... are more conspicuous in Pandyan and Vijayanagar inscriptions than in Chola inscriptions". I Would not ready to agree that the *nāṭṭavar* were "more conspicuous" in vijayanagara period, than under the Cholas, but as to Pandyan period, which was just following the period of imperial Cholas, N. Karashima is quite right, Above in this paper, enumerating the functions of *nāṭṭār*, I referred mainly to the pandyan inscriptions. But what does it mean? It is just the indication of the definite futility of the Cholas "efforts" to subdue territorial communities. As quick as Chola power disappeared, the *nāḍu* organisation revived. Highly probable that it was not seriouly destroyed and subdued even under the Cholas. We must constantly keep in mind that inscriptions fix not the plain reality but an image of this reality existing in the mind of a compilator. Quite probable that the might of imperial Cholas was in many aspects more imaginary than real.

For instance, after Y. Subbarayalu's monograph it was taken as granted that Rajaraja I intorduced *vaḷanāḍus* (territorial units, embraced several *nāḍus*) and it was one of the "efforts" towards centralization. Meanwile, first, there is no decree by Rajaraja I on the creation of a new administrative unit; second, this innovation in any case was a short term one, having been disappeared soon after the Cholas, while *nāḍu* persists; third, the emergence of *vaḷanāḍu* has a good explanation in the light of a spontaneous tendency for collaboration of several *nāḍus*, which can be proved on the basis of inscriptional data. Thus, in 1286 *nāṭṭār* of three nāḍus regulated taxes from a plot of land purchased by *nagarattār* from *ūrār* [147 of 1935/36]. There are other examples of a common real property of several *nāḍus* [591 of 1908; 734 of 1909].

The tendency for extending of communities is seen also in appearance of *periya-nāṭṭār* (Stein, 1980, p. 220-222; Hall, 1982, p. 408), bodies who may cover with its activities 12 *nāḍus* (600 of 1908), 18 *viṣayas* and 79 *nāḍus* [SII, VII, No. 129; 117 of 1900; Stein, 1980, p. 220] and so on. It is not impossible that the *vaḷanāḍus* were intended at the Court as administrative districts and were introduced from above, but community life on the grass-roots level and communal mentality of masses led to a situation that the people quite quickly started to perceive this unit as their own more extended community and a body under the same denomination *(nāṭṭār)* with nearly the same funcions arrived in *vaḷanāḍus* [88 of 1914; 116 of 1924; 285 of 1923; 259, 483 of 1926]. Imitating *nāṭṭār* - the body of a dominant caste, - other professional corporations restructured themselves in order to take part in intercommunity agreements on the *vaḷanāḍu* level [IPS, No.285, 362].

The separate question is about relations of the nāṭṭār with other collective bodies in the locality, i.e. with *sabhā*, *ūr* and *nagarattār*.

As to *nāḍu* - *ūr* relations, they look simple and comprehensible, they are a sort of whole-part relations. I am inclined to agree with B. Stein, that "the *ūr* was not simply a village institution in the same sense as the *sabhā*. The *ūrār* were members of a locality social system in which the village that was granted as *brahmadeya* was located" [Stein, 1980, p. 166]. Though we have absolutely no evidences to believe, as Nilakanta Sastri supposed, the *nāṭṭār* were constituted as a body of representatives of villages, nevertheless we may assume that the dominant caste had some cohesion on a village, as well as a *nāḍu* levels.

The questions of *nāṭṭār* - *Sabhā* and *nāṭṭār* - *nagarattār* relations are more complicated, because these two institutions werre alien to a dominant caste and might be inimical to it.

After researches of Y. Subbarayalu it is clear, that, first, *brahmadeyas* were spread over the country rather evenly, i.e. one-two *brahmadeyas* for a *nāḍu*; second, the *sabhayār* were not included into the *nāṭṭār*; third, *brahmadeyas* originally paid their taxes through *nāṭṭār*; and only to the late Chola period they started to make revenue agreements directly with officials [Subbarayalu, 1973, p. 92-94]. Thus, a certain kind of sovereignty of *nāṭṭār*; over a territory of a *nāḍu*, and not only over

the *vellan-vagai* (revenue-paying, or non-brahman) villages, is confirmed. It is not accidental that the Brahmanas of *agraharas* strived to separate themselves administratively from the *nadu*, having obtained a status of *taniyur* ("a village by itself").

K.P. Hall showed that *nagarams* were spread even more uniformly, counting one per *nadu* [Hall, 1980]. Their assemblies or councils (*nagarattar*) enjoyed a considerable independence from a *nadu*, but this was due probably not to a high status of *nagarattar*, and not to the support from the central power, but to their economic importance and their ties with other *nagarams* outside one *nadu*. The fact that a *nadu* had one *nagaram* cannot be ascribed to the deliberate policy of the central power. At least we have no reasons to believe in it. Much more probable is that this evenness was dictated by economic processes: each *nadu* needed a market place and an abode for non-agricultural population. (By the way-the North-Indian extended community had a town (qasba), which was an economic centre of this community.)

Anyway the separation of non-agricultural segments of population form *nattar* serves as one more evidence for the idea that the latter was a body of people related to agriculture, and might be a sort of a caste organisation.

One more problem is the origin of *nadu*. Although from my point of view *nadu* was a spontaneously arised institution, I would not join B. Stein's view that *nadu* arrived long before the Cholas. Classical Tamil literature, as far as I know, does not contain evidance for existence of communities identical to posterior *nadus*. More than this, it seems to me that this literature convinces that this institution was absent, and even we cannot speak about village communities in the Sangam age in the form which we know from inscriptions. Perhaps, the system of communities, depicted above, started to take shape in the Pallava period.

The further evolution went, perhaps, to strengthening, more consolidation and extension of territorial communities (*periya-nadu*) and making common course with other communities. In Vijayanagara period the role of communities of levels above a village have been coming to nil.

I realize that these notes on a history of *nadu* are quite superficial. The problem

of evolution of *nāḍu* is not raised in this paper, therefore I use in the paper various materials from Pallavas upto Pandyas. The problem of evolution of Tamil traditional community structure deserves a special research.

The *nāṭṭār* might be at the head of very different in size and differently named territories with undemarcated boundaries. *Nāṭṭār* might be a governing body in a mandalam [171 of 1940, 41], in a *Kottam* [SII, II, pt III, p. 351 No. 73; 483 of 1926; EI, v, p.51, No.8]; a *nāḍu* might be a part of another *nāḍu* [598 of 1908; 23 of 1919], and *vaḷanāḍu* - a part of another *vaḷanāḍu* [Karashima, 1984, p. 39, table 3]. Finally, a very diffused term *paṟṟu* was broadly used for a territory of extended community [276, 315 of 1910; 63 of 1932/33; 144 of 1941/42]. The *paṟṟu* might consist of one village and its hamlets [108 of 1924, 146 of 1935/36] and be included into another *paṟṟu* [115 of 1939/40].

So, it is sure that the network of territorial divisions was not in any sense regular or unified. We cannot assume that 556 *nāḍus* or any other definite number of them were clear cut and grouped in *Vaḷanāḍus* or *kottams*, and then into 5 or 6 *maṇḍalams*. On the contrary, self-governed territories might be of different size which depended on spontaneous activities of local people, on the volume of problems, which they ought to decide.

Strikingly little is known about the structure of the *nāṭṭār* as a body and about the decisions making by it. N. Karashima was quite right when he said that "it is crucial to elucidate the actual way the *nāṭṭār* ruled a *nāḍu*" (Karashima, 1984, p. XXVII). But we know at least that nāṭṭār had no definite constitution. There are no evidences of elections, of any qualifications of candidates, on the pair of the rules for elections of *sabhā* committies. A member of *nāṭṭār* did not receive any title, any indication that he is a member of a body. For instance, no person in inscriptions is known as "one of the *nāṭṭār*".

There were many attempts to solve a question of *nāṭṭār* membership arbitrary or out of common sense. As I said earlier, there is no foundations to believe that it was an assembly of representatives of villages. Rather bold and simplifying is a view expressed by M.G.S Narayanan that "the rulers of the *nāḍu* were not peasants, but feudal lords, habitually giving portions of land to tenant cultivators, collecting

dues and taxes from them and exercising governmental powers over them on behalf of the Chola sovereign" [Narayanan, 1978, p. 10-11]. And definitely wrong is his next statement: "This is typical of the feudal structure as obtained in Europe and India during the early middle ages". There is absolutely no foundation to believe that in South India of 9-13th centuries the main bulk of peasants was deprived of their own land and became tenants of certain landlords. So peasant-proprietors, ordinary members of community had to play a considerable role in the local self government. True, we have sufficient indications that in rural areas, in the *nāḍus* there were persons having much land, whom we could define as landlords. And quite probable that they played also a significant role in local communal life. But the inclusion of landlords into the communal organization and the existence of communal landed property (lands of *nāḍus*, of *ūrs*, of *sabhās*) made this situation quite different from a typical European one.

There are some terms which can be understood as "the head of a *nāḍu*" (*nāḍāḻvān*, *nāḍuḍaiya* and others). But it is difficult to decide, whether they were local chiefs, heads of a dominant caste, or officials, having received the right of governance from above. It is quite possible to strenghten the view of Karashima that *nāḍāḻvāṉs* were big landholders. Especially interesting is that they owned land and the right to collect taxes [for themselves] outside of the *nāḍus*, the *nāḍāḻvāṉs* of which they were named [27/28 of 1926] and that they acted as if aside and separate of *nāṭṭār*. In the light of this it is difficult to comprehend mutual relations between, say, kalvayil-*nāḍāḻvāṉ* and the *nāṭṭavār* of Adalayur - *nāḍu* in 1246 C.E., when the said *nāḍāḻvān* ordered to make longer a *measuring rod*, i.e. to lower the rates of taxation [174 of 1936/37]. Adalayur - *nāḍu* at that time had its own - Cakravarti Kulashekhara Adalayur - *nāḍāḻvāṉ* [81 of 1924]. This case cannot be understood if we assume that *nāḍāḻvāṉ* was an officer appointed to rule a *nāḍu*.

Many questions remain without answers. Nevertheless I believe that data from Tamil inscriptions of 10-13th centuries contain many similarities with materials (sometimes much more late) on the extended communities in the other parts of India. I would propose to analyse very complicated and visibly even contradictory data on socio-power-structure of South Indian states with the hypothesis of existing *in those* times of dominant castes of *veḷḷalas* and some others, who have been creating caste

informal bodies of the type of *panchāyats* of the *Jat* caste in Northern India [Pradhan, 1966], whose function included not only caste regulations but territorial self-governing as well, because of dominant position of the respected caste. It is relevant that in the 18th century the term *nāṭṭār* was usually applied to the heads of castes [Tsukasa Mizushima, 1981].

REFERENCES

Alayev L.B. (1985) Methods of Studying Epigraphy as a Historical Source. - Indus Valley to Mekong Delta. *Explorations in Epigraphy.* Madras.

ARE - *Annual Report on Epigraphy for the year... 1906/7 - 1966/67.* (Notes in the text are only by sequence number of inscription and year of reporting).

Chatterjee K. (1940) Temple Offerings and Temple Grants in South India. *Proceedings of the Indian History Congress.* Fourth session. Lahore.

EC - *Epigraphia Carnatica.* Vol. 1-XII. Bangalore, 1898-1905.

EI - *Epigraphia Indica.* Vol. 1-XXXVIII. Calcutta - Delhi, 1892-1969.

IPS - *Chronological List of Inscriptions of the Pudukkottai State* (Arranged according to Dynasties). Pudukkottai, 1929;

- *Inscriptions (Texts) of the Pudukkotai State* (Arranged according to Dynasties). Pudukkottai, 1929;

- *Inscriptions in the Pudukkotai State.* Translated into English by K.R. Srinivasa Aiyar. Pt 1. Early, Pallava and Chola Inscriptions. Pudukkottai, 1941

Jha D.N. (1985) Relevance of "Peasant State and Society" to Pallava - Chola Times. - Indus Valley to Mecong Delta. *Explorations in Epigraphy.* Madras.

Hall K.R. (1980) *Trade and Statecraft in the Age of the Cholas.* Delhi.

Hall K.R. (1982) Peasant State and Society in Chola Times: A view from the Tiruvidaimarudur Urban Complex. - *Indian Economic and Social*

History Review. Vol. XVIII, No. 3-4.

Karashima N. (1984) *South Indian History and Society. Studies from Inscriptions A.D. 850 - 1800.* Delhi.

Lelukhin D. (1993) *State, Administration and Policy in Kautiliya "Arthashastra". - Vestnik Drevney Istorii.* Moscow, 1993, No.2 (in Russian).

Narayanan M.G.S. (1978) *Recent work and Research Problems in Social and Economic History of Ancient and Medieval South India.* (A Report in UGC Summer Institute in History) (manuscript).

Pradhan M.C. (1966) *The Political System of the Jats of Northern India.* Bombay.

SII - *South - Indian Inscriptions.* Vol. 1-XIII. Madras, 1890- 1952; Vol. XIV-XX. Delhi, 1962- 1965

Stein B.(1980) *Peasant State and Society in Medieval South India.* Delhi.

Subbarayalu Y. (1973) *Political Geography of the Chola country.* Madras.

Tsukasa Mizushima (1981) Nattar in Pondicherry in Mid-Eighteen Century (summary of the paper presented to the *Vth International Conference-Seminar of Tamil Studies.* Madurai) (manuscript).

குழு
அமர்வுகள்

PANEL
SESSIONS

Panel Session 1 / குழு அமர்வு 1

Haiku Compared / ஹைகூ ஒப்புமை

17

தமிழில் ஹைகூ: ஒரு பறவைப் பார்வை

இரா. மோகன்

'கீழ்த்திசைப் பௌத்தச் சிந்தனையில் முகிழ்த்துச் சீனத்துப் பண்பாட்டில் திளைத்து, ஜப்பானிய அழகுப் பார்வையில் மலர்ந்து, கவிதை மணம் வீசுவது ஹைகூ' (தி. லீலாவதி 1990:7). தன் வாமன வடிவால் - படிம அழகால் - இயற்கைச் சித்திரிப்பால் - தத்துவ நோக்கால் - எளிமைப் பண்பால் - வெளியீட்டுத் திறத்தால் - முத்தாய்ப்பான மொழிநடையால் உலகின் கவனத்தையே ஒட்டுமொத்தமாக ஈர்த்திருக்கும் கவிதை வடிவம் ஹைகூ. இவ்வடிவம் தமிழில் பெற்றிருக்கும் இடத்தினை மதிப்பிடுவது இக் கட்டுரையின் நோக்கம்.

தமிழைப் பொறுத்தவரையில், ஹைகூ வடிவத்தினை அடையாளம் காட்டியவர் பாரதியார். 'நடை', 'தீபம்', 'கணையாழி' போன்ற சிற்றிதழ்களும் இலக்கிய இதழ்களும் இவ் வடிவத்தினை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தன. தந்தச் சிற்பம் போன்ற இவ்வடிவின் நுட்ப வனப்பால் கவரப் பெற்ற அப்துல் ரகுமான், இந்த வனப்பை - வளத்தை - தமிழுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற முனைப்போடு இவ் வடிவினைக் குறித்து இடைவிடாது பிரச்சாரம் செய்தார். இதன் விளைவாகத் தமிழில் எண்பதுகளின் இடைப் பகுதியிலிருந்து புதுக்கவிதை அமைத்துத் தந்த தோரண வாயில் வழியாக ஹைகூ கவிதைகள் உலா வரத் தொடங்கின.

பாரதியின் அறிமுகம்

ஜப்பானிய ஹைகூ வடிவத்தினைத் தமிழுக்கு முதன்முதலில் அடையாளம் காட்டியவர் கவியரசர் பாரதியார். 'மாடர்ன் ரிவியூ' என்ற கல்கத்தா பத்திரிகையிலே 'உயோநே நோகுச்சி' என்ற ஜப்பானியக் கவிஞர் எழுதிய ஒரு கடிதத்தைப் படித்துவிட்டு, 'சுதேசமித்திர'னில் 16-10-1916-இல் தமிழுக்கு ஹைகூவை அறிமுகம் செய்து ஒரு கட்டுரை எழுதினார் அவர். 'ஜப்பானியக் கவிதை' என்ற

தலைப்பில் அமைந்த அக் கட்டுரையில் அவர், மேற்கு நாட்டுக் கவிதைகளுக்கும் கீழைநாட்டுக் கவிதைகளுக்கும் இடையே காணலாகும் இரு முனைப்பான வேறுபாடுகளை எடுத்துக் காட்டியிருந்தார்.

மேற்குக் கவிதையில் சொல் மிகுதி. எண்ணத்தை
அப்படியே வீண் சேர்க்கையில்லாமல் சொல்லும்
வழக்கம் ஐரோப்பியக் கவிதையிலேயில்லை. எதுகை
சந்தம் முதலியவற்றைக் கருதியும், சோம்பற் குணத்-
தாலும், தெளிவில்லாமையாலும் பல சொற்களைச்
சேர்த்து வெறுமே பாட்டை அது போகிற வழியெல்லாம்
வளர்த்துக் கொண்டு போகும் வழக்கம் ஐரோப்பாவிலும்
அமெரிக்காவிலும் அதிகமிருக்கிறது...ஜப்பானில்
அப்படியில்லை. வேண்டாத சொல் ஒன்றுகூடச்
சேர்ப்பது கிடையாது ... சுருங்கச் சொல்லி விளங்க
வைத்தல் ஐப்பானியக் கவிதையின் விசேஷசத் தன்மை.

(பாரதியார் 1977:260-261)

மனத்தில் உள்ள கருத்தை நேரே வெளியிடுதல்,சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் இரண்டையும் ஐப்பானியக் கவிதையின் சிறப்பியல்புகளாகச் சுட்டிக் காட்டுகின்றார் பாரதியார். கீழ்த்திசைக் கவிதைக்கு-குறிப்பாக, ஜப்பானியக் கவிதைக்கு உரியனவாக அவர் எடுத்துக்காட்டும் சிறப்புப் பண்புகள், தமிழ்க் கவிதைக்கும் பொருந்தி வருவனவே ஆகும்.

தமிழில் தொடக்க நாளிலிருந்து குறுங்கவிதை வடிவமும்,சுருங்கச் சொல்லலும் போற்றப்பட்டு வந்துள்ளன. 'கடுகைத் துளைத்து எழுகடலைப் புகட்டிக் குறுகத் தறித்த' வடிவம் திருக்குறள். ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் ஓரடியால் அமைந்த புகழ்பெற்ற நீதி இலக்கிய வகைகள். தமிழ் இலக்கணம் 'சுருங்கச் சொல்லல்' (brevity) என்னும் பண்பினை நூலின் அழகாகவும், உத்தியாகவும் சுட்டிக்காட்டியுள்ளது. சிந்தடி என்ற மூன்று அடி யாப்பு வடிவமும் தமிழில் உண்டு. எனவே, சொற்சுருக்கத்தை உயிர்ப் பண்பாகக் கொண்ட ஜப்பானிய ஹைகூ மரபினைத் தமிழ்க் கவிதை உலகம் ஏற்றுப் போற்றியதில் வியப்பேதும் இல்லை.

'Haiku' என்பதற்குத் தமிழில் வழங்கும் பெயர்கள்

'Haiku'என்பதற்கு இணையாக 'ஹைகூ', 'ஹைக்கூ', 'ஹைய்கு', 'ஹொக்கு', 'ஹைஸ்கு' எனப் பல பெயர்கள் தமிழில் வழங்கி வருகின்றன. இவை தவிர, தமிழ்

மண்ணுக்கும் மரபிற்கும் ஏற்ப ஜப்பானிய ஹைகூவிற்குப் பெயரிடும் முயற்சியும் கவிஞர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அப்துல் ரகுமான் ஹைகூவிற்குச் 'சிந்தர்' என்று பெயரிட்டுள்ளார். "சிந்தர் என்பதற்குக் குள்ளர் என்று அர்த்தம். வாமனனுக்கு இந்தப் பெயர் உண்டு. இந்தச் சொல் 'சிந்தடி'என்ற தமிழின் மூன்று அடி யாப்பு வடிவத்தையும் உணர்த்தும். இவ்வளவையும் மனத்தில் கொண்டுதான் இந்தப் பெயரை இட்டேன்" என்பது இப்பெயரீட்டிற்கு அவர் தரும் விளக்கம் (அறிவுமதி 1984: அப்துல் ரகுமான் முன்னுரை).

அமுதபாரதி 'ஹைகூ' என்பதற்கு இணையாக 'ஐக்கூ' என்ற பெயரைக் கையாண்டுள்ளார். "ஐக்கூ என்பதில் பகுதியாகிய 'ஐ' கடுகையும், விகுதியாகிய 'கூ' பூமியையும் குறிக்கும். 'க்' என்னும் ககர ஒற்று மிகுந்து 'ஐக்கூ' ஆயிற்று" என்பது அவர் கூற்று (அமுதபாரதி 1992:3). 'கடுகளவுள்ள சிறிய பாடலில் நிலத்தளவு பெரிய பொருளைக் காணமுடியும் என்பதால் இப்பாடலை ஐக்கூ எனக் கூறலாம்' என்னும் அவரது விளக்கம் புதுமையானது.

புதுவையைச் சார்ந்த கவிஞர்களான தமிழ்மணி,தமிழ்நெஞ்சன், செந்தமிழினியன் ஆகியோர் 'துளிப்பா' என்ற பெயரால் ஹைகூவைச் சுட்டுகின்றனர். 'தொலைவரி கொடுக்கும்போது பயன்படும் சொற்சுருக்கம் போல எழுதப்படுவது துளிப்பா ... இத்துளிப்பா சுருக்கெழுத்தைப் போல விரித்துப் பார்க்கின் விதையிலிருந்து ஆல் வருவது போல எழும்' என்பது அவர்கள் கருத்து (சீனு. தமிழ்மணி & தமிழ்நெஞ்சன் 1991:1).

சிறிதான, குறைவான, பகுதியான உருவத்தைக் குறிக்கும் வகையிலும், சுருக்கமான, நேர்த்தியான, குறிப்பான, பொருத்தமான-போன்ற உட்பொருளை உணர்த்தும் வகையிலும் ஹைகூவிற்கு ரவி 'நறுக்'கவிதைகள் எனப் பெயரிட்டுள்ளார் (ரவி 1991:XI).

நெல்லை சு. முத்து ஹைகூ பற்றிய தம் கட்டுரை ஒன்றில் 'மின்மினிக் கவிதைகள்' என்ற பெயரால் ஹைகூ கவிதைகளைச் சுட்டுகின்றார் (நெல்லை சு.முத்து 1989:4)

உவமைக் கவிஞர் சுரதா 'மின்பா' என்ற பெயரால் ஹைகூவைச் சுட்டியுள்ளார் (சுரதா 1992:5).

வடிவச் சிறுமையை மனத்தில் கொண்டு 'குள்ளக் குழந்தை', 'குட்டைக்

கவிதைகள்', 'வாமனக் குழந்தை', 'வாமனக் கவிதைகள்' 'சுருக்குப்பா','குறுங்குறள்' என்ற பெயர்களாலும் ஆய்வாளர்கள் ஹைகூ கவிதைகளைச் சுட்டுகின்றனர்.

தமிழில் வெளிவந்துள்ள ஹைகூ தொகுப்புக்கள்

தமிழில் முதல் ஹைகூ கவிதைத் தொகுப்பு 1984-இல் வெளி வந்துள்ளது. 'புள்ளிப் பூக்கள்' என்பது தொகுப்பின் பெயர்: அமுதபாரதி என்பது கவிஞரின் பெயர். இவர் ஓர் ஓவியரும் கூட. 'தமிழில் முதன்முதலாக வெளிவரும் ஹைக்கூ கவிதைகள்' என்ற அறிமுகக் குறிப்போடு அமுதபாரதியின் 'புள்ளிப் பூக்கள்' தொகுப்பு வெளிவந்துள்ளது. இத் தொகுப்பினைத் தவிர, 'காற்றின் கைகள்' (1987) 'ஐக்கூ அந்தாதி' (1992) என இன்னும் இரு ஹைகூ கவிதைத் தொகுப்புக்களையும் வெளியிட்டுள்ளார் அமுதபாரதி. 'காற்றின் கைக'ளில் 5-7-5 எனும் அசைகளில் இயங்கும் இருநூறு ஐக்கூ கவிதைகளும் ஒருநூறு சித்திரங்களும் இடம் பெற்றுள்ளன. இந்நூலுக்கு இரா. இளவரசு எழுதியிருக்கும் முன்னுரை ஆய்வு நோக்கில் குறிப்பிடத்தக்கதாகும். ஹைகூ வடிவில் அந்தாதி அமைப்பில் தமிழில் வெளிவந்துள்ள முதல் முயற்சி 'ஐக்கூ அந்தாதி'. இதில் நூறு கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இங்ஙனம் தமிழுக்கு மூன்று ஹைகூ தொகுப்புக்களை அளித்துள்ள அமுதபாரதி 'ஐக்கூ அமுதோன்' என்றே சிறப்பித்துப் பேசப்படுகின்றார்.

அறிவுமதியின் 'புல்லின் நுனியில் பனித்துளி' (1984) என்பது தமிழில் வெளிவந்துள்ள இரண்டாவது ஹைகூ தொகுப்பாகும். 'இது ஒரு ஜப்பானிகா வெளியீடு'ஆகும். 'வாமனர்களுக்கு ஒரு வரவேற்பு'என்ற தலைப்பில் கவிஞர் அப்துல் ரகுமான் இந்நூலுக்கு எழுதியிருக்கும் அணிந்துரை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

கழனியூரன் 'நிரந்தர மின்னல்கள்' என்ற தலைப்பில் 1985-இல் ஒரு ஹைகூ தொகுப்பினை வெளியிட்டுள்ளார். 'தமிழகத்தில் இரண்டாவதாக வெளிவரும் ஹைக்கூ கவிதைத் தொகுதி' என்பது இந்நூலில் இடம் பெற்றிருக்கும் ஒரு தவறான தகவல் ஆகும். ஹைகூ வரிசையில் இந்நூல் மூன்றாவது இடத்தைப் பெறுவதாகும். 'நட்சத்திர விழிகள்'(1990) என்ற தலைப்பில் பிறிதொரு ஹைகூ தொகுப்பினையும் கழனியூரன் வெளியிட்டுள்ளார்.

புகழ்பெற்ற புதுக்கவிஞர்களுள் தமிழன்பன் மட்டுமே தனியொரு ஹைகூ தொகுப்பினை வெளியிட்டுள்ளார். அவரது 'சூரியப் பிறைகள்' என்னும் தொகுப்பு 'ஜப்பானிய ஹைய்கு வடிவ கவிதைகள்' என்ற அறிமுக குறிப்போடு 1985-இல் வெளிவந்துள்ளது. 'வாசல் ஒர வாசகம்' என்ற தலைப்பில் இத்தொகுப்பில் இடம் பெற்றிருக்கும் கவிஞரின் 14 பக்க முன்னுரை ஹைகூ ஆய்வாளர்கள் கவனிக்க

வேண்டிய ஒன்றாகும்.

'சிந்தனையின் நிழல்கள்' என்ற தலைப்பில் 1985 - இல் மதுரையிலிருந்து ஒரு ஹைகூ கவிதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. இதனை வெளியிட்டிருக்கும் கவிஞரின் பெயர் செ. வெற்றிவேல் என்பதாகும்.

சு. முரளிதரனின் 'கடைக்குள் தேசம்' 1988 - இல் வெளிவந்துள்ளது. இது இலங்கையில் முதன்முதலாகத் தமிழில் வெளிவந்த 'ஹைக்கூ' வடிவ கவிதைத் தொகுதி என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்க செய்தியாகும். 'நேசம் கலந்த உண்மை' என்ற தலைப்பில் மேமன் கவி இந்நூலுக்கு எழுதியிருக்கும் மூன்று பக்க முன்னுரை முத்தாய்ப்பான ஒன்றாகும். ஹைகூவின் தாக்கம் தமிழகம் தாண்டி இலங்கை வரைக்கும் பரவி இருப்பதை இத்தொகுப்பு முயற்சி எடுத்துக்காட்டுகின்றது. 'கூடைக்குள் தேசம்' தவிர 1988-இல் அவைநாயகனின் 'சூரியச் செதில்கள்', இதயகீதாவின் 'தீயின் பிணம்' என்னும் இரு தொகுப்புகள் வெளிவந்துள்ளன.

கல்வியாளர்களும் ஹைகூ வெளியீட்டில் கவனத்தைச் செலுத்தியிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பேராசிரியை மித்ரா 'ஹைகூ கவிதைகள்' என்னும் தலைப்பில் 1990-இல் ஒரு தொகுப்பினை வெளியிட்டுள்ளார். இத்தொகுப்பிற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து மாணவரும் ஹைகூ கவிஞருமான அறிவுமதி அணிந்துரை வழங்கியிருப்பது போற்றத்தக்கதாகும். மித்ரா 1993- இல் வெளியிட்டிருக்கும் பிறிதொரு ஹைகூ கவிதைத் தொகுப்பு 'குடையில் கேட்ட பேச்சு' என்பதாகும். 'தூரிகை தீண்டாத ஓவியம்' என்ற தலைப்பில் இந்திரன் இந்நூலுக்கு எழுதியிருக்கும் அணிந்துரை சிறப்பானதாகும். 'ஹைகூ பார்வை இயல்பாய் வாய்த்திருப்பவர்' என்பது ஹைகூ கவிஞர் என்ற முறையில் மித்ராவுக்குக் கிடைத்திருக்கும் புகழாரம் ஆகும். 'ஹைகூ கவிதைத் தொகுப்பினை வெளியிட்டிருக்கும் பெண் கவிஞர்' என்ற வரிசையில் மித்ராவுடன் சேரும் பிறிதொருவர் பரிமளமுத்து. 'இலையுதிர்காலம் நிரந்தரமல்ல' என்னும் அவரது தொகுப்பு 1990-இல் வெளிவந்துள்ளது.

தமிழன்பன், மித்ரா போன்ற பேராசிரியர்கள் மட்டுமன்றி, மாணவர்களும் ஆய்வாளர்களும் கூட ஹைகூ வெளியீட்டில் ஆர்வம் காட்டியுள்ளனர். செங்கை மருத்துவக் கல்லூரி மாணவரான செ. செந்தில் குமார் 'நனையாத நிலா' (1990), 'துணையிழந்த பார வண்டி' (1994) என்னும் இரு ஹைகூ தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார். இவற்றுள் 'துணையிழந்த பார வண்டி' தொகுப்பிற்குத் தமிழன்பன் எழுதியிருக்கும் முன்னுரை ஹைகூ ஆய்வுக்கு அணிசேர்ப்பதாகும்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல் துறையைச் சார்ந்த ஆய்வாளர் ரவி 'முனைகெட்ட தீ' என்னும் தலைப்பில் 1991 - இல் ஒரு ஹைகூ தொகுப்பினை வெளியிட்டுள்ளார். இத்தொகுப்பிற்குப் பேராசிரியர் தி. சு. நடராசன் சிறப்பானதொரு முன்னுரையை வழங்கியுள்ளார்.

புதுவை சீனு. தமிழ்மணி, புதுவை தமிழ்நெஞ்சன் இருவரும் இணைந்து 'தீவின் தாகம்' என்னும் தலைப்பில் 1991-இல் ஒரு ஹைகூ தொகுப்பினை வெளியிட்டுள்ளனர். 'இருவரும் ஒரு தாய்க் கருப்பைப் பிறப்பினர்' என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். புதுவையைச் சார்ந்த பிறிதொரு ஹைகூ கவிஞர் செந்தமிழினியன். அவரது 'பரிதிப் புன்னகை' என்னும் தொகுப்பு 1994 - இல் வெளிவந்துள்ளது. இத்தொகுப்பின் இறுதியில் இதுவரையில் தமிழில் வெளிவந்த ஹைகூ தொகுதிகளின் பெயர்களைக் கவிஞர் நிரல்படுத்தித் தந்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

த. சலாவுத்தீன், பழநிபாரதி, எம்.எஸ். தியாகராஜன் மூவரும் 'புஷ்கின் இலக்கியப் பேரவை' நடத்திய ஹைகூ கவிதைப் போட்டியில் பங்குகொண்ட கவிஞர்களின் படைப்புக்களிலிருந்து நல்ல சில ஹைகூ கவிதைகளைத் தேர்ந்தெடுத்து 'இன்னும் மக்கள்' என்ற தலைப்பில் தனியொரு தொகுப்பாக வெளியிட்டுள்ளனர். இத்தொகுப்பு 1991 - இல் வெளிவந்துள்ளது.

துறவியின் 'சிறகுகளில் சுவடுகள்', மு. முருகேஷின் 'விரல் நுனியில் வானம்' என்னும் இரு ஹைகூ கவிதைத் தொகுப்புக்கள் 1993-இல் வெளிவந்துள்ளன. இவற்றுள் 'விரல் நுனியில் வானம்' தொகுப்பிற்குக் 'குறுகத் தரித்த குரல்' என்னும் தலைப்பில் நா. முத்துநிலவன் எழுதியிருக்கும் முன்னுரை ஹைகூ ஆய்வாளர்கள் பயில வேண்டிய ஒன்றாகும்.

ஆர். வி. பதியின் 'ஹைகூ கவிதைகள்', ந.க. துறைவனின் 'நதிக்கரைகள்', பல்லவனின் 'சின்ன நதிகள்', ராஜமுருகு பாண்டியனின் 'ஹைகூப் பறவைகள்' ஆகியவை 1994-இல் வெளிவந்திருக்கும் ஹைகூ கவிதைத் தொகுப்புக்கள் ஆகும். இவற்றுள் 'சின்ன நதி' களுக்கு மு. மேத்தாவும், 'ஹைகூப் பறவை' களுக்கு தி. லீலாவதியும் எழுதியிருக்கும் முன்னுரைகள் சிறப்பானவை.

1984-இல் தொடங்கி இதுவரை தமிழில் 27 ஹைகூ தொகுப்புக்கள் வெளிவந்திருப்பது ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தியே. எனினும், இவற்றுள் இடம்பெற்றிருக்கும் ஹைகூ கவிதைகளுள் தகுதியும் தரமும் நிறமும் வாய்ந்தவை எத்தனை என்பது கேள்விக் குறியே. தமிழன்பன் கூறுவது போல் 'அடிக் கணக்கில் மட்டுமே ஹைய்கு பின்பற்றப்பட்டு, மூன்று அடிகளில் முடியுமாறு எழுதப்படுகிற

ஹைய்கு பாணிக் கவிதைகளையே தமிழில் (மிகுதியாகக்) காண முடிகிறது' (தமிழன்பன் 1985 : XI).

ஹைகூ மொழிபெயர்ப்புகள்

ஹைகூவை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்த பெருமைக்கு உரியவர் கவிஞர் சி. மணி. அவரது ஹைகூ மொழிபெயர்ப்புகள் 'நடை' இதழில் (அக்டோபர் 1968) 'ஜப்பானிய கவிதைகள்' என்று தலைப்பிட்டுச் சிறிய அறிமுக உரையுடன் வெளிவந்தன.

நூல் வடிவில் முதன்முதலில் ஜப்பானிய ஹைகூ கவிதைகளைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் தி. லீலாவதி. 1987 - இல் 'ஜப்பானிய ஹைகூ' என்ற பெயரில் அவர் ஒரு தொகுப்பினை வெளியிட்டுள்ளார். அதில் 151 ஜப்பானியக் கவிதைகளின் மொழிபெயர்ப்பு வடிவங்கள் இடம் பெற்றுள்ளன.

சஜ்ஜாத் புகாரி 1992-இல் 'பேசும் விரல்கள்' என்ற தலைப்பில் கவிஞர் அலீம் சபா நவீதியின் உருது ஹைகூ கவிதைகளைத் தமிழாக்கித் தந்துள்ளார். இத் தொகுப்பில் 5-7-5 அசைகளில் 50 ஹைகூ கவிதைகளும், 5-7-5 அசைகளைப் பின்பற்றாத 122 ஹைகூ கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

சஞ்சீவ் பாட்லாவின் 'ஹைகூ மை ப்ரண்ட்' என்ற ஆங்கில நூலை 'ஹைகூ என் தோழி' என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார் மித்ரா (1994). தமிழ்ச் சூழலுக்கு ஏற்பப் புதிய வார்ப்புக்களாக 'ஹைகூ என் தோழி' யின் 123 கவிதைகள் இந்நூலில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ஜப்பானிய - தமிழ் ஹைகூ கவிதைகள் : ஒப்பு நோக்கு

ஜப்பானிய ஹைகூ கவிதைகளுக்கென்று சில முக்கியமான பண்புகளும் மரபுகளும் உள்ளன. அவை எந்த அளவுக்குத் தமிழ் ஹைகூ கவிதைகளில் போற்றப்பட்டுள்ளன அல்லது மீறப்பட்டுள்ளன எனக் காண்பது இன்றியமையாததாகும். அதே போல் தமிழ் ஹைகூ கவிதைகளுக்கென்று தனித்தன்மைகள் எவையேனும் உள்ளனவா என நோக்குவதும் முக்கியமானதாகும். இவ்வகையில் ஜப்பானிய - தமிழ் ஹைகூ கவிதைகளை ஒப்புநோக்கும்போது புலனாகும் சில அடிப்படையான உண்மைகளை இங்கே காணலாம்.

1. ஜப்பானிய ஹைகூ மூன்று அடிகளால் ஆனது; 5-7-5 என்ற அசை அமைப்பினை உடையது. இவ்விரு விதிகளையும் தமிழில் ஹைகூ பாடிய கவிஞர்கள் ஒரு சீராகப் பின்பற்றவில்லை. தமிழ் ஹைகூ கவிதைகள் பெரும்பாலும்

மூன்று அடிகளால் அமைந்துள்ளன; என்றாலும் இரண்டு அடிகளால், நான்கு அடிகளால் அமைந்த ஹைகூ கவிதைகளும் தமிழில் காணப்படுகின்றன. ஓர் எடுத்துக்காட்டு:

கடிகார முட்களுக்கும்
காலண்டர் தாள்களுக்கும்
நடுவில் படபடக்கிறது
என் இறக்கை (கழனியூரன் 1990: 41)

கழனியூரன், இதய கீதா, தமிழன்பன் ஆகியோர் நான்கு அடிகளால் ஆன ஹைகூ கவிதைகளை எழுதியுள்ளனர்.

இதே போல் 5-7-5 என்ற அசை அமைப்பும் தமிழில் முறையாகப் பிசகில்லாமல் பின்பற்றப்படவில்லை.

2. ஜப்பானிய ஹைகூ கவிதைக்குத் தலைப்பு இருக்காது; தலைப்பு இல்லாமலே காட்சியளிப்பது தான் ஜப்பானிய ஹைகூவின் தனிப்பண்பு. ஆயின், தமிழில் சில கவிஞர்கள் தங்கள் ஹைகூ கவிதைகளுக்குத் தலைப்புக்களை வைத்துள்ளனர். சான்றாக,

அந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல்?

என்ற ஹைகூவிற்கு 'யார்?' எனத் தலைப்பு வைத்துள்ளார் அமுதபாரதி (1984). இதே போல் பரிமளமுத்து, செ. வெற்றிவேல் இருவரும் தங்கள் ஹைகூ கவிதைகளுக்குத் தலைப்புக்களைத் தந்துள்ளனர்.

3. ஜப்பானிய ஹைகூவில் ஈற்றடிதான் உயிர்நாடி; அழகும் ஆற்றலும் ஈற்றடியில் தான் குடிகொண்டிருக்கும். அது ஒரு திடீர் வெளிப்பாட்டை-உணர்வு அதிர்ச்சியை-ஏற்படுத்தி முழுக்கவிதையையும் வெளிப்படுத்தும். மேலும் ஜப்பானிய ஹைகூ தன் ஈற்றடியில் ஆற்றல் மிக்க வெளிப்பாட்டிற்காகப் பெயர்ச் சொல்லையே பயன்படுத்தும் இவ்விரு மரபுகளையும் தமிழ் ஹைகூ கவிதைகள் முற்றிலும் பின்பற்றி இருப்பதாகச் சொல்ல முடியவில்லை. தமிழில் ஈற்றடி சாதாரணமாக அமைந்த ஹைகூ கவிதைகள் உண்டு; ஈற்றடியில் பெயர்ச் சொல்லைப் பயன்படுத்தாத ஹைகூ கவிதைகளும் உண்டு. எனினும் ஈற்றடி அழகாகவும் ஆற்றலோடும் அமைந்த ஹைகூ கவிதைகளும் தமிழில் காணப்படுகின்றன. ஒரு சான்று:

கவர் நிறைய கடன்
வாடகைப் புன்னகை
முதல் தேதி (மு.முருகேஷ் 1993: 49)

4. ஜப்பானிய ஹைகூவின் மொழியமைப்பு மிகவும் சிக்கனமானது; செறிவானது; தந்தியைப் போன்றது. வேண்டாத சொற்களை மட்டுமல்ல - வாக்கிய அமைப்பிற்குத் தேவையான இணைப்புச் சொற்களைக் கூட - முற்றிலுமாக விலக்கி விடுவது அதன் சிறப்பியல்பாகும். இவ்வகையில் தமிழ் ஹைகூ கவிஞர்கள் இன்னும் ஆழமாகக் கருத்துச் செலுத்த வேண்டும்; செறிவான, சுண்டக் காய்ச்சிய மொழிநடையைக் கையாளுவதில் தனிக் கவனம் கொள்ள வேண்டும். ஓர் எடுத்துக் காட்டு:

வாழ்க்கை இதுதான் ...
செத்துக் கொண்டிருக்கும் தாயருகில்
சிரித்துக் கொண்டிருக்கும் குழந்தை

என்ற அறிவுமதியின் ஹைகூ.

சாகும் தாய்
அருகில்
சிரிக்கும் குழந்தை

என்றிருந்தால் அற்புதமான ஹைகூ ஆகியிருக்கும் என்பார் அப்துல் ரகுமான் (1984).

5. ஜப்பானிய ஹைகூவில் இயற்கை பெறும் இடம் முக்கியமானது; பெரும்பாலும் அது பருவ காலங்களின் மாற்றங்களை, அந்த மாற்றங்கள் மனித மனத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களைச் சித்திரிக்கும். இங்ஙனம் பருவங்களின் அடிப்படையில் பிரித்துப் பிரித்து இயற்கையை அணுகும் அல்லது பாடும் பாங்கு தமிழில் இல்லை. என்றாலும் சங்கக் கவிதை முதலாகப் பாவேந்தர் பாரதிதாசனின் ‘அழகின் சிரிப்பு’ வரையாக இயற்கையைப் பாடுவதில் ஒரு மரபுத் தொடர்ச்சி நமக்கு உண்டு. புன்னையோடு தமக்கை உறவு கொண்டாடிய தலைவியைச் சங்கக் கவிதை காட்டும்; வண்டுகளின் இன்ப வாழ்வுக்கு இடையூறு நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காகத் தேரின் மணியொலியை அடக்கிய தலைவனைச் சங்க இலக்கியத்தில் சந்திக்கலாம்; ‘யாரணங் குற்றனை கயலே, நள்ளென் கங்குலும் கேட்கும் நின் குரலே’ என்று இயற்கைக்காகப் பரிந்து பேசிய மனம் பண்டைத் தமிழ் மனம்; இயற்கையோடு இயைந்த வாழ்வு பண்டைத்தமிழ் வாழ்வு. ‘வாடிய பயிரைக்

கண்டபோதெல்லாம் வாடினேன்' என்னும் வள்ளலாரின் வாக்கும், 'காக்கை குருவி எங்கள் ஜாதி, நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்' என்ற பாரதியின் கூற்றும் இயற்கை மீதான அக்கறையின் உச்சத்தைக் காட்டுவனவாகும். எனவே , ஜப்பானிய மரபினை அடியொற்றியே தமிழிலும் கவிஞர்கள் இயற்கையை அணுக வேண்டிய கட்டாயம் இல்லை; ஜப்பானிய ஹைகூவின் நிழலாகவோ, படியாகவோ இயற்கையைப் பாடவேண்டிய அவசியம் இல்லை; திரும்பத் திரும்ப வண்ணத்துப் பூச்சி, சோளக்காட்டுப் பொம்மை, கொசு, பல்லி, தும்பி, சில்வண்டு போன்ற ஒரு சிலவற்றையே படம்பிடித்துக் காட்ட வேண்டிய தேவை இல்லை. தமிழ் மரபிற்கும் மண்ணிற்கும் ஏற்பத் தனித் தன்மையோடு பாடப்பெறும் போதுதான் தமிழ் ஹைகூ கவிதைகளில் இயற்கைச் சித்திரிப்பு உயிர்க் களையோடு விளங்கும். சான்றாக ஒரு ஹைகூ:

குளம்
முகம் பார்க்கும் நிலா
குளிக்காமல் திரும்பினேன் *(மித்ரா 1993: 26)*

6. ஜப்பானிய ஹைகூவின் மிக அடிப்படையான பண்பு அதன் ஜென் தத்துவப்பார்வை. ஜென் புத்த மதத்தின் அடிப்படையைப் புரிந்து கொண்டால் தான் ஹைகூவின் ஆழங்களை அடையாளம் கண்டு கொள்ள முடியும். இதே தத்துவப் பார்வையுடன் தான் தமிழ் ஹைகூ கவிஞர்களும் உலகத்தையோ வாழ்க்கையையோ பார்க்க வேண்டும் என்பதில்லை. தமிழ் ஹைகூ கவிஞர்கள் தமிழுக்கே உரிய தத்துவங்களுக்கு முதன்மை கொடுத்துப் பாடலாம். இவ்வகையில் செ செந்தில்குமாரின் ஹைகூ கவிதை ஒன்று நிலையாமைத் தத்துவத்தை நெஞ்சில் நிலைக்கும்படியாகச் சொல்லியிருக்கின்றது.

திரும்பும்போது தான் உணர்கிறேன்
மயானத்தின் பாதை
என் வீட்டில் முடிவதை *(செ. செந்தில் குமார் 1994)*

இத்தகைய தத்துவ நோக்கோடு அமைந்த ஹைகூ கவிதைகள் தமிழில் காணப்படுவது சிறப்பாகும்.

7. ஜப்பானிய ஹைகூவில் பெரும்பாலும் இரண்டு படிமங்கள் - சித்திரங்கள் இருக்கும். ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் அந்த இரண்டிற்கும் உள்ள அந்தரங்க உறவு புலப்படும். இத்தகைய படிம அழகுடன் ஹைகூ படைப்பதில் தமிழ்க் கவிஞர்களும் சிறந்து விளங்குகின்றனர். சான்றாக, 'சொல் கேட்டார்க்குப் பொருள்

கண்கூ' டாகும் வகையில் அமைந்த இரு ஹைகூ கவிதைகள் இதோ:

எண்ணெய் தேய்த்துக் குளிக்கின்றன
தென்னை மரங்கள்
இன்று பௌர்ணமி *(கழனியூரன் 1990: 38)*

ஏய்! யாரங்கே ஆற்றில்
பாலைக் கொட்டிவிட்டு ஓலமிடுவது
நீர்வீழ்ச்சி *(சு. முரளிதரன் 1988)*

8. பொதுவாக, ஜப்பானிய ஹைகூ கவிதைகள் யாவும் ஜென் புத்தமதத்தின் தத்துவங்களை உள்ளடக்கி, பாடுபொருளாக - பருவ காலங்கள், பறவைகள், விலங்குகள், மலர்கள், நிலா, கதிரவன் - இப்படி இயற்கையை ஒட்டிய செய்திகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குவன. ஆயின், தமிழில் வெளிவந்துள்ள ஹைகூ கவிதைகளோ இவற்றிலிருந்து வேறுபட்டு, இன்றைய சமூக, அரசியல் இழிவுகள் - பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் - நடைமுறை வாழ்க்கையின் அவலங்கள் - மானுட சோகங்கள் ஆகியவற்றையும் பாடுபொருளாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. எனவே, தமிழ் ஹைகூ கவிதைகளில் சமூகச் சாடலும் ஒரு முக்கியமான - முதன்மையான - இடத்தினைப் பெறுவதை உணர முடிகின்றது.

என்ன நிகழ்ந்து விட்டது
அந்த 1947-இல்?
ஆண்டைகள் மாற்றம் *(தமிழ்நெஞ்சன் 1991:14)*

என்னும் தமிழ் நெஞ்சனின் ஹைகூ கவிதை, சுதந்திரம் பற்றிய ஆழமான விமர்சனம் ஆகும்.

நாற்புறமும் காவல்
காந்தி சிலைக்கு
ஏ. கே. 47 *(செந்தமிழினியன் 1994:15)*

என்னும் செந்தமிழியனின் ஹைகூ கவிதை, இன்றைய சமூகத்தின் வன்முறைப் போக்கைத் தோலுரித்துக் காட்டுவதாகும்.

இத்தகைய சமூக, பொருளாதார, அரசியல் சிந்தனைகளின் ஆழமான பதிவுகள் - கூர்மையான விமர்சனங்கள் - தமிழ் ஹைகூ கவிதைகளில் மிகுதியாக உள்ளன.

9. அப்துல் ரகுமான் கூறுவது போல், " 'ஹைகூ' என்ற பெயரில் இப்போது தமிழில் வெளி வருகின்றவைகளில் - போலிகளை விலக்கி விட்டால் - பலவற்றை 'ஹைகூ' என்பதை விட 'சென்ரியூ' என்று அழைப்பதே பொருத்தம். ஜப்பானில் 'சென்ரியூ', 'ஹைகூ' வின் ஒரு புதிய பரிணாமம். 'ஹைகூ' வின் பழைய இறுக்கமான கட்டுப்பாடுகளை உதறிவிட்டு அது சுதந்திரமாக இயங்குகிறது. 'ஹைகூ' வின் தனிப்போக்கான கற்பனா வர்ணங்களை விட்டு விட்டு, 'சென்ரியூ' மெய்ம்மையியத்தை (Realism) எடுத்துக் கொண்டது. அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூர்த்த பார்வையுடன் அது கவிதையாக்கியது. 'ஹைகூ' வின் தத்துவ கனமும், கருத்தார்ந்த வினைமையும் (Seriousness) குறைந்து குறும்புத்தனமும், நகைச்சுவையும் 'சென்ரியூ' வின் பண்புகள் ஆயின" (அறிவுமதி 1984: அப்துல் ரகுமான் முன்னுரை).

குறும்புத்தனமும் நகைச்சுவையும் களிநடம் புரியும் சில தமிழ் ஹைகூ கவிதைகள் இதோ:

ஒரு கன்னத்தில் அடித்தான்
மறுகன்னத்தைக் காட்டினேன்
அங்கும் அறைந்தான் (கழனியூரன் 1990:22)

காதலில் வெற்றி
இருவருக்கும் கல்யாணம்
தனித்தனியே (செ. செந்தில் குமார் 1990:21)

நூறு வயது வாழ்வதெப்படி?
எழுதியவர் நாற்பதில் இறந்தார்
மாரடைப்பு (ஆர். வி. பதி 1994:41)

10. உத்திகளைப் பொறுத்தவரையில், தொன்மமும் முரணும் தமிழ் ஹைகூ கவிதைகளில் சிறப்பிடம் பெறுகின்றன. இதிகாச, புராண, இலக்கிய நிகழ்வுகளையும் மாந்தர்களையும் இன்றைய காலப் போக்கிற்கும் சூழலுக்கும் ஏற்ப மாற்றிப் படைத்துக் காட்டுவதிலும், இன்றைய சமூக, வாழ்க்கை நிலைகளை முரண் சுவை தோன்றச் சித்திரித்துக் காட்டுவதிலும் தமிழ்க் கவிஞர்கள் தனித்தும், சிறந்தும் விளங்குகின்றனர். சில சான்றுகள்:

எதிரில் துரோணர்
குறிபார்த்து நிற்கிறான்

கட்டை விரலுடன் ஏகலைவன் (ராஜ முருகுபாண்டியன் 1994:11)

அவசர அர்ச்சுனன்
தேருக்கடியில்
சீதை ... (அவைநாயகன் 1988)

சிலம்பை
உடைத்து என்ன பயன்?
அரியணையிலும் அந்தக் கொல்லன் (தமிழன்பன் 1985: 65)

களவாளிகள் நடமாட்டம்
கையில் தடியுடன்
காந்தி (டி. சி. ஸ்டாலின் 1991:23)

ஹைகூ கவிஞர்களுக்கு ஒரு சொல்

'புத்தர் சிலையை வடிப்பதைக் காட்டிலும் மிக நுட்பமானது ஜப்பானியக் கவிதையை வடிப்பது' என்பது ஜப்பானியக் கவி வழக்கு . ஜப்பானியர்கள் தியானம் செய்தலையும், கவிதை படைத்தலையும் ஒரே மாதிரியாக உணரும் உள்ளம் படைத்தவர்கள். அவ்வுள்ளத்திலிருந்து உருவான ஹைகூ தான் இன்று உலகம் முழுவதும் உலா வந்து கொண்டிருக்கின்றது. இந்த 'ஹைகூ' வைத் தமிழுக்குக் கொண்டு வருகிறபோது அதன் எல்லா மரபுகளையும் தூக்கிக் கொண்டு வரவேண்டியதில்லை. ஜென் பார்வையில் தான் நாமும் இந்த உலகத்தைப் பார்த்தாக வேண்டும் என்ற கட்டாயமில்லை. அப்துல் ரகுமான் கூறுவது போல், 'எந்தத் தத்துவப்பட்டையும் போட்டுக் கொள்ளாமல். எந்தக் கோட்பாட்டுக் கண்ணாடியும் அணிந்து கொள்ளாமல் படைப்பாளன் சுதந்திரமாக, நேராக இந்த உலகத்தைப் பார்க்கலாம். அப்போதுதான் வாழ்க்கையின் அறியாத பக்கங்களின் புதிய தரிசனங்களைக் காண முடியும். அறிந்த பக்கங்களுக்கும் புதிய அர்த்தங்களைப் பெறமுடியும். இத்தகைய சுயதரிசனம் தான் படைப்பாளன் என்ற தகுதியை நியாயப்படுத்தும். இரவல் தரிசனங்கள் அல்ல' (அறிவுமதி 1984 : அப்துல் ரகுமான் முன்னுரை). இன்னும் சுருக்கமாக மகாகவி பாரதியின் சொற்களிலே சொல்லவேண்டும் என்றால், 'உள்ளத்திலே உண்மை ஒளி உண்டாயின் வாக்கிலே ஒளி உண்டாகும்'. இந்த ஒளியின் உந்துதலில் தமிழ் மண்ணில் ஆயிரம் 'ஹைகூ'க்கள் மலரட்டும்.

துணை நூற்பட்டியல்

அமுத பாரதி (1984) புள்ளிப் பூக்கள், சென்னை.

________________ (1987) காற்றின் கைகள், சென்னை.

________________ (1992) ஐக்கூ அந்தாதி, சென்னை.

அலீம்சபாநவீதி (1992) பேசும் விரல்கள் (உருது ஹைகூ) தமிழாக்கம்: சஜ்ஜாத்புகாரி, சென்னை.

அவைநாயகன் (1988) சூரியச் செதில்கள், கோவை.

அறிவுமதி (1984) புல்லின் நுனியில் பனித்துளிகள், சென்னை.

இதயகீதா (1988) தீயின் பிணம், நாட்டரசன்கோட்டை.

கழனியூரன் (1985) நிரந்தர மின்னல்கள், திருநெல்வேலி.

________________ (1990) நட்சத்திர விழிகள், சிவகங்கை.

சலாவுத்தீன், த. பழநிபாரதி, எம். எஸ். தியாகராஜன் (தொகுப்பாசிரியர்கள்) (1991) இன்னும் மக்கள், சென்னை.

சுஜாதா (1991) ஹைக்கூ ஒரு புதிய அறிமுகம், சென்னை.

செந்தமிழினியன் (1994) பரிதிப்புன்னகை, புதுச்சேரி.

செந்தில்குமார், செ. (1990) நனையாத நிலா, செய்யாறு.

________________ (1994) துணையிழந்த பாரவண்டி, சென்னை.

தமிழன்பன் (1985) சூரியப் பிறைகள், சென்னை.

தமிழ்நெஞ்சன் & சீனு. தமிழ்மணி, (1991) தீவின் தாகம், புதுச்சேரி.

துறவி (1993) சிறகுகளின் சுவடுகள், சென்னை.

பதி. ஆர். வி. (1994) ஹைகூ கவிதைகள், செங்கற்பட்டு.

பரிமளமுத்து (1990) இலையுதிர்காலம் நிரந்தரம் அல்ல, சென்னை.

பல்லவன் (1994) சின்ன நதிகள், சென்னை.

பாரதியார் (1977) பாரதியார் கட்டுரைகள், சென்னை.

மித்ரா (1990) ஹைகூ கவிதைகள், சென்னை.

________________ (1993) குடையில் கேட்ட பேச்சு, சென்னை.

________________ (1994) ஹைகூ என் தோழி, சென்னை.

முரளிதரன், சு. (1998) கூடைக்குள் தேசம், கண்டி.

முருகேஷ் (1993) விரல் நுனியில் வானம், புதுக்கோட்டை.

ரவி (1991) முனைகெட்ட தீ, மதுரை.

ராஜ முருகுபாண்டியன் (1994) ஹைகூப் பறவைகள், சிவகங்கை.

லீலாவதி, தி. (மொழிபெயர்ப்பாளர்) (1987) ஜப்பானிய ஹைகூ, சிவகங்கை.

———————— (1990) இதுதான் ஹைகூ, சென்னை.

வெற்றிவேல், செ. (1985) சிந்தனையின் நிழல்கள், மதுரை.

18

ஹைகூ கவிதைகளில் சமுதாயச் சித்திரிப்பு

நிர்மலா மோகன்

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் கவிதை ஒரு புதிய பரிமாணத்தை நோக்கி நடைபோடத் தொடங்கியது. மகாகவி பாரதியாரிடம் 'வசன கவிதை'யாக முளைவிட்டு, நாற்பதுகளில் 'புதுக்கவிதை'யாக அரும்பி, எண்பதுகளில் 'ஹைகூ'வாக மலர்ந்து மணம் வீசத் தொடங்கியது. "ஹைகூ கீழ்த்திசைப் பண்பாட்டில் இறுதியாக மலர்ந்த மலர்; அது ஒரு வகையான வாழ்வு நியதியாகும்" என்று ஆர்.எச். பிளித் குறிப்பிடுகிறார் (மேற்கோள்: தி. லீலாவதி 1990:4). "ஹைக்கூ ஒரு நெருப்புக் குச்சி... சிறிய எளிய வரிகள் தரும் நீண்ட 'சிந்தனைத் தொடர்'" (சுஜாதா 1991:6) என்று ஹைகூவைப் பற்றிக் கூறுகிறார் எழுத்தாளர் சுஜாதா. ஜப்பானிய மொழியில் தோன்றிய ஹைகூ, 5-7-5 என்னும் அசையமைப்பைக் கொண்டதாய், ஜென் (Zen) தத்துவத்தை விளக்குவதற்கும், இயற்கையைப் போற்றுவதற்கும் பயன்பட்டது. இவ்வடிவத்தைப் பயன்படுத்தித் தமிழ்க் கவிஞர்கள் இயற்கையை மட்டும் போற்றவில்லை; சமூகத்தை விமர்சனம் செய்வதற்கும்,சமுதாயக் கேடுகளைச் சாடுவதற்கும் பயன்படுத்துகின்றனர். இன்றைய இலக்கிய வடிவமான ஹைகூ காலத்தைக் காட்டும் கண்ணாடியாக சமுதாயப் பிரதிபலிப்பாக அமைந்துள்ள பாங்கினை இக்கட்டுரை விரிவாக ஆராய்கின்றது.

1. வறுமை

1.0 'இல்லை என்ற கொடுமை உலகில் இல்லையாக வைப்பேன்' என்று பாடினார் பாரதியார் ஆனால் சுதந்திர இந்தியாவில் 'அங்கிங்கு எனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது' வறுமை ஒன்றுதான். வறுமையால் வாடும் ஏழை மக்களின் அவல நிலையை, பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வாழும் மக்களின் துயர நிலையை, ஓடியாடித் திரிய வேண்டிய வயதில் ஒரு சாண் வயிற்றுக்காகப் பாடுபடும்

குழந்தைத் தொழிலாளரின் சோகத்தை, இந்நிலைகளுக்கான காரணத்தை, அதற்கான தீர்வை ஹைகூ கவிஞர்கள் பலபடச் சுட்டிக் காட்டுகின்றனர்.

1.1 நாட்டின் முதுகெலும்பாக உள்ள ஏழை மக்களின் வாழ்க்கை இன்று கேள்விக் குறியாக மாறிவிட்டது. 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாய் வாழ்வம் இந்த நாட்டிலே' என்று பாடினார் பாரதியார். ஆனால் 'நாய்களோடு, நாங்களும் சரிநிகர் சமானம்' என்று ஏழை மக்கள் வாழும் அவல நிலையைத்தான் இன்று காண்கிறோம். இதனை,

இலையை எங்கே போட
எதிரெதிராய் எதிர்பார்ப்புடன்
நாயும் மனிதனும் (செ. ஆடலரசன் 1991: 17)

என்னும் கவிதை எடுத்துக்காட்டுகின்றது.

1.2 'ஏழைகளின் கண்ணீர்த் துளியில் தான் எத்தனை எத்தனை துன்பக் கடல்கள்! அழும் குழந்தைக்குப் பாலூட்டத் தெம்பில்லாமல் பசியுடன் வாழும் ஏழைத் தாய்மார்களைப் படம்பிடித்துக் காட்டும் ஹைகூ, 'அவர்களின் வயிறு பெருப்பது உணவால் அல்ல; கர்ப்பத்தால்' (தமிழ்நெஞ்சன் 1991:23) என்பதையும் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

1.3 ஏழைத் தொழிலாளர் தம் வாழ்வைப் பொறுத்தவரை உழைப்புக்கு ஏற்ற ஊதியம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை; அவர்கள் உழைப்பின் முழுப் பயனை ஒரு போதும் பெறுவதில்லை; அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் இறுதிவரை வாடும் நிலைதான் உள்ளது.

'ஏர் பூட்டி, நிலம் உழுது, நீர் பாய்ச்சி, கதிர்அறுத்து, உழைப்பவனுக்குத் தரப்படுவது வயிற்றுக்குச் சோறல்ல - வாய்க்கரிசி' தான் (துறவி 1993; 41). 'மாடாக உழைத்தவன் வாழ்க்கையில் பசி வந்திடக் காரணம்-அவன் தேடிய செல்வங்கள் வேறு இடத்தில் சேர்வது தான்' என்று பாடினார் பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரம். இக் கருத்தை வழிமொழிகின்றது ஒரு ஹைகூ:

மகிழ்ந்து உழைத்தனர்
'உழுபவனுக்கே நிலம்' என்று சொன்னதும்
அறுவடைக்குப் பண்ணையார் (தமிழ்நெஞ்சன் 1991: 67)

'வயிற்றில் பசி - தலையில் - உணவுச் சுமை' (தமிழ்நிலவன் 1991: 52), 'கிளி ஜோசியன் - எதிர்காலம் சொல்கிறான் - பசி மயக்கத்துடன்' (பதி 1994: 25) , 'தறியில் பருத்தி

ஆடை - கனவுகளுடன் உழைப்பாளி - இடையிலோ கோவணம்' (பதி 1994: 34), 'கந்தல் போர்த்த உடல் - நெய்யும் தறியில் - காஞ்சிப்பட்டு' (அவைநாயகன் 1988), 'கடலில் வலை வீசும் மீனவன் - கரையில் மீன்கொத்தி - முதலாளி' (அவைநாயகன் 1988), 'முத்தெடுக்க மூழ்கும் கணவன் - பாசிமணி மாலை - மனைவி கழுத்தில்' (அவை நாயகன் 1988), 'சில்லறைகள் விழுந்தன - கடவுளின் மேல் - பசியுடன் ஓவியன்' (செந்தமிழினியன் 1994: 8), 'நல்ல மழை - பூக்காரி வீட்டில் - எத்தனை முழப்பூ' (அறிவுமதி 1984), 'பசித்த குழந்தை அழும் - கஞ்சி காய்ச்சுவான் தந்தை - சுவரொட்டிகள் ஒட்ட' (மித்ரா 1990: 46) என்று பல்வேறு தொழில் செய்து வாழும் மக்கள் வாழ்க்கையில் நிலவும் வறுமையை முரண்சுவையுடன் ஹைகூ கவிதைகள் எடுத்துக் காட்டுகின்றன.

அன்று, பாரதியார் தம் பாடல் ஒன்றில் பிஜித் தீவில் வேலை செய்து வாடும் கரும்புத் தோட்டத் தொழிலாளரின் அவல நிலையை விளக்கினார்; இன்று ஹைகூ கவிஞர்களும் தேயிலைத் தோட்டத் தொழிலாளரின் அவல நிலையைத் தம் கவிதைகளில் வடித்துக் காட்டியுள்ளனர். சான்றாக,

கூடையைக் கனக்க
கனக்கச் சுமந்து சென்றார்கள்
உள்ளே இந்த தேசம் (முரளிதரன் 1988: க. 1)

என்னும் ஹைகூவைச் சுட்டிக் காட்டலாம். இக்கவிதையில் கவிஞர் மூட்டையை முதுகில் சுமப்பவர்களைக் கண்டு பழகிப் போன இதயங்களை, கூடையை முதுகில் சுமக்கும் கோதையரைக் காண வைக்கிறார்.

1.4 மக்கள் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் இன்மையால், எவ்வளவு கடினமாக உழைத்தும், குடும்பத்தின் தேவையை நிறைவு செய்ய இயலாமல்,தம் குழந்தைகளின் உழைப்பை நம்பி வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். சூழ்நிலை காரணமாக, 'வயிற்றுப் பசியால் - இளமையில் கல்வி கற்க வேண்டிய வயதில் கல் சுமந்து திரியும் சிறுவர்'களையும் (தமிழ் நெஞ்சன் 1991 :53), 'ஒட்டிய வயிற்றோடு - பேப்பர் போடும் சிறுவர்'களையும் (முருகேஷ் 1993: 30) , 'சிறுவர்களுக்காக - பட்டாசு தயாரிக்கும் வறுமைச் சிறுவர்'களையும் (பதி 1994: 34) ஹைகூ கவிதைகள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

1.5 தொழிலாளர் அவலம் ஒருபுறம் இருக்க , இன்றைய நடுத்தர வர்க்கத்து மக்களின் வாழ்க்கை 'கசக்கிப் பிழியும் நகரப் பேருந்துப் பயணம்' (துறவி 1993 : 35) போன்றுஅமைந்துள்ளமையைக் காலத்துக்கேற்ற உவமையின் மூலம் எடுத்துக்

காட்டுகிறது ஒரு ஹைகூ. 'வாழ்க்கை விளையாட்டில் உதைபடும் பந்தாக வதைபடுகிறான்' மனிதன்; அவன் வாழ்க்கை சம்பள நாளிலும் கடனோடு விடிவதையும் ஹைகூ அழகாகக் காட்டுகின்றது.

கடனோடு
விடியும்
சம்பள நாள் *(ரவி 1991: 23)*

1.6 ஏழை மக்களின் அவல நிலையைச் சுட்டிக் காட்டுவதோடு நின்று விடவில்லை ஹைகூ கவிஞர்கள். இந்நிலைக்குக் காரணம், மக்களிடையே காணப்படும் அறியாமையும் சிந்தனைத் திறன் இன்மையும் தான் என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்:

செருப்பை அணியாதவன்
சிந்தித் தெழாத காரணத்தால்
செருப்பாய்த் தேய்கிறான் *(தமிழ்நெஞ்சன் 1991: 19)*

இந்நிலை மாற வேண்டும் எனில்,

ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பர் ஆகிவிட்டால்
ஓடப்பர் ஊயரப்பர் எல்லாம் மாறி ஓர் நொடிக்குள்
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ

என்று கூறிய பாரதிதாசனின் வழியைப் பின்பற்றி 'அச்சத்தைப் புதைத்துவிட்டு', ஒற்றுமையுடன் எழுச்சி பெற்ற வேண்டும், விழிப்புணர்வு பெறவேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றனர் ஹைகூ கவிஞர்கள்:

பசித்தவர் எழுச்சிபெறின்
பாறைகளும் உருகும் காணீர்
இரை இழுக்கும் எறும்புகள் *(அமுதபாரதி 1987: 60)*

2. அரசியல்

2.0 நாடு விடுதலையடைந்து நாற்பத்தேழு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. எனினும், நாடு இன்றும் தன்னிறைவு அடையாத நிலையே உள்ளது. அதற்கு அடிப்படையான காரணமாக அமையும் அரசியல்வாதிகளையும், அவர் தம் பதவி ஆசையையும், அரசியலாரின் திட்டங்களையும், அரசியல் கட்சிகளின் பெருக்கத்தினையும், தேர்தலில் நடைபெறும் தில்லுமுல்லுகளையும்,சுதந்திரம்

பெற்ற இந்தியாவின் நாட்டு நடப்புகளையும் நேரடியாகவும், வன்மையாகவும் நறுக்-சுருக் நடையில் சாடுகின்றன ஹைகூ கவிதைகள்.

2.1இன்றைய ஜனநாயகத்தில் திட்டங்களுக்கு மேல் திட்டங்கள் போடப்படுகின்றன; திட்டங்களுக்காகப் பெரிய அளவில் நிதிகளும் ஒதுக்கப்படுகின்றன; எனினும் , திட்டங்களின் பயன் மக்களைச் சென்று சேர்வதில்லை; மேலும், போடப்படும் திட்டங்கள் எப்படிப்பட்டவை தெரியுமா? 'இலவசத் திட்டங்கள்' என்ற பெயரில் மக்களை ஏமாற்றும் - சோம்பேறிகளாக்கும் - திட்டங்களே இன்று போடப்படுகின்றன. இதனை,

உழைக்கவே வேண்டாம்
தட்டும் சோறும் தரும்
ஜனநாயகம் *(ராஜமுருகுபாண்டியன் 1994: 40)*

என்னும் கவிதை அழகுற எடுத்துக்காட்டுகிறது.

2.2 இந்த நாட்டில் எப்பொழுதும் தோன்றிக் கொண்டேயிருப்பவை இரண்டு : ஒன்று, கட்சி; இரண்டாவது, குழந்தை. இன்று ஒவ்வொரு நாளும் பெருகி வரும் அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை கணக்கில் அடங்காதது. 'நட்சத்திரம் மட்டும் அல்ல - எண்ண முடியாதது - அரசியல் கட்சிகளும்' தான். நாட்டு மக்களுக்கு உடுக்க உடை இல்லை; ஆனால் கட்சிகளுக்கோ நாளும் புத்தம் புது ஆடைகள் கொடிகளாய் அமைகின்றன. இம் முரண்பாட்டினை,

அண்ணாந்தேன் -
பலவண்ணக் கொடித்துணிகள்
குனிந்தேன் அம்மணங்கள் *(நந்தினி 1991: 39)*

என்னும் கவிதை சுவையுடன் சுட்டிக்காட்டுகின்றது.

2.3 மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறையில் தான் இன்று எத்தனை எத்தனை குளறுபடிகள்! தேர்தல் அறிவிப்பு வந்தவுடன் சுவர்கள் எல்லாம் வெளுக்கத் தொடங்குகின்றன; சுவர்ளுக்குக் கூட இலவச ஆடைகள் கிடைத்து விடுகின்றன. இதனை,

சுவர்களுக்கு
இலவச ஆடைகள்
வந்தது தேர்தல் *(செந்தில் குமார் 1991: 21)*

என்னும் ஹைகூ எடுத்துக்காட்டுகின்றது.

மக்களால் மக்களுக்காகத் தேர்தெடுக்கப்பட வேண்டிய தேர்தல் ஜனநாய்கம் இன்று முற்றிலும் மாறிவிட்டது; 'ஒரு நாள் பசிதீர விற்கப்பட்டது - வாக்குச்சீட்டு' என்பது தான் இன்றைய நிலை. எனவே, வாக்காளர்களின் இன்றியமையாமையும் குறைந்து விட்டது. வாக்காளர்கள் 'காலாவதியான' லாட்டரிச் சீட்டுகள்போல்தான் உள்ளனர்.

மழைக்கால குடைகள்
மழை நின்றால் மீண்டும்
மாட்டிவைப்பார் மூலையில் (பரிமளமுத்து 1990: 33)

என்னும் கவிதை இவ்வுண்மையைச் சுட்டுகின்றது.

தேர்தலால் வாக்காளர்களுக்குக் கிடைப்பதோ விரலில் ஒரு கரும்புள்ளி; தேர்தல் வெற்றிக்குப் பின் வேட்பாளரின் நிலை என்ன? இரசவாத மாற்றம் என்பது போல் 'வெறும் புள்ளிகளைப் பெரும்புள்ளிகளாக மாற்றி விடுகிற அதிசய'த்தையும் ஹைகூ கவிதைகள் எடுத்துரைக்கின்றன.

இன்றைய தேர்தலில் நிலவும் மற்றொரு பயங்கரமான நிலை கள்ள வோட்டுப் போடுதல். பெரிய பெரிய அதிகாரிகளும், அரசியல் தலைவர்களும் கூட சில நேரங்களில் தங்கள் வாக்கை அளிக்க இயலாமல் திரும்பி விடுகின்ற நிலையும் இன்று ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதனை எள்ளல் சுவையுடன் சுட்டிக்காட்டுகிறது ஒரு ஹைகூ கவிதை.

ஓட்டுப் போட்டு விட்டுத்
திரும்பி வந்த பிணம் திடுக்கிட்டது
தனது கல்லறையிலே வேறொரு பிணம் (தமிழன்பன் 1985: 33)

2.4 தேர்தல் நேரத்தில் அளிக்கப்படும் வாக்குறுதிகள் 'மழைநீரில் வரிசையாக விடப்படும் காகிதக் கப்பல்கள் போல்' ஆகிவிடுவதையும், மக்கள், கொள்கைகளை உருவாக்கி வைத்த கட்சித் தலைவர்களின் சிலைக்கு மாலை போட்டு 'வாழ்க வாழ்க' என்று விண்ணதிர முழங்கிவிட்டு, கொள்கைக்கு மலர் வளையம் வைத்துவிட்டு மறந்து' விடுவதையும் ஹைகூ கவிதைகள் எடுத்துக்காட்டுகின்றன.

2.5 தேர்ந்தெடுக்கப்படும் அரசியல்வாதிகள் நிலை எப்படி இருக்கிறது தெரியுமா?

தேர்தல் நேரத்தில் மக்களை நோக்கி 'வோட்டுக்காய் வணங்கும் கைகள்', தேர்தல் முடிந்தவுடன் 'வாரிச்சுருட்டும் பைக'ளாய் மாறிவிடும் தன்மையை ஒரு ஹைகூ நயமாக எடுத்துக்காட்டுகின்றது (அமுதபாரதி 1992: 32).

நாட்டை ஆளும்
கொள்ளைக்காரக் கும்பல்கள்
தேர்தலில் ஜெயித்தவர்கள் (பல்லவன் 1994: 28)

என்று அரசியல்வாதிகளைக் கடுமையாகச் சாடவும் தயங்கவில்லை ஹைகூ கவிஞர்கள்.

மக்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கவேண்டிய அரசியல்வாதிகள் இன்று திசைமாறிய பறவைகளாக ஆகிவிடுகின்றனர். அவர்கள், 'விதைத்த வயலில் இரைதேடும் காக்கை'களாய் (அறிவுமதி 1984). 'கண்ணீர்க் குளத்திலும் மீன்பிடிக்கும் அரசியல் செம்படவர்க'ளாய் (கழனியூரன் 1985: 19), பதவி ஆசை பிடித்தவர்களாய், அதிகாரத்தைப் பயன்படுத்தி வெற்றி கொள்ளும் அரசியல் சாணக்கியர்களாய் மாறிவிட்ட நிலைமையைப் படம் பிடிக்கின்றன ஹைகூ கவிதைகள்.

அரசியலில் வன்முறை தலைவிரித்தாடுவதையும், 'புதிய ஆட்சி', 'புதிய தேர்தல்' என்று சொல்லி மக்களை ஏமாற்றுவதையும், 'அரசு டீசல் சிக்கனம்' என்று வெளியே சொல்லிக்கொண்டு 'தனி ஹெலிகாப்டரில் அமைச்சர்கள் சுற்றுலா' வருவதையும், 'கார்கள் ஊர்வலம்' வருவதையும் (லக்ஷ்சராமன் 1991: 44), 'இந்திய அரசியலின் தேசிய விளையாட்டாக மதக்கலவரம்' (குமரன் 1991: 20) மாறிவிட்டதையும் ஹைகூ கவிதைகள் எடுத்துக்காட்டுகின்றன.

2.6 சுதந்திரம் பெற்ற பிறகு, 'இந்தியா இந்தியாவாக இருப்பதற்குக் காரணம் - தேசிய ஒருமைப்பாடு அல்ல - ஐ. எம். எப்.தான்' (தமிழ்பணி 1991: 111) என்றும், 'இந்தியச் சுதந்திரம் - வரைந்திருக்கும் ஒவியம் தான்- வறுமைக்கோடு' (ராஜமுருகுபாண்டியன் 1994: 40) என்றும் சுதந்திர இந்தியாவின் நிலையை விமர்சனம் செய்கின்றன ஹைகூ கவிதைகள். மொத்தத்தில் இன்றைய அரசியல், ஜனநாயகம் என்னும் பெயரில் மக்களை முட்டாள்களாக்கும் ஏமாற்றுவித்தை என்பதை மிகக் கடுமையான தொனியில் விமர்ச்சிக்கின்றது ஒரு ஹைகூ:

எங்களுக்கு மட்டும் ஏன்
ஆகஸ்டு - 15?
உலகெங்கும் ஏப்ரல் - 1 (தமிழ் நெஞ்சன் 1991: 33)

இங்ஙனம் அரசியல் நிலைமையை அக்குவேறு ஆணிவேறாக அலசிக் காட்டுவதன் மூலம், மக்களுக்கு ஒரு விழிப்புணர்வை உண்டாக்க முனைந்துள்ளனர் ஹைக்கூ கவிஞர்கள்.

3. பெண்கள் நிலை

3.0 இன்றைய பெண்கள் கல்வியிலும் பொருளாதார நிலையிலும் வேகமாக வளர்ந்து சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள் ஒருபுறம்; மறுபுறம் அவர்கள் சமூகத்தில் கூனிக் குறுகி நின்று பல சோதனைகளுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். பிறந்தது முதல் வாழ்நாள் முழுதும் ஒரு பெண் சந்திக்கும் இச் சோதனைகளை இன்றைய ஹைக்கூ கவிதைகள் அழகுறச் சித்திரிக்கின்றன.

3.1 'மங்கையராய்ப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா' என்று பாடினார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை. இன்று பெண்ணாய்ப் பிறப்பதற்குக் கூட உரிமை இல்லை; கருவறையே கல்லறையாக மாறிவிடும் அவலநிலை தான் பல இடங்களில் காணப்படுகின்றது. இதனை,

அன்னை வயிற்றில் அரிவாள்குறி
பிறப்பதா வேண்டாமா ?
பெண் சிசு (பல்லவன் 1994: 52)

என்னும் ஹைக்கூ சுட்டிக்காட்டுகின்றது.

3.2 கருவறையைத் தாண்டி இந்த உலகத்திற்குள் நுழைந்துவிட்டாலோ, பெண் குழந்தைக்கு அளிக்கப்படும் புகலிடம் குப்பைத்தொட்டி தான். இதனை,

குப்பைத் தொட்டியிடம்
மாந்த நேயம்
மழலை (செந்தமிழினியன் 1994: 54)

என்னும் கவிதை எடுத்துரைக்கின்றது.

3.3 'வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டிவைக்கும் விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்' என்று சொல்லும் நிலை உருவாக வேண்டும் என்று கனவு கண்டார் பாரதியார்; ஆனால் அவர் காண விரும்பிய பெண் விடுதலை இன்னும் முழுமையாகக் கிடைக்கவில்லை. அதிலும் பெண் 'பெரியவள்'ஆகி விட்டாள் என்றாலோ,கேட்கவே வேண்டாம்.

விடுதலை
உனக்கில்லை இனி
ஆளாகி விட்டாய் *(செந்தமிழினியன் 1994: 18)*

என்னும் கவிதை, சுதந்திரம் இல்லாத பெண்ணின் நிலையை உணர்த்துகின்றது.

3.4 பெண் வளர்ந்து ஆளாகிவிட்டால் அவளுக்குத் திருமணம் செய்து கொடுப்பது என்பது இன்றைய சமுதாயத்தில் குதிரைக் கொம்பாக ஆகிவிட்டது. வரதட்சணை என்னும் விலங்கு அவள் கழுத்தை நெருக்கிக் கொண்டிருப்பதால் முதிர் கன்னிகளாய்த் திருமணத்திற்காகக் காத்திருக்கும் கன்னிப்பெண்களின் எண்ணிக்கை இன்று கூடிக்கொண்டே போகிறது. 'கார்த்திகைத் தீபங்கள் ஏற்றி, மார்கழிக் கோலங்கள் இட்டுக் காத்திருக்கும் பெண்களுக்குத் தை மட்டும் வருவதேயில்லை' (பரிமளமுத்து 1990: 14). அவர்களின் திருமண வயதும் ஏறிக் கொண்டே போகிறது.

அம்மாவுக்கு 15ல்
அக்காவுக்கு 25ல்
எனக்கு 35ல் *(ரவி 1991: 23)*

என்று முதிர்கன்னிகளின் அவல நிலையைப் படம் பிடிக்கின்றது ஒரு ஹைகூ.

3.5 வரதட்சணைக் கொடுமையைக் கடுமையாகச் சாடுகின்றன ஹைகூ கவிதைகள். 'ஏற்பது இகழ்ச்சி' என்பதை அறிந்தும் வரதட்சணை வாங்கும் மணமகனை 'விலைமகன்' (தமிழ்நெஞ்சன் 1991:54) என்றும், 'முப்பாதாயிரம் ரொக்கம், இருநூறு கிராம் தங்கம்' என்று பேரம்பேசும் மணமகனின் வீட்டைச் சார்ந்தவர்களைக் 'கொள்ளைக்காரர்கள்' (அமுதபாரதி 1992: 29) என்றும், 'நவீன பிச்சைக்காரர்கள்' (பதி 1994: 32) என்றும் விமர்சிக்கின்றனர் ஹைகூ கவிஞர்கள்.

தங்கம் கொண்டு வந்தால்-விலையுயர்ந்த பொருள்களை வரதட்சணையாகக் கொண்டு வந்தால்-பெண்ணின் அங்கக் குறை கூட நிவர்த்தி செய்யப்பட்டுவிடும் போக்கினை இன்றைய சமூகத்தில் காண்கிறோம். இதனை,

கறுத்த பெண்
புகுந்தகம் வந்தாள்
கலர் டி.வி. யோடு *(முருகேஷ் 1993: 38)*

என்னும் ஹைகூ நயமாக எடுத்துக் காட்டுகின்றது. பிறிதொரு ஹைகூ 'பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிர்வதனை அறிவின் தலைகுனிவு' (தமிழ்நெஞ்சன் 1991: 61) என்றும் கடுமையாகச் சாடுகின்றது.

வரதட்சணை கொடுத்தால் குறையும் நிறை ஆகிவிடும் நிலை ஒருபுறம் என்றால், வராத தட்சணைக்காகப் பெண்ணையே தீயிட்டுக் கொளுத்தவும் தயங்காத கொடுமை மறுபுறம் நிகழ்கிறது. இப்போக்கினையும் இன்றைய ஹைகூ ஒன்று சுட்டுகின்றது.

குடும்ப விளக்கு எரியவில்லை
குடும்ப விளக்கே எரிகிறது
வர(ா)தட்சணை (தமிழ்நெஞ்சன் 1991: 6)

இவ்வளவு வரதட்சணை கொடுத்துத் திருமணம் செய்யப்படும் பெண்ணின் நிலை எப்படிப்பட்டதாக இருக்கும் ? அவள் மனம் எப்படிப் புண்படும் ? இதோ ஒரு ஹைகூ எடுத்துரைக்கின்றது:

விற்கப்பட்டேன் நேற்று
பெற்றகடன் தீர்த்தனர்
பெற்றோர் (செந்தமிழினியன் 1994: 34)

இங்ஙனம் வரதட்சணை என்னும் கொடுமையால், பெண்கள் திருமணச் சந்தையில் விற்கப்படும் ஒரு பொருளாக - ஜடமாக மாற நேர்ந்த அவலத்தை ஹைகூ கவிதைகள் சுட்டுகின்றன.

3.5 வெளியே வேலைக்குச் செல்லும் பெண் இன்று சந்தித்துக் கொண்டிருக்கும் முக்கியமான பிரச்சினை குழந்தை வளர்ப்பு. தன் குழந்தைக்குத் தன் அன்பை முழுமையாகத் தர இயலாத நிலை அவளுக்கு; எனவே அலுவலகம் சென்று மீண்டும் அவள் வீட்டிற்கு வரும் வரை குழந்தை பொம்மையாக இருக்கிறது. அலுவலகத்திலோ பெண் உணர்ச்சியற்ற ஜடமாக இருக்கிறாள். இருவரது உணர்வு நிலைகளையும்,

ஆபீஸ் முடிந்து அம்மா வந்தாள்
உயிர்ப்பித்தது
பதினெட்டு மாத பொம்மை (கழனியூரன் 1985: 13)

என்னும் கவிதை சுட்டிக்காட்டுகின்றது.

3.6 இத்தனை நிலைகளையும் தாண்டி, சூழ்நிலை காரணமாகவோ, ஒரு சாண் வயிற்றை வளர்ப்பதற்காகவோ சோரம் போகும் அவல நிலையும் இன்றைய சமுதாயத்தில் பெண்ணுக்குத் தான் ஏற்படுகின்றது. இங்ஙனம் திசை மாறி வாழ நேர்ந்த ஒரு பெண்ணின் சோக வாழ்வைச் சொற்சித்திரமாக்கும் ஹைகூ இதோ:

முகவரி மாறிய மடலில்
எத்தனை யெத்தனை
முத்திரைகள்! *(அமுதபாரதி 1984)*

3.7 இவ்வளவு சோதனைகளையும் தாங்கிக் கொண்டு,தன் மனச் சுமையைத் தீர்த்துக் கொள்ள அழுவதற்குக் கூட இயலாத நிலையும் பெண்ணுக்குத்தான். இதனை,

உன்னால் முடிகிறது குயிலே
ஊரறியஅழுவதற்கு
நான் மனிதப் பெண் *(மித்ரா 1990: 22)*

என்னும் கவிதை எடுத்துரைக்கின்றது.

3.8 பெண் குழந்தை கொலை, பருவம் அடைந்த பெண்ணின் நிலை, முதிர் கன்னியரின் அவலம், வரதட்சணைக் கொடுமை,வேலை பார்க்கும் பெண்ணின் சிக்கல், பரத்தமை, உணர்ச்சிகளை வெளியே காட்ட இயலாத நிலை என்று இன்றைய சமுதாயத்தில் பெண்ணின் பல்வேறு பரிமாணங்களைச் சுட்டிக்காட்டும் ஹைகூ கவிஞர்கள், இந்நிலை மாற வேண்டுமானால் - பெண் விடுதலை வசப்பட வேண்டும் என்றால் அவளுக்குள்ளே பதுங்கிக் கொண்டிருக்கும் எரிமலை விழித்து எழ வேண்டும் என்னும் தீர்வையும் சுட்டிச் சென்றுள்ளனர்.

பெண்களின் அமைதி
உறங்கும் எரிமலை
விழித்தால் விடுதலை *(தமிழ்நெஞ்சன் 1991: 46)*

4. கல்வி

4.0 நாட்டில் உள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் கல்வி வாய்ப்பு என்பது அடிப்படையான ஒன்று. ஆனால் எல்லோரும் இன்று கல்வி பெற முடிகின்றதா? தொடக்கப்பள்ளிக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை இன்றைய கல்வித் திட்டதில் உள்ள குறைகளையும், பட்டம் பெற்ற பிறகும் இளைஞர்கள் வேலை கிடைக்காமல் திண்டாடுவதையும் ஹைகூ கவிதைகள் அலசி ஆராய்கின்றன.

4.1 'எல்லோருக்கும் பள்ளிக் கல்வி இலவசம்' என்ற நிலை இருந்தாலும், சூழ்நிலை காரணமாகப் படிக்க இயலாதவர்கள், படிக்க முன்வராதவர்கள் எத்தனையோ பேர் இந்நாட்டில் இருக்கின்றனர். இதனை,

கட்டை விரலில் மை
சுட்டு விரலே பழிக்காதே
எழுதக் கற்பி *(பல்லவன் 1994:73)*

என்னும் ஹைகூ சுட்டிக்காட்டுகின்றது. எழுதப் படிக்கத் தெரியாதவர்களைக் 'கைநாட்டுகள்' என்று பழிப்பதால் பயனில்லை; அவர்களுக்கு எப்படியேனும் எழுதக் கற்பிக்க வேண்டும் என்பது கவிஞர் கருத்து.

4.2 தொடக்கப் பள்ளிக்குச் செல்லத் தொடங்கும் இன்றைய மழலைகள், மூளையிலே ஏற்ற வேண்டிய சுமையை முதுகிலே சுமப்பதால் இளமையிலேயே முதுமையடைந்த நிலையில் காணப்படுகின்றனர். இதனை,

முதுகில் புத்தகக் கட்டுகள்
மூளையில் திணிக்கும் பாடத்திட்டங்கள்
முதுமையடைந்த மழலைகள் *(பரிமளமுத்து 1990: 41)*

என்னும் கவிதை சுட்டுகின்றது.

4.3 பள்ளிக்குச் செல்ல அடம் பிடிக்கும் குழந்தைகளைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இன்று சில குழந்தைகள், 'பள்ளிக்கூடம் போகிறோம் - எங்களுக்கு விடுமுறையே வேண்டாம்' என்று சொல்வதைக் கேட்கும்போது வியப்புடன் நிமிர்கிறோம். அவர்கள் அப்படிச் சொல்ல என்ன காரணம்? பள்ளியில் அவர்களுக்கு நண்பகல் உணவு கிடைப்பதால் தான் என்று எடுத்துரைக்கின்றார் ஒரு ஹைகூ கவிஞர்:

விடுமுறையே வேண்டாம்
பள்ளிக் கூடம் போகிறோம்
நண்பகல் உணவு *(தமிழ்நெஞ்சன் 1991: 22)*

4.4. *கற்கை நன்றே கற்கை நன்றே*
பிச்சை புகினும் கற்கை நன்றே

என்று கற்பித்தது அன்றைய நீதி நூல். ஆயின், இன்று பிச்சை எடுக்கும் நிலைக்கு ஆளானால் தான் - நன்கொடை கொடுத்தால் தான் கல்வி கற்க முடியும் என்ற நிலை நிலவுகிறது. இப்போக்கினை ,

கல்லூரிக் கைகளில்
டொனேஷன் ரேகைகள்
கற்கை நன்றே கற்கை நன்றே *(முருகேஷ் 1993: 31)*

என்னும் கவிதை எடுத்துக்காட்டுகின்றது.

4.5 கல்வியறிவில்லாத முதியோருக்காக முதியோர் பள்ளிகளை அமைத்து வரும் அரசாங்கம், கல்வி கற்க வேண்டிய இளம் வயதில் வயிற்றுப் பசிக்காகக் கல் சுமந்து திரியும் சிறுவர்களுக்காக எதுவும் செய்வதில்லை. இம்முரண்பாட்டினை,

வயிற்றுப்பசியால்
'இளமையில் கல் ' - தலையில்
முதியோர் பள்ளி *(பல்லவன் 1994: 73)*

என்னும் கவிதை எடுத்துக்காட்டுகின்றது.

4.6 எல்லோருக்கும் கல்வி வாய்ப்பு கிடைக்காத நிலை ஒருபுறமிருக்க, மறுபுறம் கல்வி கற்று முடித்த இளைஞர்களுக்கோ வேலை கிடைக்காத நிலை நிலவுகிறது. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நீண்ட வரிசைகளில் இளைஞர்கள்காத்துக் கிடக்கிறார்கள்; 'டான்பாஸ்கோ' படிப்பு படித்து என்ன பயன்? நாள்தோறும் 'வேலை காலி இல்லை' என்ற அறிவிப்பைத்தான் அவர்கள் சந்திக்க வேண்டியிருக்கிறது; கான்வென்டில் படித்தவனுக்கு என்ன வேலை காத்திருக்கிறது தெரியுமா ? மூட்டை தூக்கும் வேலைதான் . இதனை,

என்ன வேலை தெரியும் ?
நான் கான்வென்டில் படித்தவன்
சரி மூட்டைத் தூக்கப் போ *(தமிழ்நெஞ்சன்1991: 55)*

என்னும் கவிதை நன்கு எடுத்துரைக்கின்றது.

'அம்மாவின் நகைகளை அடகு' வைத்துப் படித்து விட்டு வரும் இளைஞனுக்கு அந்தப் பட்டம் எரியாத ஈர விறகுக்குச் சமமாகத்தான் இருக்கிறது. இதனை,

படித்துப் படித்துப்
பட்டம் வாங்கினோம்
எரியாத ஈரவிறகு *(துறவி 1993: 19)*

என்னும் கவிதை உணர்த்துகின்றது. பள்ளியில் பாடம் படித்து, கல்லூரியில் பட்டம் பெற்று வரும் அவனுக்கு வீட்டில் கிடைக்கும் பட்டம் 'தண்டச் சோறு'; எனவே,

காகிதப்பட்டம் ஏற்க
கிரகங்களுக்காவது செல்வோம்
வேலை தேடத் தான் *(பல்லவன் 1994: 76)*

என்று சிந்திக்கும் நிலைக்கு இன்றைய இளைஞர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இங்ஙனம் கல்வித் துறையில் காணலாகும் பல்வேறு அவலங்களை ஹைகூ கவிதைகள் எடுத்துக்காட்டுகின்றன.

5. சமூக அவலங்கள்

5.0 சாதி,மதபேதங்கள், லஞ்சம், விலைவாசி உயர்வு, கலப்படம், திரைப்பட மோகம் என்று இன்றைய சமூகத்தை அலைக்கழித்துக்கொண்டிருக்கும் அவலங்கள் பலப்பலவாகும்.

5.1 சாதிப் பிரச்சினை இன்று பல இடங்களிலும் பூதாகரமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. 'சிலரின் குளிருக்குப் பலர் இங்கே விறகாகும் சமுதாய நெருப்புத்' தான் (பரிமளமுத்து 1990: 38) சாதிப்பிரச்சினை. சாதியின் பெயரால் குடிசைகள் எரிந்து சாம்பலாவதையும், 'சாதிக்கோர் சுடுகாடு' வேண்டும் என்பதற்காகப் போராடி, ஊரே சுடுகாடு ஆகிவிடுவதையும் கண்டனம் செய்கின்றன ஹைகூ கவிதைகள்.

சாதிக்கோர் சுடுகாடு
தொலைவதெப்போது ?
சாதிக்குச் சுடுகாடு (தமிழ்நெஞ்சன் 1991: 25)

'சாதிக்காற்று உயிர்க்காததால் இணைபிரியாக் காதலர் இறப்பிலும் இணை' (தமிழ்மணி 1991: 114) யாகிக் காதல் தோல்வியைத் தழுவுவதையும் ஹைகூகவிஞர்கள் வருத்தத்துடன் சுட்டிக்காட்டுகின்றனர். 'தேடிப்பார்த்தாலும் மனிதனின் ரத்தத்தில் சாதி தெரிவதுண்டோ?' என்று கேட்ட கவிமணியைப் பின்பற்றி,

எல்லா ரத்தமும் சிவப்பு
இதிலும்
எத்தனை 'க்ருப்பு' (அமுதபாரதி 1984)

என்று சாதி வேறுப்பாட்டைச் சாடவும் தயங்கவில்லை ஹைகூ கவிஞர்கள். சாதியைப் போல் , 'மனிதன் படைத்து அவனே வளர்த்து அவனை அழிக்கும் மிருக'மாக (பரிமளமுத்து 1990: 38) மதம் ஆகிவிட்டதையும் சுட்டத் தவறவில்லை ஹைகூ கவிஞர்கள்.

5.2 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்ததெது?' என்று கடவுளைக்காண முற்படும் நோக்குடன் கேட்டார் தாயுமானவர். இன்று, கடவுளைப்போல் அங்கிங்கெனாதபடி எங்கும்

நிறைந்திருப்பது லஞ்சம் தான். கையூட்டு ஒழிப்புத்துறையில் வேலை கிடைப்பதற்கே கையூட்டு தரவேண்டிய அவலநிலை தான் இன்று நாட்டில் நிலவுகிறது. இதனை,

இருபதாயிரம் கொடுத்தபின் தான்
வேலை கிடைத்ததெனக்கு
கையூட்டு ஒழிப்புத் துறையில் *(தமிழ்நெஞ்சன் 1991: 39)*

என்னும் கவிதை அங்கதச் சுவையுடன் சுட்டிக்காட்டுகின்றது.

5.3 அரிசியில் கலப்படம், எண்ணெயில் கலப்படம், பருப்பில் கலப்படம், ஏன் உயிர்காக்கும் மருந்துகளில் கூடக் கலப்படம் என்று எல்லாப் பொருள்களிலும் கலப்படம் என்னும் கொடுமை இன்று சமுதாயத்தை அலைக்கழிக்கும் அவலமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இன்று மனிதர்களிடையே கலப்பு மணம் இருக்கிறதோ இல்லையோ, மளிகைக் கடைகளில் கலப்பு மணம் இருக்கிறது என்று நகைச்சுவையுடன் சுட்டிக்காட்டுகின்றனர் ஹைகூ கவிஞர்கள்.

எங்களூர் மளிகைக் கடையில்
கலப்பு மணம்
தேங்காயெண்ணெயும்
விளக்கெண்ணெயும் *(சுப்பிரமணியன் 1991: 48)*

என்றும்,

மும்முரமாய் நடந்தது விற்பனை
அரிசி போன்ற கற்கள்
கலப்படம் செய்ய *(தமிழ்மணி 1991: 90)*

என்றும் கடைகளில் கலப்படம் நிகழ்வதை ஹைகூ கவிதைகள் சுட்டுகின்றன.

5.4 மக்கள் இன்று பயப்படுகின்ற ஒன்று உண்டு என்றால் அது நாளும் உயர்ந்து வரும் விலைவாசி தான். ' நியூட்டனின் ஈர்ப்பு விசை பொய் என மெய்ப்பித்து' விடுகிறது விலைவாசி (தமிழ்நெஞ்சன் 1991: 26). இதன் முன் வேகமாகச் செல்லும் ராக்கெட்கூடத் தோற்றுவிடுமாம் (கழனியூரன் 1985: 16).

தாழ்வு இல்லை
உயர்வே குறிக்கோள்
விலைவாசி *(டில்லிபாபு 1991: 50)*

என்னும் கவிதை விலைவாசிக்கு ஏற்றம் என்பதைத் தவிர இறக்கம் என்பதே இல்லை என எடுத்துரைக்கின்றது.

5.5 நம் நாட்டு மக்களை அலைக்கழித்துக் கொண்டிருக்கும் மற்றொரு சமூகத் தீமை திரைப்படம். நம் மக்கள் காலம் தவறாமையை எங்குக் கடைப்பிடிக்கிறார்கள் தெரியுமா? திரைக் கொட்டகையில் தான் என்கின்றது ஒரு ஹைகூ. வயிற்றுக்குச் சோறில்லை என்றாலும் அவர்கள் திரைப்படம் பார்க்கத் தவறுவதில்லை. இதனை,

உலை அரிசி விற்ற பணத்தில்
பார்த்த படத்தின் பெயர்
பசி (கழனியூரன் 1985: 23)

என்னும் கவிதை எடுத்துக்காட்டுகின்றது.

திரைப்பட மோகம் மக்களை எப்படியெல்லாம் அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது என்பதற்குப் பிறிதோர் எடுத்துக்காட்டு இக் கவிதை :

நடிகையின் நாட்டியம் - கோயிலில்
நாற்பதாயிரம் பேர்
நாலுபேருடன் நடராசர் உலா (பல்லவன் 1994: 39)

மாடுகளுக்கு இருக்கும் உணர்வு கூட இன்றைய மனிதனுக்கு இல்லை; 'ஆபாசச் சுவரொட்டிகளைப் பார்த்துவிட்டுச் சென்றனர் மக்கள்; கிழித்தெறிந்தன மாடுகள்.' (பல்லவன் 1994: 70). இங்ஙனம் திரைப்படம் மட்டும் அல்ல - திரைப்படம் பற்றிய ஆபாசச் சுவரொட்டிகளும் இன்று மக்களைக் கெடுத்துக் கொண்டிருக்கின்ற பாங்கினையும் படம்பிடித்துக் காட்டுகின்றனர் ஹைகூ கவிஞர்கள்.

6. இயற்கையின் படப்பிடிப்பில் சமுதாயத்திற்குச் செய்தி

பருவ மாற்றங்களைப் பாடுவதற்கும், ஜென் தத்துவத்தை விளக்குவதற்கும் ஹைகூ வடிவத்தைப் பயன்படுத்தினர் ஜப்பானியக் கவிஞர்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இயற்கையை இயற்கைக்காக மட்டும் பாடாமல், வாழ்க்கைப் பின்னணியாகவும் எடுத்துக்காட்டியவர்கள் தமிழ்ப் புலவர்கள். இம் மரபைப் பின்பற்றி, ஹைகூ கவிஞர்களும் இயற்கை நிகழ்ச்சிகளின் மூலம் மக்கள் வாழ்வைப் படம்பிடிக்க முனைந்துள்ளனர்; சமுதாயத்திற்கும் செய்தி வழங்கியுள்ளனர்.

உரசல் .... உட்பகை
மொத்தமாய் எரிந்தன
மூங்கில்கள் *(பல்லவன் 1994: 51)*

என்னும் கவிதை இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

அன்று முதல் இன்று வரை மூன்றாம் பிறையைப் பாடாத கவிஞர்கள் இல்லை. 'விண்ணிடத்து எறிந்த வெள்ளைப் பூசணிக்கீற்று' என்றும், 'அந்திப் பெண் வானத்தில் கடித்துத் துப்பிய நகம்' என்றும் பிறை நிலாவைச் சுட்டிச் சென்றுள்ளனர் கவிஞர்கள். ஹைகூ கவிஞருக்குப் பிறை நிலா ஒரு வித்தியாசமான சிந்தனையைத் தோற்றுவிக்கிறது. வானில் நிரம்பாதிருக்கும் பிறை ஏழையின் கையில் உள்ள பிச்சைப் பாத்திரம் போல் உள்ளது என்கிறார் ஒரு ஹைகூ கவிஞர்:

வானமும் ஏழையா ?
ஏனிந்த பிச்சைப் பாத்திரம்
நிரம்பாதிருக்கும் பிறை *(அமுதபாரதி 1987: 68)*

7. முடிவுரை

'அனுபவ அல்லது உணர்ச்சி கடத்தல் ஹைகூ' (சுஜாதா 1991: 5) என்று ஹைகூ பற்றிக் குறிப்பிடுகிறார் சுஜாதா. இக்கருத்துக்கேற்ப, தமிழ் ஹைகூ கவிஞர்கள் தமக்கு நேர்ந்த அனுபவங்களை, உணர்ச்சிகளைக் கவிதையாக்கி இச் சமுதாயத்தைப் பிரதிபலித்துக் காட்ட முனைந்துள்ளனர்; வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் பலதரப்பட்ட ஏழை மக்களின் அவலத்தை எடுத்துக்காட்டி, அவர்கள் தம் துன்பம் தீர விழித்தெழ வேண்டும் - ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளனர்; திட்டங்கள் தீட்டி, நாட்டை முன்னேற்றப் பாதையில் செலுத்த வேண்டிய அரசியல்வாதிகள் வழிகாட்டத் தவறிவிட்ட நிலையை நேரடியாகவும், வன்மையாகவும், 'நறுக்' கென்று கொட்டுவது போல், 'சுருக்' கென்று தைப்பதுபோல் எடுத்துக்காட்டியுள்ளனர்; பெண் குழந்தை கொலை, பருவம் அடைந்த பெண்ணின் நிலை, முதிர்கன்னிகள் பெருக்கம், வரதட்சணைக் கொடுமை, வேலை பார்க்கும் பெண், பரத்தை என்று பல்வேறுபட்ட பெண்களின் சிக்கல்களை அழகாகவும் ஆற்றலோடும் படம் பிடித்துக்காட்டியுள்ளனர்; இன்றைய கல்வித் திட்டத்தில் உள்ள குறைகளையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் பொறுப்புணர்வோடு சித்திரித்துள்ளனர். சாதி மத

பேதங்கள், லஞ்சம், விலைவாசி உயர்வு, கலப்படம், திரைப்பட மோகம் என்று இன்றைய மக்களை அலைக்கழித்துக்கொண்டிருக்கும் சமூக அவலங்களைக் குறித்தும் சிந்தித்துள்ளனர். இத்தனை அவலங்களுக்கும், முரண்பாடுகளுக்கும் இடையே இளைஞர்களுக்கு விழிப்புணர்வூட்டி எழுச்சி பெற வைக்கும் நம்பிக்கைக் குரல்களையும் ஹைகூ கவிதைகளில் காண முடிகின்றது. ஜப்பானிய ஹைகூவில் தத்துவமும் இயற்கையும் முதலிடத்தைப் பெற, தமிழ் ஹைகூவில் சமூகமும் இயற்கையும் சிறப்பிடம் பெறும் பாங்கினைக் காண முடிகின்றது.

துணை நூற்பட்டியல்

அமுதபாரதி, (1984) புள்ளிப்பூக்கள், சென்னை.

__________ (1987) காற்றின் கைகள்,சென்னை.

__________ (1992) ஹைகூ அந்தாதி, சென்னை.

அவைநாயகன், (1988) சூரியச் செதில்கள், கோவை.

அறிவுமதி, (1984) புல்லின் நுனியில் பனித்துளிகள், சென்னை.

ஆடலரசன், செ., (1991) இன்னும் மக்கள் (தொகுப்பாசிரியர்கள்: சலாவுத்தீன், த., பழநிபாரதி., எம்.எஸ். தியாகராஜன்.,) சென்னை.

கழனியூரன், (1985) நிரந்தர மின்னல்கள், திருநெல்வேலி.

__________ (1990) நட்சத்திர விழிகள், சிவகங்கை.

குமரன், அரா., (1991) இன்னும் மக்கள், சென்னை.

சுப்பிரமணியன், இரா., (1991) இன்னும் மக்கள், சென்னை.

சுஜாதா, (1991) ஹைகூ ஒரு புதிய அறிமுகம், சென்னை.

செந்தமிழினியன், (1994) பரிதிப்புன்னகை, புதுச்சேரி.

செந்தில்குமார், செ., (1990) நனையாத நிலா, செய்யாறு.

செந்தில்குமார்,டி., (1991) இன்னும் மக்கள், சென்னை.

டில்லிபாபு, ல., (1991) இன்னும் மக்கள், சென்னை.

தமிழன்பன், (1985) சூரியப் பிறைகள், சென்னை.

தமிழ்நெஞ்சன், தமிழ்மணி, சீனு, (1991)தீவின் தாகம், புதுச்சேரி.

துறவி, (1993) சிறகுகளின் சுவடுகள், சென்னை.

நந்தினி,இரா., (1991) இன்னும் மக்கள், சென்னை.

பதி, ஆர்.வி., (1994) ஹைகூ கவிதைகள், செங்கற்பட்டு.

பரிமளமுத்து, (1990) இலையுதிர்காலம் நிரந்தரம் அல்ல, சென்னை.

பல்லவன், (1994) சின்ன நதிகள், சென்னை.

மித்ரா, (1990) ஹைகூ கவிதைகள், சென்னை.

—————————— (1993) குடையில் கேட்ட பேச்சு, சென்னை.

முரளிதரன்,சு.,(1988) கூடைக்குள் தேசம், கண்டி.

முருகேஷ், மு.,(1993) விரல் நுனியில் வானம், புதுக்கோட்டை.

ரவி, (1991) முனை கெட்ட தீ, மதுரை.

ராஜமுருகுபாண்டியன், (1994) ஹைகூப் பறைவைகள், சிவகங்கை.

லக்ஷ்ராமன், (1991) இன்னும் மக்கள், சென்னை.

லீலாவதி,தி.,(1990) இதுதான் ஹைகூ,சென்னை.

வெற்றிவேல், செ.,(1985) சிந்தனையின் நிழல்கள், மதுரை.

19

ஹைகூவும் கவிதை முடிப்பும்

இரா. காஞ்சனா

கவிதையில் சொற்செட்டு

கூறவந்த கருத்தை வெளிப்படுத்தும் பாங்கே ஒரு கவிதையை அனுபவிக்கும் வாசகனின் மனதில் என்றும் நிலைக்கச் செய்கிறது.

கண்டனன் கற்பினுக் கணியைக் கண்களால்[1]

சொல்லின் செல்வன் அனுமன் கூறிய ஒவ்வொரு சொல்லும் அவன் சொல்ல வந்த செய்தியின் ஆழ்பொருள் ஒவ்வொன்றையும் ஐயத்திற்கிடமின்றி விளக்குவதாய் அமைகிறது. இங்கு,

நீ கண்டனையோ கண்டார்வாய்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நசையின மொழிமோ[2]

என்ற சங்கத் தலைவியின் ஆவல், எதிர்பார்ப்பு, விருப்பம் அனைத்தையும் உள்ளடக்கிய மனநிலை வெளிப்பாட்டினை அறிந்திருக்கும் வாசகனுக்கு, அனுமனின் சொற்கட்டும், சொற்செட்டும், சொற்களின் வரிசையை எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப முன்பின் மாற்றி அமைத்துள்ள திறமும், சிறப்பும் தெற்றெனெ விளங்கும்.

ஹைகூவில் " நோக்கு"

கவிதையின் வெளிப்பாட்டு முறைகளுக்கு ஏற்ப அதன் வடிவமும் மாறுபடுகிறது. மாறுபட்ட கவிதை வடிவங்களில் இன்று உலக அளவில் அங்கீகாரம் பெற்றுள்ளது ஹைகூ. மூன்றடிகளில் உலகளந்த பெருமானாய் உயர்ந்து நிற்கும் ஹைகூவின் தனிச் சிறப்புகளில் ஒன்று சொற்செட்டு. நுண்ணிய சிற்பங்களை வடிக்கும் சிற்பி தேவையற்ற பகுதிகளையெல்லாம் செதுக்கிச் செதுக்கி அழகிய

உருவைச் சமைப்பதுபோல் செறிவார்ந்த கருத்துக்களை எளிமையான, சிக்கனமான, அலங்காரப் புனைவுகளற்ற சொற்களில் ஹைகூ கூறிவிடுகிறது. கூறவந்த பொருட்குப் புறம்பாக ஒரு சொல்லையும் புகுத்தாமல் விளக்குவது ஹைகூ. தம் கவிதையின் ஒரு சொல்லைக் கூட்டினாலும் குறைத்தாலும் அப்படைப்பின் முழுமை, தனித்தன்மை அழிந்துவிடும் என்னுமாறு அமைக்கும் ஹைகூ கவிஞனின் தனித்திறனைத் தொல்காப்பியர் சுட்டிக்காட்டிய இலக்கியக் கொள்கைகளுள் ஒன்றான 'நோக்கு'[3]டன் இணைத்துக் காண இயலும்.

மறித்து மறித்து நோக்கி, மாத்திரை முதலாக அடிவரை, கவிதை யாப்பின் உறுப்புகளைப் பயன் கொள்ளுமாறு படைத்துக் காட்டினர் தமிழ்க் கவிஞர்கள். உற்று நோக்கிப் பலவாறு பொருள் கொள்ளுமாறு,நவில்தொறும் நூல் நயம் பயப்பப் படைத்த தன்மையை வியந்து, அப்படைப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள கவித்திறன்களையெல்லாம் வாசகன் உய்த்துணருமாறு படைப்பதை நோக்கு எனலாம். கவிஞன் தான் உட்குறிப்போடு நோக்கியவற்றையெல்லாம் வாசகனும் அறியுமாறு அமைக்கத் தேவையான சிறுகுறிப்புச் சொற்கள் பெய்து கவிதையாக்கும் தன்மையைச் சப்பானிய ஹைகூவிலும் நெடுகக் காண இயலும்.

சப்பானிய கவிதைகளில் அவர் தம் மொழிக்கே இயல்பான அசைவுகள், நிறுத்தற் குறிகள் ஆகியன அவற்றைப் படிக்கும் முறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திப் பொருள் கொள்ள வைக்கின்றன.

ஹைகூ வடிவமும் கவிதை முடிப்பும்

கவிதை முடிப்பை இரு நோக்கு நிலைகளில் எடுத்துக் கூறலாம். ஒன்று வடிவ அடிப்படையில் கவிதை முடிப்பு; மற்றொன்று பொருள் அடிப்படையில் கவிதை முடிப்பு.

ஹைகூவின் யாப்பு வடிவம் 5, 7, 5 என்ற அசைக் கணக்கில், மூன்றடிகளைக் கொண்டது. முதல் இரண்டு அடிகள் ஒரு கருத்தலகாகவும், மூன்றாவது அடி ஒரு கருத்தலகாகவும் அமைவது.

முதல் கருத்தலகில் (2 அடிகளில்) நேரடியாகவோ, மறைமுகமாகவோ, படிமமாகவோ சுட்டப்படும் ஒரு பொருளின் நிறம், வடிவம் அல்லது இயக்கம், ஒரு நிகழ்வு அல்லது ஒரு உணர்வு இரண்டாவது கருத்தான மூன்றாவது அடியின் ஆற்றலால் அழுத்தமுற வெளிப்படுத்தப்படுகிறது.

> ஹைக்கூ மேலோட்டமான அழகிற்கு அப்பால் உள்ள ஆழமான
> விரிவான எல்லைகளைத் தொடுவது... கவித்துவ
> மேன்மை காட்டுவது.

அதிர்ச்சி தரும் மெல்லிய வியப்பினைக் கவிஞன் ஹைகூவின் பிறப்பில் உணர்வான். சுவைஞன் படித்துச் சுவைக்கையில் அந்நிலையை உணர முடியும்.

என்பார் லீலாவதி.[4]

திடீர் திருப்பம்

கூறையின் மேல் ஓடி மறையும்
ஒரு திருடன்
இரவுப் பனி [5]

என்ற பூசனின் கவிதை இரவுப்பனி விழும் ஓசையை யாரோ நடமாடும் ஓசை போல உணர்ந்து வெளியே சென்று பார்த்தால் எவருமற்ற வெறுமையால் ஏமாறுபவனின் நிலையைக் கூறுவதாகக் கொள்ளலாம்.

முதல் இரண்டு அடிகளைப் படிக்கும்பொழுது இரவின் குளிருக்கு வீட்டில் அனைவரும் முடங்கிக் கிடக்க, கூரையில் யாரோ ஓடும் சப்தம் - வெளியில் வந்து பார்த்தால் எவரையும் காணோம் - திருடன் ஓடிவிட்டானோ என எண்ண வைக்கிறது.

அடுத்த அடியில், கவிஞன் முதலில் கூறிய படிமத்திற்கு அர்த்த வெளிச்சத்தைத் தருகிறார். அட! குளிர்காற்றுடன் பனியின் வேலைதானா இது என இலேசான நகைப்பும் திகைப்புமாக வாசகனை நிற்கவைப்பது இந்த இறுதியடிதான்.

உயிர்நேயம்

சின்னஞ்சிறு உயிர்களிடமும் நேயத்துடன் ஒத்த மனத்துடன் அணுகும் இஸ்ஸாவின் கவிதைகளில் வெட்டுக்கிளியும், சில் வண்டும், மின்மினிப் பூச்சியும், வண்ணத்துப்பூச்சியும் இடம்பெறுகின்றன. அச்சின்னஞ்சிறு உயிர்களிடமிருந்து தனக்குத் தேவையான வளமையையும் நம்பிக்கையையும் பெறுபவர் அவர்.

நம்பிக்கையுடன் வாழ்வாயாக !
மலர்ந்து, மங்கி வீழ்ந்திடும்
இந்த செர்ரி மலர்போல [6]

என்னும் பாடலில் தன் மடிந்த நம்பிக்கைகளுடன் வாடிய கனவுகளுடன் இருந்த கவிஞர், உதிரும் செர்ரி மலர், அதனால் சோர்ந்துவிடாமல் ஒவ்வொரு

வசந்தத்திலும் மீண்டும் மீண்டும் மலர்வதைக்கண்டு வாழ்வில் நம்பிக்கை பெற்ற இஸ்ஸாவின் மனப்பான்மையைக் காண முடிகிறது.

இதேபோல, மனநிலையைத் தரும் தமிழ் நெஞ்சன் படிம அடுக்குகளால் அர்த்தக் களங்களை விரிவுபடுத்திக் கொண்டே செல்லுமாறு திடீர் திருப்பத்துடன் மெல்லிய அதிர்வைத் தருகிறார்:

இறக்கும் வரையில்
இறக்கமுடியாத முதுகுச்சுமை
நத்தைத் தொழிலாளி [7]

நகர முடியாமல் முதுகில் கூட்டுடன் மெதுவே மெதுவே நகரும் நத்தையின் காட்சி மட்டுமா இது? இங்குச் சமுதாயத்தில் வறுமைக்கோட்டுக்குள் பிறந்த ஒருவன் என்றும் குடும்ப பாரத்தை இழுத்துச் செல்லவேண்டியவனாகவே இறக்கும் வரை இறக்கமுடியாத பாரத்தைச் சுமப்பவனாகவே இருக்கிறான். தன் பாரத்தைக் குறைக்க, தன் வீட்டு இளந்தளிரையும் நன்கு வளரவிடாமல் குட்டக் குட்ட குனிந்து செல்லும் குழந்தைத் தொழிலாளியாகிவிடுகிறானே என்ற அங்கலாய்ப்புத் தொனி இங்கு கேட்கவில்லையா?

இயற்கையில் தொன்மக் குறிப்பு

படிமத்தையும் தொன்மத்தையும் இணைத்துக் கவிதை புனையும் தமிழ் நெஞ்சன் மற்றொரு கவிதையில்,

நீலமாய் மாறியதேன் உடல்
நஞ்சுண்டாயோ கடலே?
கரைவாயில் நுரை [8]

என்று வினவும்பொழுது, கடலிலிருந்து வந்த நஞ்சை உண்டு திருநீலகண்டன் வைத்த மிச்சத்தை கடல் உண்டதோ? உடலும் நீலமாக மாறியுள்ளது. கரைவாயிலோ நுரை தள்ளுகிறதே என்று வாசகனை எண்ண வைக்கிறார். நீலம் பாய்ந்த உடலாய்க் கடலைப் படைத்தவர் மூன்றாவது அடியில் அதை மேலும் மேலும் வலியுறுத்த வாயில் நுரையும் தள்ளுகிறதே என இயல்பாய் நடக்கும் இயற்கை நிகழ்வைப் படம்பிடித்துக் காட்டும்பொழுது தொன்மக் குறிப்பையும் இயைத்துத் தந்துவிடுகிறார்.

முரணமைப்பும் பொருள் புலப்பாடும்

மனிதனின் செயல்பாடுகளை நகையுணர்வுடன், அதே சமயத்தில் அழகியல்

தன்மையுடன் எடுத்துரைப்பது இஸ்ஸாவின் வழக்கம்.

காலைப் பனித்துளி தூங்கும்
நாள் மலரை விற்கும் அவன்
கரடு முரடானவன்[9]

இங்கும் "விற்கும் அவன்" என்ற இரண்டாம் அடியின் இறுதியில் ஒரு நிறுத்தற்குறியையிட்டு, இரண்டாவது மூன்றாவது அடிகளுக்கு இடையே ஒரு நிற்கும் தளத்தை இடைவெளியைத் (Space) தந்து கவிதையின் போக்கு மாறப்போகிறது- சொல்லும் பொருளும் முரண்படப்போகின்றன எனச் சுட்டப்படுகின்றது. இந்த முரணும் ஒரு அழகுதான். மூன்றாவது அடியால் வந்த அழகு.

தமிழிலும் இந்த முரண் தொடையை நாம் காணலாம். சொல் முரண், பொருள் முரண் என்று "நெடுஞ்செவிக் குறுமுயல்", "செந்தார்ப் பைங்கிளி," "சிறுகண்யானை" என முரணமைப்பு மூலமாகக் காட்சிப்படிமங்களைக் கொணரும் படைப்பு இங்கும் உண்டு.

"இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை'.' "பொன்னின் அன்ன நுண் தாதுறைக்கும்" என்று பொருள் முரண் வருவதுண்டு.

எதிர்பாராத மாற்றம்

மூன்றாவது அடியினால் கவிதையின் மையப்பொருளை நோக்கிச் செல்லும் நகர்ச்சியின் முன்னேற்றத்தில் ஒரு திடீர் திருப்பத்தைத் தந்து பொருள் உணர்வதில் மாற்றத்தை ஏற்படுத்தும் நிலையையும் ஹைகூவில் காணலாம்.

வெளியே கிளம்ப முடியாது
தயாராகவில்லை
முகமூடி[10]

என்ற அவைநாயகனின் ஹைகூவில் முதல் இரண்டு அடிகள் ஒரு அலகாகவும், இரண்டாவது அலகாக மூன்றாவது அடியும் நிற்கின்றன. முதல் இரண்டு அடிகளுக்குப் பின் ஒரு சிறு இடைவெளிவிட்டுப் பிறகு "முகமூடி" என வாசிக்கும்பொழுது இங்கு அனைவருமே உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவராக, வேஷம் கட்டி நடிப்பவராக இருப்பதைச் சுட்டுகிறது கவிதை. முதல் அலகிற்கும் இரண்டாம் அலகிற்கும் எவ்விதமான இணைப்புச் சொற்களும் இல்லை. இரண்டிற்கும் இடையே ஒரு மெல்லிய நூலிழை போன்ற உறவு உண்டு.

இதே போழ்து ஒன்றுடன் ஒன்று முரண்பட்டு நிற்கும் நிலையும் உள்ளது. இம்முரண் வெளிப்படும்பொழுது அர்த்தப் பரிமாணத்தில் திடீர்த் திருப்பம் ஏற்படுகிறது. இந்த அர்த்தத் தெளிப்பின் அழகால் இக்கவிதை சிறப்புப் பெற உதவுவது இந்த மூன்றாவது அடி.

கரந்தடி

கொடி கொடுத்தீர்
குண்டூசி தந்தீர்
சட்டை?[11]

என்ற ஹைகூவில் ஒரு இடைவெளிக்குப்பின் சாட்டையடியாக வரும் வினாவால் சுதந்திர இந்தியாவின் வறுமைக்கோட்டையே சித்திரமாக்கி விடுகிறார் கவிஞர். வார்த்தைகளால் சுழற்றி, அடிப்பதை அடிப்பது தெரியாமல் மறைமுகமாக - வன்மை அடியாக அடிப்பதே ஹைகூவின் மூன்றாவது வரி. இதனால் தான் இதற்குக் "கரந்தடி" எனப் பெயர்சூட்டி மனிதநேயத்தின் எதிரிகளுக்கு அபாய அறிவிப்புச் செய்கிறார் புதுவைத் தமிழ்மணி.

இதனால் யாவர்க்கும் தெரிவிப்பது
என்னவென்றால் கரந்தடியாக - ஹைக்கூ[12]

அர்த்த அடுக்குகளின் கூட்டுப் படைப்பாளி

பல கருத்து அடுக்குகளை சில வாக்கிய சொற்களால் குறிப்பாகச் சுட்டும் ஹைகூ வெற்றிக்கு இதன் வடிவ அமைப்பு முதன்மைக் காரணியாகும். இதில் சொல்லப்பட்டதை விடச் சொல்லாமல் விடுபட்டவையே அதிகம். இவ்வாறு சொல்லாமல் விடுபட்டவற்றை வாசகன் தன் மனதில் மேலே மேலே எழுதிச் சொல்ல வாய்ப்பளிப்பது ஹைகூவின் மூன்றாவது அடி. இந்த வரியே வாசகனுக்கு விண்ணோடும், மண்ணோடும், மானுடத்துடனும், இறைமையுடனும் ஏற்படும் மன நெருக்கத்தை உணரவைத்து அவனை வியக்க வைக்கிறது.

இயற்கைக் காட்சி ஒன்றைச் சுட்டும் ஹைகூவின் மிகச் சுருக்கமான விளக்கத்தில் முழுமையான பொருளை வாசகன் தானே உணரவேண்டும் ; தன் அனுபவங்களுக்கு ஏற்பவும், அறிவு வெளிச்சங்களுக்கு ஏற்பவும் அர்த்தப்படுத்திக் கொள்ளவேண்டும்; தன்னை அப்பாடலின் பிறிதொரு கூட்டுப் படைப்பாளியாக்கிக் கொள்ளவேண்டும்; அப்பொழுதுதான், அப்பாடலின் பொருள் முழுமை பெறும்.

கவிதை மட்டுமல்ல, பிற கலைகள் அனைத்துமே இவ்வாறு பார்வையாளனின் கூட்டுமுயற்சியாலேயே வெற்றி பெறுகிறது. ஒரு கவிதையின் முழு வடிவத்தையும் வாசகன் எவ்வாறு புரிந்துகொள்ளுகிறானோ அதைப் பொறுத்தே கவிதையின் முடிவு அமைகிறது.

முடிவு உறுதி உடையதாக, மாறாத் தன்மை கொண்டதாகக் கவிதை அமைப்புடன் ஒன்றிணைந்து காணப்பட வாசகனின் நோக்கு, கவிதை நடையிலும் கவிதை தோன்றியச் சூழலிலும் ஆழங்கால்படும் நிலை ஆகியன காரணமாகின்றன. அவன் அனுபவிக்கும் நிலையைப் பொறுத்தே இவை அமைகின்றன. ஒவ்வொரு கவிதை வடிவத்திற்கும் ஏற்ற முடிவு தேவை; வெவ்வேறு அடிக்கருத்து அமைப்பிற்கும் ஏற்ற முடிவு தேவை.

டி.என். எலியட், கவிதை எடுத்துக்கொண்ட எல்லாப் பொருளையும் தெளிவுபடுத்த வேண்டியதில்லை; படிப்போருடைய கற்பனைக்குச் சிலவற்றை விட்டுவிடலாம் என்பார். கவிதையைப் படைப்பதற்கு எவ்வளவு தெளிவும் தேர்ச்சியும் வேண்டுமோ அந்த அளவுக்குக் கவிதையை நுகர்வதற்கும் நீண்டகாலப் பயிற்சி வேண்டும்.

இருமை எதிர்வு

முரண் தொடை அமையப் படைத்தலை இன்றைய திறனாய்வாளர்கள் சுட்டும் இருமை எதிர்வு (Binary Opposition) என்ற நோக்கு நிலையில் இருந்தும் சுட்டலாம். கவிதைக்கான அடிப்படை அலகாக இந்த இருமை எதிர்வு கவிதை மொழியின் வடிவத்தில் அமைகிறது என்பர். வெளிப்படையான வார்த்தைகளின் எதிர்வுப் பண்பு வளர்ந்து படிமங்களின் எதிர்வுப் பண்பாகிறது.

விக்கிரமாதித்தியனின் "வாழ்க்கை" என்ற கவிதை,

பறத்தல் சந்தோஷமானது
ஆனால்
பட்டுப்பூச்சிகள்
மல்பரி இலைகளில் தூங்கும்[13] (*ஆகாசம் நீலநிறம், ப. 21)*

இதில் ஒரு படிமத்திற்கும் இரண்டாம் படிமத்திற்கும் இடையே தொடர்பு ஏதும் இல்லாதது போலத் தோன்றினாலும், யோசிக்கும்பொழுது வாசகனுக்கு ஒரு தொடர்பு தட்டுப்படும். 'ஆனால்' என்ற சொல் ஒரு நிறுத்துமிடத்தை, இடைவெளியைத் தருகிறது.

"பறத்தல்" என்பது மகிழ்ச்சியைக் குறிக்கும் குறியீடாகக் கொண்டால், "தூங்குதல்" என்பது தூக்கத்தைக் குறிக்கலாம். தூங்கும் பட்டாம்பூச்சிகளாக மனிதர்களைக் காணும் தொனி கிடைக்கிறது.

பறப்பது மகிழ்ச்சியூட்டக் கூடியது. ஆனால், பறக்கும் இயல்பை விட்டுவிட்டுத் தூங்குவதில் இன்பம் காண்கிறது பட்டாம்பூச்சி. மீண்டும் பறப்பதற்காகத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளவே மல்பரி இலைகளில் தூங்குகிறது பட்டாம்பூச்சி.

தூக்கத்திலிருந்து விழிக்காமலேயே நீண்ட தூக்கத்திற்கு ஆளாகிவிடுகிறது. அதன் உழைப்பை உறிஞ்சும் மனிதனின் சுயநலத்திற்குப் பலியாகிறது. உழைப்பை நல்கியது பட்டாம்பூச்சி. தன் உயிர்க்காப்பாய்க் கூடு அமைக்க, சுயநலம் மிக்க மனிதனே பயனைத் துய்க்கிறான். அது மட்டுமா? பயனுடன் அதன் உயிரையும், உடலையுமன்றோ பலியிடுகிறான். மனிதனின் ஆடம்பர அழகிற்குக் காவு கொடுக்கப்படும் பட்டாம்பூச்சிபோல இன்று உறங்கிக்கொண்டிருக்கும் சகமனிதனையும் அவன் நசுக்க முனைகிறான். அவன் உழைப்பும் சுரண்டப்படும் என எதிர்வுகளின் அமைப்பு படிமங்களின் எதிர்வுகளாய் மாறுவதைக் காணலாம்.

இந்த எதிர்வுகளின் திடீர் முடிவு கவித்துவத் தன்மைக்கு, படைப்பாக்கத்தின் தனித்திறனுக்கு ஒரு வெளிப்பாட்டைத் தருவதுடன், ஆழ்ந்த பாதிப்பையும் உண்டாக்குகிறது.

கவிதையின் முடிவைத் திறந்த முடிப்பு, தன்னளவில் முடிந்த முடிப்பு என்றும் பிரித்துணரலாம்.

தமிழில் கவிதை முடிப்பு பற்றிய கருத்துகள் யாப்பு பற்றிய செய்திகளுடன் இணைந்து வருகின்றன.

ஆனால், தமிழ் யாப்பு விதிகளுக்கும், ஹைகூவிற்கும் உள்ள அடிப்படையான மாறுபாடு ஒன்று உண்டு. யாப்பு பற்றிக் குறிப்பிடும் தொல்காப்பியர்,

எழுத்து முதலா ஈண்டிய அடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்[14]

என்று வற்புறுத்துவார். குறித்த பொருளைச் சுட்டுவது மட்டுமே ஹைகூவின் வேலை. நிலவைச் சுட்டும் விரலாக ஹைகூவைக் கூறுவர். விரலை விட்டு விட்டு அது சுட்டும் நிலவைப் பார்ப்பதா? விரலைப் பார்ப்பதா?-வாசகனின் நிலைப்பாட்டிற்கு ஏற்ப இது மாறுகிறது.

ஜென் தத்துவம்

உண்மையில் அழகிய பட்டம்
உயர்ந்தது மேலே
ஏழையின் குடிசை [15]

என்ற இஸ்ஸாவின் ஹைகூ இயற்கையின் நியதியான காற்றின் செயல்பாட்டைச் சுட்டுகிறது. எல்லோர்க்கும் ஒன்றாய் வீசும் காற்று, அழகழகான பட்டங்களைப் பறக்கவிட்டு விளையாடுபவர்களுக்கு இன்பத்தைத் தரும். அதுவே ஏழையின் குடிசையைத் தூக்கிச் சென்று, அவனுக்குத் துன்பத்தையும் தருகிறது. 'இது இயற்கை; இயல்பாய் நடக்கும் எதற்கும் மனம் தளர்ந்து விடக் கூடாது; நன்மையே விளையினும் தீமையே விளையினும் ஒன்றே போல் கருதும் மனம் வேண்டும்' என்ற ஜென் தத்துவத்தைக் குறிப்பால் உணர்த்தும். இந்த ஹைகூவிற்குப் பொருள் ஆழத்தைத் தருவது 'ஏழையின் குடிசை' என்ற மூன்றாவது அடிதான் எனலாம்.

இக்கவிதையில் உலக நிலையாமையை உணராத மக்களின் விளையாட்டுப் போக்கை, இன்ப நுகர்வைக் காட்சிப் பொருளாக்குகின்றன முதல் இரண்டடிகள். மூன்றாவது அடி அதற்கு முரணான படிமத்தைச் சொல்லோவியமாக்கித் தந்து, எதிர்பாராத தத்துவ வெளிச்சத்தை அளிக்கிறது. படிக்கும் வாசகனின் மன வளத்திற்கு ஏற்பப் பொருள் மாறுபாட்டிற்கும் இந்த மூன்றாவது அடி வழிவகுக்கிறது. ஒரு நீதி நெறியாளர், சமூகவியலாளர், கலைஞர், அறிவியல் அறிஞர் போன்றோர் தத்தம் நோக்கு நிலைகளுக்கு ஏற்பப் பொருள் விரிவு காண இயலும்.

செர்ரியும் குறிஞ்சியும்

மோசிடாகேயின் புகழ்பெற்ற கவிதையான, " உதிர்ந்து வீழ்ந்த மலர், கிளைக்குத் திரும்புகிறது... ஓ வண்ணத்துப்பூச்சி" என்ற ஹைகூவிலும் இந்த அர்த்தப் பரிமாணங்களின் விரிவைக் காண முடியும்.

செர்ரிப் பூக்கள் மூன்று நாட்களே முழுமையான இலையே இல்லாமல் மரம் முழுவதும் பூவாக மாறி நிற்கும். அந்த மூன்று நாட்களையும் அந்த ஆண்டு முழுவதற்கும் தேவையான விருந்தாக அள்ளிப் பருகுவர் சப்பானியர். பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சி மலருக்கு நாம் விழா எடுப்பது போல, சங்க இலக்கியங்களில் கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனிடம் கொண்ட நட்பிற்குக் குறியீடாக, பெருமையை, பருமையை உணர்த்தும் படிமமாகக் குறிஞ்சி மலர் குறிக்கப்படுகிறது. ஆனால், நாடே ஒன்றுதிரண்டு செர்ரி மரப் பூவழகில் இன்பமுற மூன்று நாட்களில் அழிந்துவிடும் அழகிய மலர்

நிலையாமையைச் சுட்டுகிறது. ஆயினும், இயற்கையுடன் ஒன்றிய மனமுடைய கவிஞர்களுக்கு அவ்வியற்கையே மீண்டும் நம்பிக்கையை ஊட்டுவதாகவும் அமைகிறது. " அழகிய பொருட்கள் நிலையற்றவை; கணத்தில் மின்னி மறைபவை; ஆனால் அழகு என்ற தத்துவம் நிரந்தரமானது" என்ற ஜென் தத்துவத்தை உணர்த்தும் இப்பாடலில் உதிர்ந்து மறைந்த செர்ரி மலர்களின் இடத்தைப் பறந்து அழகூட்டும் பட்டாம்பூச்சிகள் பிடித்துக் கொள்கின்றன. தமிழ்ப்பாடல்களில் கானம் கவினுறக் காயாவின் நீலநிறம் மலைப்பக்கங்கள் முழுவதும் பரவியிருக்க அதைக் கார்வண்ணனின் மேனி நிறமாகக் கண்டு மகிழும் தன்மையைக் காணலாம். ஆனால் சப்பானிய ஹைகூ சுட்டுவது போன்ற தத்துவப் பார்வையைக் காண இயலாது. நிலையாமையை உணர்த்த மலர்ந்த உடன் அன்றே உதிர்ந்துவிடும் காஞ்சி மலர்களைப் படிமமாக்கியுள்ளனர் சங்கக் கவிஞர்கள்.

வடிவமும் கவிதை முடிப்பும்

வடிவ அடிப்படையில், கவிதையின் முடிப்பு எனக் காணும்பொழுது, தமிழில் காப்பியப் பாடல்கள் , அந்தாதிப் பாடல்கள், பாக்கள், பா இனங்கள் ஆகியவற்றின் யாப்பமைப்பு எவ்வாறான முடிவைப் பெற்றிருக்க வேண்டும்; சிறுகதை, கட்டுரை போன்ற உரைநடை வடிவங்களின் ஆரம்பமும் முடிவும் எவ்வாறு அமையின் அவை சிறப்பான விளைவை உண்டாக்கும் என்பன குறித்து இலக்கணிகளும், திறனாய்வாளர்களும் கூறிச் சென்றுள்ளனர்.

வெண்பாவின் இறுதியடி முந்தைய மூன்றடிகளை விட அளவில் குறைந்த சிந்தடியாக முச்சீர் பெறல்வேண்டும். இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு எனும் வாய்ப்பாடுகளுள் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும். ஆசிரியப்பா ஆயின் ஆ, ஏ, ஓ எனும் அசைகளால் முடிவு பெற்று, அதற்கேயுரிய ஓசை நயத்திற்கு ஏற்ப அமைய வேண்டும் என்பது போன்ற அந்த அந்தப் பா இனங்களுக்குரிய யாப்பமைப்பும், ஓசைநயமும் இன்ன வகையாய் அமைய வேண்டும், இன்ன எழுத்துக்களில் முடிய வேண்டும் என்று இலக்கண நூல்கள் கூறுகின்றன. காப்பியங்கள் மங்கலச் சொல்லுடன் ஆரம்பித்து மங்கலச் சொல்லால் முடிவுறுதல், அந்தாதிப் பாடல்களின் ஆரம்பம், முதற்பாடலின் முடிவில் இருந்தும், பாடலின் இறுதி அடுத்த பாடலின் ஆரம்பமாகவும் அமைதல் போன்றனவும் இங்கு எண்ணிப் பார்க்கத்தக்கவை.

ஹைகூவின் அசைகள்

ஹைகூ வடிவம் பற்றிக் கூறுவோர் அனைவரும் அது, 5, 7, 5 என 17 அசைகளைக் கொண்டது என்பர். ஆயின், சப்பானிய மொழியில் அவர்கள்

இவ்வாறு அசைகளைக் கணக்கிடுவது இல்லை. அவர்கள் 'ஆன்ஜி' (Onji)யையே எண்ணினர். ஆன்ஜி என்ற சப்பானிய சொல்லுக்கு 'அசை' என்ற பொருள் இல்லை. அது ஒலியனியப் பண்பு கொண்ட சப்பானிய எழுத்து முறையை அடிப்படையாகக் கொண்டது.

மன்யோஷூ காலத்தில் 'ஆன்ஜி' நாம் கூறும் அசையையே பெரும்பாலும் குறித்தது. அதற்குப் பிறகு சப்பானிய மொழியில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. இப்பொழுது அது அசை என்பதை விட அதிகப் பொருளாழம் கொண்ட ஒரு சொல். இரு நீண்ட உயிரொலிகள் (Dipthongs), ஒரு இறுதி மெய்யெழுத்து மூன்றையும் கொண்டதே 'ஆன்ஜி' என்று இன்று குறிப்பிடப்படுகிறது. இரண்டு அல்லது மூன்று 'ஆன்ஜி'கள் கூட இணைந்து, நாம் ஒரு அசை எனக் கூறும் யாப்பலகாக அமையக் கூடும். எடுத்துக்காட்டாக 'மன்யோஷூ' என்ற சொல்லில் பொதுவாக மூன்று அசைகள் இருப்பதாக நாம் கூறுவோம். ஆனால் , இச்சொல்லில் ஆறு 'ஆன்ஜி'கள் உள்ளன என்று கணக்கிடுவர் சப்பானியர்.

ஹைகூவில் 'கிரேஜி'

ஹைகூவில் முக்கிய இடம்பெறும் பிறிதொரு ஒலிக் குறியீடு 'கிரேஜி' (Kireji) என்பது. ஒரு வினைமுற்றாகவும், ஒரு மரபுத்தொடரின் முடிவைச் சுட்டுவதாகவும் ஒரு சொற்றொடரில் ஒரு கருத்தலகின் முடிவைச் சுட்டுவதாக கருத்தலகுகளைப் பிரித்துக் காட்டும் குறியீடாகவும் வருவது இது. இதை எழுத்துருவில் சுட்டும் நிறுத்தற்குறி என்பதை விட ஓர் ஒலிப்பு முறை நிறுத்தற்குறி எனலாம். இதைப் பயன்படுத்துவதன் மூலமாகக் கவிதை இசைமையுடன் முடிவடைவதையும், இலக்கண முடிப்பையும் உணர்த்துவர் ஹைகூ கவிஞர்கள். ஒரு தொடருக்குப் பின் இடம்பெறும் 'கிரேஜி' ஹைகூவை இசைமை உடைய இரு அலகுகளாகத் துணிக்கிறது. எனவே, ஆங்கிலத்தில் இதனை 'Cutting Word' என்பர். இது பல நேரங்களில் கவிதை வாசிப்பில் ஒரு இடைவெளியைத் தரப் பயன்படுகிறது. இந்த இடைவெளியில் கவிதைப்பொருளை வாசகன் உணர்வதற்கும் மேலும் பொருளாழம் காண்பதற்கும் வழி வகுக்கிறது. ஒரு கூடுதல் எண்ணத்திற்கு வழிவிடுவதாக அதனளவில் முடிந்துவிடாமல் தொடர இடம் தருகிறது.

முடிவடையாத தொடர்கள் ஒரு பெயர்ச்சொல்லுடன் முற்றுப்பெறுவது சப்பானிய ஹைகூவின் இலக்கணம் ஆகும். பெயர்ச்சொல்லுடன் முடிவுறும் பொழுது அங்கு ஓர் உருக்காட்சி உருப்பெற வழி பிறக்கிறது.

' கவிதையின் வடிவத்தில் உள்ள இத் தனித்தன்மை கொண்ட முடிப்பு உத்திகள் பொருள் முடிவிற்கும், பொருள் விரிவிற்கும் பயன்படுகின்றன.

பொருள் முடிவு

பொருள் முடிவு ஒரு இறுதி எல்லையை அடையக் கவிதையில் இடம்பெறும் தொடர்நிகழ்வுகள் ஒரு உச்சத்தை அடைந்து வாசகனுக்குத் திருப்தியை அளிப்பதாய் அமைய வேண்டும். இந்த நிகழ்வுகள் ஒரு குறிப்பிட்ட கட்டமைப்புக்குள், சில அமைப்பாக்கக் கொள்கைகளுக்கு உட்பட்டுத் தம்முள் தொடர்பு கொண்டனவாக இருக்கும். இவ்வாறான அமைப்பு முறையால் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட ஒரு இறுதி எல்லையை அத்தொடர் நிகழ்வுகள் சென்று அடையும். அவை, பெரும்பாலும் தனித்துவம் கொண்டு, நிறைவு அளிக்கக் கூடியதாக அமையும். இவ்வாறான நிறைவையே பொருள் முடிப்பாகக் கருதலாம்.

வாசகனின் கவிதை அனுபவத்தின்பொழுது உணர்ச்சி அழுத்தங்களை உண்டாக்கி அவற்றை விடுவிப்பதும், நீக்குவதும் கவிதை முடிப்பின் பணியாகும். ஹைகூவைப் பொறுத்தவரை உணர்ச்சியின் உச்சத்திற்கு, பொருள் தேட வேண்டிய கட்டாயத்திற்கு, கவிதையின் இரு அலகுகளுக்கும் இடையேயான உறவைக் கண்டுபிடிக்கவேண்டும் என்ற கட்டாயத்திற்கு ஆளாக்கப்படும் வாசகன் தானே கவிதை முடிப்பைத் தேர்ந்தெடுக்கிறான். புதிதாக அமைத்துக் கொள்கிறான். எனவே, ஒவ்வொரு வாசகனுக்கும் ஏற்பக் கவிதைப் பொருள் முடிப்பு ஏற்படுகிறது.

சப்பானிய ஹைகூ கவிதைகளில் பொருள் முடிப்பு

தோட்டக்கலையில் வாழ்க்கைத் தத்துவம்.

இருள் சூழ்ந்த பிறகு
நான் அதை மாற்றியமைக்க விரும்பினேன்
ஒட்டுப் போட்ட முறையை [16]

சப்பானிய கலாச்சாரத்தில் இயற்கையோடு இயைந்து வாழும் தன்மையோடு இயற்கையைத் தனக்காக மாற்றிக்கொள்ளும் தன்மையையும் காண முடிகிறது. இஸ்ஸாவின் இந்த ஹைகூவில் நாளெல்லாம் முயன்று, ஒரு மரக்கிளையில், ஒட்டுச்சேர்க்கையைத் தன் மனத் திருப்திக்கேற்ப முடித்துவிட்ட நிறைவுடன் கவிஞர் ஓய்வு கொள்கிறார். ஆனால் , அவர் அடிமனதில் அதுவரை அமுங்கிக் கிடந்த வேறொரு கருத்து இரவு ஆக ஆக மேலெழுகிறது. இதை வேறுவிதமாக ஒட்டுப்போட்டிருக்கலாமோ (Tongue Grafting) பதிலாக (Ground Grafting) செய்திருக்கலாமோ என ஐயுறுகிறார். இந்த எண்ணத்தை, அவர் ஒதுக்கி மறக்க முயன்றாலும் மீண்டும் மீண்டும் வந்து குறிப்பிடத் தகுந்த தகுதியைப் பெற்றுக் கவிதையாகிறது. இதேபோன்ற ஷிகியின் கவிதை ஒன்று இக்கவிதையின் தொடர்ச்சி போல அமைகிறது.

கையில் விளக்குடன்
ஒட்டுப் போட்ட மரத்தை கூர்ந்து கவனித்துக்கொண்டு
மாலை மழையில்[17]

இங்கு ஒட்டுப் போட்ட இடத்தில் பூசப்பட்ட மண்குழம்பு கரைந்து விடுமே என்ற கவலை மட்டுமே தெரிகிறது.

மழையும் சிறுமியும்

பருவ மழைநாள்
சின்னஞ்சிறுமி கற்றுத் தருகிறாள்
பூனைக்கு நடனமாட[18]

இது இஸ்ஸாவின் கவிதை.

வெளியில் சென்று விளையாட இயலாதபடி பெய்யும் மழை; வீட்டில் வேறு குழந்தைகள் இல்லை. நேரமோ நகராமல் நிற்கிறது. சிறுமிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. தூங்கிக் கொண்டிருக்கும் பூனைக்குட்டியைத் தூக்கி நடனம் பழக்குகிறாள். பூனை, சிறுமி, மழை, மழைக்காலம் இவற்றுக்குள்ள தொடர்பைக் கண்டுபிடித்து அனுபவிக்க வைக்கிறது 'the cat to dance' என்ற இறுதி அடி. வேகமாக விழும் மழை, இதயமில்லாது, பிறர் துன்பத்தை எண்ணிப் பார்க்காது, அடித்துப் பெய்கிறது. அதுபோல, அச்சிறுமி பூனைக்குட்டியின் விருப்பத்தை அறியாமல், அதன் துன்பம் பற்றி உணராமல் அதைத் தன் போக்கில் ஆட வைக்கிறாள்.

காகிதக் கதவா? புல்லாங்குழலா?

இலை யுதிர்கால மாலை
தள்ளுகதவில் ஓட்டை ஒன்று
புல்லாங் குழல் வாசிக்கின்றது[19]

இதுவும் இஸ்ஸாவின் கவிதை.

இலையுதிர்கால மாலைவேளையில் வீசும் வேகக்காற்று, தள்ளு கதவின் நடுவில் உள்ள சிறுதுளை மூலம் உள்ளே வந்துவந்து புல்லாங்குழல் வாசிக்கின்றது. கதவு நகரும்; தானே அல்ல - தள்ளினால் நகரும் கதவு புல்லாங்குழல் வாசிக்கிறதாம்- இந்த இறுதி வரி இயற்கையின் நியதியான இலையுதிர்காலம், மாலைப்பொழுது, உயிரற்ற காகிதக்கதவு, காற்று இவற்றிற்கு இடையேயான உறவை மேலும் அதிகரித்து இயற்கையின் அசைவுகளை இரசிக்கும் மனதைத் தருகிறது. ஒரு காரண காரியத் தொடர்பை உணரச் செய்கிறது.

மொ மோங்கோ

ஒரு பறக்கும் அணில்
வில்லோ மரங்களினூடேயிருந்து
ஒரு குழந்தை [20]

இஸ்ஸாவின் இக்கவிதையின் மூன்றாவது வரியான 'ஒரு குழந்தை' என்பது ஒரு காட்சிப் படிமத்தையே ஏற்படுத்துகிறது. முதல் இரு வரிகளைப் படித்தவுடன் புரிபடும் "வில்லோ மரங்களினூடே ஓடி விளையாடும் அணிலோ?' என்ற எண்ணத்தை மூன்றாவது வரி மாற்றுகிறது. புதிய திருப்பம் ஒன்றைத் தந்து ஒரு சிறுவனின் விளையாட்டுக் காட்சியைக் கண்முன் கொணர்கிறது.

சிமோனோ ஆடையின் விரிந்த கைகளினூடே சிறகுகள் பறப்பது போல கைபரப்பி விளையாடும் சிறுவன் தன் நண்பர்களுக்கு அச்சமூட்ட 'மொ மோங்கோ' எனக் (பறக்கும் அணில்-பேய்) கூறியபடி வில்லோ மரங்களின் தாழ்ந்த கிளைகளினூடே ஓடி வருகிற நிலையைக் காட்சிப்படுத்துகிறது இந்த இறுதி வரி.

தவளையும் கவிஞனும்

'கமிஷிமோ' என்ற பழையகால உடையணிந்த சப்பானிய மேடைக் கவிஞனைத் தவளையாக உருவகப்படுத்திக் கேலி செய்கிறார் சோகன்.

தரையில் தன் முன்கைகளை ஊன்றிக்கொண்டு
வணக்கத்திற்குரியதாக நின்று
எடுத்துரைக்கிறது தவளை [21]

தோள்களை அகலமாக்கிக் காட்டும் விறைப்பான கோட்டுப் போன்ற உடை அணிந்து மேடையில் கவிதை படிப்பவர்களை நேரில் பார்த்தவர்களுக்கே இவ்உருவகச் சிறப்பும் நலமும் புலப்படும் என்கிறார் ஆர்.எச்.பிளித். கீழே அமரப்போவது போன்ற அசைவில், கைகளை முன்னீட்டி வணங்கித் தன் கவிதையைத் தவளையைப் போன்ற குரலில் படிப்பதைக் கேட்டவர்களால்தான் இந்தக் கவிதையை இரசிக்க முடியும் என்கிறார்.[22]

தன் இருபத்து மூன்றாவது வயதிலேயே புத்தபிக்குவாக மாறி நாடெங்கும் பயணம் சென்ற வாகா (Waka) கவிஞர் சைகியோ (Saigyo 1118-1190) . இவர் பாடல் படிப்பதை தவளை பாடுவதற்கு உவமையாக்குகிறார், இஸ்ஸா.

தவளை உட்கார்ந்துகொண்டு
பாடிக்கொண்டிருக்கிறது
சைகியோவைப்போல் [23]

ஆழ்ந்த புத்த தத்துவக் கருத்தைக் கூறவும் இதே தவளையின் செயல் பயன்படுத்தப்படுகிறது.

(நீரின்) மேநிலைக்கு வருகிறது தவளை
தன்னுடைய பலத்தினால்
பற்றற்ற தன்மையால் [24]

புத்த ஞானிகள் அடிக்கடிப் பயன்படுத்தும் மேற்கோள் இது.

தவளையின் நடத்தையைச் சுட்டி அதுபோல மனிதனும் பற்றுக்களால் கட்டுப்படாமல், அதேசமயம் தன் சூழலுடன் பிணக்கு கொள்ளாமலும், அதனுள் மூழ்கிவிடாமலும், எவ்வாறு நீருக்குள் பாய்ந்ததோ அவ்வாறே மேலே வரவும் தெரிந்த தவளையைப் போல, இயற்கையை அனுசரித்து, இயற்கையை ஒட்டி, இயற்கையோடியைந்து வாழத் தெரிந்திருக்கவேண்டும் என்கிறார் ஜோசோ.

மனித உணர்வுகளின் வெளிப்பாட்டுக் குரலாகவும் தவளையின் குரலைக் குறிப்பிடுகிறார். ஹோகுஷி (Hokushi) என்ற கவிஞரின் ஹைகூவில்,

வயலை விற்றாகி விட்டது
எல்லாம் முடிந்தும் தூங்கமுடியவில்லை என்னால்
தவளைகளின் குரல்கள் [25]

எனும் கருத்து கூறப்படுகிறது.

எந்த விவசாயிக்கும் அவனுடைய மூதாதையரின் வியர்வையும், இரத்தமும், கண்ணீரும் சிந்தி வழிவழி வந்த நிலத்தோடு ஆழ்ந்த பிடிப்பிருக்கும்; உணர்வுப் பூர்வமான தொடர்பிருக்கும். அப்படிப்பட்ட அவனுடைய நிலம் இன்று பிறர் ஒருவர் கையில். வயலுடன் தொடர்புடைய தவளையின் குரல் சாதாரணமாகப் பயனற்றதாக, தொல்லை தருவதாகத் தோன்றும். ஆனால் இன்று நிலத்தை விற்றவனுக்கு அத்தவளைகள் தன்னைப் பார்த்து எள்ளி நகையாடுவதாக-குறை கண்டு ஏசுவதாக-புறக்கணித்துப் பேசுவதாகத் தோன்றுகிறது. இது அவன் துக்கத்தையும், தூக்கம் இன்மையையும் உணர்த்துவதாகக் கூறுகிறார் பிளித்.[26]

வண்ணத்துப்பூச்சியும் கவிஞனும்

வண்ணத்துப்பூச்சி
கோவில்மணியின் மேல் அமர்ந்து
உறங்கிவிட்டது [27]

புசனின் இக்கவிதை இயற்கை நிகழ்ச்சி ஒன்றை, ஓர் உயிரியக்கத்தின் சிறுதுளியைப் படம்பிடித்துக் காட்டுகிறது. 'உறங்கிவிட்டது' என்ற இறுதி வரி, அர்த்த அடுக்குகளுக்கு வழிவகுக்கிறது. 'உறங்கிவிட்டது' என்பதால் அந்த கோவிலுக்கு வரும் தொண்டர்களும், மென்மையான மனத்துடன் உறங்கும் வண்ணத்துப்பூச்சிக்குத் தொல்லை தராமல் , அதன் தூக்கத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் வந்து செல்கிறார்கள். அல்லது செல்லவேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறது. 'கோவில்களுக்குச் செல்வதாலும் மத நூல்களைப் பாராயணம் செய்வதாலும் மட்டுமே ஆன்ம விழிப்பு ஏற்படாது. ஒரு யோகம் போல மனிதன் தனது கடமைகளைச் செய்துகொண்டே உண்மை ஞானத்தைப் பெற முடியும். விவசாயி வயலில் உழுது கொண்டே தியானம் செய்யலாம் என்பது ஜென் தரும் விளக்கம். இதைப் புரிந்துகொண்டதால் கோவிலுக்கு வருபவர்களின் எண்ணிக்கையும் குறைகிறது. அதனால், கோவில் மணியில் வண்ணத்துப்பூச்சி இடையூறின்றி உறங்கமுடிகிறது' என்பதையும் பெறும்படி அமைந்துள்ளது இந்தப் பாடலின் இறுதி வரி.

ஷூகியின் கவிதையொன்றும் இதைப் போன்றதே.

கோவில் மணியின்மேல்
மின்னிக்கொண்டிருக்கிறது
ஒரு மின்மினி [28]

என்று அமைந்தாலும் புசனின் கவிதை நயமும் கவிதை முடிப்பின் முக்கியத்துவமும் இதில் இடம்பெறவில்லை. ஆனால், புசனைப் போலவே பாஷோவும் பட்டாம்பூச்சியையும் தன்னையும் ஒன்றாகவே கருதிப் பாடுகிறார்.

எழுந்திரு! எழுந்திரு!
உறங்கும் பட்டாம் பூச்சியே
நாமிருவரும் நண்பர்களாய் இருப்போம் [29]

என்ற பாட்டின் மூலம் கவித்துவ வாழ்வின் உண்மையைப் புலப்படுத்துகிறார்.

பட்டாம் பூச்சியே
என்ன கனவு காண்கிறாய் அங்கே அமர்ந்து?
இறக்கையை ஆட்டிஆட்டிக்கொண்டு [30]

என சியோநி (Chiyoni) கேட்கப் பதில் கூறுகிறார் ஷூகி.

கல்லின்மேல் உறங்கும் பட்டாம் பூச்சி
நீ கனவு காண்பாய்
என் சோக வாழ்வு குறித்து [31]

இங்குக் கவிஞரின் தற்சார்பு வெளிப்படுகிறது. என்றாலும் மூன்றாவது வரியின் மாற்றத்தால் இயற்கை, வண்ணத்துப்பூச்சி, ஷூகி ஆகிய மூவருக்கும் இடையே உள்ள இடைத்தொடர்பு எடுத்துக்காட்டப்படுகிறது. இந்த மாற்றத்தினாலேயே இக்கவிதை சிறக்கிறது.

இதற்கும் ஒரு படிமேல் செல்லும் இஸ்ஸா வண்ணத்துப்பூச்சிகள்தாம் எவ்வளவு அன்புடன் அழைக்கின்றன! நான் மீண்டும் பிறந்தால் வயல்களில் பறக்கும் வண்ணத்துப்பூச்சிகளாகத்தான் பிறப்பேன் என்றவர், பறக்கும் அச்சிறிய உயிர்களின் முன் தான் ஒன்றுமேயில்லாத புழு போல உணர்வதாய்க் கூறுகிறார்.

பறக்கும் வண்ணத்துப்பூச்சி
என்னுள் நான் உணர்கிறேன்
தூசியில் பிறக்கும் புழுவாக [32]

இயற்கையோடு இணைந்த மனிதத்துவத்தைப் பாடுபவர் இஸ்ஸா.

இவ்வுலகில் நம் வாழ்வில் எதுவுமே பயனற்றதோ, தற்செயலானதோ அல்ல; இவ்வுலகில் உள்ள அனைத்து உயிர்களும் நம்முடன் உறவுடையனவே; முடிவுற்ற நம் பயணத்தில் நம் வாழ்வின் சிறு காலப்பகுதியும் வாழாமல் விடப்படக்கூடாது என்று கூறும் புத்த மதக் கருத்துக்களையும் இணைத்து இதே வண்ணத்துப்பூச்சியைப் பாடுவதாகக் கூறும் பிளித் இஸ்ஸாவின் பிறிதொரு கவிதையை எடுத்துக்காட்டுகிறார்.

வண்ணத்துப்பூச்சியுடன் ஒண்டிக்கொண்டேன்
மரங்களின்கீழ் அடர்நிழலின் கீழ்
இதுவும் முந்தைய பிறவியின் கர்மாதான் [33]

பொம்மைத் திருவிழா

செய்வு என்ற பெண் கவிஞர் (ஷிராஓ (Shirao) என்ற கவிஞரின் மாணவி). 1814-ல் பிறந்தவர்.

பொம்மைகளின் முகங்கள்
என்றும் நான் விரும்பி ஏற்கவில்லை
எனக்கு வயதாகிவிட்டது [34]

என்பது இவரது பாடல்.

தொடித்தலை விழுத்தண்டினாரின் உணர்வு வெளிப்பாடு இதில் தெரிகிறது. தன் இளமைக்கால விளையாட்டுத் தோழர்களாய் இருந்த பொம்மைகளில் இனிய முகங்களின் அழகு இன்று காணாமல் போய்விட்டது. பொம்மைகளைப் பொம்மைகளாகப் பார்க்காமல் உயிரும் உணர்வும் உடைய தன்னுடன் பேசும், தன் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ளும் தோழமை உறவாக இருந்தவை இன்று வெறும் பொம்மைகளாகத் தெரிகின்றன. ஏன் நான் வளர வேண்டும் என்று எண்ணாது இருந்தும் வளர்ந்துவிட்டேன். வயதாகிவிட்டது என்கிறார். இங்கு 'வளர்ந்துவிட்டேனே' என்ற ஏக்கம் தெரிந்தாலும் அதை ஏற்றுக்கொண்ட மனதும் புரிகிறது.

மரத்தினாலும் மண்ணாலும் ஆன அந்தப் பொம்மைகளின் உருவங்களில் உயிரும் சதையுமான மனிதனைப் போல ஒன்றுமில்லை என்றாலும், எவ்வளவு சிறிய பொம்மையானாலும் அதினுள் ஒரு தெய்வீகம் உறைகிறது. அவை நம்மைப் போல் வாழவில்லை; உண்மைதான்; இருந்தாலும் அவை வாழ்கின்றன; அந்த இறைவனைப் போல் அவை வாழ்கின்றன என்பார் அனடோல் பிரான்ஸ் (Children's playthings - Anatole France) . நம் நவராத்திரி விழா போன்று சப்பானியர்களுக்கும் பொம்மைத் திருவிழா மகிழ்ச்சியை அளிப்பது.

பிளித்தின் விளக்கம்

பிளித் தன் நூலின் முன்னுரையில் ஹைகூ பற்றிக் கூறும்போது, "மனிதனின் காட்டுமிராண்டித்தனத்திலிருந்தும் சூழ்நிலைகளிலிருந்தும் பிரித்துக் காணத்தக்க, குறிப்பிடத்தகுந்த பெற்றியை உடையவற்றைப் பிரித்துணர்த்துகிறது ஹைகூ. அது நிலவைச் சுட்டும் ஒரு விரல் போன்றது; அது வெறும் விரல் தான்; அவ்வளவாக அழகானது இல்லை என்று கருதினால் அது அவ்வாறே தோன்றும். ஆனால் அதே கை அணிகலன்களை அணிந்து அழகுடன் மிளிரும்பொழுது அது எதைச் சுட்டுகிறதோ அதைக் காண்பதை விட்டுவிட்டு (நிலவைக் காண்பதிலிருந்து

தவறிவிட்டு) கையின் அழகிலேயே மனம் தங்கிவிடும். ஹைகூ ஒரு வாழ்க்கை முறை. அது கிறிஸ்தவத்திற்கோ பௌத்தத்திற்கோ ஒரு மாற்று அல்ல. அவற்றின் முழுமையைத் தருவது. அன்பே மயமாய் அனைவரையும் நேசிக்கச் செய்வது; அனைத்து உயிர்களிடமும், எந்தவிதமான விலக்கல்களும் இல்லாமல் அன்பு பாராட்டச் செய்வது. இந்த அன்பு என்பது வெறுத்து ஒதுக்கும் பொருட்களின் மீது செலுத்தப்படும் நடைமுறைக்கு இயலா அன்பால் அதையும் விட மேன்மையான, ஆழமான அன்பு. வெறுப்புணர்வினை ஊடாடிச் சென்று நுண்ணுயிர் முதல் மீன், தவளை முதலியவற்றின் வாழ்க்கையிலும் விழைந்து செல்லும் அன்பு. "எதன் மீதும் பற்று வைக்காது மனதை உயர்த்துங்கள்" என்று ஜென் கோட்பாட்டைக் கொண்டது. முதல் பார்வையில் ஹைகூ மிக இலேசானதாகத் தோன்றும். நகையுணர்வினாலும், மிகு எளிமையாலும் தன் சிறப்புகளுக்குத் திரை போட்டுக் கொள்கிறது"[35] என்று விளக்குகிறார்.

இத்திரையை விலக்கிக் கவிதையின் பொருள் அடுக்குளைத் தேடி அடைவது வாசகனின் வேலை. கவிதையைப் புரிந்துகொள்வதில் வாசகனின் ஒத்துழைப்பும் தேவை. ஹைகூவின் படைப்பாக்கச் செயல் வாசகனின் மனதில்தான் நிறைவுறுகிறது. தான் பெற்றிருக்கும் வெளிச்சங்களுக்கு ஏற்ப ஹைகூவின் இரு அலகுகளையும் இணைத்துக் காணவும் மூன்றாம் அடியின் திடீர் திருப்பத்தை எதிர்கொள்ளவும் முடிந்த வாசகனே ஹைகூவின் முழுமையை உணர முடியும்.

இளவேனில் இன்பம்

கியோடை எனும் கவிஞரின் ஹைகூ இளவேனில் இன்பத்தில் ஆழ விரும்பும் மனதின் ஏக்கத்தை எடுத்துரைக்கிறது.

எனக்காக
விளக்கை ஏற்றாதே இப்பொழுது
இளவேனிற்கால இம்மாலைப் பொழுது[36]

என்பது கவிதை.

வெயிற்காலம், மழைக்காலம், இலையுதிர்காலம் இவற்றினின்று முற்றிலும் மாறுபட்டது இளவேனிற் காலம். மழைக்காலத்தில் விளக்கேற்றும் வரை குளிர் போகாது. வெயிற் காலத்தில் கையெழுத்து மறையும் நேரத்திலும் வெளியில் நடந்து செல்பவர்களைக் காணமுடியும்தான் என்றாலும் விளக்கின் பட படக்கும் ஒளியினால் அதீதமான குளிர்ச்சி ஏற்படும். இலையுதிர் காலத்தில் விரைவில் விளக்கை ஏற்றுவது நல்லது. நேரம் தாழ்த்தி விளக்கேற்றும் வீட்டில் இருக்கும்

பெரியவர் மனதில் மேலும் வேதனை கொஞ்சம் அதிகமாகும்; தனிமையின் வெறுமை வாட்டும். இளவேனிற் காலத்தில் மரங்களின் தாழ்ந்த கிளைகளின் நிழல், அரையிருட்டில் மிதக்கும் வெண்ணிற செர்ரி மலர்கள், இவை யாவும் தெளிவின்றித் தெரிகின்றன. தென்றல் மெல்ல வீசுகிறது. மழையின் ஓசை மட்டும் மெல்லக் கேட்கிறது. முன்றிலில் அமர்ந்து, சேய்மையில் தெரியும் மலைச்சிகரங்களில் பார்வையைப் பதித்து இருக்க, அவை கொஞ்சம் கொஞ்சமாக இருளில் மறைகின்றன. இவை யாவற்றிலும் இளவேனிலின் உள்ளார்ந்த இனிமையை மனம் உணர்கிறது. இருளை நீக்க ஒரு விளக்கை ஏற்றி அருகில் கொணரும்பொழுது, அதன் ஒளி வெள்ளம் வந்து இளவேனில் இன்பத்தில் ஈடுபட்டிருக்கும் கவித்துவ உணர்வைப் போக்கி விடுகிறது. அதனால்தான், கியோடை வேண்டுகிறார்: "எனக்காக...கொஞ்சம் நேரம் சென்றபின் விளக்கை ஏற்றேன்" என்று.

இயற்கையும் மனிதனும்

கவிதையின் இறுதி வரியில் இடம் பற்றிய குறிப்பினைத் தந்து அவ்விடத்தில் வாழும் மனிதனின் வாழ்க்கை முறை எவ்வாறு இயற்கையுடன் இணைகிறது என்பதைக் காட்டுகிறது ஒரு ஹைகூ.

தனித்தனியே மேகக் கூட்டம்
தனியே உழும் அவன்
தெற்கத்தி மலையடி வாரத்தில் [37]

மலை சூழ்ந்த அகன்ற ஒரு பெரிய நிலப்பரப்பில் ஓர் ஏருழவனாக உழுது கொண்டிருக்கும் உழவன்; இறங்கி வரும் தனி மேகங்கள், நிலத்திலிருந்து உயரும் மலை. மூன்றும் தனித்தனியே இருந்தாலும் தனியல்ல. இயற்கையால் விரும்பப்படும் மனிதனின் நிலையை, இயற்கைக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு நிலையை உள்ளபடியே உண்ர வைப்பது இக்கவிதை.

பூசனின் கவிதை ஒன்றும் இந்த அடிக்கருத்தையே பாடுபொருளாகக் கொண்டது:

நிலத்தை உழுதுகொண்டே அவன்
நகரவே நகராத மேகம்
கலைந்து விட்டது இப்பொழுது [38]

கலைந்து சென்று விட்ட மேகம், மணிக்கணக்காகத் தனியாக உழுதவனின்

நிலையை மேலும் மேலும் தனிமைப்படுத்தி, வெறிச்சோடிய, அகன்று பரந்த வானத்தின் கீழ் அவன் மட்டுமே என்ற வெறுமையை ஏற்படுத்திவிட்டது என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ள வைப்பது இந்த இறுதி வரியே.

முடிவுரை

இவ்வாறு ஒவ்வொரு கவிதையின் அடிக்கருத்துக்கு ஏற்பவும் கவிதை முடிவு அமைகிறது. கவிதையின் முடிவில் இடம்பெறும் பெயர்ச்சொற்கள் ஒரு முரண் அமைப்பால் காட்சிப்படிமத்திற்குப் பயன்படுகின்றன. எனினும், இவை வேற்றுமையில் ஒற்றுமையும், ஒற்றுமையில் வேற்றுமையும் காணுமாறு அமைந்து உள்ளன. பொருள் வெளிப்பாட்டிற்கும், அர்த்தப் பரிமாணங்களுக்கும் வழி அமைக்கின்றன. கவிஞனின் உள்ளுணர்வுடன் ஒத்திசைவு கொண்ட மனநலம் வாய்க்கப்பெற்ற வாசகனுக்குக் காட்சி விரிவுகளை, தத்துவ விளக்கங்களை, மனிதநேய உணர்வுகளை, இயற்கையில் ஈடுபாடு கொள்ளுதலை, இவ்வுலக வாழ்வையும் இறைமையையும் இணைத்துக் காணும் தன்மையை வளர்க்கின்றன.

அடிக்குறிப்புகள்

1. கம்பரா சுந்தர காண்டம், ப.
2. சங்க இலக்கியம்.
3. தொல் . செய்யுளியல் . 1361.
4. லீலாவதி, தி., இதுதான் ஹைகூ, ப. 27.
5. William J. Higginson, The Hand Book of Haiku, p.14; பூசனின் கவிதை.
6. லீலாவதி, தி., ஜப்பானிய ஹைகூ, ப. 64, பா.எண். 118.
7. தமிழ்மணி, தீவின் தாகம், ப. 8.
8. மேலது, ப. 11.
9. William J. Higginson, op. cit., p.19.
10. அவைநாயகன், சூரியச் செதில்கள்.
11. தமிழ்நெஞ்சன், தீவின் தாகம். ப.32
12. தமிழ்மணி, கரந்தடி, இதழ். 2, 'துளிப்பா' , முன்னுரை.
13. விக்கிரமாதித்யன், ஆகாசம் நீலநிறம், ப. 21.
14. தொல் . செய்யுளியல். 74.
15. Blyth, R.H., Haiku, Vol.II, p.467.

16. Ibid., Vol.I, p.110.
17. Ibid., Vol.II, p.471.
18. Ibid., p.236.
19. Ibid., p.438.
20. Ibid., p.529.
21. Ibid., p.530.
22. Ibid.
23. Blyth, R.H., Haiku, Vol.II, p.531.
24. Ibid., Vol.I, p.39.
25. Ibid., Vol, p.534.
26. Ibid.
27. Ibid., p.543.
28. Ibid.
29. Ibid., p.544.
30. Ibid., p.542.
31. Ibid.
32. Ibid., p.550.
33. Ibid., p.553.
34. Ibid., p.464.
35. Blith, R.H., Haiku, Vol.I, Preface, pp.7-8.
36. Ibid., Vol.III, p.646.
37. Ibid., Vol.II, p.476.
38. Ibid.

20

ஹைகூ கவிதைகளில் இயற்கைப் புனைவு

ம. திருமலை

தமிழில் இன்று மிகுதியாகவும் பரபரப்பாகவும் பேசப்படும் புதிய வடிவம் ஹைகூ. ஜப்பானிய மொழியில் பேரிடம் பெற்ற ஹைகூ கவிதை மகாகவி பாரதியாரால் அறிமுகம் செய்யப்பட்டு (பாரதியார் 1977 : 202), நீண்ட இடைவெளிக்குப் பின் எண்பதுகளில் தமிழில் புத்துயிர்ப்புப் பெற்றுத் தனி இலக்கிய வகையாக மலர்ந்தது. 'நடை' இதழில் சி. மணியால் மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகளும் கவிஞர் அப்துல் ரகுமான் தமது 'பால்வீதி' தொகுப்பில் சிந்தர் என்ற தலைப்பில் எழுதிய கவிதைகளும் தமிழில் ஹைகூ கவிதை மறுபிறவி எடுப்பதற்குரிய களங்களை அமைத்துக் கொடுத்தன (லீலாவதி 1987 : 14). இதன் பின்னர் 1987 இல் தி. லீலாவதியின் 'ஜப்பானிய ஹைகூ' என்ற மொழிபெயர்ப்பு நூல் வெளிவந்தது.

தமிழில் எழுதப்பட்ட ஹைகூ படைப்புக்களாக 1984 இல் வெளிவந்த அமுத பாரதியின் 'புள்ளிப் பூக்கள்' தொடங்கி 1994 இல் வெளிவந்த செந்தமிழினியனின் 'பரிதிப் புன்னகை' ஈறாக இதுவரை 28 ஹைகூ தொகுதிகள் வெளிவந்துள்ளன. 'கரந்தடி', 'பட்டாம்பூச்சி' என்ற இரு ஹைகூ இதழ்களும், மூன்று ஹைகூ மொழிபெயர்ப்பு நூல்களும் தமிழில் வெளிவந்துள்ளன. ஹைகூ கவிதையின் திட்ப நுட்பங்கள் பற்றிய ஆய்வு நூல்கள், கட்டுரைகள், ஹைகூ தொகுதிகளின் முன்னுரைகள், ஹைகூ சிறப்பிதழ்கள் என்று ஹைகூ கவிதையை அறிமுகம் செய்யும் முயற்சிகள் தொடர்ந்து இன்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஜப்பான் நாட்டில் ஜென் தத்துவத் தாக்கத்தின் காரணமாகவும் அவர்களது இயற்கையை நேசிக்கும் வாழ்க்கை முறையின் காரணமாகவும் உருவான கவிதை வடிவம்தான் ஹைகூ. ஜப்பானிய தன்கா கவிதை வடிவத்திலிருந்து ஹொக்கு வடிவம் தோன்றி அதன் தொடர்ச்சியாக ஹைகை வடிவம் தோன்றி, 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஹைகூ தோன்றியது. ஹைகூவிற்கு முந்திய கவிதை வடிவங்களில் காணப்பட்ட வேடிக்கைக் கூறுகள் மாற்றமடைந்து, ஆழ்ந்த

போக்குடையதாகவும் பருவ காலங்களைக் குறிக்கும் சொல் ஒன்றை உள்ளடக்கியதாகவும் ஹைகூ கவிதை வடிவம் தோன்றியது (அமுதபாரதி 1987; 14 -15). ஜென் தத்துவத்தின் சுயமற்ற தன்மை (selflessness), தனிமை (lonliness), நன்றி கலந்த ஏற்புத் தன்மை (grateful acceptance), பேச்சற்ற மௌனம் (wordlessness), அறிவு சாராத தன்மை (non - intellectuality) முதலிய மனநிலைகள் ஹைகூ கவிதையில் இயற்கைப் புனைவிற்குத் தக்க இடத்தை நல்கின (லீலாவதி 1990 : 38).

ஜென் தத்துவத்தின் சுயமற்ற தன்மை என்னும் கூறு, மனிதனுக்குச் சில மனநிலைகளை நல்கியது. சகமனிதனுடன் நல்லுறவு கொள்ளத் தூண்டுதல், பொருள்களுடன் தன்னை இணைத்துக் கொள்ளுதல், இயற்கையுடன் தன்னை இணைத்துக் கொள்ளுதல், இந்த அகண்ட பிரபஞ்சம் என்னும் முழுமையின் ஒரு பகுதியாகத் தன்னைக் கருதிக் கொள்ளத் தூண்டுதல் முதலிய மனநிலைகள் ஜென் தத்துவத்தின் சுயமற்ற தன்மை என்னும் கோட்பாட்டினால் மனிதனுக்கு ஏற்பட்டவையாகும். ஜப்பானிய ஹைகூ கவிதைகள் இந்தப் பண்புகளைக் கொண்டுதான் திகழ்ந்தன.

ஒரு குழந்தை, ஞானி ஆகியவர்களின் மனநிலையுடன் வாழ்க்கையை அணுக வேண்டும் என்ற இயல்பு ஹைகூ கவிதைகளின் மூலம் அறிவுறுத்தப்படுகின்றது. இந்த அறிவுறுத்தல் தீவிரமான இயற்கைப் புனைவினால் சாத்தியமாகிறது.

பசு குடித்த நீர் பாலாகிறது
பாம்பு குடித்த நீர் விஷமாகிறது

என்ற கவிதை தண்ணீருக்கெனத் தனியான சுயம் இல்லை என்பதைக் காட்டுகிறது (லீலாவதி 1990 : 11). இவ்வாறே வாழ்க்கையை அணுகும் மனநிலை மனிதனுக்கு வாய்த்து விட்டால் துன்பங்கள் இல்லை என்று இக்கவிதை சொல்கிறது. மனித வாழ்க்கை பற்றி இது போன்ற ஒரு ஞானியின் பார்வை, இயற்கைப் பொருளான தண்ணீர் பற்றிய சித்திரிப்பின் மூலம் புலப்படுத்தப்படுகின்றது.

ஒரு குழந்தையின் மனநிலையுடன் வாழ்க்கையை அணுக வேண்டும் என்ற செய்தியை விளக்குவதற்கும் இயற்கைச் சித்திரிப்பு உதவுகின்றது.

பிடித்து உண்ணுவேன்
விழும் பனி
மிகமெல்ல... மிக மெல்ல

என்ற கவிதை எளிமையான குழந்தையின் மனநிலையைக் கூறுகின்றது (லீலாவதி

1990 :68). ஒரு குறிப்பிட்ட சூழல் அல்லது நிகழ்ச்சி மனிதனின் மனத்தில் ஏற்படுத்தும் உடனடியான உணர்வு, சுருக்கமாகவும் எளிமையாகவும் நேரடியாகவும் கூறப்படுவதை இக்கவிதை காட்டுகிறது. இதில் தீவிரமான கோட்பாட்டுச் சிந்தனைகட்கோ அறிவு சார்ந்த ஆராய்ச்சிக்கோ இடமில்லை. இந்த வகையில்தான், ஹைகூ கவிதைகளில் இயற்கைப் புனைவு விரிவான, திட்டவட்டமான ஓர் இடத்தைக் கையகப்படுத்திக் கொண்டது.

ஹைகூ கவிதைகளைப் பற்றி முதன்முதலாகப் பல மொழிகளில் அறிமுகம் செய்த வில்லியம். ஜே. ஹிக்கின்சன் "ஹைகூ கவிதைகள் என்பவை இயற்கைப் பாடல்கள்" என்றும், "ஒவ்வொரு ஹைகூ கவிதையும் பருவகாலம் பற்றிய குறியீட்டுச் சொல்லைப் பெற்றிருக்க வேண்டும்" என்றும் குறிப்பிடுகிறார் (Higginson 1989: 87). "பருவ காலங்கள் பற்றிய வெளிப்படையான புனைவு ஹைகூ கவிதைகளில் இருக்கலாம்" என்றும், "வெளிப்படையான புனைவு இல்லாத சூழல்களில் பருவ காலங்கள் பற்றிய அறிவு சார்ந்த வாதங்களுக்காவது ஹைகூ கவிதைகள் இடம் தர வேண்டும்" என்றும் ஹிக்கின்சன் குறிப்பிடுகிறார் (Higginson 1989: 88).

ஹைகூ கவிதைகளில் இயற்கைப்புனைவு இன்றியமையாத இடத்தைப் பெற்றிருந்ததற்குச் சில வரலாற்றுக் காரணங்கள் உண்டு. ஹைகூவின் தொடக்க வடிவமான ஹொக்கு அல்லது ரெங்கா (Renga) கவிதை வடிவத்தில் இயற்கை இடம் பெற்றது. ரெங்கா கவிதைகள், பல கவிஞர்கள் பங்கெடுத்துக் கொண்ட விருந்துகளில், ஒருவர் ஒரு பத்தியைப் பாட, பிறிதொருவர் அடுத்த பத்தியைத் தொடர்ந்து பாடி நிறைவு செய்தல் என்ற மரபுப்படி பாடப்பட்டன. நீளமான ரெங்கா கவிதையின் தொடக்கப் பத்தியான ஹொக்குப் பாடலில், அந்தக் கவிதை பாடப்பட்ட பருவகாலம் பற்றிய குறிப்புச் சொல் அவசியம் இடம் பெற வேண்டும் என்ற மரபு உறுதியாகப் பின்பற்றப்பட்டது (Higginson 1989: 90). இதனால் இயற்கையைப் பற்றிய குறிப்புச் சொல்லைக் கொண்டிருந்த ஹொக்குப் பாடல் பின்னாட்களில் ஹைகூவாகப் புதிய வடிவம் பெற்றபோது, அதில் குறிப்புச் சொல்லாக இருந்த இயற்கை, பருவகாலச் சித்திரிப்பு முதலியன, ஹைகூவின் உயிர்நாடியான மையப்பகுதியாக இடம் பிடித்தன.

காலப்போக்கில் ஹைகூ கவிதைகளில் இயற்கைச் சித்திரிப்பு கவிதையின் உள்ளடக்கமாக இல்லாமல், அனுபவத்தின் வெளிப்பாடாகவும் அனுபவத்தை மிகுதிப்படுத்தும் அகநோக்குப் பார்வையாகவும் மாறியது (Higginson 1989: 91). அதாவது விரிவான இயற்கைச் சித்திரிப்பாகவோ குறிப்பான இயற்கைச் சித்திரிப்பாகவோ இல்லாமல், இயற்கை வாசகனின் மனத்தில் எழுப்பும் உணர்வுச் சூழலுக்கே ஹைகூ கவிதை முக்கிய இடமளித்தது. ஹைகூ கவிதை என்றவுடன்

அதில் நிலவு, குளம், வண்ணத்துப் பூச்சி, மரம், தென்றல், மலர் என்று இயற்கைப் பொருள்கள் இடம் பெற்றாக வேண்டும் என்று மனத்தில் தோன்றுவதற்கான அடிப்படைக் காரணம் இதுதான்.

ஜப்பானிய ஹைகூ கவிதைகளை முன்மாதிரியாகக் கொண்டு தமிழில் ஹைகூ கவிதைகள் புனைந்த கவிஞர்களும் தங்கள் கவிதைகளில் இயற்கைக்கு ஓர் இன்றியமையாத இடத்தை நல்கினர். ஹைகூ மேற்கு நாடுகளிலும் கிழக்குத் தேயங்களிலும் பரவியபோது அவ்வந் நாட்டின் இலக்கிய மரபுகட்கு ஏற்றவாறு சிற்சில மாற்றங்களுடன் புதிய வடிவத்தை ஏற்றது. இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் ஹைகூ வெறும் இயற்கைப் புனைவுடன் நின்றுவிடாது, அதனையும் தாண்டி, பல சமூக, அரசியல் சிக்கல்கள், சமயம் பற்றிய சிந்தனைகள் போன்றவற்றையும் பாடுவதற்கு இடமளித்தது. மேற்கத்திய நாடுகளிலும் இவ்வாறு ஹைகூ புதுக்கோலங்கள் புனைந்து கொண்டதாக ஹிக்கின்சன் குறிப்பிடுகின்றார் (Higginson 1989 : 92).

தமிழ் ஹைகூ கவிதைகளில் குறுகிய வடிவம், முரண், கவிதையில் ஏதேனும் ஓர் இடத்தில் முடிச்சு அவிழ்தல், இயற்கைச் சித்திரிப்பு முதலிய கூறுகள் பேரிடம் பெறுகின்றன. இவற்றுள் தமிழ் ஹைகூ கவிதைகளில் காணப்படுகின்ற இயற்கைப் புனைவு இக்கட்டுரையில் விளக்கப்படுகின்றது.

ஹைகூ கவிதைகளில் இயற்கைப் புனைவு, இயற்கையை அழகுணர்வோடு காட்சியாகப் படைத்தல், இயற்கையில் மனித உணர்வுகளை ஏற்றிப் பாடுதல், மனித நேய உணர்வுடன் இயற்கையை அணுகுதல் என்ற மூன்று நிலைகளில் இயற்கைச் சித்திரிப்பு இடம் பெற்றுள்ளதாக இரா. மோகன் குறிப்பிடுகின்றார் (1994 : 36). இம்மூன்று பாகுபாடுகளையும் உள்ளடக்கித் தமிழ் ஹைகூ கவிதைகளின் இயற்கைப் புனைவினைப் பின்வருமாறு பகுத்து விளக்க இக்கட்டுரை முயற்சி செய்கிறது.

1) இயற்கை நுகர்வு
2) இயற்கை மனிதனுக்கு உந்துதல் தருதல்
3) இயற்கையைக் கருவியாக்கி மனித இயல்புகளை அங்கதப்படுத்துதல்
4) இயற்கையைப் பாதுகாக்கத் துடித்தல்
5) இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே காணப்படும் ஒத்திசைவு
6) இயற்கையைப் பயன்படுபொருளாகக் காட்டுதல்
7) இயற்கையின் நிலைபேறுடைமையினைச் சித்திரித்தல்
8) இயற்கையின் நிகழ்வுகட்குப் புதிய விளக்கங்கள் தருதல்

ஹைகூ கவிதைகளில் இயற்கை புனையப்பட்டிருக்கும் இடங்களைத் தொகுத்து நோக்கும்போது மேற்குறிப்பிட்ட கூறுகள் புலப்படுகின்றன.

இயற்கை நுகர்வு

தமிழ் ஹைகூ கவிதைகளில் இயற்கைப் புனைவு இடம்பெறுமிடங்களில் பெரும்பாலும் இயற்கை புலன் நுகர்ச்சிக்குரிய ஒரு பொருளாகவே படைத்துக் காட்டப்பட்டுள்ளது. ஓர் இயற்கைக் காட்சி அல்லது இயற்கை நிகழ்வு உற்று நோக்கப்பட்டு, மிகுந்த வியப்புணர்வுடன் மீண்டும் எடுத்துக்காட்டப்படுகின்றது.

கவிஞர் அமுதபாரதியின் 'ஹைகூ அந்தாதி' தொகுப்பில் வரும்,

அலையில் கூடவா பூ மலரும்?
அருமை அருமை அருமை
கூந்தல் அலையில் மலர்

என்ற கவிதை கவிஞரின் சிறுவியப்புணர்வை எடுத்துக்காட்டுகிறது (அமுதபாரதி 1992 : 25). அலை அலையான கூந்தலில் செருகப்பட்டிருந்த மலர், கவிஞருக்குக் கடல் அலையை நினைவூட்டுகிறது. கடல் அலையில் எப்படி மலர் மலரும் என்ற வித்தியாசமான காட்சி ஒருங்கிணைப்பினைத் தருகிறது. இக்கவிதையில் கடல் அலையில் தோன்றும் வெண்மையான நுரை மலர் போன்ற தோற்றத்தைத் தருவதாகக் கற்பனை செய்யப்பட்டு அது கூந்தலில் சூடப்பட்ட மலருடன் இணைத்து காணப்படலாம். இங்ஙனம் வாசகனின் கவிதையனுபவத்திற்குத் தக்கவாறு பொருள் விரித்துச் செல்ல இக்கவிதை மையமாக அமைகின்றது.

செ. செந்தில்குமார் என்ற கவிஞரின் 'நனையாத நிலா' என்ற கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கும்,

புல்லும்
பூப் பூக்குமா?
அட . . . பனித்துளிகள்

என்ற கவிதையும் இயற்கையான ஒரு காட்சியை வியக்கும் தொனியில் அமைந்திருப்பதை உணரலாம் (செந்தில்குமார் 1990: 24).

துறவியின் 'சிறகுகளின் சுவடுகள்' கவிதைத் தொகுதியில் வரும் ஒரு கவிதை, ஒரு மலரின் அழகில் ஈடுபடும் மனித மனத்தைக் காட்டுகிறது. அக்கவிதை வருமாறு:

முட்கள் கிழிக்கட்டுமே
ஆனாலும் ரோஜாவே ! உன்
அழகுக்கு என் வாழ்த்துக்கள்

இயற்கையின் அழகு மட்டுமல்லாமல், துன்பம் செய்யும் கூறுகூட மனிதனால் நுகரப்படுவதை இக்கவிதை உணர்த்துகின்றது (துறவி 1993: 67).

இயற்கை நுகர்வு என்பது அறிவு சாராத தன்மையுடையது. ஜென் தத்துவ ஹைகூவில் அறிவு சாராத தன்மை முக்கியமானது என்பது முன்னர் விளக்கப்பட்டது. இயற்கையை நுகர்கின்றபோது மனிதனின் அளவையறிவு இரண்டாம் இடத்தையும் உணர்வுக்கண் முதல் இடத்தையும் பெறுகின்றன. இத்தகைய ஓர் இயல்பைத் தமிழ் ஹைகூ கவிதைகளில் காணலாம். சான்றாக ராஜமுருகு பாண்டியனின் பின்வரும் கவிதை உணரத்தக்கது.

பூமியே கைநீட்டு!
விழப்போகிறது
அந்த மலர் (ராஜமுருகு பாண்டியன் 1994: 39)

மலர் கீழே விழுவதால் பெரிய இழப்பு ஏதும் ஏற்பட்டு விடப் போவதில்லை. இருந்தாலும் கவி உள்ளம் மலர் கொடியில் நீடித்து இருப்பதையே விரும்புகிறது. மலர் கீழே உதிர்வது தான் இயற்கை. இது அறிவுக்குத் தெரியும். ஆனால் உணர்வு, மலர் கீழே விழக் கூடாது என்று விரும்புகின்றது. இதுதான் ஹைகூவின் அறிவு சாராத எளிமை எனப்படுவது.

இயற்கையைக் காணும்போது, மனத்தில் விரிகின்ற பலவகையான அனுபவங்களைக் கவிதையில் சிறைபிடிக்கும் தன்மை தமிழ் ஹைகூ கவிதைகளில் காணப்படுகின்றது. கழனியூரனின் பின்வரும் கவிதை படித்து இன்புறத்தக்கது:

எண்ணெய் தேய்த்துக் குளிக்கின்றன
தென்னை மரங்கள்
இன்று பௌர்ணமி (கழனியூரன் 1990: 38)

இக்கவிதை இயற்கையை உள்ளவாறே சித்திரிக்காமல் அது மனத்தில் கிளர்த்தும் உணர்வுகளைச் சித்திரிக்கிறது. ஹைகூ கவிதையில் முக்கியம் இயற்கைப் பொருள்களல்ல; பொருள்கள் எழுப்பும் உணர்வு அலைகளும், அகக்கண்களின் பார்வை நீட்சியுமே முக்கியம் என்ற கருத்துக்கு இணங்க இக்கவிதை திகழ்வதை உணரலாம்.

மித்ராவின் 'ஹைகூ கவிதைகள்' தொகுப்பிலுள்ள,

வண்ணத்துப் பூச்சிகள்
வரைகின்றன
அருவிப் புகையில் . . . வானவில் *(மித்ரா 1990: 34)*

என்ற கவிதையும் அகக்கண்களின் பார்வை நீட்சியின் வழியாக இயற்கையை நுகரும் தன்மைக்குச் சான்றாகும்.

தமிழ் ஹைகூ கவிதைகளில் பெரும்பகுதிக் கவிதைகள் இந்தப் போக்கினைப் பிரதிபலிக்கின்றன. ஜப்பானிய ஹொக்குக் கவிதையின் இயற்கைப் புனைவுக் கூறு இந்த அடிப்படையில் தமிழ்க் கவிதைகளில் சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதற்கு இக்கவிதைகள் சான்றுகளாகின்றன.

இயற்கை மனிதனுக்கு உந்துதலாக அமைதல்

இயற்கை என்பது புலன் நுகர்வுக்கு மாத்திரம் உரிய ஒன்றாகத் தமிழ் ஹைகூ கவிதைகளில் காணப்படவில்லை. தமிழ் இலக்கிய மரபில் இயற்கை மனிதனுக்கு உந்துதல் தருவதாக வரும் பகுதிகள் நிறைய உண்டு . பொருள்வயிற் பிரிந்து மீண்டுவரும் தலைவனுக்கு, பருவகாலம், அவனது பயணத்தை விரைவுபடுத்துகிறது. ஓரேர் உழவனை உவமையாகக் கூறும் பாடல் இத்தகையதே. தமிழ் ஹைகூ கவிஞர்கள் தங்களின் புதிய ஆக்கங்களில் இம்மரபுக்கு இடம் தந்திருக்கின்றனர்.

இயற்கை, கவிஞருக்குக் கவிதை படைக்க உந்து சக்தியாக அமைகின்றது. கவிஞர் மித்ராவின் 'ஹைகூ கவிதைகள்' தொகுப்பில்,

மல்லிகைச் செடியே! கடனாகக் கொடு
திருப்பித் தந்து விடுவேன்
கவிதை எழுத சில எழுத்துக்கள் *(மித்ரா 1990: 16)*

என்றும்,

கவிதைகள் எழுத
நல்ல நாள்
பனிப் புகை *(மித்ரா 1990: 21)*

என்றும்,

உற்றுப் பார்த்தால்தான் தெரியும்
ஆற்று மணல்கள் எழுதும்
அழகிய கவிதைகள் (மித்ரா 1990: 47)

என்றும் அமைந்திருக்கின்ற கவிதைகள், இயற்கை, கவிஞரின் மனத்தில் படைப்பாக்க உணர்வுகளை ஊக்குவிக்கும் நிலைக்குச் சான்றுகளாகின்றன.

புதுவை சீனு தமிழ்மணியின் 'தீவின் தாகம்' என்ற தொகுப்பில் ஒரு கவிதை இயற்கையை நோக்கிக் கவிஞர் வேண்டுகோள் விடுக்கும் பான்மையில் அமைந்திருக்கிறது. அக்கவிதை வருமாறு:

கைகொடுங்கள் தோழமையுடன்
ஹைக்கூ எழுத முயல்கிறேன்
என்னினிய இயற்கையே

இயற்கையின் மூலம் ஒரு கவிஞன் எழுச்சி பெறத் துடிப்பதை இக்கவிதை நேரடியாகவே காட்டுகின்றது (தமிழ்மணி 1991 : 79).

மனித இயல்புகளை அங்கதம் செய்தல்

இலக்கியங்களில் மனித இயல்புகள் விமரிசிக்கப்படுவது ஒரு பொதுவான நடைமுறைதான். எனினும் இயற்கை நிகழ்வு, இயற்கைக் காட்சி ஆகியவற்றின் மூலம் மனித இயல்புகளைச் சுட்டிக் காட்டுதல் சுவையான இலக்கிய மரபாகும். தமிழ் அக இலக்கியங்களில் உள்ளுறை, இறைச்சி முதலியவற்றின் மூலம் மனித இயல்புகள் விமரிசிக்கப்படுகின்றன. தலைவனின் பரத்தமை ஒழுக்கம் பல அகப்பாடல்களில் மறைமுகமாக இயற்கைப் புனைவுகளின் மூலம் சுட்டிக் காட்டப்படுகின்றது. தமிழ் ஹைகூ கவிதைகளிலும் இம்மரபு தொடர்கின்றது. தனிமனிதன், சமூக மனிதனின் இழி தகைமைகள், இரங்கத்தக்க நிலைகள் முதலியன ஹைகூ கவிதைகளில் இயற்கைப் புனைவுப் பின்னணியில் கிண்டல் செய்யப்படுகின்றன.

மு. முருகேஷ் எனும் கவிஞரின் 'விரல் நுனியில் வானம்' என்ற தொகுப்பில் உள்ள ஒரு கவிதை இங்கு உணர்ந்து இன்புறத்தக்கது. அக்கவிதை வருமாறு:

கம்பு ஊன்றியேனும்
நிமிர்ந்து நிற்கும் . . .
குலை தள்ளிய வாழை (முருகேஷ் 1993: 51)

குலை தள்ளிய வாழைக்கு முட்டுக் கொடுத்துத் தாங்கி நிறுத்துவது

வேளாண்மைத் தொழிலில் அவசியமான ஒன்றாகும். இது ஓர் இயற்கைக் காட்சி. இதனை ஹைகூவாக ஆக்கும் கவிஞர் வெறும் காட்சியாக மட்டும் இதனைப் படைக்கவில்லை. அப்படி இதனை வெறும் காட்சியாக மட்டும் வாசகன் உணர்ந்தால் இக்காட்சியில் ஹைகூவின் இயற்கை காட்சிக்குரிய சிறப்பில்லை. "கம்பு ஊன்றியேனும்" என்ற உம்மை எச்ச உம்மையாக நின்று இக்கவிதையில் அங்கதப் பொருள் தருகிறது. வாழை தன்னால் இயலாத நிலையிலும் கம்பு ஊன்றியேனும் நிற்கிறது. அதுபோல மனிதன் நிமிர்ந்து நிற்க வேண்டும்; கம்பு ஊன்றியேனும். ஏதாவது ஒரு நம்பிக்கை ஏதாவது ஒரு சித்தாந்தம், இவற்றின் துணையுடனாவது நிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற செய்தியைக் கூறி, நிமிர்ந்து நிற்காமல் தாழ்ந்து குனிந்து வளைந்து கிடக்கின்ற மனித இயல்பை இக்கவிதையில் ஆசிரியர் அங்கதப்படுத்துகிறார். "ஒரு கவிதையில் சொல்லப்படாமல் விடப்பட்ட, சூட்சுமமாகக் குறிக்கப்படுகின்ற பொருளின் சிறப்பை முதுகெலும்பாகக் கொண்டது ஹைகூ" என்ற கவிஞர் இந்திரனின் கூற்று இந்த ஹைகூ கவிதைக்குப் பொருத்தமாக இருக்கிறது (மித்ரா 1993: 7).

அரசியல் சுயநலங்களுக்காக மனிதன் இயற்கையாக வளர்ந்த மரங்களில் பூக்களை நீக்கிவிட்டுக் கட்சிகளின் கொடிகளை வைத்து வழிபடுவதை ராஜமுருகு பாண்டியன்,

மரம் மன்னிக்குமா!
பூக்கள் இருந்த இடத்தில்
கட்சிக் கொடிகள்

என்று அங்கதப்படுத்துகிறார் (ராஜமுருகு பாண்டியன் 1994: 38). மனிதர்கட்குள் சாதிச் சண்டைகள் ஏற்படும்போது மரங்களை வெட்டிச் சாய்க்கும் அறியாமையை,

நேற்று சாதிச் சண்டை
வெட்டுப்பட்டுக் கிடந்தன
சாலையோர மரங்கள்

என்ற கவிதையில் சாடுகிறார் கவிஞர் (ராஜமுருகுபாண்டியன் 1994: 12).

மனிதன் தான் செய்யும் தொழில்களுக்குத் தக்கவாறு காலப்போக்கில் தன்னையும் மாற்றிக் கொள்கிறான். பணிகளின் நிமித்தம் ஒருவன் போட்டுக் கொள்ளும் ஒப்பனைகள் இன்றைய காலச் சூழலில் 'கலைக்க முடியாத ஒப்பனைகளா'கவே ஆகி விடுகின்றன (ஒப்பனைகள் என்றாலே செயல் முடிந்தவுடன் கலைக்கப்பட வேண்டியவை). இன்றைய மனிதனின் இவ்வியல்பை,

சேற்றில் இரை தேடினாலும்
வெண்மையாய் உடுத்துகின்றன
கொக்குகள்

என்ற கவிதையின் மூலம் அங்கதம் செய்கிறார் கவிஞர் கழனியூரன் (கழனியூரன் 1990 : 45). மனிதன் செய்கின்ற பணிகளில் அல்ல, அவனது பணிகட்குப் பின்னே புதைந்து கிடக்கும் நோக்கங்களில் தான் சிறப்பு இருக்க வேண்டும் என்ற செய்தி இதில் புதைபொருளாக இருப்பதை உணரலாம்.

மனிதனின் ஒற்றுமையின்மையை வேடந்தாங்கல் பறவைகளின் மூலமும், கள்ளத்தனம், சுயநலம் முதலியவற்றை மல்லிகைப் பூக்கள் மூலமும், மனிதனின் பிரிவினை எண்ணங்களை அந்திவானத்தின் வண்ணத்தின் மூலமும் கிண்டல் செய்யும் கவிதைகளைக் கவிஞர் மித்ரா படைத்துள்ளார் (மித்ரா 1990: 39,35,32)

இயற்கை மனிதனுக்கு நல்ல செய்திகளை உணர்த்தும் ஆசானாகத் திகழ்வதைத் தமிழ் ஹைகூ கவிதைகள் சுட்டிக் காட்டுகின்றன. இயற்கையின் மூலம் மனிதனின் சிறுமைகள் மேற்காட்டப்பட்டவாறு அங்கதம் செய்யப்படுகின்றன.

இயற்கையைப் பாதுகாக்கத் துடிக்கும் பாங்கு

கவிதைகளில் இயற்கை பாடுபொருளாக அமைதல் உண்டு. இன்றைய தொழில்நுட்ப நாகரிகம் பெருகிய சூழ்நிலையில் இயற்கை சிதைவதை மனிதன் காண நேர்கிறது. இதனால் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு இன்று நாட்டில் தோன்றியுள்ளது. உலகின் சுற்றுப்புறச் சூழல்கள் பற்றிய விழிப்புணர்வு இன்று உலகப் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. இத்தகைய சூழ்நிலையில் இயற்கையின் மீதான பரிவுணர்ச்சியைத் தத்தம் கவிதைகளில் கவிஞர்கள் புலப்படுத்துகின்றனர். இயற்கையின் மீதான கருணை என்பது ஹைகூ கவிஞர்களின் தனிச்சிறப்பு என்ற செய்தியும் இங்கு ஒப்புநோக்கத் தக்கது (லீலாவதி 1990 : 82). ஜப்பானிய ஹைகூ கவிஞரான ஸாய்கோ, செர்ரி மலர்களிடத்துக் கொண்ட கருணைப் பிரவாகத்தை தி. லீலாவதி எடுத்துக்காட்டுகிறார். தமிழ் ஹைகூ கவிதைகளில் இத்தகைய இயற்கைப் பரிவுணர்வைப் பரவலாகக் காணலாம்.

இயற்கையினை மனிதனிடமிருந்து பாதுகாப்பது மட்டுமல்லாமல், இயற்கையை இயற்கையிடமிருந்தே பாதுகாக்கும் மனப்பான்மையைச் சில தமிழ் ஹைகூ கவிதைகளில் காண முடிகின்றது. துறவி எனும் கவிஞரின்,

புழுதி கிளப்பும்
காற்றே! அமைதியாய் இரு
பனியில் குளித்த பூக்கள் *(துறவி 1993: 25)*

என்ற கவிதையும் மு. முருகேசின்,

அய்யகோ . . . காப்பாற்றுங்கள்
இளம்புல்லைக் குறிவைத்து
பசுவின் குளம்படிகள் *(முருகேஷ் 1993: 25)*

என்ற கவிதையும் இயற்கையின் மீது கொண்ட பரிவினை உணர்த்தும் சான்றுகள். இக்கவிதைகளில் "பனியில் குளித்த பூக்கள்", "இளம்புல்" ஆகியவை ஒருவிதமான அமைதி, தனிமை, சாந்தம் ஆகிய சூழல்களுடன் தொடர்பு கொண்ட படிமங்களாகத் தோன்றுகின்றன. வீசும் காற்றும், புல்லை மேயும் பசுவின் குளம்படிகளும் இந்த அமைதி, தனிமை, சாந்தம் ஆகியவற்றைச் சிதைக்கும் கூறுகளாகத் தோன்றுகின்றன. காற்று வீசுவதும், பசு மேய்வதும் இயற்கையான செயல்கள்தான், இயற்கைக்கு மாறானவையல்ல. இருப்பினும் கவிஞர்களின் இயற்கை நேசிக்கும் உள்ளங்கள் இவற்றைப் பொறுத்துக் கொள்ளவில்லை என்பதை இக்கவிதைகள் உணர்த்துகின்றன. புதுவை தமிழ்நெஞ்சன், ராஜமுருகு பாண்டியன், கழனியூரன், செந்தமிழினியன், மித்ரா முதலான கவிஞர்களின் தொகுப்புக்களில் இயற்கையின் மீதான கருணையுணர்வைப் புலப்படுத்தும் கவிதைகள் காணப்படுகின்றன. "மித்ராவின் இயற்கை மீதான அக்கறை. இது தாய்மை நிறைந்த ஒரு பெண் குரலாகவே எனக்குக் கேட்கிறது" என்ற இந்திரனின் மதிப்பீடு பொதுவாக இயற்கைப் பரிவுணர்வு கொண்ட அனைத்துத் தமிழ் ஹைகூ கவிஞர்கட்கும் பொருந்தும் என்றே தோன்றுகிறது (மித்ரா 1993 : 10).

இயற்கை, மனிதன் ஒத்திசைவு

ஹைகூ கவிதைகளில் இயற்கையானது ஓர் அடிக்கருத்தாகப் புனையப் பட்டாலும், இயற்கை-ஹைகூ தொடர்பு வெறும் புனைவுடன் நின்று விடுவதில்லை. 'இயற்கைக்குத் திரும்புதல்' என்பது ஜப்பானிய ஹைகூவின் அடிப்படைப் பண்புகளுள் ஒன்றாகும். "பழமைக்குத் திரும்புதல், விலங்கினைப் போலவோ தாவரங்கள் போலவோ உணர்தல், தன்னுணர்வற்று, தன்னிலை அற்று நிற்கும் சுயமற்ற நிலைக்கு ஆளாதல்" - முதலியவை ஹைகூ மனநிலைகள் என்று தி. லீலாவதி குறிப்பிடுகின்றார் (லீலாவதி 1990 : 83). தமிழ் ஹைகூ கவிதைகளில் இயற்கைக்கும் மனிதனுக்குமிடையிலான இந்த ஒத்திசைவைக் காண முடிகின்றது.

மனிதன் தன்னையும் இயற்கையுடன் இணைத்துக் கொண்டு, தன்னைப்

போலவே இயற்கையினை உணரும் பாங்கினைப் பல கவிதைகளில் காணலாம். அமுதபாரதியின் 'காற்றின் கைகள்' தொகுப்பில் இடம்பெறும்,

ஏன் இந்த அமைதி
தேர்வா மரங்கட்கு? நாளை
மதிப்பெண்களாய் மலர்கள்

என்ற கவிதை இயற்கையை மனிதன் தன்னைப்போலவே கருதிப் பார்க்கும் மனநிலைக்குச் சான்றாகும் (அமுதபாரதி 1987 : 30).

இயற்கைப் பொருள்களான பறவைகளின் இயக்கங்கள் மனிதர்களின் செயல்கள் போலவே இருப்பதை மு. முருகேஷ்,

எந்நேரமும்
ஆர்பாட்டமும் மறியலுமாய் . . .
குருவிகள்

என்ற கவிதையில் புனைகின்றார் (முருகேஷ் 1993 : 35).

செடிகளில் இயல்பாகப் பூக்கும் பூக்கள் தனக்கு நீருற்றி வளர்த்த மனிதனுக்கு நன்றி சொல்வதாகத் தோன்றுகிறது கவிஞர் துறவிக்கு, அவரின்

நீர் ஊற்றிய மனிதனுக்கு
நன்றி சொல்லும் செடிகள்
கொத்துக் கொத்தாய்ப் பூக்கள்

என்ற கவிதை இயற்கை - மனிதன் ஒத்திசைவைக் காட்டுகின்றது (துறவி 1993 : 63).

இயற்கையின் செயல்களில் மனிதன் தன் அவலங்கட்கு வடிகால் தேடுவதை மித்ராவின் கவிதை காட்டுகிறது.

மொழி புரியாவிட்டால் என்ன?
என் சோகமும் உன் சோகமும்
ஒன்றுதான் குயிலே

என்ற கவிதை, மொழியற்ற மௌனநிலையில் இயற்கையுடன் மனிதன் ஒத்திசைவு கொள்வதைக் காட்டுகின்றது (மித்ரா 1990 : 43).

இயற்கையைப் பயன்படுபொருளாகக் காட்டுதல்

இயற்கை பல வழிகளில் மனிதனுக்குப் பயன்படும் பொருளாகத் திகழ்வதை

ஹைகூ கவிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இயற்கை பயன்பாடும் நிலைபேறும் உடையது என்ற அடிப்படையில் தத்துவப் பார்வையுடைய பல படைப்புக்கள் தமிழில் வந்திருக்கின்றன. ந. பிச்சமூர்த்தியின் 'அடுப்புக்கு எதிரில்' என்ற சிறுகதை இயற்கையின் இத்தன்மையைச் சுட்டுகின்றது. ஹைகூ கவிதைகளில் இயற்கையின் பயன்பாடு என்பது தொடர்ந்து வரும் ஓர் அடிக்கருத்தாகும்.

கவிஞர் பல்லவனின் 'சின்ன நதிகள்' என்ற தொகுப்பில் வரும்,

நாற்ற எரு அடியுரம்
நறுமணத்துடன்
ரோஜா

என்ற கவிதை ரோஜா மலரின் அழகியல் பயன்பாட்டை விளக்குகின்றது (பல்லவன் 1994 : 57).

இயற்கையை மனிதன் துன்புறுத்தும்போதும் அது மனிதனுக்கு நன்மையே செய்கிறது, பயன்படுகின்றது என்ற கருத்தில் அமைந்த,

கல்லடிகளால் ரணம்
என்றாலும்
கனிகளுடன் மரம்

என்ற கவிதையும்,

சூட்டுக்கோல் எரித்த வடு
இனிக்கப் பாடும்
புல்லாங்குழல்

என்ற கவிதையும் இயற்கையின் பயன்பாட்டினை விளக்குகின்றன (பல்லவன் 1994 : 62).

இயற்கையை மனிதன் ஓர் எதிர்பார்ப்புடன் அணுகினாலும், எதிர்பார்த்தது கிடைக்காவிட்டாலும் வேறு வகையில் இயற்கை மனிதனுக்கு உதவுகிறது என்ற கருத்தமைந்த,

பழம் தரும் என்று மரம் வளர்த்தேன்
தராவிட்டால் என்ன?
கிளையெல்லாம் பாடும் பறவைகள்

என்ற துறவியின் கவிதை இன்புறத்தக்கதாகும் (துறவி 1993 : 39).

இயற்கை மனிதனுக்குப் பயன் தருவதுடன் ஆறுதல் தரும் நிழலாகவும் இருக்கிறது என்ற செய்தியும், மனிதர்களுக்கு மட்டுமல்ல உயிரினங்கள் அனைத்திற்குமே இயற்கை பயன்படுகிறது என்ற செய்தியும் மித்ராவின் கவிதைகளில் இயற்கைப்புனைவின் மூலமாகப் பெறப்படுகின்றன. ராஜமுருகு பாண்டியன், அமுதபாரதி, செந்தில்குமார், கழனியூரன் முதலியவர்களின் ஹைகூ கவிதைகளிலும் இயற்கையின் பயன்பாடு காட்டப்படுகின்றது.

இயற்கையின் நிலைபேறுடைமை

மனித வாழ்வின் இன்ப துன்பங்கட்குப் பின்னணியாக நிற்கும் இயற்கை, பயன்பாடு உடையது மட்டுமல்ல; நிலைபேறுடையதுமாகும். வெவ்வேறு பருவகாலங்களிலும் வெவ்வேறு புவியியல் அமைப்புக்களிலும் இயற்கையானது உயிருடன் திகழ்கின்றது. ஒரு பருவகாலத்தில் ஓர் இடத்தில் சிலவகையான தாவரங்களின் மூலம் இயற்கை தனது இருப்பினை மனிதனுக்கு உணர்த்துகிறது என்றால் வேறு பருவ காலத்தில் வேறு இடத்தில் வேறு சிலவகைத் தாவரங்களின் மூலம் இயற்கை தன்னை மனிதனுக்குப் புலப்படுத்தி நிற்கின்றது. பருவ காலங்கட்கும் புவியியல் அமைப்புக்கும் ஏற்பத் தாவரங்கள் மாறலாம். ஆனால் பல்வேறு தாவர வகைகளின் மூலமாகவும் இயற்கை தொடர்ந்து தன்னைப் புலப்படுத்திக் கொண்டிருக்கிறது என்ற உண்மை தமிழ் ஹைகூ கவிதைகளில் காணப்படுகின்றது. இதனைக் கழனியூரனின்,

கோடை காலத்திலும்
வற்றாத புன்னகை முகத்துடன்
ஆவாரம் பூக்கள்

என்ற கவிதை புலப்படுத்துகின்றது (கழனியூரன் 1990: 29).

இயற்கை இயக்கமுடையது, தொடர்ச்சியுடையது, தவிர்க்க இயலாதது, பிரபஞ்சம் முழுவதிலும் மனிதனின் மனப் பிரபஞ்சத்திலும் பரந்து விரிந்து கிடப்பது என்ற உண்மைகள் பல ஹைகூ கவிதைகளில் காணப்படுகின்றன. அமுதபாரதியின்

இறப்பு நேர்கையில்
இறந்திடலாம் பட்டாம்பூச்சி
எங்கே இறக்கும் நிறம்?

என்ற கவிதை இவ்வகையில் எண்ணிப் பார்க்கத் தக்கதாகும் (அமுதபாரதி 1987: 76).

இயற்கை நிகழ்ச்சிகளுக்கு விளக்கம் தருதல்

மரபிலக்கியங்களில் தற்குறிப்பேற்ற அணி என்ற ஓர் அணி இயற்கையின் நிகழ்ச்சிகட்குக் கவிஞன் தனது போக்கில் புது விளக்கம் தருவதைக் குறிக்கிறது. சிலப்பதிகார மதுரைக் காண்டத்தில் கோட்டையில் கொடிகள் அசைவது இளங்கோவடிகட்கு "வாரல் என்பன போல் மறித்துக் கைகாட்டு"வதாகத் தோன்றுகிறது. இக்கவிதை மரபில் வந்த தமிழ் ஹைகூ கவிஞர்களும், இயற்கையைத் தத்தம் போக்கில் விளக்குகின்றனர்.

இயற்கையில் தவளையின் கத்தல் ஓசை, கவிஞருக்கு ஒரு செய்தியைத் தருகிறது. அமுதபாரதியின்,

அந்திமத்திலும் பாடல்!
ஆமாம் முகில்களை வரவேற்கும்
பாம்பின் வாய்த் தவளை

என்ற கவிதை தவளையின் இயல்பான ஓசைக்குக் காரணம் கூற முற்படுகின்றது (அமுதபாரதி 1987 : 34).

காலைச் சூரிய உதயம் பற்றிய கவிதையில் கவிஞர் பல்லவன்,

இருட்டுக்கு பிரசவ வலி
கிழக்கு வாசலில்
சிவப்புக் குழந்தை

என்று சூரிய உதயத்தை இருட்டின் பிரசவ வலியாக உருவகம் செய்கிறார் (பல்லவன் 1994 : 45).

மின்னலைப் பார்க்கும் ஒரு கவிஞருக்கு அது வானத்தின் கிழிசலில் போடப்பட்ட தையலாகத் தோன்றுகிறது.

கிழிந்த வானத்தை
யார் தைத்தது
மின்னல்

என்ற கவிதை வானத்தைக் கிழிந்த துணியாக உருவகம் செய்கிறது (முருகேஷ் 1993: 26)

கவிஞர் செந்தமிழினியனின் பின்வரும் கவிதை, ஒரு பருவகால நிகழ்வுக்கு விளக்கம் தருகின்றது.

ஏனிந்த அம்மணம்
புத்தாடைகளுக்காக
இலையுதிர் காலம் (செந்தமிழினியன் 1994 : 10)

நிர்வாணம் மனிதர்கட்குரியது; இலையுதிர் காலம் மரங்கட்குரிய இயற்கை; இவ்விரண்டையும் இணைத்து மரங்களின் நிர்வாணம் என்ற புதிய கருத்தாக்கத்தை உண்டாக்கி இயற்கை நிகழ்வுக்கு விளக்கம் தருகிறார் கவிஞர் செந்தமிழினியன்.

தமிழ் ஹைகூ கவிதைகளில் இயற்கை நுகர்வு என்னும் அடிக்கருத்துக்கு அடுத்த நிலையில் இயற்கைக்கு விளக்கம் தரும் போக்குடைய பாடல்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

ஜப்பானியக் கவிதை வகையின் மறுபிறவியாகத் தமிழில் தோன்றிய ஹைகூ கவிதைகளின் உயிர்நாடி இயற்கைப் புனைவு என்பதைத் தமிழ்க் கவிஞர்கள் நன்கு தெளிந்து வைத்திருக்கின்றனர் என்ற உண்மை ஹைகூ கவிதைகளின் இயற்கைப் புனைவைக் காணும்போது புலனாகின்றது. இயற்கையை நுகர்தல், இயற்கையின் மூலம் புலன் எழுச்சி பெறுதல், இயற்கையைச் சமூக விமரிசனத்திற்குரிய கருவியாகவும் பின்னணியாகவும் எடுத்தாளுதல், இயற்கையின் மீது அளவற்ற கருணை கூர்தல், இயற்கை-மனிதன் ஒத்திசைவு, இயற்கையின் பயன்பாடு, இயற்கையின் தொடர்ச்சியும் நிலைபேறு உடைமையும், இயற்கையினை மனிதனால் தவிர்க்க இயலாமை, இயற்கை நிகழ்வுகளுக்கு மனிதனின் புதிய விளக்கங்கள் என்ற பல்வேறு கூறுகளில் இயற்கை தமிழ் ஹைகூ கவிதைகளில் புனையப்பட்டுள்ளது.

இயற்கைக்கும் மனிதனுக்குமிடையிலான உள்ளடங்கிய போராட்டம், முரண்பாடு, மனித எண்ணங்களின் பதிலி நிறைவாக இயற்கை திகழ்தல், இயற்கை இன்று அடைந்து வரும் மாற்றங்கள், இயற்கை மனிதனுக்கு உணர்த்தும் செய்திகள் என்ற நிலைகளிலும் இயற்கைப் புனைவு தமிழ் ஹைகூ கவிதைகளில் இடம் பெற்றுள்ளது. இன்றைய சமூக அரசியல் சூழ்நிலைகளில் மனித இனத்தை அச்சுறுத்திக்கொண்டிருக்கிற அணு ஆயுத விஞ்ஞான வளர்ச்சி நிலைகளில் இயற்கையின் மகத்துவத்தை உள்ளடக்கமாகக் கொண்ட ஹைகூ கவிதைகள் பெருமளவில் வெளிவருவது சமூகப் பொருத்தம் உடைய ஒரு நிகழ்வாகும்.

துணை நூற்பட்டியல்

அமுதபாரதி, 1987 காற்றின் கைகள், நர்மதா பதிப்பகம், சென்னை.

————————, 1992 ஹைகூ அந்தாதி, பாமா பதிப்பகம், சென்னை.

கழனியூரன், 1990. நட்சத்திர விழிகள், அன்னம் வெளியீடு, சிவகங்கை.

செந்தமிழினியன், 1994. பரிதிப்புன்னகை, பரிதிப் பதிப்பகம், புதுச்சேரி.

செந்தில்குமார், செ., 1990. நனையாத நிலா, தமிழ்விழி பதிப்பகம், செய்யாறு.

தமிழ்மணி & தமிழ் நெஞ்சன், 1991. தீவின் தாகம், பா கலை இலக்கிய அமைப்பு, புதுச்சேரி.

துறவி, 1993. சிறகுகளின் சுவடுகள், கௌதமன் பதிப்பகம், சென்னை.

பல்லவன் , 1994. சின்ன நதிகள், குமணன் பதிப்பகம், திருகழுக்குன்றம்.

பாரதியார், 1977. பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை.

மித்ரா, 1990. ஹைகூ கவிதைகள், சாரல் வெளியீடு, சென்னை.

......................., 1993. குடையில் கேட்ட பேச்சு, தமிழோசை அச்சகம், சென்னை.

முருகேஷ், மு., 1993. விரல் நுனியில் வானம், எதார்த்தம் பதிப்பகம், புதுக்கோட்டை.

மோகன், இரா., 1994. இலக்கியச் சோலை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

ராஜமுருகுபாண்டியன், 1994. ஹைகூ பறவைகள், அன்னம் வெளியீடு, சிவகங்கை.

லீலாவதி, தி. (மொ. ஆ), 1987. ஜப்பானிய ஹைகூ, அன்னம் வெளியீடு, சிவகங்கை,

______________, 1990. இது தான் ஹைகூ, பூங்கொடி பதிப்பகம், சென்னை.

Higginson, William J., 1989. The Haiku Hand book, Kodansha International, Tokyo.

21

THE MEANING OF MEANING IN HAIKU: A COMPARATIVE ANALYSIS

C.K. MAHADEVAN

"**Haiku**", " today is a worldwide cult, with California poets striving to capture in English, the spareness and fleeting images that seem so effortless in the Japanese and early Zen masters" - Haiku chapter 15 Zen & Haiku.

'Haiku' is taken up for comparison with ancient and modern Tamil poems in this paper. There are definite similarities, in form and theme in both.

According to R.H. Blyth, " Haiku has its origins in pre-Buddhist thought in India, through Chinese culture, into the Japanese world-view and the poetic expression of it". In haiku all those deep thoughts and experiences of the Indian, Chinese and Japanese races, rooted in the dark backward and abysm of time, here show their small, tender, flower-like faces that faint, secret simile that instantly attests their heavenly origin and nature".[1]

Indian Buddhism
⇩
Chinese Buddhism ⇦ (Chinese Zen) > Chinese Art
⇩
Japanese Buddhism ⇦ (Japanese Zen) > Japanese Painting

Poetry attracts the attention of the people in general, because of it reflects human nature. The four elements of literary composition, though common to all forms of literature, have a special aesthetic place in poetry.

'Haiku is regarded by many as the supreme achievement of Zen culture'.[2]

Americans are striving to capture in English and cultivate Haiku's formal element along with its indepth meaning in their poetry.

Two thousand and five hundred years ago, there have been similar poems in Ancient Tamil. The general structure of Haiku can be compared with 'thālisai' in Kalippā, centiyal in Veṇpā and the short poems in Aiṅkuṟunūṟu and Kuṟuntokai including Senthoṭai in Tamil prosody and ammānai poems.

Nowadays, Haiku composition is becoming popular in Tamil, because of its brevity of form and clarity of expression. The beauty of the diversified themes is a joy for the readers. Haiku adds new dimensions to Tamil poetry. The impact of haiku is largely due its suggestiveness, which touches deeper regions of the mind.

'The marriage of men with nature' is the kernel of Japanese haiku poems.

The Tamils of the classical period never sung of nature as a separate entity. Invariably in all love songs of ancient Tamils, nature becomes a happy combination of internal and external activities of life; the treatment of nature in Cankam literature does not stop with the description, but becomes the background for the manifestation of their own inner feelings and passions.[3]

According to Daniel C. Buchanan (One hundred famous Haiku - by Daniel C. Buchanan) "this much use of symbolism and the hidden suggestion is often subtle, though expressed in simple language. Keen observation and love of nature are seen. Many haiku poems are beautiful word pictures, but not in elaborate description.[4]

Treatment of nature in Haiku

Like ancient Tamil, Haiku is a nature poem. Each season has a nature and beauty known to govern the intrinsic strata of the society. The womb strata in renga composition have rules. There was a book of rules for writing renga (renga = hokku -haiku) which listed the objects, mostly plants and animals, particularly flowers and birds, associated with each season. As the hokku became independent of renga and developed into the haiku these rules stayed with it, right up to the beginning of the twentieth century.[5]

In ancient Tamil of the classical period, we have similar background and foreground as well. In Tamil, they knit together the feelings of man and the beauties of nature in the closest of bonds and warmest of associations.

Tolkāppiayar says that primary consideration has been given for the land and climatic changes by those who could understand the importance of the impact that these have on the life of human beings. The time in a day and the days and the months in a year have been divided by Tolkāppiyar on the basis of the changes in climate and weather. The classifications made by him are as under:

(Āvaṇi, Puraṭṭāci)	Kār kālam	- the rainy season
(Aippaci, Kārthigai)	Kūtir kālam	- the later rainy season
(Mārkaḻi, Thai)	Munpani kālam	- the early cold season
(Māsi, Paṅkuni)	Pinpani kālam	- the later cold season
(Cittirai, Vaikāci)	Iḷavēnil kālam	- the early summer
(Āṉi, Āṭi)	Muthuvēnil kālam	- the later summer

Thus a year has been divided into six divisions. A day has been divided into six parts.

Therefore, it is obvious that these classifications have a bearing and significance on the activities of human beings in ancient Tamilnadu.

Besides, in Tamil each region has its womb stratum. This covers in detail food plants, flora, fauna, avifauna and groups or clans of human beings together with their activities and their pastimes.

Japanese tradition has similar background, seasonal topics and the meaning and compositions of haiku differ on different times of the year.

First Month (Lunar calender; starts on Chinese New Year)

Lingering winter, remnants of snow, plum blossoms, Japanese nightingales

Second Month Plum blossoms; cherry blossoms

Fifth Month Cuckoos, "fifth - month rain (i.e., the rain of early summer)

orange blossoms, irises ...

"Most Japanese people and haiku poets, continue to feel that the seasonal element is basic to haiku".[6]

In comparison, we could see that seasons serve as an indexing function in both Japanese haiku and Tamil classical poems.

The Japanese are passionate lovers of nature. The treatment of nature in Sangam poems is an obvious evidence to prove that the Tamils' attitude towards nature is in confomity with their attitude to life.

Though modern haiku poets deviated from the convention in nature, yet a haiku with cherry blossoms will be associated with the dates of their appearance in Kyoto according to the tradition.

So far as Tamil is concerned the generic changes and causes for the same through the ages are obvious. The growth of literature in the annals of Tamil has undergone eruptive changes owing to religious diffusions and political invasions. Yet Mullai, the jasmine flower is still taken as a symbol of chastity and plantain denoting fertility.

The quality of experience and perception of beauty in nature are in tune with life in sangam Tamil poems and Japanese haiku. If the one resonates the other vibarates in unison. In fact, the seasonal changes hold the key in both forms and themes. Without understanding the background it would be a Himalayan task to enjoy the meaning of haiku poems.

The aim of haiku is not beauty; it is something much deeper and wider. Moreover haiku's real subject is inexpressible. Haiku is better known as "songs without words".[8]

The second aim of haiku, it is pointed out by Blyth is "to live twenty four hours a day, that is, to put meaning into every moment, a meaning that may be intense or diffuse but never ceases".

The beauty in haiku poems is hidden rather than revealed.

Mathew Arnold says that poetry is nothing less than the most perfect speech of man. As such, haiku takes away as many words as possible between the thing itself and reader.

Haiku makes people to understand and appreciate the sensations and events which have moved fellow human beings. Reading a short poem has its oven advantage and benefits and a few of them are listed below:

a. Emotions in human beings appear suddenly and vanish; invariably they are brief.

b. Secondary meaning appears in the mind's eye of the readers.

c. The poet easily takes the reader to the heights of his imagination.

d. Emotional element is kept in suspended animation for both readers and authors.

e. The short poem invites the reader to involve himself dynamically in the poetic process.

f. The musical texture of short poem makes the hearers to take off in their minds. Besides it awakens the soul.

g. Association of thought makes the readers to retain the poem in memory, which could be recalled at any time.

h. Related experience of fellow readers is an added attraction for short poems.

i. Children recapture the ideas and pictures with a mental review based on the situation.

j. Brevity of picturesque presentation leads to concrete and vivid ideas in the minds of the readers.

k. Suggestions and implied meanings of short poems are subtle in their expression and wider in the range of meanings which emerge from time to time and from readers to readers.

l. In any of the literatures of the world, short poems provide a window - view to understand the culture and nature of the people concerned.

In the light of the above, "haiku offers one of the best places to begin studying Japanese literature" according to Blyth.

Visuals such as painting have brighter connections with shorter poems than the longer ones. For example the Japanese poet, Buson is a painter and a poet as well.

The interaction of cultures could be traced in haiku poems.

(Zen + Christianity - religion & culture imported)

from Korea and China < Buddhism + Confucianism

Japan	———	**Tamil**	———	**Ancient**
Haiku		**Haiku**		**Tamil poem**

There were three Great Masters of Haiku in Japan. Kobayashi Issa is a better known poet than others.

Let us take a poem authored by Issa, for a comparative study. As in the case of ancient Tamil poems, if one wants to enjoy the Japanese Haiku one should know the background and nature.

Since Issa grew up in a countryside, with a cruel stepmother and was banished from his house to city poverty in his midteens, he had a rather pessimistic view of human nature. He came to prefer the company of small, seemingly insignificant creatures and wrote many haiku on such topics as grasshoppers, flies and bugs, sparrows and other less-than- glamorous beings.

One of Issa's best known verses shows his empathy.

Japanese	**Translation into English**
Yare utsu na	Oh, don't swat!
hae ga te o suru	the fly rubs hands
ashi o suru	rubs feet.[9]

Modern Tamil Haiku	Translation into English
Koṭi koṭuthīr!	You gave a flag
Kuṇṭūsi koṭuthīr!	You gave a pin
Saṭṭai?	Where is shirt to pin it?
- Pondicherry Mani	

The above Tamil song is the cry of a school boy due to poverty. On the day of Indian independance small tri-colour flags were distributed to urchins, along with a pin. The poor fellow did not have a shirt to pin the flag! oh! what a pity!.

In ancient Tamil we have a collection known as Kalittokai. Though the theme is love, yet it contains a number of moral maxims.

The charateristic features of the (tiṇai) lands and their nature and life of their inhabitants find an elaborate and picturesque portraiture.

Every kali song has three-three-lined versification known as tāḻisai. They look surprisingly similar to Japanese Haiku.

But one should know the background of theme and situation for better appreciation of the content.

How often do men forget their better-half! Because they engrossed in their worldly pursuits forgetting the one who is sitting and waiting for his arrival in vain. The heroine laments thus.

Description of the desert

"Searched by the sun's rays, as by the cruel misrule of the king advised by his minister, who could neither uphold justice nor possess grace".

The elephants, which formerly shed their juice, over which the flies swarmed, now have lost their strength, fell down flat on the desert, their tusks piercing the ground, like the plough driven into dry soil.

The above is a description of the desert, which the hero traverses as he is on

his way to amass wealth.

A three-lined composition similar to haiku is given below.

Seven strings of the lute
Which gave pleasure to hearers
Suddenly snap.

The Goddess of fortune
Disappears in heat
Desire wealth in the desert.

Wealth is less stable
Than misrule of kings;
Can the wise desire Wealth?[10]

The heroine advises the hero to abandon his journey in order to enjoy the sweets of home. However, the hero returns with health and wealth.

There are many haiku-like compositions in the classical period of ancient Tamils, similar in theme and form.

NOTES & REFERENCES

1. Blyth R.H. Haiku vol.1. Eastern Culture. p.16.
2. Ibid., 18
3. C. Kathir Mahadevan, Cultural Heritage of Ancient Tamils. P.41.
4. Blyth R.H. Vol. Eastern Culture. P. 114
5. Ibid., 116.
6. Ibid., 118.
7. Ibid., 120.
8. Ibid., 114.
9. William J. Higginson, The haiku Hand Book. P. 17.
10. Kalittokai., Pālai Kali.

22

தமிழில் தலித் இலக்கியக் கருத்துருவாக்கம்

ப. சிவகாமி

தலித் இலக்கியம் சமூக, பண்பாடு மற்றும் பொருளாதார ஒடுக்கு முறைக்கு ஆளானவர்களின் விடுதலையோடு தொடர்புடையது. இது, இன்றைய சமுதாய, பொருளாதாரக் கட்டமைப்புக்கு எதிரான எதிர்க்கலாச்சார, புரட்சிகர, அறிவியல் அணுகுமுறை கொண்ட போராட்டத்தின் குறியீடாக விளங்குகிறது. தென்அமெரிக்க, கறுப்பு இலக்கியங்களோடு ஒப்பிடக்கூடிய உலகந்தழுவிய சுதந்திர வேட்கையால் குணாம்சப்படுத்தப்பட்டுள்ளது. மராத்திய மாநிலத்தில் இதன் தோற்றுவாய் தற்செயலானது அல்ல. அம்பேத்கார் ஏற்படுத்திய சமூக விழிப்புணர்வின் வெளிப்பாடே அது. தலித் இலக்கிய இயக்கம் இன்று இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கும் விரிந்து எல்லா மொழிகளிலும் வேகமாக வளர்ந்து வருகிறது. தமிழில் இதன் தாமத வருகையைத் தொடர்ந்து சமீபகாலமாகப் பலர் தலித் இலக்கியத்தில் தடம் பதித்துள்ளனர். இலங்கைத் தமிழ் எழுத்தாளர் டானியல், மற்றும் டி. செல்வராஜ் ஆகியோர் தமிழில் தலித் இலக்கியத்தின் முன்னோடியாவர். இக்கட்டுரையின் நோக்கம் தமிழ் தலித் இலக்கியக் கருத்துருவாக்கத்தை அதன் பன்முகப் பரிமாணங்களோடு மிகச் சுருக்கமாக விளக்குவதாகும்.

1958-ஆம் ஆண்டு பம்பாயில் நடைபெற்ற ஒடுக்கப்பட்டோர் இலக்கிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் இடம் பெற்றிருந்தாலும் 1969 - இல் தான் தலித் இலக்கியம் என்ற சொல்லாடல் புழக்கத்திற்கு வந்தது. சுதந்திரப் போராட்டக் காலங்களில், மராத்தி மரபு இலக்கியம் காந்தியச் சிந்தனைகளின் தாக்கம் பெற்றுப் பின்னர் மார்க்ஸிய சிந்தனையின் தாக்கத்தை ஏற்று முற்போக்கு இலக்கியமாகப் பரிணாமம் பெற்றபோது, "உடலுழைப்பற்ற வெள்ளைச் சட்டை எழுத்தாளர்கள்" தங்களின் பார்வையிலிருந்து குடிசை வாழ்க்கையைக் கலைத் தன்மையோடு விவரிப்பதும், இயற்கையை ஆராதிக்கிறேன் என்று அழகியல் வர்ணனைகளை உவமைகளோடு சித்தரிப்பதும் அகவயப்படுதல் எனக்கூறி

பாலியல் வர்ணனைகளை எழுதிக் குவிப்பதுமாயிருந்தனர். ஏழை, பணக்காரனை, சிதைவுறும், கூட்டுக் குடும்பத்தின் எச்சங்களை யதார்த்த பாணியில் எழுதி வந்தனர். அப்போதுதான் உருவமற்ற, மேற்படி மரபுவழி பண்புகளற்ற, பீறிடும் ஊற்றாக தலித் எழுத்துக்கள் சமுதாயத்தின் கடைக்கோடியிலிருந்து கிளம்பி வந்தன. அவை தமக்கே உரிய வீறுடன் அடித்தள மக்களின் வாழ்க்கையை முன்வைத்தன.

தலித் இலக்கிய இயக்கத்தின் தோற்றம் குறித்த பல்வேறு ஆராய்ச்சிகள் புத்தர்கால இலக்கியத்தையும், பதினான்காம் நூற்றாண்டில் சொக்கமேளாவையும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் மகாத்மா பூலேவையும் தலித் இலக்கிய இயக்கத்தின் தொடர்ச்சியாக முன்வைத்தாலும் தலித் இலக்கியம் இயக்கமாக உருவெடுத்தது இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியேயாகும். தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் சித்தர் பாடல்களில் உள்ள கருத்தியலும், அவர்களின் செயல்பாடுகளும் இன்றைய தலித் விடுதலைப் போராட்டத்திற்கான களனை ஓரளவு உருவாக்கியுள்ளது. புண்ணுக்குப் புனுகு தடவும் காரியத்தைச் செய்து வந்த பக்தி இயக்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சி - மையக் கருத்தியலை முன்வைத்தவர்கள் சித்தர்கள். சாதீயச் சித்தாந்தத்தையும் செயல்பாட்டையும் எதிர்ப்பதைப் பெரும்பாலும் தங்கள் குறிக்கோளாய்க் கொண்டிருந்தனர். அவர்களுடைய மொழிப் பிரயோகம் மொழியை வெறும் தொடர்பு சாதனமாக மட்டும் கொள்ளாமல் கருத்தியலாகக் கொண்டதும் கவனிக்கத்தக்கது. ஆனால், அவர்களின் பெண்ணியக் கோட்பாடு என்பது அதுவரை நிலவிவந்த பெண்ணியக் கோட்பாடுகளின் சாரமாகவே இருந்து வந்தது. இந்த வகையில் சித்தர் இலக்கியத்தை இன்றைய தலித் விடுதலை இயக்கத்தோடு தொடர்புபடுத்திப் பார்க்க முடியாது.

பெரியார் இயக்கம், திராவிடர் கலாச்சாரம் ஆகியவை சாதீயக் கூறுகளை எதிர்த்தாலும் அவை பிற்பட்டவர்களை மையமாகக் கொண்டு இயங்கியதால் தலித் இயக்கம் தலைமையையும் மையத்தையும் இழந்தது. பாரதிக்குப்பின் அங்கொன்றும் இங்கொன்றுமாக சாதி எதிர்ப்பு பற்றிய சிதறலான படைப்புக்களே காணக் கிடைக்கின்றன.

இன்றைய தலித் இலக்கியக் கருத்துருவாக்கம் என்பது பிற மாநிலங்களின் தலித் இலக்கிய வளர்ச்சியின் அடியொற்றி, அம்பேத்கரியத்திலிருந்து தொடங்கியது என்றாலும், மார்க்ஸியம், பெரியாரியம் இவற்றில் வேர்களைக் கொண்டுள்ளது. மார்க்ஸியத்தின் வர்க்கம் சார்ந்த போராட்டத்துடன் பெரியாரின் பகுத்தறிவு - பார்ப்பனீய எதிர்ப்பை முன்வைத்து, சாதீயக் கூறுகளை முன்னிறுத்தி ஒடுக்கப்பட்டோருக்கான போராட்ட களத்தைத் தயார்படுத்துவதே தமிழில் தலித்

இலக்கியச் சிந்தனையாக மலர்ந்திருக்கிறது. இக்கூறுகளை உள்ளடக்கிய தாழ்த்தப்பட்டோரின் போர்முகமே இன்று தலித் இலக்கிய இயக்கமாக இருக்கிறது.

தலித்-தலித் உணர்வு-தலித் இலக்கியம்

தலித் என்னும் சொல்லாடல் ஒடுக்கப்பட்டோரின் வேதனைக் குறியீடாக அறியப்பட்டாலும் நடைமுறையில் தாழ்த்தப்பட்ட சாதிகளைக் குறிக்கும் அடையாளமாகவே பார்க்கப்படுகிறது. "இலக்கியம் என்ற உற்பத்தி ஏற்படுகையில் ஒவ்வொரு படைப்பாளியும் சாதிகளைக் கடந்து கீழ்சாதிக்காரனாய், தலித்தாக மாற்றமடைகின்றான். சாதி அடையாளத்தைக் கடக்காதவன், ஊடுருவமாய் மாறாதவன் எழுத்தாளனாய் மாறுவதில்லை. சாதியைச் சொல்லி ஆள் சேர்க்க முடியும் அவ்வளவு தான் என்று தமிழவன், 'படைப்புப் பிராமணீயம் - அசோகமித்திரன் - மொழித்தள விரிவு' (கனவு - அசோகமித்திரன் சிறப்பிதழ்) என்னும் கட்டுரையில் குறிப்பிடுகிறார். இதையே "பறை - 90" ம் பறையறிவித்திருக்கிறது. "தமிழர் கண்ணோட்டத்திற்கு எழுதிய கடிதங்களில் திருமால்வளவனும், உஞ்சைராசனும் "தலித்தல்லாதவரின் தலித் உணர்வு" பற்றிப் பேசுகிறார்கள். அ. மார்க்ஸும், ரவிக்குமாரும் நிறப்பிரிகையில் அதே கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

எனினும், "செருப்புப் போட்டவனுக்குத் தான் அது எங்கே கடிக்கும் என்று புரியும்" என்றும், வாழ்க்கையும், வாழ்க்கை பற்றிய உணர்வும் ஒன்றாகிவிடாது என்றும் சிலர் பேசுகிறார்கள். "லயம்" பத்திரிக்கையில் பிரேமிளின் பேட்டி இந்த வாதத்தை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது. தலித் இலக்கியத்தைச் சாதியால் அடையாளப்படுத்த வேண்டிய அவசியமில்லையெனினும் "தலித் எழுத்தாளர்கள்" எனப் பிறப்பால் தலித் எழுத்தாளர்களையே நிறப்பிரிகையும் அடையாளம் கண்டிருக்கிறது. எனவே, தலித் இலக்கியத்தையே கூட சுயமுக ஓவியமாகவும், பரமுக ஓவியமாகவும் காண வேண்டிய அவசியமிருப்பதாகப் படுகிறது. இல்லையெனில், புதுமைப்பித்தனும், ந. பிச்சமூர்த்தியும், சிவராம் கரந்தும் கூட தலித் எழுத்தாளர்களாகி விடுவார்கள். இது தலித் இலக்கியத்தைச் சில சிந்தனைகளின் வளர்ச்சியாகக் கருதாமல் புத்தரின் காலத்திலேயே தோன்றிவிட்ட ஒன்றாகக் கருதும் நிலைக்கு எடுத்துச் செல்லும். மேலும், இயக்கமும், போராட்டமும் சம்பந்தப்பட்ட இலக்கியம் இந்தக் காலத்தின் தேவையாக, சமுதாய மாறுதலை என்றென்றும் கோரும் இயக்கமாக பார்க்கப்படாது தலித் இலக்கிய நோக்கையே புதிராக்கிவிடக் கூடும்.

தலித் உணர்வு கொண்டவர்களும், செருப்புப் போட்டவனுக்குத்தான் அது எங்கே கடிக்கிறது என்ற வாதத்தை வைப்பவர்களும் ஒருவருக்கொருவர்

நெருக்கமானவர்களே என்றாலும் "தலித்" என்னும் சொல் தாழ்த்தப்பட்ட சாதிகளனைத்தையும் சாதியால் பிரிக்காமல் அவைகளை ஒன்றிணைக்கும் வசதிக்காகத் தோன்றிய சொல் என்று கருதவும் வாய்ப்புண்டு. தலித் என்பது வெறும் உணர்வு மட்டுமல்ல. அது வாழ்க்கை முறையும் கூட. படைப்பு, படைப்பாளி, வாழ்க்கை இவை யாவுமே "தலித்"தோடு நெருங்கிய தொடர்புள்ளதாக இருக்கவேண்டும். தலித் என்ற சொல்லாடலில் மரபு தெளித்துவிட்ட கீழ்மையைப் பிறப்பால் தலித்தான அனைவரும் சுமந்து வருகிறார்கள். "உணர்வு" என்ற சொல் "வாழ்க்கை"யை முழுதுமாக பிரதிபலிக்குமாவென இந்த வார்த்தைகளை மாற்றிப் போட விரும்புவோர் எண்ணிப் பார்க்க வேண்டும். இன்று தலித்துடன் இணைந்து போராடுபவர்களே தலித் உணர்வு கொண்டவர்கள். இம்மட்டில் தலித், தலித் உணர்வு, தலித் இலக்கியம் இவற்றை அர்த்தப்படுத்திக் கொள்ளுதல் நல்லது.

எதிர்ப்பிலக்கியமும் தலித் இலக்கிய நோக்கும்

எதிர்ப்பை வெளிப்படுத்துவதுதான் போராளியான ஒரு படைப்பாளியின் செயல்பாடு (கிழக்கில் டென்னிஸ் புருடஸ்). வரலாற்றைப் புராணமாக்கிப் பார்க்கும் மேல் வர்க்கத்தின் மரபுகளில் இலக்கியம் என்பதும் இலக்கியத்தரம் என்பதும் அவர்களைப் பற்றிய களமாகவே இருந்து வந்திருக்கிறது. சாதீயமும் அவர்கள் அரசியலும் ஒன்றாகவேயிருந்தது. அவர்கள் எதிர்ப்பு என்று சொல்லிக் கொண்டதெல்லாம் வெகுசனக் கலாச்சாரத்தை, வணிகமயமாதலை எதிர்த்ததைத்தான். மார்க்ஸியவாதிகளும், வர்க்கப் போராட்டத்தை முன்னிறுத்திச் சாதீயக் கூறுகள் பற்றிப் பேச மறுத்தார்கள். திராவிட இயக்கத்தினரும் எதிர்ப்பு என்பதைத் தமிழின் தொன்மையை நிறுவுதல், கடவுள் எதிர்ப்பு என்பதாகத் தான் அர்த்தப்படுத்தினார்கள். சிறுபான்மையினரின் கட்டுக்குள்ளிருக்கும் பொருளாதார, சமூக அமைப்புக்கு எதிராக, மரபு இலக்கியப் பாரம்பரியங்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் படைப்புக்களே எதிர்ப்பிலக்கியம். முன்னவை முற்றான எதிர்ப்பிலக்கியங்கள் அல்லவெனினும் அவற்றின் பங்களிப்பு கணிசமானது. அவை நமது கவனத்தைச் சமகாலப் பிரச்னைகள் மீது திருப்பியிருந்தன. ஓரளவு நமது சிந்தனைப் போக்கையும் பாதித்தன.

எதிர்ப்பிலக்கியம் என்பது உடன்பாட்டு முறையில் மனிதன் பின்பற்றக்கூடிய இலட்சியங்கள் எதுவுமே இல்லை. எவ்விதத் தர அளவுகோல்களும் மதிப்புகளும் இல்லை என்னும் சூன்யவாதச் சிந்தனையை முன்வைக்குமா? அல்லது மனிதன் சுய விருப்பும், சுதந்திரமும் உடையவன், கலை இலக்கியங்கள் யாவும் சுய ஆற்றலுடைய மனிதனின் தனித்த அனுபவ வெளிப்பாடுகளே என்று, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைச் சீர்திருத்தங்களால் சரிப்படுத்த இயலும் எனும்

மனிதநேயக் கோட்பாட்டை முன்வைக்குமா? அல்லது இம்மனிதநேயக் கோட்பாட்டினைக் கடுமையாக எதிர்க்கும் அமைப்புமைய வாதத்தையும் பின் அமைப்பியலையும் முன்வைக்குமா? அல்லது கட்டுப்பாடற்ற பகுத்தறிவுக் கெதிரான படைப்பியக்கம், இயற்கைச்சார்பு, விடுதலை-நோக்கு இவையடங்கிய ரொமான்டிஸிஸத்தை முன்வைக்குமா? இக்கேள்விகளுக்குப் பதிலாக ஒன்றை மட்டும், மரபுவழி வந்த மதிப்பீடுகளைப் புறக்கணிப்பது எதிர்க்கலாச்சாரம். ஏனெனில், இந்த மதிப்பீடுகள் நம்மீது திணிக்கப்பட்டுக் காலப்போக்கில் ஏற்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் என்றாலும் இவை நாமே விரும்பி ஏற்றுக் கொண்டவையோ, விஞ்ஞான முறையில் நாமே தேர்ந்தெடுத்து வளர்த்துக் கொண்டவையோ அல்ல. இவை அதிகாரத்திலுள்ளவர், அதிகாரத்தை நிலைநிறுத்தும் பொருட்டும், தமது பொருளைப் பாதுகாத்து மேலும் வளர்த்தெடுக்கும் முயற்சியாலும் பெரும்பான்மையினர் மீது சுமத்தியவை. இவை மரபு என்றும் புனிதம் என்றும் கேள்விகளுக்கப்பாற்பட்டது என்றும் சொல்லப்பட்டு வழிவழியாகப் போற்றப்பட்டு வந்துள்ளன. இவற்றுக்கெதிராக அல்லது இவற்றைப் புறக்கணித்துப் பெரும்பான்மை மக்கள் தமது கலாச்சார வேர்களைக் கண்டெடுத்து, தம்மை முற்றிலும் சுதந்திர மனிதர்களாகக் கட்டமைத்துக் கொள்ளும் முயற்சியே எதிர்ப்பிலக்கியமெனில், தலித் இலக்கியம் இன்று எதிர்ப்பிலக்கியம்.

படைப்பாளி பொதுவாகவே சமூகம் தன்மீது திணித்துள்ள இக்கட்டுப்பாடுகளைப் பற்றிய கேள்விகள் உடையவனாகவே இருக்கிறான். வாழ்க்கைத் தேவைகளினாலும், நெருக்கடிகளினாலும் இது பற்றிய கேள்விகளைப் புறந்தள்ளி வாழ்ந்து தீரவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறான். மீறல்கள் படைப்பாகின்றன. இன்றைய படைப்பாளி, பார்ப்பனீய மதிப்பீடுகளிலிருந்து முற்றிலும் விடுபடமுடியாது எனினும் பிரக்ஞைபூர்வமாகச் செயல்படுகையில் இது சாத்தியமாகும். ஆனால், பார்ப்பனீய மதிப்பீடுகளை முற்றிலும் புறந்தள்ளுகிறோம் என்ற பேரில் ஆமாம் என்றால் இல்லை என்றோ, இல்லை என்றால் ஆமாம் என்று கூறுவதோ விஞ்ஞான அணுகுமுறையாகாது. எதிர்க்கலாச்சாரக் கூறுகளைக் கண்டடைந்து, அது தலித் விடுதலைக்கு எங்ஙனம் சாத்தியமாகும் என்று ஆராய்ந்தறிவதே விஞ்ஞான அணுகுமுறையாகும். இதையே ராஜ்கௌதமனும் தனது 'தலித் பண்பாடு' என்னும் நூலில் குறிப்பிடுகிறார் (ராஜ்கௌதமன் பக். 31).

எதிர்ப்பு இலக்கியம் என மகாராஷ்டிர மாநிலத்தில் சத்யகதா இலக்கிய இதழை எரித்தது போலவே இங்கு "இந்தியா டுடே"வை மலம் துடைத்துப் போட்டார்கள். மகாராஷ்டிரத்தில் தலித் இலக்கிய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் ஓடும் பேருந்திலும், கழிவறைகளிலும் கவியரங்குகள் நடத்தியதைப் போலவே

இங்கும் சில முயற்சிகள் நடந்துள்ளன. இவ்வகையான எதிர்ப்பு சில சமயங்களில் தேவைப்பட்டாலும், இது ஒருங்கிணைக்கப்பட்ட போராட்டத்தின் ஒரு வடிவமாக இருக்கவேண்டுமேயன்றி அந்த நேரத்துக்கு மட்டுமான திடீர் வெளிப்பாடாக இருக்கக்கூடாது. அம்மாதிரியான திடீர் வெளிப்பாடுகள் சிறிய சலசலப்பை உண்டாக்கும். கூட்டம் சேர்க்கும். அவ்வளவுதான்.

எல்லாக் கலை இலக்கியங்களின் நோக்கமும் மனிதனைச் சாந்த நிலைப்படுத்துவதாகவே இருக்கிறது, அல்லது, அதைநோக்கிய முயற்சியாகவும் கொள்ளலாம். வாழ்க்கை நிகழ்வுகளை வரலாறு, மரபுகளோடு இணைத்துப் பார்த்து வாழ்வின் அர்த்தத்தை இருப்புக்கான நியாயங்களைத் தேடுவதும், தன்னைத் தளர்த்தி சுதந்திரமாக்கிக் கொள்ளவும், தன் அனுபவங்களை, உள்வாங்கிய பிறரின் அனுபவங்களைப் புனைவுகளாக்கி, ஒழுங்காகவோ, ஒழுங்கற்றோ அடுக்கிப் பார்த்துத் தன்னை/பிறரைச் சகல ஒடுக்குமுறையிலிருந்தும் விடுவித்துக் கொள்ளவும் படைப்பாளி விழைகிறான். அனுபவப் பகிர்தலில், தான் முன்கூட்டியே செய்த முடிவுகளுக்காக அல்லது மரபின் மதிப்பீடுகளிலிருந்து விலகமுடியாத நிலையில் தன்முனைப்பு, சுயலாபங்கருதி நிகழ்வுகளைத் திருத்தி, திரித்து எழுதுவதால் இலக்கியம் நேர்மை இழந்து போகிறது. அங்கே வாசகராகிய நாமும் பிடிப்பற்று, பிரதியை வாழ்க்கையாகப் பாவிக்காமல் பிரதியாகக் காணுகிறோம். தலித் இலக்கியம் என்பது இலக்கிய நேர்மையைக் கொள்ளுமிடத்து அதன் உன்னத நிலைமையை அடையும். அந்த வகையில் தலித் இலக்கியம் தான் "உண்மையான பிரபஞ்சம் சம்பந்தமுள்ள இலக்கியமாக" இருக்கும்.

தலித்-இலக்கிய வாசிப்பும் விமரிசனமும்

தலித் இலக்கியம் பற்றிய வரலாறு தெரியாமல், குறைந்தபட்சம் புரிதலும் இல்லாமல் சாதிப்பெயரைக் கண்ணுற்ற மாத்திரத்திலேயே அல்லது படைப்பாளியின் சாதி தெரிய வந்ததுமே படைப்புக்கு தலித் முத்திரை குத்திவிடும் மேதாவிலாசம் பொருந்திய பல விமரிசகர்கள் எழுந்துள்ளார்கள். தலித் இலக்கியத்தை விமரிசனம் செய்பவர்கள் அதன் இலக்கியத் தன்மை குறித்துப் பேசும்போது அதற்கெனத் தனியான அளவுகோல் இருப்பதாகவும் பேசி வருகிறார்கள். வடிவமோ உத்தியோ மட்டும் ஒரு படைப்பை இலக்கியத்தரமாக்கி விடாது. காயடிக்கப்பட்ட உள்ளடக்கம், மிகச் சிறந்த வடிவத்தையும் உத்தியையும் கூட தூக்கி எறிந்து விடும். புதிய உள்ளடக்கம் அதற்கே உரிய வடிவத்தையும், உத்தியையும் உருவாக்கிக் கொள்ளும். தலித் இலக்கியத்துக்கான தனி மதிப்பீடுகள், தர நிர்ணயங்கள் எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை. மாறாக, இதுகாறும் சிலவற்றை இலக்கியம் என்று போற்றி வந்தவர்களுக்கு தலித் இலக்கியம் அதன் எதிர்க்கலாச்சார, எதிர்மறுப்பு வாதத்தால், மொழிப்பிரயோகங்களால் அதிர்ச்சியை

ஏற்படுத்தியிருக்கிறது. அதை உள்வாங்கிக் கொள்ள சிரமப்படுபவர்களும், அதன் வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த முடியாதவர்களும் விமரிசனம் செய்யப் புகுந்ததன் விளைவாகத் தலித் இலக்கியம் இலக்கியத் தன்மையற்றது என்றும் அதற்கெனத் தனி அளவுகோல்கள் தேவையாயிருக்கிறது என்றும் விமரிசனம் செய்ய நேர்ந்தது. கடந்த பத்து பதினைந்து வருடங்களில் தலித் இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க படைப்புகள் வந்துள்ளன என்றாலும் உயர்வகை இலக்கியம் (Masterpiece) இனிமேல்தான் வரவேண்டும். வாழ்க்கை அனுபவங்களோடு, வாழ்க்கைப் பற்றிய புரிந்துணர்வு, சமூக அக்கறை, எழுத்துப்பயிற்சி இவற்றுடன் படைப்பாளிகள் தமிழில் இதுகாரும் வரப்பெறாத நவீனங்கள் படைப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

தலித் அழகியல்

சிறு பத்திரிக்கைகளிலும் இலக்கிய ஏடுகளிலும் பிராமண அழகியல், தலித் அழகியல் என்ற சொற்பிரயோகங்களைக் காண்பது சர்வசாதாரணமாயிருக்கிறது. தலித் அழகியல் என்பது பிராமண அழகியலின் மறுப்பு என்பதாகக் கொள்ளப்படவேண்டும். பால் போன்ற தேகம், மென்மையான விரல்கள் என்பவற்றிற்கு எதிராக மினுக்கும் கறுப்பு, உழைப்பால் உறுதியான கைகள் என்று குணாம்சப்படுத்துவதைச் சாதிவாரியான அழகியலாகப் பார்ப்பது வக்கிரமான பார்வையே. மண்ணில் உழைப்பவர்களை அழகற்றறவர்களாய்ப் பார்ப்பது உடல் உழைப்பு, மூளை உழைப்புக்கெனத் தனித்தனியாக நாம் கொண்டிருக்கும் மதிப்பீடுகள் பற்றியது. தலித் இலக்கியம் அழகியல் என்பதற்கான களத்தை விரிவுபடுத்தியுள்ளது. ஏற்கனவே நிலவிவந்த அழகியல் பற்றிய கருத்துக்களைச் சிதைத்துள்ளது. அழகு பொருளில் மட்டும் இல்லை. பார்வையாளரின் கருத்தியலோடும் கலந்தது. தலித்களுடைய உணர்வுகள், பேச்சு மொழி, வாழ்க்கை முறை ஆகியவை கலைநேர்த்தியோடு வெளிப்படும்போது அதை தலித் அழகியல் எனக் கொள்ளலாம்.

தலித் இலக்கியமும், அமைப்பியல்வாதமும்

தலித் வகுப்பினர் இன்று எதைப்பற்றி எழுதினாலும் அவை தலித் எழுத்துக்கள் என முத்திரை குத்தப்படுகின்றன. இதில் அமைப்பியல் வாதத்தின் பங்கு உண்டு. அமைப்பியல்வாதம் விமரிசகரில் மிக ஆழமாக வேலைசெய்கிறது. வரலாறு, மரபு, உண்ணுகின்ற உணவு, சார்ந்திருக்கும் வர்க்கம், சாதி முதலானவை மனிதனைக் கட்டமைக்கின்றன. ஒரு நவீனத்தில் சாதிரீதி, மதரீதியான கருத்து கதை சொல்லியின் மூலமாக எங்கேனும் வெளிப்படுகிறது. இலக்கிய வாசகர்களை, அவர்களின் பின்னணியைக் கருத்தில் கொண்டு, கதை சொல்லி தன் கருத்துக்களை

மாற்றிச் சொல்லி விட முடியும். "ஓர் ஒழுங்கமைவிலுள்ள, குறித்த உள்ளடக்கத்தை அல்லது அர்த்தத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, அதனடியிலிருக்கின்ற ஆழமான குறிகள், இயங்குறுப்புகள், மரபுகள் போன்றவை எப்படி தனிப்பட்ட அர்த்தங்களை உருவாக்குகின்றன என்று காண்பது அமைப்பு மைய ஆய்வு". அதனுடைய கருதுகோள் (Hypothesis) "படைப்பாளிக்கு தன்னைச் சுற்றி நிகழும் காரியங்களையும், தன்னை இடைவிடாது பாதிக்கும் ஆழமான மரபுகளையும், சமூகச் செயல்முறைகளையும் பிரக்ஞையில் வைத்திருப்பது சாத்தியமில்லை" என்று நம்புவதும், அது ஏதோ ஒரு வகையில் பிரதியில் வெளிப்படும் என்பதுமாகும். நண்பர்களுடன் பேசிக் கொள்ள ஆங்கிலம், குடும்பத்துடன் பேச உடைந்த தமிழ், வேலைக்காரர்களுக்கான மாற்றிக் கொண்ட தொனியிலும், சொற்களாலுமானது பெரும்பாலான படைப்பாளிகளின் மொழி, ஒரு கதாபாத்திரத்தை அவர் என்றும், அவன் என்றும் எழுதும் போதும் படைப்பாளி என்ன கருதுகோள்களை மனதில் கொண்டவராயிருக்கிறார் என்று சோதித்தறிந்தாலே போதுமானது. சாதீயக் கூறுகளை ஏற்று மண உறவுமுறையில் கெட்டித்துப்போன பின்புலம் கொண்ட படைப்பாளிகளின் சாதீயக் கூறுகளை அமைப்பு மையவாதம் சுலபமாக அடையாளங் கொண்டுவிடும். வேண்டுமானால் தலித் சார்புநிலை எடுக்கலாம்.

தலித் இயக்கமும் இலக்கியமும்

கலைப்பணியில், இலக்கியப்பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் தனித்துவம் அல்லது இலக்கியச் சுதந்திரம் என்று சொல்வது வாழ்க்கையிலிருந்தும் சமூகத்திலிருந்தும் தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்வதாகாது. அதே சமயத்தில் அமைப்பு அல்லது இயக்கம் சார்ந்துதான் படைப்புக்கள் வரவேண்டும் என்ற வாதத்தையும் ஏற்றுக்கொள்ள இயலாது. மகாராஷ்டிர மாநிலத்திலும், கர்நாடக மாநிலத்திலும் தலித் எழுத்தாளர்களே தலித் இயக்கத்தினராகவு மிருந்திருக்கின்றனர் என்பதால் அதையே இங்கு வற்புறுத்த இயலாது.

இங்கே தலித் இயக்கத்தின் நோக்கம் எதிர்க்கலாச்சாரமும், சமூக ஒழுங்கமைவுகளைக் குலைப்பதும், தலித் விடுதலையுமாகும் என்றாலும், ஒடுக்கப்பட்ட தனிநபரை அல்லது கூட்டத்தை, உன்னதமானவர்களாய்ப் படைத்து, எதிராளியைத் துர்க்குணங்களின் இருப்பிடமாகக் காட்டுவது முறையாகுமா? தலித் இயக்கத்தின் நோக்கம் அதிகாரத்தை வன்முறையில் கைப்பற்றி எதற்காகப் போராடுகிறோமோ பின் அதுவே அவநிலையாகும்போது, இலக்கியக் கருதுகோளும் அதுவேயாகுமா? அல்லது தலித் இயக்கம் என்பது அரசியல் செயல்பாடு என்றும் தலித் இலக்கியம் இயக்கம் சாராதது என்றும் சொல்லமுடியுமா? சித்தலிங்கையா நிறப்பிரிகைக்கு அளித்த நேர்காணலில்

சொல்லியது மனங்கொள்ளத்தக்கதாக இருக்கிறது. "எழுதுவது எதுவாகயிருந்தாலும் அது இலக்கியமாக இருக்கவேண்டும். முத்திரை குத்திக்கொண்டு எழுதுவதே தலித் இயக்கத்தை ஒரு எல்லைக்குள் சுருக்கிவிடும். இப்போது எதிர்ப்புக்கவிதை எழுதப்போகிறேன் என்றோ, ஒரு காதல் கவிதை எழுதப் போகிறேன் என்றோ உட்கார்ந்து எழுதமுடியாது. எழுதினாலும் அதில் எதிர்ப்பும் இருக்காது; காதலும் இருக்காது" ஒருவகையில் எதிர்ப்பைத் தெரிவிக்கும் படைப்பாளி எவருமே போராளிதான். எனினும், தனித்த நிலைகளில் சில முரண்களை எதிர்கொள்ள வாய்ப்புண்டு.

உதாரணமாக, தலித் இய்க்கமானது தலித்துக்களின் மெய்க்காப்பாளன் போல் ஒருவித பாதுகாப்புத்தன்மையுடன் செயல்படும்போது, தலித் இலக்கியம் அனைத்துத் தளங்களிலும் பாதுகாப்புத் தன்மையைத் தயக்கமின்றி உதறியெறிந்து தலித்களைச் சுயவிமர்சனத்துக்கு உட்படச் செய்யும். இது பார்ப்பனியவாதிகளுக்கு உவப்பாயிருக்கும். இலக்கியத்தரமுள்ளது எனக் கொண்டாடுவார்கள். அதன் இலக்கிய நேர்மையைப் புகழ்வார்கள். தாங்கள் உள்ளூற விரும்பிக் கொண்டிருந்த, பல்வேறு காரணங்களுக்காகத் தாம் செய்ய இயலாததைத் 'தலித்'தே செய்ய நேர்ந்தது குறித்து படைப்பாளியை ஒற்றையாய் தூக்கிப் பிடிக்க முயல்வார்கள். இயக்கம் சார்ந்த தலித்துகள் அப்படி மேல்சாதிக்காரர்கள் பாராட்டுவதாலேயே அதைத் தலித் இயக்கம் என ஒப்புக் கொள்ளமாட்டார்கள். படைப்பாளனையே தலித்தல்ல எனத் தனிமைப்படுத்த முயற்சிப்பார்கள். இத்தகைய அரசியல் செயல்பாடுகளைத் தலித் இலக்கியம் எதிர்கொள்ள நேரும். இதைப் படைப்பாளிகள் புரிந்து கொள்ள வேண்டும். தலித் இலக்கியம் என்பதை இப்படித்தான் எழுதவேண்டும் என்று யார் வரையறுக்க நினைத்தாலும் அந்தக் கட்டுப்பாடுகளைத் தலித் இயக்கம் தகர்க்கும். அது தலித் இயக்கம் என்ற அமைப்பாக இருந்தாலும் கூட

இன்று படித்த, பொருளாதார ரீதியில் முதல் தலைமுறையாக ஓரளவு முன்னேறிய தலித்துகளை "தலித்" உணர்வற்றவர்கள் அல்லது பார்ப்பனீய மதிப்பீடுகள் கொண்டவர்கள் என்று கூறும் அவர்களைத் தலித்தல்ல என நிராகரிக்கும் போக்கும், அவ்விடங்களில் சாதீய அடுக்குமுறையில் மேல்தட்டிலுள்ள படித்த, தலித் உணர்வு கொண்டவர்கள் என்பவர்களால் இட்டு நிரப்பும் போக்கும் தென்படுகிறது. இது தலித் இயக்கத்திலிருந்து சாதீயக் கூறுகளை முற்றிலும் அகற்றிவிடும் போக்காகாதா? பிறப்பால் "தலித்" தான் யாரும் இன்றைய சமுதாயம் "தலித்" தோடு இணைத்துள்ள கீழ்மைகளிலிருந்து அவர்களே விரும்பினாலும் துண்டித்துக் கொள்ளமுடியாது. மேலும் ஒடுக்குமுறை என்பது வெவ்வேறு நிலைகளில், வெவ்வேறு மட்டங்களில் நிகழ்கிறது. தாழ்த்தப்பட்ட

பிராமணர்கள், தலித் எலிடிஸ்டுகள் என்ற பிரயோகங்கள் இருக்கும் எண்ணிக்கையைவிட, அதன் உக்கிரத்தைவிட அதைக் கூடுதலாக்கிப் பார்க்கும் முயற்சியாகவே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். தலித் இயக்கமும் இலக்கியமும் படித்த இளைஞர்களைத்தான் போராட்டத்திற்குத் தயார் செய்து கொண்டிருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. இலக்கியத்தைக் கிராமத்திற்கு, அதன்வேர்களுக்குச் சென்று சேர்க்கும் இயக்கம் இவர்கள் மூலமாகத்தான் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். இன்னுமொன்று, தலித் இலக்கியம் என்பது கட்சி அரசியலாகி "தோழர்" கதையாகிவிடக் கூடாது, அதேபோல் தலித் இல்க்கியமும் தலித் இயக்கத்தின் கட்சி பிரகடனமாக விடக்கூடாது.

இன்று மாற்றுக் கலாச்சாரம் பேசும் யாரும் சிறுசிறுவகையில் சமூக ஒழுங்கமைப்பைக் குலைப்பவர்கள் தாம். அதேசமயத்தில், இதிலிருந்து முற்றிலும் விடுபடமுடியாதவர்களாயிருக்கிறார்கள் என்பதையும் கவனத்திலிருத்திக் கொள்ளவேண்டும். தலித் இயக்கத்தைச் சார்ந்து சார்புநிலையில் "குடும்பத்" தை இலக்கியத்தில் மட்டும் கொன்று வீரப்பதக்கம் வாங்கிக் கொள்ள நினைக்கும் இலக்கியவாதிகள் நிறையத் தோன்றுவார்கள். அவர்களின் பட்டியலைத் தலித் இயக்கம் கூட வெளியிட்டுப் பெருமை கொள்ளக் கூடும்.

மேலது கீழாகவும், கீழது மேலாகவும் புரட்டிப் போடும் கிளர்ச்சி மையவாதம் தலித் இயக்கத்தின் கருத்துருவாக்கமெனினும், "இடைநிலை"பற்றிய திட்டமிடுதல் அவசியமே. சாதி ஒழிப்பு என்பது 'இடைநிலை'யில் சாதிகளின் சமத்துவம் என்பதாகப் பார்க்கப்படவேண்டும். பொருளாதார ரீதியாக, தலித்துகளின் முன்னேற்றம் குறித்த செயல்திட்டம் கொண்டதாக இருக்கவேண்டும். கல்விமுறையில் சீர்திருத்தமும், தலித்துகளின் கட்டாயக் கல்வியும் இணைத்துப் பார்க்கப்பட வேண்டும். தனியார் மயமாக்கத்துக்கு எதிர்ப்பு, தனியார் துறைகளில் ஒதுக்கீடு பற்றியும் விவாதம் செய்ய வேண்டும். அப்படியில்லையெனில், இது மக்கள் சாராத இயக்கமாக, தலித் அறிவு ஜீவிகளின் இயக்கமாகச் சுருங்கிவிட வாய்ப்புகளுண்டு. தலித் இயக்கத்தின் இத்தகைய செயல்பாடுகளைப் பற்றிய மனந்திறந்த விமர்சனமாய் இலக்கியப் படைப்புகள் வரவேண்டும். எனவே, தலித் இலக்கியமே ஒரு அரசியல் செயல்பாடு என்றாலுங்கூட தலித் இயக்கத்தின் அரசியல் சட்டகங்களுக்குள் மட்டுமே அது அடங்கிவிடாது.

தலித்களில் பார்ப்பனீயச் செயல்பாடு

சாதி ஒழிப்பு பற்றி அம்பேத்கர் அவர்கள் கூறுகிறார், "நாடுகள் எப்படி தன்னலங்கருதி வாழ முற்படுகின்றனவோ அதுபோலவே பல்வேறு சாதிகளும் தன்னலங்கருதி தமக்குள் உறவின்றித் தனித்து வாழ முற்படுகின்றன. இந்தத்

தன்மைதான் சாதிகளிடமுள்ள சமூக விரோத மனப்பான்மையாக இருக்கிறது. இந்தத் தன்னல மனப்பான்மை அனைத்துச் சாதிகளிலும் இருக்கிறது .... இந்துக்கள் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த கதம்பமாக மட்டும் இருக்கவில்லை; தம் சொந்த நலன்களுக்காக மட்டுமே வாழும் - பரஸ்பரம் போட்டி மனப்பான்மை கொண்ட கூட்டங்களாகவும் உள்ளனர்".

அம்பேத்கரின் இப்புரிதல்தான் தலித்களுள் இயங்கும் பார்ப்பனீயச் செயல்பாடு குறித்த விளக்கமாயிருக்கிறது. பள்ளன், பறையன், சக்கிலி, இன்ன பிறரிடையே உள்ள குழு மனப்பான்மையும், ஒற்றுமையின்மையும், மிகச் சொற்பமான எண்ணிக்கைக் கொண்டோர் மீதான மிக நுட்பமான ஒடுக்குமுறையையும் தலித்கள் மறுக்க முடியாது. இது தலித்களுக்கு பார்ப்பனீயத்தின் கொடை. கிராமப் பொருளாதாரமும், கிராமச் சமுதாயக் கட்டுக் கோப்புகளும் இதை மேலும் வளர்க்கின்றன. தொழில்மயமாதலும், நகர வாழ்க்கையும் இந்தக் கட்டுக்கோப்பைக் குலைக்கும் அம்சங்கள். கலாச்சார வேர்களைக் கண்டறிவதும், விழிப்புணர்வும், இயக்கம் சார்ந்த வாழ்க்கை மட்டுமே தலித்களிடமும் பிறரிடமுள்ள பார்ப்பனீயச் செயல்பாடுகளை முற்றிலும் அகற்றிவிடும் என்பது கேள்விக்குறியாகவே இருக்கிறது. தலித் கலாச்சாரம் என்ற தேடல் முயற்சியில் பேசும் மொழியாலும், தொழிலாலும் வேறுபட்டுள்ள தலித் இனங்களின் ஒருங்கிணைப்பைப் பணயம் வைத்துவிடக் கூடாது. அது தலித்களை ஒருங்கிணைக்கும் முயற்சியாக மட்டுமே இருக்க வேண்டும். இது மதரீதியாகப் பிரிந்திருப்பவர்களையும் இயக்கத்தில் இணைக்கும் முயற்சியாகவும் இருக்க வேண்டும்.

தலித் இலக்கியமும் பெண்ணியமும்

பிறப்பால் ஒடுக்கப்பட்டவர்கள் தலித்களும், பெண்களும். மனிதகுலத்தின் மீதான சகல ஒடுக்குமுறைகளிலிருந்தும் அதனை விடுவிப்பதை நோக்கமாகக் கொண்டது தலித் இலக்கியம். ஆதிக்க சக்திகளின் ஒடுக்குமுறைக் கருவிகளான நிறுவனங்கள் யாவற்றையும் இது கேள்விக்குள்ளாக்கும். சொல்லப்போனால் தலித் இலக்கியம் என்பது மரபுவழியான இறுகிப்போன நிறுவனங்களுக்கெதிரான பெண்ணியக் குரலே.

இன்றுள்ள பெண்ணியக் கோட்பாடுகள் பலவும் மேலைநாட்டில் தோன்றியவையே. மேலைநாடுகளிலும்கூட பரிசோதனை முயற்சிக்கும் - தவறுக்குமான சோதனைக்களமாகவே பெண்ணியச் சிந்தனை நிலவி வருகிறது. வேலைப் பாகுபாடு, தனிச் சொத்துரிமை, தந்தை வழிச் சமூகம், பெண் ஒடுக்குமுறையின் வரலாற்றுக் காரணங்கள், தனிச் சொத்துரிமையற்ற சோஷலிஸ

சமுதாயத்தில் ஒடுக்குமுறையின் கள ஆயுதமான குடும்பம் இல்லாது உதிர்ந்துவிடும் என்ற மார்க்ஸிய சித்தாந்தம் ரஷ்ய மண்ணிலேயே வேரூன்ற முடியாமல் போனது. பொருளாதார சுதந்திரம், மற்றும் மேம்போக்கான சீர்திருத்தங்கள் மட்டுமே பெண்ணை ஒடுக்குமுறையிலிருந்து விடுவித்துவிட முடியாது என்பது நாம் அனுபவத்தில் காணும் உண்மை. தலித் இலக்கியத்தின் பெண்ணியக் கோட்பாடு என்பது ஆண் பெண் சமத்துவம் என்பதற்கும் அப்பால் "பால்பேத உணர்வற்ற உயிரி" எனக் கருதும் சுதந்திர நிலையாகும். இந்த நிலைக்கு இட்டுச் செல்ல, மரபு விதித்துள்ள ஆண், பெண் பற்றிய அடிப்படையான கருத்துருவாக்கங்களைச் சிதைப்பது முன் நிபந்தனையாகும். ஒரு ஆண் தன்னைப் பெண்ணாகவும், பெண் தன்னை ஆணாகவும் கருதிக்கொள்ள இயலுமா? ஆண் பெண் பற்றிய புதிய கருத்துருக்களை உருவாக்கியும், மறுக்கப்பட்ட பாலுறவுகளை முன்வைத்தும் இது சாத்தியமாகும் என்கின்றனர் சிலர். குழந்தைப்பேறு என்பது பெண்களுக்கு மட்டும் பிரத்யேகமானது. குழந்தை வளர்ப்பு என்பதும் இன்றுவரை தீர்வுகாண முடியாத சிக்கல்கள் நிறைந்ததாகவே உள்ளது. எனவே, பெண்களுக்கு மட்டும் பிரத்யேகமான குழந்தைப்பேறு என்பதை அவர்களுக்குச் சாதகமான ஒன்றாக வளர்த்தெடுப்பது எப்படி என்பதைப் பற்றியும், குழந்தை வளர்ப்புப் பற்றியும் தீர்வுகளை நோக்கிய ஆய்வு அவசியமாகிறது. தலித் இயக்கம் என்பது ஒடுக்கப்பட்டோருக்கான இயக்கம் என்றால் அது பெண்களை முன்னிறுத்திய போராட்டமாகவே இருக்க முடியும். கட்சிக்குக் கலர் சேர்க்கும் விதமாகப் பெண்கள் பயன்படுத்தப்படுவதும், பெரிய கட்சிகளின் வால்களாக மாதர் அமைப்புக்கள் செயல்படுவதும் தலித் இயக்கமாக இருக்க முடியாது. பெண்கள் தலைமையில் அல்லது கூட்டுத் தலைமையில்தான் தலித் இயக்கம் செயல்படமுடியும் அல்லது வெற்றி பெறமுடியும் என்பது என் கருத்து.

தலித் இலக்கியத்தின் எதிர்காலம்

அர்ஜுன் தாங்ளே தலித் இலக்கியத்தின் எதிர்காலத்தைப் பற்றிச் சொல்லும்போது எத்தனைவகை இலக்கிய வடிவங்கள் தலித் இலக்கியத்தில் வந்துள்ளன என்ற அளவிற்கு அதன் வீச்சை சுருக்கிவிடக் கூடாதென்பார். நமது ஆய்வும், எத்தனை நாவல்கள், வடிவங்கள் அல்லது உத்திகள் என்ற அளவிலல்லாது சமூகமாற்றத்தை விரும்பும் இயக்கமாகத் தலித் இலக்கியத்தைப் பார்க்க வேண்டும். அதன் தாக்கம் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களையே இலக்கிய உலகிற்கு அதன் பங்களிப்பாகக் கணிக்க வேண்டும்.

இதைப் பெரும் இயக்கம் எனக் கருதாமல் இதனையும் நிறுவனமாக்கி அழித்தொழிக்கும் முயற்சிகள் எதிர்காலத்தில் நடக்கவும் கூடும். இதனால் இதன் தீவிரம் மட்டுப்படக் கூடும்.

சாதீயக் கூறுகளை முன்னிறுத்தினாலும் வர்க்க ஒடுக்குமுறைக்கு ஆளானவர்களும், மதரீதியாக ஒடுக்கப்பட்டவர்களும், பெண்களும் ஒடுக்கப்பட்டவர்களே என்பதால் தலித் இலக்கியக் களம் பரந்துபட்டது. அது வாழ்க்கையின் நடைமுறை யதார்த்தத்தைச் சமூகவியல் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கிறது. சுரண்டல் அமைப்பில் மதிப்பீடுகளை ஏற்றுக் கொள்ளாது, அறிவியல் அணுகுமுறையுடன் "உலக இலக்கியத்தின் புரட்சிகர கூறுகளோடு ஒடுக்கப்பட்டோரின் புரட்சிகர கூறுகள்" இணைந்து சுதந்திர மனிதனைப் புணரமைக்கும். எனவே, நவீன தமிழிலக்கியம் என்பது தலித் இலக்கியமாகத்தான் இருக்கமுடியும்

துணைநூற் பட்டியல்

அம்பேத்கர், 1990. சாதி ஒழிப்பு. கார்முகில் பதிப்பகம், மதுரை.

கேசவன், கோ. 1994 சமூக விடுதலையும் தாழ்த்தப்பட்டோரும். சரவணபாலு பதிப்பகம், விழுப்புரம்.

சிவத்தம்பி, கா. 1982. இலக்கியமும் கருத்து நிலையும். தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 5.

சுப்பிரமணியம், கலா (ஆசி.) லயம். 1994 ஜுன். பெரியார் அஞ்சல், சத்தியமங்கலம்.

சுவாமிநாதன், கோமல் (ஆசி). சுபமங்களா, 1992 இதழ்கள். ரஞ்சனி டிரஸ்ட், சென்னை.

ஞானி தமிழ் படைப்பியல் நோக்கில் திறனாய்வு.

டாங்ளே, அர்ஜுன், 1994. தலித் இலக்கியம் போக்கும் வரலாறும். தாமரைச் செல்வி பதிப்பகம், சென்னை.

தமிழவன், 1991. அமைப்பியல் வாதமும் இலக்கியமும்.

———— படைப்புப் பிராமணீயம் - அசோகமித்திரன் மொழித்தள விரிவு. கனவு (அசோகமித்திரன் சிறப்பிதழ்).

பூர்ணசந்திரன், க. 1991. அமைப்பு மைய வாதமும் பின் அமைப்பு வாதமும். நிகழ் வெளியீடு, கோயம்புத்தூர்.

ரவிக்குமார் (ஆசி.), நிறப்பிரிகை (இலக்கிய இணைப்பு) தலித் இலக்கியச் சிறப்பிதழ். நிறப்பிரிகை வெளியீட்டகம், கும்பகோணம்.

23

தமிழ்க் கவிதைகளில் தலித்தியம்

ப்ரதிபா ஜெயச்சந்திரன்

உலகில் தோன்றிய கருத்து ரீதியான எந்தவொரு விஷயமும் இந்தியாவிற்கு மிகத் தாமதமாக அதன் நீர்த்துப்போன தன்மையில் வந்து சேரும். தமிழ்நாட்டிற்கு அது மிகவும் தாமதமாகத்தான் வழக்கம் போல் வந்து சேரும். வெளிநாட்டு விஷயங்கள் மட்டுமல்ல, இந்தியாவின் வேறு மாநிலத்தில் தோன்றும் சர்ச்சைக்குரிய எந்த ஒரு கருத்தாக்கமும் அதேபோல் தாமதமாக வந்து சேரும். அப்படிப்பட்ட மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளில் ஒன்று தலித் இலக்கியத்தின் வருகை.

தலித் இலக்கியம் என்ற சொல்லாடல் மராட்டிய மாநிலத்தில் 1969-ஆம் ஆண்டிலேயே புழக்கத்திற்கு வந்துவிட்டது. இதுபோன்ற "போக்குகள்" குறித்த விஷயங்களைத் தீவிரமாக ஆராய்ந்து விவாதிப்பதற்குக் களன் அமைத்துக் கொடுக்கும் தமிழ்ச் சிறு பத்திரிக்கைகளே இப்போதுதான் தங்களின் சோம்பல் முறித்து இதுபற்றிய விவாதங்களை ஆரம்பித்து வைத்திருக்கின்றன.

முதலாவதாக, தலித் என்பவர் யார்? என்ற கேள்விக்கு கெய்ல் ஓம்வெத் கூறும் பதில், தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள், புதிய பௌத்தர்கள், உழைக்கும் மக்கள், நிலமற்றவர்கள், ஏழை விவசாயிகள், பெண்கள், அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மதத்தின் பெயராலும் சுரண்டப்படும் அனைவருமே தலித்துகள் தாம் என்பார். மேற்கூறிய விளக்கம் ஒரு பரந்துபட்ட எல்லையில் ஒரு அரசியல் ரீதியான அணி திரட்டலில் கூறப்பட்டாலும் தலித்துகள் என்போரைத் தீண்டத்தகாதவர்கள் அல்லது அரிசனங்கள் என்று வரையறுத்துவிடலாம்.

தலித் இலக்கிய இயக்கம், இன்று இந்தியாவின் அனைத்துப் பகுதியிலும் பரந்து அனைத்து மொழிகளிலும் செழிப்பாக வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு இயக்கமாகும். இருப்பினும், அது தோன்றிய இடம் மராட்டிய மாநிலம் தான்.

ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் பல்வேறு சமூக சீர்திருத்தவாதிகள் தோன்றினாலும் அவர்களின் சீர்திருத்தச் செயல்பாடுகளும், அவற்றிற்கான களங்களும் மேலாண்மைச் சமுதாயத்தின் சீர்திருத்தங்களை வலியுறுத்துவனவாக இருந்தன. பார்ப்பன சமுதாயத்திற்குள்ளாக இருந்த பால்யவிவாகம் போன்ற சீரழிவுக் கருத்தாக்கங்களே சீர்திருத்தத்தின் குறியாக அமைந்து அதன் எல்லைகள் குறுகிப் போயின. இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் தான் மகாத்மா ஜோதிபாபூலே (1828 முதல் 1890 வரை) என்னும் மாமனிதர் மதவாதிகளின் தொல்லைகளுக்கு உட்பட்டாலும், இந்து மதவாதக் கூட்டமைப்பை ஈவிரக்கமின்றி விமர்சித்துக் கடுமையாகச் சாடினார். இந்நாட்டின் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பெண்கள் மற்றும் தீண்டத்தகாதவர் ஆகியோர் அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கப்பட்டுத் தன்மானத்தோடு தலைநிமிர்ந்து வாழ்வதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தார். மகாத்மா பூலேயின் கருத்துக்களைப் பரவலாக்கி எடுத்துச் சென்றவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர் டாக்டர் பீமாராவ் இராம்ஜி அம்பேத்கர் ஆவார்.

தலித் இலக்கிய இயக்கத்தின் தோற்றம் குறித்துப் பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதன் முற்றான முடிவுகள் என்று எதனையும் அறுதியிட்டுச் சொல்லமுடியாத நிலையில், இவ்விலக்கிய இயக்கம் புத்தர் காலத்திலேயே தோன்றிவிட்டதாகச் சிலரும், 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கவி சொக்கமேளா என்பவர் தொடங்கி வைத்ததாகச் சிலரும், 1829 முதல் 90 வரை வாழ்ந்த மகாத்மா பூலே தொடங்கி வைத்ததாகச் சிலரும், 1886-க்கும் 1957-க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த பேராசிரியர் எஸ்.எம். மாதே தொடங்கி வைத்ததாகச் சிலரும் சொல்கின்றனர்.

ஆனால், இந்தக் காலக்கட்டங்களில் தலித் இலக்கியம் என்ற சொல்லாடல் புழக்கத்தில் இல்லை என்றாலும் 'ஒடுக்கப்பட்டோர்' என்ற பரந்த பொருளின் அடிப்படையில் எண்ணற்ற படைப்புகள் வெளிவந்தன. தலித் இலக்கியத்திற்கென்று டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பங்களிப்பு பெரும்பாலும் ஆங்கிலத்தில் இருந்தபோதிலும் அவரது மராத்திய எழுத்துப்பணி என்பது அவரது சொந்த இதழ்களான 'முக் நாயக்', "பஹிஷ்க்ருதீ ஜனதா" மற்றும் 'பிரபுத்த பாரத்' போன்றவற்றில் வெளியான கட்டுரைகளே. 1950-களின் தொடக்கத்தில், சித்தார்த்த இலக்கியச் சங்கம் என்னும் அமைப்பு "மராட்டிய மாநில தலித் இலக்கியச் சங்கமாக' உருக்கொண்டது. இந்தக் காலக்கட்டத்தில் மராட்டிய இலக்கிய உலகின் முடிசூடா மன்னர்களாகத் திகழ்ந்த வி.எஸ்.காண்டேகர், என்.எஸ்.பாட்கே போன்ற பார்ப்பன எழுத்தாளர்களின் தாக்கம் தலித் எழுத்தாளரிகளிடம் இருந்தது. தலித் எழுத்தாளர்கள் ஒடுக்கப்பட்டோரின் வாழ்க்கை முறைகளைக் கூறுவனவாக இருந்தபோதிலும், வி.எஸ். காண்டேகர், என்.எஸ்.பாட்கே போன்றோரின் பாணி

எழுத்துக்களை விட்டுக் கடந்து செல்ல முடியவில்லை. இந்த வேளையில் தான் அண்ணா பாஊசாதே-யின் எழுச்சி தோன்றியது. அப்போது தலித்துக்கள் தங்களின் படைப்புகளுக்குத் தனி இலக்கிய வடிவம் கொடுக்க வேண்டும் என்பதை உணரத் தொடங்கினர். சாதே, மாக்சிம் கார்க்கியின் எழுத்துக்களால் கவரப்பட்டு, அதன் மொழியடிப்படையிலான தகவுகளைக் கைக்கொண்டு, தன் வாழ்வனுபவங்களைப் படைப்பில் கொண்டு வந்தபோது அவரின் எழுத்துக்கள் செறிவோடு அமைந்தன. அவர் மராட்டிய இலக்கிய உலகில் தனித்த ஆசிருதியாகக் காட்சி தந்தார்.

1958-ல் ஒடுக்கப்பட்ட எழுத்தாளர்களின் முதல் மாநாடு கூட்டப்பட்டது. இது மராட்டிய தலித் இலக்கியப் போக்கின் மிக முக்கியமான நிகழ்ச்சியாகும்.

பந்து மாதவ், 1958-பிப்ரவரி 15-ஆம் நாள் 'பிரபுத்த பாரத்' இதழில் எழுதிய தனது கட்டுரையில் அத்தகைய ஒரு மாநாட்டின் தேவையையும் அதன் நோக்கத்தையும் விளக்குகிறார். 'லெனின் புரட்சிகரக் கருத்துக்களைத் தங்களது படைப்புகள் வழியாகப் பரப்பி ரஷ்ய புரட்சிக்கு ரஷ்ய எழுத்தாளர்கள் உதவியதைப் போலவே, நமது எழுத்தாளர்களும் டாக்டர் அம்பேத்கரின் தத்துவங்களைப் பட்டித் தொட்டிகளுக்கும் சென்றடையும்படி பரப்ப வேண்டும். அரசியல் என்பது எதிராளியைத் தாக்குவதற்கான வழிமுறைகளில் ஒன்று. அவ்வளவு தான். எல்லாத் திசைகளிலிருந்தும் நாம் தாக்குதல் தொடுக்காமல் போனால், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நம்மீது அநீதியை மட்டுமே சுமத்திக் கொண்டிருப்பவர்களை நம்மால் தோற்கடிக்க முடியாது" (டாங்ளே 1994:24).

இந்த மாநாட்டில், ஒடுக்கப்பட்டோர் இலக்கியம் பற்றி விவரமாக விவாதிக்கப்பட்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"தீர்மானம் எண்.5 - மராத்தியில் ஒடுக்கப்பட்டோரால் எழுதப்பட்ட இலக்கியமும், ஒடுக்கப்பட்டவர்களைப் பற்றி மற்றவர்களால் எழுதப்பட்ட இலக்கியமும் 'தலித் இலக்கியம்' என்னும் தனித்தொரு அடையாளத்துடன் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அதன் பண்பாட்டு முகாமையை உணர்ந்து, பல்கலைக் கழகங்களும் இலக்கிய அமைப்புகளும், அதற்கேயுரிய சரியான இடத்தை அளிக்க வேண்டும்". (பிரபுத்த பாரத் 4-5-58).

ஆனால், இம்மாநாடு பற்றி ஆச்சார்யா ஆத்ரேயின் "மராத்தா* இதழ் தவிர வேறு எந்தப் பத்திரிக்கையும் கண்டு கொள்ளாமல் போனது. பின்னர் 1960-களின் பிற்பகுதியில் அவுரங்கபாத்திலுள்ள மிலிண்ட் கல்லூரி மாணவர்களும் ஊழியர்களும் தங்களுக்கான இலக்கியக் களன் அமைப்பதற்காக 'மிலிண்ட்

சாகித்ய பரிஷத்' என்னும் அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் நிதி திரட்டி, தற்போது 'அஸ்மித தர்ஷா' என்றழைக்கப்படும் 'அஸ்மிதா' என்ற ஒரு இலக்கியக் காலாண்டிதழைக் கொண்டு வந்தனர். பின்னர் 1967-ல் மஹாராஷ்ட்ரா பௌத்த சாஹித்ய சபா பம்பாயில் ஏற்பாடு செய்திருந்த மாநாடு, பம்பாய், அவுரங்கபாத், நாசிக், சோலாப்பூர் போன்ற இடங்களிலிருந்து இயங்கிக் கொண்டிருந்த இலக்கியக் கர்த்தாக்களை ஒன்று சேர்த்தது; ஒடுக்கப்பட்டோருக்கான இலக்கியத்திற்கான மற்றொரு முக்கிய நிகழ்வு என்று கூற முடியும். அப்போது ஒடுக்கப்பட்டோரின் உணர்வுகளைத் தாங்கிய பாபுராவ் பாகுல், தயாபவார், அர்ஜுன் டாங்ளே, பேராசிரியர் யாதவராவ் கங்குட்டே, பந்துமாதவ், சொக்கா காம்ளே, ஹீராபான் சோடே போன்றோரின் கவிதைகளடங்கிய முதல் கவிதைத் தொகுப்பு 'அகார்' வெளியிடப்பட்டது. 60-களின் கடைசியில் தலித் எழுத்தாளர்களின் படைப்புகள் அதிகமாக வெளிவர ஆரம்பித்த பின்னர், வெளியீட்டிற்கான பத்திரிக்கைகளின் தேவை அதிகரித்தது. அப்போது 'சத்யகதா', 'பிரதிஸ்த்தான்', 'மராத்வாடா' போன்ற இதழ்களும் அதனையடுத்து பாபுராவ் பாகுல் அவர்களால் தொடங்கப்பட்ட "அம்ஹி" இதழும் (இந்த இதழ் ஓராண்டு மட்டுமே வெளிவந்தது) பின்னர் 1972-ஆம் ஆண்டிலிருந்து 'மகோவா' இதழும் வெளிவர ஆரம்பித்தன. 'மகோவா' இதழ், தன் சமகாலத்திய ஒடுக்கப்பட்டோர் அல்லாதவர்களின் சஞ்சிகைகளின் மத்தியில் தனித்த முகத்துடன் நின்றது. மேற்குறிப்பிட்ட பத்திரிக்கைகளின் வாயிலாக எண்ணற்ற ஒடுக்கப்பட்டோரின் படைப்புகள் வெளிவந்தன. அப்போது 1972-ல் மராத்திய இலக்கிய உலகின் மரபு சார்ந்த மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில் நாம்தேவ் தாசல் என்ற கவிஞர் தன் பட்டறிவின் வெளிப்பாடுகளை அதிதீவிரமான முறையில் வெளிப்படுத்திக் காட்டிய 'கோல்பிதா' என்னும் கவிதைத் தொகுப்பு வெளியானது ஒருகுறிப்பிடத்தக்க முயற்சி என்று ஆராய்ச்சியாளர்களால் கணிக்கப்படுகிறது. மற்றொரு ஒடுக்கப்பட்டோர் கவிதைத் தொகுப்பான வாமன் நிம்பால்கரின் 'கௌகுச பஹெரில் கவிதா' வைக் குறித்துத் திறனாய்வாளர்கள் வாதிட்டுக் கொண்டிருந்த வேளையில் ஒடுக்கப்பட்டோரின் தீவிரமான வேதனையின் உக்கிரமான வெளிப்பாடுகளைப் படம் பிடித்துக் காட்டிய "கோல்பிதா" மராத்திய இலக்கியத்திலும், மொழியிலும் இருந்த மதிப்பீடுகள் குறித்து எண்ணற்ற கேள்விகளை எழுப்பிற்று. மராத்திய இலக்கியத்திற்குச் சிறிதும் பரிச்சயமற்ற மொழியில் பேசியது "கோல்பிதா".

இதேபோல், பேராசிரியர் பி.இ. ஸோன் காம்ளேயின் "அத்வானிச்சே பக்சி" என்ற படைப்பில் ஆசிரியர் தாழ்த்தப்பட்டவர்களின் பேச்சு மொழியை அதன் கொச்சையான வடிவில் பேசி அவருக்குச் சிறுவயதினில் நேரிட்ட மிகவும் கசப்பான சம்பவங்களை வெளிப்படுத்தியிருந்தது அனைவரின் கவனத்தையும் பெற்றது

என்பது குறிப்பிடத்தக்க ஒன்று. ஒரு தீண்டத்தகாதவனின் பிள்ளைப் பருவம் எவ்வளவு கடினமானது என்பதைப் படம் பிடித்துக் காட்டினார்.

இதேபோல் ஒரு குழந்தையின் மனதை ஆய்வு செய்து அதன் போராட்டத்தை வெளிப்படுத்தும் வகையில் வெளிவந்த ஸ்ரீனிவாஸ் குல்கர்னியின் "தோஹறா" மராத்தியில் மிகவும் பேசப்பட்டு விவாதிக்கப்பட்ட படைப்பாகும் என்பார் அர்ஜுன் டாங்ளே.

மராத்தியில் தலித் இலக்கிய இயக்கம் வெறும் எழுத்துச் சோதனையாக மட்டுமே நின்றுவிடாமல் அது சமூக மறுமலர்ச்சி இயக்கமாகவும் நீட்சியடைந்தது குறிப்பிடத்தக்கதாகும். சமூக அநீதிகளுக்கு எதிராகக் கவிதைகளை எழுதிக் கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை என்பதை உணர்ந்த ஒடுக்கப்பட்ட எழுத்தாளர்கள் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கறுப்பர் இயக்கத்தையும் அவர்களின் இலக்கியங்களையும் அறியத் தொடங்கினர்.

பின்னர் 1972-ல் ஜுலை 9-ம் தேதி அர்ஜுன் டாங்ளே, ஜே.வி.பவார், நாம்தேவ் தாசல் போன்ற இளைஞர்கள் ஒன்றுகூடி, 'ஒடுக்கப்பட்ட சிறுத்தைகள்' (Dalit Panthers) இயக்கத்தை நிறுவினர். அந்த ஆண்டின் இந்திய சுதந்திர நாள் வெள்ளிவிழா நாளைக் கறுப்பு நாளாகக் கொண்டாடினர். பம்பாயின் பல்வேறு இடங்களில் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இப்படியாகத் தலித் அரசியல் இயக்கமும், இலக்கிய இயக்கமும் பின்னிப் பிணைந்து பரவின. இதன் தாக்கம் மராட்டியத்தின் எல்லைகள் கடந்தும் எதிரொலித்தது. கன்னடத்திலும் குஜராத்தியிலும் தலித் அரசியல் / இலக்கிய நடவடிக்கைகள் இதே காலக்கட்டத்தில் தோன்றிப் பரவின.

குஜராத்தி மொழியில் ரமேஷ் சந்த்ர பர்மாரின் "பேந்தர்" (Panthers)என்ற சஞ்சிகை 1975-ல் வெளியிடப்பட்டுத் தலித் இலக்கியத்துக்கான தனித்த அடையாளம் திடமாக நிறுவப்பட்டது. அதைத் தொடர்ந்து எண்ணற்ற இதழ்கள் வெளியிடப்பட்டு இன்று குஜராத்தி மொழியில் மைய நீரோட்ட இலக்கியத்தைத் தாண்டி பிரத்யேகமான போக்காகத் தலித் இலக்கியம் தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளது (ஷெரீஃப் 1994).

இவ்வாறு இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் / மொழிகளில் தலித் இலக்கியம் வலுவாக வேர்விட்டு வளர்ந்துவிட்ட போதிலும் தமிழுக்குள் தற்போதுதான் அதன் வீச்சு தென்படத் தொடங்கியுள்ளது.

இந்திய மொழிகளிலிருந்து இலக்கியங்கள் தமிழுக்கு மொழி

பெயர்க்கப்பட்ட வலுவான நிறுவனங்கள் இல்லாமை, தமிழ்நாட்டின் தீவிரமான இந்தி எதிர்ப்புப் பாரம்பரியம் போன்றவை இந்தத் தாமதத்துக்குப் பின்னணியான சில காரணங்கள் எனக் கூறலாம். இவை தவிர அரசியல் தளத்தில் தலித்துகளை மையப்படுத்திச் சாதி எதிர்ப்பு என்பது மராட்டிய மொழியில் பேசப்பட்டது போலல்லாமல் பிற்பட்ட வகுப்பினரை மையப்படுத்தித் தமிழ்நாட்டில் பேசப்பட்ட திராவிட அரசியலின் தாக்கம் மிக முக்கியமானதொரு காரணம் என்றும் நாம் பார்க்கலாம். இது சுயேச்சையாக தலித் இயக்கமொன்று தோன்றுவதற்கு ஒரு விதத்தில் இடையூறாக அமைந்துவிட்டது. திராவிட அரசியலானது தனது கவர்ச்சிகளை இழந்து சமரசமாகிப் போன நிலையில் தான் இன்று தமிழில் தலித் இலக்கியமும் அரசியலும் எழத்தொடங்கியுள்ளன என்பதையும் நாம் கவனத்தில் கொள்வது அவசியம்.

பகுதி -2

தலித்துகள் மற்றும் அவர்களுடைய வாழ்க்கை குறித்த எந்தப் பதிவுகளும் தமிழ் இலக்கியத்தில் இடம் பெறவில்லை என்பது வேதனைக்குரிய விஷயம்தான் எனினும் சங்க இலக்கியங்களில் தொழிற்முறை சார்ந்த சாதிச் சமுதாய அமைப்புகள் இருந்ததற்கான பதிவுகளை ஆங்காங்கே காணமுடிகிறது. பிற்கால இலக்கியங்களிலும் 'எதிர்ப்புக் குரலாகச் சிற்சில இடங்களில் தலித்துகள் பற்றிய பதிவுகள் இடம் பெற்றுள்ளன. ஆயிரக்கணக்கான சங்க இலக்கியப் பாடல்கள் நம்மிடம் இருந்தபோதிலும், தலித்துகள் குறித்துப் பேசுபவை ஒரு சில பாடல்கள் தான். இந்தப் பாடல்களில் தலித்துகள், புலையர்கள் என்றும், இழிசினன் என்றும், இழி பிறப்பாளன் என்றும் சுட்டப்படுகின்றனர். பெண்கள் 'புலைத்தி' என்று அழைக்கப்படுகின்றனர். போர்க்களத்தில் போரிடும் வீரர்களுக்கு உற்சாகத்தை ஊட்டுவதற்காக வெறி உண்டாக்கத்தக்கதாகப் பறை கொட்டியவனை புலையன் என்று கூறினார்கள். வீரர்களுக்கு வெறியூட்டிய துடியனை 'இழிசினன்' என்றார்கள். புறநானூற்றில் வரும் ஒரே ஒரு பாட்டில் மட்டும் (புறநானூறு 335) இந்தத் துடியனோடு பாணன், பறையன், கடம்பன் ஆகியவர்களைச் சேர்த்து இந்த நான்கு சாதியினர் மட்டுமே இந்நாட்டின் தொன்மையான பூர்வீகக் குடிகள் என்று ஒரு புலவர் பாடியிருக்கிறார். தொழில் ரீதியான சித்தரிப்பில் இவர்கள் ஈமச் சடங்குகளைச் செய்பவர்களாகவும், பிணத்தை எரிப்பவர்களாகவும் பறையடிப்பவர்களாகவும் (புறம் 360, 363) பெண் துணி துவைத்துக் கொடுப்பவளாகவும் (குறுந்தொகை 330;கலித்தொகை 72) துணி துவைத்து, பசை தோய்த்த வேலை செய்ததால் இவளின் விரல் நகங்கள் பசையேறியும், கறை படிந்தும் காணப்பட்டதாகவும் (அகம் 387) வரிக்கூடை முடைந்து விற்பவளாகவும் (கலி 117) சங்க இலக்கியங்களில் தலித்துகளின் தொழில்களைப் பற்றிய குறிப்புகள் உண்டு.

மேலும், இவர்கள் மிகவும் இழிவுடன் நடத்தப்பட்டனர் என்பதை

துடி எறியும் புலைய!
எறிகோல் கொளும் இழிசின! (புறநானூறு 285)

வரிகளிலும், எவ்வளவு பெரியவனாக இருந்தாலும் கடைசியில் இடுகாட்டுப் புல்மேல் கிடந்து புலையன் கையால் அளிக்கும் வாய்க்கரிசியை உண்டுதானே ஆகவேண்டும் என்று புலையனை ஏளனப்படுத்தியும் கூறும் "புலையன் ஏவப் புல்மேல் அமர்ந்துண்டு" (புறம் 360) என்ற வரிகளில் கூறப்பட்ட விதத்திலும் நாம் அறிந்து கொள்ளலாம்.

இழிசினரான தலித்துகளின் நிலை சங்க காலத்தில் இவ்வாறிருக்க, இவர்களின் வாழ்க்கைக் கூறுகளை ஒருவித மேலாதிக்கத்தனத்துடன் சொல்லியிருக்கின்றன சங்க இலக்கியப் பாடல்கள். நிலைமைகள் இவ்வாறிருக்க, தலித்துகளின் வாழ்க்கைக் கூறுகள் தலித்துகளால் கூறப்பட்டனவா என்கிற கேள்வியைக் கேட்டால் நமக்கு பதிலே கிடையாது. இதற்கான காரணங்களை ஆராய்ந்தால் நமக்கு ஒரு சில விஷயங்கள் புலப்படும்.

"எந்த ஒரு மொழியிலும் மேலாண்மை வகிக்கும் குழுவின் மொழி, இலக்கிய வெளிப்பாடுகள், மரபுகள், சடங்குகள், பழக்க வழக்கங்கள் ஆகியவையே அம்மொழி பேசும் இனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பாரம்பரியமாகப் பதிவு செய்யப்படுகிறது. பாரம்பரியங்களைத் தொகுத்தல், பதிவு செய்தல் முதலியன, அரசு, மதம் போன்ற நிறுவனங்களோடு தொடர்புடைய செயலாகையால் ஒடுக்கப்பட்ட மக்களின் பண்பாடு வெளிப்பாடுகள் இம்முயற்சிகளின் போதும் புறக்கணிக்கப்படுகின்றன ("தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தில் சாதி எதிர்ப்புக் குரல் - ஒரு மேலோட்டமான பார்வையில் தென்படும் சில குறிப்புகள்") என்ற பொ.வேல்சாமி மற்றும் அ.மார்க்ஸின் வரிகள் மேலாண்மைச் சமுதாயத்தின் புறக்கணிக்கும் போக்கைத் தெளிவுப்படுத்தும். மேலும், இளம்பூரணர், தெய்வச்சிலையார் போன்றோர், தொல்காப்பியத்திற்கு உரை எழுதுமிடத்து அவையில் சொல்லக்கூடியவை சொல்லக்கூடாதவை எவை என்பதைப் பாகுபடுத்தி ஓர் அதிகாரப்பூர்வ ஒழுங்குமுறைக் கூட்டமைப்பிற்குள் கொண்டு வருகின்றனர். அவையில் கிளவி, மறைத்தனர் கிளத்தல், மங்கல மரபு, இடக்கரடக்கல் போன்ற கருத்தாக்கங்கள் கட்டமைக்கப்படுகின்றன. 'செத்தார்* என்பதை 'துஞ்சினார் என்றும்; 'சூத்து கழுவி வந்தேன்* என்பதை - 'கால் மேல் நீர் பெய்தும்', 'கண் கழி வருவதும்', என்றும் பெண்ணுறுப்பை 'கருமுகம் * என்றும் 'எச்சிலை 'வாய் எயிறு' என்றும் - இவ்வாறான அதிகாரப்பூர்வ சொற்கள் கட்டமைக்கப்படுகின்றன. மேலும், 'வினையினீங்கி விளங்கியலறிவின் முனைவன் கண்டது முதனூலாகும்'

(தொல் 649) என்னும் தொல்காப்பிய வரிகளுக்குப் பேராசிரியர் உரை எழுதும் போது, அழி வழக்குகள் மற்றும் கீழ்ச்சாதியினர் வழக்குகள் (இழிசனர் வழக்குகள்) ஆகியவற்றுக்கெல்லாம் நூல் செய்யின் இலக்கணமெல்லாம் எல்லைப்படாது இரந்தோடும் என்கிறார் (பார்க்க : நிறப்பிரிகை இலக்கிய இணைப்பு, ஜனவரி 1994:58).

இவ்வாறு காலம் காலமாக ஒடுக்கப்பட்டோரின் மொழி, குரலுக்கு இலக்கியத்தில் அங்கீகாரம் கிடைக்காமல் இருந்தது நோக்கத்தக்கது. 15-ம் நூற்றாண்டில் நாடோடிப் பாடலாக வழங்கி வந்த ஒரு பாடலை நாம் பார்க்கலாம்.

ஓதிய நூறும் பொய்யே உடலுயிர் தானும் பொய்யே
சாதியும் என்றேயில்லால் சகலமும் வேறதாமோ வேதியன் படைத்த
கல்லால் விதியினை வெல்ல லாமோ பாதியிற் பழியே சூழ்ந்த பாய்ச்சலூர்க்
கிராமத்தாரே

கொக்கு மேற் குடுமி கண்டேன் கோழிமேற் ஆடும் கண்டேன்
நெக்குறுவாலும் கண்டேன் நீரின்மேல் நெருப்பும் கண்டேன்
சற்குலம் என்று சொல்லிச் சதுமறை பேச வேண்டாம்
பக்குவம் அறிந்து பாரும் பாய்ச்சலூர்க் கிராமத்தாரே

வெற்றிலை தாழை வாழை வித்தொன்று முளைப்பதன்றோ
பற்றிய யோனி பேதம் பாருளோர் அறிந்தி டாமல்
பெற்றவர் தம்மைத் தேடிப் பிறந்திருந் திறந்து போனார்
பற்றி நின்றலைவ தேனோ பாய்ச்சலூர்க் கிராமத்தாரே

குலங்குலம் என்பதெல்லாம் குலங்குலம் பூணும் நூலே
சிலந்தியும் நூறும் போலச் சிறப்புடன் பிறப்ப துண்டோ
நலத்திரு நான்கு வேதம் நான்முகன் படைத்துண்டோ
பலந்தரு பொருளுண்டோ பாய்ச்சலூர்க் கிராமத்தாரே

மகங் கொண்ட தேகந்தன்னில் மற்றொரு சுத்தம் தண்ணீர்
அகங்கண்டு புறமும் கண்டும் அவனுக்கே தாரமானேன்
சுகங்கண்டு துக்கம் கண்டு சுக்கில வழியே சென்று
பகங் கொண்ட தேனோ என்னில் பாய்ச்சலூர்க் கிராமத்தாரே
ஊருள பார்ப்பார் கூடி உயர்ந்ததோர் சாலை கட்டி
நீரிலே மூழ்கி வந்து நெருப்பிலே நெய்யை விட்டுக்
கார்வயல் தவளை போலக் கதறிய வேதந் தானும்

பாரைவிட் டகன்ற தோதான் பாய்ச்சலூர்க் கிராமத்தாரே

சந்தனம் அகிலும் வேம்பும் தனித்தனிக் கந்தம் நாறும்
அந்தணர் தீயில் வீழ்ந்தால் அவர் மணம் வீசக் காணோம்
செந்தலைப் புலையன் வீழ்ந்தால் தீமணம் வேறதாமோ
பந்தமும் தீயும் வேறோ பாய்ச்சலூர்க் கிராமத்தாரே

ஒரு பணை இரண்டு பாறை ஒன்றுறுங்கு ஒன்று கள்ளு
அறிவினில் அறிந்தவர்க்கு அதுவுங்கள் இதுவுங் கள்ளே
ஒருகுலை உயர்ந்த தேனோ ஒரு குலை தாழ்ந்ததேனோ
பறையனைப் பழிப்பதேனோ பாய்ச்சலூர்க் கிராமத்தாரே

திருச்சி மாவட்டத்தில், திருப்பாச்சிலாச்சிராமம் என்ற பாய்ச்சலூர் கிராமத்துக்கு அருகில் உள்ள உத்திரநல்லூரில் பிறந்து அங்கே ஆற்றங்கரையில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த பறையர் சாதிப் பெண்ணுக்கும், அதே இடத்தில், ஆற்றங்கரைக்குத் தினமும் வேதம் ஓதிச் சந்தியா வந்தனம் செய்யவரும் ஒரு பார்ப்பனச் சிறுவனுக்கும் இடையே காதல் மலர்கிறது. உறவாக வளர்கிறது. இவ்வுறவைப் பிரிக்க இயலாது போகவே, உத்திரநல்லூர் நங்கையை உற்றம் சுற்றத்தோடு அழிக்கத் தீ வட்டிகளோடு வரும் பார்ப்பனருக்கு எதிராகப் பாடப்படுகிறது இக்கவிதை. பார்ப்பனச் சிறுவன், வந்தவர்களை அச்சமின்றி எதிர்க்கிறான். (பார்க்க:மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு 15-ம் நூல் 359-362).

இதே போன்றதான சாதி எதிர்ப்புக் குரல்களைச் சித்தர் பாடல்களிலும் காணலாம்.

காலை மாலை நீரிலே முழ்கும் மந்த மூடர்காள்!
காலை மாலை நீரிலே கிடந்த தேரை என்பெறும்?
ஆட்டிறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியீர்!
ஆட்டிறைச்சி அல்லவோ யாகம் நீங்கள் ஆற்றலே!
மான் இறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியீர்!
மான் விரித்த தோல் அலோ மார்பு பூணும் அணிவதும்?
பறைச்சி ஆவதேதடா பனத்தி ஆவதேதடா!
பறைச்சி யோகம் வேறதோ பனத்தி போகம் வேறதோ?

(பார்க்க: சிவவாக்கியார், சித்தர் பாடல்கள், பக்-7)

இவ்வாறான சித்தர் பாடல்கள் சாதியெதிர்ப்புக் குரலை எழுப்பியிருப்பினும் வெறும் உடல் ரீதியான சமநிலைப்பாட்டைச் சொல்லி, பெண்களைப்

போகத்திற்கான பொருளாக இரண்டாம் நிலையில் வைத்துப் பார்த்த பாங்கும், இறைமறுப்பின்மையும் சித்தர்களின் ஒட்டுமொத்தப் பாடல்களின் சாரம்சமாக நாம் கணிக்க முடியும்.

இவைகளை நாம் தலித்தியத்திற்கான மேலோட்டமான பதிவு என்ற வகையில் எடுத்துக்கொள்ள வேண்டும். மேலும், அடிப்படையான ஒரு காலக்குரல் இவர்களின் பாடல்களின் முக்கிய அம்சமாக இருக்கின்றது. இவற்றைப் பின்னணியாகக் கொண்டு தற்காலக் கவிதைச் சூழலை நாம் பார்க்கலாம்.

பகுதி-3

இன்றைய தமிழ்க் கவிதைச் சூழல் மூன்று வகையான பிரிவுகளாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்று ஒரு பரந்த அனுமானத் தளத்தில் சொல்ல முடியும்.

சங்கக் கவிதைகளான சந்தக் கவிதையின் நீட்சியாக இன்றும் மரபு வழியான கவிதைகளைத் தாங்கி வரும் தமிழ்க் கவிதை இதழ்களான தென்மொழி, தமிழ்ச்சிட்டு, முல்லைச்சரம் போன்ற இதழ்கள் தங்களின் கடைசி மூச்சுக்களைக் கூட நிலாமுற்றங்களையும், இயற்கைக் காட்சிகளையும், பெண்களின் அங்க அழகையும் பழமையின் மாட்சிமையோடு தருவதில் செலவிட்டுத், தங்களின் மன்னர் பாரம்பரியப் பெருமைகளின் எச்சங்களாக உலா வருகின்றன. இத்தகைய கவிதா முயற்சிகளில் தனித்தன்மையாகக் காணப்படும் விஷயம் தனித்தமிழ் பேணல் என்பது மட்டுமேயன்றி வேறுவகையான குறிக்கோள் என்று ஒன்றுமில்லை. இத்தகைய கவிதைகளின் உள்ளடக்கம் குறித்து ஆராய்வது வீண்.

இரண்டாவதாக, நமக்கு கவிதைகளாகக் அறிமுகமாகியிருப்பவை பாரதி முதலான கவிஞர்கள் வசன/புதுக்கவிதைகளாகும். புதுக்கவிதைகளின் முன்னோடியாக இருப்பவர்கள் என்று நமக்கு அறிமுகமானவர்கள் ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா., சி.சு.செல்லப்பா, க.நா.சு., தி.சொ., வேணுகோபாலன், தருமு சிவராமு, சி.மணி, எஸ்.வைத்தீஸ்வரன், ஞானக்கூத்தன், பசுவய்யா போன்றோர் ஆவர். தமிழ்க் கவிதைகளில் நவீன வடிவங்களைச் சோதனை செய்யும் முயற்சிகளில் மணிக்கொடி, எழுத்து, கசடதபற, கொல்லிப்பாவை, சதங்கை, ஞானரதம் போன்ற இதழ்களில் மேற்குறிப்பிட்ட கவிஞர்களின் கவிதைகள் வெளியாயின. இவர்கள் கவிதைகளின் ஒட்டுமொத்த சாராம்சமும் ஒரு குறிப்பிட்ட சிறுபொறியைத் தாங்கிய கவிதானுபவமாக மட்டுமே இருந்தன. பெருங்காவியங்கள் என்னும் அளவில் புதுக்கவிதையில் எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இக்கவிதைகளில், பார்ப்பன மற்றும் உயர் சாதியைச் சேர்ந்த நடுத்தர வர்க்கத்தினரின் தேடல் சார்ந்த கருத்துக்கள் கவிதைகளாயிருக்கின்றன. இவர்களின்

கவிதைகளில் மையக் கலாச்சாரத்தின் விழுமியங்கள் கவிதைக் கருப்பொருளாக முன் நிறுத்தப்படுகின்றன. உதாரணமாக, ஞானக்கூத்தனின் ஒரு கவிதை

தாயகம்

மனிதர் போற்றும் சாமிகளில்
ஒற்றைக் கொம்புக் கணபதியை
எனக்குப் பிடிக்கும். ஏனெனில் வே
றெந்த தெய்வம் வணங்கியபின்
ஒப்புக்கொள்ளும் நாம் உடைக்க?

(ஞானக்கூத்தன் 1973)

இக்கவிதையில் நமக்கு அறிமுகமாகும் நபர் ஒரு ஆத்திகர். இவர் அனைத்து வகையான விக்ரகங்களை வழிபடுபவர். கணபதியை-ஒற்றைக் கொம்பு கணபதியை இவருக்கு மிகவும் பிடிக்கும். இவரின் கருத்துப்படி மனிதர்கள் எல்லோரும் சாமி கும்பிடுபவர்கள். மனிதர்கள் அனைவரும் சாமியைப் போற்றுபவர்கள். இப்படி இவர் கூறுவதால் சாமி கும்பிடாதவர்களை இவர் மனிதர்களாக ஒப்புக்கொள்ள மாட்டார் என்றும் அனுமானிக்க இடமுண்டு. இந்தக் கவிதையின் மூன்றாவது வரியின் கடைசியில் தனியாகத் தொங்கலில் விடப்படும் 'வே' என்ற எழுத்து நான்காவது வரியின் முதல் எழுத்தாகப் போய்த் தொலைத்திருக்க வேண்டியது. கவிஞரின் கவிதா முயற்சியில் - சோதனை முயற்சி முறை 'வே' யை வெட்டி மூன்றாவது வரியில் தொங்கலில் விட்டு இதற்கு விசேஷித்த தொனி கிடைக்கிறதா என்று காத்திருந்து பார்க்கிறது. இதை நாம், இக்கவிஞரின் கவிதாபூர்வமான சோதனைச் சேட்டை என்று கொள்ளலாமா? ஏனென்றால், இவருக்குக் கணபதியின் சிலை உடைத்தல் என்னும் பாரம்பரிய வழக்கு அதிர்ச்சி அல்லது வித்தியாசமான ஒரு நிகழ்வாகப்படுவதால் இதேபோல் வேறு எந்தச் சாமியின் சிலையை உடைக்கலாம் என்று கணக்குப் போட்டுப் பார்க்கிறார். வழக்கு அவ்வாறில்லாத பட்சத்தில் உடைக்கப்படும், அல்லது உடைக்க அனுமதிக்கும் கணபதியின் மேல் அவருக்கு அதீதமான மதிப்பும், கவனமும் நேசமும் வந்துவிடுகிறது.

இந்தக் கவிதை எழுதப்பட்டதன் நோக்கம் என்ன? இந்தக் கவிதையின் மீது ஆசிரியர் எந்த வகையான கருதுகோளை முன்னெடுத்து வைக்கிறார்? இக்கவிதை பயன்பாட்டு அளவில் என்ன செயலை வாசகனின் மனதில் உருவாக்கும்? இவற்றிற்கெல்லாம் என்ன பதில் கிடைக்கும்? இக்கவிதையில் ஒரு வாசகனுக்குக் கிடைக்கும் விஷயம் கவிஞரின் சில்லறைக் குறும்பு மட்டுமே.

இந்த வரிசையில் வரும் கவிஞர்களின் நல்ல கவிதைகள் சில காணப்பட்டாலும், இந்தக் கவிதைகளின் உள்ளடக்கம் என்ன என்ற கேள்விக்கு முன் / திராணியற்று நிற்கின்றன. கவிஞர் தருமு சிவராம், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளில் கருதுகோள்களை, அதன் சாராம்சத்தைப் பத்துவரிக் கவிதைக்குள் கொண்டு வர முயற்சித்தது கடலைக் கமண்டலத்திற்குள் கொண்டுவரும் முயற்சியாகும். இத்தகைய ஒரு கவிதையில் பெரிய மதிநுட்பத்தைக் கண்டுவிட்டதாக வேறொரு கவிஞர் புளகாங்கிதமடைந்து பேருவகை கொள்கிறார்.

தருமு சிவராம் "கலை கலைக்காகவே" என்னும் மாய வளையத்தின் போலித்தனத்தில் நம்பிக்கையுள்ளவராக இருக்கலாம். எனினும், இந்தக் கவிதையில் அவர் சித்திரித்திருக்கும் உண்மை ஒரு தனி அழகோடும் மெருகோடும் உருப்பெற்றிருக்கின்றது. அதனால் ஒரு மகத்தான கவிதையாக இதனை நான் கணிக்கிறேன்.

கவிதை என்ன விஷயத்தைச் சொல்லவேண்டும் என்பதில் கருத்து வேறுபடலாம். ஆனால், மொழியின் ஆற்றல்களையும் சாத்தியங்களையும் சோதனை செய்து பார்க்கும் அற்புதக் கருவி கவிதை.

மூன்றாவது அணியில் வரும் கவிதைகள் தங்களைச் சோசலிசக் கவிதைகள் என்று முத்திரை குத்திக் கொண்ட திராவிட அரசியலின் சாராம்சங்களைத் தாங்கிய, கம்யூனிச ஆதரவு கொண்ட வானம்பாடிக் கவிதைகள். இவர்கள் தங்களுக்கென ஒரு தனி முத்திரை குத்திக்கொள்ள முற்பட்டார்கள். இவர்களின் கவிதைகளில் கற்பனைக் கனவியல் சார்ந்த முற்போக்குப் புனைவுகள் காணப்பட்டன.

தாஜ்மஹாலை முன்னிறுத்தி ஒரு ரொட்டித் துண்டின் மகாத்மியம் பற்றிப் பேச முற்பட்டன இவர்களது கவிதைகள். படித்துச் சிலிர்த்திட வைக்கும் படாடோபமான வார்த்தைப் பிரயோகங்களின் அணிவகுப்புகள் இவர்களுக்கு கவிதைகளாகப் பட்டன. திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் அடுக்குமொழிப் பிரயோகத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியாக இந்த வானம்பாடிக் கவிஞர்களின் வார்த்தைப் படிமங்கள் அப்போது புது மோஸ்தருக்கான அங்கீகாரத்தைப் பெற்று ஆர்த்தெழுந்து திரிந்தன. இந்தக் கவிஞர்களின் பெருமூச்சு கடற்கரைக்குப் போயிருந்தால் கப்பல்கள் கவிழ்ந்திருக்கும். அந்தக் கால கட்டத்தில் மரபுக் கவிதைக்கும் புதுக்கவிதைக்குமான போட்டியும் சர்ச்சைகளும் நிகழ்ந்து கொண்டிருந்தன. வானம்பாடிக் கவிஞர்களில் பெரும்பாலோர் தமிழ் கற்ற ஆசிரியர்களாக இருந்ததால், இவர்கள் 'பழமையில் காலூன்றிப் புதியதில் சிறகு விரிக்கிறோம்' என்று அறிக்கையிட்டு மரபுக் கவிதைகளிடம் மன்னிப்புக் கோரி

சமாதான உடன்படிக்கை செய்துகொண்டு புதுப்பெண்ணைப் பார்க்கத் தாவியவர்கள். இந்த வரிசையில் வந்தவர்களுள் மு.மேத்தா, நா.காமராசன், ஈரோடு தமிழன்பன், சிற்பி, புவியரசு, மீரா, அப்துல் ரகுமான் போன்ற கவிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களிடம் காணப்பட்ட சிறப்பம்சம் - வறுமை பற்றிப் பாடினார்கள்; தொழிலாளர்களைப் பற்றிப் பாடினார்கள்; முதலாளிகளின் அடக்குமுறைப் பற்றிப் பாடினார்கள்; இன்னும் அரிசனங்களைப் பற்றியும் பாடினார்கள். ஆனால் தாங்கள் பாடிய கவிதைகளுக்கான பாடுபொருள் குறித்து மேலோட்டமான கருத்துக்களையே கொண்டிருந்தனர். ஏனென்றால் இவர்களின் பாடுபொருளைப் பொறுத்தமட்டில் இவர்கள் பார்வையாளர்கள் மட்டுமே. பாடனுபவிப்பவனுக்கிருக்கும் வெய்யிலும், வெக்கையும், பார்வையாளனுக்கு எப்படி இருக்க முடியும்? இவர்கள் பாடிய அனேக கவிதைகள் இக்கருத்தை நிரூபிப்பனவாக உள்ளன. உதாரணமாக ஒரு கவிதை

முள் முடி

எச்சில் இலை பொறுக்கும்,
இந்தியாவின் இளைய தலைமுறையே
கவலைப்படாதே, நீ இளவரசன்
இன்னும் கொஞ்ச நாளில்
ஓட்டுரிமை முள்முடியைத்
தலையில் சூட்டிவிடுவார்கள்.
ஓட்டொன்றுக்கு ஐந்து ரூபாய் நிச்சயம் உண்டு.
கள்ள ஓட்டுக்கும் காசுகள் உண்டு
கோஷம் போட்டால் கொஞ்சம் அதிகம்
கொடி தூக்கினாலோ கொள்கை வீரர்
கொள்கைக்கெல்லாம் கூலி உண்டிங்கே
கவலையை விடுவாய்
கண்மணியே நீ *(இந்திரன் 1982)*

கவிஞர் இந்திரனின் கவிதையை ஓர் அங்கதக் கவிதையாக எடுத்துக்கொண்டாலும் சமுதாய முன்னேற்றத்திலும், ஜனநாயக சோஷலிசத்திலும் நம்பிக்கை உள்ள ஒருவருக்கு அதுவும் கவிஞருக்கு, ஓட்டுரிமை என்னும் ஒரு பெரிய ஆயுதத்தை முள் கிரீடமாக நினைக்க நேர்ந்த அவலம் என்ன என்பது யோசிக்க வேண்டிய ஒன்று. இதுபோன்ற கவிதைகள் யோசிக்காமல் போகிற போக்கில் எழுதப்பட்ட

கவிதைகளாகப் பலமிழந்து நிற்கின்றன.

மூன்றாவது வரிசையின் உட்பிரிவாகச் சிவப்பு இலக்கியக் கவிஞர்களின் கவிதைகளைச் சொல்லலாம். இந்த வரிசையில் இன்குலாப், தணிகைச் செல்வன், ஏ.தெ.சுப்பையன் போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்களின் கவிதைகள் சிவப்பு இதழ்களான மனஓசை, செம்மலர், செந்தாரகை போன்ற இதழ்களில் இடம் பெற்றன. இவர்களில் தனித்த குரலாக உருவெடுத்துச் சாதனைகளைச் செய்தவராக கவிஞர் இன்குலாப் திகழ்கிறார். வானம்பாடிக் கவிஞர்களுக்கும் இவர்களுக்குமான இடைவெளியை சோஷலிச யதார்த்தவாதம் என்ற பெருஞ்சுவர் பிரித்து வைத்தது. வானம்பாடிக் கவிஞர்களுக்கும் இவர்களுக்கும் பொதுவான அம்சமாக கற்பனைக் களவியல் கூறுகள் இருந்தாலும் பின்னவர்களின் பார்வையில் யதார்த்தக் கூறுகள் பெருமளவில் இடம் பிடித்திருந்தன. முன்னவர்களும், பின்னவர்களும் வேறு வேறு முகாமையில் இருந்து கொண்டு இரண்டாவது அணியினரை விமர்சித்தனர். இத்தகைய போக்குகள் 70களின் ஆரம்பக் காலம் வரையில் வந்தன. இன்னும் தொடர்கின்றன.

இதற்கு முந்தைய பத்தாண்டுக் காலத்தில் தமிழகம் பல்வேறு அரசியல், சமூக, கலாச்சாரப் பிறழ்வுகளைக் கண்டது. தேசியக் கட்சிகளின் பின்னடைவும், அரிசனங்கள் எரிக்கப்பட்ட மண்டைக்காடு, மீனாட்சிபுரம், வெண்மணி சம்பவங்களும் அரசியல் கோதாவிலும், மத நிறுவனங்களிடையேயும் ஒரு புதிய உத்வேகத்துடனான மாறுதல்களைக் கொண்டு வந்தன. அரிசனங்கள் இஸ்லாத்திற்கு மாறுவதைச் சாதி இந்துக்களால் தடை செய்ய முடியவில்லை. இந்த மதமாற்றத்தின்போது கிறிஸ்தவ மத நிறுவனங்களின் மீது பிரத்யேகமான பார்வைகள் கவிந்து கேள்விகளை எழுப்பின. கல்விக்காகக் கிறிஸ்தவர்களாக முன்பு மாறிய அரிசனங்கள் இப்போது கலவரத்தின் பின்னால் கிறிஸ்தவத்தை விடுத்து இஸ்லாத்திற்கு மாறவேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வியில், இந்து மதத்திற்கு கொஞ்சமும் குறைவின்றிச் சாதீய மரபுகள் கிறிஸ்தவத்திற்குள் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருப்பது அறியப்பட்டு அவற்றை மூடி மறைக்கும் வேலைகள் நடைபெற்றன. மேலும், இந்துமத மடங்கள் தங்களின் நால்வருண கொள்கையைச் கொஞ்ச காலத்திற்கு முடக்கி வைத்து அரசினங்களின் புலம் பெயர்தலைத் தடுத்து நிறுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது. இப்படிப்பட்ட சமுதாயச் சீரழிவுகள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, இந்திய அளவில் 1976-ல் அவசரநிலைப் பிரகடனம் பிறப்பிக்கப்பட்டு, பத்திரிக்கைச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. அப்போது சிறிதும் பெரிதுமாக வெளிவந்து கொண்டிருந்த சிறு பத்திரிக்கைகள் திடீரென்று காணாமல் போயின. எமர்ஜென்சியின் கிடுக்கிப் பிடிக்குள் புதுக்கவிதைகள் மூச்சுத் திணறி வெளியே வர மறுத்தன. இப்படிப்பட்ட ஒரு காலக்கட்டத்தில் தான் தனித்த

குரலாக எமர்ஜென்சியை விமர்சித்து ஆத்மாநாமின் 'அவசரம்' கவிதை வெளியானது. இவரின் 'தனியொருவன் எரித்தால் வன்முறை அரசாங்கம் எரித்தால் போர்துறை', என்ற கவிதை வரிகள் அனைத்துத் தரப்பினராலும் பேசப்பட்ட வரிகளாகும்.

அதேவேளையில் 1981-ஆம் ஆண்டில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் வெளியீடாக வந்த 'சோசலிசக் கவிதைகள்' என்னும் தொகுப்பு வானம்பாடிக் கவிஞர்கள் மத்தியிலும், சிவப்புக் கவிஞர்கள் மத்தியிலும், ஹென்ரிச் ஹெய்னே (செருமனி 1797-1865), பிரோஸ்லவ் ஹோல்நுப் (செக்கோஸ்லோவேகியா), ஜோ கொர்ரி (ஸ்காட்லாந்து), ஹோ-சி-மின், மாயகாவ்ஸ்க்கி (ரஷ்யா), டோப்ரி ஜோடேவ் (பல்கேரியா), பெர்டோல் பிரக்ட், எரிக் பிரைட் (ஆஸ்திரியா), நஸீம் இக்மட் (துருக்கி) போன்ற உலகப்புகழ்பெற்ற கவிஞர்களின் முழு வீச்சுடனான, ஆரவாரமற்ற கவிதைகளை அறிமுகம் செய்தன. மேலும், பல்வேறு சிற்றிதழ்களும் இதுபோன்ற மேல்நாட்டுக் கவிதைகளைத் தமிழில் அறிமுகம் செய்து ஒரு புதிய கவிதைச் சூழலுக்கான களம் அமைத்துக் கொடுத்தன.

அதைத் தொடர்ந்து 1982-ஆம் ஆண்டு கறுப்பர்களின் கவிதைகளையும், கதைகளையும் மற்றும் புனைவுகளையும் தாங்கிய 'அறைக்குள் வந்த ஆப்ரிக்க வானம்' என்னும் புத்தகம், தமிழ்நாட்டில் வாழும் ஒடுக்கப்பட்ட தலித் இன மக்களுக்கான இலக்கியத்தின் வரவுகளுக்கு வித்திட்டது. இந்தத் தொகுப்பின் முகப்பில், லாஸ்ஸ்டன் உற்றுக்ஸ்-ன் கீழ்க்கண்ட அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது:

புதிய தலைமுறையைச் சேர்ந்த
நீக்ரோ கலைஞர்களான நாங்கள்
எங்களது தனிப்பட்ட கறுப்புத்தோல்
போர்த்திய பண்புகளை எவ்வித
பயமோ, வெட்கமோ இன்றி
வெளிப்படுத்த முனைகிறோம்.
நாங்கள் அழகானவர்கள் என்று
எங்களுக்குத் தெரியும்
அசிங்கமானவர்கள் என்றும்
தெரியும். முரசுகள் சிலநேரம்
சிரிக்கின்றன. சில நேரம்
அழுகின்றன.

நாங்கள் எங்களுக்குத் தெரிந்த
முறையில் எங்களுக்கான நாளைய
கோயில்களைக் கட்டுகிறோம். *(இந்திரன் 1982)*

இந்தக் கறுப்புக் கவிதைகளின் அறிமுகம், இதுவரை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் ஒடுக்கப்பட்டவர்களை மட்டுமே கருப்பொருளாகப் பாடிக் கொண்டிருந்த தமிழ்க் கவிதைப் பரப்புக்கு, சமூக மற்றும் கலாச்சார ரீதியாக ஒடுக்கப்பட்ட தலித்துகள் பற்றிப் பாடவேண்டிய அவசியத்தையும், புதிய பாடுபொருள் பரப்பையும் வெளிச்சமிட்டுக் காட்டியது. மேலும் இத்தொகுப்பிலுள்ள கவிதைகள், வெற்றுக் கோஷங்களாக இல்லாமல், வாழ்க்கை சார்ந்த தகவுகளை அதன் அனைத்துக் கனத்தோடு மிகக் கவனமாகவும், எளிமையாகவும் கொண்டுவந்து நிறுத்தியதால், மையக் கலாச்சார மற்றும் பார்ப்பனீய தேடல்களின் இருண்மையான கூறுகளை உள்ளடக்கிய அவற்றை உன்னதமான இலக்கியமாகக் கற்பிதப்படுத்தப்பட்டு வந்த விவாதங்களைக் கேள்விக்குள்ளாக்கியது. எளிமையும், தீவிரமும் நிறைந்த புதிய கவிதைக் கூறுகளைத் தமிழ்க் கவிதை உலகம் கண்டது. உதாரணமாக ஒரு கறுப்புக் கவிதை:

தற்கொலை பற்றிச் சிந்திக்கும்
கறுப்புக் கவிஞர்களுக்கு *-எத்திரிட்ஜ் நைட் (அமெரிக்கா)*

கறுப்புக் கவிஞர்கள் வாழத்தான் வேண்டும்
-இரும்புப் பாலங்களின் மீதிருந்து
(வெள்ளைப் பையன்களைப் போல)
குதிக்கக்கூடாது
கறுப்புக் கவிஞர்கள் வாழத்தான் வேண்டும்
-இரயில் தண்டவாளங்களில்
(வெள்ளைப் பையன்களைப் போல)
கழுத்தை வைக்கக் கூடாது
கறுப்புக் கவிஞர்கள் தேடத்தான் வேண்டும்
- ஆனால் இருண்ட குகைகளில் அதிகம்
தேட வேண்டியதில்லை
அல்லது அடிமனச் சுவடுகளில்
(வெள்ளைப் பையன்களைப் போல)
உள்ளான் குருவிகளை
வேட்டையாட வேண்டியதில்லை

ஏனெனில்
கறுப்புக் கவிஞர்கள்
கறுப்பு மக்களுக்குச் சொந்தமானவர்கள்.
கறுப்புக் காதலர்களின்
புல்லாங்குழல்கள்
கறுப்புச் சோகம் இசைக்கும் கருவிகள்
கறுப்பு வீரர்களின்
எக்காளக் குழல்கள்
எல்லாக் கறுப்புக் கவிஞர்களும்
இசைக் கவிகளாகவே மடியட்டும்
- மடிந்து அணிவகுத்துச்
செல்பவர்களின்
காலடிப் புழுதியில்
புதைக்கப்படட்டும் (இந்திரன் 1982)

இந்தக் கவிதையில் அலங்காரச் சொற்கள் இல்லாதத் தன்மை, பொருள் புரிதலில் இருண்மை கலவாத எளிமை, அதே வேளையில் ஒரு குறிப்பிட்ட இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை, வன்முறைகளின் எதிர்வினையாக அடிபணிந்து போகாத தன்மை, இவை அனைத்தையும் அதன் முழுமையான சோகத்துடன் சொல்லும் பாங்கு இக்கவிதையை மனமீளலுக்கான மறுவாசிப்புக்கு நம்மை இட்டுச் செல்வது தவிர்க்க இயலாததாகும்.

பின்னர் 80-களின் முற்பகுதியில் இலங்கையில் இனவாத அரசு சிறுபான்மை தமிழருக்கு விரோதமாக வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டபோது உலகெங்கிலும் சிதறிக் கிடந்த தமிழர்களின் கவனம் இலங்கைத் தமிழர்களின் மீது விழுந்தது. இலங்கைத் தமிழர்கள் பல்வேறு நிலைகளில் ஒடுக்கப்பட்டனர். அனைத்து வகையான ஒடுக்குமுறைகளையும் விட, கலாச்சார ரீதியான ஒடுக்குமுறை இலங்கைத் தமிழர்களைப் பாதித்தது. தமிழர்களுக்கெதிரான அத்துமீறல்களை விசாரிக்க வந்த பன்னாட்டு ஜூரிகளின் ஆணையம் (INTERNATIONAL COMMISSION OF JURISTS) கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது. "எந்த வகையான அழிவு யாழ்ப்பாண மக்களிடம் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது என்று பேராளர்களிடம் கேட்டால் அதற்கான பதில், யாழ்ப்பாண மக்களின் கற்றல் மற்றும் கலாச்சாரத்தின் மேல் உள்ள ஆவலின் மேலும் அவர்களின் கற்றல் மற்றும் கலாச்சாரத்தின் நினைவுச் சின்னத்தின் மேலும் நடந்த காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்தான் என்பதுதான் பதிலாக இருக்கும்..........

நூால் நிலையத்தின் அழிவு பல ஆண்டுகளுக்கு இம்மக்களின் மனதில் கசப்பான நினைவுகளாக இருக்கும்.

இப்படிப்பட்ட பெரும்பான்மை அரசின் கலாச்சார ரீதியான தாக்குதலின் காரணமாக, இலங்கைத் தமிழர்கள் பல்வேறு நிலைகளில் தங்களின் காலடிச் சுவடுகளை அழுந்தப் பதித்துக் கொள்ளவேண்டிய கட்டாயத்திற்குள்ளானார்கள். தாம் பிறந்த மண்ணையும் அதன் அரவணைப்பையும் இழந்தார்கள். தங்கள் கலாச்சாரத்தின் சின்னங்கள் நெருப்பிலிட்டுக் கொளுத்தப்பட்டன. இந்தக் காலக்கட்டத்தில் தான் இலங்கையிலிருந்து முழு வீச்சுடனான, ஆரவாரமில்லாத நேரடித்தன்மை வாய்ந்த படைப்புகள் அதிகமாக வெளிவந்தன. தங்களின் கண்ணெதிரே இழந்துபோன கலாச்சாரப் பதிவுகளை மீட்டு அதற்குப் பதிலியாகப் புதிய படைப்புகளை முன்நிறுத்த வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர். மிகச் சிறந்த படைப்புகளைத் தந்தவர்களாக மகாகவி எம்.ஏ. நுஃமான், சிவசேகரம், யேசுராஜா, சண்முகம் சிவலிங்கம், சேரன் போன்றோரைக் குறிப்பிடலாம்.

உன்னதக் கவிதையின் மொழி பற்றிய விசாரணையில்

சமூக வரலாற்றுப் பாத்திரம் வகிக்கும் கலை-இலக்கியங்கள்,உருவம்-உள்ளடக்கம் இரண்டிலும் தம்மைக் கீழ்க்காணும் இருவகைப் போக்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டிக்கொள்கின்றன. ஒன்று, பெரும் கலை இலக்கியப் புரோகிதர்களால் மட்டுமே புரிந்து கொள்ளப்பட்டு, அருள் பாலிக்கப்பட்ட, மேட்டுக் குடியினருக்கு மட்டும் விளக்கப்படுகிற பூடகமான படைப்புகள். மற்றொன்று, சமூகக் கொடுமைகளைக் கருத்தளவில் மட்டுமே கேட்டறிந்துள்ள, உண்மை அனுபவத்தின் போலிப் பிரதிபலிப்புகளைக் கருப்பொருளாக்கி விளம்பரம் தேடும் முற்போக்குப் படைப்புகள்.

இரண்டாவதாகச் சொல்லப்பட்ட போக்கை நிராகரிக்கச் சிலர் சுவரொட்டிச் சுலோக நடைப் படைப்புகள் என்று வர்ணிக்கின்றனர். (அது தவறு). அதற்குப் பெயர் 'முழக்கங்கள்'. மேற்கு வங்கத்தின் புரட்சிக் கவிஞர் சரோஜ் தத் இவ்வாறு எழுதினார்:

கவிதை
முழக்கமாக மாறிக் கொண்டிருக்கிறது என
நீங்கள் சோகமடைகின்றீர்கள்
நானோ
கவிதை
முழக்கமாக மாறத் தவறிக் கொண்டிருக்கிறதே என
வாட்டம் கொள்கிறேன்

....

உயிரற்ற வெற்று முழக்கமாகக் கவிதையைக் குறைப்பது தவறு. பல்லாயிரக் கணக்கான மக்களின் சித்தங்களை, ஒரே சித்தமாக ஒரே குறிக்கோளாக மாற்றுகின்ற புரட்சிகரமான முழக்கத்தின் பேராற்றல் உடையதாகக் கவிதை இருக்க வேண்டும். வெறும் உருவவாதம், வெற்றுப் பரிசோதனைகள், படிமப் பம்மாத்துக்கள், சொற்குப்பைகள் ஆகியவற்றிலிருந்து கவிதையை விடுவித்து, சமூகச் செயற்பாட்டுக்கான ஆன்மீகக் கருவி என்ற பாத்திரத்தை அதனிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டும் என்கிறார் இலக்கிய விமர்சகரும் சமூகவியல் ஆய்வாளருமான எஸ். வி. ராஜதுரை அவர்கள். (பார்க்க : சூரிய உதயம் முன்னுரையில், நூலாசிரியர் சேரன், பக்.6,7.)

கவிஞர் சேரனின் கவிதைகள் ஆர்ப்பாட்டமில்லாத மானுட விழுமியங்களின் ஆணிவேர்களை அடையாளம் கண்டு படிப்பவர் மனதில் எதிர்ப்பின் அதிர்வுகளைச் சுண்டிவிடும் தன்மை கொண்டவை. இது தனிமனிதக் குரல்போல் அல்லாமல் ஒட்டுமொத்த இனத்தின் மீது ஏவிவிடப்பட்ட அறைகூவலாகவே விளங்குகிறது.

உதாரணத்திற்கு ஒரு கவிதையைப் பார்க்கலாம்.

எனது நிலம்

சிறகு வலை விரித்த பரவைக் கடல்
மேலே மூச்செறியும் காற்று
கடல் நடுவில்
கலையும் தலைமயிரை
விரல்களாலமுத்தி நிமர்க்கையிலெல்லாம்
கரை தெரிகிறது
பனைமரமும் இடையிடையே ஓடுகளும்

அலையும் எஞ்சின் இரையும் பொழுது
சிதறும் துளியும்
ஒற்றரை மணிநேரம்
எப்படி முடிந்ததாம்.....?

பிறகு, மணல் நிமிர்ந்த வெளி
அதனுள் புதைந்த பனைகள்,
ஒவ்வொன்றும் ஓராள் உயரமெனக்
கன்னி மணல் மீது தலைநீட்டும்...

மணலோ,
கண்ணாடி விதையிட்டுச்
சூரியன் போய்க் குடியிருந்த
பொன்னின் துகள்...
அதன் கீழ் -
இரண்டாயிரம் ஆண்டுகள்
முன்பாக, என் முன்னோர் நடந்த
நிலப்பரப்பு

ஒரு காலடி ஆனால்
ஓராயிரம் ஆண்டு
எம்வேர் நீண்டுள்ளது *(சேரன் 1983)*

தலைக்கு மேல் இரைச்சலுடன் அலைந்து திரியும் போர்விமானங்கள் மோட்டார்ப் படகில் தன் சொந்த மண்ணுக்குத் திரும்பும் போராளி-அவனுக்குத் தன் மண் மீது இருக்கும் தீவிரமான வேட்கை - ஜோடனைகளற்ற வார்த்தைகளில் சொல்லப்படும் போது வாசகன் எந்த மண்ணைச் சேர்ந்தவனாக இருப்பினும் அவனவனுக்கான மண்ணின் மீதான தீராத வேட்கையை உண்டு பண்ணக் கூடிய வரிகள். கவிதையின் கடைசி வரிகளை நாம் கடந்துவிட்டபோது நம் கால்கள் நம் மண்ணில் வேர்விடத் தொடங்கியிருப்பதை உணர முடியும்.

பகுதி-4

இப்படியாக, ஆரவாரமற்ற சோசலிசக் கவிதைகளின் அறிமுகம், ஆப்பிரிக்கக் கவிதைகளின் பரிச்சயம், இவையனைத்தையும் விட நேரடித்தன்மை கொண்ட இலங்கைக் கவிதைகளின் தாக்கம் ஆகியவை இங்குள்ள கவிதை முயற்சிகளுக்கான புதிய திசைகளை நமக்கு அறிமுகம் செய்தன.

நேரடித் தன்மை கொண்ட, கோஷங்களற்ற ஈழக் கவிதைகளுக்கான காரணிகளை நாம் ஆராய்வோமானால் நமக்குக் கிடைக்கும் மிகத் தெளிவான பதில்: பட்டறிவு. இங்குள்ள தமிழகத் தமிழர்களுக்கோ, இந்தியர்களுக்கோ, வீட்டை இழத்தல், தேசத்தை இழத்தல், போர் புரிதல், நிலையற்ற வானத்தின் கீழ் அலைந்து திரிதல், குடும்பத்தை விட்டுப் பிரிதல் போன்றவை இங்குள்ள சூழலுக்கு முற்றிலும் அந்நியமானது. உறுப்புகளை இழத்தலும் மண்ணில் வீழ்ந்து மடிதலும் ஈழத்தில் மிகச் சாதாரண நிகழ்வுகளாகும்.

கற்பனைகளின் அடிப்படையில் எழுதப்பட்ட கவிதைகள் வாசகனின்

மனத்தில் கற்பனையை வளர்த்தெடுக்கும். யதார்த்த நிகழ்வுகளின் அடிப்படையில் எழுதப்பட்ட படைப்புகள் வாழ்க்கையை அதன் முழுமையான வீரியத்துடன் எடுத்து வைக்கும். தமிழ்நாட்டிற்கு 'போர்' என்பது சங்ககால நிகழ்வுகளை நினைவுப்படுத்துவதாகவும், பத்திரிக்கைகளில் மட்டுமே வாசித்தறிந்து கொள்ளக்கூடியதுமான ஒன்று. ஆனால், ஈழத் தமிழர்கள் எப்போதும் கையில் துப்பாக்கியுடன் அலையவேண்டிய நிலையில் இருப்பவர்கள். அவர்களுடைய வாழ்தலுக்கான வேட்கையின் வேர்களை அவர்களின் வாழ்தலுக்கான சூழல் பிடுங்கி எறிந்துவிட்டது. ஈழத்து நாற்றங்காலில் இருந்து பிடுங்கப்பட்ட மனிதப் பயிர்கள் உலகின் பல்வேறு நாடுகளில் முகமிழந்து அனாதைகளாக நடப்பட்டபோது, அன்னிய தேசங்களில் வாழ்தல் ஏற்படுத்தும் வெக்கை, அவர்களுக்கான சொந்த மண்ணை, ஒரு குழந்தை தன் தாயைத் தேடுவதைப் போலத் தேட வைக்கிறது. இது அவர்களின் ஜீவ மரணப் போராட்டம். ஒரு போராட்டத்தில் உருவாகும் கவிதை நிஜமான கவிதையாகிவிடும். அதில் ஜீவன் இருக்கும்.

தமிழுக்கு இவ்வாறான பல புதிய உருவ உத்திகளைக் கொண்ட 'நேரடித்தன்மை வாய்ந்த கவிதைகள் அறிமுகமாகின்ற வேளையில், "கதைப்பாடல்கள்" என்ற புதிய வடிவம் கொண்ட எளிமையான பாடல்கள், இசைத்தன்மை கொண்டவையாக தமிழ்நாட்டில் அறிமுகமாயின. இத்தகைய கதைப்பாடல்கள் தமிழ் மக்களிடையே பரவலாக்கப்பட்ட ஒன்று எனினும் ஒரு பகுதியில் வாழும் தமிழருக்கு வேறொரு பகுதியில் வாழும் மக்களின் கதைப்பாடல்கள் அறிமுகமின்றி இருந்திருக்க வாய்ப்புண்டு.

ஒவ்வொரு மொழியிலும்,எழுத்து தோன்றுவதற்கு முன்பு பாடல்களும் கதைகளும் தோன்றத் தொடங்கின. அவற்றில் சில கதை வடிவத்தில் பாடப்பட்டன. இவ்வாறுதான் கிரேக்கக் காவியங்கள் தோன்றின என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். பாரதம், ராமாயணம் என்ற காவியங்களில் முடிவான எழுத்து வடிவம் பெறுவதற்கு முன்பு இவ்வாறே பேச்சு வழக்கில் இருந்து வந்தன. சிறு சிறு குழுவினருடைய நாட்டுப் பாடல்களாக வழங்கி வந்த கதைகள், அக்குழுக்கள் ஒன்றுபட்டு பெரிய இனமாக மாறும்போது, இணைப்புப் பெற்று காவிய ரூபம் பெறுகின்றன. சிலப்பதிகாரத்தில் உபகதைகளும் காவிய காலத்திற்கு முன்பு செவி வழியாக வழங்கி வந்தன. காவியத்தில் காணப்படும் பாடல்களும், வரிப்பாடல்களும், குரவைப் பாடல்களும், தெய்வ வணக்கமும், அம்மானைப் பாடல்களும், துன்ப மாலை என்ற பகுதியும் வெகு காலத்திற்கு முன்பு வழங்கி வந்த நாட்டுப் பாடல்களின் கருத்தையும் அமைப்பையும் தழுவியன என்று உறுதியாகச் சொல்லலாம் என்று பேராசிரியர் நா.வானமாமலை அவர்கள் கூறுவார்.

ஒவ்வொரு மொழியின் இனத்தின் ஆதிக் கலை வெளிப்பாட்டு வடிவம் தான் கதைப்பாடல்கள். பேச்சு வடிவத்தில் அமைந்திருக்கும் கதைப் பாடல்கள் எளிமையாகவும் நம் அன்றாட வாழ்வின் இன்ப துன்பங்களை முன்னெடுத்து வைப்பனவாகவும் அமைந்துள்ளன.

கதைப்பாடல்கள் அனைத்துத் தரப்பினராலும் (இந்தியாவின் அனைத்துச் சாதி அமைப்பினராலும்) எடுத்துக் கையாளப்பட்டிருந்தாலும், தலித்துகள் மற்றும் ஒடுக்கப்பட்ட பாமரர்களின் கையாளுதலில் உணர்ச்சிமிக்க பாடல்களாக விளங்கின.

"பாமரர் படைப்பிலேயே உயர்ச்சிமிக்கப் பாடல்கள் தாலாட்டும் ஒப்பாரியும்". ஒன்று வாழ்க்கையின் தொடக்கம் பற்றியது. மற்றொன்று முடிவு பற்றியது. ஒன்று தாயின் இன்பத்தை வெளியிடுவது. மற்றொன்று உறவினர் துன்பத்தை வெளியிடுவது என்று பேராசிரியர் நா.வானமாமலை அவர்கள் சொல்வார்கள் (பார்க்க: தமிழர் நாட்டுப் பாடல்கள், நா. வானமாமலை, 1964: பக்.30)

தமிழகத்தில் டாக்டர் கே.ஏ.குணசேகரன் அவர்கள் தொகுத்து வெளியிட்ட "அக்னி ஸ்வரங்கள்" தமிழகத்தில் பெரிய தாக்கத்தை உண்டு பண்ணியது. கலை விழாக்களிலும் பல்கலைக்கழக வளாகங்களிலும் இந்த இசைப்பாடல்கள் இசைக்கப்பட்டன.

இப்படிப்பட்ட கதைப்பாடல்களை, விவசாயக் கூலிகளாக இருக்கும் தலித் இன மக்கள் விவசாய வேலைகள் இல்லாத நாட்களில் அல்லது ஊரில் இழவு விழுந்த நாட்களில் அவ்வீடுகளில் தாம்புரு அடித்து ஒப்பாரிப் பாடல்களாகப் பாடுவார்கள் இறந்தவர்களின் வீடுகளுக்கு வந்திருக்கும் உறவினர்கள் துக்கம் மறக்க இவர்கள் தாம்புரு என்னும் கருவியை முழக்கி, இசை வடிவத்திலான இப்பாடல்களைப் பாடுவார்கள். இவர்களின் பாடல்களில் பாடுபொருளாக ஒரு வீரனின் சாவு (உதாரணம்: கருவாய்த் தேவன் கதைப்பாடல், மணிக்குறவன் கதைப்பாடல்) போன்ற நிகழ்வுகளும் பொதுவான சமுதாய அவலங்களும் (உதாரணம்: தனுஷ்கோடி அழிந்த கதைப்பாடல், வைகை வெள்ளத்துயர் கதைப்பாடல்) நிறைந்திருக்கும்.

ஒரு மிகப் பெரிய சோக நிகழ்ச்சி பாடப்பட்டு, தங்களின் உறவினர் இறந்ததன் சோக நிகழ்ச்சியின் கனத்தை மாற்ற இவ்வகையான பாடல்கள் பாடப்பட்டன.

இழவு வீடுகளில் உள்ள வேலைகளை (உதாரணம்: அருகாமையில் உள்ள இறந்தவரின் உறவினர் உள்ள ஊர்களுக்கு இழவு சொல்லப்போவது, இழவு வீட்டில்

சாவு மேளம் / தாம்புரு அடிப்பது, இழவு வீட்டிற்கு வரும் வெளியிட ஆட்களை கொட்டு மேளத்துடன் எதிர்கொண்டு அழைப்பது, கூலிக்கு மாரடிப்பது போன்ற வேலைகள்) உள்ளூர்த் தோட்டிகள் செய்வார்கள். அப்போது, இழவு வீட்டிற்கு வருபவர்களை வரவேற்கும் வேளையிலும், கூலிக்கு மாரடிக்கும் வேளையிலும் கொட்டு / தாம்புரு அடித்துப் பாடல்களைப் பாடுவார்கள். அப்போது கதைப்பாடல்கள் பாடப்படும்.

இந்தக் கதைப்பாடலின் கூறுகளை உள்வாங்கிக் கொண்டு இசைக் கோர்வைக்கான எளிய சந்தங்களை ஏற்றுப் பாடப்பட்ட பாடல் தொகுப்புதான் 'அக்னி ஸ்வரங்கள்' பாடல் தொகுப்பாகும். இந்தப் பாடல் தொகுப்பில் இடம் பெற்றுள்ள இசைப் பாடல்களில் தனித்த அடையாளத்தோடு நிற்பவை என்று குறிஞ்சாக்குளம் கொலைச் சிந்து (ரவிக்குமார்), 'தொட்டிலே தீட்டுப்படுமாம்' மற்றும் 'இந்துச் மதச் சிறையினிலே அரிசனங்க நாங்க', (தலித் சுப்பையா 1991) போன்ற பாடல்களைச் சொல்லலாம். குறிஞ்சாக்குளம் கொலைச் சிந்துவின் வரிகளில் சில:

பறப்பயலெல்லாம் கோயில் கட்டிப்புட்டா
அவமானம் நமக்குன்னார் - ஆமாம்
அவமானம் நமக்குன்னார் என்று
கூறியே கிளம்பினார் நாயுடு வெறியர்கள்
சாமியைத் தடுப்பதற்கு - நம்ம
கோவிலைத் தடுப்பதற்கு
***

இந்து என்பார்கள் தமிழன் என்பார்கள்
எவரையுமே காணோம் ஒதவிக்கு
எவனையுமே காணோம் - அந்த
கொலைகாரப் பாவிங்க கொழுத்து திரியரான்
கோர்ட்டுக்கும் வரக் காணோம் - கேசு
கோர்ட்டுக்கும் வரக் காணோம்
***

சட்டம் நமக்கில்ல சர்க்காரு நமக்கில்ல
எவங்கொடுப்பான் நீதி-நமக்கு
எவங்கொடுப்பான் நீதி - நாமதான்
கணக்குத் தீக்கணும் காரியம் முடிக்கணும்

துணியட்டும் நம் சாதி - சாவுக்கும்
துணியட்டும் நம் சாதி
***

இந்த வரிகளில் மிகவும் எளிமையான வார்த்தைகள் காணக் கிடைக்கின்றன. சந்தம் தேடி அலையாத பாடல் வரிகள், வலிந்து கட்டப்படாத சம்பவக் கோர்வைகள், நம் நாட்டின் புரையோடிப்போன சாதி சழக்குச் சார்ந்த சமூக அவலங்கள் போன்றவை காணப்படுகின்றன. கடைசியில் இந்த தலித்துகளுக்கான விடுதலையும் சுட்டிக் காட்டப்படுகிறது.

மேற்கண்ட பாடலை இசைவடிவில் கேட்கும்போது ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்குப் புதிய பலம் கிடைத்து அவர்களுக்கான சமூக நீதியைக் கண்டு கொள்கின்றனர்.

ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுக்கான பாடலைத் தாங்களே பாடும்போது அழகியல் கடந்த உண்மையின் வெளிப்பாடு சாத்தியமாகிறது. இந்தக் கதைப்பாடல்களை ஆப்பிரிக்க இனத்தாரின் பல்வேறு இசைக் கோவைகளோடு இணைத்துப் பார்க்க முடியும்.

தலித் இனத்திற்கான விடுதலையும் ஆப்பிரிக்க ஒடுக்கப்பட்ட இனத்திற்கான விடுதலையும் பற்றி வெவ்வேறு தளங்களில் ஒடுக்கப்பட்ட இனத்தாலேயே தங்களின் பூர்வாங்க இசை வடிவங்களோடு பாடல்கள் வெளிவரும்போது அவை இதுவரையில் அறியப்பட்ட கவிதைகளுக்கான அனைத்து மரபுகளையும் உடைத்து வெளிப்படுகிறது.

ஒடுக்கப்படும்போதுதான் மீறல்கள் நிகழும். இது அடிப்படையான விஞ்ஞான அளவியல் கூறு:

ஒதுங்குவதும்
ஒதுக்குவதும் பார்ப்பனீயம்
அத்துமீறலும்
ஐக்கியப்படுதலும்
கலகம் புரிதலுமே
தலித்தியம்

என்ற வரிகள் தலித்தியத்தின் அடிப்படையான உளவியல் (பார்க்க: குதிரை வீரன் பயணம், வே. மு. பொதியவெற்பன், 1994 பக்.-7) கூற்றை முன் வைக்கிறது.

தம்முடைய வாழ்க்கை சார்ந்த தங்களின் விடுதலைக்கான கவிதையைத்

தாங்களே எழுதும்போது மரபுகளை மீறிய புதிய கவிதானுபவம் சாத்தியமாகிப் புதிய மரபுகளுக்கான தளத்தை முன் வைக்கிறது. அப்போது தர நிர்ணயம் சார்ந்த மதிப்பீடுகள் நிராகரிக்கப்படுகின்றன.

கடந்த 20 ஆண்டுகளுக்குள்ளாகத் தலித் மற்றும் தலித் அல்லாதோரால் எழுதப்பட்ட தலித் கவிதைகள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் வெளிவந்துள்ளன. குறிப்பாக தலித்துகளால் எழுதப்பட்ட தலித் கவிதைகள் மிகவும் குறைவானவையாகும். குறிப்பிட்டுச் சொல்லும்படியான கவிதைத் தொகுப்புகளாக ஒன்றும் இல்லை எனினும் தொகுப்பாக்கம் நிகழ்ந்த மூன்று கவிதைத் தொகுப்புகளைச் சொல்லலாம்.

1. யுத்தம் தொடரும்-(க.சுப்பையா, ஸ்பார்டகஸ் பதிப்பகம், பாண்டிச்சேரி 1991).

2. சில தலித் கவிதைகளும்-(ராஜமுருகுபாண்டியன், அன்னம், சிவகெங்கை 1994).

3. நிர்வாண இலக்கியம்-(கே.வீரபாண்டியன், வெள்ளி வெளியீடு, கோமங்கலம் 1994).

இவை தவிர உஞ்சை ராசன் என்பவரால் நடத்தப்படும் தலித் இலக்கிய இதழில் வெளியான சில கவிதைகள் மற்றும் பல்வேறு பிரசுரங்களில் வெளியான தலித் அல்லாதோர் எழுதிய தலித் கவிதைகள் நமக்குக் கிடைத்துள்ளன. இவைகளில் தலித்தியம் சார்ந்த கருத்துக்களை முன் வைக்கும் தரம் வாய்ந்த கவிதைகளாக நிலைத்து நிற்கக்கூடியவையாக உள்ள கவிதைகள் இருபது தேறும். சில கவிதைகளை நாம் பார்க்கலாம்.

சிறப்புக் கவிஞர்கள் தலித்தியம் குறித்துப் பாடியபோதெல்லாம் ஜீவனற்ற வார்த்தைக் குவியல்களால் அலங்கார மேடை போட்டனர். அவர்களால் தலித்துகளின் ஆன்மாவின் மூலை முடுக்குகளை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. ஒடித்துப்போட்ட வெற்று வாக்கியங்களாகவோ அல்லது சவால் விடும் சவடால் வார்த்தைகளாகவோ அவை இருந்தன.

பொதுவாக, வானம்பாடிக் கவிஞர்களும் அதற்குப் பின் வந்த கொசுறு கவிஞர்களும் தினசரிச் செய்திகளை வாசித்துவிட்டுக் கவிதை எழுதுபவர்களாகவே இருந்து வந்துள்ளனர். கம்போடியாவில் கலவரம் என்றால் இவர்களின் பேனாக்கள் கண்ணீர் சிந்தும். ஒவ்வொரு முறையும் சாதிக் கலவரத்தினால் தலித்துகள் எரிக்கப்படும்போது இவர்களின் பேனாக்கள் புத்துயிர் பெற்று வீர முழக்கம் செய்யும்.

தலித் கவிதைகள் என்று நாம் தேடும்போது நமக்குக் கிடைக்கும் தலித் அல்லாதோர் எழுதிய தலித் கவிதைகளின் பேசுபொருள் தலித்துகள் இனக்கலவரத்தின்போது எரிக்கப்பட்ட செய்திகளாகத்தான் இருக்கின்றன. உதாரணமாக:

தில்லையில் எரிந்து சிலம்புத்
தீயிலே எரிந்து தஞ்சைப்
பிள்ளைகள் எரிந்து, பீகார்ப்
பிணங்களாய் எரிந்து, குமரி
நெல்லையில் எரிந்த தீயே
நிற்பது எப்போ? ஆளும்
டில்லியை எரித்தால் தானா
தீயே நீ தணிந்து நிற்பாய்? *(தணிகை செல்வன் 1983)*

கவிஞரின் வர்க்கப் பார்வை தலித்துகள் எரிக்கப்பட்டதற்கான அவலத்தையும் மீறி டில்லியை எப்போது கைப்பற்றுவது என்ற கரிசனத்தோடு வெளிப்பட்டு இருக்கிறது. தீ எரியும் சம்பவங்கள் அடுக்கடுக்காகச் சொல்லப்படுகின்றன. இதை அடுக்கிக் கொடுப்பதிலும் கவிஞருக்குத் தடுமாற்றம் அல்லது தீச்சம்பவங்களாகக் அடுக்கிக் கொடுக்கும் முனைப்பில் மதுரைத் தீயையும் சேர்த்து, தான் சொல்ல வந்த சாதிக் கொடுமை என்னும் கோர நிகழ்வின் வீச்சைத் திசை திருப்பி விடுகிறது. அடுத்து,

"புண்பட்ட போடிநாயக்கனூர்" என்னும் கவிஞர் தமிழன்பனின் கவிதையில் எரிந்துவிட்டது எத்தனை பிணம் என்று கணக்குப் போட்டுப் பார்க்கச் சொல்கிறார்.

கணக்குப் பார்க்கத் தெரியாவிட்டால்
மார்பில் அடித்துக்கொள்ளும்
கைகளைக் கேள்!
பாடைக்குப் பயன்பட்ட
மூங்கில்களைக் கேள்! *(தமிழன்பன் 1989)*

இந்தக் கவிதையில் பற்றியெரிந்த பிணவாடையைவிட, இப்படிப்பட்டதொரு கொடுமை நேர்ந்ததற்கான அவலம் மறந்த அலங்கார வாடைதான் தூக்கலாகத் தெரிகிறது. வீடுகள் பற்றிக்கொண்டு எரியும்போதும் இவரின் கவிதைகள் சந்தம் தேடி அலையும்.

நெருப்பு வைத்து
இருப்புகள் எரித்தாய் (தமிழன்பன் 1989)

இருப்பு என்ற சொல்லாடல் தலித்துகளின் வாழ்க்கை முறைக்குக் கொஞ்சமும் தொடர்பில்லாத ஒரு சொல்லாடல். தலித்துகளின் தங்குமிடம் வெறும் குடிசைதான். தென் தமிழ்நாட்டில் "குச்சுலு" என்று சொல்வார்கள்.

கூதல் அடிக்குதடா கெழவா -ஒரு
குச்சுலு கட்டடா கெழவா

என்ற வரிகள் செவிவழியாக இன்றும் புழக்கத்தில் உள்ள தலித் சொல்லாடல்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் பரவலாகப் பேசப்பட்ட ஒரு நீண்ட கவிதை: 'அந்த நந்தனை எரித்த நெருப்பில் மிச்சம்' என்னும் தமிழன்பனின் கவிதையாகும்.

இந்தக் கவிதை ஒரு கதைப்பாடல் போல் எழுதப்பட்டுள்ளது. இந்தக் கவிதையிலும் கவிஞருக்குத் தலித் இன மக்களின் வாழ்க்கை கட்டவிழ்ந்த பாடில்லை. மாறன் என்னும் பறைச்சேரி படித்த இளைஞன், பண்ணையாரிடம் கூலி உயர்வு கேட்டதால், அவன் தன் ஜனங்களோடு சேரியில் எரிக்கப்படுகிறான். இங்குக் கவிதையின் மையம் சாதிப் பிரச்சனை என்னும் தளத்தைவிட்டு வர்க்கப் போராட்டம் போலக் காணப்பட்டாலும், சாதிப் பிரச்சனையின் அழுத்தம் இதில் காணப்பட்டது.

அரிசனம் என்பது
அரசியல் வழக்கு
பறையன் என்பதே
பண்ணையார் வழக்கு (தமிழன்பன் 1982)

போன்ற வரிகள் நேரிடையாகவே சாதீயம் பேச முன்வந்தன. ஆனால், இங்கு பிரச்சனைகளும், அவலங்களும் ரொமாண்டிக் தளத்துடன் அணுகப்பட்டன. அடுத்து,

தமிழன்பனின் வேறொரு கவிதையான 'ஒரு நெருப்புக் குச்சியின் ஜீவிக் கழினி'ல் இருந்து சில வரிகள்:

தாழ்த்தப்பட்டவர்களே
அரிசனங்களே
உங்களுக்கு

விமோசனம் - இந்த
ஒருவேளை
உணவில்
கொடியசைக்கிறது (தமிழன்பன் 1982)

இக்கவிதை வரிகள், தங்களின் மேல் சாதிக் கட்டுமானத்தில் பீடங்களில் நின்றுகொண்டு முழங்கும் அறிக்கைகளாகத் தென்படுகின்றன. க. ந. துறைவன் எழுதிய 'சாதி விலங்கு' என்னும் கவிதை தன்னை தலித் கவிதையாக அடையாளம் காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றது கவிதையின் முதல் மூன்று வரிகளில்.

என் பெயருக்குப் பின்னால்
பட்டங்கள் வேண்டாம்
சாதிப்பட்டங்கள் வேண்டாம் (துறைவன் 1982)

கவிதையில் பேசப்படும் சாதி, தலித் அல்லாத வேறு உயர் சாதியைக் குறிப்பதாக உள்ளது. ஏனென்றால், தலித்துகள் தங்கள் சாதிப் பெயரைத் தம் பெயருடன் இணைத்துக் கொள்வதில்லை. அடுத்து வரும் 9 முதல் 16வது வரி வரை:

அறியாப் பருவத்தில் பள்ளிக்கு
அனுப்பப் பட்டபோது
அரசின் சில சலுகைக்காக
அவ்விண்ணப்பப் பாரத்தில்
என் அனுமதியின்றி
முதல் தடவையாக
சாதி என்னும் முத்திரை
அங்குதான் குத்தப்பட்டது (துறைவன் 1982)

என்று பள்ளியில் சாதியின் பெயர் பதிவு செய்யப்பட்டதைச் சொல்லும்போது, அரசின் சில சலுகைக்காக என்னும் வரி, கவிதையில் பேசப்படும் சாதி தலித்தோ என்று 'ஐயுற' வைக்கிறது. மேலும், பிற்படுத்தப்பட்ட அதாவது சாதி இந்துக்களையும் குறிக்கிறது. கவிதை மேலும்

அது தொடர்ந்து
வேலைவாய்ப்பிலும்
பதவி உயர்விலும்
பகையாகவே வளர்ந்து
நட்பில் கறைபடிந்து

நல்லிதயத்தை
ரணப்படுத்தியது (துறைவன் 1982)

என்று பேசும்போது, கவிதையில் பேசப்படும் சாதி தலித் இனம்தான் என முடிவுக்கு வர இடமிருக்கிறது. ஆனால் கவிதையின் கடைசி வரிகள்

இனியும்-
என் சமாதியிலேனும்
சாதி முத்திரை
சலவைக் கல்லில்
பதிக்க வேண்டாம் (துறைவன் 1982)

என்று முடியும்போது இது தலித் சார்பான கவிதை அல்ல என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. தலித்துகளுக்கு சமாதி ஏது? சலவைக்கல் ஏது? அதிலும் சாதிப் பெயர் பொறிப்பதேது?

தமிழில் தலித்துகளுக்கான கவிதை இப்போதுதான் வர ஆரம்பித்திருக்கிறது. ஒரு புதிய உத்வேகத்தோடு, கவிதைக்கான அனைத்து மரபுரீதியான அணிகலன்களையும் உதறிவிட்டு வெளிப்பட்டு இருக்கிறது. இனிமேல் இந்தக் கவிதைகள் தொகுப்பாக்கும் அளவிற்கு உற்பத்தி செய்யப்பட்ட பின்னர் தான் ஒரு பொதுவான விமர்சனத் தளத்திற்கு அதைக் கொண்டு வர முடியும். தற்சமயம் நிறப்பிரிகை இலக்கிய இணைப்பு-தலித் இலக்கியச் சிறப்பிதழில் வெளிவந்துள்ள கவிஞர் பழமலய் அவர்களின் அய்ந்து கவிதைகள், தலித் கவிதைகளாக அடையாளப்படுத்தப்படுகிறது.

தமிழர்க்கு அதிர்ச்சி தரத்தக்க வகையில், முற்றிலும் புதிய தலித்துகளின் வாழ்வு முறைக் கூறுகளை எடுத்து வைக்கிறார் பழமலய்.

தலித்துகள், ஊருக்குள் நடந்து செல்கையில் உயர்சாதி வெள்ளாளர்களின் போக்கு அவர்களின் அழுத்தம் கொடுக்கும் வார்த்தையில் தங்களின் மேலாண்மைத் தனத்தையும், தலித்துகள் ஒடுக்கப்படுதலையும், மிகவும் சிறப்பாகக் 'கீழத்தெரு தங்கவேல்' என்னும் கவிதையில் பார்க்கலாம்.

வெள்ளை வேட்டி கட்டினால்
'என்னடா தங்கவேலு' என்பவர்கள்
சட்டையோடு பார்த்தால்,
'என்னடா' ... என்பார்கள் (பழமலய், 1994)

'என்ற வரிகளில் தலித்துகள் மேல்கட்டுமானச் சமுதாயத்தில் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பது தெளிவாகும்.

இன்னும் தலித்துகளின் மீறல் கலாச்சாரத்தைக் கூறும்போது, அங்கத் தொனியுடனான மிகவும் நுட்பமாகப் பின்னப்பட்ட கவிதை 'இடங்களில் நுழைவது'.

இடங்களில் நுழைவதற்கு
எவ்வளவோ கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது
முன்னேறுபவர்களிடமிருந்து
(எருமைகளிடமிருந்தும்) *(பழமலய், 1994)*

அடுத்து,

'பறவீரன்' என்னும் கவிதை, இசைக் கோர்வையையும், அதனை அடியொற்றிய சந்த வரிசைகளையும் துறந்துவிட்ட புதிய வடிவிலான 'கவிதைப்பாடல்' வகையைச் சேர்ந்ததாகும்.

என் ஆர்வங்கள் அறிந்து,
(பண்ணுருட்டி அருகே சேமக்கோட்டை
ஆசியாவிலேயே பெரிய சுடுமண் குதிரைகள்,
இந்திரன் சொல்லியிருந்தார்
மெனக்கெட்டுப் போய்ப் பார்த்தேன்.

நான்கு குதிரைகளில் இரண்டும்
ஒரு யானையும் நிற்கின்றன
மரங்களின் வேர்கள் கிளப்பி, விரைவிலேயே
இவையும் காற்றோடு பறந்துவிடலாம்.
பார்க்க விரும்புகிறவர்கள்
உடனே போய்ப் பார்க்க வேண்டும்.

கண்மணி குணசேகரன்
கடிதம் எழுதியிருந்தார்.
'மணைக் கொல்லைக்கு' அழைத்திருந்தார்.
ஒரு முற்பகலில்
ஊரைச் சுற்றிக் காட்டினார்.

ரெட்டியார் கிராமம்
பத்துப் பன்னிரண்டு போலத்
தோட்டமும் வீடுமாகப் பெரிய ஓட்டு வீடுகள்
இடையிடையே சில இடிந்து கிடந்தன.
எருக்கு முளைத்திருந்தது.

'சாபம் அய்யா -
கழுத விழுந்து பெரளணும்!
குடியத்துப் போவுணும்!
'இதான் பறவீரன் கோயில்
அது பறவீரன் குளம்
அந்த வீடு, இந்த வீடு இன்னு
சில ரெட்டியாருங்க வந்து கும்புடுவாங்க

இங்க நின்ன ஒரு அழிஞ்சி மரத்துலதான்
தலகீழா தொங்கவுட்டு
வைக்கோலப் போட்டுக் கொளுத்துனாங்களாம்
இதான் அந்த நெலம்.
அந்தப் பஞ்சத்துலயும் இந்தக் கொல்லையில
அப்படி கரும்பு வெளஞ்சிருந்ததாம்

கோ, புலிநுறு-
அந்தப் பக்கத்துல இருந்து வந்துதான்
ஒரு ராத்திரி கம்ப அறித்துட்டானாம்.
கேள்விப்பட்டு வந்த அவன் பொண்டாட்டி
- நெறமாத கர்ப்பிணி
'பசிக்குத் திருட வந்தவன, இப்படி
பண்ணிப்புட்டீங்களமா பாவிவோளா' ன்னு
மண்ண வாரிவுட்டு அழுது புரண்டாளாம்.
அப்ப,
அடிச்சி உட்டுடலாமுன்னு தடுத்தவங்க குடும்பங்க
இப்ப வித்து மாறிக்கிட்டிருக்குது.
கொளுத்துனவனுவோ வீடுங்க
எருக்கு மொளச்சி கெடக்குது
நின்று நினைத்தேன்:
கோயில், அடையாளம் என்று நின்ற வேல்,
நாவாக அசைந்து சொன்னது.

'பறையன்,
பறையனா இருந்தா கொளுத்துவானுங்க,
வேரறுக்கும்
வீரனா இருந்தா கும்புடுவானுங்க'. (பழமலய் 1994)

இந்த மிக நீண்ட கவிதையில் (54 வரிகள்) கீழ்க்கண்ட புதிய கூறுகளை நாம் அவதானிக்க முடியும்.

தலித் கவிதையின் உருவம் சார்ந்த தளத்தில், கிராமங்களில் இன்றும் நிலவி வரும் கதைப்பாடல் தொனியை உள்ளடக்கியும், புதுக்கவிதைக்கான வடிவங்கள் சிதைக்கப்பட்டு, சிறு சிறு குறிப்புகளாகத் தொகுக்கப்பட்ட புள்ளி விவரங்களைத் தந்தும், 'கோயில் அடையாளம் என்று நின்ற வேல் நாவாக அசைந்து சொன்னது' - என்ற வரிகளில் புராணிகக் கூறுகளையும் கொண்டு இயங்குகிறது. இக்கவிதை கிராம நிலப்பரப்பை விளக்கும் விவரணையாகவும் விரிந்து நிற்கிறது.

உள்ளடக்கம் என்ற தளத்தில், நிறைய கருத்துக் கூறுகளையும் கொண்டுள்ளது.

தலித்துகளுக்கான மீறல் என்னும் விடுதலைக்கான வழியைச் சுட்டிக்காட்டி 'சாபம் இடல்' என்னும் கிராம மக்களின் மனதில் ஊறிக்கிடக்கும் நம்பிக்கையைச் (Myth) சொல்கிறது.

மேலும் ஆண்டான் அடிமை என்னும் வர்க்க ரீதியான உளவியலைத் தொகுத்துத் தருகிறது.

இக்கவிதையில், கவிஞர், ஒரு கிராமத்தில் நிலவி வரும் கோவில்சார்ந்த தொன்மங்களை உள்ளடக்கிய கதையைக் கேட்கிறார்.

அதன் நீட்சியாக, கவிஞரே வாசகனுக்கு ஒரு கதை சொல்லியாக (Narrator) நின்று, பழைய தொன்மங்களுக்கான புதிய கருதுகோள்களாகத் தன் கருத்தை அதே தொன்மங்களின் கூறுகளில் ஏற்றித் தலித்துகளின் விடுதலைக்கான வழிகளைத் தகவமைத்துச் செல்கிறார்.

இப்படிப்பட்ட - மரபுகளை உடைத்த புதுக்கவிதைக்கான மரபுகளை உடைத்த -இந்த மண்ணிற்கான அனைத்துக் கூறுகளோடும் கட்டமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள இக்கவிதை தமிழுக்குப் புதியது.

இனி, தமிழில் தலித்துகளுக்கான கவிதைகள் இதுபோன்ற புதிய முயற்சிகளில் வெளிப்படும் என்று எண்ண இடமுண்டு.

துணைநூற் பட்டியல்

இந்திரன், 1982. அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம் - தொகுப்பும் மொழிபெயர்ப்பும். சிவகெங்கை: அன்னம்.

சிவவாக்கியார், 1976. சித்தர் பாடல்கள். சென்னை : பூம்புகார் பிரசுரம்.

சுப்பையா, க., 1991. தலித் விடுதலைக்கான கவிதைகள். பாண்டிச்சேரி : ஸ்பார்டகஸ் பதிப்பகம்.

சேரன், 1983. இரண்டாவது சூரிய உதயம். சென்னை : பொதுமை வெளியீடு.

ஞானக்கூத்தன், 1973. அன்று வேறுகிழமை. சென்னை: பிரேம் பிரஸ்.

டாங்ளே, அர்ஜுன்., 1994. தலித் இலக்கியம் போக்கும் வரலாறும். சென்னை: தாமரைச்செல்வி பதிப்பகம்.

தணிகைச் செல்வன், 1983. ஒரு துண்டு இந்தியாவும் நானும். சிவகெங்கை: அன்னம்.

தமிழன்பன், 1989. நாம் இருக்கும் நாடு. சென்னை : பாப்லோ பாரதி பதிப்பகம்.

——————, 1982. அந்த நந்தனை எரித்த நெருப்பில் மிச்சம். பூம்புகார் பிரசுரம்.

துறைவன், க.ந., இனி. கவிதா பதிப்பகம்.

பொதியவெற்பன், வே.மு., 1994. குதிரைவீரன் பயணம்.

வானமாமலை, நா., தமிழர் நாட்டுப் பாடல்கள். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.

வீரபாண்டியன், கே., 1994. நிர்வாண இலக்கியம். கோமங்கலம் : வெள்ளி வெளியீடு.

ராஜமுருகு பாண்டியன், 1994. சில தலித் கவிதைகளும். சிவகெங்கை: அன்னம்.

24

தமிழ் நாவல்களில் தலித்தியம்

ராஜ் கௌதமன்

1. நோக்கம்

தமிழ் நாவல்களில் தலித்துக்கள் எனப்படும் ஒடுக்கப்பட்ட மக்கள் எவ்விதம் புனைந்து உரைக்கப்பட்டுள்ளார்கள் என்பது இக்கட்டுரையின் பொதுவான நோக்கமாகும். சிறப்பாகத் தலித் அல்லாத பார்ப்பன-வேளாளக் கதை சொல்லிகளின் நாவல்களில் இது எவ்வாறு செயல்படுகிறது என்பதையும், தலித்துக்களின் படைப்புக்களிலிருந்து எவ்விதம் வேறுபடுகிறது என்பதையும் இக்கட்டுரை விளக்க முற்பட்டுள்ளது.

2. தலித் : விளக்கம்

"தலித்" என்ற சொல்லால் சுட்டப்படும் மக்கள் திரள், சமகாலத்தில் பலவகையினராக இருப்பினும், இக்கட்டுரையில், பிறப்பால் தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு அதன் காரணமாக வாழ்நாள் முழுவதும் பொருளாதாரம், பண்பாடு ஆகிய அடிப்படைகளில் உரிமைகள் மறுக்கப்பட்டு அழுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் தாழ்த்தப்பட்ட சாதி மக்களே கவனப்படுத்தப்படுகின்றனர். தமிழ்ச்சூழலில் சாதி அடிப்படையில் இவர்கள் பறையர், பள்ளர், சக்கிலியர் முதலானவர்கள் என்றும், இந்து வைதீக வருணாசிரமத்தின் அடிப்படையில் தீண்டத்தகாத பஞ்சமர் அல்லது அவருணர் என்றும், காந்திய அரசியலின் அடிப்படையில் அரிசன் என்றும், இந்திய அரசியல் சாசன அடிப்படையில் அட்டவணை இனத்தார் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

3. புராணத்தில் தலித்

தமிழக வரலாறு என்பது பெரிதும் அரசர்கள், நிலக்கிழார்கள், வைதீக உயர் சாதியார்கள், பெரும் உடைமையாளர்கள் முதலானவர்களின் பார்வையில்

பதிவாகியுள்ளது. இவர்களை நாயகர்களாகக் கொண்ட தமிழ் இலக்கியப் பரப்பில் உழைக்கும் ஒரப்பகுதி தலித் மக்கள் இடம் பெற்றதாகக் கூற முடியாது. அரிதாக இடம் பெற்றாலும் அது மேற்கூறியவர்களின் பார்வையில் வேறு நலன் கருதியே இடம் பெற்றதாகச் சொல்லலாம். குறிப்பிட்டுச் சொன்னால் "பெரியபுராணத்தில்" தலித் நந்தனைச் சொல்லலாம். மேலும், இப்புராணத்தில் ஏகாலி, குறவேடன், பாணப்புலையன் ஆகிய தலித்துக்களும் சைவ அடியார்களாகப் புனையப்பட்டுள்ளார்கள். இவர்களும் கூட வைதீக மதத்திற்கு எதிரான சமண, பௌத்த மதங்களை எதிர்கொண்டு, சாதி வேற்றுமைகள் கடவுளுக்கு முன் இல்லை; யாரும் பக்தி கொண்டால் முக்தி பெறலாம் என்ற சீர்திருத்த உபாயம் கருதிப் படைக்கப்பட்டார்களே அல்லாமல் சாதி அமைப்பை மீறிய விடுதலை நோக்கில் அன்று. இந்த அடியார்களின் தலித் சாதிப் பிறப்பு தீட்டானது. இந்தச் சாதித் தீட்டைக் கடவுளின் குறுக்கீட்டால் அகற்றிய பின்னரே கதிமோட்சம் கிட்டுவதாகப் புராணம் கற்பித்தது. இந்தக் கற்பிதமானது அன்றைய வைதீக மதத்திற்கு இரட்டை ஆதாயம் தந்தது. ஒன்று, சாதி இல்லை என்று கூறிய சமண, பௌத்த மதங்களுக்குச் சரியான பதிலடியாகவும், இரண்டு, வைதீக வருண, சாதி அமைப்பைப் பேணுகின்ற தற்காப்பு நடவடிக்கையாகவும் இருந்தது.

4. இந்து சமூக சீர்திருத்தத்தில் தலித்

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் தோன்றிய நவீனத்துவத்தின் ஒரு பகுதியான நாவல், சிறுகதை இலக்கியங்களில் தலித்துக்கள் ஓரளவிற்கேனும் இடம் பெறலானார்கள். இதுவும் கூட இக்காலகட்டத்தில் ஆங்கிலக்கல்வி கற்றுப் புதிதாக உத்தியோகம் பார்க்க வாய்ப்புக் கிடைத்த பார்ப்பன- வேளாள எழுத்தாளர்களால் சாத்தியமானது. மேற்கத்திய தாராளவாத - மனிதாபிமான - கிறித்தவப் பண்பாட்டின் தாக்கத்திலிருந்து வைதீக இந்துப் பண்பாட்டை மீட்டுப் புனரமைப்புச் செய்த இந்த ஆசார சீர்திருத்தத்தின் ஓரங்கமாக இது இருந்தது. சாதி முறையைப் பேணிக் கொண்டு அது அனுமதிக்கின்ற அளவிற்குத் தலித் முன்னேற்றம் ஏற்கப்பட்டது. இதனால் ஆங்கிலேயர் காலத்துப் பார்ப்பன - வேளாள அறிவாளிகளின் நாவல்களில் இவர்களுடைய குரல்களின் வழியாகத் தலித்துக்களின் குரல் ஒலிக்கத் தொடங்கியது. பக்திக் காலத்தில் நடந்தது போலவே, இக்காலத்திலும் புறத்தாக்குதலிலிருந்து வைதீகப் பண்பாடு தன்னைப் பாதுகாத்து நீடிக்கச் செய்யும் தற்காப்பு நடவடிக்கையின்பாற்பட்டதாக இது அமைந்தது.

ஆங்கிலேயர் வருகைக்கு முன், வைதீக சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வான சாதி அமைப்பில், ஒரு சாதிக்குள்ளே சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் அனுசரிக்கப்பட்டதேயன்றி, இரண்டு சாதிக்களுக்கிடையில் அனுசரிக்கப்பட்டதில்லை. புதிதாகப் பரவிய மேற்கத்தியப் பண்பாடானது

பொருளாதாரம், இனம், பால் அடிப்படையில் வித்தியாசங்களைப் பேணியபோதிலும் கொள்கை அளவில் அது வேறுவகையான ஏறுவரிசை முறையைப் பேணவில்லை. ஆங்கில ஆட்சியின் நடுத்தரவர்க்க உத்தியோகங்களுக்கும், கிறித்தவ மதத்திற்கும் பிறப்பால் அமைந்த சாதியத் தகுதி தேவையற்றதாக இருந்தது. தமிழக வரலாற்றிலேயே இந்தக் காலகட்டத்தில் தான் தலித்துக்களுக்குப் பொருளாதார ரீதியில் முன்னேறக்கூடிய வாய்ப்பு ஏற்படலாயிற்று. ஆங்கிலக்கல்வியும், உத்தியோகமும், கிறித்தவ மதமும் தலித்துக்களுக்கு இந்து வருணாசிரம அமைப்பின் கொடுமைகளிலிருந்து மீளுவதற்கான புதிய வழிகளைத் திறந்துவிட்டன. இதனை எதிர்கொண்டு இந்து மரபினைச் சீர்திருத்தித் தொடரச் செய்யும் முயற்சிகளில் ஒன்றாகவே படித்த பார்ப்பன-வேளாள அறிவாளிகளின் எதார்த்த வகைப்பட்ட நாவல்கள் அமைந்தன.

5. தலித்தியம் : விளக்கம்

"தலித்தியம்" என்ற நவீன சொல்லாட்சி அல்லது கருத்தாக்கம் என்பது அடிப்படையான பண்பாடு, அரசியல் பொருளாதார மாற்றத்தை வலியுறுத்துவதாகும். இந்துப் பண்பாட்டில் உள்ள சாதி என்பது வெறும் பண்பாட்டு அம்சமாகவன்றி மேற்கில் கூறப்படும் பொருளாதார அம்சமான வர்க்கத்தையும் உள்ளடக்கிய ஒரு நிறுவனமாகும். இங்கே சாதி முறை அகலுவது என்பது வர்க்கமுறை அகலுவதோடு உயிரோட்டமாகக் கலந்துள்ளது. தலித்தியம் இந்த நிலைப்பாட்டிலிருந்து உருவாக்கம் பெறுகிறது.

சாதியில் உயர்வு தாழ்வு இல்லை, சாதி வேறுபாடு பார்க்கக்கூடாது என்கிற சீர்திருத்தப் போக்கை மறுத்துச் சாதிமுறையே கூடாது என்கிற புரட்சிகர நிலைப்பாட்டின் வெளிப்பாடுதான் தலித்தியம். இந்த நிலைப்பாட்டிலிருந்து சாதி ஒழிப்பு என்ற அரசியலை இது முன்வைக்கிறது. சாதியைப்பற்றிப் பேசுவது இந்த அறிவியல் காலத்தில் அநாகரிகமானது, இது பிற்போக்கு என்று ஒதுக்குபவர்கள், தங்களுடைய உயர்சாதிப் பிறப்பால் அல்லது மிகையான மேற்கத்தியமயமாதலால் மேல்நிலை வசிப்பவர்களாகவே இருப்பதைக் காணலாம். பிறப்பால் இழிந்த சாதித் தகுதியும், அவமானமும் அடைந்து உரிமைகள் மறுக்கப்படுபவர்களால் சாதி ஒழிப்பு அரசியலைப் பேசாது இருக்க முடியாது. சாதி அரசியல் பற்றி மௌனம் காப்பது " நாகரிகம்" ஆகாது. அது உண்மையில் மிகத் தந்திரமான ஒரு உயர்சாதி அரசியலாகவே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது.

சாதிகள் இரண்டே, ஒன்று இடுபவர், மற்றது இடாதார் என்ற போதினும், அல்லது ஆண் சாதி, பெண் சாதி என்ற போதினும், அல்லது ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற போதினும், இவையெல்லாம் சாதி, குலம் என்பவற்றிற்கு ஓர்மையற்ற

அங்கீகாரத்தை அளிப்பதை உணரலாம். நுட்பமான இந்த உயர்சாதி அரசியலானது சாதி அமைப்பைக் கேள்விக்குள்ளாக்காமல், சாதி மாந்தரைச் சாதி பார்க்கலாகாது என்று பாவித்துக் கொள்ளச் சொல்லுகிறது. இவை அனைத்தையும் மறுக்கின்ற அறிவியல் கருத்தாக்கமே தலித்தியம். இது சாதிமுறையை , தீண்டாமையை, நிலைநாட்டிய இந்து வைதீக சமயம், அதன் பார்ப்பனியச் சித்தாந்தம், வருணாசிரமம், சாதியம், கடவுள், பொருளாதார ஏற்றத்தாழ்வு ஆகிய அனைத்தையும் கேள்விக்குட்படுத்தி நிராகரிக்கின்றது.

6. உயர்சாதி அரசியல்

தலித் அல்லாத பார்ப்பன-வேளாள எழுத்தாளர்கள் படைத்துள்ள நாவல்களில், மேற்குறித்த தலித்திய கருத்தாக்கத்தைக் கொண்டு தலித்துக்கள் எவ்வாறு புனைந்துரைக்கப்பட்டுள்ளார்கள் என்பதைக் காணலாம். தலித்துக்களை இவர்கள் புனைந்து உரைத்தவற்றில் தென்பட்டுள்ள அரசியலை உயர்சாதி அரசியல் என்று இக்கட்டுரை வரையறுக்கின்றது. இந்தவித உயர்சாதி அரசியல் தலித்தியத்தின் நோக்கில் தலித்துக்களுக்கு எதிராக வினையாற்றுவதைக் காணலாம்.

அ) தலித்திற்கு மீட்சி

உயர்சாதியாரின் கடவுளால், உயர்சாதியாரால் தலித்துக்கு மீட்சி, முன்னேற்றம், வழங்கப்படுவதாகச் சித்திரிப்பது உயர்சாதி அரசியலின் ஓரம்சமாகும். உடமைக்குத் தலித்திற்குள்ள மனித உரிமை பற்றியோ, அல்லது விடுதலையைத் தீர்மானிப்பதற்கு அவனுக்குள்ள சுதந்திரம் பற்றியோ, சுய ஆதீனம் பற்றியோ உயர்சாதி அரசியல் சிந்திப்பதில்லை. பெரிபுராணத்தில் நந்தனின் படைப்பு இதற்கான முதல் எடுத்துக்காட்டாகும். அடுத்துத் தொடக்ககாலத் தமிழ் நாவல்களிலும், காந்திய நாவல்களிலும் இதனை நன்கு காணமுடியும். ராஜாஜியின் " அர்த்தநாரி" என்ற கதையில் ஒரு பறைச் சிறுவன் தீண்டாதார் சேவா சங்கத்தின் உயர்சாதிச் செயலாளர் ஒருவரால் கற்று உத்தியோகம் பார்க்கிறான். வடுவூர் துரைசாமி ஐயங்காரின் நாவல் ஒன்றில், இதே போல பறை அடிமை ஒருவன் பார்ப்பனக் காந்தியவாதி ஒருவரால் காப்பாற்றப்பட்டு போலீஸ் உத்தியோகம் பெறுகிறான். புதுமைப்பித்தனின் " புதிய நந்தன்" கதையில், பறைச்சிறுவன் ஒருவன் வேளாளர் ஒருவரால் நவீனக் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெறுகிறான். இவருடைய 'கடவுளின் பிரதிநிதி' என்ற கதையில் அரிசனர்க்கு ஆலயப்பிரவேசம் வழங்கவேண்டும் என்று காந்திய அரிசன இயக்கத்தைச் சேர்ந்த ஒரு பார்ப்பனர் பிரசங்கம் செய்கிறார்.

இவை எல்லாமே தலித்துக்களின் சுயமரியாதையின் பொருட்டுத்

தலித்துக்களால் மேற்கொள்ளப்படும் விடுதலை முயற்சிகளாக இன்றி ஒடுக்கியவர்களால் வழங்கப்படும் சகாயங்களாகவே காணப்படுகின்றன. மேற்கூறிய எடுத்துக்காட்டுக்களில் இறுதியில் தலித்துக்கள் வழங்கப்பட்ட மீட்சிக்கு அருகதையற்றவர்களாகப் போவதே வழக்கமாகியுள்ளது. தலித் அர்த்தநாரி சாமியாராகிறான். புதிய நந்தன் விரட்டியடிக்கப்பட்டு இறுதியில் கொலை செய்யப்படுகிறான். தங்களுக்காக ஆலயப்பிரவேசம் பேசியவரைச் சேரிப்பறையர்கள் கல்லால் எறிகிறார்கள். தலித்துக்களின் நிலைமைக்குத் தலித்துக்களையே காரணமாகக் காட்டுகிற உயர்சாதி அரசியலின் ஒரு வெளிப்பாடாகவே இதனைக் கருதமுடியும்.

ஆ) இலக்கியச் சமத்காரத்திற்கு தலித் பயன்படல்

பார்ப்பன - வேளாள நாவல், சிறுகதை ஆசிரியர்கள் சிலர் நாவலின் சுவைக்காகவும், தங்கள் இலக்கிய சமத்காரத்தைப் புலப்படுத்துவதற்காகவும், சிறுகதையின் இலக்கணத்திற்காகவும் தலித்துக்களைப் பயன்படுத்தியுள்ளனர். இது இவர்களின் உயர்சாதி அரசியலில் மற்றொரு அம்சம் ஆகும். நந்தனைப் பற்றிய புராணத்திலிருந்தே இது தொடங்கிவிட்டது. தலித் சாதியின் புலைத்தன்மையும், பார்ப்பனச் சாதியின் புனிதத்தன்மையும் துருவநிலைகளிலிருந்து இடம் பெயர்த்து, இந்த இடம்பெயரலால் தலித் சாதியான் உயர்சாதித் தகுதிக்கு ஏங்குவதையும், அதைக்கண்டு உயர்சாதி தன் சாதிப் பெருமைக்காகப் பரவசமடைவதையும் இதில் காணலாம். நந்தன் தன் புலைத்தன்மைக்காக நொந்து, பழித்து, அழுது பார்ப்பன தெய்வதரிசனத்திற்காக ஏங்கித் தவித்து, உழன்று, கெஞ்சுவது என்பது மேற்சொன்ன விளைவுகளை உண்டாக்குகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நந்தன் கதையை ஒரு பார்ப்பனர் பல ஊர்களில் உயர்சாதி ஆர்வலர்கள் முன் கதாகாலட்சேபமாக நிகழ்த்திக்காட்டியபோதும் இதே விளைவுகள் உண்டானதை உய்த்துணரலாம்.

ராஜாஜியின் “அர்த்தநாரி” கதையில் படித்து உத்தியோகம் பார்க்கும் தலித் இளைஞன் ஒரு பார்ப்பனப் பெண்ணைக் காதலித்தபோது, தன் பறைப்பிறப்பு, சேரி, அநாகரிகச் சூழல், தந்தையின் குடிப்பழக்கம், தீண்டாமை, அசுத்தம் ஆகியவற்றைப் பார்ப்பன உயர்நிலைமையோடு ஒப்பிட்டுத் தன்னுடையவற்றை அசிங்கம், அவமானம் என்று தாழ்வு மனப்பான்மையால் நொந்து போகிறான். தன்னைச் சைவ முதலியார் என்று பொய் கூறுகிறான். தன் பெற்றோரை, காதலிக்குக்காட்ட அசிங்கப்படுகிறான். குற்ற உணர்வால் மாய்கிறான். இறுதியில், காதலியிடம் தான் ஒரு பாவி, பறையன், தீண்டத்தாகதவன், பொய்யன் என்று வாக்குமூலம் தருகிறான். நியாயாதிபதியிடம் குற்றவாளி தரும் வாக்குமூலத்தை இது ஒத்தது. இந்த வாக்குமூலத்தைக் கேட்ட பார்ப்பனப்பெண் தான் சாதி பற்றிக்

கவலைப்படவில்லை என்று மிக இயல்பாக, துளியும் அதிர்ச்சி ஏதுமின்றிப் பதில் கூறுகிறாள். ஆக, சிக்கல்கள் எல்லாம் தலித்திடமே இருப்பதாக உணர்த்தப்படுகிறது: உயர்சாதியார் இயல்பானவர்களாக, குற்றவுணர்வற்றவர்களாக, பெரும்போக்குள்ளவர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளார்கள்.

இக்கதையில் உயர்நிலையிலுள்ள பார்ப்பனப் பெண் இடம்பெயர்ந்து பறையனுடன் இணைய முன்வருவதும், பறையன் மனதால் இடம்பெயரினும் செயலால் மனம் மருகுவதும் இலக்கிய சமத்காரத்தையும் சுவையையும் ஏற்படுத்துகின்றன. மிக கவனமாக அர்த்தநாரி சாதிய எல்லையை மீறிவிடாதவாறு இறுதியில் சாமியாராக்கப்படுகிறான்.

பார்ப்பன-பறைச் சாதிகளின் துருவப்பாங்கான ஏற்றத்தாழ்வினைக் கதையின் சமத்காரத்திற்காக ஜெயகாந்தன் கையாண்டுள்ளார். வண்டியில் தவறிப்போன பார்ப்பனப் பெண் குழந்தை அம்மாசி என்ற தலித் கிழவனிடம் வளர்கிறது (ஒரு பகல் நேர பாசஞ்சர் வண்டி). வளர்ந்து வேலைக்காரப் பெண்ணாக அப்பார்ப்பனப்பெண் படித்த பார்ப்பன இளைஞனின் தழுவலுக்கு உட்படும் சந்தர்ப்பம் ஏற்படுகிறது ("பிரளயம்"). பிறப்பால் பார்ப்பன சாதியாகவும், வளர்ப்பால் தலித் சாதியாகவும் உள்ள ஒரு அசாதாரணமான நிலைமை இங்கே கதையின் சமத்காரத்திற்கும் சுவைக்கும் காரணமாகிறது. பார்ப்பனச் சாதிக்குழந்தை தலித்திடம் தலித்தாக வளருவது; தலித்தாக வளர்ந்து வேலைக்காரியாக இருந்தாலும் தோற்றத்தில் தலித்திற்கு முரணாக இருப்பது என்ற முரண்பாடுகள் கவனத்திற்குரியவையாகும். இறுதியில் பார்ப்பனப் பெண், பார்ப்பன இளைஞனைச் சேருகிறபோது முரண்பாடுகளால் உற்பத்தி செய்யப்பட்ட சமத்கார விளையாட்டு முற்றுப் பெறுகிறது. முன்னர் காவியப்புலவர்களுக்கு மழை, நதி, கடல், மலை, சூரிய-சந்திர உதயம், பொழில், நானிலம் ஆகியவை தங்களுடைய கற்பனை அலங்கார சமத்காரத்திற்கான கச்சாப் பொருள்களான மரபின் தொடர்ச்சியாக இங்கே, சாதிய ஏற்றத்தாழ்வு என்ற முரண்பாடு கையாளப்பட்டிருக்கிறது. சாதிகளின் துருவப்பாங்கான உயர்வு தாழ்வு என்ற முரண், உயர்சாதி அரசியலின் இலக்கியச் சொல்லாடலுக்குச் சுவையூட்டக்கூடிய உத்தியாக இருக்கின்றதேயொழிய, தலித்தியம் முன்வைக்கின்ற சாதி ஒழிப்பு என்ற புரட்சிகர சாதி அரசியலுக்கு எவ்விதத்திலும் உறவுடையதாக இல்லை.

புதுமைப்பித்தனின் "புதிய நந்தன்" என்ற சிறுகதையில், மேல், கீழ் சாதிக் கலப்பு என்பது சிறுகதையின் எதிர்பாராத திருப்பம் என்ற உத்திக்காகப் பலியிடப்பட்டுள்ளது. ஒரு தலித் பெண்ணைக் கூடிய காந்தியவாதியான ஒரு பார்ப்பன இளைஞனும், அந்தப்பெண்ணும், அவனுடைய அண்ணனும் கதையின் முடிவுக்காக மர்மமாய்க் கொலை செய்யப்படுகிறார்கள் (புதுமைப்பித்தன்: 1987,

பத். 748).

> "மூவரின் இரத்தங்கள் ஒன்றாய்க் கலந்தன, ஒன்றாய்த்தான் இருக்கின்றன. இதில் யாரை நந்தன் என்பது? .... இறந்த பிறகாவது சாத்தியமா?"....

என்று புதுமைப்பித்தன் கேட்கிறார். இங்கே சிறுகதையின் இலக்கிய அமைதி காக்கப்பட்டு அதற்காக தலித்துக்கள் பலிகொடுக்கப்பட்டிருக்கிறார்கள். "சமுதாயத்திற்குப் பலிதான். அதை யார் நினைக்கிறார்கள்"(புதுமைப்பித்தன்: 1987, பத்.748) என்று உரோம ஆளுநன் பிலாத்து (Pilot) கையைக் கழுவுவதற்கு ஒப்பாகப் புதுமைப்பித்தன் என்ற வேளாள எழுத்தாளர் இங்கே நழுவுவதை அவதானிக்கலாம்.

தலித்துக்களின் மீட்சி பற்றிப் பார்ப்பன-வேளாள எழுத்தாளர்கள் கரிசனப்படுவது என்பது எதார்த்தவாத இலக்கிய வகையில் ஆசிரியனின் மனிதாபிமான சஞ்சாரத்தின் வெளிப்பாடாக உள்ளது. இரப்போர் காரணமாக ஈவோர்க்குப் புகழ் சேர்வது போன்றது இது. எதார்த்தத்தைச் சித்திரிப்பதாக உரிமை கொண்டாடும் நவீன எதார்த்தப் படைப்புகள் எல்லாமே எதார்த்த நிலைமையில் காணப்படும் முரண்பாடுகளை மூடிமறைக்கிற அருவமான மனிதாபிமானத்தை வெளிப்படுத்துகின்றன. இந்த அருவமான, முரண்பாடுகளைத் தாண்டிய மனிதாபிமான வெளிப்பாட்டிற்காகவே முரண்பாடுகள் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன. முரண்பாடுகளின் வேர்கள் கண்டறியப்படாமல், இலக்கியத்தனத்தைக் கொண்டு எதார்த்த வகை எழுத்துக்கள் கட்டி எழுப்புகின்ற அழகியலால் தலித்தியத்தின் புரட்சிகர அரசியலை வெளிப்படுத்த முடியாத வரையறையைத் தன்னிலே கொண்டிருப்பது விளங்கும்.

புதுமைப்பித்தன் ஒரு எதார்த்தவாத எழுத்தாளர் என்ற விதத்தில்-ஒரு வேளாளர் என்ற வகையில் தலித்துக்கள் பற்றி அவரே உருவாக்கிக்கொண்ட அல்லது பார்ப்பன- வேளாள மரபு உருவாக்கியுள்ள எதார்த்தத்தை வெளிப்படுத்தியுள்ளார். தலித்துக்கள் குறித்த எதார்த்த சித்திரிப்பில் அவருடைய தேர்வு நோக்கத் தக்கது. இந்தத் தேர்வுக்கு அவருடைய வேளாளமரபும் எதார்த்தவகைப் புனைவும் ஆதாரமாக இருக்கின்றன. இதனால் இவருக்கு மொத்த தலித் வாழ்வின் ஒரு பகுதியாக ஆக்கப்பட்ட தாழ்வு மனப்பான்மையே மொத்த தலித் வாழ்வாகப்பட்டிருக்கிறது.

காந்திய அரிசன இயக்கத்தால் கவரப்பட்ட ராமநாதன் என்ற படித்த பார்ப்பன இளைஞன் எதிர்பாராத சூழ்நிலையில் ஒரு தலித் இளம்பெண்ணுடன்

கலந்துவிடுகிறான். அப்போது அவ் இருவருடைய மனநிலைபற்றி எழுதும் புதுமைப்பித்தன்,

> ராமநாதனுக்குப் பாவம் செய்த நினைப்பு,
> இருளப்பன் மகளுக்குச் சின்னப்பண்ணையின்
> தயவு கிடைத்ததில் திருப்தி.

என்று எழுதியுள்ளார் (புதுமைப்பித்தன் 1987, பக். 747). மேலும், ராமநாதன் அவளைத் திருமணம் செய்ய வாக்களித்தபோது, "அதெப்படி முடியும் சாமி" என்று சிரித்தாள் (பு.பி. 1987:பக். 747) என்று எழுதியுள்ளார். உயர்சாதி ஆணுக்குத் தலித்சாதிப் பெண் பாலியல் சேவை செய்வது என்பது இயல்பானது. ஏறத்தாழ தலித்பெண் உயர்சாதி ஆணுக்கு ஒருவகையில் தாசியை ஒத்தவள் என்பது எதார்த்த நிலைபோலப் புதுமைப்பித்தன் உணர்த்தியுள்ளார். மேல்சாதியார் பெரிய மனது வைத்துச் சாதி வித்தியாசம் பாராட்டாமல் இறங்கி வந்தாலும் கீழ்ச்சாதியார் அதற்குத் தயாராக இல்லை என்பதையே இந்த எதார்த்தச் சித்திரிப்பு உணர்த்துகிறது. இதே கருத்தை மற்றொரு கதை வழியிலும் புதுமைப்பித்தன் கூறியுள்ளார். தலித்துக்களைக் கோயில் பிரவேசம் செய்ய ஊர்ப் பார்ப்பனர் அனுமதிக்க வேண்டும் என்று பேசிய காந்திய அரிசன இயக்கத்தைச் சேர்ந்த பார்ப்பனர் சங்கர் என்பவரைச் சேரிப்பறையர்கள்,

> சாமிக்குச் சமானமாய்க் கோவிலுக்குள்
> தங்களைப் போகச் சொன்னால் கண் அவியாதா?

என்று கூறிக் கல்லால் எறிவதாகப் புதுமைப்பித்தன் எழுதியுள்ளார் (பு.பி. 1987:795). இவர் தம் எதார்த்த எழுத்து வழியே படைக்கும் இந்த எதார்த்தங்கள் எத்தகைய பரிமாணங்களைக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை இங்கே காணவியலாது. அது எதார்த்த வகை எழுத்தாளனின் கலை, அழகியலுக்கு அப்பாற்பட்டது. அதனால் கூறவும் இயலாது. சுருங்கச் சொன்னால், தலித்தியத்தைக் கலக அழகியலாகப் படைக்கும் ஆற்றல் எதார்த்தவகை இலக்கியத்திற்குக் கிடையாது எனலாம். அதன் கட்டுமானத்திற்குள் அது அடங்காது.

ஏனெனில் இருக்கின்ற சாதிய எதார்த்த நிலைமைகள் பார்ப்பன- வேளாள மரபுக்கு உகந்ததாக, அதனால் கையாளத்தக்கதாக உள்ளன. இங்கே தலித்துக்கள் தன்னிலைகளாக (Subjects) இன்றிப் புறப்பொருட்களாக (Objects) இருந்து கொண்டிருக்கிறார்கள். தங்களைப் புறப்பொருட்களாக ஆக்கிய எதார்த்தத்தைத் தலித்துக்கள் தொந்தரவு செய்து தங்களைத் தன்னிலைகளாக ஆக்குவதே

தலித்தியத்தின் அரசியல் செயல்பாடாகும். எதார்த்தவகை இலக்கியம் போல எதார்த்தத்தைப் பிரதிபலிப்பது தலித் இலக்கியமாகாது. இவ்விதத்தில் பார்ப்பன-வேளாளர் படைத்த நவீனத்துவ இலக்கியத்திலிருந்து தலித் இலக்கியம் வேறுபட்டுப் புரட்சிகர நவீனத்துவ இலக்கியமாக அமையும். இந்தியச் சூழலில், பார்ப்பன- வேளாள உயர் சாதி அரசியல் கலந்த எழுத்துக்களால் புரட்சிகர நவீனத்துவத்தை எட்ட இயலாது.

இ) தலித் பிறர்க்கு உரைகல்

பார்ப்பன-வேளாளப் படைப்புக்களில் தலித்துக்கள் தாங்களே தங்கள் அருகதையின்மையை உயர் சாதியாரிடம் வாக்குமூலமாகத் தந்து தம்மையே சபித்துக்கொள்ளுவது உயர் சாதி அரசியலின் ஒரு விதம். இன்னொரு விதத்தில் பார்த்தால் படித்து முற்போக்காகிவிட்ட தம் நிலையைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த சில பார்ப்பன இளைஞர்கள் நிரூபித்துக் காட்டுவதற்காகத் தலித்தின் தாழ்ந்த நிலை உரைகல்லாகப் பயன்பட்டது.

கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்து உயர்கல்வி கற்கச் சென்னை நகரம் சென்று தன் நாத்திகச் சிற்றப்பாவுடன் தங்கி வாசம்செய்த பார்ப்பன இளைஞன் கோவிந்தன், தன்னுடைய மேற்கத்தியமயமான தன்மையைக் காட்டுவதற்காக, பறையர் நடத்திய சிற்றுண்டிச் சாலைகளில் சாப்பிடத் தொடங்கியதாக அ. மாதவையா எழுதியுள்ளார் (அ. மாதவையா: 1944, அதி-10). இக்கருத்தை உறுதி செய்வதாக மறைமலை அடிகளும், ஆங்கிலம் படித்த சில பார்ப்பனர்கள் குசினிக்காரப் பறையர் வைத்திருக்கும் சாப்பாட்டுக் கடைகளில் போய்க் காப்பி வாங்கி குடிப்பதாக எழுதியுள்ளார் (மறைமலை 1921; பத் - 15-16).

மேற்கூறிய எடுத்துக்காட்டுக்கள் பார்ப்பன எழுத்தாளர்களின் மனோநிலையை வெளிப்படுத்துகின்றன. தாங்கள் படித்து முன்னேறியவர்கள், பகுத்தறிவு மிக்கவர்கள். மூடத்தனமான ஆசாரம் பார்க்காதவர்கள் என்பதை நிரூபிப்பதற்கு ஆகக்கீழாக இருந்த தலித்துக்கள் உரைகல்போலப் பயன்பட்டிருக்கிறார்கள். பார்ப்பனர் சாதி வரிசையில் உயர்ந்தவர்கள் என்பதற்குத் தலித் சாதி தேவைப்படுவதைப் போலவே, அவர்கள் சாதி ஆசாரம் பார்ப்பவர்கள் இல்லை என்பதற்கும் தலித் சாதியே தேவைப்பட்டிருக்கிறது. ஏதாவது ஒரு விதத்தில் உயர்சாதியின் மேன்மையைப் புலப்படுத்துவதற்குத் தலித் தேவைப்படுகிறது என்பதே இங்குக் கவனிக்க வேண்டிய கருத்தாகும்.

ஈ) தலித் என்றாலே இழிவு

பார்ப்பன- வேளாள நாவல்களில் சகல இழிவுகளுக்கும் தலித்தை

முன்னிறுத்தும் உயர்சாதி அரசியலைக் காணலாம். குறிப்பாகத் தொடக்ககால நாவல்களில் இது மிக வெளிப்படையாகத் தெரிகிறது. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் தமது "புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க் கதை"யில், எதிராளியான மாயவன் பூண்ட மாறுவேடங்களாகப் பிச்சைக்காரன், பறையன், பெண் ஆகியவற்றைப் படைத்துள்ளார் (வி.கோ.சு:1902). தீய பாத்திரத்திற்கும் அது போடுகின்ற மாறுவேடத்திற்கும் இடையில் ஆசிரியர் பண்புவகையான இயைபை ஏற்படுத்தியுள்ளார். பிச்சைக்காரனும், பறையனும் பெண்ணும் தீமை, இழிவுகளுடன் சம்பந்தப்பட்டவர்களாக உணர்த்தப்படுகின்றனர். பழந்தமிழ்க் காப்பியங்களில் அறத்தின் பக்கம் நிற்பவர்கள் பார்ப்பனர்களாக மாறுவேடம் பூண்டதை மேற்சொன்னதோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். பார்ப்பன - வேளாள மரபில் தலித் எப்போதுமே இழிவு, தீமை, பாவம், சாபம், தீட்டு ஆகியவற்றோடுதான் சம்பந்தப்படுத்தி நோக்கப்பட்டுள்ளான்.

தொடக்ககால நாவல், நாடகங்களில் பார்ப்பன- வேளாள எழுத்தாளர்கள், பாத்திர உரையாடலைக் கையாண்டபோது ஒரு முறையைத் தவறாமல் பின்பற்றினார்கள். பெரியவர்கள், நல்லவர்கள், கதை நாயகர்கள் பேச்சு செந்தமிழ் நடையிலும், சிறியவர்கள், கீழோர், வேலைக்காரர்கள், கீழ்ச்சாதியார்கள் பேச்சு பேச்சுத்தமிழ் நடையிலும் இருக்கக் காணலாம். கொச்சைத் தமிழ் எனப்பழிக்கப்பட்ட பேச்சுத்தமிழ் செந்தமிழுக்கு முன் தரம் குறைந்தது, இழிவானது என்ற சாதி வரிசையை ஒட்டி மொழியிலும் ஏற்றத்தாழ்வைக் கற்பித்த உயர்சாதி அரசியல் பார்வையாக இதனைக்குறிப்பிடலாம். "பிரேம கலாவதியம்"(1893) என்ற நாவலின் ஆசிரியர் ஸ்ரீ.வை. குருஸ்வாமி சர்மா மற்றும் அ. மாதவையா,பி.ஆர். இராஜமையர், மறைமலை, வி.கோ. சு. முதலான பார்ப்பன- வேளாள நாவலாசிரியர்களும் இம்முறையை ஓர் இலக்கணமாகப் பின்பற்றியுள்ளனர்.

உ) மதமாற்றம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தோன்றிய தமிழ் நாவல்களில் தலித்துக்களின் விடுதலைக்குக் கிறித்தவ மதமாற்றமும், அதன் மூலம் ஆங்கிலக் கல்வி கற்று உத்தியோகம் பார்ப்பதுவும் தீர்வாகக் கூறப்பட்டுள்ளது. மேற்கத்திய நவீன அறிவு மற்றும் அதன் தாராளவாதப் பண்பாட்டின் தாக்கத்திற்குப் பெரிதும் ஆளாகி அதனால் சமூக ஆசார சீர்திருத்தத்தில் ஆர்வங்கொண்டவர்களால் இந்தவிதத் தீர்வு மொழியப்பட்டது. இவர்களுடைய ஆர்வத்திற்குக் காரணமாகத் தலித் விடுதலை என்பதைக் காட்டிலும் இந்து மதம் அழிந்துவிடுமே என்ற ஆதங்கமே பிரதானமாக இருந்தது.

இந்துச் சாதி அமைப்பில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மீட்சிக்குக் கதியற்றுப் பிறப்பு முதல் இறப்பு வரையிலும், தலைமுறை தலைமுறையாக அடிமைகளாக நலிந்த தலித் சாதி மக்களுக்கு, வரலாற்றில் முதன் முதலாக அந்நிய ஆங்கிலேயர் கொணர்ந்த சமூக-பொருளாதார - பண்பாட்டு மாற்றங்களின் பலனாக மேல்நோக்கிய இயக்கம் சாத்தியப்படலாயிற்று. தனி மனிதனை அலகாகக் கொண்ட புதிய சட்டமும், கல்வியும், உத்தியோகமும், நகர்ப்புற வாழ்வும், கிறித்தவ மதமாற்றமும் தலித்துக்களுக்கும் உடைமைக்கு உரிமை பூணும் வாய்ப்பினை ஏற்படுத்தின. இதனை அ. மாதவையா தமது நாவல்களிலும், குட்டிக் கதைகளிலும் திரும்பத் திரும்பக் குறிப்பிட்டுள்ளார். ஏனைய பார்ப்பன- வேளாளக் கதை ஆசிரியர்களைவிட, அன்று ஆங்கில அரசாங்கத்தில் உயர் பதவி வகித்த மாதவையா புதிய வாய்ப்புக்களால் பலனடைந்த கிறித்தவ தலித்துக்களைக் கொண்டாடி பார்ப்பனச் சனாதனிகளின் மூடத்தனமான ஆசாரங்களைப் பகடி செய்தார். அறிவியற் காலத்திற்கு ஒவ்வாத பழைய சனாதனக் கொள்கைகள், சடங்குகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் முதலானவற்றைப் பார்ப்பனர்கள் விட்டொழித்துப் புதிய தாராளவாத, பகுத்தறிவுப் பண்பாட்டை ஏற்றுக் குணமும், நல்லியல்பும், அறிவும், நவநாகரிகமும் பெற்றுக் கனவான்களாக (Gentlemen) மாற வேண்டியதை மாதவையா தம் வாழ்நாள் முழுவதும் வற்புறுத்தினார். பார்ப்பனரின் கபடத்தையும், வேடதாரித்தனத்தையும் பலவாறு மாதவையா எள்ளி நகையாடியபோது, அவற்றில் ஒன்றாகக் கிறித்தவம் மாறிய தலித்துக்களிடம் பழம் பார்ப்பனத் திமிர் செல்லுபடியாகவில்லை என்பதை வலியுறுத்தினார். இந்துமதத்தில் இருக்கிறவரைதான் அதன் தண்டனைகளுக்கும், ஒடுக்குதல்களுக்கும் ஆளாக நேரிடும். அதிலிருந்து வெளியேறி கிறித்தவ மதம் மாறிவிட்டால் இந்நிலை தொடராது என்ற கருத்தை மாதவையா திரும்பத் திரும்பச் சொன்னார்.

'குதிரைக்காரன் குப்பன்' என்ற கதையில் பாலூர் அக்கிரகார வீதியைப் பற்றிச் சொல்ல வந்த மாதவையா, "நாய்கள் கழுதைகள் பன்றிகள் தாராளமாகப் போய்வரும் பாலூர் அக்கிரகார வீதியில் பஞ்சமர் எவரும் எந்நாளும் காலெடுத்து வைத்ததில்லை" என்று எழுதியுள்ளார் (மாதவையா - 1924, பக்.2). இப்படிப்பட்ட வீதியில் ஒரு நாள் குதிரை மீது சப்-கலெக்டர் வர பின்னே அவருடைய குதிரைக்காரனான பறையன் குப்பன் ஓடி வருகிறான். சப்-கலெக்டர் துரை, ராஜப்பிரதிநிதி என்பதால் அவர் மிலேச்சன் என்றாலும் பாதகமில்லை என்று சகித்துக்கொள்ளப்படுகிறார். ஆனால், குப்பனின் தந்தை சுப்பனுக்கு அக்கிரகாரத்தினர் தண்டம் இடுகின்றனர். இதனை அறிந்த கலெக்டர் துரை வந்து தண்டனையை ரத்து செய்கிறார். இதனைத் தொடர்ந்து பாலூர் பறைக்குடும்பங்கள் கிறித்தவ மதம் மாறிப் பாலூரைவிட்டு வெளியேறி சத்திய வேதபுரத்திற்குக்

குடியேறுகின்றன. அதன் பின்னர் பார்ப்பனர்கள் பணிந்து போவதாக மாதவையா தமக்கே உரிய கேலி, கிண்டலுடன் கதையை முடித்துள்ளார். குப்பனிடம், பார்ப்பனச் சாதி அதிகாரம் செல்லுபடியாகாமல் போனதற்குக் காரணம் அவன் கிறித்தவ மதம் மாறி, ஆங்கிலேய சப்-கலெக்டரிடம் குதிரைக்காரனாக உத்தியோகம் பார்ப்பதே என்றார் மாதவையா. அவனுடைய கிறித்தவ மனைவி, புடவை, ரவிக்கை உடுத்தி, புத்தகத்தைக் கையில் பிடித்தவாறு வேதக்கோவிலுக்குப் போய் வருவதாகவும் மாதவையா குறிப்பிட்டுள்ளார். மற்றவர்களைப் போலவே தலித்துக்களும் சமமான மனிதர்களாக மாறியதற்குக் காரணம் கிறித்தவ மதமாற்றமே என்பது மாதவையாவின் கருத்து.

"தந்தையும் மகனும்" என்ற கதையிலும் (மாதவையா : 1924) இதே கருத்தைப் பனையேறிக் கள் இறக்கும் சாணார் சாதியாரைக் கொண்டு வெளிப்படுத்தியுள்ளார். சாணார் சாதியாரைச் சேர்ந்த சாமிநாத நாடார் என்பவர் ரங்கூன் சென்று வியாபாரத்தால் செல்வந்தராகி ஊர் திரும்புகிறார். ஆனால், அவரைச் சாதி இழிவு காரணமாக ஊர்ப் பார்ப்பனர்கள் ஒதுக்கிவைப்பது கண்டு பொருமி, தன் மகன் சுந்தரத்தைச் சென்னைக்கு அனுப்பி பி.ஏ.படிக்க வைக்கிறார். அவன் தன்னுடன் படித்த கிறித்தவ மதம் மாறிய பார்ப்பனப் பெண்ணைக் காதலித்து, கிறித்தவ மதம் மாறித் திருமணம் செய்கிறான். தாசில்தார் உத்தியோகம் கிடைத்துச் சொந்த ஊருக்கே இடமாற்றலாகி வருகிறான். இப்போது அக்கிரகார வீதியில் அவன் குதிரை மீது பவனி வந்தபோது பார்ப்பனர் யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஏனெனில் "அவர் கிறித்தவரே" என்று மாதவையா கதையை முடித்துள்ளார்.

இக்கருத்தை மேலும் கூர்மையாக, மாதவையா "தில்லை கோவிந்தன்" நாவலில் சித்திரித்துள்ளார்(மாதவையா: 1944, அதி.3). தீட்சிதர் எதிரே சாணான் வரக்கூடாது. தீட்சிதருக்கு வழிவிட்டு ஒதுங்கி ஒழிந்து அவர் போன பின் அவன் போகவேண்டும். ஆனால், இந்தச் சாதி வழக்கத்தை ஒரு கிறித்தவ சாணார் இளைஞன் மீறியதாகத் தீட்சிதர் மறவர்களைக் கொண்டு அடித்து நொறுக்குகிறார். அவன் மீது கல்லால் எறியச் செய்கிறார். அடிப்பட்ட இளைஞன் சும்மா இருக்கவில்லை; ஒரு ஐரோப்பிய பாதிரியாரின் உதவியோடு சர்க்கார் கோர்ட்டில் வழக்குத் தொடுக்கிறான். சப்-மாஜிஸ்ட்ரேட்டாக இருந்த ஒரு பார்ப்பனராலே தீட்சிதருக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. இதற்குக் காரணம் அந்தச் சாணார் இளைஞன் கிறித்தவனாக இருந்ததே என்பார் மாதவையா. பின்னாளில் புதுமைப்பித்தன் தமது 'நாசகாரக் கும்பல்' என்ற கதையில் , ஊர் நாவிதரும் மருத்துவருமான மருதப்பர், பிள்ளைமார் வீட்டுச் சாவுக்குச் சங்கு ஊதும் சாதி வழக்கத்தை மறுத்ததால், பிள்ளைமாரின் ஏவலால் மறவர்களால் அடித்து

நொறுக்கப்பட்டுப் பல் உடைந்து மனைவியோடு ஊரை விட்டு வெளியேறி இசுலாத்துக்கு மதம் மாறுவதைக் குறிப்பிட்டுள்ளார்.

தலித்துக்களுக்கு மட்டுமின்றி மிகப்பிற்படுத்தப்பட்ட சாதியினர்க்கும் கிறித்தவம், இசுலாம் மதமாற்றம் சாதி அவலத்தைப் போக்கும் வழியாக இருந்திருப்பதை மேற்கூறிய எடுத்துக்காட்டுக்களால் அறிய முடிகிறது.

தலித்துக்கள் ஏன் கிறித்தவ மதத்திற்கு மாறினார்கள் என்பதை மாதவையா ''முத்து மீனாட்சி''நாவலில் ஒரு கடிதம் மூலம் பின்வருமாறு விளக்கியுள்ளார்(மாதவையா: 1981:பக்-84-85).

"இப்பொழுது பள், பறை, சாணார் முதலிய 'கீழ்ச்சாதிகள்' இருக்கிறார்களே அவர்களை உலகம், அதாவது மேற்சாதிக்காரர்கள் அதாவது முக்கியமாய்ப் பிராமணரும் வேளாளரும் உபத்திரவப்படுத்துகிறார்கள்... கீழ்ச்சாதிக்காரர் உழுது பயிர் விளைத்தால்தான் மேல் சாதிக்காரர் உண்டு கொழுத்து வேதாந்தமும் சாஸ்திரமும் பேசலாம்... மேல் சாதிப் பிராமணர் முன்போல வேதமே ஓதிக்கொண்டிருந்தால் கீழ்ச்சாதிக்காரரும் பணிந்து உழுவார்கள். நான் உத்தியோகம் பண்ணுகிறேன். நீ முன்போலவேயிரு என்றால் சரிப்படவில்லை. இவர்கள் உபத்திரவம் பொறுக்க முடியாமல்,இவர்கள் சாதிக்கட்டில் மேற்கிளம்ப முடியாமல் அவர்கள் ஆயிரக்கணக்காய் கிறிஸ்தவ வேதத்திற் சேருகிறார்கள். ஹிந்துவான பறையன் தான் கிட்டவரக்கூடாதே ஒழிய கிறிஸ்தவன் ஆகிவிட்டால் வரலாம்".

வேளாண்மை உற்பத்தி முறையில், இந்துச்சாதி சமூக அமைப்பில் உழைப்பவன் தலித்தாகவும், அதன் பயனை நுகர்ந்து சுகமாக வாழ்பவன் பார்ப்பன - வேளாளனாகவும் இருந்தனர். புதிய தொழில் உற்பத்தி முறை வந்த போது பார்ப்பன - வேளாளர் மட்டும் புதிய முறையின் பயனை அபகரித்துக் கொண்டு, அதே வேளையில் தலித்துக்களை எப்போதும் போல வேளாண் உற்பத்தியில் மலிவான உற்பத்திச் சக்தியாக என்றும் நீடிக்கச் செய்ய முயன்றனர். இதன் வழியாக மரபான ஆதிக்க சுகமும், இலாபமும் பெற்றுப் புதுக்காலத்தின் அதிகாரத்தையும் அடைந்து இரட்டை அதிகாரத்தைப் பெற்ற எதார்த்தத்தை மாதவையா சுட்டிக்காட்டியுள்ளார். சாதி வகைப்பட்ட ஆதிக்கமும், புதிய வர்க்க வகைப்பட்ட ஆதிக்கமும் இவர்களுக்குச் சாத்தியமானது.

மறைமலையடிகளும், தலித்துக்கள், சாதி வெறியர்களின் கொடுமைக்கு அஞ்சி நூறாயிரக்கணக்காகத் துருக்கமதத்திலும், கிறித்தவ மதத்திலும் மாறுவதாகவும், இந்தியாவில் மூன்றில் ஒரு பகுதியினர் இவ்வாறு பிறமதங்களுக்கு

மாறியதாகவும் எழுதியுள்ளார்(மறைமலை : 1968 . பக்.129). சோற்றுக்காக தலித்துக்கள் இவ்வாறு கிறித்தவ - இசுலாமிய மதங்களுக்கு மாறினார்கள் எனக் கேலி பேசியவர்கள் மத்தியிலிருந்து மேலே சொன்ன ஒரு பார்ப்பனரும், ஒரு வேளாளரும், தீண்டாமைக் கொடுமையிலிருந்து விடுபட்டு இயல்பான, சமமான மாந்தர்களாய் உரிமை பெற்று வாழும் உந்தலினால் தான் இவர்கள் மதம் மாறினார்கள் என்ற வரலாற்று உண்மையைப் பதிவு செய்துள்ளார்கள்.

ஆயினும், இவ்விடத்தில் இரண்டு முரணான கருத்துக்களையும் நோக்கவேண்டும். அக்காலச்-சமூக சீர்திருத்தக்காரர்கள், திரளான கீழ்ச்சாதி மக்கள் பிற மதங்களுக்கு மாறுவதால் கலக்கமடைந்தார்கள். மூடத்தனமான சாதி ஆசாரங்களால் இந்துமதம் அழிவதை அவர்களால் ஏற்க முடியவில்லை. தாழ்த்தப்பட்டவர்களையும் சாதி வித்தியாசம் பாராமல் சாதி இந்துக்கள் நடத்த வேண்டிய அவசியத்தைச் சொன்னார்கள். சாதி அமைப்பிற்குள்ளேயே தலித்துக்களுக்குச் சில சலுகைகளை வழங்குவதன் வாயிலாக இந்துமதத்தைப் பேண முயன்றார்கள். ஆங்கிலேய அரசையும், கிறித்தவ மத மாற்ற முயற்சிகளையும் எதிர்த்ததற்கு இது முக்கிய காரணமாக இருந்தது. இதனால் தான் மாதவையா, ஒரு இந்துப்பார்ப்பன இளைஞன் மூலமாக, "ஹிந்துக்களது மூடத்தனமான பொறுமையால் கிறிஸ்தவமதம் இலாபமடையட்டும்" என்று எச்சரித்தார் (மாதவையா : 1981 . பக்:85).

கிறித்தவ மத மாற்றத்தால் தலித்துக்களுக்கு மீட்சி முழுமையாகக் கிடைக்கவில்லை என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். தொடக்க காலத்தில் தலித்சாதிகள் மட்டுமே கிறித்தவமதம் மாறியபோது இருந்த நிலைமை வேறு. குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில், இந்துப் பார்ப்பன-வேளாள மற்றும் இடைநிலைச் சாதியரால் அவர்களை ஏதும் செய்யும் முடியவில்லை. ஆனால் பின்னர், அரசு உத்தியோகங்களைக் கைப்பற்றி ஆதிக்கத்தில் பங்கு பெறுவதற்காகப் பார்ப்பன- வேளாளச் சாதியினரும் கிறித்தவ மதம் மாறினார்கள். அவர்களுடைய சாதி வரிசை கிறித்தவ மதம் மாறிய பின்னரும் தொடரும் என்று கிறித்தவமதத் தலைமை உறுதி கூறியது. தலித் கிறித்தவர்கள், சாதி கிறித்தவர்களால் கடுமையான தீண்டாமைக்கு உள்ளானார்கள். இதனை மாதவையா ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதுகளின்முற்பகுதியில் தவறாமல் குறிப்பிட்டுள்ளார் (மாதவையா: 1978, பக் 323-24). தாமஸ் கே என்பவர் ஆரிய திராவிடக் (வேளாளர்)கலப்பில் பிறந்த கிறித்தவர். யுரேஷிய வாழ்க்கை முறையை மேற்கொண்டவர். தமது ஒரே மகளைக் கிறித்தவ மதத்தைச் சேர்ந்த மாப்பிள்ளைக்கு மணம் செய்விக்க முடிவு செய்து, பீட்டர் சாமுவேல் என்ற இளைஞனைத் தெரிவு செய்கிறார். ஆனால்

> தன் மனதுக்கிசைந்த மாப்பிள்ளையான பீட்டர் சாமுவேலின் சரீரத்திலுலாவும் இரத்தத்தில், சுந்தரர், அப்பர் மரபினோர் இரத்தக் கலப்பிலும், திருநாளைப் போவார், ஏனாதி நாயனார் மரபினரின் இரத்த சம்பந்தமே அதிகம் என்பதை அறிந்தவுடன் காரியம் மேற்போகாமல் அவர் தடுத்துவிட்டார்.

என்று மாதவையா எள்ளல் சுவையுடன் குறிப்பிட்டுள்ளார். புதுமைப்பித்தனும் இவ்வுண்மையைப் "புதிய நந்தன்" கதையில் எழுதியுள்ளார். வேளாளக் கிறித்தவரான ரெவரெண்ட் ஜான் ஐயர் என்பவர், பறைச்சாதியைச் சேர்ந்த பாவாடை என்பவனைத் தானியேல் ஜான் என்ற பெயரில் கிறித்தவத்துக்கு மாற்றுகிறார்; படிக்க வைக்கிறார். அவனுக்கும் ஜான் ஐயரின் மகளுக்கும் காதல் ஏற்படுகிறது.

> *கிருஸ்தவ சமுதாயத்தில் இந்துக்கொடுமைகள் இல்லையென்று*
> *ஜான் ஐயர் போதித்ததை நம்பி... ஜான் தானியேல் ஒரு*
> *நாள் ஐயரிடம் நேரிலேயே தன் கருத்தை வெளியிட்டான்.*
> *பறக் கழுதை, வீட்டை விட்டு வெளியே இறங்குஎன்று*

கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளினார், என்று புதுமைப்பித்தன் குறிப்பிட்டுள்ளார் (புதுமைப்பித்தன் :1987: பக்-744). இந்த விதத்தில், மதமாற்றத்தால் தீண்டாமைக் கொடுமை தீரவில்லை என்பதைக் குறிப்பிட்டதில் மாதவையாவையும், புதுமைப்பித்தனையும் ஈழ தலித் எழுத்தாளர் டானியலுக்கு முன்னோடிகள் என்று அழைக்கலாம்.

ஊ) இந்து மதத்திற்குள் தீர்வு

பார்ப்பன எழுத்தாளர் ராஜாஜி தாம் படைத்த கதை ஒன்றில் தலித் மீது இழைக்கப்படும் சாதிக்கொடுமைக்கு, பகவத் கீதையில் கூறப்பட்ட புனரபிஜனனம் என்ற அடிப்படையில் வியாக்கியானம் வழங்கி, இந்து சாத்திரத்திற்குள்ளேயே பரிகாரம் தேட முயன்றுள்ளார். "புனர்ஜன்மம்" (The Re-Birth) என்ற கதையில் ஒரு பார்ப்பன விதவைத் தாயின் சிறுவனைக் குரங்கின் பிடியிலிருந்து காப்பாற்றிக்கொண்டு வந்த பறைச் சிறுவர்களை, தன் வீட்டிற்குள் வந்துவிட்ட அபசாரத்திற்காகச் சினந்து கொள்ளிக் கட்டையால் பறைச் சிறுவர்களில் ஒருவன் காலை அடிக்கிறாள்.

> *எப்படி இந்தப் பறைத் தீட்டைப் போக்குவது?*
> *அவர்கள் நிழல் கூடத் தீட்டல்லவா?... கடவுளே*
> *என்னைக் காப்பாற்று.*

என்று பொருள்படுமாறு அழுகிறாள் (ராஜாஜி: 1964, பக் - 49 - 50). எந்தப் பார்ப்பன -வைதீகத்தால் விதவை என்று அவகோலம் செய்யப்பட்டாளோ அதே வைதீக வருணாசிரமத்தின் மற்றொரு அதிகாரத்தை அப்பெண் தலித் சாதி மீது மிக்க வன்முறையோடு பிரயோகிக்கிறாள். மகனைக் காத்த நன்றி கூட சனாதன வெறியின் முன் மறைந்துவிடுகிறது. இவ்விடத்தில் "முத்து மீனாட்சி" நாவலில் மாதவையா படித்த பார்ப்பன இளைஞன் ஒருவன் மூலம் கூறியதை நோக்குவது பொருத்தமுடையதாகும்.

நாய்க்கேனும் பசுவுக்கேனும் இடும் உச்சி உஷ்டத்தை
பசித்திருக்கும் பஞ்சமன் ஒருவனுக்கு இடலாகாதென்றும்,
நீரில் மூழ்கி இறக்கும் தருணத்திலிருக்கும் நீசன் ஒருவனை,
ஒரு பிராமணன் தொட்டிழுத்து, கரையேற்றிக்காப்பாற்றினால்
பிராயச்சித்தஞ் செய்து கொள்ள வேண்டும் என்றும் நீதி
கூறும் உலகம் தானே இது?......

என்று பார்ப்பன- வைதீக - சனாதன நீதியைக் குறிப்பிட்டுள்ளார் (மாதவையா : 1981, பக். 76). மிகக் கொடூரமான வைதீக சாதிய கருத்தியலால் வளைக்கப்பட்டு, அதன் பேரில் உடல், உள்ளம், உடைமைகள் மீது தாக்குதலுக்கு ஆளாகும் தலித்துக்களுக்கு அறிவியல் ரீதியில் மாற்றமும், விமோசனமும் கிடைப்பது பற்றிச் சிந்திக்க ராஜாஜியால் இயலவில்லை. தன் மகனைக் காத்த தலித்சிறுவர்களை அடித்து விரட்டியதற்காக, பார்ப்பனத்தாய் சீதபேதியில் இறந்து போவது அவளுக்குக் கிடைத்த தண்டனை என்று உணர்த்துகிறார். அந்தத் தாயே தலித் குப்பாயியின் மருமகளாக, சென்ற பிறவியில் தன்னால் அடிபட்ட தலித் சிறுவனின் மனைவியாகப் பிறந்துள்ளதாக உணர்த்துகிறார். அதாவது, தற்போது டாக்டராகிவிட்ட பார்ப்பனத்தாயின் புதல்வன் உணர்கிறான். தாய் இவ்வாறு புனர்ஜன்மம் எடுத்திருப்பதை மகன் பகவத்கீதையின் இரண்டாம் அதிகாரத்தின் இருபத்திரண்டாவது சுலோகத்தால் உணர்வதாக ராஜாஜி எழுதியுள்ளார். தன் தாய் சென்ற பிறப்பில் தலித்துக்குச் செய்த தவறுக்குப் பரிகாரமாக, மகன், குப்பாயியின். மருமகளையும் மகனையும் தன் வீட்டிலேயே குடியிருத்தித் தனது சகோதர சகோதரியாகப் பாவிக்கிறான். அன்று முதல் ஊரில் அவன் ஊரார் பார்வையில் ஒரு பறையனாகத் தெரிந்தாலும், அவன் மனம் சாந்தி அடைந்தது என்று கதையை ராஜாஜி முடித்துள்ளார்.

எந்த பகவத்கீதை வருணாசிரம தருமத்தை, வருண உயர்வு தாழ்வை உபதேசிக்கிறதோ அதைக் கொண்டே தீண்டாமை பாராட்டியதற்கான தண்டனையும், பரிகாரமும் வழங்கியிருப்பது விசித்திரமான, ஆனால் உயர்சாதி

அரசியலின் இயல்பான பண்பை உணர்த்துகிறது. ராஜாஜி வருணாசிரமத்திற்கு இக்கதை வழியே புத்துரை வழங்கியுள்ளார். பாதிக்கப்பட்ட தலித்துக்களுக்கான பரிகாரத்தை இங்கே, உயர்சாதி அரசியலானது மிகை உணர்ச்சி கலந்த மிகை நாடகமாக (Melodrama) ஆக்கியுள்ளது. சென்ற பிறவியின் பலனை இந்தப் பிறவியிலும், இந்தப்பிறவியின் பலனை அடுத்த பிறவியிலும் அனுபவிப்பதாகக் கூறுகிறபோது இந்தப் பிறவியிலேயே தலித்துக்களுக்கான விடுதலையும் மாற்றமும் மறுக்கப்படுவதைப் புரிந்துகொள்ளலாம்

எ) தலித் மீது வன்முறை

பார்ப்பன - வேளாளர் படைத்த கதைகளில், இதர சாதியினர் தலித்துக்களை ஒடுக்குவதில் இரண்டு வகைகளினைக் காணலாம். பார்ப்பன- வேளாளச்சாதியினர் நேரடியாகத் தலித்துக்களைத் தாக்குவதில்லை. இவர்கள் தாக்குதலை ஏவுகிறவர்கள். சாதி முறையைக் கண்காணிப்பவர்கள். விதிவிலக்காக ராஜாஜியின் "புனர்ஜென்மம்"கதையில் பார்ப்பனப் பெண்ணும், வேளாளக் கவுண்டர்களும் முறையே பறைச் சிறுவனையும், பெண்ணையும் அடித்து நொறுக்குவதைக் காணலாம். மாதவையா, புதுமைப்பித்தன் கதைகளில் இதனைக் காணவியலாது. இதற்கான காரணமாகத் தென், வட தமிழ் நாட்டில் நிலவும் சாதி வரிசையின் பன்முகத்தன்மையைக் குறிப்பிடலாம் தென் தமிழ் நாட்டுப் பகுதி பற்றி எழுதிய மாதவையாவும். புதுமைப்பித்தனும், தேவர் அல்லது மறவர் சாதியே பார்ப்பன - வேளாளரின் ஏவலராகத் தலித்துக்களை வன்முறையால் தண்டிப்பதாக உள்ளது. ராஜாஜி, வடமேற்குத் தமிழகப் பகுதி பற்றி எழுதியதால் அங்குள்ள சாதி நிலைமைக்கு ஒப்ப கவுண்டர்களே தலித்துக்களை நேரடியாக வன்முறையால் தண்டிப்பதாக எழுதியிருக்கலாம்.

மாதவையா, 'தில்லை கோவிந்தன்' நாவலில் சாதி வழக்கத்தை மீறும் சாணார் சாதி இளைஞனை மறவர்களை ஏவிப் பார்ப்பனர் அடித்து நொறுக்குவதைக் குறிப்பிட்டுள்ளார். 'துன்பக்கேணி' என்ற நீண்ட கதையில் வேளாளர் வீட்டு மாடுகளைத் திருடியதாகச் சந்தேகிக்கப்பட்ட தலித் வெள்ளையனைப் பற்றி விசாரிக்க அவன் மனைவி மருதுவிடம் தலையாரித் தேவனை வேளாளர் ஏவுகிறார். அவனுடைய விசாரணை முறை பற்றிப் புதுமைப்பித்தன் பின்வருமாறு எழுதியுள்ளார்:

> அவள் சொல்வது நிஜமா பொய்யா என்பதைத் தீர்மானிப்பதற்குத் தலையாரித் தேவனுக்கு ஒரே வழிதான் தெரியும். உடனே தலை மயிரைப் பிடித்திழுத்து அவளைக் கீழே தள்ளி உதைக்க ஆரம்பித்தான். தேவனுக்கு மருதியை உதைப்பதில் ஒரு குஷி - (புதுமைப்பித்தன் : 1987 , பக் - 197).

"நாசகாரக்கும்பல்" என்ற கதையிலும், இதேபோல , சாதி வழக்கத்தை ஏற்க மறுக்கும் நாவிதரைப் பிள்ளைமார் தேவமார்களை ஏவிவிட்டு அடித்து நொறுக்குவதைப் புதுமைப்பித்தன் குறிப்பிட்டுள்ளார். எனவே, பார்ப்பன-வேளாளச் சாதியினர், தங்களுக்குக் கீழிருக்கும் இடைநிலைச் சாதியினரை ஏவி, அவர்களுக்கும் கீழ் இருக்கிற தலித்துக்களை வன்முறைகட்கு உட்படுத்துவதை அறியலாம்.

ஏ) தலித்துக்கள் மலிவான கூலிகள்

தலித் மக்கள் பஞ்சம், பசி, தொற்றுநோய், ஆதரவற்ற நிலைமை காரணமாகக் கொத்தடிமைகளாகவும், மலிவான கூலிகளாகவும், ரங்கூன், கண்டி (சிலோன்), பெனாங்கு ஆகிய வெளிநாட்டு நகர்ப்புறங்களுக்கு ஏற்றுமதியானதை இதுவரை விளக்கிய நாவலாசிரியர்கள் கதைகளிலிருந்து அறியலாம்.

ஊரில் வாந்தி பேதி நடமாடியதால் சுப்பன் மகன் குப்பன் ரங்கூனுக்கு பிழைக்க ஓடியதாக மாதவையாவும், ஊரில் மழையின்றி விவசாயம் நின்று போனதால் கூலி வேலையின்றிச் சேரிப்பறையர்கள் கங்காணிகளோடு சிலோன் கண்டிக்குப் பிழைக்கப் போனதாக ராஜாஜியும் ('புனர்ஜன்மம்') எழுதியுள்ளார்கள். இதனைத் 'துன்பக்கேணி' என்ற கதையில் புதுமைப்பித்தன் விவரித்துள்ளார். இக்கதையில் திருடன் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட தன் கணவனை வேளாளர் சிறைப்படுத்தியதால் பஞ்ச காலத்தில் பிழைப்பதற்காக ஆதரவற்ற தலித் பெண் கொழும்புக்குத் தேயிலைத் தோட்டத் தொழிலாளியாகச் செல்லுவது குறிக்கப்படுகிறது. அங்கே மிக எளிதாக ஆண்களின் பாலியல் பசிக்கு இரையாகிறாள்; நோயுறுகிறாள். அவள் மகள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுகிறாள். இறுதியில் அந்தத் தலித் தாய் பைத்தியமாகிறாள். இவ்வாறு சொந்த மண்ணிலும், வேற்று மண்ணிலும் தலித்துக்கள் மிகக் கடுமையான வாழ்க்கையை மேற்கொண்டதைக் காணுகிறபோது தலித்துக்கள் எங்குச் சென்றாலும் உரிமை ஏதும் பெற முடியாமல் வாழ்ந்து சாவதையே பார்க்க முடிகிறது.

7. இடதுசாரி இலக்கியத்தில் தலித்

இனி இந்தியப் பொதுவுடைமைக் கட்சிகளின் கலை- இலக்கிய அமைப்புக்களும், அவற்றின் இதழ்களும், வெளியீடுகளும் தலித் மக்கள் பிரச்சனையை அணுகிய விதத்தைக் காணலாம். இக்கட்சிகளின் அரசியல் - பொருளாதார சித்தாந்த வரையறைகளுடன் படைக்கப்பட்ட நாவல்களில் அந்த வரையறைகட்கு உட்பட்டே தலித் விவசாய - பாட்டாளி மக்கள்

சித்திரிக்கப்பட்டார்கள். பார்ப்பன - வேளாள எதார்த்தவாதப் படைப்புக்களில் தலித்துக்கள் படைக்கப்பட்டதற்கும், பொதுவுடைமைக் கட்சிப் படைப்பாளர்களின் சோசலிச எதார்த்தவாதப் படைப்புக்களில் இவர்கள் பிரதிபலிக்கப்பட்டதற்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுகிறது. இதற்குக் காரணம் இடதுசாரி வர்க்க அரசியலாகும். இது ஒப்பீட்டளவில் முன்னர்க் குறிப்பிட்ட பார்ப்பன-வேளாளரின் எதார்த்தப் புனைவிலிருந்து முற்போக்கானதாகவும், அறிவியல் மற்றும் வரலாற்றுப் பொருளாதாரத்தை அடியொற்றியதாகவும் காணப்படுவது ஒரு சிறப்பு அம்சமாகும். சாதி வேற்றுமைகளைக் கடந்து பொருளாதார அடிப்படையில் விவசாயிகளும், தொழிலாளிகளும் ஒரு வர்க்கமாக அணிதிரள வேண்டும் என்ற அரசியல் இடதுசாரி இலக்கியத்தின் கவனமாக இருந்துள்ளது. 'மலரும் சருகும்', 'சங்கம்' முதலிய நாவல்கள் இதற்குச் சிறந்த வகை மாதிரிகளாகும்.

இந்நாவல்கள் தலித் மற்றும் மலை இன மக்களைப் பற்றியவையாகும். "மலரும் சருகும்" நாவலில் கூலிப்பிரச்சனையும், சாதி கடந்து வர்க்கமாக அணி திரள்வதும் கவனப்படுத்தப்பட்டுள்ளன. உடைமை வர்க்க நலன்களைப் பேணுவதற்கு, அவ்உடைமை பேணும் சாதியானது உழைக்கும் தலித் சாதிகளையும், அவற்றிற்கு மேற்பட்ட உழைக்கும் சாதிகளையும் வர்க்க ரீதியில் ஒன்றிணையாதவாறு பிளவினை உண்டாக்கிக் கொண்டிருக்கும் எதார்த்தம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இப்பிளவினைப் போக்குபவனாக முன்னாள் இராணுவ வீரன் படைக்கப்பட்டுள்ளான். இதேபோல "சங்கம்" நாவலில் மலை வாழ் மக்களைச் சமவெளியிலுள்ள மேற்சாதி வியாபாரிகளிடமிருந்தும், போலீஸ், வனத்துறை அதிகாரி - அலுவலர்களிடமிருந்தும் பொருளாதார ரீதியில் காத்துச் செங்கொடியின் கீழ் ஒரு சங்கமாக நிர்மாணிக்கும் முயற்சியில் இலங்கை சென்று முற்போக்குக் கொள்கையுடன் திரும்பிய ஓர் இளைஞன் முயலுகின்றான். தொழிற்சங்கம் கட்டுவது முக்கிய நோக்கமாக உள்ளது. இந்த இரு நாவல்களைப் படைத்த ஆசிரியர்களைப்போல பெரும்பாலான கட்சி நாவலாசிரியர்களின் படைப்புக்களில் தலித் மற்றும் மலைவாழ் மக்களின் சிக்கல், விவசாய - தொழிற்சங்க சிக்கலாகவும், கூலிப்பிரச்சனையாகவும் நோக்கப்பட்டுள்ளது. வேறு விதத்தில் சொன்னால், சோசலிச எதார்த்தவாதத்தின் சித்தாந்தத்திற்கு ஏற்ப, பொருளாதாரப் பிரச்சனையாகப் பார்க்கப்பட்டுள்ளது எனலாம். இந்தப் பொருளாதாரப் பிரச்சினை என்பது தலித்சாதி மக்களுக்குத் தீண்டாமையால் ஏற்பட்டுள்ளதை இடதுசாரிக்கட்சி நாவல்கள் வலியுறுத்துவதில்லை.

இந்தியச் சூழலில் தலித்துக்களுக்குப் பொருளாதாரப் பிரச்சினை என்பது பண்பாட்டுப் பிரச்சனையோடு பின்னிப் பிணைந்ததாகவும், இவ்விரண்டின்

தீர்வோடு தொடர்புடையதாக இவர்களுடைய அரசியல் பிரச்சனை அமைந்ததாகவும் காணப்படுகிறது. தீண்டாமை என்பது பண்பாட்டுப் பிரச்சனையாக மட்டும் இல்லை. தீண்டாமை காரணமாக தலித்துக்களுக்கு உடைமைக்கும், சமத்துவத்துக்குமான உரிமைகள் மறுக்கப்படுவதால் அதுவே பொருளாதாரப் பிரச்சனையாக அமைந்துவிடுகிறது. தீண்டாமையும் வறுமையும் ஒன்றை ஒன்று சார்ந்து வலுவூட்டுகின்றன. எனவே, இந்திய சாதி சமுதாயத்திற்கான அடிப்படையான விடுதலை என்பது, தீண்டாமை ஒழிப்போடும், சாதிமுறை ஒழிப்போடும் நேரடியாகச் சம்பந்தம் கொண்டுள்ளது.

தலித் உழைப்பாளிகளுக்கு உயர்சாதி நில உடைமைக்காரர்கள் கூலியைக் குறைத்துக்கொடுப்பதும், தலித் பெண் தங்களுடைய பாலியல் நுகர்ச்சிக்கு உரியவர்கள் என உரிமைப்பாராட்டுவதும் ஏன் என்று பார்த்தால், தலித்துக்கள் உழைக்கும் கூலி வர்க்கம் என்பதோடும், அதற்கும் மேலாக அவர்கள் தீண்டத்தகாத அடிமைச் சாதியார்கள் என்பதே முக்கிய காரணமாக உள்ளது. இந்த வரலாற்றுண்மையை சோசலிச எதார்த்தவாத எழுத்தாளர்களால் தங்களுடைய பொருளாதாரவாதச் சித்தாந்தத்தின் இறுக்கத்தின் காரணமாகக் காண இயலாமற் போயுள்ளது.

இதேபோல திராவிட இயக்க எழுத்தாளர்கள் தங்களுடைய வேளாள சூத்திரப்பின்னணியின் காரணமாகவும், தங்களுக்கு மேலிருந்த பார்ப்பனரை இடம் பெயர்த்துத் தங்களை உயர்த்திக் கொள்ளச் செயல்பட்டதின் காரணமாகவும், கீழிருந்த தலித் சாதி மக்களின் விடுதலைக்கு உரிய முக்கியத்துவத்தைத் தர முடியாமற் போயுள்ளது.

இதுவரை விளக்கியவற்றால், தலித் அல்லாத எழுத்தாளர்கள் தம் படைப்புக்களில், தலித்துக்களை மூன்றாம் நபர்களாக நிறுத்தி, அவர்களுக்காக அனுதாபப்பட்டதையும், தங்கள் பார்வையில் அவர்களுக்கு மீட்சி வழங்கியதையும் பார்க்க முடிந்தது. மேற்கத்திய பொருளாதார, மனிதாபிமான- தாராளவாதப் பார்வைகளிலும், காந்திய அரிசன இயக்கப் பார்வையிலும், இந்துக்கருமக் கொள்கையின் பார்வையிலும், வர்க்கப் பார்வையிலும் தலித்துக்கள் நோக்கப்பட்டதைக் காண முடிந்தது. இந்த எழுத்தாளர்களுக்குத் தலித் சிக்கல் என்பது உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியதாக இல்லாமல் எத்தனையோ சிக்கல்களில் இதுவும் ஒன்றாகப் பட்டுள்ளது. தலித் விடுதலை என்பது உடல் மற்றும் மனம் ஊனமுற்றவர்கள், குற்றவாளிகள் முதலானவர்களுக்குப் புனர்வாழ்வு தருவதற்கு ஒப்பாகப்பட்டிருக்கிறது. இந்திய மக்களின் முக்கால் பகுதி மக்கள் சுமைகளை எஞ்சிய காலப்பகுதித் தலித் மக்கள் சுமந்து கொண்டிருப்பது ஒன்றும் பெரிய விசயமாக இவர்கட்குத் தோன்றவில்லை. எப்படியும் யாரேனும்

சுமக்கத்தானே வேண்டும் என்ற மனநிலை காணப்படுகிறது. சுருங்கச் சொன்னால் "பெரிய புராணத்து நந்தனே இவர்கள் கதைகளில் விதவிதமாக எழுதிப் பார்க்கப்பட்டிருக்கிறான் எனலாம்."

9. தலித்துக்களின் நாவல்கள்

தலித் அல்லாதவர்கள், தலித்துக்களைப்பற்றி முழு நாவல்கள் எழுதவில்லை. நாவல்களில் ஒரு சில உதிரிப் பாத்திரங்களாகத் தலித்துக்கள் இடம் பெற்றார்கள். சிறு கதைகள் சிலவற்றில் முழுமையாக இடம் பெற்றார்கள். ஆனால், தலித் எழுத்தாளர்கள் நாவல்களில் மொத்த தலித் மக்களின் வாழ்வையும், போராட்டத்தையும் மையப் பொருளாகக் கொண்டுள்ளார்கள். இதற்கான பின்புலத்தைச் சுருக்கமாகக் காண வேண்டும்.

அ) பின்புலம்

தலித்துக்களில் படித்து உத்தியோகம் பார்க்கும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்களே கதை, கவிதை வடிவங்களில் தங்களுடைய காயப்பட்ட குரலை ஒலித்தார்கள். இதனை மராட்டிய தலித்துக்கள் தொடங்கி வைத்தார்கள். இதற்கு முதன்மையான காரணர்கள் ஜோதிபா பூலேயும், டாக்டர் அம்பேத்கரும் ஆவார்கள் மராட்டிய தலித் இலக்கியக் குரல் கலகப்பாங்கில் அத்துமீறலாக அமைந்தது. தலித்துக்களே பேசத் தொடங்கியதால் அவர்களுடைய இலக்கியம் பார்ப்பன-வேளாள இலக்கியத்திலிருந்து பெரிதும் வேறுபட்டதாக அமைந்தது.

தமிழகத்தில் தலித் இலக்கிய எழுச்சி என்பது டாக்டர் அம்பேத்கரின் நாடு தழுவிய நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தாலும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு அரசியல் ரீதியில் கொண்டு வரப்பட்டதாலும் ஏற்பட்டது. மேலும் திராவிட, பொதுவுடைமை இயக்கங்களின் தொய்வும் ஒரு மறைமுகமான காரணமாகும். இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போலச் சமகால இந்திய அரசியல் சூழல் முக்கிய காரணமாக அமைந்துள்ளது. வெகுகாலமாகவே இந்திய உபகண்டத்தில் இந்துமதத்தின் பேரால் பார்ப்பனர், உயர்சாதியினர், வணிகர் சாதியாரிடமும், இந்து தேச வெளியாளரிடமும் வேரிட்டு வளர்ந்து வந்துள்ள இந்துப்பேரினவாதமும், அதன் பாசிசப் போக்கும், மதச் சிறுபான்மையினரையும், மிகவும் பிற்படுத்தப்பட்டோரையும் தலித்துக்களையும் அச்சுறுத்தி அழிக்கும் நிலையை எட்டியுள்ளன. இம்மக்களுக்கு அரசியல் சாசனப்படி கிட்டியுள்ள சொற்ப நலன்களையும் பறிக்கும் வெறி உருவாகியுள்ளது.

எனவே, இந்நிலையில் தலித்துக்களின் எழுச்சியினை ஏனைய பிற்படுத்தப்பட்ட மக்களின் வலுவான உறவோடு இந்துத்துவ பாசிசத்திற்கு

எதிராகத் தோன்றியதாகக் கருதலாம். இது ஒரு நிகழ்ச்சியை ஒட்டித் தோன்றி மறையும் ஒன்றல்ல. இந்திய சாதிய சமூக வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு கால கட்டத்தின் நிகழ்வாகும். சாதிய ஒழிப்போடும், இந்துத்துவ பாசிசத்தின் ஒழிப்போடும் சம்பந்தப்பட்ட ஒன்றாகும். தலித் எழுச்சியின் எல்லை, தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை, சுதந்திரம், பெண்ணிய விடுதலை, இன, நிறப்பேதத்திலிருந்து விடுதலை ஆகியவற்றையும் இணைத்துக்கொண்டு விரிந்து பரவும் நோக்குடையது.

சுருங்கச் சொன்னால், தீண்டாமையை ஒழிப்பதும், சாதி அமைப்பைத் தகர்ப்பதும் இந்திய-தமிழக தலித்துக்களுக்கு, இந்துத்துவ பாசிச சக்திகளைச் செயல் இழக்கச் செய்யும் வரலாற்றுக்கடமையோடு சம்பந்தப்பட்டதெனச் சொல்லலாம். இப்படிப்பட்ட விரிந்த தலித் அரசியல் கண்ணோட்டத்தில் தற்போது தமிழில் நாவல்கள் தோன்றிவிட்டன எனக் கூற இயலாது. எனினும், அறுபதுகளில் மராட்டிய தலித் இலக்கியத்தின் தொடக்ககாலக் கூறுகளான சாதி எதிர்ப்பு, நொறுக்கப்பட்ட தன் வரலாறு முதலானவற்றைத் தமிழக தலித் படைப்புகள் வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டன எனலாம்.

ஆ) தலித் இலக்கியம்

தமிழக தலித் நாவல்களைப் பார்க்கும் முன்பாக, "இலக்கியம்" பற்றிய தலித் அணுகுமுறை பற்றிச் சிறிது கூறவேண்டும். நாவல் இலக்கியம் என்று இதுவரை படைக்கப்பட்டுள்ள நவீன எதார்த்தவகை இலக்கியத்தை அப்படியே தலித்துக்கள் பின்பற்றுவதில் பாதகமே மிகுதி. எதார்த்த இலக்கியத்தின் இலக்கணத்திற்கு ஏற்றவாறு தலித் இலக்கியச் சொல்லாடல் இருக்கக்கூடாது; இருக்கவும் முடியாது. தலித்துக்களின் அத்துமீறுகிற கலகப் பண்பாட்டின் ஓரம்சமாகவே தலித் இலக்கியச் சொல்லாடல் இருக்கமுடியும். இலக்கியத்தரம் என்று ஆதிக்கவகைச் சொல்லாடலாகிவிட்ட பார்ப்பன- வேளாள இலக்கியத்தை உடைத்துப் புதிய எதிர்ப்புக்குணமிக்க சொல்லாடலை உருவாக்குவது தான் தலித் மீட்சிக்கான புரட்சிகர அரசியலாகும். இதனையே புரட்சிகர நவீனத்துவம் என்று இக்கட்டுரை முன்பே குறிப்பிட்டது. இப்படியொரு சொல்லாடலைத் தமிழ்ச்சூழலில் பெரியாரின் பேச்சுக்களிலும், எழுத்துக்களிலும் காணலாம். இவர் முன் வைத்த கலகச் சொல்லாடலானது, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான பண்பாட்டு விடுதலையின் அடிமன வெளிப்பாடாக வினைபுரியத்தக்கதாகும். நூற்றாண்டுக்காலமாகத் தலித்துக்களை உரிமையற்றவர்களாக, பாவிகளாக மனிதரிலும் குறைந்தவர்களாக சாசனப்படுத்திய சகலவிதமான ஆதிக்க மையங்களையும், புனிதங்களையும், அறம், ஒழுங்கு என உயர்த்தி வைக்கப்பட்டவைகளையும், இவைதான் எதார்த்தம் என்று

ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளையும் உடைத்து இவை அப்படிப்பட்டவை அல்ல என்பதையும், இவை அனைத்துமே தலித்துக்களை ஒடுக்கிய ஆதார சத்திகள் என்பதையும் தலித்துக்கள் உடைத்துக்கூற வேண்டியது அவசியமாகும். நாகரிகம் என்று உயர்த்திப் பிடிக்கின்ற ஆதிக்கச்சாதிப் பண்பாட்டில் மனித விரோத உள்ளடக்கத்தைத் தோலுரிப்பதே தலித்தின் மாற்றுப்பண்பாட்டுச் செயலாகும்.

மேற்கில், எதார்த்தவகை நவீனத்துவத்தின் ஏமாற்றினை, அதன் மனித விரோதத் தன்மையை, மனிதாபிமானப் பாசாங்கினைக் கருப்பர் மற்றும் பெண்ணியப் புரட்சிகர நவீனத்துவ இலக்கியச் சொல்லாடல்கள் கேள்விக்குள்ளாக்கி, நகைப்பிற்கிடமாக ஆக்கி வருவதைத் தலித் இலக்கியம் தன்னகப்படுத்துவது அவசியம். சாதி, மதம், இனம், நிறம், பால் முதலான அடிப்படைகளில் கட்டமைந்த சகலவித பாசிச சக்திகளுக்கும் எதிராக நிற்பவற்றுள் ஒன்றாகத் தலித் இலக்கியம் இருக்கும்.

தமிழ்ச் சூழலில் மேற்குறித்த புரட்சிகர நவீனத்துவ அம்சங்கள் ஒப்பீட்டளவில் மாதவையா, புதுமைப்பித்தன், ஜெயகாந்தன், ஜி.நாகராஜன், அண்ணாதுரை, பாரதிதாசன், அம்பை முதலான பார்ப்பன- வேளாளர் கதைகளில் காணப்படுகின்றன. ஆனால் இவற்றின் முழு வீச்சும் ஆற்றலோடு வெளிப்படுவது தலித் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் இலக்கியங்களில் தான் சாத்தியம் உண்டு.

இ) ஈழச்சூழல்

தமிழில் தோன்றிய தலித் நாவல்களுக்கு முன்னோடியாக விளங்குவன ஈழத்தமிழரும், தலித்தும், கிறித்தவரும், இடதுசாரி சிந்தனாவாதியும், அரசியல் செயல் வீரருமான டானியல் படைத்த "பஞ்சமர், " "கோவிந்தன்," "கானல்" ஆகிய நாவல்களே. இந்த நாவல்களில் பொருளாதார - பண்பாட்டுக் காரணங்களால் ஏற்படுகிற மேல், கீழ்ச்சாதிகளின் மோதல்கள், தீண்டாமையை எதிர்த்த போராட்டங்களால் தலித்சாதிகள் ஓர் அணியாகத் திரளுதல், சாதி மோதல் வர்க்கப் போராட்டமாகப் பரிணாமம் பெறுதல், தீண்டாமையிலிருந்து விடுபட இந்து மதத்திலிருந்து தலித்துக்கள் கிறித்தவமதம் மாறுதல், மாறினாலும் அங்கும் அதே தீண்டாமை நிலவுதல் ஆகிய முக்கியமான பிரச்சனைகள் எதார்த்தவகைப் போக்கில் புனையப்பட்டுள்ளன.

இந்நாவல்கள் தோன்றிய சூழல் கவனத்திற்குரியது. இடதுசாரி அரசியலும், ஈழவேளாள மற்றும் சிங்களப் பேரினவாத அரசியலும் நிலவிய இலங்கைச் சூழலிலிருந்து டானியலின் முதல் தமிழ் தலித் நாவல்கள் தோன்றியுள்ளன. வர்க்க அரசியலை முன்னிலைப்படுத்திய செ. கணேசலிங்கன், கலாநிதி. க. கைலாசபதி

முதலானவர்களை உள்ளடக்கிய முற்போக்குச் சோசலிச எதார்த்தவாத இலக்கியங்கள் மற்றும் இதற்கு எதிரான நற்போக்குத் தூயகலை இலக்கியங்கள் ஆகியவற்றிலிருந்து மீறி, இரண்டு வகைகளின் போதாமையையும், ஒவ்வாமையையும் உணர்த்துவதாக டானியலின் படைப்பு அமைந்தது. தீண்டாமைக் கொடுமையையும், அதனால் உரிமை இழந்த தலித்துக்களின் மீட்சியையும் ஒரு பொருட்டாகக் கருதாத இந்தமுற்போக்கு, நற்போக்கு இலக்கியங்களின் பிற்போக்கினை டானியலின் தலித் நாவல்கள் துலங்கச் செய்தன.

ஈ) தமிழ்ச் சூழல் - கிறித்தவ தலித் நாவல்கள்

ஈழச் சூழலில் ஒற்றைக் குரலாக ஒலித்த டானியலின் தலித் நாவல்கள் இன்று தமிழகச் சூழலில் மீள்பார்வை செய்யப்படுகின்றன. தமிழகச் சூழலில் இந்து மதத்திலும், கிறித்தவ மதத்திலும் தீண்டாமைக்கு ஆளாகின்ற தலித்துக்கள் இருசாராரும் நாவல்களைப் படைத்து வருகின்றனர்.

முதலில் கிறித்தவ தலித் படைப்புக்களைக் காணலாம். தமிழகத்தில் உள்ள கத்தோலிக்க கிறித்துவத்திலும் கத்தோலிக்கம் அல்லாத கிறித்துவப் பிரிவுகளிலும் உள்ள பெரும்பான்மையான தலித் கிறித்தவர்கள் சிறுபான்மையான வேளாளக் கிறித்தவர்களால் சகலவிதங்களிலும் ஆதிக்கம் செய்யப்படுகிறார்கள். குறிப்பாகக் கத்தோலிக்க கிறித்தவத்தில் இது முக்கியமாகக் காணப்படுகிறது. இதன் சகல நிறுவனங்களிலும் வேளாளக் கிறித்தவரே ஆதிக்கம் புரிகிறார்கள். இதன் துறவு நிறுவனங்கள், கல்வி மற்றும் தொழில் நிறுவனங்கள், திருச்சபையின் ஆட்சி நிர்வாகங்கள் முதலான அனைத்திலும் சிறுபான்மைச் சாதிக் கிறித்தவர்களே அதிகாரத்தில் இருக்கிறார்கள். தலித் கிறித்தவ மக்களின் பேரால் மேற்கு நாடுகளில் பெறப்படும் நிதி ஆதாரங்கள் அனைத்தும் சாதிக் கிறித்தவர் மேம்பாட்டிற்கே பயன்படுத்தப்படுகின்றன. இதன் கல்வி நிறுவனங்களாலும், சேவை நிறுவனங்களாலும் கிறித்தவ தலித்துக்கள் பயனடைந்தாலும் அப்படிப் பயனடைந்த இளம் தலித்துக்களுக்கு அங்குள்ள நிறுவனங்களில் வேலைகள் தலித்துக்களின் மக்கள் தொகை அளவிற்குத் தரப்படுவதில்லை. 'இந்து' தலித்துக்களுக்குள்ள அரசு இட ஒதுக்கீடு கிறித்தவ தலித்துக்களுக்கு மறுக்கப்பட்டுள்ள சூழலில் இது மேலும் கூடுதலான ஏமாற்றத்தைத் தலித் கிறித்தவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. கிறித்தவ மத நிறுவனத் தலைமையிடம் கிறித்தவ தலித்துக்கள் தங்களுடைய குறைகளைக் கூறினால், அது அரசாங்கத்தைக் காட்டுகிறது. அரசாங்கமோ சட்டத்தைக் காட்டுகிறது. இதனால் விழிப்புற்ற தலித் இளைஞர்கள் தங்கள் மதத் தலைமையோடு மோதலை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இது இயக்க வடிவம் பெற்றுத் 'தலித் கிறித்தவர் விடுதலை இயக்கம்' என்று ஆகியுள்ளது.

இந்தச் சூழலில் தான் கிறித்தவ தலித் நாவல்கள் தோன்றின. இவை தலித் கிறித்தவ மக்களின் போராட்டச் சூழலில் தோன்றியது குறிப்பிடத்தக்கது. இவற்றுள் "பாமா" என்ற கிறித்தவ தலித் பெண் எழுத்தாளர் படைத்த 'கருக்கு', 'சங்கதி' ஆகிய நாவல்கள் கிறித்தவர் மற்றும் தமிழ் இலக்கிய வட்டாரங்களில் பரவலான வரவேற்பைப் பெற்றன. 'கருக்கு' என்ற பிரதி, தன் வரலாறாக அமைந்துள்ளது. ஒரு தலித் கிறித்தவப் பெண்ணின் ஓர்மையில் அவளுடைய கிராமம், படித்த பள்ளி, கல்லூரி, கன்னியர் மடம் ஆகியவற்றில் கடுத்தமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிற தீண்டாமைக் கொடுமைகளைத் தலித்தின் சேரி மொழியில் கூறுவதுதான் 'கருக்கு'. தீண்டாமை, வறுமை, அறியாமை ஆகியவற்றைப் போக்கி இயல்பான மனிதராவதற்கு ஒரு தலித், குறிப்பாகத் தலித் பெண் பிற மாந்தரைவிட எத்துணை அல்லல்களை அனுபவிக்க வேண்டியது உள்ளது என்பதை வெகு எளிய முறையில் கூர்மையாக இந்நாவல் எடுத்துரைத்துள்ளது. மராட்டியத்தில் முதன் முதலாக தோன்றிய தலித் நாவல், சுயசரிதை வடிவில் அமைந்ததைப் போலவே தமிழகச் சூழலிலும் 'பாமா'வில் முதல் தலித் நாவல் சுய சரிதை வடிவிலே அமைந்துள்ள ஒற்றுமை நோக்கத்தக்கது. கறுப்பர் மற்றும் பெண்ணிய நாவல்களிலும் இந்தப் போக்கைக் காணலாம். ஒடுக்கப்பட்டோர் பேசத் தொடங்கும்போது முதலில் சுயசரிதை வடிவமே தோன்றியுள்ள அம்சத்தைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

"சங்கதி" என்ற இவருடைய இரண்டாவது நாவல் வித்தியாசமானது. வழக்கமான நாவல் வடிவில் இது அமையவில்லை. கிராமத்தில் தலித் பெண்கள், சிறுமிகள், பாட்டிகள் ஆகியவர்களின் உலகங்களை அவர்களுடைய மொழி வழியே இந்நாவல் பதிவு செய்கிறது. இவர்களை நாகரிகமற்ற வெறும் பறைச்சியராகப் பார்த்துப் பழகிவிட்ட தமிழகத்திற்கு, இவர்களிடம் ததும்புகின்ற மனிதப் பெறுமதிகள் வியப்பை ஏற்படுத்தின. அதேவேளையில் இந்நாவலில் தலித் சாதிக்குள் இருக்கிற ஆணாதிக்க அம்சங்கள் பெண்ணின் பார்வையில் விமர்சிக்கப்பட்டுள்ளன. சுருங்கச் சொன்னால், தலித் பெண்களின் உடல், மனம், பேச்சு, செயல், உழைப்பு ஆகியவற்றைச் சமத்காரங்களோ, அலங்காரங்களோ இல்லாமல் 'பாமா' கூறியுள்ளார் எனலாம்.

இவர், தமது இரு நாவல்களிலும், இலக்கிய மொழி, உயர்ந்தோர் வழக்கு, தகுதி வழக்கு, இலக்கியத் தகுதி வழக்கு ஆகியவற்றின் ஆற்றல் இன்மையை, விலக்கிப் பழிக்கப்பட்ட தலித் மொழியால் வெளிப்படுத்தியுள்ளார். இது தலித் இலக்கியத்தின் சிறப்பு அம்சம் ஆகும். வரலாற்றில் ஊமைகளாக்கப்பட்ட தலித்தின் பேச்சு எத்தனை வீரியமாகவும், நேரடி உணர்வு வெளிப்பாடாகவும், சம்பிரதாயமற்றதாகவும் இருக்கும் என்பதற்குப் 'பாமா'வின் நாவல்கள்

எடுத்துக்காட்டுக்களாகும். இவர் படைப்புக்களில் தலித் பார்வையோடு பெண்ணியப் பார்வையும் இணைந்துள்ளன. தலித் பெண் எழுத்தாளர் சிவகாமிக்கும் இது பொருந்தும்.

அடுத்து, கிறித்தவ நிர்வாகத் தலைமையை எதிர்த்து வெடித்த தலித் கிறித்தவர் இயக்கத்திற்கு எதார்த்த வகைப்பட்ட நாவல் வடிவம் கொடுத்துள்ள மாற்கு என்பவரின் "யாத்திரை"யைக் காணலாம். இவர் பிறப்பால் பிற்பட்ட சாதியைச் சேர்ந்தவர் ஆயினும் தம்மைத் தலித்துக்களோடு உணர்வுப் பூர்வமாக இணைத்துக் கொண்டவர். அதனால் தலித் மக்களின் பார்வையில் இந்நாவலைப் படைத்துள்ளார். 'யாத்திரை' என்ற நாவல் கத்தோலிக்க கிறித்துவ சமுதாயத்தில் தலித்துக்கள் மீது பாராட்டப்படும் தீண்டாமைக் கொடுமைக்கு எதிராக இயக்கமாக அணி திரண்ட கிறித்தவ தலித்துக்களின் போர்க்குணத்தைச் சித்திரித்துள்ளது. தலித் பெண்களும் இப்போராட்டத்தில் இணைந்து தங்களின் இயல்பான கலகச் செயல்பாட்டை வெளிப்படுத்தியதை நாவல் பதிவு செய்துள்ளது. அதோடு, தலித் அல்லாத பிற சாதியைச் சேர்ந்த மனிதாபிமானியால் தலித்துக்களை ஓர் எல்லை வரைதான் வழி நடத்த முடியும், அதற்குப் பின் தலித்துக்களின் வேகத்திற்கும், தலைமைக்கும் முன் தலித் அல்லாத தலைமையால் ஈடு கொடுக்க முடியாது என்ற இயக்க உண்மையை மாற்கு கூறியுள்ளார். பெரும்பான்மையான கிறித்தவர்களாகத் தலித்துகள் இருக்க, ஆனால் உரிமைகளும், உடைமைகளும் அதிகாரமும், பதவிகளும், முன்னேற்றமும் வெகு சிறுபான்மை உயர்சாதி கிறித்தவர்களுக்கே சென்று சேருவதை எவ்விதச் சமரசமும் இன்றி இவர் வெளிப்படுத்தியுள்ளார். தலித் இயக்கத்திற்கு நாவல் வடிவம் கொடுத்துள்ள மாற்குவை, டானியலின் வரிசையில் சேர்த்துக் காண முடியும்.

அடுத்து, தலித் கிறித்தவக் குடும்பம் (பறைவண்ணார்) பற்றிய நாவலான 'கோவேறு கழுதைகள்' என்பதைக் காணலாம். இதன் ஆசிரியர் இமையம். இந்நாவல் மரபான எதார்த்த வகைப்பட்டதாக உள்ளது. நாவல் நெடுகிலும், பறையருக்குத் துணி வெளுக்கும் பறைவண்ணார் குடும்பத் தலைவி ஆரோக்கியம் கடவுளைச் சொல்லிப் புலம்பி அழுகிறாள். கால மாற்றத்தைக் கண்டு கலங்குகிறாள். இந்தக் கால மாற்றத்தால், பழைய காலத்தைப் போலத் தன் அடிமை நிலைக்குரிய வருவாய் இன்றிக் குறைந்து கொண்டிருப்பதைக் கண்டு புலம்புகிறாள். சாதி அடிமைத் தனத்திலிருந்து விடுபடுதல் என்பது இவருக்குக் குடும்பச் சிதைவாகவும் வருவாய் குறைந்து வறுமையுடையதாகவும் படுகிறது.

வேளாண்மைச் சமூகத்தின் சாதிக் கடமை, உரிமை ஆகியவைகளால் அமைந்த உறவுகள் படிப்படியாக முதலாளிய - நகர நாகரிகமும், பொருளாதார

முறையும் பரவியபோது, பழைய சாதிக் கடமை, உரிமை, வறுமை எல்லாம் அர்த்தமிழக்கத் தொடங்குகின்றன. பழைய சாதி அடிமை முறைக்குப் பழக்கப்பட்டு அதனால் வசதி அடைந்து வந்த நிலைமை இறங்குவதை ஆரோக்கியத்தால் ஏற்க முடியவில்லை. இந்தக் கிறித்தவ தலித் பெண் அடிமை முறைக்கு ஏங்குகிறாள். இந்த அடிமை முறையை விட்டு நகர்ப்புறம் பெயர்ந்து புதிய பொருள் வகைப்பட்ட பண்பாட்டில் தன் புதல்வர்களும், பெண்ணும் கரைந்து போவதை அவளால் ஏற்க முடியவில்லை. தாயை மறந்தவர்கள், குடும்பத்தைச் சிதைத்தவர்கள் என்றுதான் தன் பிள்ளைகளை விமரிசிக்கிறாள். ஒரு விதத்தில் இவர்கள் மனிதாபிமானமற்றவர்கள் என்பது உணர்த்தப்படுகிறது. பழைய வேளாண் சமூக உறவுகளில் மனித நேயம் நிலவியது. ஏற்றத் தாழ்வான சாதி உறவுகளுக்கு இடையில் மனித நேயம் நிலவியது. ஆனால், புதிய பொருள் வகைப்பட்ட தொழில்மய நாகரிகத்தில், மனித உறவுகளில் பொருளே மிஞ்சி நிற்கிறது. மனித நேயம் வறண்டுவிட்டது என்ற பார்வை இந்த நாவலில் குறிப்பிட்ட ஒரு கருத்தியல் பணியைச் செய்துள்ளது. ஆசிரியர் போற்றுகிற மனிதாபிமானம், மனித நேயம் எல்லாம் பறவண்ணாரின் அடிமைத்தனத்தை மேலும் வலுவூட்டும் பணியைச் செய்கின்றன. மாற்றத்தை மறுக்கும் சக்திகளுக்கு இக்கருத்தியல் அனுசரணையானது.

இமையம் ஓர்மையுடனோ அல்லது ஓர்மையின்றியோ உயர்த்துகின்ற மனிதநேயம் என்பது தலித் அவலத்தை ரசிப்பிற்குரியதாக ஆக்கியுள்ளது. தலித் அவலத்தையும், அடிமைத்தனத்தையும் கொண்டு ஆசிரியர் கிளப்ப முனையும் மனிதநேயம் என்பது காலத்தையும் இடத்தையும் கடந்த ஓர் ஒப்பற்ற (absolute)கருத்துதானே தவிர பௌதீக மனிதம் சார்ந்ததன்று. இப்படிப்பட்ட அருவருப்பான மனிதநேயம் என்பது மனிதர்களை என்றென்றும் மாறாமல், அவரவர் இருக்கின்ற நிலைமைக்குள் பொருந்திப் போக வைக்கின்ற வலி நிவாரணியாகும். இருக்கின்ற நிலைமைகள் சாதகமாகிவிட்ட ஆதிக்கத்தாருக்கு இந்தவித மனிதநேயம் வல்லமை மிக்க கருத்தாயுதமாகும். ஆனால், சாதிய அடிமை முறையையே தலித்துக்களுக்குச் சாதகமான நிலை எனக் காட்டுகிற இந்த மனிதநேயம் கொடுமையானது. தலித் விடுதலைக்கு எதிரான ஆதிக்கச் சித்தாந்தங்களும், கருத்தியலும் தலித்துக்களிடம் ஆதிக்கம் செய்து கொண்டிருப்பதற்கு இமையம் படைத்த இந்த நாவல் சிறந்த எடுத்துக்காட்டாகும். மாற்றத்தைக் கொண்டுவர முயற்சிப்பதே தலித்துக்கான மனித நேயச் செயலாகும். செயல்படுகின்ற மனிதநேயம் என்பது மேன்மைக்கான மாற்றத்தைச் சாதிக்கின்ற அரசியலுடன் கலந்துள்ளது.

இந்நாவலில், தலித்துக்களின் எழுச்சி கண்டு அதனை மேலும்

வளர்ந்துவிடாதபடி தடுக்க முனைபவர்களுடைய ஒரு விமர்சனம் மிகுந்த கவனத்தோடு அனுசரிக்கப்பட்டிருக்கிறது. தலித் சாதிகளுக்கு இடையில் மட்டும் தீண்டாமை இல்லையா என்பதுதான் அந்த விமர்சனம். இந்த விமர்சனத்துக்கு இந்நாவல் உவப்பாகத் துணை புரிகிறது. இந்த விமர்சனத்தில் பகுதி உண்மையே உண்டு. தீண்டத் தக்கவராகிய நால்வருணத்துச் சாதியார்கள், தீண்டத் தகாதாராக்கப் பட்ட பஞ்சம தலித் சாதிகள் மீது அனுசரிக்கின்ற தீண்டாமைக் கொடுமைக்கும், பஞ்சம தலித் சாதியார்கள் தங்களுக்கிடையில் அனுசரிக்கின்ற தீண்டாமைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை இந்நாவல் மௌனப்படுத்தியுள்ளது. இந்த மௌனமும், தலித்துக்கிடையில் உள்ள தீண்டாமை குறித்த நாவலின் ஓசையும், தலித் விடுதலைக்கு எதிரானவர்களுக்குச் சாதகமாக உள்ளன. தலித்துச் சாதிகளின் உள் முரண்பாடு குறித்த அழுத்தம் இந்நாவலில் பெரிதுபடுத்தப்பட்டுள்ளது. பெண்களிடையே பொருளாதாரம், சாதி ஆகியவற்றால் முரண்பாடுகள் இருப்பினும் பால் அடிப்படையில் அவர்கள் ஆணாதிக்கத்தை அகற்றுவதில் ஒருங்கிணைவார்கள். இதேபோலத் தலித் மக்களிடையே பொருளாதாரம், சாதித்தீட்டு ஆகியவற்றால் உள் முரண்பாடுகள் இருப்பினும், தீண்டத்தக்கவர் எனப்படும் சாதியாரின் ஆதிக்கத்தை அகற்றுவதில் ஒருங்கிணைவார்கள். இப்படிப்பட்ட புரிதலை இந்நாவல் திசைத்திருப்பியுள்ளது. மேலும், தலித்துக்களுக்குள் லட்சாதிபதிகள், கோடீஸ்வரர்கள் இல்லையா என்று தலித் நியாயத்தை மறுப்பவர்கள் கேள்வி கேட்பதால் இன்னொரு வகைதான், தலித்துக்களுக்குள் மட்டும் தீண்டாமை பாராட்டுவதில்லையா என்பதாகும். இந்த விதத்தில் இந்தப் புதிய நாவல் தலித்தால் தலித் பற்றிப் படைக்கப்பட்ட, தலித்துக்கு எதிரான நாவலாகும் என்று கூறலாம். தலித் இலக்கியம் தோன்றும்போதே இவ்வாறான விபரீதப் போக்கும் தோன்றிவிடுவதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உ) 'இந்து' தலித் நாவல்கள்

கிறித்தவ தலித்துக்கள் அல்லாத தலித்துக்களை அடையாளப்படுத்த இந்து தலித் என்பது பயன்படுத்தப்படுகிறது. தலித்துக்கள் இந்துக்கள் அல்ல என்று டாக்டர் அம்பேத்கர் எழுதியது கவனிக்கத்தக்கது. இந்து மதத்தில் இருப்பதாலேயே தலித்துக்கள் தீண்டத்தகாதவர் என்று ஆக்கப்படுகிறார்கள். இன்றைய தலித்துக்கள் இந்து என்று குறிப்பிட்டாலும் இவர்கள் பார்ப்பன வேளாளரின் ஆசாரங்கள் சடங்குகள் மலிந்த வைதீக இந்துக்களாக இருப்பதில்லை. படித்த சில நகர்ப்புற தலித்துக்கள் ஒருக்கால் இவ்வாறு வைதீக இந்துக்களாக இருக்கலாம். ஏனையோர்க்குக் குல தெய்வம், தேவதை, நாட்டுப்புற வழிபாடு ஆகியவை வழிபாடாக இருந்துகொண்டிருக்கின்றன.

இனி இப்படிப்பட்ட தலித்துக்களின் ஒரு சில நாவல்களைக் காணலாம். 1979-ல் 'பிறகு' நாவலைப் படைத்த பூமணியும், தொண்ணூறுகளின் தொடக்கத்தில் 'பழையன கழிதலும்', 'அனந்தாயி' ஆகிய நாவல்களைப் படைத்த சிவகாமியும் குறிப்பிடத்தக்க தலித் நாவலாசிரியர்களாவார்கள். எதார்த்த வகைப்பட்ட நாவல்கள் மூலமும் தலித் சிக்கல்களை நேர்த்தியாகச் சொல்லலாம் என்பதற்கு இவர்களுடைய படைப்புகள் சான்று.

பூமணியின் 'பிறகு' நாவலில் சக்கிலிய சாதி மாந்தர்கள் எதார்த்தமாகப் படைக்கப்பட்டுள்ளனர். பூமணியும் கூட அடிமை வாழ்க்கை நடத்துகிற சக்கிலிய மக்களிடம் தோன்றும் மனிதநேயத்தைப் பற்றியே அக்கறை காட்டுகிறார். ஆயினும், இவர்கள் குறிப்பிட்ட கட்டத்தில் ஆதிக்க சாதிக்கு எதிராக ஆயுதத்தை ஏந்தவும் தயாராவதைச் சுட்டிக்காட்டுகிறார். இந்நாவலில் வரும் தலித்துக்கள் அவரவர் அனுபவம், வயது, வாய்ப்பு முதலியவற்றை ஒட்டித் தங்களுடைய எதிர்ப்பினைக் காட்டுகிறார்கள். வயதானவர்கள், ஆதிக்க சாதியார் பாராட்டுகிற தீண்டாமையை விதி, தலை எழுத்து, இயற்கை என்று சகித்துப் பழகிப் போகிறார்கள். இளைஞர்கள் அவ்வாறு இன்றிப் பண்பாட்டுத் தளத்தில், கிண்டல், கேலி முதலான வடிவங்களில் தங்களுடைய ஆற்றாமையை, சக்தி இன்மையை, மோதமுடியாத பலவீனத்தை வெளிப்படுத்துகிறார்கள். தங்களை ஆதிக்கம் செய்யும் மேற்சாதியார் பிணத்தை எரிக்கிறபோதும், அவர்களுடைய செத்த மாட்டை அறுக்கிறபோதும், இவர்களுடைய பேச்சுக்கள் சாதி ஆதிக்கத்தை எதிர்க்கும் பகடிகளாக வெளிப்படுகின்றன. இவர்களால் மேற்சாதி பிணங்களைத்தான் பகடி செய்ய முடிகிறது. இதுவே நடப்பும் கூட. ஆனால் தங்கள் பெண்ணை மேற்சாதியான் பலவந்தப்படுத்த முயலும் போது தலித்துக்களின் பகடிப் பேச்சுகள் கலகப் பேச்சாகி ஆயுதத்தை ஏந்துகிறார்கள். பொருளாதாரத்தைவிடப் பண்பாட்டுத் தளத்தில் தலித்துக்கள் மேற்சாதியின் ஆதிக்கத்தை எதிர்த்து எழத் தயாராவதை இந்நாவல் எடுத்துரைத்துள்ளது. பூமணி படைத்த அடுத்த நாவல் 'வெக்கை'. என்ன காரணத்தாலோ இவர் இந்நாவல் மாந்தரின் சாதி அடையாளத்தை மறைத்துவிட்டார். தமிழகச் சூழலில் பூமணிதான் தலித் சாதியினரான சக்கிலியரை முழு நாவலாகப் படைத்துள்ளார். அவருக்குப் பின் அவரும் தலித் படைப்புக்களைத் தரவில்லை. வேறு யாரும் படைத்ததாகவும் தெரியவில்லை.

புதிதாக இந்திய - தமிழகத்தில் எழுந்துள்ள தலித் எழுச்சியின் தாக்கத்தால் வந்த முதல் தலித் நாவலாக சிவகாமியின் 'பழையன கழிதலும்' என்பதைக் குறிப்பிடலாம். தலித்துக்கள் தங்கள் சாதிப் பழைமையிலிருந்து விடுபட்டு நவநாகரிக வாழ்விற்குள் செறிய வேண்டியதை ஆசிரியர் வலியுறுத்துகிறார். தலித்துக்களிடமுள்ள பழக்க வழக்கங்கள் பலவும் சீர்திருத்தப்பட வேண்டும்.

இவற்றால்தான் இவர்களைப் பிறர் கீழ்மையாக நடத்துகின்றார்கள் என்று ஆசிரியர் நோக்குகிறார். இதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆயினும் இவையே இவர்களுடைய அடிமை நிலை, தீண்டாமை ஆகியவற்றுக்குக் காரணம் என்று கூறுவது தவறு.

தீண்டாதார் மேல் முடைநாற்றம் வீசக் காரணம் கடுமையான உடல் உழைப்பு. இவர்கள் குளிக்க முடியாதபடி குளம், கிணறு முதலான நீர் நிலைகள் சாதிக் கிறுக்கர்கள் தடுப்பதே ஆகும். இவர்கள் நல்ல இடங்களில் வீடு கட்டி வாழத் தடை செய்யப்படுகிறார்கள். இவர்கள் கந்தல் அணிவது வறுமையால் ஆகும். தீண்டாதார் என்று ஒதுக்கி, பட்டினி போட்டு, கோயிலுக்குள் நுழைய விடாமல் தடுக்கின்ற தமிழ்நாடு சண்டையிட்டுச் சாகும் விலங்குகள் வாழும் காடாகச் சீரழியும் என்ற பொருளில் மறைமலையடிகள் அன்றே சொன்னது இவ்விடத்தில் பொருத்தமாக உள்ளது (மறைமலை: 1930, பக்-129). சிவகாமி இனங்கண்டுள்ள தலித் மக்களின் பழமைகளுக்கான காரணங்களை 'பாமா' தம் நாவல்களில், மதம், உளவியல், பாலியல், வறுமை, ஆண் ஆதிக்கம் ஆகியவற்றில் தேட முனைந்துள்ளார்.

ஆனால், சிவகாமி வேறொரு கோணத்திலிருந்து அணுகி, பழையவை கழித்துக் கட்டப்படவேண்டும், இந்த எதிர்மறைப் பண்பாட்டு அம்சங்கள் காலத்தால் பழையன, இவர்களுடைய முன்னேற்றம் இவர்களுடைய எதிர்மறையான பழக்க வழக்கங்கள், அசுத்தங்கள் ஆகியவை முற்றாக அகற்றப்படுவதில் அடங்கியுள்ளதாக ஆசிரியர் கருதுகிறார். கல்வி, சுகாதாரம் ஆகியவை தலித்துக்களுக்கு மீட்சி தரும் என்பதில் ஐயமில்லை. ஆனால், இவற்றைப் பெரும்பாலான தலித்துக்கள் பெறுவதில்தான் சிக்கல்கள் உள்ளன. இவை தலித்துக்களுக்கு மறுக்கப்படுகின்றன. படித்த சிறுபான்மை தலித்துக்களுக்கே இவை எட்டியுள்ளன. நடுத்தர வர்க்கத்து நகர்ப்புற வாழ்க்கை முறையைத் தலித்துக்களுக்குரிய வாழ்க்கை முறையாகச் சிவகாமி முன் வைக்கிறார். தலித்துக்களால் சாதி வரிசையில் உயர முடியாத நிலைமையில் பொருளாதார அடிப்படையில் கல்வியால் முன்னேற வழியுண்டு என்பதையும் மேற்கத்திய பொருள்வகை - நுகர்வோர் பண்பாடு இவர்களுக்கு மாற்றுப் பண்பாடாக இருக்க முடியும் என்பதையும் சிவகாமி உணர்த்தியுள்ளார். வைதீகச் சாதி வரிசையில் மேலிடம் கிடைக்கும் என்பதைவிடத் தலித்துக்களுக்குப் பொருளாதார பலமும், சமத்துவமும், தனிமனித உரிமையும், சுதந்திரமும், கவுரவமும் பெற்றுத் தரத்தக்க நடுத்தர வர்க்கத்து வாழ்க்கைமுறையும் பொருள்வகைப் பண்பாடும் மேலானவை என்பதில் ஐயமில்லை. ஆனால், இதில் பல சிக்கல்கள் உள்ளன. ஒன்று, கல்வி, வணிக மயமாகிவிட்ட சூழலில் பெரும்பாலான தலித்துக்களால் கல்வி கற்று முன்னேற

முடியவில்லை. இரண்டு, கல்வி கற்ற தலித்துக்களும் கூட உயர் கல்வி, உயர்பதவி பெற முடியவில்லை. இவர்கள் நடுத்தர வர்க்கத்து வாழ்க்கை வாழ்ந்தாலும் தலித் சாதித் தீட்டு இவர்களைத் தொடரவே செய்கிறது. தங்கள் சாதியைப் பிறர்க்கு மறைத்தே வாழவேண்டியவர்களாகப் பலர் இருக்கிறார்கள். மூன்று, நடுத்தர வர்க்கத்துப் பொருள்வகை - நுகர்வோர் பண்பாடு மாந்த உறவுகளைப் பொருளால் தீர்மானிக்கும் அடிப்படையைக் கொண்டது.

மனிதர்களுக்கிடையே பலத்த உளவியல் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. இதனைத் தலித்துக்களுக்கு விமோசனம் தரும் வாழ்க்கை முறையாகக் கருத இயலாது. இறுதியாக, படிக்காத, பாமர தலித்துக்கள் கிராமப்புறங்களில் பெருவாரியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வறுமை, அவமதிப்பு, அறியாமை, ஆற்றாமை பசி முதலான காரணங்களால் நாகரிகம் என்று கூறமுடியாதபடி சில பழக்கங்கள் இவர்களிடம் இருக்கலாம். ஆயினும், இவற்றின் ஊடாக இவர்கள் பல நூற்றாண்டுக்காலமாகத் தக்க வைத்துக் கொண்டுள்ள கூட்டுப் குழுப் பண்பாட்டு அம்சங்களை எளிதில் புறக்கணித்துவிட இயலாது.

இதுவரை கிறித்தவ மற்றும் கிறித்தவரல்லாத தலித்துக்கள் படைத்த நாவல்களின் தலித்திய அம்சங்கள் பற்றிக் கட்டுரை விளக்க முயன்றுள்ளது. இதோடு முடிந்துவிடுவதில்லை. இனிமேல்தான் தலித்தியக் கூறுகள் மிக்க தலித் கலக இலக்கியம் வகைவகையாகத் தோன்றும். இந்த இலக்கியம் பார்ப்பன-வேளாள இலக்கியத்தின் ஓர் அங்கமாக, ஒரு துறையாக இருக்க முடியாது. மாற்று இலக்கியமாகத் தலித் இலக்கியம் தோன்றிப் பின்னர் அது ஏனைய பிற மாற்று இலக்கிய வகைகளோடு இணைந்து புரட்சிகர நவீனத்துவ இலக்கியமாகப் பரிணாமம் அடையும்.

8. முடிவு

'தமிழ் நாவல்களின் தலித்தியம்' என்ற இக்கட்டுரையில் சில முடிவுகள் பெறப்பட்டுள்ளன. அவை :

1. பார்ப்பன - வேளாளர் நாவல், கதைகளில் தலித்துக்களைப் பற்றிய சித்திரிப்பில் -உயர்சாதி அரசியல் நுட்பமாக வெளியிடப்பட்டுள்ளது.
2. தொடக்ககால நாவல்களில் தலித்துக்களின் மீட்சி குறித்த இந்துப் பார்ப்பன- வேளாள நாவலாசிரியர்களின் அக்கறை என்பது இந்து சமூக ஆசார சீர்திருத்தத்தின் ஓர் அங்கமாக இருந்துள்ளது.
3. இவர்களுடைய கதைகளில் சுவை, சமத்காரம் ஆகியவற்றிற்காகத்

தலித்துக்களின் தாழ்ந்த நிலை பயன்படுத்தப்பட்டுள்ளது.

4. தலித்துக்களின் தாழ்ந்த நிலைமைக்குக் காரணம் தலித்துக்களே என்ற கருத்து சிலர் கதைகளில் கூறப்பட்டுள்ளது.

5. கிறித்தவ மத மாற்றத்தில் தொடக்கத்தில் தலித்துக்களுக்கு விடுதலை கிடைத்தாலும் பின்னர் கிறித்தவத்திற்குள்ளும் சாதிமுறை ஏற்பட்டதால் மதமாற்றம் தலித் விடுதலைக்கு உதவாது என்ற கருத்து சிலர் கதைகளில் வெளியிடப்பட்டுள்ளது.

6. எதார்த்த வகைப்பட்ட இலக்கியத்தால் தலித் நிலைமைகளையும், மாறுதல்களையும் போதிய அளவிற்கு எடுத்துரைக்க இயலாது.

7. இடதுசாரி மற்றும் திராவிட இலக்கியங்கள் முறையே வர்க்கம், சூத்திரர் பார்வையில் படைக்கப்பட்டதால் தலித்துக்களைப் பற்றிய எடுத்துரைப்பு நிறைவாக இல்லை.

8. தலித்துக்கள் படைத்துள்ள நாவல்களில் சுயசரிதை, தலித் மொழியாட்சி, எதார்த்தவகை, பகடிப்பேச்சு இருப்பவற்றைக் தலைகீழாய்ப் புரட்டுகிற கலகச் செயல், தலித் பெண்களின் உலகம், தலித்துக்களைச் சீர்திருத்தி நடுத்தர வர்க்க வாழ்க்கை முறைக்கு மீட்டல், தலித் இயக்கமயமாதல், போராட்டம் முதலான தலித்திய அம்சங்கள் காணப்படுகின்றன.

9. எதார்த்தவகை நாவலின் அருவமான மனிதநேய மயக்கத்தால் தலித் படைப்பாளி தலித்துக்களைப் பற்றி எழுதி தலித்துக்கு எதிரான நாவலைப் படைக்கவும் முடியும்.

துணை நூற்பட்டியல்

இமையம் (1994) *கோவேறு கழுதைகள்*, சென்னை.

குருஸ்வாமி ஸர்மா, *பிரேமகலாவதீயம்*, சென்னை.

சிவகாமி (1992) *பழையன கழிதலும்*, சென்னை.

சிவகாமி (1993) *ஆனந்தாயி*, சென்னை.

சூரியநாராயண சாஸ்திரி, வி.கோ. (1902) *மதிவாணன்*, சென்னை.

டானியல் (1982) *பஞ்சமர்*, தஞ்சாவூர்.

__________ *கோவிந்தன்*, சென்னை.

__________ (1986) *கானல்*, கும்பகோணம்.

——————— (1987) *அடிமைகள்*, கும்பகோணம்.

பாமா (1992) *கருக்கு*, மதுரை.

——————— (1994) *சங்கதி*, மதுரை.

புதுமைப்பித்தன் (1987) *புதுமைப்பித்தன் படைப்புகள்*, சென்னை.

பூமணி (1979) *பிறகு*, சென்னை

மறைமலை அடிகள் (1968) *பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்*, சென்னை.

——————— (1972) *கோ.சிலாம்பாளள் கடிதங்கள்*, சென்னை.

மாதவையா, அ. (1924) *குசிகர் குட்டிக்கதைகள் - முதல் எட்டு*, சென்னை.

——————— (1924) *குசிகர் குட்டிக்கதைகள் - இரண்டாம் எட்டு*, சென்னை.

——————— (1944) *தில்லை கோவிந்தன்*, சென்னை.

25

NARRATOLOGY OF DALIT TEXT : A STRUCTURALIST ANALYSIS OF SIVAKAMI'S PALAIYANA KALITHALUM

R. BALACHANDRAN

Sivakami's Palaiyana Kalithalum, in the opinion of Raj Gowthaman, a Tamil Critic of Dalit writings, is a work by a Dalit novelist "written from the perspective of a western-educated intellectual and argues for the reformation of Dalits in tune with capitalist values" and "this reflects a certain trend in contemporary Dalit politics" (Gowthaman 1994: 185). Rajam Krishnan in her introduction to the novel claims that the work is a good example of realist writing (1989: n.p). Bala in his review of the novel has the following comment:

> What makes this novel unique is the first-hand inside perception one gets of the poor lot of rural Harijans, their festivals, marriages, food - habits, their beliefs, and above all their consciousness as a persecuted race and their readiness to rally against injustice (Bala 1990:3).

These comments acknowledge three points about the novel, that it is, in modern parlance, a Dalit novel; that it is a realistic text; and that it expresses the consciousness of the Dalit people,their consciousness of their persecution as well as their mood of resistance. This paper attempts an analysis and interpretation of a 'Dalit realistic text', Sivakami's *Palaiyana Kalithalum*, using the narrative categories of Gerard Genette given in his *Discours du recit* (1972).

2

Gerard Genette, in his *Discours du recit*, classifies the narrative analysis into five categories (David Lodge 1981:20 and Terry Eagleton 1983: 105-6). They are:

1. Voice	:	The narrator who speaks the action in the *Sjuzet*.
2. Mood	:	This is concerned with 'perspective' (on *who* sees the action) and 'distance' (about the nature of the narrative, diagetic/mimetic).
3. Order	:	The relation between the order of events in the *fabula* and the order of events in the *Sjuzet*. (*Fabula* stands for the story in its neutral chronological order and form; and *Sjuzet*, the actual text in which the story is imitated).
4. Duration	:	This signifies elision, expansion summary of episodes, and decides the pace of the narrative.
5. Frequency	:	This is on the relationship between the event and the narrative, and analyses the number of times an event is narrated in relation to the number of times it occurred. (happened once, narrated once; happened *n* times and narrated *n* times; happened once and narrated *n* times; happened *n* times and narrated once).

We now attempt to study Sivakami's novel by analysing order, duration and frequency of the narrative, especially the first and the last chapters of the novel.

3

The three categories --order, duration frequency and -- decide "the temporal

organisation (or deformation) of the *fabula* by the *Sjuzet*" (Lodge 1981: 20). The *fabula* begins with the attack on Thangam, a Dalit widow, for carrying on an affair with her landlord, Paranjothi, though the latter was responsible for it, as he exploited her wretched condition to his advantage. As Paranjothi's relatives badly maul her, she goes to Kathamuthu's house for help. But the *Sjuzet* begins with the meeting of Kathamuthu and Thangam, and the story of attack on Thangam is told in flashback. The analèpsis operation of the *Sjuzet* may be for generating suspense and sustaining the interest. But the organisation of *Sjuzet* in a different time order is made to project Kathamuthu more prominently than Thangam, to project the man first before the woman. This enables the text to highlight two kinds of oppression -- of women and Dalits.

Chapter 1 of the novel opens with Nagamani in bed, without her sari and Kathamuthu standing near her "Hey, wear your sari, and go back to sleep", he orders the woman. In the next room, as he walks out, he sees his first wife Kanakavalli and Gowri, his adult daughter, lying on the bed. And Thangam who waits outside for his appearance is seen by him not as a human, but as "an image with its head entirely convered and body sticking on the pillar, mumbling in agony". The narrator shows the four major women characters of the novel in their natural/ inflicted passivity -- in sleep/in tormented / in action, all of them lower to Kathamuthu. The very structure of order reveals that Kathamuthu too is a persecutor in some sense, as is Paranjothi, the upper class landlord.

The discourse of the narrative is prominently abusive, and Kathamuthu who is more foulmouthed than anyone else in the text, chides Thangam for employing abusive language. His very first words to Thangam are degrading: "Why, you widow, why do you wail?" And the very first sentence given to Thangam is "Oh, my Lord, They've killed me, oh." Kathamuthu is addressed *Sami* (God) and '*they*' distances her oppressors. Chapter 1 narrates the story of Thangam's sufferings, and the discourse involves a string of abuses, and in contrast, in Chapter 25, the last Chapter of the novel, we find no abuses at all in the words of Kathamuthu or other characters. The difference is determined by the militant resistance of Kathamuthu and Thangam in Chapter 1 and the hopeful protest of Gowri and Sekaran in Chapter 25.

The mood of resistance by Thangam could be perceived in the frequency of references to the beatings she got from the uppercaste people. It is referred to by the actants again and again, and the subject talks about it 9 times in her talk with Kathamuthu.

4

Dalit writing involves two key determinants: Dalit/any word which connotes untouchability; and the act of writing about the Dalits/castes of untouchables. Naturally, we find the initial and final chapters of the novel involve these two words: writing/naming the caste of untouchables.

"Write what I say. Write neatly," Kathamuthu commands his daughter, Gowri, as she sits down to write a petition of complaint to the police about the attack by uppercaste people on Thangam. He says 'Zilla' and she writes the English equivalent 'district'. He says 'taluk' and she writes the modern word for it, 'Vattam'. He deliberately makes Thangam's issue a caste issue so that he can legally punish her tormentors. He "distorts" the event and says that Thangam was beaten since she walked along the streets of the uppercaste people, and as they beat her, they called her abusively by her caste name. When Kathamuthu enquiries if she has written as was told, she fumes in protest, "why do you say *that* (low caste name) again and again. I have written *that.*" She uses the distance demonstrative *that*, instead of the caste word, and her *act of writing* involves the *act of erasing* the caste. She is not willing to utter the word and hates to hear it again and again. She 'erases' it with a 'that'. While Kathamuthu uses the word to "distort" the story, he is using the word to his advantage. But Gowri wants to leave it back to the past: "I've already written *that.*" This is in opposition to the act of writing that we find in the final chapter. She writes an essay an liberation and mentions the collective word 'suppressed communities' instead of any single caste name, and she is goaded on by Sekaran to carry on with her project, "write ......write......." and he also suggests a suitable *reader* for her writing, Chandran, their brother. In Gowri's sentence, the untouchables become 'depressed community' and they are lost/merged with other backward castes. In fact, her

caste disappears in a larger totality. But the sentence is incomplete. The incomplete sentence is determined by the divisions present still among the castes, backward and the Dalits.

The two acts of writing reveal an opposition between the present and future (the present, distorted and the future incomplete):

Act I

Kathamuthu	:	'Dictator' of the letter
Gowri	:	Unwilling 'writer'
Police Inspector	:	Target Reader

The process involves 'distortion', 'substitution' and 'completion'. The target reader involves authority, and the letter is intended for communication and action.

Act II

Gowri	:	The willing 'writer' of the essay.
Sekaran	:	The agent who approves her act.
Chandran	:	The target reader/ the first reader. He is not one of authority, but a brother and an agent advocating change.

The process involves no communication, no 'distortion' but persuasion. The essay is incomplete, and Gowri says, "I've written just a little".

This structural analysis reveals the *parole* -- of abuses; the acts/events of distortions and representation; and the placings of subjects and objects in vertical -- horizontal relationships; -- all have been conditioned by the nature of the Dalit discourse demanded by the text. Resistance, and persecution, inherent in subjugation cases of women and Dalits, enforce such structures and discourse as we have found in this paper.

REFERENCES

Bala (1990). "Novel on a Sensitive Problem". *Indian Express weekend.*

Eagleton, Terry (1983). *Literary Theory*, Oxford.

Gowthaman, Raj (1994). "Contemporary Dalit Literature in Tamil: A comment". *Indian Literature.*

Lodge, David (1981). *Working with Structuralism*. London.

Sivakami (1989). *Palaiyana Kalithalum*, Sivaganagi.

(26)

இலக்கியத் திறனாய்வு : மேற்கும் கிழக்கும் கோட்பாட்டுச் சிக்கல்களும் தீர்வுகளும்

கார்லோஸ் - தமிழவன்

*தமிழ் இலக்கியத் திறனாய்வு ஒரு தனி துறையாக இருபதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியிலிருந்து தோன்றினாலும் அதற்கும் முன்பே இலக்கியச் சிந்தனைகள் சமஸ்கிருதத்தைப் போலவே தமிழிலும் இருந்தன. இருபதாம் நூற்றாண்டு முடிவடையும் தறுவாயில் தமிழிலக்கியத் திறனாய்வின் போக்குகளை விளங்கிக் கொள்வதும் அனைத்துலக வரலாற்றின் ஒரு பகுதியாகத் தமிழ்த் திறனாய்வுச் சிந்தனை தன்னை வடிவமைத்த வகைகளைப் புரிந்து கொள்வதும் பொதுவான தமிழ் மக்களின் வாழ்க்கையைப் புரிந்து கொள்வதற்கு வழிவகுக்கும். ஒரு மக்கள் கூட்டத்தின் கலாச்சாரக் கட்டமைப்பை அறிவதே அவர்களைப் பற்றி அறிவதற்கான சிறந்த வழி. இந்நோக்கில் எத்தகைய அரசியல் மற்றும் கருத்துருவங்கள், சிந்தனையாக்கங்கள் ஆகியவற்றின் பாதிப்போடும் எத்தகைய சுய நிலை வரலாறுகள், சிந்தனைக் கட்டுகள் (*Problematics*) முதலியவற்றின் உள் - இணைவுகளாலும் தமிழ்த் திறனாய்வு என்னும் 'புலம்' கட்டமைக்கப்பட்டுள்ளது என்ற ஆய்வே இலக்கியத் திறனாய்வு - மேற்கும் கிழக்கும்: கோட்பாட்டுச் சிக்கல்களும் தீர்வுகளும் என்ற இக்கட்டுரையின் நோக்கம். இங்குச் சிக்கல்கள் தனியாக முன் வைக்கப்படாமல் உள்ளார்ந்த கட்டுரைப் போக்கிலேயே கணக்கிலெடுக்கப்பட்டுள்ளன. அதுபோல் கட்டுரைப் போக்கிலேயே சிக்கல் பற்றிய சிந்தனையோடும் கேள்விகளோடும் இணை நிகழ்வாய்த் தீர்வுகளும் முன் வைக்கப்படுகின்றன.*

இரவீந்திரநாத் தாகூரின் தேசியவாதச் சிந்தனை பற்றிக் கூறும் போது ஆஷிஸ் நந்தி (Nandy, Ashis, *1994) 'தேசம்'* (Nation) *மற்றும் 'அரசு'* (Government) *பற்றிய வேறுபாட்டைச் சுட்டி, தேசம் பற்றிய இன்றைய சிந்தனை பிரிட்டிஷாரின் காலனியாதிக்கச் சிந்தனையிலிருந்து நமக்கு வந்ததென்ற தாகூரின் எண்ணத்தை*

எடுத்து விளக்குகிறார் (Nandy, Ashis, *1994: 4-5*). தாகூர், 'தேசம்' என்ற சிந்தனை மேற்கு கண்டுபிடித்தது. இது இரும்பு போன்ற அமைப்பு; இது மாற்ற முடியாததும் உடையாததுமாக விளங்கி, பிற எல்லாவற்றையும் ஓர் ஒழுங்குக்கு உட்படுத்துகிறது என்றார். நவீன சிந்தனையின் உபபேறாக இன்று உலகமெங்கும் (மேற்கிலும் கிழக்கிலும்) பரவி, பல்வேறு நாகரிகங்களையும் சிந்தனைகளையும் மறைமுகமாய் நின்று கட்டுப்படுத்தும் இந்தத் 'தேசம்' பற்றிய சிந்தனை, இந்தியச் சமூகத்தையும் அதுபோல் தமிழ்ச் சமூகத்தையும் கூட எத்தகைய நிர்ணயங்களுக்கும் அமைப்புகளுக்கும் உட்படுத்தியது அல்லது உட்படுத்துகிறது என்பதை ஆய்வதே பலனளிக்கக் கூடியது.

இன்றைய சூழலில் மேற்கத்திய சிந்தனைகளை நம் சூழலுக்கு அவை பொருந்துகின்றனவா பொருந்தவில்லையா என்ற பரிசீலனை இன்றியே மூன்றாம் உலகநாடுகள் பின்பற்றுகின்றன. வெளிநாட்டுப் பயணங்களுக்காகவும் அவர்களின் ஆய்வுத் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் அந்நியப் பண உதவியுடன் செய்யப்படும் ஆய்வுகள் நம் நாடுகளில் மதிப்புக்குரிய செயல்களாக உள்ளன.[1] நம் சூழலும் வரலாறும் மக்களின் வாழ்க்கைத் தேவைகளும் தூண்டிய ஆய்வுகளாக அவை இல்லை. இவற்றிற்கு மாறாகச் சுயமரபு மூலங்களிலிருந்து உந்தப்பட்ட ஆய்வுகளும் சிந்தனைகளும் கூட சோகை பிடித்தனவாக உள்ளன. இச்சூழ்நிலையில் தான் இலக்கியத் திறனாய்வு பற்றிச் சிந்திக்க வேண்டும். இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க் கல்வியை நவீனப்படுத்தும் நோக்கத்தோடு, இலக்கியத் திறனாய்வு தமிழ் உயர் கல்வியில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது போலவே படைப்பாளிகள் தங்கள் நோக்கிலும் மார்க்சீய சிந்தனைக்கு உட்பட்ட தமிழ்க் கல்வியாளர்கள் அனைத்துலகச் சிந்தனைப் போக்கிலும் தமிழ்த் திறனாய்வை வடிவமைக்க முயன்றனர். இத்தகைய கல்வியியலாளர் குழு, இலக்கியக்குழு, மார்க்சீயக் குழு என்ற இம்மூவகை இலக்கியத் திறனாய்வுக் குழுக்களின் வன்மை மென்மைகள் வேறு இடத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.[2]

இரவீந்திரநாத் தாகூர், 'தேசம்' என்ற பிரக்ஞை நம்மைப் புதிய சொல்லாடல்களுக்கு அறிமுகப்படுத்தும் என்று கூறாவிட்டாலும் தேசச் சிந்தனையின் பின்னர்ப் பதுங்கியிருந்த வடிவமைப்பின் அசுரக் குணத்தை அவர் புரிந்தேயிருந்தார்.[3] ஆஷிஸ் நந்தி அவர்கள் தாகூரின் *காரே -பைரே* (Ghare - Baire) என்ற புதினத்தை ஆய்ந்து தாகூரின் தேசப் பிரக்ஞைக்கு எதிரான எண்ண ஓட்டத்தை விளக்குகிறார். சுதந்திரப் போராட்டத்தை ஆதரித்த தாகூர், தேசம் பற்றிய சிந்தனையை ஆதரிக்கவில்லையா என்றால் ஆஷிஸ் நந்தி மிகக் கறாராக 'ஆம், ஆதரிக்கவில்லை' என்று பதில் கூறி, தாகூர் நாட்டுப்பற்றை (Patriotism) ஆதரித்தாலும் 'தேசம்' என்கிற சிந்தனை மனிதர்களை நல்வழியில் கொண்டு

சேர்க்காது என்றே கருதினார் என்று விளக்குகிறார் (Nandy, Ashis 1994:1-22).

இந்த இடத்தில் இந்தியத் தேசிய வாதம் (Indian Nationalism) பற்றிய சமீபத்திய சிந்தனைகளைச் சுட்ட வேண்டும். மேலாதிக்கக் குழுவினரின் அல்லது மரபான வரலாற்றாசிரியர்களின் பார்வையில் மட்டுமல்லாது தேச சரித்திரம் ஒதுக்கி வைக்கப்பட்டோரின் (Subaltern) பார்வையிலும் எழுதப்பட வேண்டும் என்ற குரல் புதியதாய்க் கேட்க ஆரம்பித்துள்ளது. இச்சிந்தனையானது இந்திய தேசியவாதம் ஒற்றைப் போக்கானது (Homogeneous) அல்லது பல் நிலைத்தானது (Heterogeneous) என்கிற பார்வையை முன் வைத்துள்ளது. மேலும் இந்தியத் தேசிய இயக்கத்துக்குள் இருந்த ஆதிக்கப் பண்பை இனம் காணவும் தொடங்கியுள்ளது.[4]

இப்பின்னணியில் இந்திய இலக்கிய விமர்சனத்தின் பண்புகளை வரையறுக்க முடியும். ஐரோப்பியர் வருகைக்குப் பின் இந்திய இலக்கியம், இந்தியக் கலை, ஓவியம், கட்டடக்கலை, இந்திய அழகியல் போன்ற பல துறைகள் புத்துயிர் பெற்றன. இத்துறைகளில் உழைத்தவர்களாக இன்று அனைத்துலகப் புகழ் பெற்றுள்ள ஹிரியண்ணா, ஆனந்த குமாரசாமி மற்றும் அரவிந்தர் ஆகியோரைக் குறிப்பிடலாம். இவர்கள் மூவருமே சமஸ்கிருத இலக்கியத்தையும் அம்மொழியின் மூலமாக வெளியுலகிற்குத் தெரிய வந்துள்ள சிந்தனைகளையும் அடியொற்றித் தத்தம் சிந்தனைகளை வளர்த்தவர்கள். அத்துடன் ஆங்கிலக் கல்வியின் எல்லாப் பயன்களையும் பெற்றவர்கள் இவர்கள் என்பதையும் நாம் மறக்கக்கூடாது. மாக்ஸ்முல்லர் கொண்டிருந்த "இயற்கையின் அழகு பற்றிய சிந்தனை இந்திய மனங்களில் இல்லை" என்ற கருத்தை மறுப்பதற்காக இந்திய அழகியல் பற்றி எழுதத் தொடங்கியவர் ஹிரியண்ணா. ஆனந்த குமாரசாமி சமஸ்கிருத வேதங்களிலும் அலங்கார நூற்களிலுமுள்ள இந்தியக் கலைக் கோட்பாட்டை அனைத்துலக மரபுகளோடு இணைத்து, கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய புரிதலுக்காக உழைத்தார். " ஐரோப்பிய பிரக்ஞையானது மேலோட்டமான ஈடுபாடுகளில் நின்றுவிட்டது. எனவே ஒருமையை உணர அவர்களால் இயலவில்லை. ஆசிய நாட்டவரின் கலைச்சிந்தனை அவர்களுக்குப் புரியவில்லை" என்று ஆனந்த குமாரசாமி கருதுகிறார்.[5] அரவிந்தரும் ஐரோப்பிய நாகரிகத்தை உள்வாங்கிப் பின்னர் இந்திய இலக்கியச் சிந்தனையை உருவாக்கியவர். இதிலிருந்து சுதந்திரத்திற்கு முந்திய கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய இலக்கியச் சிந்தனையையும் அழகியல் சிந்தனையையும் மிகவும் சரியான அடிப்படையில் புரிந்து கொள்ள நமக்குச் சில வசதிகள் கிடைக்கின்றன. எட்வர்ட் செய்த் (Edward Said) என்ற திறனாய்வாளர் தமது புகழ் பெற்ற *கிழக்கத்திய வாதம்* (Orientalism) என்ற நூலில் இப்படிக் கூறுகிறார்:

கிழக்கு (Orient) என்பது ஐரோப்பியர்களின் ஓர் உருவாக்கம். பழங்காலத்திலிருந்தே அது வீர தீரச் செயல்க ளாலும், புரிய முடியாத உயிரிகளாலும், கவர்ந்திழுக்கும் ஞாபகங்களாலும், நிலப்பரப்புகளாலும், அனுபவங்களாலும் நிறைந்துள்ளது. *(Said, Edward 1978: 1)*

ஐரோப்பா தனது சிந்தனை மரபை உலகின் எல்லாப் பாகங்களுக்கும் வழங்கியதால் தான் உலகில் நவீன சிந்தனை பரவியது. அச்சிந்தனையால்தான் ஐரோப்பாவைக் கூட விமரிசிக்க, அதனைக் கண்டிக்க, உலகின் பிறபகுதிகளில் சிந்தனையாளர்கள் தோன்றினார்கள் என்றொரு கூற்று உண்டு. இது ஓர் இருமை எதிர்வு (Binary Opposition) சார்ந்த கூற்று. ஆனந்த குமாரசாமியின் எழுத்துக்களைப் படிப்பவர்கள் அவர் ஐரோப்பாவைக் குறைகூறுவது கூட ஐரோப்பியப் பண்பாட்டின் ஒரு பகுதியை அவர் உள் வாங்கியதால் தான் என்று புரிந்து கொள்வார்கள். அதுபோல் இம்மூன்று இந்திய கலை இலக்கிய, அழகியல் விமரிசகர்கள், அடிப்படையில் தங்கள் சிந்தனைகளை ஐரோப்பிய கலை இலக்கிய விமரிசகர்களோடு விவாதிப்பதற்காகவும் விவாதிப்பதன் மூலமும் உருவாக்கினார்கள். ஏனெனில், வேறு சூழலில் லூயி அல்துஸ்ஸர் (Louis Althussar) கூறியது போல், ஐரோப்பியர்களும் இவர்களும் ஒரே கேள்வியைத்தான் கேட்டார்கள். பதில்கள் என்னவோ வேறுபட்டவையாக இருக்கலாம். ஆனால் இருவேறு கலாச்சாரங்களையும் இருவேறு வரலாறுகளையும் கொண்ட கிழக்கும் மேற்கும் தங்கள் கேள்விகளைக் கூட வேறுவிதமாகக் கேட்டிருக்க வேண்டும். அதாவது, தொடர்ந்து லூயி அல்துஸ்ஸரின் கலைச் சொல்லையே உபயோகிப்பதானால், கிழக்கு தனது பண்புக்கு ஏற்ற அறிவுத் தோற்ற உடைசலைக் (Eastern Epistemological Break) கண்டிருக்க வேண்டும்.[6] அதுபோல் ஐரோப்பா விதித்த அதன் எதிரி - பாத்திரத்தைக் கிழக்கத்திய அறிஞர்கள் வகிக்கத் தேவையில்லை. இக்காரியத்தால் இன்னொரு கோணத்திலிருந்து ஐரோப்பிய சிந்தனை தான் கிழக்கத்தியர்கள் மூலம் வளர்ந்தது. இது ஃப்ரான்ஸ் ஃபானன் (Franz Fanon) சொன்னது போல் தோலால் கறுப்பர்களாகவும் மனத்தால் வெள்ளையர்களாகவும் இருக்கும் அறிவாளிகளைத் தோற்றுவித்தது.[7] இதன் விளைவால் தான் ஜி. யு. போப் கிறிஸ்தவப் பக்திப் பாடல்களுக்கும் திருவாசகப் பக்திப் பாடல்களுக்கும் ஒற்றுமை காண முடிந்தது. ஆனந்த குமாரசாமி கிழக்கிலிருந்து சொன்ன கருத்தை ஜி.யு. போப் மேற்கிலிருந்து வந்து சொன்னார். மறுமலர்ச்சிக் காலச் (Renaissance) சிந்தனையான அனைத்துலக மனிதசாரம் இவ்வாறு கலாச்சாரங்களின் வேறுபாடுகளை, உள் - முரண்பாடுகளை, ஒரு கலாச்சாரத்தின் பல்வேறு படிநிலைகளை, கணக்கில் எடுக்கத் தவறியது. இதனால்

விளைந்ததுதான் இந்திய மக்கள் ஒரே இனமாக, ஒரே நாகரிகம் கொண்டவர்களாக, ஒரே வர்க்கமாக இருந்தனர் என்று பார்க்கின்ற பார்வை. இது ஐரோப்பா தன்னைவிடச் சற்று மாற்றமுற்ற ஐரோப்பாவை (Alternate Europe) கிழக்கத்திய கலாச்சாரங்களின் மீது திணித்த முறை. இதனால் ஐரோப்பிய மனச்சட்டகங்ளைச் சுமந்து திரியும் இந்தியர்கள் தோன்றினார்கள். தங்கள் சாதி வேறுபாடுகளை எந்த விதச் சங்கடமுமின்றிக் காப்பாற்றியபடியே இந்தியா ஒன்று என்று ஆனந்தக் கும்மி அடித்தார்கள். இவ்வகையில் ஒற்றை நாகரிகம் ஒன்று, அடிமைப்பட்ட இந்தியாவிற்குத் தேவையாகவும் இருந்தது. மொழியடிப்படையில் சமஸ்கிருதம் அதன் இடத்தை அன்று வகித்தது. சமஸ்கிருத கலைஇலக்கியம், அழகியல், தத்துவம், மதம் என்ற பார்வை பிற பிராந்திய, உப-தேசிய மொழிகளின் கலைஇலக்கியம், அழகியல், தத்துவம், மதம் போன்றனவற்றை விட அதிக கவனிப்புக்குள்ளாயிற்று. இந்த வகையில் காலனியாதிக்கத்தை எதிர்ப்பதற்கென உருவாக்கப்பட்ட கலாச்சார, மன பிம்பங்கள், சட்டகங்கள், தாகூர் கூறியது போல் 'தேசம்' (Nation) என்ற மேற்கத்திய இரும்புத் தத்துவத்தின், யாந்திரீக இராட்சசனின் உபகருவிகளாய் வடிவமைக்கப் பட்டன. இதன் விளைவால் தான் இன்றுவரை சமஸ்கிருத அழகியலுக்கு மாறுபட்ட அழகியல், கவிதையியல், தமிழில் இருப்பதை எந்த இந்தியக் கவிதையியல் கோட்பாட்டாளனும், தமிழகத்திற்கு வெளியில், ஏற்றுக் கொள்ளாத நிலை. திராவிடப் பண்பாடு போல் முஸ்லீம், கிறிஸ்தவப் பண்பாடுகள், தலித் பண்பாடுகள், ஆதிவாசிப் பண்பாடுகள், வடகிழக்கிந்திய மொழிப் பண்பாடுகள் முதலியன இந்தியத் 'தேச அரசு' (Nation - State) என்ற மனக் கட்டமைப்புக்குள் பிரச்னையை உருவாக்கும் நிலை. அதாவது ஒரு போக்குச் சிந்தனாமுறைகள் (Linear Thought Patterns). காலமுறை அளவுகோல்கள் (Temporal Yardsticks), ஒற்றை முக முரண்பாடுகள் (Uni - Polar Contradictions), எளிமையான இருமை எதிர்வுகள் (Simple Binary Oppositions), கடந்து உள்பாயும் சாராம்சங்கள் (Transcending Essences), தொடர்ச்சியறா உறவுகள் (Continuous Relations) போன்ற ஐரோப்பிய சிந்தனை வடிவங்கள் வேறு சூழல்களில், பெயர்களில் நம்முன் எழுந்தன. இந்த நிலை புனரமைப்பாக்கத்திற்கும் மறுபரிசீலனைக்கும் இன்று உள்ளாக்கப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இப் பின்னணியில் இந்திய இலக்கிய விமரிசனத்தின் தொடர்ச்சியாகத் தான் தமிழிலக்கிய விமரிசனமும் வளர்ந்தது என்பதை விளக்க முடியும். தமிழிலக்கிய விமரிசனம் ஆரம்பத்தில் இன்றைய வடிவத்தில் இருக்கவில்லை என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இது மேற்கத்திய கலாச்சாரத்தின், காலனியாதிக்கத்தின் வரவால் ஏற்பட்ட விளைவுகளுள் ஒன்று. புதினம், சிறுகதை போல. ஆனால் போகப் போக இந்தியப் புதினமும் சிறுகதையும் எப்படித் தனியான தம் குணத்தைப் பெற்றனவோ அதே போல இலக்கிய விமரிசனமும் இந்திய, தமிழ்ப்

பண்பை ஓரளவு பெற்றுள்ளன. எனினும் இந்தத் திறனாய்வு தமிழில் புதுப்பரிமாணத்துடன் விரிவாக வளரவில்லை என்றே கூறலாம். நவீனத் தமிழ்த் திறனாய்வை ஒரு தனித் துறையாகக் கருதி, கட்டுரைகள் எழுதியுள்ளவர்களில் மிக முக்கியமான ஒருவர் சி.சு. செல்லப்பா. அவர், இலக்கியத் திறனாய்வைத் தமிழில் தொடங்கி வைத்தவர் என்று வ.வே.சு. ஐயரை விதந்து கூறுகிறார் (செல்லப்பா சி.சு. 1974 : 13) வ.வே. சு. ஐயரின் *கம்பராமாயணம் - ஓர் ஆய்வு* (Kamba Ramayana - A study) என்ற நூலைப் படிப்பவர்கள் தமிழிற்கான திறனாய்வு வ.வே.சு. ஐயருடன் தோன்றியதை மறுக்க இயலாது. அதுபோல் வையாபுரிப்பிள்ளை அவர்களையும் தமிழ்த் திறனாய்விற்கு அடிக்கல் போட்டவர்களில் ஒருவராய்ச் சி.சு. செல்லப்பா கூறுகிறார். இங்குத் தொல்காப்பியர், மற்றும் புறப்பொருள் கவிதையியல், அகப்பொருள் கவிதையியல், அதுபோல் உரையாசிரியர்களின் இலக்கியப் பார்வை முதலியவற்றை சி.சு. செல்லப்பா நிராகரிக்கிறார். இப்பார்வை அன்றைய காலகட்டத்தில் புரிந்துகொள்ளத் தக்கது தான். ஏனெனில் மேற்கத்திய இலக்கியத் திறனாய்வு -குறிப்பாக, ஆங்கில மொழியின் வழி நமக்கு வந்த இலக்கியத் திறனாய்வு, ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களின் இருவகைப்பட்ட இலக்கியப் பார்வைகளான ஆய்வுப் பாங்கு, தனி மனித உணர்வுப் பாங்கு என்ற இரு முறைகளின் வழி உருவானதாகும் (Bergonzi, Bernard 1990). அவை முக்கியமாகத் தனிமனித வாதத்தின் (Individualism) துணைப் பயனாக மேற்கத்திய சமூகங்களில் தோன்றியது. விஞ்ஞானப் பார்வை சார்ந்தும் தனிமனித உளப் பாங்குகள், உணர்வுகள் சார்ந்தும் வந்த திறனாய்வு முறை அது. இது மேற்கத்திய படைப்புக்கலையைக் கற்று, தமிழில் அதுபோல் தற்கால இலக்கியத்தை உருவமைக்க வேண்டுமென்று முயன்ற சி.சு. செல்லப்பாவிற்குக் கைவந்தது வியப்புக்குரியதல்ல. அதுபோல் பிரிட்டிஷ் இலக்கியக் கல்வி ஆய்வு முறையை அங்கேயே பயின்று ஏற்றுக் கொண்ட மார்க்சீய விமரிசகர்களான கைலாசபதி, சிவத்தம்பி, வேறு வித மார்க்சீய முறையில் நா. வானமாமலை போன்றோரின் ஆய்வு சார்ந்த விமரிசன முறைகூட கவனிக்கத் தக்கதாய்த் தமிழின் சிந்தனை - சரித்திரத்தில் அமைந்திருக்கிறது. இவ்விரு குழுக்களான இலக்கியவியல் குழுவிற்கும் மார்க்சீயக் குழுவிற்கும் வேறுபாடுகள் நிறைய உண்டு. காரணம் ஆய்வுமுறை விமரிசனத்தைப் பின்பற்றியது மட்டுமன்றி மார்க்சீய முறையியலையும் தத்தமளவில் பின்னவர் மூவரும் கையாண்டு, சிந்தனைகளையும் முன் வைத்தனர். சி.சு. செல்லப்பா போலவே மேற்கத்திய நாகரிகத்தின் கொடுப்பினையான இலக்கியச் சிந்தனையை வ. வே.சு. ஐயர், வையாபுரிப் பிள்ளை ஆகியோரும் பின்பற்றினர். இதுவும் தனிம்னித மற்றும் மனித நேயப் (Humanistic) பார்வைகளாய் உருவான இலக்கிய அணுகுமுறையாகும். இங்கு வ.வே.சு. ஐயர், வையாபுரிப்பிள்ளை ஆகியோர் ஏற்கனவே நாம் பார்த்துவந்த இந்திய இலக்கிய விமரிசனத்தின் தொடர்ச்சியைத்

தங்களால் இயன்ற முறையில் காப்பாற்றியவர்கள் என்றே கூறலாம். ஆனந்த குமாரசாமி அளவிற்கோ, அரவிந்தர் அளவிற்கோ தீவிர ஈடுபாடு இவ்விருவருக்கும் இருக்கவில்லை. மேலும் விரிவாக இலக்கியத் திறனாய்வை இவர்கள் கவனிக்கவும் இல்லை. நூற்களும் அதிகமாய்த் தரவில்லை, என்றாலும் இவர்களின் சிந்தனையின் அடிப்படை இந்திய இலக்கிய விமரிசனம் போட்ட தடத்திலிருந்துதான். எனவே தவிர்க்கவியலாதபடி காலனியாதிக்கக் காலகட்டப் பண்புகளைக் கொண்ட சொல்லாடலே தமிழின் ஆரம்ப இலக்கிய விமரிசனத்தின் தோற்றமாகவும் இருப்பது தெளிவாகிறது. வ.வே.சு. ஐயர் அவர்கள்:

கவிதையானது ... மனித வாழ்வின் சுகதுக்கங்களையும்
உன்னதமான பாவங்களையும் சுவையோடு கோர்த்து
மனிதனுடைய இதயத்தில் பேருணர்ச்சிகளை எழுப்ப வேண்டும்.

என்று கூறுகிறார்.[8] மேலும் அவரே. '*கம்பராமாயணம் - ஓர் ஆய்வு*' என்ற தம் ஆங்கில நூலின் மூன்றாம் இயலிலும் நான்காம் இயலிலும் அரிஸ்டாட்டிலின் கவிதையியலை (Poetics) விளக்கிக் காவியம் பற்றியும் சமஸ்கிருத நாடகக் கோட்பாட்டாளன் பரதனின் ரஸ - பாவம் (Rasa - bhava) போன்ற சிந்தனைகளைச் சுட்டி அழகுணர்வு நம் உயர் உணர்வுகளைச் (Higher emotions) சார்ந்தது எனவும் கூறுகிறார்.[9] ஆனந்த குமாரசாமியின் அனைத்துலக அழகியல் கோட்பாட்டுச் சிந்தனையை இது தொடர்வதாகவே கருதலாம். வையாபுரிப் பிள்ளையின் பார்வையும் வ.வே.சு. பார்வையும் ஒன்று போலவே உள்ளன என்பதையும் விளக்கி விடுகிறார் சி.சு. செல்லப்பா:

...இதையெல்லாம் பார்க்கும் போது அய்யருக்கும் பிள்ளைக்
கும் ஏறக்குறைய ஒருமித்த இலக்கியப் பார்வை படைப்பு
மதிப்பீடு சம்பந்தமாக இருப்பதை நாம் உணர முடிகிறது.
இருவரும் ருசியை (Taste) வைத்துப் பார்க்கிறார்கள்...
(செல்லப்பா சி.சு. 1974: 17)

இங்குக் குறிப்பிட்டவர்களுடன், மேற்கத்திய நூல் வாசிப்பாலும் கிழக்கத்திய சமஸ்கிருத அழகியல் மற்றும் தத்துவச் சிந்தனையாலும் பாதிப்புப் பெற்ற ஓர் இலக்கியச் சிந்தனை மரபைக் க. நா. சு. தமிழில் ஏற்படுத்தித் தற்காலத் தமிழிலக்கியத்தின் படைப்பாக்கத்திற்கு உந்து சக்தியாய் இருந்ததும் மறக்கக் கூடியதல்ல.[10] இவ்வாறு சமஸ்கிருதம் மற்றும் மேலைச் சிந்தனையின் சங்கமமாகவே அனைத்திந்திய இலக்கிய விமரிசனமும் அதன் ஒரு கிளையான தமிழ் இலக்கிய விமரிசனமும் இருந்திருக்கின்றன. இவ்வாறு தமிழிலக்கிய விமரிசனம் இந்திய விமரிசனத்தைப் போலவே மேற்கத்திய 'தேசம்' என்ற சிந்தனையின்

அடிப்படை அமைப்பை நினைவிலி நிலையில் ஏற்றுப் பல்வேறு உப அமைப்புக்களைச் சிந்தனைத் தளத்தில் உற்பத்தி செய்திருக்கின்றது.

அத்தகைய உப அமைப்புக்களில் ஒன்று, பன்மைக் குணம் கொண்ட பருண்மைகளை ஒருமையான கற்பனா வடிவமாகவோ, சாராம்சமாகவோ உருவம் மாற்றுவது. இன்னொன்று, தூரத்திலுள்ள ஒருமையை வயப்படுத்துவதற்காக அருகிலுள்ளதை மறந்துவிடும் சுய - மறதி சார்ந்த பிரச்சினை.

முதல் சிந்தனையை விளக்குவோம். அது மேற்கத்திய ஆதிக்கச் சிந்தனை வடிவங்கள் பரவும் போது அதன் அடிப்படைச் சட்டகத்தை ஏற்று, அச்சட்டகத்தைச் சுதேசி உதாரணம் கொடுத்து விரிவு படுத்துவது. ஆனந்த குமாரசாமி ' மேற்கின் பார்வையில் இன்று கோளாறு வந்து விட்டது; கிழக்கைச் சரியாகப் புரிந்துவிட்டால் அக்கோளாறு தீர்ந்து விடும்' என்று கூறிக் கிழக்கத்திய மரபுக் கலைஞர்கள் ஆடு, மாடு, மனிதன், செடி என்று எல்லாவற்றையும் இணைத்துச் சித்திரிப்பதை மேற்கின் மொழியில் விளக்கிச் சொல்வார். அதாவது,

> *அழகியல் அனுபவம் என்பது உணர்வை உருமாற்றுவது மட்டுமல்ல. அறிவையே உருமாற்றுவது...*
> *(Aesthetic experience is a transformation not merely of feeling ... but equally of understanding)*

என்று அவர் கூறலாம். இங்குக் கிழக்கின் சித்திரிப்பின் வேறுபாடு மறைவதோடு ஊடு செல்லும் (Transcending) சிந்தனாமுறை மூலம் மேற்கினோடு இணைக்கப்படும் ஓர் அடிப்படையும் வெற்றிகரமாகப் போடப்படுகிறது. இவ்வாறு பருண்மை (வேறுபாடு) சாராம்சமாக்கப்பட்டு ஒருமைக் கற்பனை (மேற்கோடு இணைப்பு) ஏற்படுகிறது. இலக்கியக் குழு சார்ந்த விமரிசர்கள் இப்படிச் செய்தார்கள் என்றால் மார்க்சீய இலக்கிய விமரிசகர்கள் சற்று மாறுபாட்டுடன் இதனையே செய்திருக்கிறார்கள் எனலாம். மார்க்சீய விமரிசகர்களிடம் செயல்பட்ட உப அமைப்பு வேறொரு வகையில் பருண்மையை ஒருமைநோக்கிய கற்பனை வடிவமாகச் சாராம்சம் ஆக்கியது. 'ஒரே தன்மையான காரணங்கள், நிலைமைகள் மாறாதிருக்குமானால் ஒரே மாதிரியான பயனையே அளிப்பன' என்ற விஞ்ஞானிகளின் அடிப்படையைக் கைலாசபதி ஏற்றுக் கொண்டு மேற்கு கிழக்கு என்ற வேறுபாடின்றி ஒரே அளவு கோலை மேற்கையும் கிழக்கையும் அளக்கப் பயன்படுத்த முடியும் என்று நம்பினார். இதற்கு உதாரணமாக, அவருடைய *தமிழர் வீரயுகக் கவிதை* (Tamil Heroic Poetry) என்ற நூலையும் பிற சில நூற்களையும் கூறலாம் (Kailasapathy, K. Tamil Heroic Poetry, *1968*).

அவரது ஒப்பியல் பார்வைகளும் இந்த அடிப்படையிலிருந்தே உதயமாயின. அதுபோல் அனுபவமுதல்வாதத் (Empiricism) தத்துவப் பார்வையைக் கைலாசபதி தமது அடிப்படையாகக் கொண்டிருப்பதும் இயற்கை மற்றும் சமுதாயத்தை மாற்ற அவற்றின் இயக்க விதிகளைக் காணவேண்டும் என்பதும் வித்தியாசமாகப் பருண்மையைச் சாராம்ச வயப்படுத்தி ஒருமைப்பார்வையாக்குவதே." ஆக, இது அனைத்திந்திய இலக்கிய விமரிசனச் சொல்லாடலையே வேறுமுறையில் மேற்கொள்கிறது. கைலாசபதி ஈழத்தவராக இருந்தாலும் அவருக்குத் தமிழகத்தில் இருந்த வரவேற்பைப் பார்க்கும் போது அது நம் அறிவு முறையைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகவே கருத முடியும்.

இவ்வாறு 'தேசம்' பற்றிய அந்நிய சிந்தனை அல்லது தொழில் நுட்பக் காலச் சிந்தனை வந்து அன்று நம்மை ஒருங்கமைத்துச் சுதந்திரத்திற்காகப் போராடும் அவசரக் கடமையை ஏற்படுத்தியதோடு நல்லதும் கெட்டதுமான பல எண்ணக் கற்புனைகளை, நினைவுப் பிம்பங்களை, மறதிகளை நமக்குள் ஏற்படுத்தியது.

இப்படி ஏற்பட்டதுதான் இரண்டாவதாக நாம் பார்க்கும் உப அமைப்பான 'சுய மறதி' பற்றிய சிந்தனை. இந்த மறதி அனைத்திந்திய இலக்கிய விமரிசனத்தின் பண்பைத் தமிழில் பிரதிநிதித்துவப்படுத்தியவர்களிடம் எப்படி அமைந்திருந்ததென்று பார்க்கலாம்.

தமிழில் இலக்கியவியல் குழுவினர் என்று அழைக்கப்படும் இவர்களுக்கு உந்துதல் தந்த ஆனந்த குமாரசாமி போன்றோர் எல்லோருமே சமஸ்கிருத எண்ணக் கற்பனையைத் தம் அனைத்திந்திய ஒருமைச் சிந்தனைக்கு ஒரு பின்னணி பிம்பமாக வைத்திருந்தனர். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உயிரோட்டமாக, மக்கள் மொழிகளாக உள்ளவற்றினை இவர்கள் முற்றாய் மறந்துபோனார்கள். அம்மக்கள் மொழிகளின் படைப்பு இலக்கியங்களை - அவற்றின் பின்னாலிருந்து தொடர்ச்சியறாதபடி உந்தும் படைப்பு ஆற்றலைப் பற்றி அறிய இவர்கள் முயற்சி எடுக்கவில்லை. 'தொனி', 'ரஸ', 'ரீதி', 'ஔச்சித்தியா' என்று கவிதைச் சிந்தனைகளைப் படைப்பிற்கு வெளியில் நின்று சமஸ்கிருதவியலாளர்கள் சிந்தித்தார்கள்.

தமிழிலக்கியக் குழுவினர் அனைத்திந்திய இலக்கியவியலின் பண்புகளைப் பெற்றிருந்தாலும் சில போக்குகளில் (Trends) மாறுபட்டாலும் பொதுமைகள் நிறைய இருந்தன. வ.வே.சு. ஐயர், தமது கம்பராமாயணம் - ஓர் ஆய்வு நூலில் தொல்காப்பியத்தில் வரும் அகத்திணை, புறத்திணை, மற்றும் உரையாசிரியர்கள் பற்றியெல்லாம் குறிப்பிட்டும் செய்முறைத் திறனாய்வு (Practical Criticism) என்று வரும்போது அகத்திணை, அதன் பிரிவுகளான குறிஞ்சி, முல்லை போன்றன

எல்லாவற்றையும் மறந்துவிட்டுத் தண்டி, பரதமுனி போன்றோரையும் அரிஸ்டாட்டிலையும் மட்டுமே நினைவில் வைக்கிறார். இதுதான் காலனியக் கட்டத்தில் நம் சிந்தனைகளில் உருவான சுயமறதி என்பது. வ.வே.சு. ஐயர், வையாபுரிப் பிள்ளை போன்றவர்களை அடியொற்றியும் எஃப். ஆர்.லீவிஸ் போன்ற ஆங்கிலத் திறனாய்வாளரின் உந்துதலைப் பெற்றும் இலக்கிய விமரிசனத்திற்கு ஒரு நவீன உருவம் கொடுத்த சி.சு. செல்லப்பா, தொல்காப்பியம் காதல், வீரம் எனக் கவிதைப் பொருள் பேசினாலும் அது இலக்கண நூல் தானே ஒழிய இலக்கிய விமரிசனத்திற்கு அடிப்படைகளைத் தரும் நூல் அல்ல என்று கூறுகிறார். பழைய இலக்கியத்திலும் பொருளிலக்கணத்திலும் பெரும் புலமை கொண்ட வையாபுரிப்பிள்ளைகூட 'ஆசிரியனின் ஆன்ம குணங்களை வெளிக்காட்டும்' ஒரு மொழிப் பங்கு பற்றித்தான் பேசுகிறார். இவரும் தொல்காப்பியத்தில் உள்ள கருத்தாக்கங்கள், சமஸ்கிருத கருத்தாக்கங்களுக்கு மாறான ஒரு படைப்பு அடிப்படையை இந்தியக் கவிதையியலுக்குத் தரும் என்பதைக் கண்டுபிடிக்கவில்லை. செய்முறைத் திறனாய்வுக்கு அகம் புறம் சார்ந்த சிந்தனைகள் பயன்படுமென்பதை அறியவில்லை. இந்த மறதி சாதாரணமானதல்ல; ஒரு தத்துவப் பின்புலம் கொண்ட மறதியாகும். மேற்கின் ஒற்றைப் போக்குக் கருத்தாக்கங்களை நாம் நினைவிலி நிலையில் ஏற்றதால் விளைந்த கலாச்சார மறதியே இது. இத்துடன் வையாபுரிப் பிள்ளை என்ற தமிழின் ஒரே தலைசிறந்த ஆய்வாளர்கூட இந்திய ஒருங்கிணைமைக்குள் பல்வேறு வகைமைகளை, தளங்களை, படிநிலைகளைக் காணவில்லை என்ற முடிவே கிடைக்கிறது. எனவே அனைத்திந்திய ஒற்றைப் போக்கு இலக்கிய வரலாறுக்கான அடியோட்டச் சிந்தனைச் சட்டகத்தைக் கட்டுவதற்கான பிம்பத்தை மனதில் வைத்துச் சிந்தித்தவர் வையாபுரிப்பிள்ளை எனலாம். சிலப்பதிகாரம் போன்ற நூற்களைப் பிற்கால கட்டத்திற்குத் தள்ள வேண்டிய தேவையும் இதனாலேயே அவருக்கு ஏற்பட்டது. இது அன்றைய உயர் மட்டச் சிந்தனையாளர்களின் பொதுநிலை.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை இப்படியென்றால் இவரது கோட்பாட்டிற்கு மாறான தமிழ்க்கல்வியாளர்களின் இலக்கிய விமரிசனம் வேறு பண்புகளைக் கொண்டதாக இருந்தது. கல்வியியல் விமரிசனக்குழு என அழைக்கப்படும் இந்தப் பழைய தமிழ்க் கல்வியின் வழிவந்த இலக்கியச் சிந்தனையாளர்களும் மேற்கத்திய அறிவு அதிகாரத்தை ஏற்ற அடிமைகளாகவே செயல்பட்டுள்ளார்கள். திறனாய்வைப் பொறுத்தவரையில் இவர்கள் கேள்வியின்றி மேற்கத்தியக் கருத்தாக்கங்களை முதலில் ஏற்றனர். இதனாலேயே ஹட்சன், விண்டர்நீட்ஸ், ஐ.ஏ. ரிச்சர்ட்ஸ் போன்ற மேற்கத்திய இலக்கியத் திறனாய்வுச் சிந்தனையாளர்களை மேற்கோளாய் தத்தம் இலக்கியத் திறனாய்வுப் பாடநூற்களுக்குப் பயன்படுத்தினர். இவர்களின் பல திறனாய்வு நூற்களும்

மேற்கத்திய பாணி கல்வி முறையைத் தமிழிலக்கியக் கல்வியில் கொண்டுவந்த சென்னைப் பல்கலைக்கழகப் (தொடங்கப்பட்டது 1857) பட்டதாரிக் கல்விக்கு ஏற்ற வகை பாடத்திட்டத்திற்கேற்ப உருவாக்கப்பட்ட திறனாய்வு நூற்களே. ஆங்கிலேயர் தங்கள் ஆட்சிமுறை செயல்திட்டமாகச் சுதேசி கல்வியையும் இங்கிலாந்தின் ஆங்கிலக் கல்வி முறையையும் மேற்கொண்டிருந்தது எல்லோருக்கும் தெரியும். சென்னைப் பல்கலைக்கழகத்தின் கல்வி நிலையங்களுக்குள் பேராசிரியர்களாக இருந்த பலர் இந்தத் தமிழிலக்கியத் திறனாய்வை எழுத ஆரம்பிக்கிறார்கள். பிற்காலத்தில் சுதேசியத் தமிழ்ப் பல்கலைக்கழகமாக உருவாக்கப்பட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழிலக்கியத் திறனாய்வில் எந்தப் பங்கையும் செலுத்தாது தமிழ் மரபுக்கும் திறனாய்வுக்கும் எந்த உறவுமில்லை என்பதைக் காட்டுகிறது. ஆங்கிலக் கல்வியும் ஆங்கிலக் கல்வி மூலம் நமக்கு வந்த 'தேசம்' என்ற சிந்தனைக் கட்டமைப்பும் நம்மை ஆங்கிலத் திறனாய்வுச் சிந்தனையை ஒரு கேள்வி கேட்கக் கூடாத கருத்தாக்கமாய் நம் திறனாய்வு எழுத்தில் உட்செருகுகிறது. எனவே, நவீனத் தமிழ்க் கல்வியியலாளரின் எல்லாத் திறனாய்வு முயற்சிகளுமே ஆங்கிலத் திறனாய்வாளர்களின் மேற்கோள்களைத் தத்தம் சிந்தனைகளுக்கு அடிப்படைகளாக வைக்கின்றன.[12] இன்று வரை தமிழ்க்கல்வியாளர்கள் ஆங்கிலத் திறனாய்வு உலகில் செயல்படும் முக்கியமான எந்தத் திறனாய்வாளரின் எந்த நூலையும் மொத்தமாகப் படித்து மாறுபாடுகளைத் தெரிவித்ததோ விமரிசித்ததோ கிடையாது என்பதும் இங்கு மனங்கொள்ளத் தக்கது.[13] இதிலிருந்து மேற்கத்தியச் சிந்தனைகளைச் சமநிலையிலிருந்து எதிர்கொள்வதற்குக் கல்வியியல் திறனாய்வாளர் தயாராய் இருக்கவில்லை என்பது தெளிவாகிறது. டெர்ரி ஈகிள்டன் மேற்கத்தியத் திறனாய்வின் சமூக வர்க்கச் சூழலை ஆய்ந்து அதன் மேற்குடி அதிகாரப் பண்பை விளக்குகிறார் (Eagleton, Terry 1984). அதாவது காலனி நாட்டிற்குள் புகுந்த மேற்கத்தியத் திறனாய்வுச் சிந்தனை தனக்குள்ளேயே பேத உணர்வைக் கொண்டிருந்தது. அச்சிந்தனை காலனி நாட்டில் வருகிறது. அப்படி வரும் போது நம் தமிழ்க் கல்வியியல் விமரிசகர்கள் அதனை அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளனர். இவ்வாறு தமிழ்க் கல்விக்கும் மேற்குக்கும் உள்ள உறவு, அதிகாரத்தால் கட்டமைக்கப்பட்ட உறவு. 'தேசம்' நமக்கும் வேண்டும்; ஆளுபவனின் அதிகாரம் (Power) கலந்த தேசமாய்த்தான் அது இருக்கும். இந்த அதிகாரம் உள்மறைந்திருந்தது பலருக்கும் புரியவில்லை. இத்துடன் கிழக்கத்திய நிலப்பிரபுத்துவச் சமூகங்களில் இருந்த மரபான ஆண்டான் அடிமைச் சிந்தனை, தந்தைவழி ஆணாதிக்கச் சிந்தனை (Patriarchy) போன்றனவும் ஆதிக்கம் செலுத்தும் மேற்கின் சிந்தனையைக் கேள்விக்குட்படுத்த நம்மை அனுமதிக்கவில்லை. ஆதிக்கத்தை இயல்பு என்று எண்ண ஏற்கனவே ஒரு தளம் தயாரிக்கப்பட்டிருந்தது.

இந்த ஆதிக்கம் புரியா நிலையிலும் தமிழிலக்கியக் கல்வி விமரிசகர்கள் தம் போக்கில் தமிழ்க் கலாச்சாரத்தின் சிந்தனா முறை வேறுபட்டது என்பதை என்னவோ பொதுவாய்ப் புரிந்திருந்தனர்.[14] மரபுக் கல்வியின் இலக்கியத் திறனாய்வு இன்னும் ஆழமாக ஆயப்பட வேண்டும் என்று கூறிக் கொண்டு அடுத்த சிந்தனைக்குப் போகலாம். 'தேசம்' சார்ந்த சிந்தனை துணை தேசங்களைச் சார்ந்த சிந்தனையை உருவாக்கும். எப்படி அனைந்திந்திய இலக்கிய விமரிசனம் சமஸ்கிருதம் சார்ந்து மேற்கத்திய 'தேசம் - அரசு'ச் சிந்தனையின் ஓர் அழகியல் தளக் கட்டமைப்பாய் விளங்கியதோ, அதேபோல் தெற்கில் திராவிடச் சிந்தனை என்னும் 'தேசம் - அரசு'ச் சிந்தனை முழுமையாய் வெளிப்படா (Nascent) முறையில் உருவானது. மேற்கின் மொழியியல் சிந்தனை இதற்கு உதவியது. மொழிநூலுக்கும் (Philology) 'தேசம் - அரசு'ச் சிந்தனைக்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பை டோனி ப்ரன்னன் இவ்வாறு கூறுகிறார்:

> *.... நாம் மொழிநூல் (Philology) துறையின் வழி வந்து*
> *இலக்கியத்தைப் படிக்கிறோம். அந்த இலக்கியம்,*
> *தேசம் - அரசு, முதன் முதலாக உருவான காலத்தில் தேசம்*
> *என்பதின் அடிப்படையில் உருவாயிற்று..*
>
> *(Bhabha. K. Homi, 1990:44)*

திரு. கால்டுவெல் என்ற கிறிஸ்தவப் பாதிரியாரின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' தென்னிந்திய மொழிகளுக்குள் உள்ள உறவைக் கூறியபின் தமிழின் பழமையைக் கூறியதும், அதிலிருந்து தமிழ் உணர்வின் கட்டமைப்பு உருவானதும், தமிழாய்வாளர்களுக்கு இதிலிருந்த பங்கும், அது தமிழ் - அரசியல் பார்வையாய் உருப் பெற்றதும் பல நூற்களில் இன்று விளக்கப்பட்டுள்ளன (Irshik. F. Eugene, *1969*, Hardgrave, L. Robert, *1965*). மேற்கிலிருந்து வரும் சிந்தனைகள் அனைத்துலகையும் மேம்படுத்தும் சிந்தனைகள் என்ற பிம்பமே தமிழ்ச் சூழலில் அமைந்திருக்கிறது. இந்தப் பொது மனப்பிம்பம் இலக்கியத் திறனாய்விலும்கூடத் தமிழ்க்கல்வியாளர்களிடம் உறுதிபெற்றுள்ளது. இதனால் தமிழிலக்கியக் கல்வி, ஆய்வு (மொழியியல், இலக்கணம், வரலாற்றிலும் இவை அப்படியே அமைந்து) மேற்கத்திய தேசம், அரசுச் சிந்தனைக்கான வட்டார தேசம் - அரசு சார்ந்த துணை 'தேசம்' உருவாக்கப் பயன்படுகிறது. இதுபோல் இந்தியாவில் ஆங்காங்குள்ள மாநில அரசுகள் உறுதிப்பட்டு, வட்டாரத்திற்குள் முரண்பாடுகளை மறைத்து விட அல்லது மறுக்க உதவியுள்ளன. இந்திய மாநிலங்களுக்குள் நடக்கும் மாநில மொழிக்கும், உபமொழிகளுக்கும் ஆதிவாசி மொழிகளுக்கும் பண்பாட்டுக்கும் அதுபோல் தலித்தினருக்கும் பிறசாதி அமைவுகளான மாநிலப் பொதுக் கருத்துருவங்களுக்குள் நடக்கும் போராட்டங்கள் இவற்றையே சுட்டுகின்றன.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் மேற்கு - கிழக்கு என்ற சுதந்திரப் போராட்டக் கால இருமை எதிர்வு, (Binary) பிராமணர் - பிராமணரல்லாதார் போன்ற உப எதிர்வுகளைக் கருத்து, வரலாற்றுத் தளத்தில் உற்பத்தி செய்தது. இவ்வாறுதான் தேசம் என்ற கட்டுமானம் அனைத்திந்தியாவையும் ஒற்றைக் கற்பனையாய்ப் (Imagining homogenously) பார்ப்பதற்காகச் சமஸ்கிருதமாக்கும் தன்மை, குணாம்சப்படுத்தும் தன்மை (Abstraction), ஊடு செல்லும் தன்மை (Transcend) போன்றவற்றைப் பயன்படுத்தியது போல அதே மாதிரியில் (Model) உருவான தமிழ்த் தேசம் என்ற ஒற்றைக் கற்பனை வேறு பண்புகளை, கருத்துருவங்களை ஏற்படுத்தித் தந்திருக்கிறது. அதனால் தான் தமிழ் இலக்கிய விமரிசனம், தமிழ்க் கல்வியாளர்களால் இலக்கிய உரையா, ஆராய்ச்சியா, விளக்கமா, விமரிசனமா என்று வேறுபடுத்தப்படாமலும், மேற்கை அப்படியே ஏற்கும் அடிமை மனோபாவமாகவும் உற்பத்தியானது. இன்றும் இது தொடர்கிறது. இது வட்டாரத் தன்மை கொண்ட இன்னொரு ஒற்றைக் கற்பனை எனலாம். இத்துடன் வட்டாரத் தன்மையின் வலயத்தில் உருவான 'துணை தேசமும்' அதன் அழகியல் கட்டுமானமும் அதிக வறட்டுத்தனத்தைக் கொண்டிருப்பதும் ஆய்வுக்குரியன.

இனி இதுவரை பார்த்து வந்த இலக்கியத் திறனாய்வு என்ற துறையின் வடிவமைப்புக் கொண்ட மனிதச் சிந்தனையின் அடிப்படைக் கட்டுமான உள்ளிணைவுகள், உபபாகங்கள், அவற்றிற்கிடையேயான தொடர்புறவுகள் பற்றித் தொகுத்துப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கையில் ஆதிக்க உறவுகள், இணை அமைப்புக்கள், ஒற்றைப் போக்கான (Homogenous) மாற்றங்கள், உள் - வேறுபாடுகள் மேல் தளத்தில் அழிக்கப்படுதல், பருண்மைகள் குண ரூபங்களாக்கப்படுதல், இணை கோட்பாட்டு உருவமைப்புக்கள், கால வரையறைகள், ஊடு செல்லும் போக்குகள் எனப் பல்வேறு மேற்கத்திய வடிவமைப்புக்கள், கட்டுகள், மனப் பிம்ப உருவாக்கங்கள், நினைவிலி செயல்பாடுகள் என்று உருவாகியுள்ளன. இவற்றை 'மேற்கத்திய' என்று சொல்ல முடியாது என்றால் மேற்கு - கிழக்கு எனப் பொது கருத்தமைவுகளாக இவை வந்தன என்று சொல்வதிலும் தவறில்லை. இங்கு ஒன்றை இன்னொன்று அண்டி நிற்கும் உறவிலேயே நாம் எதையும் பார்க்கவில்லை. இவை அதிகாரத்துவ இருமை எதிர்வு (Binary of power) ஆய்வு முறை மூலமே நம் சிந்தனையில் பிடிபடும் என்றும் பார்க்கத் தேவையில்லை. பல்வேறு அமைப்புகளாய்த் திறனாய்வு, அதன் அமைப்பை, அதன் உருவாக்கத்தின் வரலாற்றைச் சுய பரிசீலனை செய்து பார்க்கிறது. இதுவரை பார்த்த ஆய்வு முறை மூலம் கலாச்சார அமைப்பாக்கம் அரசியல் சார்ந்த அமைப்பாக்கத்தோடு தொடர்புற்றிருப்பதைக் காண்கிறோம். இருபதாம் நூற்றாண்டின் சரித்திரம், அரசியல் மற்றும் அதனோடு தொடர்பு

கொண்டிருக்கும் தொழில் நுட்பம், பொருளாதாரம் முதலியவற்றால், உலகம் எப்படி ஒற்றையாதிக்கத்தையோ (Uni-polar) அல்லது இரட்டையாதிக்கத்தையோ (Bi -polar) நம்பியிருக்க வேண்டிய பரிதாப நிலையில் உள்ளதென்று காட்டுகிறது. இந்த நிலையில் ஓரளவுக்காவது ஆதிக்கத்திற்கு வெளியில் உள்ள சிந்தனைகள் அல்லது ஆதிக்கத்தை ஆதிக்கமற்றது பின்னி வளைத்து ஆதிக்கம் / ஆதிக்கமற்றது என்ற பேதத்தை மறுதலிக்கும் சிந்தனைகள், கீழைத் தேயச் சிந்தனைகளில் காணப்படுகிறதென்பதை ஒருவிதச் சார்புடைய மாற்றாய் (Relative alternative) முன் வைக்கலாம். இவ்வாறு கூறும்போது மேற்கு - கிழக்கு என்பது கூட ஒரு சுழற்சிச் சிந்தனையின் பல்வேறு அலகுகளில் இரண்டு அலகுகள் எனவும் கருத முடியும்.

இப்பகுதியில் நாம் பார்க்கவிருக்கும் கீழைச் சிந்தனையைச் சுழற்சிச் சிந்தனை (circular) என அழைக்கலாம். இது எவ்வாறு வடிவமைக்கப்படலாம் என்ற பார்வையை முன் வைப்பதே இக்கட்டுரையின் கடைசிப்பகுதி. கிழக்கத்திய சிந்தனைகள் சுழல் சிந்தனைகளாக அமைவதுண்டு என்பது புதியதல்ல; எனினும் தமிழிலக்கியத்தினுள் இத்தகைய சுழல் பண்புள்ள கவிதையியல் அமைவு பெற்றிருப்பது புதிய சிந்தனையாகலாம். சீனச் சிந்தனை இத்தகைய சுழல் சிந்தனையாக அமைந்துள்ளது என்பது பலர் கருத்தாகும். அதுபோல் அகம் புறம் சிந்தனையின் உள் அமைவு கூட ஒரு விதச் சூழல் தன்மை கொண்டதே என்று சமீபகாலப் பார்வைகள் குறிப்பிடுகின்றன.[15] அப்பார்வையில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் அகம் புறம் சிந்தனையை இன், யாங் என்னும் சீன இருமைச் சிந்தனையுடன் ஒப்பிட்டுள்ளன. 'இதனை அடியொற்றிச் சென்றால் சுழல் தன்மை ஆதிவாசிச் சிந்தனைகளில் உள்ளதென்றே படுகிறது. க்ளாட் லெவிஸ்ட்ராஸ் (Claude Levistrauss) என்னும் புகழ்பெற்ற மானுடவியலாளர் புராணம் (ஆலவா) பற்றிக் கூறுகிறார். அப்போது குறிப்பாக அவரது ஈடிப்பஸ் புராண ஆராய்ச்சியில், எதிரும் புதிருமான (வாழ்வு ஓ சாவு) இரு அமைப்புக்கள் புராணக் கதைக்குள் ஒரு நடுப்பகுதியின் (Mediation) துணையுடன் இணையும்போது ஒரு சுழல் வட்டமாய் அந்த எதிரும் புதிருமான அலகுகள் பின்னி வளைந்திருக்கும் என்கிறார். அதுபோலவே கார்ல் மார்க்ஸின் புதிய சிந்தனாமுறை ஒன்று சமீபத்திய பின் - அமைப்பியல்வாதிகளால் வெளிச்சமிட்டுக் காட்டப்படுகின்றது. அது மார்க்ஸின் அரசு பற்றிய கருத்தில் "திரும்பவரல்" (Repetition) சிந்தனை உண்டு என்று காட்டுகிறது. அதாவது மார்க்ஸ் தம் நூலொன்றில் (Eighteenth Brumaire of Louis Bonaparte) வரலாறு திரும்ப வருகிறதென்று கூறும் சிந்தனை இன்று புதுப் பார்வைகளுக்கு வழிவகுத்துள்ளது. உதாரணமாக ஜெஃப்பிரி மெகில்மென் (Jeffrey Mehlman) தமது நூலில், பிரஞ்சு புரட்சி பற்றிய மார்க்சின் சிந்தனை திரும்பவரல் தன்மையுடையது என்கிறார் (Mehlman, Jeffrey 1977). திரும்பவரல் தொடர்ந்து சுழல் பண்பாக மாறும்.[16] இச்சிந்தனையை அடியொற்றித் தமிழிலக்கண நூற்களில்

வரும் கவிதையியல் சிந்தனையில் காணப்படும் சுழற்சிப் பண்பை எடுத்து விளக்க வேண்டும். தமிழிலக்கண மரபில் தொல்காப்பியம் தான் முதன் முதல் நூலாகக் கவிதையியலை விளக்குகிறது. இது பற்றிப் பலர் எழுதினாலும் இன்றைய நவீன இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் சர்ச்சைக்கும் பயன்படும் விதத்தில் ஒரு நவீன இலக்கியத் திறனாய்வைத் தொல்காப்பிய அடிப்படையிலிருந்து உருவாக்க இவர்கள் யாரும் முயலவில்லை. அதுபோல் நவீன இலக்கிய விமரிசனத்தைத் தமிழில் உருவாக்கியவர்களில் ஒருவரான சி.சு. செல்லப்பா கூடத் தொல்காப்பியத்தின் மீது நம்பிக்கை வைக்கவில்லை என்பதை இக்கட்டுரையில் பார்த்தோம். இதற்கான காரணங்கள் சிலவற்றைக் கண்டோம். அதுபோல் நவீன இலக்கிய விமரிசனம் கூட இன்று மாறிவிட்டது என்பதைக் கவனிக்க வேண்டும். நவீன இலக்கிய விமரிசனம் தனிநபர் வாதத்தினாலும் ஐரோப்பிய மறுமலர்ச்சிக்காலம் தந்த எண்ணமான மனிதாபிமானச் சிந்தனையாலும் (Humanism) வடிவமைப்புப் பெற்றிருந்தாலும் பின்னர் கறாரான ஆய்வுத்துறையாக இது மாறுகிறது. அமைப்பியல் போன்ற சிந்தனைகள் வந்தபின்பு ஆய்வுப் பாங்கு மிக ஆற்றலுடன் செயல்படலாயிற்று. இந்த ஆய்வுப் பாங்கைக் கோட்பாடு அல்லது 'தியரி' என்பார்கள். மனிதாபிமானத் தனிநபர் வாத இலக்கிய விமரிசனம் மாறி ஆய்வுப் பாங்கான பின் அதாவது 'தியரி' யான பின்பு, தொல்காப்பியத்தின் கவிதையியலுக்கு அருகில் அது வர ஆரம்பித்துள்ளது.

இதனைச் சற்று விளக்கமாகக் கூற வேண்டும். அமைப்பியல் மூலம் 'பிரதி' (Text) என்ற ஒரு சிந்தனை எழுந்துள்ளது. இப்பிரதி மனிதத் தன்னிலையையும் (Subjectivity) புறமொழியையும் இணைத்துவிட்டது. எனவே விமரிசனம் கோட்பாடாக (தியரியாக)த்தான் அமைய வேண்டுமென்றாகி விட்டது. தொல்காப்பியத்தின் கவிதையியலும் மொழியையும் தன்னிலையையும் இணைத்துள்ளதாக விளக்க முடியும். எனவே மேற்கத்தியச் சிந்தனை என்று தமிழில் எண்பதுகளில் அறிமுகமான அமைப்பியல் (Stucturalism) கூட ஒரு சுழல் வட்டமடித்துத் தமிழின் பழஞ்சிந்தனையோடு வந்து இணைய முடிகிறது.

தொல்காப்பியத்தைத் தொடர்ந்து சமஸ்கிருதம் போல ஒரு தொடர்ச்சியறாத் தமிழ்க் கவிதையியல் மரபு உண்டா என்று சிலர் கேட்பார்கள். தொல்காப்பியத்தின் அகம் புறம் மற்றும் அகத்தின் ஏழு பிரிவுகள், புறத்தின் ஏழு பிரிவுகள் என்று செல்லும் தொடர் சிந்தனைகள் எல்லாமே மிகவும் பிற்காலம் வரை செல்லுகின்றன. சமஸ்கிருதச் சிந்தனை பற்றிக் கூறும்போது நாட்டிய சாஸ்திரம் எழுதப்பட்ட சுமார் இரண்டாம் நூற்றாண்டிலிருந்து தண்டியின் எட்டாம் நூற்றாண்டு வரைப் பதினேழாம் நூற்றாண்டின் ஜகந்நாதர் வரை ஒரு நீண்ட பரம்பரை உண்டு என்பார்கள் (Kelkar, K. Ashok., *1984*). ஆனால் இதில் பேரளவு சிந்தனையும்

ரஸ, அலங்கார மற்றும் தொனி என்றே வருகிறது. இது போல் தமிழிலும் தொல்காப்பியத்திலிருந்து அகம், புறம் மற்றும் இவற்றின் திணைகள், துறைகள் என்று பெரிய ஒரு மரபு தொடர்ந்து சமஸ்கிருதத்திற்கு மாறுபட்ட முறையில் ஓடுகிறது. இதில் புறப்பொருள் பற்றிப் பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பாமாலை முதலியனவும், மற்றும் இறையனார் அகப்பொருள், தமிழ்நெறி விளக்கம், நம்பியகப் பொருள், களவியல் காரிகை, மாறனகப் பொருள் என்ற ஐந்து நூல்கள் அகப்பொருள் கவிதையியல் பற்றியும் விளக்குகின்றன. வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கத்தில் மற்றும் சுவாமிநாதத்தில் வரும் கவிதையியல் சிந்தனையையும் சேர்ப்பதானால் தமிழிற்கும் முதல் நூற்றாண்டிலிருந்து பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை ஒரு தொடர்ச்சி இருக்கிறது என அறியலாம்.

தொல்காப்பியத்தில் இல்லாத பல மாறுபாடுகள் பிற்காலக் கவிதையியலில் தோன்றியுள்ளன. அகம், புறம் மற்றும் திணைதுறைகளே எல்லோராலும் கூறப்பட்டாலும் இடையில் பல மாற்றங்கள் தோன்றியுள்ளன. இந்திய மொழிகள் ஒவ்வொன்றிற்கும் மகாபாரதம், இராமாயணம் இருந்தாலும் ஒவ்வொன்றும் கதையின் அமைப்பைத் தத்தம் மொழிகளுக்கேற்ப மறு அமைப்பு (Rearrange) செய்துள்ளன. தமிழ்ச் சைவ நாயன்மார் கதைகளே கன்னட இலக்கியத்திலும் பரவி வீரசைவ இலக்கியக் கலாச்சார அடித்தளத்தை அமைத்துள்ளன.

அதாவது அக்கலாச்சாரத்திற்குத் தேவையான சிறுசிறு வேறுபாடுகளுடன் தமிழ்க் கதைகள் மாறி (மறு அமைப்பு) கன்னட சைவக் கலாச்சாரம் ஒன்று புதிதாய்த் தோன்றியது. இதுபோல் அகம் புறம் என்னும் இரு துருவங்களைச் சுற்றியே தமிழ்க் கவிதையியல் பத்தொன்பது நூற்றாண்டுகளாய் வந்தாலும் ஒவ்வொரு நூலும் திணைதுறையின் உள்வகைகளை மறு அமைப்பு செய்து சலனமுள்ள கவிதையியல் (Poetics in movement) ஒன்றினைத் தங்க வைத்திருக்கின்றன. இது ஒரு வகையில், 'திரும்ப வரல்' (தொல்காப்பியத்தில் வந்த திணைகளும் துறைகளும் கருத்துக்களும் அப்படியே பிற்கால நூற்களில் வருவதைக் குறிக்கும்), மாற்றம் (புதிய திணை துறைகள் புதிதாய் வந்து சேருதல்), ஒருங்கிருத்தல் (அதாவது பழையதும் புதியதும் ஒருங்கிருத்தல்) என மூன்று நிலைகளில் அமைந்து ஒரு சுழற்சிக் கவிதையியலைத், தமிழ்க் கவிதையியலுக்குத் தந்துள்ளது.[17] இதுபோலவே தொல்காப்பியப் பொருளதிகாரக் கவிதைச் சிந்தனைகளுக்கு உரையெழுதியவர்களின் கருத்துக்கள் பிற்காலத்தில் சூத்திரங்களாக மாற்றப்பட்டன. இந்தச் சுழற்சி மூல ஆசிரியனையும் வாசகனையும் (அதாவது உரை எழுதிய வாசகன்) சுற்றி நடப்பதாகும். இன்றைய 'வாசகர் - எதிர்வினைத் திறனாய்வு' (Reader-Response Criticism) மூல நூலை வாசகனின் நூலாய்ப்

பார்ப்பது போல் பழந்தமிழகத்தில் நேரடியாகவே வாசகன் மூல நூலாசிரியனாய் மாறும் செயல் நடக்கிறது. இந்தச் சுழற்சியும் நாம் கவனிக்கத் தக்கது.

இதுவரை பார்த்த சிந்தனைகளைத் தொகுத்துப் பார்த்தால் ஆங்கிலக் காலனிய வரலாற்றோடு இந்திய நாட்டின், தமிழ் நாட்டின் வரலாறு பின்னிப் பிணைந்திருப்பதும் அதனோடேயே நம் சிந்தனைத் துறைகளின் வரலாறும் கூட இணைபிரியாதபடி சேர்ந்திருப்பதும் விளங்குகிறது. இக்கட்டுரை, ஒரு கலாச்சாரம் தூயதாக எப்போதும் இருக்கமுடியாது என்பதையும் காலனிய வரலாறு ஒரு கலாச்சாரத்தின் சரித்திரத்தில் இயல்பிற்கு மாறான ஒன்றாகையால் அதன் அதிகாரப் பண்புகள் அதனோடு சேர்ந்த கலாச்சாரக் கட்டமைப்பிற்குள் பரவும் வகை நாம் அறியவேண்டுவதாகும் என்பதையும் வரையறுக்க முயல்கிறது. தூயதான சுய கலாச்சாரக் கற்பனையை மேற்கொள்வதோ, பிரக்ஞையற்ற ரீதியில் பிற கலாச்சார அடிமைத்தனத்தை மேற்கொள்வதோ ஆபத்துக்களாய் மாறலாம். எனவே காலனியக் கலாச்சாரத்தை அதன் மேல்போக்குகள், உள்போக்குகள், தாக்கங்கள், பிம்பங்கள், சமிக்ஞைகள் (Codes) வழி உள் - இணைவுகள் போன்ற எல்லாத் தளங்களிலும் பார்ப்பதே தற்கால ஆய்விற்கான நேர்மை. எளிமைப்படுத்தப்பட்ட இருமை எதிர்வுகளில் விழுந்து மேற்கா, கிழக்கா என்ற எரிந்தகட்சி, எரியாத கட்சி வாதவிவாத மாயை எப்போதும் பயன் தருவதில்லை. அப்படிப் பார்க்கும் போது அரசியலும் கலாச்சாரத்தின் நுட்பத்தளங்களில் இயங்கும் இலக்கியத் திறனாய்வு போன்ற துறைகளும் ஒன்றையொன்று சார்ந்து நிற்பது விளங்குகிறது. அனைத்திந்தியத் தேசம் - அரசுச் சிந்தனை வெளியிலிருந்து வந்ததென்றால் மாநில (வட்டார) தேசம் -அரசுக் கற்பனைகள் இலக்கியம் மற்றும் வரலாறு சார்ந்த சுய சொல்லாடல்களிலிருந்து உருவாவது தமிழகத்தில் நடந்துள்ளதும் தெளிவடைகின்றன. காலனிய வரலாறும் அதிலிருந்து மாறிய கலாச்சாரச் சொல்லாடல்களும் நேர் எதிரான, எதிரும் புதிருமான அமைப்புகளாய் முரண்படவில்லையெனினும் அவை முரண் தளங்களிலும் இயங்குகின்றன என்பதைக் கட்டுரை, இறுதிப் பகுதியில் சுழல் சிந்தனை, கீழைத்தேய - மேற்கத்திய சிந்தனை என்ற குணவரையறைகளால் விளக்குகிறது. அதாவது பிற மேற்கத்திய ஒரு போக்கு (Linear) வரையறைகளுக்கும் இந்தச் சுழல் சிந்தனைக்கும் வேறுபாடு உள்ளது. எனினும் திரும்பவரல் (Repetition) பற்றி எட்வர்ட் செய்த் கூறுகையில் ஜியம்பத்திஸ்தா விக்கோ (Giambatista Vico), கார்ல் மார்க்ஸ் மற்றும் தத்துவ வாதி கீர்க்கே கார்டையும் குறிப்பிடுகிறார் (Said, Edward, 1991: 110 -125). "திரும்பவரல்" சிந்தனை சுழல் சிந்தனைக்கு அடிப்படையாகக் கருதப்படுவதால் சுழல் சிந்தனையைக் கிழக்கத்திய சமூகங்களின் ஏகபோகச் சிந்தனை என்று கூறுவதும் இயலாததுதான். சிந்தனைப் பாரம்பரியங்கள் அவற்றின் கலாச்சாரச் சூழல்களோடு அணுகப்படும்போதுதான் கால அளவைச் சார்ந்த மேற்கத்திய சிந்தனைக்குப்

புறம்பான சுழல் சிந்தனையின் இயங்குமுறை. சமூகப் பின்னணியில் வெளிப்படும். சுழல் சிந்தனை சமூகப் பின்னணியில் இயங்குவதை வைத்துப் பார்த்தால் தான் அது மேற்கத்திய சிந்தனையா, முற்றாய் மாறுபட்டதா என்ற கேள்விக்கு விடை கிடைக்கும். எனவே மேற்கு - கிழக்கு என்பது பல்வேறு தளங்களில் இணைந்தும், முரணியும், முழுமைகளிலும் உறுப்புகளிலும் அதன் குணங்களைக் காட்டியும் காட்டாமலும் செயல்படும் ஒரு பெரிய நாடக அரங்காய் தமிழ்த்திறனாய்வை படம் பிடிக்க முயல்வதே இப்போதைக்கு நம்குறி. அதன் மூலம் இரு கலாச்சாரங்கள் பற்றிய தெளிவு நமக்கு அதிகமதிகமாய்க் கிடைக்கிறது. நாம் இழந்தது மனதில் உறைக்கிறது.

அடிக்குறிப்புகள்

1. சையத் ஃபரீத் அலடாஸ் (Sayed Farid Alatas) என்பவர் கோட்பாட்டு ரீதியில் மூன்றாம் உலக நாட்டினர் ஐரோப்பியர்களை நம்பியிருப்பதன் தன்மைகளை விளக்குகிறார். பார்க்க: On the Indigenization of Academic Discourse - Alternatives Vol.18: No.3, 307 - 338.

2. தமிழவனின் *தமிழிலக்கியமும் அமைப்பியல்வாதமும்* நூலின் 59 முதல் 93 வரையுள்ள பக்கங்களைப் பார்க்க.

3. சொல்லாடல் என்பது ஆங்கிலத்தில் Discourse என்பதை விளக்கும். இச் சொல் பின் - அமைப்பியல் சிந்தனைகள் வந்த பின்பு உரையாடல் என்ற பழைய பொருளைக் குறிப்பிடாமல் வேறு பொருளைக் குறிக்கும். கால, வர்க்கச் சூழல்களால் கட்டுப்பட்டுக் குறிப்பிட்ட குழுவால் பயன்படுத்தப்படும் சமூக மொழி அமைப்பு இது.

4. Subaltern Studies என்ற தொடர் நூல் வரிசை ஒன்றை ஆக்ஸ்போர்டு அச்சகம் வெளியிட்டு வருகிறது. அதில் இராமச்சந்திர குஹா, பார்த்தா சட்டர்ஜி, சுதிப்த கவிராஜ் போன்ற பலரின் கட்டுரைகள் இச்சிந்தனையை முதன்மைப் படுத்தியுள்ளன.

5. பார்க்க: மேற்கோள் Ramachandran, Ragini (1989: 150).

6. லூயி அல்துஸ்ஸர் (Louis Althussar) என்ற பிரான்ஸ் நாட்டுத் தத்துவப் பேராசிரியர் மார்க்சீயச் சிந்தனைகளைப் புதுமுறையில் அணுகினார். அப்போது மார்க்சின் இளமைக்காலச் சிந்தனையிலிருந்து வேறுபடுத்தி முதிர்ந்த சிந்தனைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்

என்றார். இவ்வாறு இளமைக் காலச் சாதாரண கருத்து விஞ்ஞானக் கருத்தாக முதிர்ச்சியுறுவதை அறிவுத் தோற்ற உடைசல் என்றார்.

7. ஃப்ரான்ஸ் ஃபானன் (Franz Fanon) அல்ஜீரிய சுதந்திரப் போராட்ட காலத்தில் காலனியாதிக்கத்தின் பண்புகளை விளக்கி உலகளாவிய சர்ச்சைக்கு வித்திட்டவர். இவருடைய Wretched of the Earth, மற்றும் Black Skin White Masks போன்ற நூற்கள் புகழ் பெற்றனவாகும்.

8. பார்க்க: மேற்கோள் செல்லப்பா சி.சு. 1974: 15.

9. வியப்பிற்குரிய முறையில் அகில உலக இலக்கியத் திறனாய்வுப் பார்வை வ.வே.சு. ஐயரின் *கம்பராமாயணம் - ஓர் ஆய்வு* என்ற நூலில் வெளிப்படுகிறது. வ.வே.சு. - வைத் திறனாய்வு அரங்கில் விரிவாய் அறிமுகப்படுத்திய சி.சு. செல்லப்பாவின் *தமிழில் இலக்கிய விமரிசனம்* என்ற கட்டுரையில் கம்பராமாயண ஆய்வு குறிப்பிடப்படவில்லை. வ.வே.சு. வின் இலக்கிய விமரிசன நன்கொடை பற்றி அறிய விரும்புபவர்கள், பார்க்கலாம்: Iyer, V.V.S, Kamba Ramayanam - A Study, 1950: 26 -39.

10. பார்க்க: தமிழவனின் க.நா.சு. பற்றிய மதிப்பீடு. தொகுப்பு: கிருஷ்ணசாமி, ப. 1991: 34-48.

11. கைலாசபதியின் மார்க்சீயத் திறனாய்வு பற்றிக் கூறும்போது அறிவு வாதம் கைலாசபதியிடம் செயல்பட்டது விளக்கப்படுகிறது. பார்க்க: தமிழவன். *தமிழிலக்கியமும் அமைப்பியல் வாதமும்*, 1992.

12. பார்க்க: அச்சில் வராததும் கேரளப் பல்கலைக்கழக வெள்ளிவிழாக் கருத்தரங்கில் படிக்கப்பட்டதுமான தமிழவனின் *தமிழ்க் கல்வியியலாளரின் திறனாய்வுப் போக்குகள்* என்ற கட்டுரை.

13. இன்றைய கேரளப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவரான டாக்டர். குளோரியா சுந்தரமதி அவர்கள் மொழிபெயர்த்த வாரன் மற்றும் வெல்லக் ஆகியோரின் Theory of Literature என்ற நூல் யாருடைய கவனிப்புக்கும் உள்ளாகாததோடு அடுத்த பதிப்பைக் கூட காணவில்லை. மேலும் அது கேரளத் தமிழ்த் துறைக்கு வெளியில் சர்ச்சைக்குள்ளான ஆதாரங்களும் இல்லை.

14. மேற்குறிப்பிட்ட (12) தமிழவன் கட்டுரை தமிழ்க் கலாச்சாரச் சிந்தனையின் இவ் வேறுபாட்டை மையமிட்டுச் செல்லும் கட்டுரையாகும்.

15. பார்க்க: Carlos, S. Post- colonial study of Folk-narration and Indigenous study. (Paper read in the Seminar of Folkloristics held at the Pondicherry Institute of Linguistics and Culture, December,1993).

16. ஜெஃப்ரி மெகில்மன் தமது நூலில் மார்க்ஸ் பிரஞ்சு புரட்சி பற்றி விளக்கு-வதைச் சுட்டுகிறார். மார்க்ஸ் பூர்ஷ்வாவுக்கும் தொழிலாளர்க்குமான முரண்பாடாய்ப் பார்க்காமல் மூன்றாவது உறுப்பான உணர்வடையாத் தொழிலாளர்கள் (Lumpen Proletariate) நடுவில் வருவதைக் கூறுகிறார். (பார்க்க Mehlman, Jeffrey, 1977: 19). இங்கு லெவி - ஸ்ட்ராஸ் கருத்தான வாழ்வு ஓ சாவு மற்றும் மூன்றாம் இணைப்புப் பகுதியான நடுப் பகுதி (Mediation) போல மார்க்ஸின் மூவுறுப்புப் பண்பும் விளங்குவதால் மார்க்ஸிலும் இந்தச் சூழல் சிந்தனையைக் காணமுடியும் என்ற முடிவிற்கு வரலாம்.

17. எவ்வாறு (1) திரும்பவரல் (2) மாற்றம் (3) ஒருங்கிருத்தல் என்னும் மூன்றும் தமிழ்க் கவிதையியல் வரலாற்றில் அமைந்திருக்கின்றன என்பதற்குச் சில உதாரணங்கள் இதோ:

(இக் கருத்துக்கள் எல்லாம் சு. செல்லையா பிள்ளை அவர்களால் கேரளப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்பிக்கப்பட்ட முனைவர் பட்ட ஆய்வேட்டின் செய்திகள்)

1. திரும்ப வரல்		அகம் புறம் மீண்டும் மீண்டும் எல்லாக் காலகட்ட கவிதையியல் நூற்களிலும் வருதல்.
2. மாற்றம்	:	இது இருவகைப்படும்.
(அ) இருப்பது மாறுதல்	:	தொல்காப்பியம் அகப் பொருளைக் கூற்று வகையில் கூற, பிற்காலக் கவிதையியலார் துறைகள் என்ற திணைகளின் உபபிரிவாக மாற்றி, எண்ணிக்கையையும் கூட்டவோ குறைக்கவோ செய்தனர்.
(ஆ) புதியன சேருதல்	:	நம்பியகப் பொருள் என்னும் நூல் கவிதையில் உரிப் பொருள்கூட மயங்கும் என்பது தொல்காப்பியத்தில் இல்லாத புதுச் செய்தி.

3. ஒருங்கிருத்தல் (மரபும் மாற்றமும்) : *பிற்காலக் கவிதையியல் நூற்களில் தொல்காப்பியத்தில் கூறப்பட்டதை அப்படியே ஓரளவு பாதுகாக்கவும் செய்தனர்; அத்துடன் மாற்றத்தைச் சேர்க்கவும் செய்தனர். உதாரணமாக, வீரசோழியம் நூல், கவிதையியலை நூலின் ஒரு பகுதியாகக் கூறும் போது அகம், புறம் என்ற தொல்காப்பியப் பிரிவினையை அகம், புறம் மற்றும் அகப்புறம், புறப்புறம் என மரபையும் மாற்றத்தையும் இணைக்கிறது.*

நூற்பட்டியல்

Aiyar, V.V.S. 1950, *Kamba Ramayanam* - A Study, The Delhi Tamil Sangam, New Delhi.

Bergonzi, Bernard, 1990, *Exploding English*, Oxford University Press, New York.

Bhabha, Homi, K. 1990 (ed) *Nation and Narration*, Routledge and Kegan Paul, London.

Chatterjee, Partha & Pandey, Gyanendra (Eds) 1992, *Subaltern Studies VII*, Oxford University Press, New Delhi.

Devy, G.N. 1992, *After Amnesia*, Orient Longman Limited, Hyderabad.

Eagleton, Terry, 1984, *The Function of Cristicism*, Verso Editions, London.

Eugene F. Irshik, 1969, *Politics and Social Conflict in South India*, Oxford University Press, Bombay.

Kailasapathy, K. 1968, *Tamil Heroic Poetry*, Oxford University Press, London.

Mehlman, Jeffrey, 1977, *Revolution and Repetition*, University of California Press, London.

Nandy, Ashis, 1994, *The Illegitimacy of Nationalism*, Oxford University Press, London.

Narasimhaiah C.D & Srinath C.N. (Eds) 1984, *A Common Poetic for Indian Literatures*, Dhvanyaloka, Mysore.

Ramachandra, Ragini, 1989, *Indian Literary Criticism*, Reliance Publishing House, New Delhi.

Robert L. Hardgrave Jr. 1965, *The Dravidian Movement*, Popular Prakashan, Bombay.

Said, Edward, W. 1978, *Orientalism*, Penguin, Harmondsworth.

———————— 1991, *The World, the Text and the Critic*, Vintage, London.

கிருஷ்ணசாமி. ப. (தொ-ர்) 1991 க.நா.சு. இலக்கியத் தடம், காவ்யா, பெங்களூர்.

செல்லப்பா சி.சு. 1974 தமிழில் இலக்கிய விமர்சனம், எழுத்து பிரசுரம். சென்னை.

தமிழவன் (பு.பெ.) 1992 அமைப்பியல் வாதமும் தமிழ் இலக்கியமும், காவ்யா, பெங்களூர்.

27

மேற்கத்திய திறனாய்வு நோக்கில் தமிழ்ப் பழங்கவிதை

ஜி. நஞ்சுண்டன்

மேற்கத்திய அமைப்பியல் இலக்கியத் திறனாய்வில் எடுத்தாளப்படும் ஆநவடிலேஅல மற்றும் Metaphor என்பவை மொழியின் அமைப்பில் செயல்படும் முறையை ரோமன் யாக்கப்ஸன் (Roman Jokobson) ஆராய்ந்துள்ளார். அவரது மொழியியல் ஆய்வு முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு ஹெமிங்வேயின் (Heming way) மழையில் பூனை (Cat in the rain) என்ற சிறுகதையை டேவிட் லாட்ஜ் (David Lodge) அணி இலக்கணப் பகுப்பாய்வுக்கு (Rhetoric analysis) உட்படுத்தியுள்ளார். அதன் மூலம் அக்கதையின் புறவயமான அமைப்புக்கும் (Surface structure) உள்ளார்ந்த அமைப்புக்கும் (Deep structure) இடையேயான உறவு நிலையைக் கண்டறிந்துள்ளார். லாட்ஜின் ஆய்வை அடிப்படையாகக் கொண்டு சங்கப் பாடலான 'பட்டினப் பாலை' இக் கட்டுரையில் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது. அதன் மூலம் பட்டினப்பாலையின் கதையாடல் அமைப்பைப் (Narrative structure) பற்றிச் சில முடிவுகளுக்கு இக்கட்டுரை வருகிறது.

தமிழ் இலக்கணத்தில், ஒரு பொருளின் பெயர் அதனைக் குறிக்காமல், அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்கு வழங்கி அல்லது ஆகி வருதல் ஆகுபெயர் எனப்படும். எடுத்துக்காட்டாக, 'ஊர் சிரித்தது' என்ற தொடரில் ஊர் என்னும் சொல் ஊரைக் குறிக்காமல் ஊரில் வாழும் மக்களைக் குறிக்கிறது. தமிழ் இலக்கணத்தில், (1) பொருளாகுபெயர், (2) இடவாகுபெயர், (3) காலவாகுபெயர், (4) சினையாகுபெயர், (5) பண்பாகு பெயர், (6) தொழிலாகுபெயர், (7) எண்ணல் அளவையாகு பெயர், (8) எடுத்தல் அளவையாகு பெயர், (9) முகத்தல் அளவையாகு பெயர்,.(10) நீட்டல் அளவையாகு பெயர் (11) சொல்லாகு பெயர், (12) தானியாகு பெயர், (13) கருவியாகு பெயர், (14) காரியவாகு பெயர், (15) கருத்தாவாகு பெயர், (16) உவமையாகு பெயர் எனப் பதினாறு வகையான ஆகுபெயர்கள் உள்ளன. இவற்றை

பொருள் முதல் ஆறோடு அளவை சொல் தானி
கருவி காரியம் கருத்தன் ஆதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொள்முறை யுரைப்பன ஆகு பெயரே

என்று நன்னூல் கூறுகிறது.

ஆங்கில அணி இலக்கணத்தில் (Rhetoric) உள்ள Metonymy என்பதுடன் தமிழில் ஆகுபெயர் ஓரளவுக்கு ஒத்துப் போகிறது. இவ்விரண்டிற்கும் ஒற்றுமை இருந்தாலும் இரண்டும் ஒன்றல்ல. Metonymy என்பது ஆங்கில அணி இலக்கணத்தில் முழுமையைக் (Whole) குறிக்கும் ஒரு பகுதி (Part) எனப்படுகிறது. மேலோட்டமாகப் பார்த்தால், தமிழின் சினையாகுபெயர்தான் Metonymy எனத் தோன்றும். ஆனால், ஆகுபெயரோடு பொருந்தவியலாத Metonymy யின் பண்புகளும் உள்ளன (தமிழவன் 1992:92).

'வெற்றிலை நட்டான்' என்ற தொடர் வெற்றிலைக் கொடியை நட்டான் எனப் பொருள்படுவதால் 'வெற்றிலை' என்பது ஆகுபெயராகிறது. இதில் கொடியின் ஓர் உறுப்பாகிய (சினை) வெற்றிலைக் கொடி முழுவதையும் குறித்து நிற்கிறது. எனவே இது Metonmy ஆகிறது. சினையாகு பெயரும் ஆகிறது. 'காளை வந்தான்' என்ற வாக்கியத்தில், காளை என்றும் உவமையின் பெயர் உவமேயமாகிய வீரனுக்குப் பெயராக வருகிறது. இது உவமையாகு பெயர் என வகைப்படுத்தப்படுகிறது. இவ்விரு எடுத்துக்காட்டுகளிலிருந்து தமிழ் இலக்கணத்தில், ஒரு பொருளின் பெயர் எந்த உறவைக் கொண்டு அதனுடன் தொடர்புடைய வேறொரு பொருளுக்கு ஆகி வருகிறது என்ற அடிப்படையில் மிகக் குறிப்பாக வகைப்படுத்தப்படுகிறது. ஆனால், ஆங்கில அணி இலக்கணத்தில் Metonymy வகைப்படுத்தப்படுவதில்லை.

மேலும், ஆங்கில அணி இலக்கணத்தில் Metonymy யான ஒன்று தமிழ் இலக்கணத்தைப் பொறுத்தவரையில் ஆகுபெயராக இருக்க வேண்டுமென்பதில்லை. ஆங்கில இலக்கணத்தின் Metonymy என்பதைத் தமிழில் 'ஆகுபெயரன்' என்போம்.

பொருள்களுக்கு இடையிலான ஒப்புமையின் அடிப்படையில் ஒரு பொருளின் பெயர் மற்றொரு பொருளின் பெயரைப் பதிலி (Substitute) செய்தால் அதை யாக்கப்ஸன் பதிலியன் (Metaphor) என்கிறார். தமிழ் இலக்கணப்படியான உவம ஆகுபெயர் பதிலியன் ஆகிறது. எடுத்துக்காட்டாக, 'காளை வந்தான்' என்பது உவம ஆகுபெயர். இதில் உருவ ஒப்புமையின் அடிப்படையில் ஓர் ஆணைக்

'காளை' பதிலி செய்வதாகக் கொண்டால், காளை என்பது பதிலியன் ஆகிறது. ஆனால், தமிழின் அனைத்து ஆகுபெயர்களும் பதிலியன் ஆகமாட்டா. இரு பொருள்களுக்கிடையிலான ஒப்புமையின் அடிப்படையில் ஒன்று மற்றொன்றைப் பதிலி செய்வதனால் பதிலியன் உவமைச் சிந்தனையின் அடிப்படையில் எழுகிறது.

மொழியின் வடிவம் சார்ந்து சொல்லாமல் செயல்பாட்டில் ஆகுபெயரனும் பதிலியனும் எவ்வாறு இயங்குகின்றன என்பதை யாக்கப்ஸன் ஆராய்ந்துள்ளார். அவரது ஆய்வு அமைப்பில் இலக்கியத் திறனாய்விற்கு மிக முக்கியமான அடித்தளத்தை அளித்துள்ளது. மொழி என்பது குறிகளால் (Signs) ஆன ஓர் அமைப்பு. அந்த அமைப்பின் இரு அச்சுகளாகத் (Axes) தேர்ந்தெடுத்தல் (Selection) மற்றும் சேர்மம் (Combination) ஆகியவற்றை யாக்கப்ஸன் காண்கிறார். ஒத்த தன்மையும் ஒன்றுக்கொன்று பதிலி செய்யத்தக்க அலகுகளின் தொகுதியிலிருந்து ஓர் அலகாக எடுப்பதே தேர்ந்தெடுத்தல். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட மொழியின் அலகுகளை ஓர் ஒழுங்கில் அமைப்பதே சேர்மம். அலகுகளின் ஒத்த மற்றும் பதிலி செய்யும் தன்மைகளினால் நடைபெறுவது தேர்ந்தெடுத்தல். தேர்ந்தெடுத்தலும் பதிலி செய்தலும் பதிலியன் உருவாக்கத்தின் அடிப்படைகள். தொடர்ச்சிச் (Contiguity) சிந்தனையைக் கொண்டு உருவாவது சேர்மச் செயல்பாடு. தொடர்ச்சிச் சிந்தனையே ஆகுபெயரனுக்கு அடிப்படை. வெற்றிலை என்ற சொல் தனித்து நிற்கும்பொழுது கொடியின் ஓர் உறுப்பாகிய இலை என்பதை மட்டும் குறிக்கிறது. ஆனால், 'வெற்றிலை நட்டான்' என்ற தொடரில் 'வெற்றிலை' என்பதுடன் 'நட்டான்' என்பது தொடரும்பொழுது, 'வெற்றிலை' என்பது வெற்றிலைக் கொடி என்றும் ஆகிறது. அதாவது, தொடர்ச்சிச் சிந்தனையின் அடிப்படையில் ஒரு பொருளின் பெயர் ஆகுபெயரன் தன்மையை அடைகிறது.

கதை சொல்லும் ஒரு பிரதி (Narrative tent) கதையை ஒரு புள்ளியிலிருந்து மற்றொரு புள்ளிக்கு நகர்த்துகிறது. அதன் பொருட்டுக் கதையின் சொல்லாடல் ஒரு பொருளிலிருந்து (Topic) மற்றொரு பொருளுக்குக் கடந்து செல்கிறது. கதையின் சொல்லாடல் அவ்வாறு கடந்து செல்லும்பொழுது பிரதி சில தகவல்களைத் தேர்ந்தெடுத்துச் சேர்த்துக் கொள்கிறது. சில தகவல்களைத் தவிர்க்கிறது. கதையின் சொல்லாடலில் முன் நிறுத்தப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட தகவல்களுக்குக் கதை சார்ந்த முக்கியத்துவமும் புதிய பரிமாணமும் கிடைக்கின்றன. இவை சொல்லாடலின் வழியாகப் - பிரதியின் அழகியலைத் தீர்மானிக்கும் வாய்ப்பினைப் பெறுகின்றன. கீழே சொல்லும் பிரதி மறைப்பொருளாக (Connotation) ஒன்றைச் சொல்லும்பொழுதும் சில தகவல்களைத் தவிர்த்தும் சில தகவல்களைத் தேர்ந்தெடுத்துத் தன்னோடு சேர்த்துக் கொள்ளவும் செய்கிறது. அவ்வாறு சொல்லாடலில் இடம்பெறும் தகவல்களை ஆகுபெயரன் தன்மையுடன்

விளங்கினால், அவற்றைக் கொண்டு கதையாடலின் மறைபொருளை அறிய இயலும். மேலும், மேலோட்டமான வாசிப்பில் தேவையற்றனவாகித் தோன்றும் சில விவரங்கள் எவ்வாறு கதையாடலில் சில முக்கியமான செயல்களைச் செய்வனவாகின்றன என்பதை அறியும் இலக்கியத் திறனாய்விற்கு யாக்கப்ஸனின் ஆகுபெயரன் மற்றும் பதிலியன் குறித்த மொழியியல் ஆய்வு மிகவும் பயன்படுகிறது. ஆகுபெயரனும் பதிலியனும் செயல்கொள்ளும் வேறுபாடு குறித்த யாக்கப்ஸனின் ஆய்வு கதை சொல்லும் பிரதியின் புற அமைப்பிற்கும் உள்ளார்ந்த அமைப்பிற்குமான இணைவை ஆய்வதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. சொல்லப்போனால், தமது ஆய்வின் மூலம் மேற்சொன்ன இலக்கியத் திறனாய்வு முறைக்கு ஒரு கோட்பாட்டு அடித்தளத்தை யாக்கப்ஸன் அளித்துள்ளார் எனலாம்.

யாக்கப்ஸனின் பதிலியன் மற்றும் ஆகுபெயரன் குறித்த மொழியியல் ஆய்வை அடிப்படையாகக் கொண்டு கதை சொல்லும் பிரதிகளின் வாக்கியங்களை வகைப்படுத்தாமல், பிரதிகளையே வகைப்படுத்த முடியும் என டேவிட் லாட்ஜ் வாதிக்கிறார். The Modes of Modern Writing என்ற தமது நூலில் லாட்ஜ் சில ஆங்கில நாவலாசிரியர்களை வகைப்படுத்தியுள்ளார். எர்னஸ்ட் ஹெமிங்வேயின் (Ernest Hemingway) மழையில் பூனை (Cat in the Rain) என்ற சிறுகதையை Working with Structuralism என்ற நூலில் அணியியல் பகுப்பாய்வு (Rhetoric analysis) செய்துள்ளார் கார்லோஸ் பேக்கர் (Carlos Baker) மற்றும் ஜான் ஹெகோபியன் (John V. Hegopian) என்ற இரு திறனாய்வாளர்கள் ஹெமிங்வேயின் அச்சிறுகதையைப் பற்றிக் கூறியுள்ளவற்றையும் லாட்ஜ் எடுத்துரைக்கிறார். பின், அவ்விரு திறனாய்வாளர்களும் கூறாத புதிய செய்திகளையும் தமது அணியியல் பகுப்பாய்வின் மூலம் லாட்ஜ் கண்டறிந்துள்ளார்.

'மழையில் பூனை' என்னும் அச்சிறுகதையின் சுருக்கம் கீழ்வருமாறு:

> ஓர் அமெரிக்கத் தம்பதியினர் இத்தாலியில் ஒரு நகரத்து விடுதியில் தங்கியிருக்கின்றனர், மழை பெய்கிறது. மனைவி அவர்கள் தங்கியுள்ள அறையில் ஜன்னலுக்குக் கீழே ஒரு மேஜைக்கடியில் பூனை ஒன்றைக் காண்கிறாள். அப்பூனையை எடுத்துவரும் விருப்பத்துடன் அவள் சென்று பார்க்கும்பொழுது அப்பூனையைக் காண முடியவில்லை. அறைக்குத் திரும்புகிறாள். கணவனிடம் தான் கொஞ்சுவதற்கு ஒரு பூனை வெண்டுமென்கிறாள். படுக்கையில் படித்தபடி புத்தகம் படித்துக் கொண்டிருக்கும் கணவன் பேசாமல் எதையேனும் எடுத்துப்படி என்கிறான். மனைவிக்கு அவள் விரும்பிய

பூனை கிடைக்கவில்லை என்பதை அறிந்த விடுதி காப்பாளர் பணிப்பெண் மூலமாக வேறொரு பூனையைக் கொடுத்தனுப்புகிறார்.

இக்கதையாடலில் ஆங்காங்கே வரும் விவரங்களை லாட்ஜ் விரிவாக ஆராய்ந்துள்ளார். இடவசதி, விடுதி அவற்றை இங்கே முழுவதும் தர இயலவில்லை. காதலிப்பதைச் சண்டையிடலுக்கு எதிராகவும் (juxtapox) பூனையைக் கொஞ்சுதலைப் புத்தகம் படிப்பதற்கு எதிராகவும் கொண்டு ஹெமிங்வேயின் கதையின் உள்ளார்ந்த அமைப்பைக் கீழ்க்காணும் குறியீட்டு மாதிரியின் மூலம் அடையாளப்படுத்துகிறார்.

காதலித்தல் (மகிழ்ச்சி) x சண்டையிடல் (சோர்வு) : :
பூனையைக் கொஞ்சல் (மகிழ்ச்சியின்மை, இன்பம் கொடுத்தல்,
ஆனால் பெறாமை) x புத்தகம் படித்தல் (சோர்வின்மை)

இம்மாதிரியிலிருந்து மகிழ்ச்சி x சோர்வு ஆகிய அதிர்வுகளின் கதையாடல் மாற்றமே (Narrative Transformation) இச்சிறுகதை என்ற முடிவுக்கு வருகிறார். கதையாடலில் புறவயமான ஆசிரியனுக்கும் (பூனைக்கான விருப்பம்) அது மறை பொருளாகி உணர்த்தும் கணவன் மனைவி உறவுக்குமான இணைவை அறிய மேற்கண்ட குறியீட்டு அடையாளம் பயன்படுகிறது.

லாட்ஜின் ஆய்வை அடிப்படையாகக் கொண்டு சங்க இலக்கியத்தில் பத்துப் பாட்டுள் ஒன்பதாவது பாட்டாகிய உருத்திரங்கண்ணனார் எழுதிய பட்டினப்பாலையை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம். 30 வரிகளைக் கொண்ட பட்டினப்பாலையின் செய்யுள் ஆசிரியப்பா. பட்டினப்பாலை என்பது பட்டினம் - பாலை என்பதன் கூட்டுத் தொடர். இங்குப் பட்டினம் என்பது காவிரிப்பூம்பட்டினம். இது சோழ நாட்டின் தலைநகராகவும் துறைமுகமாகவும் விளங்கியது. காவிரிப்பூம்பட்டினம் கடலில் மூழ்கிய செய்தியை ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை கூறுகிறது. பாலை என்பது பாலைத் திணையைச் சுட்டுகிறது. தலைவன் தலைவி பிரிவைக் கூறுவது பாலைத் திணை. தலைவன் தனது தலைவியைப் பொருள் நிமித்தமாகப் பிரிந்து செல்வது அல்லது பிரிந்து செல்ல நினைப்பது ஆகியவற்றைக் கூறுவது அகத் துறையில் அடங்கும். இப் பிரிவு குறித்த வருத்தமும் பாலைத் திணையில் அடங்கும். பாலை அகத்திணைகளுள் ஒன்று. பட்டினமாகிய காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பைக் கூறிப் பிரிவின் துன்பத்தை உணர்த்துவது பட்டினப்பாலை கூறும் மேலோட்டமான செய்தி.

கதை சொல்லும் ஒரு பிரதி மறைபொருளாகச் (Connotation) சிலவற்றைச்

சொல்வதற்காகத் தான் சித்திரிக்கும் ஒரு காட்சியில் சில தகவல்களைத் தேர்ந்தெடுத்துச் சேர்த்துக் கொள்கிறது. பிறவற்றை விலக்குகிறது என்பதை முன்னரே கண்டோம். அவ்வாறு சித்திரிப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் தகவல்களை ஒரு பகுதியாகவும் (Part) மறைபொருளை முழுமையாகவும் (Whole) கொண்டால், சித்திரிப்பில் உள்ள தகவல் ஆகுபெயரன் தன்மையை அடைகிறது. இந்த அடிப்படையில் பட்டினப்பாலை சித்திரிக்கும் பல காட்சிகளிலிருந்தும் ஆகுபெயரன்களை அடையாளம் கண்டு அவற்றைக் கதையாடலின் மறைபொருளுடன் இணைக்க முடியும். அதன் மூலமாகப் பட்டினப்பாலையின் புற அமைப்பிற்கும் உள்ளார்ந்த அமைப்பிற்குமான உறவையும் அந்த உறவு எந்த வடிவத்தில் அமைந்துள்ளது என்பதையும் அறிய முடியும். இந்த நோக்கத்திற்காக பட்டினப்பாலை சித்திரிக்கும் சில காட்சிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

பாக்கத்தின் செல்வச் சிறப்பைப் பட்டினப்பாலை கூறுமிடத்து,

அகல் நகர் வியன் முற்றத்துச்
சுடர் நுதல் மட நோக்கின்
நேர் இழை மகளிர் உணங்கு உணாக் கவரும்
கோழி எறிந்த கொடுங்காற் கனங்குழை (20 . 23)

என்ற வரிகளால் காய்கின்ற உணவுப் பொருள்களைத் தின்னவரும் கோழியை நேர் இழை மகளிர் விரட்டும் செய்தி சொல்லப்படுகிறது. கதையாடலின் புறவயமான அமைப்பில் உள்ள 'உணவுப் பொருளைத் தின்னவிடாது விரட்டப்படும் கோழி' என்பதை ஒரு முழுமையைக் குறிக்கும் ஒரு பகுதியாகக் கொள்வோம். அதாவது, இச்சித்திரிப்பில் வருகின்ற கோழியை ஆகுபெயரன் தன்மையுள்ளதாக அணுகுவோம். இக்கோழி என்கிற பகுதி சுட்டும் கதையாடலின் முழுமை எது என்பதை இவ்வாறான ஒரு பகுதியை மட்டுமே வைத்துத் தீர்மானிப்பது கடினம். எனவே, உணவுப் பொருளை உண்ணவிடாது விரட்டப்படும் இக்கோழியை ஓர் ஆகுபெயரனாகக் கொண்டு இதைப் போன்ற அதே முழுமையைச் சுட்டுகின்ற கதையாடலில் இடம் பெறும் வேறு பல ஆகுபெயரன்களையும் பகுப்பாய்வு செய்தல் வேண்டும். இக் கோழியை ஒத்த வேறு பல ஆகுபெயரன்களும் கிடைத்தால் , அவற்றின் பொதுவான குணங்களை வரிசைப்படுத்தலாம். அதைக் கொண்டு கதையாடலில் வெளிப்படையாகத் தெரியவராத மறைபொருளாக உள்ள அந்த ஆகுபெயரன்கள் சுட்டும் முழுமையை அறிய முடியும்.

மேற்கண்ட சித்திரிப்பில் வரும் கோழியின் நிலைகளாகக் கீழ்க்கண்டவற்றைப் பட்டியலிடலாம்:

(1) கண்ணெதிரில் உள்ள காய்கின்ற உணவுப் பொருளை உண்ண விடாது இக்கோழி துரத்தப்படுகிறது.

(2) முன்பு உணவு கிடைக்கப் பெற்று அதை உண்டு வளர்ந்துள்ள இக்கோழிக்குத் தற்போது உணவு தடுக்கப்படுகிறது.

(3) எதிர்காலத்தில் இக்கோழிக்கு உணவு கிடைக்கலாம்.

சமணர்களும் பௌத்தர்களும் தங்கித் தவம் செய்யும் இடங்களைப் பற்றியும் பிற முனிவர்கள் வேள்வி செய்யும் இடங்களைப் பற்றியும் கீழ்க்காணும் அடிகளில் கூறப்படுகிறது.

தவப் பள்ளித் தாழ் காவின்
அவிர் சடை முனிவர் அங்கி வேட்கும்
ஆவுதி நறும் புகை முனைஇ குயில் தம்
மா இரும் பெடையோடு இரியல் போகி
பூதம் காக்கும் புகல் அருங் கடி நகர்ந்
தூது உண் அம் புறவொடு துச்சிற் சேக்கும். (53-58)

இப்பகுதியில் வேள்விச் சாலைகளிலிருந்து எழும் புகையைக் கண்டு அச்சமுற்றுக் குயில்கள் தாம் வாழும் சோலைகளை விட்டுப் பாழடைந்த கட்டிடங்களைச் சென்றடைகின்றன என்ற செய்தி சொல்லப்படுகின்றது. முற்பகுதியில் சொல்லப்பட்ட கோழியைப் போலவே, இங்கும் புகையைக் கண்டு அச்சமுற்றுப் பாழடைந்த கட்டிடங்களைச் சென்றடையும் குயில்களின் இயல்பான வாழ்வில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. இரண்டுக்கும் சில பொதுமைகள் உள்ளன. இங்கு சித்திரிக்கப்படும் குயில்களின் நிலையைக் கீழ்க்கண்டவாறு கூறலாம்.

(1) ஏற்கனவே நகரில் வாழ்ந்து வந்துள்ளன இக்குயில்கள்

(2) தற்பொழுது குயில்களுக்குப் புகையினால் அச்சமேற்பட்டுள்ளது.

(3) தற்பொழுது பாழடைந்த கட்டிடங்களில் தஞ்சம் புகுந்துள்ள இக்-குயில்கள் வேள்விச் சாலைகளின் புகை நீங்கினால் மீண்டும் நகருக்கே பழையபடி திரும்ப வரலாம்.

காவிரிப்பூம்பட்டினத்தின் இரவுப்பொழுதைப் பட்டினப்பாலை கீழ்க்காணும் வரிகளில் விவரிக்கின்றது.

துணைப் புணர்ந்த மட மங்கையர்
பட்டு நீக்கித் துகில் உடுத்தும்
மட்டு நீக்கி மது மகிழ்ந்தும்
மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்
மகளிர் கோதை மைந்தர் மலையவும்
நெடுங்கால் மாடத்து ஒள் எரி நோக்கி
கொடுந் திமில் பரதவர் குரூஉச் சுடர் எண்ணவும் (106 - 110)

இக்காட்சியில் தொழில் நிமித்தமாகத் தமது துணையைப் பிரிந்து கடலில் ஓடத்தை நடத்திச் செல்லும் பரதவர்களைப் பற்றிச் சொல்லப்படுகிறது. சூரியன் பிறப்பதை எதிர்நோக்கி இப்பரதவர்கள் செல்கிறார்கள் என்பதை 'குரூச்சுடர்' எண்ணவும் என்பதிலிருந்து அறிய முடிகிறது. இங்குச் சித்திரிக்கப்படும் பரதவர்கள் முன் கூறிய இரண்டு ஆகுபெயரன்களுடன் மூன்றாவதான ஆகுபெயரனாக நமக்கு கிடைக்கிறார்கள். இப்பரதவர்களின் இயல்புகளாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம்.

(1) நாம் பிரிந்துள்ளவற்றுடன் / பிரிந்துள்ளவர்களுடன் மீண்டும் இணைவதற்காக ஆவலுடன் சூரியன் புறப்படுவதை எதிர்நோக்கி உள்ளார்கள்.

(2) இவர்கள் தொழில் நிமித்தமாகத் தற்காலிகமாகத் தம் குடும்பத்தினரிடமிருந்து தனித்து உள்ளார்கள்.

(3) தம் குடும்பத்துடன் மீண்டும் இணைவார்கள்.

இனி அடுத்த ஆகுபெயரனைத் தேடும் பொருட்டுக் கரிகால் பெருவளத்தான் வெற்றி கொண்ட பகைவரது நிலங்களைப் பற்றிப் பட்டினப்பாலை கூறுவதைக் கேட்போம்

வெண்பூக் கரும்பொடு செந்நெல் நீடி
மா இதழ்க் குவளையொடு நெய்தலும் மயங்கிக்
கரா அம் கலித்த கண் அகன் பொய்கைக்
கொழுங்காற் புதவமொடு செருந்தி நீடி
செறுவும் வாவியும், மயங்கி நீர் அற்று
அறுகோட்டு இரலையொடு மான்பிணை உகளவும் (240 - 245)

என்று பட்டினப்பாலை கூறுகிறது. கரிகால் பெருவளத்தான் வெற்றி கொண்டபின் அவனது பகைவரது நாட்டிலிருந்து மருத நிலங்கள் வளமையிலிருந்து திரிந்து பாழ்

நிலங்களாகிவிட்டன. இங்கு 'நீர் அற்று' என்ற தொடர் 'பாழ்நிலம்' என்ற படிமத்தைத் தருகிறது. கதையாடலின் புறவயமான அமைப்பில் தெரிய வருகின்ற 'பாழ்நிலம்' என்பதை ஆகுபெயரானாகக் கொண்டு, அது சுட்டும் முழுமையை அறிய முன் கூறப்பட்ட ஆகுபெயரன்களைப் போலவே, பாழ்நிலத்தின் இயல்புகளை அறிய வேண்டும். 'பாழ்' என்பது பல பரிமாணங்களைக் கொண்ட ஒரு படிமம். பாழ்நிலத்தில் காதலர் கூடி மகிழ வாய்ப்பில்லை. பாழ்நிலம் இனப்பெருக்கம் செய்ய இயலாமையின் குறியீடு. இவ்வாறு பல அர்த்தங்களைத் தோற்றுவிப்பது பாழ்நிலம். பட்டினப்பாலையினை மேற்சொன்ன சித்திரிப்பிலிருந்து பெறப்படும் பாழ்நிலத்தின் தன்மைகளைக் கீழ்க்காணுவது போலக் கூறலாம்.

(1) முன்பு வளமையுடன் இருந்த நிலம் தற்சமயம் பாழ்நிலமாகியுள்ளது.

(2) கரிகாலனின் படையெடுப்பால் வளமையான நிலம் பாழ்நிலமாகியுள்ளது.

(3) போர் முடிந்த பின்னரோ அல்லது வேறு காரணங்களாலோ அப்பாழ்நிலம் மீண்டும் வளம் பெறலாம்.

காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பைக் கூறும் பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட ஆகுபெயரன்களையும் கரிகாலன் வெற்றி கொண்ட பகைவரது நிலங்களைப் பற்றிக் கூறும் பகுதிகளிலிருந்து எடுக்கப்பட்ட ஆகுபெயரன்களையும் இணைப்பது ஏன் என்ற ஐயம் எழலாம். அமைப்பியல் என்பது ஒரு கவிதையைத் தனியொரு நூலாகப் பார்க்கமால் மொழிக்கும் பல்வேறு தளங்களில் உறவு கொண்டிருக்கும் உள்ளடங்கிய நிலைகளுக்கும் இடையிலான வலைப்பின்னலாகப் பார்க்கும். இதனால் கவிதை என்பது பிரதியாகிறது.

மேற்சொன்ன பகுதியின் தொடர்ச்சியாக, கரிகாலன் வெற்றிகொண்ட பகைவர்களின் நாடுகளில் உள்ள அம்பலங்கள் (பெண்கள் வணங்கும் கோயில் மண்டபங்கள்) எவ்வாறு உள்ளன என்று கூறும் பகுதி கீழ்க்கண்டவாறு உள்ளது.

கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலர் அணி மெழுக்கம், ஏறிப் பலர் தொழ
வம்பலர் சேக்கும் கந்துடையப் பொதியில்
பருநிலை நெடுந்தூண் ஒல்கத் தீண்டிப்
பெருநல் யானையொடு பிடிபுணர்ந்து உறையவும் (246 - 251)

கரிகால் சோழன் தன் பகைவர்களை வெல்வதற்கு முன்பாக அவர்களது

நாடுகளில் பெண்கள் வழிபடும் பல மண்டபங்கள் பலரும் வணங்கத் தக்க வகையில் பொலிவுடன் விளங்கின. ஆனால், கரிகாலன் படையெடுப்பினால் அவை யானைகள் உறங்கும் இடங்களாக மாறியுள்ளன. நாம் ஏற்கனவே கண்ட ஆகுபெயரன்களின் பொதுவான நிலைகளின் அடிப்படையில் அம்பலங்களையும் ஆகுபெயரனாகக் கருதும் சாத்தியம் உருவாகிறது. மற்ற ஆகுபெயரன்களைப் போலவே, இதனுடைய நிலையிலிருந்து இதன் தன்மைகளை அறிவோம்.

(1) இந்த அம்பலங்கள் கரிகாலன் வெற்றி கொள்வதற்கு முன்னர் பலரும் வழிபடும் விதமாகப் பொலிவுடன் விளங்கின.

(2) இவை தற்சமயம் வழிபாடு நடத்தத் தகுதியற்றுப் பாழ்பட்டுக் கிடக்கின்றன.

(3) மீண்டும் இவை வழிபாட்டுக்குத் தக்கவையாக மாறும் சூழல் உருவாகலாம்.

இதுவரை கதையாடலின் புற அமைப்பிலிருந்து எடுத்துப் பகுப்பாய்வு செய்யப்பட்ட ஐந்து ஆகுபெயரன்களும் ஒரு முழுமையைச் சுட்டும் பகுதிகள். அதாவது அவை ஒரே முழுமையின் பல ஆகுபெயரன்கள். எனவே, அவை சுட்டும் முழுமையை அடையாளப்படுத்த முயல்வோம். கதையாடலில் சித்திரிக்கப்பட்டவற்றிலிருந்து ஐந்து ஆகுபெயரன்களின் இயல்புகளைக் கண்டுள்ளோம். இவற்றின் தனித்தனியான தன்மைகளிலிருந்து, இவற்றிற்குப் பொதுவான தன்மைகளாக உள்ளவற்றைக் கீழ்க்காணுமாறு வரிசைப்படுத்தலாம்.

(1) ஒவ்வொரு ஆகுபெயரனும் அதன் தற்போதைய நிலைக்கு எதிர்நிலையில் இருந்துள்ளது.

(2) அவை தம் இயல்பான நிலையிலிருந்து தற்காலிகமாகத் தற்போதைய நிலைக்கு ஆட்பட்டுள்ளன.

(3) அவை மீண்டும் தம் இயல்பான நிலைக்கு மாறலாம்.

கதையாடலின் புறவயமான அமைப்பிலிருந்து தெரியவரும் இந்த ஆகுபெயரன்கள் சுட்டும் கதையாடலில் மறைபொருளாக உள்ள முழுமை எது என்பதற்கான விடையை நாம் காணவேண்டும். பட்டினப்பாலை 1 முதல் 218 வரிகள் முடிய காவிரிப்பூம்பட்டினத்தில் பல்வேறு சிறப்புகளையும் அங்கு நடைபெறும் சில நிகழ்ச்சிகளையும் கூறுகிறது. 221 முதல் 299 வரிகள் முடிய கரிகால் சோழன் சிறப்பு, வீரம் மற்றும் அவன் கைப்பற்றிய பகைவரது ஊர்களின் நிலை ஆகியன பற்றியும் கூறுகிறது.

பட்டினம் பெறினும்
வார்இருங் கூந்தல் வயங்குஇழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே! (219 - 220)

என்ற வரிகளிலும்

.... தெவ்வர்க்கு ஓக்கிய
வேலினும் வெய்ய கானம் அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே (299 - 301)

என்ற இறுதி வரிகளிலும் தலைவனின் அக வாழ்க்கை பற்றிய செய்தி கூறப்படுகிறது. பல சிறப்புகளை உடைய காவிரிப்பூம்பட்டினத்தைப் பெறுவதாயினும் அதை விரும்பாது தன் காதலியைப் பிரிந்து வரமாட்டேன் என்ற தலைவனின் கூற்று முற்பகுதியில் சொல்லப்படுகிறது. கரிகாலன் தன் பகைவர்களின் மேல் எறியும் வேலைக் காட்டிலும் கொடுமையானது தனது காதலியைப் பிரிவது என்றும் கரிகாலனது செங்கோலைக் காட்டிலும் குளிர்ச்சியானது தன் காதலியின் தோள்கள் என்றும் தலைவன் கூறுகிறான்.

தன் காதலியைப் பொருள்வையின் நிமித்தமாகப் பிரிய மாட்டேன் என்று தலைவன் கூறுவதைப் பிரதி சொல்கிறது. ஆனால், தலைவனுக்கும் அவன் காதலிக்கும் இடையிலான உறவைப் பற்றியோ காதலியைவிட்டுத் தலைவன் பிரிவதை விரும்பாமைக்குக் காரணங்களைப் பற்றியோ பிரதி எதுவும் சொல்வதில்லை. இவை குறித்துப் பிரதி மௌனம் சாதிக்கிறது. பிரதியின் இந்த மௌனத்தை உடைத்துப் பேச வைக்கும் நோக்கத்திற்காகவே மேற்சொன்ன ஆகுபெயரன்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. கதையாடலின் புற அமைப்பில் தெரியவரும் அந்த ஆகுபெயரன்கள் கதையாடலில் உள்ளார்ந்த அமைப்பில் கூறப்படும் தலைவனுக்கும் அவன் காதலிக்குமான அக உறவைச் சுட்டும் பகுதிகள். எனவே, அந்த ஆகுபெயரன்களின் இயல்புகள் /நிலைகள் அவை சுட்டும் தலைவனின் வெளிப்படாத அகவாழ்வின் தன்மைகளை நமக்குக் காட்டுகின்றன. எனவே, தலைவனின் அகவாழ்வு அதைச் சுட்டும் ஆகுபெயரன்களின் நிலையைப் போலவே

(1) முன்னர் இனிது/ வளமையுடன் விளங்கியது (தலைவன் தன் காதலியுடன் மகிழ்வுற்றிருந்தான்)

(2) தற்சமயம் பொருள் தேடுதலின் பொருட்டு (அ) போரினால் பிரிவுக்கு ஆட்பட்டுள்ளது.

(3) இப்பிரிவு தற்காலிகமானதே. மீண்டும் தலைவன் தன் காதலியுடன் இணையலாம்.

இந்தக் கவனிப்புகளின் அடிப்படையிலிருந்து தலைவன் தன் காதலியைப் பிரிய மாட்டேன் என்று கூறுவதற்கான காரணங்களை ஊகிக்க முடிகிறது. இக்கவிதையின் புறச் சித்திரிப்பில் (பட்டினம் மற்றும் கரிகாலன் வெற்றி கொண்ட ஊர்களின் சித்திரிப்பில்) வருகின்ற ஆகுபெயரன்கள் உள்ளார்ந்த நுட்பமாக எழுப்பிய உணர்வலைகள் ஒன்று கூடி முழுமை பெற்றுத் தலைவனுக்கும் தலைவிக்குமான உறவின் ஆழத்தைப் புதிய பரிமாணத்தில் புரிந்து கொள்ள உதவுகிறது. இப்பொழுது கவிதையின் துவக்கத்திலிருந்தே நினைவிலி நிலையில் கவிதையின் மையப் பொருளான தலைவனின் அகவாழ்வு கட்டப்பட்டுக் கொண்டு வந்த செயல் விளங்குகிறது.

நூற்பட்டியல்

1. சிதம்பரனார், சாமி (1967) பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை, சென்னை.

2. தமிழவன் (1992) தமிழும் குறியியலும், சென்னை.

3. Lodge, David (1982) *Working with Structuralism*, London.

28

அகம் / புறம் கோட்பாட்டுப் பின்னணியில் மேற்கத்திய கவிதை

எஸ்.சண்முகம்

தமிழ் மொழிக்கும் அதன் கவிதைக்கும் நீண்டதொரு பண்பாடு உண்டு. அகம்/ புறம் என்ற கோட்பாட்டை வறட்டுப் பாகுபாடாகச் சுருங்கவிடாமல், ஒருவர் மாற்றி ஒருவராக உரையெழுதிப் பயன்படுத்தியுள்ளனர். சங்கக் கவிதைக் காலம்தொட்டு அகமும் புறமும் பண்பாட்டின் இருமுனைகளாக இயங்கி வருகின்றன. நம் கவிதை மரபைக் காணும்போது இது தெளிவாகிறது. பெரும்பாலும் பிறமொழிக் கவிதையை அணுகுவதற்கு இதுவரை அகம் / புறம் கோட்பாட்டை நாம் பயன்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக மேற்கத்திய முன் மாதிரிகளின் துணைகொண்டே இதுவரை அணுகினோம். அகம் / புறம் என்ற சுய அறிதல் முறையைப் பயன்படுத்தி மேற்கத்திய கவிதைகளை நாம் அணுகினால், தமிழ் மொழிக்குள்ள விமர்சன உரைமரபை வளர்த்தெடுக்க முடியும்.

தமிழ் மொழியைக் கற்கக்கூடிய அனைவருக்கும் அகம் / புறம் மரபு விமர்சன ரீதியாகப் பயிற்றுவிக்கப்படுவதில்லை. இக்கோட்பாட்டைப் படைப்பு ரீதியாகக் கற்றுத்தராமல் விட்டதே இலக்கியத் திறனாய்வில் காலனிய மாதிரிகள் புழக்கத்திற்கு வருவதற்குக் காரணம். இலக்கியத் திறனாய்வில் முக்கியமான மாறுதல்களை அண்மையில் ஏற்படுத்தியவை, அமைப்பியலும், பின் அமைப்பியலும்தான். இவற்றுடன் குறியியல் என்ற மொழிசார்ந்த சிந்தனையும் சுய விமர்சன மரபை வளப்படுத்த வல்லது. காலனியச் சிந்தனை மாதிரிகளின் சிறையிலிருந்து விடுபட்டுப் பின் - அமைப்பியல் சார்ந்த பின் - காலனியக் கருத்தாக்கம் உருவாகிறது. அது இலக்கியத் திறனாய்வைப் புதுத் திசையில் வழி நடத்துகிறது. இந்தப் போக்கின் இணை ஒப்புமையை நம் மொழிக்குள் கண்டெடுக்க வேண்டும். அப்படிக் கண்டெடுப்பது புதியதொரு கலைச்சொல் மரபைத் தோற்றுவிக்கும்.

அகம் / புறம் கோட்பாட்டை இன்று காலத்தன்மையுடன் (temporal) நோக்க இயலாது. அதை அ-காலத்தன்மையுடன் (atemporal) காண வேண்டும். அகம் / புறம் எனும் சொற்கள் ஒரே குறிப்பீட்டைச் (signified) செய்வன அல்ல. எடுத்துக்காட்டாக, குறிஞ்சி என்பது அக வகைக்குள் உள்ள ஒரு குறி (sign). பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது அது. அக் குறிஞ்சி வகைமையைச் சார்ந்த நிலத்து மக்களின் தலைமகன், தலைவியைக் களவிற் கொள்ளின் அது அக ஒழுக்கமாகும். குறிஞ்சியின் புற எதிர்வு (exterior opposition) வெட்சி. அது அந்நிலத்து ஆநிரையைக் களவிற் கொள்ளின் புற ஒழுக்கமாகிறது (நச்சினார்க்கினியர், தொல்காப்பியம், பொருளதிகாரம் உரை. 1986).

மேற்கூறியதிலிருந்து அகம் / புறம் அமைப்புகளின் இயக்கத்தைப் பின்வருமாறு அறிந்து கொள்ளலாம்.

1. குறிஞ்சி நில மக்களின் தலைவன் தலைவியைக் 'களவிற்' கொண்டால் அக ஒழுக்கம்.

2. வெட்சித் திணையில் ஆநிரையைக் 'களவிற்' கொண்டால் புற ஒழுக்கம்.

இவ்விரு திணைகளிலும் 'களவு' எனும் செயல் அக-புற நிகழ்வாக இயங்குகிறது. தலைமகளின் மனத்தை (வீட்டிற்குள்) களவு செய்வது அகநிலை (interior) சார்ந்த நிகழ்வு. ஆநிரையை உடலியல் ரீதியாக வீட்டிற்கு வெளியே களவு செய்வது புறநிலை (exterior) சார்ந்த நிகழ்வு.

அகத்தை interior என்றும் புறத்தை exterior என்றும் வரையறுக்கிறார் ஏ.கே.ராமானுஜன் (Ramanujan 1985: 230-297). இப்பாகுபாட்டைக் கோட்பாடாக விளங்கிக் கொள்ள வேண்டும். அதற்கு இதுவரை பார்த்த சிந்தனைகளைக் கீழ்வருமாறு பட்டியல் போடலாம்.

குறிஞ்சி	:	தலைவியைக் களவிற் கொள்ளல் அகம் (வீட்டிற்குள்ளே)
வெட்சி	:	ஆநிரையைக் களவிற் கொள்ளல் புறம் (வீட்டிற்கு வெளியே)

குறிஞ்சி, வெட்சி இரண்டிலும் களவிற் கொள்ளல் வருகிறது. களவிற் கொள்ளலை மையத்தில் வரும் வெளி (Centre Space) எனலாம். இரண்டு திணைகளுக்கிடையில் வரும் இந்த வெளி அவற்றை எதிர்வுகளாக மாற்றுகிறது. அது ஒற்றுமையோடும் வேற்றுமையோடும் பிணைந்து இயங்குகிறது. இதனைத் தெளிவாக விளங்கிக் கொள்ளத் தமிழவனின் 'மாயா-எதிர்வு' என்ற கோட்பாடு

அவசியம் (தமிழவன் 1994 : 20). ஜோர்ஜ் லூயி போர்ஹே (Jorge Luis Borges) என்ற புகழ்பெற்ற எழுத்தாளரின் சிறுகதையை அலசு தமிழவன் இக்கோட்பாட்டைப் பயன்படுத்துகிறார். எதிர்வு சார்ந்ததும் சாராததுமான ஓர் அமைப்புதான் மாயா - எதிர்வு என்கிறார் தமிழவன். மாயா - எதிர்வு என்பதை வைத்துப் பார்க்கும்போது இரு திணைகளும் ஒருமையுடன் உள்ளது தெரிய வரும்.

இனி, குறிஞ்சியும் வெட்சியும் குறிப்பீட்டிற்கு உள்ளாகும் முறையைக் காண்போம்.

குறிஞ்சி	x	வெட்சி
அகம்	களவு	.... புறம்
தலைமகள்	x	ஆநிரை

குறிஞ்சி / வெட்சி ஆகிய இரு திணைகளுக்கும் இடையில் வரும் 'களவு' ஒப்புமையுள்ள பொதுச் செயல். குறிஞ்சித் தலைமகளின் மனத்தைக் கவர்தல் அகச் செயல் (interior). வெட்சி ஆநிரையைக் கவர்தல் புறச்செயல் (exterior).

"அகம் / புறம் எதிர்வை நேர்ப்பதம் / எதிர்ப்பதமாகப் பார்க்காமல் கால் பந்தாட்ட மைதானத்தின் எதிரெதிர் தூண்களாகப் பார்க்கலாம். இவ்வெதிர்வின் நடுவில் ஒரு வெளி உள்ளது. இந்த வெளி சூன்யம் அல்ல. இது இரு எதிர்வுகளுக்கு நடுவிலான அர்த்த வெளி. இரு எதிர்வுகளின் வீரியத்தால் உருப்பெற்றதால் இந்த வெளி பிற எதிர்வுகளைப் பெற்றுக் கொடுத்துக் கொண்டேயிருக்க முடியும்" என்கிறார் தமிழவன் (தமிழவன் 1994 : 18). நான் x நீ - என்ற இணை ஜோடியின் படைப்பியக்கம் பற்றித் தமிழவன் மற்றொரு கட்டுரையில் ஆராய்வதையும் இங்குப் பொருத்திப் பார்க்க முடியும் (தமிழவன் 1992 : 58-77).

கால்பந்தாட்ட மைதானத்தில் எதிரெதிர் தூண்களைப் போல் அகம் / புறம் அமைகின்றன. அதுபோல நான் x நீ என்ற ஜோடியும் அகத் திணைக்குள் இரு மொழி - எதிர்வுகளாக உருக்கொள்கின்றது. இந்த எதிர்வுகளுக்கு இடையில் உள்ள வெளியை அகப்பரப்பு (interior space) எனலாம். இத்தகைய நான் x நீ-யின் இடையில் உள்ள வெளியானது உருவக எதிர்வை (metaphorical opposition) தோற்றுவிக்கிறது. இதனை விளங்கிக் கொள்ளக் குறுந்தொகையின் நாற்பதாவது பாடலைச் செய்முறைத் திறனாய்விற்கு உட்படுத்தலாம்.

யாயும் ஞாயும் யார் ஆகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்

செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே

ஜார்ஜ் எல். ஹார்ட் என்ற மேற்கத்திய தமிழறிஞர் இது குறித்துக் கீழ்வருமாறு கருத்துரைக்கிறார்.

"ஆண் மழையும் பெண் பூமியும் இரண்டறக் கூடுவதிலிருந்து உருக்கொள்வதுதான் பூமியின் வளமை (fertility). ஆணும் பெண்ணும் கூடுவதன் மூலம் பெண் குழந்தைகளை ஈன்றெடுக்கிறாள். இப்பொருள் கொண்ட பாடலின் இயக்கமானது சீராகக் கட்டமைக்கப்படுகிறது. 'என்', 'உன்' எனத் துவங்கி 'நான்', 'நீ' என வளர்ந்து பாடல் 'நாமிருவரும்' என முடிகிறது. (Hart 1979 : 1-10)

மேலே ஹார்ட் அவர்கள் கூறுவதிலிருந்து

1. என்னுடைய x உன்னுடைய
2. நான் x நீ
3. நாமிருவரும்

என்பதான மூன்றுவித வகைமைகள் கிடைக்கின்றன. இவற்றின் அடிப்படையில் பாடலை வாசித்தால் என் x உன் என்ற உடைமைப் பொருள் தன்மை முன்னிலையாகிறது. நான் x நீ யின் இடைவெளியில் நிகழும் காதல்தான் இப்பாடல் ஆகும்.

என் x உன், நான் x நீ ஆகியவற்றை மொழி - எதிர்வுகளாகவும் காணலாம். இவற்றின் இடையே நிகழக் கூடியது மொழி விளையாட்டு.

இப்பாடலின் உள்ளீடு ஆண் x பெண் என்ற அகத்திணைக்குரிய கூடல். 'என்'-னை ஆணாகவும், 'உன்'-னைப் பெண்ணாகவும் உருவகிக்கலாம். அகநிகழ்வில் வரும் கூடலைப் புறரீதியான உருவகங்கள் கொண்டு பாடல் சாத்தியப்படுத்துகிறது. பாடலின் கர்த்தாக்களான ஆண் மழையாகவும், பெண் செம்மண் பூமியாகவும் உருவகிக்கப்படுகின்றனர். மழையை மேல் திசையின் துருவமாகக் கொள்ளலாம். செம்மண் நிலத்தை, மழையின் எதிர்த்திசையைக் குறிப்பதாகச் சொல்லலாம். எதிர் எதிரான தன்மையுள்ள பொருள்கள் சொற்சேர்க்கையினால் இணைகின்றன. இதுதான் 'செம்புலப் பெயல்நீர்' என்ற உருவகமாகக் கூடுகிறது. இந்த உருவகமே அகத்திணையின் கூடல் என்பதை மொழி வெளிப்பாடாகச் சாத்தியப்படுத்துகிறது.

உருவகமாகக் கலந்துள்ளவர்கள் ஆண் x பெண் இருவரும். அவர்களின் கூடல் ஐம்புலன்களும் இயைந்ததாகும். அக்கூடலைச் சொல்லும் புறரீதியான

உருவகங்கள், மழைநீர், செம்மண் முதலியன. இயற்கையின் கூறுகளான இவ்விரண்டும் ஐம்பூதங்களின் கலப்பைச் சுட்டுகின்றன. இவ்வகையான சாத்தியங்கள் பாடலின் உள்வடிவத்தின் எதிர்வுகளால் எழுகின்றன.

தமிழ்க் கவிதையை அகம் / புறம் கோட்பாட்டைக் கொண்டு ஆராய்ந்தோம். இனி மேற்கத்திய கலாச்சாரத்தைச் சார்ந்த ஸ்பானிய மொழியின் முக்கிய கவிஞரான பாப்லோ நெருடாவின் Naked என்ற கவிதையைக் காண்போம்.

நிர்வாணம்

இந்தக் கதிர்தான் ஓடும் சூரியன்
இந்த வட்டம்தான் கிழக்கு
காற்றில் ஊடுருவக்கூடிய - தூது
அதனுள்ளேயே சிக்கிக் கொள்கிறது
நடுப்பகலானது, உச்சியிலும் நேராகக் குத்திட்டும்
கொடிக்கம்பம் வானத்தைத் தாங்குகையில்
தெளிவான அம்புகள் பறக்கின்றன
மௌனத்திலிருந்து மௌனம் வரையில்
மெல்லிய பறவைகள் காற்றில் மிதந்தபடி
விதியின் கோடுகள் தன்பால் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

'யாயும் ஞாயும்' என்ற குறுந்தொகைப் பாடலில் பல எதிர்வுகளைக் கண்டோம். நெருடாவின் கவிதையிலும் அகம் / புறம் சார்ந்த எதிர்வுகள் உள்ளன. அவை பல்வேறு வகையாக வெளிப்படுகின்றன. 'மௌனத்திலிருந்து மௌனம் வரை' என்பதில் இருவேறு எதிர்வுகளாக மௌனங்கள் வருகின்றன. கவிதையில் கிழக்கு என்ற திசை வெளிப்படையாகச் சொல்லப்படுகிறது. கிழக்கை ஆண் - மௌனம் எனலாம். வெளிப்படையாகச் சொல்லப்படாதது மேற்கு. ஒரு மௌனம் ஆணாக, மற்றொன்று மேற்கென்ற பெண் - மௌனமாகிறது. நடுப்பகல் என வரும் குறியீடு, கிழக்கையும் (ஆண்) மேற்கையும் (பெண்) இணைக்கின்ற புள்ளியாகிறது. அந்தப் புள்ளியே கூடல், சொல்லப்படாத அகத்திணைக் குறிப்பீடு (signified), ஆண் x பெண்ணின் இணைவு. அதைப் புற ரீதியான மொழிக்குறிகளின் உதவியுடன் நெருடா தம் கவிதையில் சாத்தியப்படுத்துகிறார்.

செம்புலப் பெயல் நீராரின் கவிதையிலும் நெருடாவின் கவிதையிலும் எதிர்வுகளின் இணைவுகள் உள்ளன. அவை கீழ்வருமாறு அமைகின்றன:

குறுந்தொகைப் பாடல்



நெருடாவின் கவிதை



குறுந்தொகைப் பாடல் அகத்திணைக்குரிய வரையறையில் கூறப்படுகிறது. அதனால் அதில் நிகழும் கூடல், உடல்களின் கூடலாகிறது. நெருடாவின் கவிதை உடலுக்குப் பதிலியாகக் கவிஞனின் நுட்பமான பார்வையை முன்னிறுத்துகிறது. அதன் வழி, கூடல் சொல்லப்படுகிறது. ஆக, பழந்தமிழ்ப் பாடலும் நெருடாவின் பாடலும் தத்தம் போக்கில் பிரபஞ்ச ஒருமையை உள்ளீடாக மொழிகின்றன.

செம்மண்ணும் மழைநீரும் இணைவதை ஆண் / பெண்ணின் பௌதிகக் கூடல் எனலாம். நெருடாவின் கவிதையில் 'நடுப்பகல்' என்ற கிழக்கு / மேற்கின் கூடல், அ-பௌதிகத் தன்மையுடையது. இயற்கை வெளியின் எதிர்வுகள் இணைவதில், பிரபஞ்ச சங்கமப் புள்ளியாகிறது நடுப்பகல். நிர்வாணம் என்ற இக்கவிதையில் மனிதத்தடம் நேரடியாக இடம் பெறவில்லை. ஆனால், 'கொடிமரம்' என்ற குறியீட்டை வைத்து மனிதர்களின் கலாச்சாரத்தைச் சொல்லியுள்ளார். இதன்மூலம் மறைமுகமாக மனித இருப்பு உணர்த்தப்படுகிறது.

குறுந்தொகைப் பாடலில் உள்ள கூடல் அகத்திணைக்குரியது. இதிலிருந்து நெருடா கவிதையின் கூடல் வித்தியாசப்படுகிறது. இந்த வேறுபாட்டிற்குக் காரணம், நெருடா என்ற கவிஞனின் காலமே. தமிழ்க் கவிதையில் சொல்லப்பட்ட கூடலானது நெருடாவால் பிரபஞ்ச வெளிக்கு விரிக்கப்படுகிறது. தமிழ்ப்பாடலில் உடல் சார்ந்த கூடல், இயற்கைக் கூறுகளின் கலப்புடன் நிகழ்கிறது. நெருடாவின் கவிதையில் பிரபஞ்சம் சார்ந்த கலாச்சாரக் கூடலாக விகசிக்கிறது. இவ்வாறு

அகத்திணையின் பாங்கை வளர்த்தெடுக்கும் முகமாக நெருடாவின் கவிதை அமைகிறது.

நூற்பட்டியல்

Hart, George L. (1979) *Poets of Tamil Anthology*, New Jersey.

Neruda, Pablo (1976) *Poems*, Translated by Alaistair Reid, London.

Ramanujan, A.K. (1985) *Poems of Love and War*, Oxford.

Ramanujan, A.K. (n.d) *The Interior Landscape*, New Delhi.

தமிழவன் (1992) தமிழ்க் கவிதையும் மொழிதல் கோட்பாடும், பெங்களூர்.

தமிழவன் (1994) அகம் / புறம்: எதிர்வும் மாயா - எதிர்வும், கட்டுரை, வித்யாசம் இதழ் 1 , சென்னை.

நச்சினார்க்கினியர் (1986) தொல்காப்பியம் பொருளதிகாரம் முதற்பகுதி உரை (பதிப்பாசிரியர்) கு. சுந்தரமூர்த்தி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், திருப்பனந்தாள் வெளியீடு.

29

மெய்ப்பாட்டியல் நோக்கில் மேற்கத்திய புனைகதை

ஜி. ரமேஷ் - நாகார்ஜுனன்

பண்டைய சமஸ்கிருத நூலான நாட்டிய சாஸ்திரத்தின் ஆறாவது அத்தியாயத்தில் உள்ள சூத்திரங்கள் எட்டு வகையான ரஸங்களைக் (Rasas) கோட்பாடு ரீதியாக விளக்குகின்றன (Natyasastra 6: 1-83). நாடகம் என்கிற நிகழ்கலையின் (Performance) பரிமாணங்களை முன் வைத்து நாட்டிய சாஸ்திரம் நூல் ரஸங்களின் இயக்கம் பற்றிய வலுவான கோட்பாட்டைக் கட்டி எழுப்புகிறது. இந்தக் கோட்பாடானது அனைத்திந்திய சமஸ்கிருதக் கலை இலக்கிய மரபை இன்றுவரை பாதிப்பதாக இருந்து வருகிறது.

நாட்டிய சாஸ்திரம் நூலில் விளக்கப்படுகிற எட்டுவகை ரஸங்கள் பின்வருமாறு; சிருங்காரம், ஹாஸ்யம், . கருணை, ரெளத்திரம், வீரம், பயங்கரம், பீபத்ஸம் மற்றும் அற்புதம். இவை முறையே காதல், நகைப்பு, சோகம், கோபம், சக்தி, பயம், அருவருப்பு மற்றும் ஆச்சரியம் என்பதான பிரதான பாவங்களைச் (Stayibhavas or Dominant states) சுட்டுவதாக அமைகின்றன. இசைபாடும் குரலின் நிலைகளைப் போன்ற இவை தவிர, தோன்றி மறைந்து விடுகிற (transitory) இயல்புடைய உணர்வுகளாக முப்பத்தி மூன்றையும் நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடுகிறது. வியாபிசாரி பாவங்கள் (Vyabhichari Bhavas) எனப்படுகிற இவையாவன: உற்சாகமின்மை, பலவீனம், சந்தேகம், பொறாமை, போதை அல்லது மயக்கம், அயர்வு, சோம்பல், தளர்வு, பதற்றம், கவனமின்மை, நினைவு, திருப்தி, வெட்கம், முரண்மை, மகிழ்ச்சி, கிளர்வு அல்லது ஆரவாரம், வியப்பு, திமிர், கலக்கம் அல்லது நம்பிக்கையின்மை, அவசரம், தூக்கம், வெறியாடல் அல்லது நடுக்கம், கனவுநிலை, தூக்கம் விழித்தல், ஆத்திரம், மறைத்தல் அல்லது ஏமாற்றுதல், கொடூரம் ஒப்புமை, பிணி, பைத்தியம், மரணம், பயம் மற்றும் சிந்தனை வசப்படுதல்.

நிகழ்கலையின்போது ரஸங்கள் இயக்கம் பெறுவதை நாட்டிய சாஸ்திரம் விளக்கிச் செல்கிறது. நாடகத்தின் குறிப்பிட்ட ஓரிடத்தில் ஏதேனும் ஒரு பிரதான உணர்வு முனைப்படுகிறது. அல்லது வடிகட்டப்படுகிறது எனலாம். அந்த

உணர்வுடன் ஒத்துப்போகிற சில உணர்வுகள் தோன்றி மறைவதாக வருகின்றன. நாடகம் பார்ப்பவரிடத்தில் மேற்கண்ட உணர்வுகள் ஒன்றிவிடும் தறுவாயில் அவற்றுக்கு ஏற்றதான ரஸானுபாவத்தை அவர் பெறுகிறார். சமைக்கப்படுகிற பொருட்கள் சமையலின்போது ஒன்றிவிடுவதால் குறிப்பிட்ட அந்தப் பதார்த்தத்தின் தனித்த ருசி அல்லது சுவை அமைவதைப்போல ரஸானுபவத்தின் இயக்கம் (Process) அமைகிறது.

உதாரணமாக, சிருங்கார ரஸத்தை எடுத்துக் கொள்ளலாம். இதற்கான பிரதான உணர்வு காதல். காதல் என்பது கூடலின் (Sexual union) மூலமாகவும் பிரிவு (Separation) மூலமாகவும் உணர்த்தப் பெறலாம். இவற்றில் கூடலுக்கான நிகழ்கலைச் சூழலாக வஸந்தகாலம், மாலைப் பொழுது, மாளிகைத் தோட்டங்கள் மற்றும் அணிகலன்கள் ஆகியவற்றை நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடுகிறது. கூடல் நடக்கும்போது பயம், சோம்பல், கொடூரம், அருவருப்பு ஆகிய உணர்வுகளுக்கு இடமில்லை. இதர உணர்வுகள் வர முடியும். பிரிவின்போது பிரதான உணர்வாகக் காதல் இருந்தாலும் பதற்றம், சோர்வு, மயக்கம் முதலான உணர்வுகள் முதன்மை பெறுகின்றன.

இப்படி எட்டுவகை ரஸங்களுக்கான பிரதான உணர்வுகள் நிகழ்கலைச் சூழல்கள் மற்றும் தோன்றி மறைகிற உணர்வுகளை நாட்டிய சாஸ்திரம் பின்வருமாறு வகைப்படுத்துகிறது.

1. சிருங்காரம்

பிரதான உணர்வு	: காதல்
நிகழ்கலை வகை	: பேச்சு, உடை / அணிகலன்கள், செயல் தோன்றி மறையும் உணர்வுகள்.
கூடல்	: பயம், சோம்பல், கொடூரம், அருவருப்பு நீங்கலான இதர உணர்வுகள்.
பிரிவு	: பதற்றம், சோர்வு, மயக்கம், பிணி முதலானவை.

2. ஹாஸ்யம்

பிரதான உணர்வு	: நகைப்பு
நிகழ்கலை வகை	: உடற்கூறு, உடை / அணிகலன்கள், செயல்.
தோற்றம்	: தன் கண்ணும் பிறர் கண்ணும் தோற்றமுறும்
சூழல்	: உயர்ந்தோர், இணையானோர், தாழ்ந்தோர்

ஆகிய மூவகை மனிதர்களிடமும் பிறக்கும்.

தோன்றிமறையும் உணர்வுகள் :சோம்பல், மறைத்தல் / ஏமாற்றல், கனவு, பொறாமை முதலியன.

3. கருணை

பிரதான உணர்வு : சோகம்

நிகழ்கலைச் சூழல் : உடற்கூறு, உடை / அணிகலன்கள், செயல்

தோன்றிமறையும் உணர்வுகள் : ஆத்திரம், சக்தி, கிளர்வு முதலியன.

4. வீரம்

பிரதான உணர்வு : சக்தி

தோற்றம் : உயர்ந்தோரிடம் மட்டும்

நிகழ்கலைச் சூழல் : கொடைச்செயல், கடமை நிறைவேற்றல், எதிரியுடன் பொருதுதல்.

தோன்றி மறையும் உணர்வுகள் : திருப்தி, கிளர்வு, நினைவு, கோபம் முதலியன.

5. பயங்கரம்

பிரதான உணர்வு : பயம்

நிகழ்கலை வகை : போலி பயம், தவறு இழைத்ததால் பயம், பொருள் குறித்துத் தோன்றும் பயம்.

தோன்றி மறையும் உணர்வுகள் : பதற்றம், நடுக்கம், கிளர்வு, மரணம் முதலியன.

6. பீபத்ஸம்

பிரதான உணர்வு : அருவருப்பு

நிகழ்கலை வகை : குமட்டல், சாதாரணம், கிளர்ச்சி

தோன்றி மறையும் உணர்வுகள் : நடுக்கம், மயக்கம், கிளர்வு, பிணி, மரணம் முதலியன.

7. சுற்பிதம்

பிரதான உணர்வு : வியப்பு

நிகழ்கலைச் சூழல் : இறை சார்ந்தது, உலகு சார்ந்தது

தோன்றிமறையும் உணர்வுகள் : கிளர்வு, நடுக்கம், ஆச்சரியம், அவசரம் முதலியன.

தொல்காப்பியம் நூலின் பொருளதிகாரத்திலும் இதேபோல எட்டுவகையான மெய்ப்பாடுகள் விளக்கப்படுகின்றன. அவையாவன; நகை (ஹாஸ்யம்), அழுகை (அவலமும் கருணையும்), இளிவரல், மருட்கை (அற்புதம்), அச்சம், பெருமிதம் (வீரம்), வெகுளி (ரௌத்திரம்) மற்றும் உவகை (மகிழ்ச்சி). நாட்டிய சாஸ்திரத்தில் விளக்கப்படுகிற எட்டுவகை ரஸங்களைப் போலவே உள்ளத்தில் தோன்றுகிற நிகழ்ச்சியைக் குறிப்பதாக உடலில் தோன்றும் வேறுபாடுகளாக மெய்ப்பாடுகளைப் பேராசிரியரின் உரையானது விவரித்துச் செல்கிறது. (*தொல்காப்பியம்* 249 - 259,* *தொல்காப்பியம் - பொருளதிகாரம் பேராசிரியர் உரை* 1985 : 8-39)

தொல்காப்பியம் கூறுகிற மெய்ப்பாடுகளில் நகை, அழுகை, அற்புதம், அச்சம், வெகுளி ஆகியவை நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடுகிற ரஸங்களை ஒத்திருப்பனவாகத் தெரிகின்றன. உவகை என்பது காமம் போன்றதன் விளைவான மகிழ்ச்சியைக் குறிப்பதால் அது சிருங்கார ரஸத்துக்கு அருகில் வந்துவிடுவதாகவும் கூறமுடியும். இருந்தாலும் இரண்டு நூல்கள் கூறும் ரஸங்கள் / மெய்ப்பாடுகளுக்கு இடையில் மிக அடிப்படையான வித்தியாசங்கள் இருக்கின்றன. அவற்றை அறிவதற்குத் தொல்காப்பியம் மெய்ப்பாடுகளை எப்படி வகைப்படுத்துகிறது என்பதைப் பேராசிரியர் உரை வழியாகக் காண்போம்.

1. நகை

எள்ளல் (இகழ்ச்சி), இளமை, பேதைமை (அறியாமை), மடமை என்று நான்கு நிகழ்வுகள்வழிக் குறிக்கப்படும். இவை நான்கும் தன்கண் நிகழ்வனவாகவும் பிறர்கண் நிகழ்வனவாகவும் இயக்கம் பெறும்.

2. அழுகை

இளிவு (இகழப்பட்டு எளியராதல்), இழவு (சுற்றமும் இன்பமும் இழந்துபடுதல்), அசைவு (புகழை இழத்தல்), வறுமை (இன்பம் துய்க்க இயலாத

பற்றுள்ளம் கொண்டிருத்தல்) என நான்கு நிகழ்வுகள் வழிக் குறிக்கப்படும். இவை நான்கும் தன்கண் நிகழ்வதாகவும் பிறர்கண் நிகழ்வதாகவும் இயக்கம் பெறும்.

3. இளிவரல்

மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என நான்கு நிகழ்வுகள்வழிக் குறிக்கப்படும். இவையும் தன்கண் நிகழ்வதாகவும் பிறர்கண் நிகழ்வதாகவும் இயக்கம் பெறும்.

4. மருட்கை

புதிதாகக் காண்பதும், மிகவும் பெரியதும், இறக்கும்போது சிறிதாகி விடுவதும், ஒன்று இன்னொன்றாகத் திரிவதுமான நிகழ்வுகள்வழிக் குறிக்கப் பெறும். இவையும் தன்கண் தோன்றியும் பிறர்கண் தோன்றியும் பிற பொருட்கண் தோன்றியும் இயக்கம் பெறும்.

5. அச்சம்

அணங்கு என்பதான பூதம், பாம்பு முதலான பதினெட்டுக் கணங்களையும் விலங்குகளையும் கள்வர்களையும் இறை எனப்படுகிற தந்தையர், ஆசிரியர், அரசர் ஆகியோரையும் குறித்து அச்சம் தோன்றுகிறது.

6. பெருமிதம் (வீரம்)

கல்வியுடைமை, தறுகண் (அஞ்சாமை), இசைவு (புகழ்), கொடைத்தன்மை ஆகிய நான்கு நிகழ்வுகள்வழிக் குறிக்கப்படுவதாகும். இவை தன்கண் தோன்றிய பொருள் பற்றித் தோன்றுவதாகும். மேலும்,

பல்லிருங் கூந்தன் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைக என் தாரே

என்ற பாடலில் (*புறநானூறு 73*) காமம் பெருமிதம் குறித்து வருவதைக் கூறுகிறார் பேராசிரியர்.

7. வெகுளி (ரௌத்திரம்)

உறுப்புகள் குறைபட்டுப் போவதான சினமும், தாரமும் சுற்றமும் கேடு சூழ்ந்து அழிவதனால் ஆன சினமும், அலைதலால் நினைவாகத் தங்கிவிட்ட சினமும், அறிவும் புகழுமானவற்றைக் கொன்றுரைக்கும் சினமும், வெகுளியைக் குறிக்கின்றன. வெகுளி என்பது தன்கண் தோன்றுவதாகவும் பிறர்கண் தோன்றிய பொருள்பாற்பட்டதாகவும் அமைகிறது.

8. உவகை (மகிழ்ச்சி)

செல்வம் துய்த்தல், புலன்கள் மூலமான அறிவுடைமை, காமப்புணர்ச்சி மற்றும் விளையாட்டு ஆகிய நிகழ்வுகள்வழிக் குறிக்கப்படுவது மகிழ்ச்சி. ஆனால் இந்த மகிழ்ச்சியை

அல்லல் நீத்த உவகை

என்கிறது தொல்காப்பியம். பிறர் துன்பங்கண்டு வருவது மகிழ்ச்சி அல்ல என்று பேராசிரியர் இதை அர்த்தப்படுத்துகிறார். உவகையும் தன்கண் தோன்றுவதாகவும் பிறர்கண் தோன்றுவதாகவும் வரும் என்கிற பேராசிரியர்

தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்

என்கிற குறட்பா மூலம் அதை விளக்குகிறார்.

நாட்டிய சாஸ்திரம் நூலில் தோன்றி மறைகிற உணர்வுகளாக 33 தரப்பட்டு ஒவ்வொரு ரஸத்துக்குமான உணர்வுகள் சூழலுக்கு ஏற்றவாறு பட்டியலிடப்பட்டதைக் கண்டோம். தொல்காப்பியம் நூலிலும் எட்டு மெய்ப்பாடுகளும் ஒவ்வொரு மெய்ப்பாட்டுக்கான நான்கு சூழல்களும் என மொத்தம் 32 நிலைகள் தரப்பட்டிருக்கின்றன. எனவே இரண்டு நூல்களுக்குமான பொதுவான உணர்வுகளையும் சூழல்களையும் நாம் ஒப்புநோக்க முடியும். இருந்தாலும் தொல்காப்பியம் கூறும் மெய்ப்பாட்டியலானது நாட்டிய சாஸ்திரம் கட்டியெழுப்புகிற ரஸானுபவக் கோட்பாட்டிலிருந்து பின்வரும் அம்சங்களில் வித்தியாசப்படுகிறது:

1. வரிசைப்படுத்தப்படுகிற முறை (Ordering)



தமக்குள் தொடர்புடைய ரஸங்களும் மெய்ப்பாடுகளும் மேற்கண்ட பட்டியலில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. இருந்தாலும் வரிசை என்பது மிகவும் வேறுபட்டதாக இருப்பதைக் காணலாம். இதை ஆராய ரஸங்களின் தோற்றம் பற்றி இரண்டு நூல்களும் கூறுவதை வாசிக்க வேண்டியிருக்கிறது.

சிருங்காரம், ரௌத்திரம், வீரம், பீபத்ஸம் ஆகியவை முதல் ரஸங்கள் எனவும் ஹாஸ்யம், கருணை, அற்புதம், பயனகம் ஆகியவை இவற்றிலிருந்து முறையே

விளைந்ததால் முதல் ரஸங்களுக்கு அருகே இருக்கின்றன என்றும் நாட்டிய சாஸ்திரம் குறிப்பிட்டுச் செல்கிறது. தொல்காப்பியத்துக்கு உரை எழுதுகிற பேராசிரியரோ

> ...விளையாட்டுப் பொருளாகிய நகையை முன் வைத்தான் அதற்கு மறுதலையாகிய (opposite) அழுகையை அதன்பின் வைத்தான். இளிவரல் அதன்பின் வைத்தான்.... அழுகையும் இளிவரலுடன் இயைபு உடைமையின்; தான் இளிவந்து; பிறிதோர் பொருளை வியக்கும். ஆதலின் இளிவரலின் பின் வியப்பு வைத்தான். வியப்புப் பற்றியும் அச்சம் பிறத்தலின் அச்சத்தை அதன்பின் வைத்தான். அச்சத்துக்கு மறுதலையாகிய வீரத்தை அதன்பின் வைத்தான். அவ்வீரத்தின் பயனாகிப் பிறர்க்கு வரும் வெகுளியை அதன்பின்னே வைத்தான். வெகுளிக்கு மறுதலை ஆகலானும் எல்லாவற்றினும் ஈண்டு ஓதுதற்குச் சிறந்தது ஆகலானும் முதற்கண் ஓதிய நகைக்கு இயைபு உடைத்து ஆகலானும் உவகையை ஈற்றுக்கண் வைத்தான்"

என்கிறார். இதிலிருந்து தொல்காப்பியம் மெய்ப்பாடுகள் பற்றிய தனித்த தோற்றவியல் -கோட்பாடு (theory of origins) கொண்டிருப்பது தெரிய வருகிறது. இது குறித்த பிரத்தியேகமான ஆய்வு தேவை.

2. பட்டியல் / சட்டக அமைப்புகள்

நாட்டிய சாஸ்திரம் நூல் குறிப்பிட்ட ஒரு ரஸத்துக்கான பொருத்தமான தோன்றி மறைகிற உணர்வுகளைப் பட்டியலிடுவதைக் கண்டோம். இந்தப் பட்டியலில் அந்தந்த ரஸத்துக்கான தோன்றி மறையும் உணர்வுகள் சில முதன்மை பெறுகின்றன. சூழலின் பொருத்தப்பாடு கருதி இதர உணர்வுகள் வரக்கூடும்; வர முடியாமலும் போகலாம் என்பதையும் கண்டோம். எனவே பிரதானமாகவும் பிரதானமானவற்றை ஒத்தும் வேறுபட்டும் அமைகின்ற உணர்வுகளின் loose listing அல்லது loose array என்பதாக நாட்டிய சாஸ்திரம் தருகிற பட்டியலைப் பார்க்க முடியும்.

தொல்காப்பியமோ ஒவ்வொரு மெய்ப்பாட்டுக்குமாகச் சூழல் சார்ந்த சட்டகம் (framework) ஒன்றை நிறுவுகிறது. இந்தச் சட்டகத்திலிருந்து விலகிச் செல்கிற உணர்வுகளும் உண்டு என்பதைக் காமம் வழிக் குறிக்கப்பட்ட பெருமிதத்தைக் கொண்டு உணர முடிகிறது. தொல்காப்பியச் சூத்திரத்தில் கூறப்படாத இதைப் பேராசிரியர் தம் உரையில் சிலாகித்து ஏற்கிறார். இதிலிருந்து

மெய்ப்பாடுகளுக்காக நிறுவப்படுகிற சட்டகங்கள் இறுக்கமாகக் கையாளப்பட வேண்டிய தேவையில்லை என்பது புரிகிறது.

3. தன் / பிறர் சட்டக அமைப்பு

நாட்டிய சாஸ்திரம் நூலானது ஹாஸ்ய ரஸத்தை விளக்கும்போது மட்டும் நகைப்பு, தன்கண் தோன்றுவதாகவும் பிறர்கண் தோன்றுவதாகவும் (Self-centred and others - centered) நிகழும் என்று அறிவிக்கிறது. இதர ரஸங்களை விளக்கும் போது இத்தகைய அணுகுமுறையை அது மேற்கொள்வதில்லை. நிகழ்கலையின் இயக்கத்தைப் பொறுத்து இத்தகைய அணுகுமுறையின் தேவை, தேவையின்மை மேற்கொள்ளப்படலாம் என்று மட்டுமே அனுமானிக்க முடிகிறது.

ஆனால் அச்சம் தவிர்த்த இதர மெய்ப்பாடுகளில் தன்கண் தோற்றம், பிறர்கண் (தோன்றிய பொருள் குறித்த) தோற்றம் என்பதான வலுவான அடிப்படையைப் பேராசிரியர் உரை விளக்கிச் செல்கிறது. அச்சம் என்ற உணர்வும் கூட தன்கண் தோன்றாது பிற பொருள் குறித்துத் தோன்றுவதாகப் பேராசிரியர் விளக்குகிறார். ஆக, மெய்ப்பாடுகளின் பொதுவான ஓர் அம்சமாகத் தன்கண் / பிறர்கண் தோற்றம் பெறுகிற உணர்வுகள் தனித்தனியானவை அல்ல. உதாரணமாக நகை என்கிற மெய்ப்பாட்டைத் தன்கண் தோன்றும் நகை பிறர்கண் தோன்றும் நகை என்ற தனித்தனியான இரண்டாகப் பார்த்தல் தவறு. அப்படிப் பார்த்தால் இவை இரண்டும் நகை என்ற மெய்ப்பாட்டின் இரு கிளைகளாகக் கொள்ளப்படும். அப்போது



தன் பிறர்

தன்கண் தோன்றும் நகைக்கும் பிறர்கண் தோன்றும் நகைக்கும் முந்தைய குணரூபமான "நகை" என்ற ஒன்றைச் சுட்ட வேண்டியிருக்கும்.

மாறாகத் தன்கண் தோன்றும் நகையும் பிறர்கண் தோன்றும் நகையும் ஒரு சட்டக (framework) நிலையில் உறவு கொண்டவை என்று கொள்ள வேண்டும். இவ்விரண்டும் சமச்சீராகவும் பரஸ்பர அளவிலும் (Equanimity or balanced or mutual) இயங்குபவை என்று கொள்ளலாம். இத்தகைய

தன் பிறர்

சமச்சீரானதும் பரஸ்பரமானதுமான பொதுச் சூழலைச் சுட்டுவதாக இயக்கும் சட்டகமாகத் தன் / பிறர் (Self/Others) என்பதைக் கொள்ளலாம்.

சமஸ்கிருத ரஸானுபவ மரபில் தன் / பிறர் என்ற இந்தச் சட்டகம் முழுமையாக இல்லை என்பதால் தமிழ் மெய்ப்பாட்டு மரபு தன் போக்கில் சமஸ்கிருத மரபை வாசித்து இந்தப் புதிய சட்டகத்தை உருவாக்கிக் கொண்டது எனலாம். மெய்ப்பட்டியல் மரபில் உருவான சொல்லாடல்கள் - மாற்றம் (Shift in cultural discourse) என்று இதைக் கூறலாம். இதை விளக்க ஏற்கெனவே உதாரணமாகக் காட்டப்பட்ட குறட்பாவையே மீண்டும் காண்போம்.

தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்

தன்கண் மட்டுமன்றி உலகின் (பிறர்) கண்ணும் தோன்றும்போதே காமம் வழியாக உவகை குறிக்கப்படுகிறது என்று பேராசிரியர் சுட்டிக் காட்டுகிறார். உவகை மெய்ப்பாட்டை விளக்கும் தொல்காப்பியர் சூத்திரம் பின்வருமாறு:

செல்வம் புலனே புணர்வு விளையாட் டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே

புலன்களால் வரும் அறிவுடைமை புணர்ச்சி நிலையை அடைய வேண்டும் என்றால் தன் - பிறர் என்பதான பரஸ்பரத்தன்மை கொண்ட சட்டகம் இயங்கியாக வேண்டும். அப்போதுதான் உவகை என்ற மெய்ப்பாடு குறிக்கப்படும் என்று இதை அர்த்தப்படுத்தலாம். "அல்லல் நீத்த உவகை" என்பதைப் பிறர் துன்பங்கண்டு வருவது உவகையல்ல என்று பேராசிரியர் கூறிச் செல்வதை ஏற்கெனவே கண்டோம். தன் / பிறர் என்ற சட்டக இயக்கத்தின் இன்னொரு பரிமாணமாக இதைக் கொள்ளலாம்.

மேற்கண்ட விவாதத்திலிருந்து,

1. சமஸ்கிருத மரபும் தொல்காப்பியம் முதலாகத் தமிழில் வருகிற மெய்ப்பாட்டியல் மரபும் வெவ்வேறானவை.
2. தமிழ் மரபானது அனைத்திந்திய சமஸ்கிருத மரபின் மிக வித்தியாசமான எதிரொலியாகத் தன் போக்கில் இயக்கம் கொள்கிறது.
3. இவற்றுக்கிடையிலான வித்தியாசமானது கலாச்சார அடிப்படையிலான மாற்றங்களுக்குச் (Shifts and transformations) சொல்லாடல்கள் அளவில்

> (Discourse) இட்டுச் சென்றிருக்கிறது. அதில் ஒன்றுதான் தன் / பிறர் என்பதான சட்டகம் பற்றிய பிரக்ஞை.

என்ற முடிவுகளுக்கு வர முடிகிறது.

தொல்காப்பிய மெய்ப்பாட்டியலிலிருந்து பெறப்பட்டுள்ள தன் / பிறர் என்ற இந்தச் சட்டகத்தை இன்னும் விரிவாகக் காண்போம். உயர் திணையில் தன் / பிறர் என்பதாக உள்ள இந்தச் சட்டகம் அஃறிணையில் தன் / பிற - அதாவது தன் / அது (அவை), தன் / உலகு என்பதாக நீட்சி பெற முடியும். மேலும், இந்தச் சட்டகம் தன் / நின் என்று முன்னிலையாகவும் தன் / பிறர் என்று படர்க்கையாகவும் பரவிச் செல்கிறது. ஆக, தன்மை - முன்னிலை - படர்க்கை என்பதான களரீதியான பரிமாணம் (Spatial dimension) கொண்டதாக இந்தச் சட்டகத்தைக் கூறமுடியும் (ஆங்கிலத்தில் இதே நீட்சியானது First person, second person, third person என்கிற சங்கிலித்தொடர் 'க்யூ' பரிமாணம் கொண்டிருப்பதைக் காணலாம்).

களப் பரிமாணத்தைப் போலவே வேறு பரிமாணங்கள் கொண்டதாகவும் இதே சட்டகத்தை விரிக்க முடியும். தன் / பிறர் என்பது மொழியியல் அடிப்படைச் சட்டகமாகும். மொழி என்பதன் பரஸ்பரத் தன்மை கொண்ட பரப்பில் 'தானும்' 'பிறரும்' உருவாகவும் இணையவும் முரண்படவும் இயங்கவும் முடிகிறது. அடுத்து, தன் / பிறர் என்பது நீட்சிபெற்றுத் தன்னுடைய / பிறருடைய என்பதாக மாறுகிறது. தன்னுடைய இடம் / பிறருடைய இடம் என்பதாக இதை விரித்தால் உள்ளே / வெளியே என்றாகிறது. இதே சட்டகத்தை இல்லம் / சமூகம் என்பதாகவும் ஏ.கே.ராமானுஜன் குறிப்பிடுகிறார் (Ramanujan 1985: 262). சமூகப் பரப்புக்குள் இத்தகைய சட்டகம் இயங்குகிறது. இதையே சமூகம் / இயற்கை என்ற சட்டகமாகப் பிரபஞ்சப் பரப்பில் விரித்துப் பார்க்க முடியும். இப்படி விரித்துப் பார்ப்பதன் மூலம் தமிழ்ப் படைப்புக்களை மட்டுமல்லாது இதர கலாச்சாரங்களில் தோன்றும் படைப்புக்களையும் வாசிப்பதற்கு இதே சட்டகத்தைப் பயன்படுத்த முடியும். மேற்கத்திய சமூகத்தில் தோன்றித் தற்போது தமிழிலும் இதர இந்திய மொழிகளிலும் இயங்கிக் கொண்டிருக்கும் சிறுகதை, நாவல் போன்ற வடிவங்களை அணுகவும் இந்தச் சட்டகத்தைப் பயன்படுத்த முடியும். தன் / பிறர் என்பதான இந்தச் சட்டகம் உலகு தழுவிய சிந்தனையின் பருண்மையான ஒரு வடிவமாக இருப்பதால்தான் இக்கையாளுதல் சாத்தியமாகிறது. சங்க இலக்கியத்தை வாசிப்பதற்கு இந்தச் சட்டகத்தைச் சுழற்றும்போது அகநானூற்றையும் குறுந்தொகையையும் நம்மால் அணுக முடிகிறது. சங்க இலக்கியத்துக்கு உரை எழுதியவர்கள் நமக்காக இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய வாசிப்பின் போது சங்க இலக்கியத்துக்கான திணை உலகம் உயிர்பெற்று விடுகிறது. இந்தத் திணை உலகம் ஏதோ ஒரு குறியீட்டை மட்டும் கொண்டதல்ல. அகம் /

புறம் என்பதாக விரியும் திணை உலகத்தை ஒரு குறியீட்டுமொழி எனலாம். உதாரணமாகக் குறிஞ்சி என்பது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும் பூ மட்டுமல்ல; அதற்கான முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்று நீட்சி பெறுகிறது. இதுவே புறத்தில் வெட்சி என்பதாக மாறுகிறது. இவ்வாறான ஐந்திணைக் கோட்பாடானது சங்க இலக்கியத்துக்கான குறியீட்டு ரீதியான மொழி ஒன்று இருப்பதைக் காட்டுகிறது. தமிழில் இருப்பது போன்ற குறியீட்டு மொழிகள் இதர கலாச்சாரங்களிலும் உண்டு. எனவே தமிழல்லாத இதர கலாச்சாரங்களில் உருக்கொண்ட படைப்புக்களைத் தன் / பிறர் என்ற சட்டகத்தை விரித்தும் சுழற்றியும் வாசித்தால் அந்தந்தக் கலாச்சாரங்களின் குறியீட்டு மொழிகள் உயிர்பெற்று இயங்க முடியும் என்று கொள்ளலாம்.

தன் / பிறர் என்ற சட்டகம் உலகு தழுவிய சிந்தனையின் ஒரு பருண்மையான வடிவம் என்பதற்கு ஆதாரங்கள் நிறைய. இதே சட்டகத்தை மேற்கத்திய உலகில் அண்மையில் தோன்றிப் பெரும் வீச்சை ஏற்படுத்திய phenomenology என்கிற நிகழ்வியல் தத்துவமும் existentialism என்கிற இருத்தலியல் சார்ந்த படைப்புக்களும் கையாள்வதைப் பார்க்க முடிகிறது.

தன் / பிற(ர்) என்ற இந்தச் சட்டகம் தான் / உலகம் பற்றிய முரண்மையின் விவரிப்பாக ஜீன்-பால் சார்த்தரின் (Jean - Paul Sartre) ஆரம்பகாலத் தத்துவ நூல்களில் உருக்கொள்கிறது. அவருடைய La Nausee என்கிற புகழ்பெற்ற நாவலில் தன்/ பிற(ர்) என்கிற சட்டகத்தில் 'தான்' என்பது ஜடத்தன்மை கொண்ட அஃறிணைப் பொருளாகவும் 'தான்' - அற்ற பிறிதான உலகின் சிறுதுகளான கடற்கரைக்கல் 'தானை' மிரட்டிக் குமட்டல் அடையச் செய்யக்கூடிய ஒன்றாகவும் விவரிக்கப்படுகின்றன. சார்த்தருடைய புகழ்பெற்ற (Huis Clos) மீளமுடியுமா என்ற நாடகத்திலும் தன் / பிறர் என்கிற சட்டகம் முரண்நிலையில் வைத்துக் கையாளப்படுகிறது நாடகத்தில் மரணத்துக்குப் பிறகு ஓர் ஆணும் இரண்டு பெண்களும் ஓர் அறைக்கு வருகிறார்கள். அறை தாழிடப்பட்டதால் ஒருவரை ஒருவர் எதிர்கொண்டாக வேண்டிய நிலை. ஆக. இங்கே உள்ளே / வெளியே என்பதாக நாம் அறிந்துள்ள சட்டகத்திலிருந்து 'வெளியே' என்பது கழற்றிவிடப்படுகிறது. அறைக்கு 'உள்ளே' தன் / பிறர் என்கிற சட்டகமானது இயக்கம் பெறுகிறது. ஒவ்வொருவரும் பிறருடன் கொண்டுள்ள பாலியல் (காமம்) மற்றும் மனித உறவுகள் முரண் நிலையில் திரிகின்றன. மரணத்துக்குப் பிறகு அடைகிற நரகத்தைவிடவும் கொடூரமானதொரு நரகத்தை அவர்கள் அனுபவிக்கிறார்கள். 'மற்றவர்கள் என்றாலே நரகம்' (Hell is Others) என்ற புள்ளியில் நாடகம் நின்று போகிறது.

தன் / பிறர் என்ற சட்டகத்தை முரண்நிலையில் மட்டுமல்லாமல் இணைவு நிலையிலும் வைத்து அணுகுவதாகச் சார்த்தரின் பிற்காலத் தத்துவ ஆராய்ச்சிகள் அமைதந்திருப்பதைக் குறிப்பிட வேண்டும். சார்த்தரின் காலத்தில் நிகழ்வியல் நோக்கில் தத்துவ ஆய்வுகளை மேற்கொண்டவர் மாரிஸ் மெர்லோ பாண்டி (Maurice Merleau Ponty). தன் / பிறர் என்கிற சட்டகத்தை மொழியின் பரப்பாகவும் உள் அமைப்பாகவும் ஆராய்ந்து பார்க்கிறார் இவர். புதுமையான இந்த ஆய்வுகளை ஒட்டி மொழிக்கு அடுத்தபடியான புலப்பிரதேசங்களான பார்வை (Perception), உடலுணர்வு (Sensuality) ஆகியவற்றுக்குமாகத் தன் / பிற(ர்) என்ற சட்டகத்தை விரித்து ஆராய்கிறார்.

மேற்கத்திய சூழலில் தோற்றம் பெற்று வந்திருக்கும் இருத்தலியல் படைப்புக்களின் 'மெய்ப்பாடுகள்' சமஸ்கிருத, தமிழ்க் கலாச்சார நூல்கள் குறிப்பிடுகிற ரஸங்கள் மெய்ப்பாடுகளிலிருந்து நிரம்பவும் வேறுபட்டு இருப்பதைக் காணலாம். அதாவது பதற்றம், குமட்டல், பயம் போன்றதான உணர்வுகளைக் கொண்ட இருத்தலியல் படைப்புக்களின் குறியீட்டு மொழியானது பிரத்தியேகமான ஒன்றாகத் தெரிகிறது. நாட்டிய சாஸ்திரத்தில் ரஸங்கள் உருவாகி அர்த்தம் பெறுகிற குறியீட்டு மொழியைப் போலச் சங்க இலக்கியத்தில் இயக்கம் கொள்கிற ஐந்திணைக் கோட்பாடு சுட்டுகிற குறியீட்டு மொழியைப் போல, இது இன்னொரு குறியீட்டுமொழி. இதைப் புரிந்துகொள்ளாமல் இருத்தலியல் படைப்புக்களின் உணர்வுகளைச் சமஸ்கிருதப் படைப்புக்களில் வருகிற ரஸங்களுடன் பொருத்திப் பார்த்து ஆய்வுகள் செய்யப்படுமாயின் அது தவறு. உதாரணமாக, சார்த்தரின் La Nausee நாவலின் பிரதான உணர்வான குமட்டலை நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் பீபத்ஸ-அதாவது அருவருப்புடன் பொருத்திப் பார்த்து ஆய்வுகள் செய்யப்படலாம். உணர்வுகளை மனோபாவரீதியாக மட்டும் புரிந்து கொள்வதால் ஏற்படுகிற ஆபத்து இது. மாறாக, உணர்வுகளைக் குறியீட்டு மொழியின் பிரிக்க முடியாத கூறுகளாக வரையறுக்கிறது தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் மரபு. இந்த மரபானது தன் / பிறர் என்ற சட்டகத்தைக் கொண்டு சமஸ்கிருத மரபின் ரஸங்களைத் தன் போக்கில் வாசித்ததை ஏற்கெனவே கண்டோம். இந்த வாசிப்பு மேலே விளக்கப்பட்ட தமிழின் குறியீட்டு மொழிக்கேற்ப அமைந்திருந்ததையும் கண்டோம். இந்த மெய்ப்பாட்டியல் மரபின் வழிசென்றால் உணர்வுகளை மனோபாவ ரீதியாக மட்டுமே அணுகுகிற ஆபத்து நிகழ்வதில்லை.

ஆக, ஒன்றோடு ஒன்று தொடர்புடைய மூன்று பின்வரும் விஷயங்களைக் கோட்பாடு உருவாக்கமாகக் கொள்ளலாம்.

1. உள்ளே / வெளியே என்கிற சட்டகம்

2. தன் / பிற(ர்) என்பதான சட்டகம்

3. இவ்விரு சட்டகங்களாலும் இயக்கம் பெறும் குறியீட்டுமொழி.

இவற்றைப் பதிவுசெய்து கொண்டு செய்முறை விமர்சனத்துக்குப் போகலாம். இதற்கு ஆல்பெர் காம்யு என்ற பிரெஞ்சு எழுத்தாளரின் L' Etranger என்ற நவீன நாவலை எடுத்துக் கொள்வோம் (Camus 1942). புகழ்பெற்ற இந்த நாவல் ஆங்கிலத்தில் The Outsider என்றும், தமிழில் *அந்நியன்* என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. (காம்யு 1980: நாவலின் பகுதிகள் தமிழ் மொழி பெயர்ப்பிலிருந்து எடுத்தாளப்படுகின்றன). உலகெங்கும் பலத்த சர்ச்சைக்கு உள்ளாகி, இருத்தலியல் கோட்பாடு சார்ந்ததாகவும் வாழ்க்கையின் அபத்தத்தைக் குறிப்பதாகவும் இந்த நாவல் பலவாறாக அர்த்தப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழிலும் கூட ஒரே சமயத்தில் சிக்கலானதாகவும் தெளிவாகவும் தெரிகிற இத்தகைய நாவலில் கோட்பாட்டைப் பொருத்திப் பார்க்க முடிந்தால்தான் கோட்பாடு வளம்பெறும்.

இனி ஆய்வுக்கு முன்பு நாவல் பற்றிய சிறிய அறிமுகம்: நாயகன் மெர்சோவின் பார்வையில் நாவல் சொல்லப்படுகிறது. அவன் அல்ஜீரியாவில் வாழும் பிரெஞ்சுக்காரன். நெருங்கிப் பழகுபவர்களிடம் கூட அவனுக்கு உறவு ஏதும் தொடர்ந்து இருப்பதில்லை; தோன்றும் உணர்வுகள் சிற்சில கணங்களில் மறைந்துவிடுகின்றன. கடற்கரையில் குளிக்கப்போகும்போது வலுவான காரணம் ஏதுமின்றி அரேபியன் ஒருவனை அவன் கொலை செய்து விடுகிறான். கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெறும்போது அவனுக்கு அதில் நாட்டமிருப்பதில்லை. அவனுடைய 'அசாதாரண' வாழ்க்கை முறை விசாரணையின் போது அவனுக்கு எதிராக வைக்கப்படுகிறது. அம்மாவின் மரணத்தின்போதும் அவளை அடக்கம் செய்த பிறகும் அவனுக்குச் சோகம் ஏதும் ஏற்படவில்லை என்பது சுட்டிக் காட்டப்படுகிறது. அவன் இயல்பாகவே அந்நியமானவனா சமூகத்தால் அந்நியப்படுத்தப்பட்டவனா, இந்த இரண்டுமே உண்மைதானா என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன. நாவலில் இவற்றுக்கான பதில் ஏதுமில்லை. பொது இடத்தில் பலர் முன்னிலையில் வைத்து அவன் தலைதுண்டிக்கப்படும் என்ற தீர்ப்பு வழங்கப்படுகிறது. சிறைச்சாலைக்கு வரும் பாதிரியாரிடம் பாவ மன்னிப்பாக அவன் ஏதும் சொல்ல மறுக்கிறான். மரணத்தை எதிர்நோக்கித் தன்னளவில் காத்திருக்கிறான் மெர்சோ.

இனி ஆய்வு:

1. நாவலை வாசிப்பவர்களுக்கு நாவலின் மொத்தக் கதையாடலும் உள் / வெளி என்ற பௌதிகரீதியாக அமைக்கப்பட்டிருப்பது பிடிபடும். நாவலின் 'உள்'

களங்களாக மெர்சோவின் அலுவலகம் (பக்கம் 9, 53-54), அவன் உணவு அருந்துகிற செலஸ்ட் என்பவனின் விடுதி (பக்கம் 9, 35, 56-57), அவன் அம்மா இறந்துபோகிற முதியோர் இல்லமும் அங்குள்ள சவப்பெட்டி அறையும் (பக்கம் 10-22). மெர்சோவின் வசிப்பிடமான மாடி அறை (பக்கம் 27-33, 46-48, 58-60). மெர்சோவின் அயலானான ரேமானின் அறை (பக்கம் 38-44), இன்னொரு நண்பன் மாசோன் வீடு (பக்கம் 66, 69), வக்கீலின் அறை (பக்கம் 79), மாஜிஸ்திரேட் அறை (பக்கம் 83-88), கோர்ட் அறை (பக்கம் 1010-117, 119-128, 128), சிறைச்சாலை (பக்கம் 80-82, 89-102, 118, 130-147) ஆகியவற்றைச் சொல்ல முடியும்.

2. நாவலின் 'வெளி'க் களங்களாகச் சவப்பெட்டி ஊர்வலம் போகிற கிராமப்புற வெளி (பக்கம் 22-25), நீந்தச் செல்கிற கடற்பரப்பு (27-28, 45-46, 65), ஓடுதல், நடத்தல், தேடல், துரத்துதல், மோதுதல், தாக்கப்படுதல், கொலை ஆகியவை நிகழ்கிற கடற்கரை மணற்பரப்பு (பக்கம் 34, 63-64, 66-69, 70-75) ஆகியவற்றைச் சொல்ல முடியும்.

3. 'உள்' மற்றும் 'வெளி' களங்களைத் தவிர, 'உள்' களங்களிலிருந்து 'வெளி'க் களங்களுக்குச் செல்லும் நாவலின் பகுதிகளை அடுத்து குறிப்பிடலாம். உடல் ரீதியான அல்லது மன ரீதியான பயணங்களாக இப்பகுதிகளை அடையாளம் காண முடிகிறது. பஸ் பயணம் (பக்கம் 10),அறையின் பால்கனி (பக்கம் 30-37), சிறைச்சாலையில் மெர்சோ வாசிக்கும் கடிதம் (பக்கம் 98), சிறைக் கம்பிகள் அருகே நின்றிருத்தல் (பக்கம் 99-101) மற்றும் மரணத்துக்கு முந்தைய சிறைச்சாலை இரவு (பக்கம் 147) ஆகியவற்றை இத்தகைய பகுதிகளாகக் காண முடியும்.

4. நாவலின் கதையாடல் 'உள்' களங்களிலிருந்து 'வெளி'க்களங்களுக்குச் செல்லும்போது திரைப்படங்களில் ஒரு காட்சியிலிருந்து அடுத்ததற்குச் செல்வது போன்ற வெட்டு (cut) நிச்சயமாக நடக்கிறது. இத்தகைய வெட்டுக்களை நாவல் முழுவதிலும் காண முடியும்.

உதாரணமாக,

> தாங்கள் எல்லோரும் ஒதுங்கிநின்று சடலத்துக்கு வழிவிட்டோம்.பின்னர் அதைத் தொடர்ந்து இல்லத்தைவிட்டு வெளியே வந்தோம். வர்ணம் தீட்டப்பட்டு, பளபளப்பாக இருந்த அந்த நீளமான பெட்டி பள்ளியில் பேனா, மை வைத்திருக்கும் பெட்டியை நினைவூட்டியது.

என்கிற இடத்தில் (பக்கம் 22). சவப்பெட்டி 'உள்' களத்திலிருந்து 'வெளி' களத்துக்கு வந்தவுடன் வேறொரு காட்சியாகப் பரிணமிப்பதைக் காணமுடிகிறது. இத்தகைய

வெட்டுக்கள் உள் / வெளி என்பதான களப்பிரிவினையை மிகவும் தீர்மானகரமாக நாவலின் ஊடே நிறுவுகின்றன.

5. அடுத்ததாக உள் / வெளிக் களங்களில் 'உள்' களங்களைத் தனியாக எடுத்துக்கொண்டு ஆராயலாம் தன்/பிற என்பதான சட்டகம் இத்தகைய 'உள்' களங்களில் செயல்படுவது கவனிப்பிற்குரியது. நாவல் மெர்சோவின் பார்வையில் சொல்லப்படுவதால் தன் / பிறர் என்கிற சட்டகமானது மெர்சோவும் 'உள்' களங்களின் கூறுகளும், மெர்சோவும் அவனுடன் தொடர்புடைய மனிதர்களும் என்பதாக இயங்குகிறது. மெர்சோ 'உள்' களங்களில் தனிமையில் இருக்கும்போது கூடப் பிற பொருட்களின் அல்லது பிறரின் இருப்பு (Presence) அவற்றின் இன்மையின் மூலம் (through their absence) உணர்த்தப்படுகின்றன. உதாரணமாக,

> சாப்பாட்டிற்குப் பிறகு, ஒரேயடியாக வெறுமித்துப்போய்
> அறையில் வளைய வளைய வந்து கொண்டிருந்தேன். அம்மா
> இருந்தபோது இந்தவீடு போதுமானதாக இருந்தது. இப்போது
> அது என்னுடைய தேவைக்கு மிகவும் பெரிதாக இருந்தது

என்ற இடத்தில் (பக்கம் 29) தன்/பிற(ர்) என்ற சட்டகம் மெர்சோ / அம்மா மெர்சோ / பழைய வீட்டமைப்பு என்பதாக இல்லாத (absent) விஷயங்கள் வழியே இயங்குவதைக் காணமுடிகிறது.

6. நாவலின் பிரதான உணர்வான அபத்தம் (absurdity) 'உள்'களங்களில் இழையோடுவதை விளக்குவோம்: இங்கே. தன் / பிற(ர்) என்ற சட்டகத்தின் இயக்கத்தை வேறுவிதமாக வரையறுக்கலாம். இரண்டு தனித்தனி டயல்கள்(dials) கொண்ட ஒரு கடிகாரமாகச் சட்டகத்தை அணுகலாம். இந்த இரண்டு டயல்களில் சிறிய டயல் 'தன்' என்பதன் இயக்கத்தையும், பெரிய 'டயல்' பிற(ர்) என்பதன் இயக்கத்தையும் காட்டுகின்றன. சிறிய டயலுக்குச் சிறிய முள்; பெரிய டயலுக்குப் பெரிய முள், இரண்டு முட்களும் வெவ்வேறு வேகங்களில் ஓடுகின்றன. எனவே பெரும்பாலும் இந்த முட்கள் ஒன்றை ஒன்று நெருங்கியும் ஒன்றைவிட்டு இன்னொன்றுவிலகியும் செல்லும் (They are out of phase with each other). இந்த out of phase தன்மையைத் 'தன்' மற்றும் 'பிறர்' உலகங்களுக்கான நிச்சய இடைவெளியாகக் கொள்ளலாம். இந்த இடைவெளி தொடர்ந்து இருந்து கொண்டிருப்பதன் மூலம் நாவலின் ஊடே அபத்த உணர்வானது இழையோட முடிகிறது. உதாரணமாக, அலுவலகம் என்கிற உள்-களத்தில் நிகழ்கிற நாவலின் முதல் பத்தியை எடுத்துக்கொள்வோம் (பக்கம் 9).

இன்றுஅம்மா இறந்துவிட்டாள். ஒருவேளை நேற்றாகவும் இருக்கலாம் எனக்குத் தெரியாது; முதியோர் இல்லத்திலிருந்து எனக்கு ஒரு தந்தி வந்தது. 'தாயார் மரணம். நாளை அடக்கம். ஆழ்ந்த அனுதாபங்கள், இதற்கு ஒன்றும் அர்த்தமில்லை. ஒரு வேளை நேற்றே நிகழ்ந்திருக்கலாம்.



இங்கே 'தன்' என்ற மெர்சோவின் உலகத்தில் அம்மாவின் மரணம் என்பது அர்த்தம் தவறிப்போன செய்தியாகத் தெரிகிறது. 'பிறராகிய' அம்மா இறந்துபோன முதியோர் இல்லத்தில் அது சோக நிகழ்வு. அப்படித் தன் / பிறர் உலகங்களின் ஊடாட்டத்தின் மூலமாகக் கதை நகர்த்தப்படுகிறது. இந்த இரண்டு உலகங்களும் இடைவெளியுடன் இருப்பதால்தான் அபத்தம் என்கிற உணர்வு நாவல் முழுவதிலும் இயக்கம் கொள்கிறது.

7. 'தன்'னின் உலகமும் 'பிறரி'ன் உலகமும் வெவ்வேறு வேகங்களில் இடைவெளியுடன் இயங்கினாலும் நாவலின் சில முக்கிய தருணங்களில் அவை சந்தித்தாக வேண்டியிருக்கிறது. மேற் கூறப்பட்ட சிறிய, பெரிய டயல்களின் முட்கள் ஒன்றையொன்று வெட்டிச் செல்கிற தருணங்களாக இவற்றை அர்த்தப்படுத்த முடியும்.



கடிகாரத்தின் முட்கள் இவ்வாறு ஒன்றையொன்று தொட்டுக்கொள்கிற இடங்களில்அபத்தம் தவிர்த்த இதர உணர்வுகள் நாவலின் 'உள்' களங்களில் முனைப்பெறுவதாக அர்த்தம் கொள்ள முடியும். உதாரணமாக, அம்மாவின் சவப்பெட்டி வைக்கப்பட்டுள்ள அறையில் மெர்சோ என்ற 'தன்'னின் உலகமும் 'அம்மா', 'காவல்காரன்' என்ற 'பிறரி'ன் உலகங்களும் இப்படியாகத் தொட்டுக்கொள்கின்றன. அந்த ஒரு கணத்தில் தன் / பிறர் இரண்டு உலகங்களுக்கும் பொதுவான இன்னொரு உலகம் உயிர்பெற்று விடுவதைக் காணமுடியும்.

> அவன் சிறிது நேரத்தில் தட்டை எடுத்து வந்தான். நான் காப்பி குடித்தேன் உடனே எனக்குப் புகைபிடிக்க வேண்டும் போல இருந்தது. ஆனால் அம்மாவுக்கு முன்னால் அவ்வாறு செய்யலாமா என்று தெரியாததால் சற்றுத் தயங்கினேன். இது ஒன்றும் பெரிய விஷயமில்லை. காவல்காரனுக்கு ஒரு சிகரெட்டைத் தந்தேன். இருவரும் புகை பிடித்தோம். சற்றுப் பொறுத்து அவன் சொன்னான்: 'இன்னுமொரு விஷயம் தெரியுமா? உங்கள் அம்மாவின் சிநேகிதிகள் கூடிக் கண்விழித்துத் துணை இருக்க வருவார்கள்....

இந்த இடத்தில் 'தன்' மற்றும் 'பிறரி'ன் உலகங்கள் தொட்டுக் கொள்வதன் மூலம் ஒருவித இணைவு அல்லது சகோதரத்துவ உணர்வு ,ஏற்படுவதைக் காண்கிறோம். தன் / பிற(ர்) உலகங்களின் இடைவெளி குறைந்து வருவதன் மூலமாக இந்தப் புதிய உணர்வு முனைப்பெறுகிறது. இடைவெளியை முன்னிறுத்திய அபத்த உணர்விலிருந்து இந்தப் புதிய உணர்வு வடிகட்டி எடுக்கப்படுகிறது. இதற்கு ஏற்றவாறு மெர்சோ மற்றும் காவல்காரன் ஆகிய இருவர் அடங்கிய புதிய 'தன்'னின் உலகம் தோன்றுவதைக் காணலாம். அதில் புதிய 'பிறரா'க அம்மாவின் சிநேகிதிகள் கண் விழிக்க வருகிறார்கள். இதுவரை இல்லாமல் இருந்த அவர்கள் காவல்காரனும் மெர்சோவும் சேர்ந்து அம்மாவுக்கு எதிரில் புகை பிடித்த இடத்துக்கு வருவது மீண்டும் இடைவெளியையும் அபத்தத்தையும் கொண்டு வருகிறது எனலாம்.

நாவலின் இதர சில 'உள்' களங்களான விடுதியிலும் (பக்கம் 56-58) கோர்ட் அறையிலும் (பக்கம் 105, 112-113) இதே போன்றதான சகோதரத்துவ உணர்வு தோன்றுவதைப் பார்க்க முடியும். இந்த உணர்வை ஏற்படுத்துகிற பாத்திரங்களாகக் காவல்காரன், விடுதி உரிமையாளன் செலஸ்ட், பாரீஸ் நகரத்துப் பத்திரிகை நிருபர் ஆகியோர் உள்ளனர் பாரீஸ் நகரத்துப் பத்திரிகையாளன் வருகிற பகுதிகளில் அவனுக்கும் மெர்சோவுக்கும் உரையாடல் ஏதும் இருப்பதில்லை என்பதைக் காண முடிகிறது. இதிலிருந்து சகோதரத்துவ உணர்வு என்பது வெறும் பாத்திரங்களின் இயக்கமாக அன்றி இணைந்துவிட்டுக் கொள்கின்ற உலகங்களின் இயக்கமாக

இருப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

சகோதரத்துவ உணர்வைப் போலவே நாவலின் 'உள்'களங்களில் வடிகட்டப்படுகிற இதர உணர்வுகளாக முரண்மை (களம் : அலுவலகம். பக்கம் 34-35), நினைவு (கோர்ட் - 126), துக்கம் (கோர்ட் 118, 127), நம்பிக்கை (கோர்ட் 101), தலைசுற்றல் (கோர்ட் 102), பயம் மற்றும் நடுக்கம் (சிறை. 138), மகிழ்ச்சி (சிறை - 138), புணர்ச்சி (அறை. 28), கோபம் (சிறை. 136-146), நகைப்பு (திரைப்பட அரங்கம். 28-29), மரணம் (சிறை. 99-100. 130-132, 137) ஆகியவற்றைக் கூறமுடியும். மேற்கண்ட உணர்வுகள் அபத்த உணர்விலிருந்து தன் / பிற(ர்) சட்டக இயக்கத்தின் மூலம் தெளிவாக வடிகட்டப்படுகின்றன. இதை ஒரு தனிக்கட்டுரை மூலம் விளக்க முடியும்.

இத்தகைய வடிகட்டுதல் (Distillation) மூலமாக வருகிற உணர்வுகள் தெள்ளியனவாக (Pure emotion) இருக்கின்றன. நாவலின் கதையாடலின் ஊடே வெவ்வேறு உணர்வுகள் நாடகீயத்தனமாகச் செய்து காட்டப்படுவதன் (demonstrated as in a theatre performance) விளைவே இது எனலாம்.

8. இதுவரை நாவலின் 'உள்'களங்களை அணுகிக் கொண்டிருந்தோம். இனி 'வெளி'க் களங்களை ஆராய்வோம்: இந்தக் களத்தில் அபத்த உணர்வானது வேறுவிதமாக மாற்றம் பெறுவதைப் பார்க்க முடிகிறது. 'வெளி'க் களங்களிலும் தன் / பிற(ர்) உலகங்களுக்கான தனித்தனி டயல்கள் உண்டு. சிறிய, பெரிய முட்களும் உண்டு. சிறிய டயலானது 'தன்' என்பதான மெர்சோவின் உலகத்தையும் பெரிய டயல் அவன் பயணப்படுகிற நிலப்பரப்புஅல்லது அவனைத் தாக்குகின்ற, பாதிக்கின்ற பிரபஞ்சக் கூறுகளின் இயக்கம் ஆகியவற்றையும் குறிக்கின்றன எனலாம். உதாரணமாக, கிராமப்புறத்தில் சவப்பெட்டி ஊர்வலம் போகும்போது மெர்சோவும் உடன் செல்கிற பகுதியைக் குறிப்பிடலாம் (பக்கம் 22-26). மெர்சோ தனியாகச் சஞ்சரிக்கும் உலகத்தைத் 'தன்'னின் உலகமாகவும் அந்த உலகம் கரைந்துபோய் விடுகிற அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்துகிற ஏறுவெயில்படரும் கிராமப்புற வெளியின் இயக்கத்தைப் 'பிற' என்பதன் உலகமாகவும் கொள்ளலாம்.

'உள்' களங்களைப் போலன்றி 'வெளி'க் களங்களில் தன் / பிற(ர்) உலகங்களுக்கான டயல்களும் சுழல்கின்றன. அதாவது, தன் / பிற(ர்) உலகங்களுக்கான பின்புலன்கள் வெவ்வேறாக இருப்பதாக இதை அர்த்தப்படுத்தலாம். இரண்டு டயல்களும் சீரான வேகங்களில் அல்லாமல் மாறிக் கொண்டிருக்கிற வேகங்களில் சுழல்வதாகக் கொள்ளலாம். இதனால் ஏற்படும் Phase Shift அல்லது சுழல் இடைவெளியை அபத்த உணர்வாகக் கொள்ளலாம். ஆனால் திடீரென்று இந்த இரண்டு டயல்களின் வேகங்களும் சமமாக ஆகிவிட

முடியும். அப்போது இரண்டு டயல்களும் சேர்த்து ஒரே டயல் சுழல்வதைப் போன்ற காட்சி தென்படும். அதாவது, இரண்டு தனித்தனி டயல்களுக்குப் பதிலாக ஒரே ஒரு பெரிய டயல் தெரியும். அத்தகைய இடத்தில் அபத்த உணர்வானது கரைந்துபோய் கிராமப்புற வெளியில் நடக்கும்போது மெர்சோவுக்கு மகிழ்ச்சிப்பரவசம் (exhilaration) தோன்றுகிறது.



இன்னொரு உதாரணமாக, மெர்சோவும் காதலி மாரியும் கடலில் நீந்தி விளையாடும் பகுதிகளைக் கூறமுடியும் (பக்கம் 28).

> அந்த ரப்பர் மிதவை மேல் மெதுவாக ஏறி அவள் அருகில் சென்றேன். ரம்மியமான அந்தச் சூழ்நிலையில் விளையாட்டாகச் சற்றே சரிந்து என் தலையை அவள் வயிற்றின் மேல் வைத்துப் படுத்தேன். அவள் ஒன்றும் சொல்லவில்லை. நானும் அப்படியே இருந்தேன். வானம் முழுவதும் என் கண்களுக்குள் நீலமாகவும் பொன்னிறமாகவும் படர்ந்திருந்தது. பிடரியில் மாரியின் வயிற்றுப்பகுதி லேசாகத் துடிப்பதை உணர்ந்தேன். அந்த ரப்பர் மிதவை மேல் அரைத் தூக்கத்தில் வெகுநேரம் படுத்திருந்தோம். ஏறுவெயில் அதிகமாக அவள் நீரில் குதித்தாள். நானும் தொடர்ந்தேன்.

இங்கே தன் / பிறர் உலகம். மெர்சோ / மாரி பங்கேற்கும் காதல் விளையாட்டுக்கான உலகம். மாரி அதற்குள் வந்தவுடன் அவர்களுக்கு வெளியே இயங்கிக் கொண்டிருந்த உலகின் பிரபஞ்சக் கூறுகளில் ஒன்றான ஆகாசம் முழுவதும் அதன் வண்ணத்தின் சாத்தியப்பாடுகளுடன் மெர்சோவின் கண்களுக்குள் பரவுகிறது. பிரபஞ்ச இயக்கத்தின் லயம் மாரியின் வயிற்றில் அவன்

கேட்கிற துடிப்பாக உருவெடுக்கிறது. இவ்வாறு பிரபஞ்சக் கூறுகள் மெர்சோ / மாரி காதல் ஜோடியின் உணர்வுடன் இணைந்திருப்பதால் நாவலில் இழையோடுகின்ற அபத்த உணர்வு இங்கே அப்படியே கரைந்துபோய் விடுகிறது என்பதைப் பார்க்க முடியும்.

அடுத்த உதாரணமாக, கொலைக்கு இட்டுச் செல்கிற அரேபியர்களுடனான மோதலைப் பார்க்கலாம் (பக்கம் 74-75). இங்கும் கடற்கரை மணலும் வெயிலுமான பரப்பு மெர்சோ / அரேபியன் என்கிற தன் / பிறர் உலகத்தைத் தாக்குவதைக் குறித்துக்கொள்ள முடிகிறது:

> பேசாமல் திரும்பிச் சென்றுவிட்டால் இந்த விவகாரம் இத்துடன் முடிந்துவிடும் என்றும் எனக்குத் தோன்றியது. ஆனால் வெயிலில் தகித்துக் கொண்டிருந்த அவ்வளவு பெரிய கடற்பரப்பு எனக்குப் பின்னால் இருந்தது. அந்த நீருற்றை நோக்கி ஓரிரு அடி எடுத்து வைத்தேன். அரேபியன் நகராமல் இருந்தான். ஆனாலும் எங்களிடையே கணிசமான இடைவெளி இருந்தது. அவன் முகம் நிழலில் இருந்ததால் சிரித்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. நான் அப்படியே நின்றேன். என் கன்னங்களில் வெயிலின் சூடு ஏறிக் கொண்டிருந்தது. வியர்வைத் துளிகள் புருவங்களின் மேல் சேர ஆரம்பித்தன. என் அம்மாவை அடக்கம் செய்த அன்று இருந்தது போன்ற அதே வெயில். அப்போது இருந்தது போலவே முன் நெற்றியில் ஒரே வலி. நெற்றிப் பொட்டின் ரத்த நாளங்கள் ஒன்றுசேர, வெடித்துவிடும் போல் துடித்தன. இப்படி வெயிலில் வாடுவது பொறுக்க முடியாமல் ஓரடி முன்னே எடுத்து வைத்தேன். அப்படி ஓரடி எடுத்து வைப்பது மூலம் வெயிலிலிருந்து தப்ப முடியாது என்றும் அது ஒரு மடத்தனமான செயல்தான் என்றும் தெரிந்திருந்தது. இருந்தாலும் ஒரு அடி முன்னோக்கிச் சென்றேன். ஒரே ஒரு அடிதான். இம்முறை அந்த அரேபியன் இடத்தை விட்டு நகராமல், கத்தியை உருவி என் முன் நீட்டினான். வெயிலில் இருந்தது அக்கத்தி. அதன் எஃகுப் பகுதியிலிருந்து பிரதிபலித்த ஒளிக்கற்றை பளபளக்கும் ஒரு கத்தியின் நாக்குப்போல் பாய்ந்து வந்து என் நெற்றியைத் தாக்குவதுபோல் தோன்றியது. அதே சமயம் புருவங்களின் மேல் கோத்திருந்த வியர்வைத் துளிகள் இமைகளின் மேல் சொட்டுச் சொட்டாக இறங்கவும் அங்கே ஒரு

வெதுவெதுப்பான, கனமான, திரை விழுந்தது. கண்ணீர், வியர்வைத் துளி இவற்றினால் ஆன இத்திரை என் கண்களை மறைத்துவிட்டிருந்தது. தாம்பாளமாகப் பளபளக்கும் சூரியன் நெற்றியில் தாக்குவதை மட்டுமே உணர்ந்தேன். இன்னும் சற்றுத் தெளிவற்ற நிலையில் என் முன்னே பீறிட்டுக் கொண்டிருந்த ஒளிக்கீறலையும் உணர்ந்தேன். தகித்துக் கொண்டிருந்த ஒளிக்கத்தி என் புருவங்களைச் சுட்டுப் பொசுக்கி ஏற்கெனவே வலித்துக் கொண்டிருந்த என் கண்களில் ஊடுருவிப் பாய்ந்தது. அப்போதுதான் எல்லாமே சுழல ஆரம்பித்தன. கடலிலிருந்து கனமான, வேகமான காற்று வீசியது. ஆகாயம் அப்படியே குறுக்காகக் கிழிபட்டு அனல்மழை பெய்யும்போல் தோன்றியது. என் உடல் முழுவதும் சற்றே விறைக்க, துப்பாக்கியின் மீது என் பிடி இறுகியது. துப்பாக்கியின் விசை விடுபட்டது, அதன் வழுவழுப்பான அடிவயிறு உள்ளங்கையில் அழுந்தியது. அந்த ஈரமற்ற காதடைக்கும் ஒலியில் தான் எல்லாமே ஆரம்பமாயிற்று. ஒரே குலுக்கலில் வியர்வையையும் வெயிலின் கொடுமையையும் உதறித் தள்ளினேன். அப்பகல் பொழுதின் சீரான நிதானத்தை அழித்துவிட்டேன் என்பதை உணர்ந்தேன். நான் ஆனந்தமாக இருந்த இக்கடற்கரையின் அசாதாரணமான அமைதி அழிந்துவிட்டது. அப்படியே மேலும் நான்கு முறை சுட்டேன். அசைவற்றிருந்த உடலில் சுவடேதும் தோற்றாமல் பதிந்தன தோட்டாக்கள்.

திரும்பிப் போய்விட்டால் முடிந்துவிடும் என்று தெரிந்தாலும் மெர்சோ அங்கேயே இருக்கிறான். இதிலிருந்து அபத்த உணர்வு இன்னும் தொடர்வதாகக் கொள்ளலாம். நிலப்பரப்பும் ஆகாசமும் அவனைத் தாக்கி அவனுடைய அபத்த உணர்வைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைக்கின்றன. தன் / பிறர் என்பதான உலகங்களின் இயக்கம் பிரபஞ்ச இயக்கமாக மாறிக் கொலைச் செயலுக்கு இட்டுச் செல்கிறது. அபத்த உணர்வு கரைந்து போய்விடுகிறது. அதை மீண்டும் நாவலுக்குள் கொண்டுவர,

> அதுவே நான் என் துரதிருஷ்டத்தின் வாயிற்கதவில் நான்குமுறை தட்டியது போலிருந்தது

என்ற அடுத்த வரி தேவைப்படுகிறது.

9. இப்போது நாவலின் உள் / வெளிக் களங்கள் இணைகின்ற பகுதிகளில் ஒன்றான கடைசிப் பத்தியைப் பார்க்கலாம்.

நட்சத்திரங்கள் என் முகத்தில் விழ, கண் விழித்தேன். வெளியே கிராமப்புறத்தின் ஓசைகள் என் காதுக்கு எட்டின. இரவின் மணங்கள், மண்ணின் மணம், உப்பின் மணம், என் நெற்றிப் பொட்டில் புத்துணர்ச்சியை அளித்தன. உறங்கிக் கொண்டிருக்கும் இக்கோடைக்காலத்தின் அற்புதமான அமைதி பொங்கிவிடும் கடலலை போல் என்னுள் புகுந்தது. இச்சமயத்தில், இரவின் முடிவில் கப்பலின் சங்குகள் தொலைவிலிருந்து ஒலிக்கக் கேட்டேன். இப்போது எனக்காகக் கவலைப்படாத உலகத்துக்குச் செல்லும் புறப்பாடுகளை அலைகள் அறிவித்த வண்ணம் இருந்தன. வெகுநாட்களுக்குப் பிறகு, முதல் முறையாக, இப்போது நான் என் அம்மாவை நினைத்துக் கொண்டேன். தன் வாழ்க்கையின் கடைசி நாட்களில் அவள் ஏன் தனக்கொரு துணையைத் தேடிக்கொண்டாள் என்பது எனக்குப் புரிந்ததுபோல் தோன்றிற்று. மறுபடியும் ஆரம்பிப்பதுபோல் ஏன் அப்படிச் செய்தாள் என்று புரிந்துகொண்டேன். இங்குப் போலவே அங்கேயும் வாழ்க்கைச் சுடர்கள் ஒன்றன்பின் ஒன்றாக அணைந்து கொண்டிருந்த அந்த முதியோர் இல்லத்திலும் அந்திப் பொழுது ஒரு சோகமான இளைப்பாறல் போல் இருந்தது. மரணத்துக்கு அவ்வளவு அருகில் இருந்த அம்மா, விடுதலை பெற்று ஒரு புதிய வாழ்வைத் தொடங்குபவள் போல் உணர்ந்திருக்க வேண்டும். அவளுக்காக அழுவதற்கு யாருக்குமே உரிமை இருந்திருக்கவில்லை. ஆம், யாருக்குமேதான். நானும் ஒரு புதுவாழ்வைத் தொடங்கத் தயாராக இருப்பதுபோல் உணர்ந்தேன். இந்தக் கோபக் கொந்தளிப்பு என்னைக் கழுவிவிட்டதைப் போல, நம்பிக்கைகள் வெளியேற்றப்பட்ட நிலையில், நட்சத்திரங்களும் மற்ற குறிகளும் நிரம்பியிருந்த இந்த இரவின் முன்னால் முதல் முறையாக - ஆம், முதல் முறையாக - இவ்வுலகின் மென்மையான அலட்சியத்தை மனந்திறந்து வரவேற்றேன். என்னைப் போலவே அது இருந்தது என்பதை உணர்கையில், அந்தச் சகோதர மனப்பான்மையில், நான் மகிழ்ச்சியாக இருந்தேன். மகிழ்ச்சியாகவே இருந்துகொண்டு

இருக்கிறேன் என்பதை அறிந்து கொண்டேன். ஆக, எல்லாம் முழுமைபெற வேண்டுமானால், என் தனிமை உணர்வு ஓரளவு குறைய வேண்டுமானால், நான் விழையக்கூடியது ஒன்றே ஒன்றுதான் - என் தலை துண்டிக்கப்படும் தினத்தன்று பெரும் எண்ணிக்கையில் பார்வையாளர்கள் இருக்கவேண்டும்; வெறுப்புக் கலந்த கூக்குரலுடன் என்னை அவர்கள் வரவேற்க வேண்டும்.

இங்கே தன் / பிற(ர்) என்ற சட்டகம் தான் / நட்சத்திரங்களும் குறிகளும், தான்/ அம்மா, தான் / மரணத்தைக் காண வருபவர்கள் என்பதாக மாறிமாறி இயங்குகிறது. இந்த முழுப்பகுதியிலும் சகோதரத்துவம் என்ற உணர்வுக்கான வாஞ்சையான பிரபஞ்சச் சூழல் உயிர் பெறுவதைப் பார்க்கலாம். தன் / பிற(ர்) என்ற சட்டகம் இறுதி வரியில் பரஸ்பர வரவேற்புடன் இணைவுடன் இயங்குவதைக் கவனிக்க முடிகிறது.

மேற்கண்ட ஆய்வின் மூலமாகக் கிடைத்த முடிவுகளைப் பின்வருமாறு தொகுத்துக் கொள்ளலாம்.

1. நாவலின் 'உள்'களங்களில் தன் / பிற(ர்) என்ற சட்டகத்தின் இயக்கம் மூலம் அபத்த உணர்விலிருந்து இதர உணர்வுகள் ஒவ்வொன்றாகத் தெளிவாக வடிகட்டி எடுக்கப்படுகின்றன; நாடகீயத் தன்மையுடன் செய்து காட்டப்பெறுகின்றன. நாட்டிய சாஸ்திர நூல் நாடகமேடையில் ரஸங்கள் நிகழ்வதைக் கூறுவதற்கு இதை ஒப்பிட முடியும்.

2. நாவலின் 'வெளி 'க்களங்களில் தன் / பிற(ர்) என்ற சட்டகத்தின் இயக்கம் மூலம் அபத்த உணர்வானது நிலப்பரப்பிலும் பிரபஞ்சக் கூறுகளிலுமாகக் கரைவது பலவாறாக நிகழ்கிறது. தொல்காப்பிய மெய்ப்பாடுகளுக்கு அடிப்படையான ஐந்திணைக்கோட்பாட்டுக்கு இணையான ஒரு குறியீட்டுமொழியாக இதைக் கொள்ள முடியும்.

3. மேற்கண்ட இரண்டு குறியீட்டுமொழி உலகங்களுக்கு இடையிலான ஊடாட்டமாக (interplay) அந்நியன் நாவலை அடையாளம் காண முடிகிறது.

நாவலை வாசித்த மேற்கத்திய விமரிசகர்கள் அதன் அபத்த உணர்வை மட்டுமே முன்னிலைப்படுத்தி விமரிசனத்தை இயக்கினர். இன்னும் சிலர் நாவலில் காம்யுவின் மேற்கத்திய மனச்சாட்சியானது காலனித்துவ உலகில் சிக்கிக்கொண்டு தவிப்பது தெரிய வருவதாகக் கூறியுள்ளனர் (O' Brien 1970; 25-26). இவற்றுக்கான காம்யுவின் எதிர்வினை பின்வருமாறு (Camus 1946, 1979;304):

என் நாவலில் முக்கியத்துவம் மிக்கதாக நான் காண்பது

பௌதிக இருப்பும் உடலியல் அனுபவமும்தான். இதை விமரிசகர்கள் கவனிக்கவில்லை. இவற்றுக்கு அடிப்படை குறிப்பிட்ட ஒரு நிலமும் வானமும் ஆகிய பரப்பும் மற்றும் அந்தப் பரப்பால் ஒப்பனை செய்யப்பட்ட மனிதனும். என் நாவலின் நாயகனைப் போல் அல்ஜீரியர்கள் சாதாரணமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த விமரிசகர்களால் மெர்சோவைப் புரிந்துகொள்ள முடியும் என்றாலும் அல்ஜீரியன் ஒருவனால் மெர்சோவை இன்னும் அதிநுட்பமாகவும் எளிதாகவும் விளங்கிக் கொள்ள முடியும்.

இதே எதிர்வினை தமிழில் காம்யுவை முன்னெடுத்து எழுதியவர்களுக்கும் பொருந்தும்.

நூற்பட்டியல்

Camus, Albert (1942) *L' Etranger*, Paris *தமிழில் (1980) அந்நியன். பிரெஞ்சிலிருந்து மொழியாக்கம் வெ. ஸ்ரீராம், சென்னை.*

Camus, Albert (1946) *Le Litteraire*, August 10, Paris, Reprinted in (1979) *Selected Essays and Notebooks*, Tr . Philip Thody, Harmondsworth.

Camus, Albert (1975) *The Myth of Sisyphus*, Tr. Justin D' Brien, Harmondsworth.

Laing, R.D., (1961) *Self and Others*, Harmondsworth.

Natya'sastra (1950 ed) Eng. Tr. with commentary by Manmohan Ghosh, Calcutta.

O' Brien, Connor Cruise (1970) *Camus*, Glasgow.

Ramajujan A.K. (1985) *Poems of Love and War*, Oxford.

தொல்காப்பியம்: பொருளதிகாரம் பிற்பகுதி - பேராசிரியர் உரையுடன் (பதிப்பாசிரியர்) கு.சுந்தரமூர்த்தி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், திருப்பனந்தாள் வெளியீடு.

Panel Session 4 / குழு அமர்வு 4

Tamil, Japanese and Korean Languages / தமிழ், சப்பானியம், கொரிய மொழிகள்

30

தமிழ் மொழியும் கொரிய மொழியும்

சாத்தூர் சேகரன்

0.1 முன்னுரை

தமிழ் மொழி உலக மொழிகளில் எல்லாம் ஊடுருவியுள்ளது என்று கடந்த நூற்றைம்பது ஆண்டுகளாகப் பல்வேறு மொழி அறிஞர்கள் பல்வேறு காலங்களில் முழங்கி வந்திருக்கின்றனர். சித்திய மொழியுடன் உறவு உள்ளது என்றார் டாக்டர் கால்டுவெல். இந்தோ ஐரோப்பிய மொழிகளுடன் உறவு உள்ளது என்றனர் டாக்டர் போப், கோல்புருக் போன்ற பலர். தமிழிற்கும் மத்திய தரைக்கடல் மொழிகளுக்கும் உறவு உள்ளது என்றனர் சுனித்குமார் சாட்டர்ஜி, ஸ்டென் கனோவ், லவகரி போன்றோர். தமிழுக்கும் எத்ருஸ்கன் மொழிக்கும், தமிழுக்கும் மைதன்னி மொழிக்கும், தமிழுக்கும் ஏலமைட் மொழிக்கும், தமிழுக்கும் பாஸ்க் மொழிக்கும் உறவு உண்டு என்று சான்று காட்டினர் பற்பல அறிஞர்கள். தமிழிற்கும் சப்பானிய் மொழிக்கும் உறவு உண்டு என்கின்றனர் டாக்டர் ஒனோ, டாக்டர் பொற்கோ, டாக்டர் சண்முகதாஸ் தம்பதிகள். கால்டுவெல்லும் இது பற்றிக் கோடி காட்டியிருந்தார். தமிழிற்கும் சீன மொழிக்கும் உறவு உண்டு என்கின்றனர் டாக்டர் கடிகாசலம் மற்றும் இக்கட்டுரை ஆசிரியர். தமிழுக்கும் சுமேரிய மொழிக்கும் உறவு உண்டு என்கின்றனர் சதாசிவம், டாக்டர். முத்தரையன் போன்றோர். தமிழுக்கும் ஆப்பிரிக்க மொழிகளுக்கும் உறவு உண்டு என்று டாக்டர் உபாத்யாயா தம்பதிகள், லீலா ஹம்பர்க்கள், செனிகல் செங்கோர், டாக்டர் அறவாணன் போன்றோர் கூறுகின்றனர். 'ஆப்ரிக்க மொழிகளின் அறிமுகம்' என்ற இக்கட்டுரை ஆசிரியரின் நூல் இதனை ஆணித்தரமாக வலியுறுத்துகிறது. இங்ஙனம் தமிழிற்கும் அமெரிக்க மொழிகளுக்கும் உறவு உண்டு என்றனர்; தமிழிற்கும் ஆஸ்திரேலிய மொழிகளுக்கும் உறவு உண்டு என்றனர் சிலர்.

உலக மொழிகளில் எல்லாம் தமிழ் உள்ளது என்றனர் பாவாணர், ஞானகிரியார், தனிநாயகம் அடிகள், மாகறல் கார்த்திகேயனார், டாக்டர் அகஸ்தியலிங்கம், மறைமலை அடிகள் போன்றோர்.

0.2 குமரிக்கண்ட கோட்பாடு

இந்நூற்றாண்டின் மிகப் பெரிய கண்டுபிடிப்பான குமரிக் கண்டக் கோட்பாட்டை நிறுவிய டாக்டர் நா. மகாலிங்கம் மற்றும் இக்கட்டுரை ஆசிரியர், "உலக மக்கள் யாவரும் குமரிக் கண்டத்திலிருந்து சென்ற குமரித் தமிழரே. அவர்களது மொழி, பண்பாடு போன்றன யாவும் குமரிக் கண்டத் தமிழரிடமிருந்து பரவியனவே. எனவே "யாதும் ஊரே; யாவரும் தமிழர்" என்ற ஆய்வு நெறிப்படியும் புவிஇயல் சான்றுகளுடனும் மொழி, பண்பாட்டு ஒற்றுமைக் கூறுகளுடனும் நிறுவி வருகின்றனர். இன்னும் பல நூறு அறிஞர்களும் தமிழின் அல்லது திராவிட மொழியின் உலகந் தழுவிய தன்மையைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

குமரித் தமிழர் யூரல் அல்டாய்க் பகுதி வழியாகவும் சீனா வழியாகவும் கொரியாவில் குடியேறினர். மற்றொரு பிரிவினர் கடல் வழியே சென்று குடியேறினர்.

1. கொரிய மொழி

ஆசியக் கண்டத்தின் தூரக் கிழக்கு நாடுகளில் ஒன்று கொரியா ஆகும். இன்று இது வட கொரியா, தென் கொரியா என்ற இரு நாடுகளாக உள்ளது. தமிழ் - கொரிய மொழிகள் பற்றி முதலில் கூறியவர் டாக்டர் கால்டுவெல். அண்மையில் ஹல்பர்ட் அவர்கள் தமிழ் அல்லது திராவிட மொழியுடன் கொரிய மொழியை ஒப்பிட்டு நூல் வெளியிட்டுள்ளார். அதில் இன உறவு வற்புறுத்தப்படுகிறது.

பார்த்தவுடன் தமிழ் கொரிய உறவு யாருக்கும் புலப்படும். எனவே, என்னைக் கொரிய மொழி ஆய்வில் ஈடுபடுத்தியது சில அடிப்படை ஒற்றுமைக் கூறுகளே.

2. ஒற்றுமைக் கூறுகள்

தமிழ் போலவே கொரிய மொழி ஓர் ஒட்டுமொழி. தமிழின் ஒலிக் கூறுகளில் அநேகமாக பெரும்பான்மையானவற்றைக் கையாளுகிறது. எழுத்துக்களின் அமைப்பிலும் பழைய தமிழ் வட்டெழுத்து வடிவத்தைக் கொண்டுள்ளது. சிறிய பயிற்சியின் பின் யாரும் கொரிய மொழியை எழுத்துக் கூட்டிப் படிக்க இயலும்.

சுட்டுகள் தமிழ் போலவே அ,இ,உ ஆகும். ஒருமை பன்மை இரண்டு மட்டிலுமே உண்டு.

பிரதிப் பெயர்களில் ஒற்றுமை உண்டு. இன்றியமையாச் சொற்கள் என்று புளும்பீல்ட், லெக்மன் போன்றோர் குறிப்பிடும் சொற்களில் நூறுக்கு மேல் தமிழாகவும் தமிழ்ச் சாயலாகவும் இருப்பதால் தமிழ் கொரிய மொழிகளின் ஒற்றுமை பற்றி ஆராய விழைந்தேன்.

3. ஒலிப்பு

(அ) உயிர் எழுத்துகள்

தமிழ் மொழி, கொரிய மொழிகளில் ஒலிப்பு இ,எ,அ,உ,ஒ என்று அமைந்துள்ளன. தமிழில் இரட்டை ஒலி ஐயும் ஔ (அவ்வும்)ஆகும். கொரிய மொழியில் ஔ (அவ்) ஏற்பாடு உண்டு. ஐ என்பதை எய் என்கிறது கொரிய மொழி.

தமிழ் போலவே அடிப்படை உயிர் எழுத்துகளில் குறில் ஐந்திற்கும் நெடில் ஐந்தும் உண்டு. அவை ஆ,ஈ,ஊ,ஏ,ஓ ஆகும். அ - ஆ என நீளும். இவ்வாறே ஐந்து குறிலும் ஐந்து நெடில் வடிவம் எடுக்கும்.

(ஆ) மெய் எழுத்துகள்

தமிழில் எழுத்துகளை உயிர் எழுத்து, மெய் எழுத்து என்று இரண்டாகப் பகுத்திருப்பதைப் போலவே கொரிய மொழி அம்மா - குழந்தை என்று இரண்டாகப் பகுத்துள்ளது. தமிழ் போலவே - மெய் எழுத்து முறை உண்டு. தமிழ்ச் சிறப்பு எழுத்துகள் மட்டும் கிடையாது.

வெடிப்பொலி வெடிப்பிலா ஒலி என்று தமிழில் இருப்பதைப் போல இம் மொழியிலும் உண்டு. தமிழ் போலவே ஒரே ஒரு எழுத்தால் இரண்டையும் சுட்டிக் காட்ட முடியும்.

எ.கா.

தமிழில் ஒரே பகரம், ஆங்கில P & B ஆகப் பணியாற்றுகிறது.

அப்பா, தப்பு } - வெடிப்பிலா ஒலி

கம்பன், நம்பு, பாபா } - வெடிப்பொலி

அத்தன், முத்து } - வெடிப்பிலா ஒலி

தாதா, அந்த } - வெடிப்பொலி

மேற்கூறியவாறே ஒரே தகரம் இரு ஒலிகளையும் உருவாக்குகின்றது. கொரிய மொழியிலும் க,ச,ட,த,ப ஒவ்வொரு எழுத்துகளே. இவை மெய் எழுத்தின் பின்னர் வரும்போதும் இருநெடிலாய் வரும்போதும் வேறு சில சூழல்களிலும் வெடிப்பொலியாக மாறுகின்றன.

4. ஒலிப்பு ஒருமையாக்கம்

கத்திக்குப் பிடி என்ற தொடர் விரைவாகக் கூறும் போது ‘பி’ என்ற

வருமொழி இகரம் கத்திக்கு என்ற குகரத்தில் ஏறி கிகரம் ஆக்குகிறது. கத்திக்கிப்பிடி என்று தொடர் மாறுகிறது.

இது போன்ற ஒலிப்பு ஒருமையாக்கம் கொரிய மொழியிலும் உண்டு.

5. எழுத்து வடிவம்

ஒரு காலத்தில் சித்திர எழுத்தாக இருந்தது கொரிய மொழி. கி.மு. 5ம் நூற்றாண்டில் இருந்து கி. பி. 7ம் நூற்றாண்டு வரை உள்ள தமிழரின் முதற்பெரும் கடல் ஆதிக்கத்தால் தமிழ் வணிகர்கள் ஆசிய நாடுகளில் எல்லாம் பரவினர். சிலர் ஆங்காங்கே குடியேறினர். இவர்களோடு சில சமயவாதிகளும் பல நாடுகளுக்குச் சென்றனர். இவர்கள் தாம் சீன மொழியைச் செப்பம் செய்தனர். சப்பானிய சித்திர மொழியைத் திருத்தி அகர வரிசைக்கு மாற்றினர். இவர்கள் தாம் கொரிய மொழியின் சித்திர எழுத்துகளை ஒழித்து விட்டு அதற்குப் பதிலாகத் தமிழ் வட்ட எழுத்துகளை அளித்தனர்.

6. முதற் கொரிய இலக்கியம்

அக்காலத்தில் தென்னிந்தியா எங்கும் தமிழே பேசப்பட்டது. ஒரு தென்னிந்தியக் கப்பல் கொரியா கடற்கரை அருகே மோதி வணிகர்கள் பலரும் மடிந்து விட்ட போது ஓர் இளைஞன் மட்டும் குற்றுயிராய்க் கடற்கரை அருகே ஒதுங்குகிறான். கிளிஞ்சல் பொறுக்கி விற்று வரும் கொரிய இளம் பெண் அவனைக் காப்பாற்றி வருகிறாள். உடல் குணமான பின்னரும் அவளுடன் தங்கி வாழ்கிறான். அவளையே திருமணம் செய்தவன் குறுகிய காலத்தில் கொரிய மொழியில் தேர்ந்து விடுகிறான். இந்நிலையில் முறை மாப்பிள்ளையான ஒருவன் - தன்னை மணக்காத அப்பெண்ணை வெட்டிக் கொலை செய்து விடுகிறான். கொரியவாசியாகிப் போன அத் தமிழ் இளைஞன் அழுது புலம்புகிறான். பித்துப் பிடித்தவன் போலாகிறான். அவன், பிரிவுத் துயரால் இயற்றிய துயரக் காப்பியமே கொரிய மொழியின் முதற் பெரும் இலக்கியமாகும். இனித் தமிழ் கொரிய மொழியில் உள்ள சொல் ஒற்றுமையைப் பார்ப்போம்.

7. சொல் ஒற்றுமை

7.1 உறவுப் பெயர்

தமிழின் பெண் என்ற சொல்லைப் பூ இன் எனத் திரிக்கிறது. அம்மா, அப்பா என்ற சொற்கள் திரிக்காது வழங்கப்படுகின்றன. அம்மா, யம்மோ, எம்மோ என்று விளிக்கும்போது மாறுகின்றது. அப்பா என்ற சொல் அபா, அபி, அபீ என்று மாறுகின்றன. பழந்தமிழில் ஆடு என்பது ஆடவனை - ஆண்மகனைக் குறிக்கும்.

கொரிய மொழியில் மகனைக் குறிக்க ஆடை - உள் என்ற சொல் பயன்படுகிறது. உலகில் உள்ள மொழிகளில் எல்லாம் மனிதனைக் குறிக்கும் சொல் எல்லாம் தமிழாகவே உள்ளன. தன்னைச் சார்ந்தவன் என்ற பொருளில் சாரம் என்ற சொல் கொரிய மொழியில் உண்டு. அண்ணன் என்ற சொல் அண் என்று குறுகுகிறது. தம்பி என்ற சொல் பாகன் என்றும் பங்கன் என்றும் சில மொழிகளில் உடன்பிறப்பு என்ற பொருளில் வருவது உண்டு. கொரிய மொழியும் 'பங்' என்கிறது. அண்ணன் தம்பி என்று உடன் பிறந்தோரைப் பகுக்கும் வழக்கம் உடைய மொழி தமிழுக்கு மிக நெருங்கிய மொழி என்று கொள்ளலாம். ஐரோப்பிய மொழிகளில் அண்ணன்-தம்பி, அக்கா - தங்கை போன்றனவற்றிற்குத் தனிச் சொற்கள் கிடையாது, என்பதை இவண் நினைவு கூர வேண்டுகிறேன். நண்பனைக் குறிக்கச் சேக்காளி என்ற பழஞ்சொல் உண்டு. கொரிய மொழியில் சேக்கா எனக் குறுகிப் பின் மூக்கொலி பெற்றுச் சிங்கு என மாறுகிறது. இளம்பெண்ணைக் குறிக்கும் அங்கை (எ.கா. மங்கை, நங்கை)என்னும் சொல் மூக்கொலி விலகி அக-சி என மாறுகிறது.

7.2 உடற்கூறுகள்

தமிழில் உடல் என்பதை மேனி என்பர். இது மான் எனக் குறுகுகிறது. செவி,கிவி எனக் கன்னடத்தில் மாறும். கொரிய மொழியிலும் 'கிவி' தான். கால் என்பது க=வ=ப என்று மாறிப் பால் என வருகிறது. அடிவயிற்றின் பெயர்களுள் பேடு என்பது ஒன்று. இதனைப் பைட் -அல் எனத் திரிக்கிறது கொரிய மொழி. கண் என்ற சொல், க=ச=த =ந என்ற விதிப்படி நண் ஆகி நன் என மாறுகிறது. கொழுப்பு கொருப்பு ஆகிக் கிரயும் எனத் திரிகிறது.

7.3 பிரதி பெயர்

நான் என்னும் தமிழ்ச் சொல் பிற திராவிட மொழிகளில் வருவதைப் போலக் கொரிய மொழியிலும் நான், நா என்று வருகின்றது. நீ என்ற சொல் நீ, நீயி, நு என்று திரியாமலும் திரிந்தும் வருகிறது. முன்னிலைப் பன்மையாக - தாங்கள் என்கிறோம் தமிழில். இது தாங் என வெட்டப்படுகிறது. தாங் - சின் என்று கொரிய மொழியில் வருகிறது. அவன் என்ற சொல் 'வன்' எனக் குறுகி வஹ் என வட இந்திய மொழிகளில் வரும். பிறழ்ச்சி அல்லது பிம்ப விதிப்படி ஹிவ ஆகிறது அரபிய மொழியில். கிய என்கிறது கொரிய மொழி. பன்மையாக வரும் போது 'அவன் பலர்' = அவர் என்பதைப் போல கிய - தேயுள் என்கிறது.

உடைமைப் பொருளைக் குறிக்கும் தமிழ்க் கூறுகளான உடைய, அது, ஆது, அ,இன் மற்றும் இவற்றின் திரிபுகளே உலகை ஆளுகின்றன. இன் கொரிய மொழியில் இயி எனத் திரிகிறது. என்னுடைய (நன்ன : கன்னடம்) - நா - இயி என்றும், தங்களுடைய : தங் - சின் - இய என்றும் வரும்.

7.4 காலச் சொற்கள்

நாள் என்பது நால் ஆகிறது. தமிழில் 'எல்' என்ற சொல் பகல், சூரியன், கடவுள் போன்ற பொருள் கொண்டது. பகலைக் குறிக்கக் கொரிய மொழி 'எல்' என்பதை 'இல்' என மாற்றுகிறது. மாதம் என்ற சொல் முன் குறுகித் தம் என்றாகி தல் என வருகிறது. நேரத்தைக் குறிக்கச் சகுனம் என்ற சொல் உண்டு. இது 'சிக' எனச் சிதைக்கப்படுகிறது. மேலும் குறுகி 'சி' என்று மணியைக் குறிக்க வருகிறது.

இக்கணம் என்பது சிதைந்து இக்கெயும் என்று மாறுகிறது.

7.5 நிறப் பெயர்

தமிழில் நிறத்தைக் குறிக்கக் கேழ், குரு, சே போன்ற சொற்கள் உண்டு. நிறம் குறுகி றம் ஆகி றங் எனவும் திரிகிறது. இவையே உலக மொழிகளில் பரவலாக உள்ளன. கேழ் ழூ கலர்: ஆங்கிலம். குரு ழூ க்ரோம்: கிரீக். றங் = வட இந்திய மற்றும் சீன மொழிகள். சே என்பதைக் கொரிய மொழியும் சில ஆப்பிரிக்க மொழிகளும் பயன்படுத்துகின்றன. சே ழூ சய் - கல் ஆகிறது. வெண் (மை) என்பது வ = ப = ஹ என்பதால் ஹெய்ன் என்று திரிகிறது.

நார் அங்கி என்பது சிலபோது ஆரஞ்சுப் பழத்தையும் பல மொழிகளில் எலுமிச்சம் பழத்தையும் குறிக்கும். மஞ்சள் நிறமே எலுமிச்சை என்பதால் கொரிய மொழி மஞ்சள் நிறத்தைக் குறிக்க நாரங் -சே என்கிறது.

7.6 எண்கள்

ஒன் - று, ஹன் என்று திரியும். (இரண்டு) இரு என்பது இர் எனவும் இ எனவும் மாறும். ஒரு பொருளை வெட்டினால் இரு பாதியாகும். எனவே இரண்டைக் குறிக்க பா என்கிறது குஜராத்தி மொழி. பை என்கிறது ஆங்கில மொழி (எ.கா. பை - சைக்கிள்) தமிழில் ஐந்தின் அடிமூலம் ஐ/கை (விரல்) என்பன ஆகும். அய் என்பது யோ ஆகி ஒ ஆகி விட்டது கொரிய மொழியில். பத்து பதி ஆகி பசி பிம்ப விதிப்படி சிப் ஆகிறது கொரிய மொழியில்.

7.7 பிணி

புண் என்பதை அ - பெய்ன் என்கிறது. பிணி என்பதை பியங் என்கிறது. ஊசி பிம்ப விதிப்படி சியூ ஆகும். சகரம் கொரிய மொழியில் பல நேரங்களில் ஜகரம் ஆகும். சியூ, ஜூச எனத் திரிகிறது.

7.8 வீடு

வீடு வசிப்பிடம் ஆகும். வசி சிவி ஆகி சிபி ஆகி கொரிய மொழியில் ஜிப் ஆகிறது. வீட்டில் இருப்பது - முன்னாக இருப்பது கதவே. எனவே, கொரிய மொழி கதவை முன் என்கிறது. சன்னலைச் சிறிய முன் என்று கூறும் முகத்தால் ச்சங் - முன் என்கிறது. தமிழில் வீட்டைப் பல அறைகளாக வரையறுப்பதால் அறை எனப் பெயர் பெற்றது. பலவாக முறிப்பதால் முறி (மலையாளம்) என அறை பெயர் பெற்றது. பல பாகமாக, பங்காக வைப்பது அறை என்ற பொருள் பெற்றது. கொரிய மொழியில் பங் என்றால் அறை. முறி பிம்ப விதிப்படி பிறழ்ந்து றிமு ஆகி றூம் ஆயிற்று ஆங்கிலத்தில். சிறு வீடு குச்சில் ஆகும். இது கச்சின் என மாறி கச்சிங் ஆயிற்று கொரிய மொழியில். குடி என்பது வீடாகும். கொரிய மொழியில் குடல் என மாறி அறை என்ற பொருளைத் தருகிறது.

7.9 இயற்கை

தமிழில் எல் என்றால் சூரியன். இது ஸ் ஒட்டுப் பெற்று சொல் (சோலார்) என்று இலத்தீனில் மாறும். ஹ ஒட்டுப் பெற்று ஹெல் (ஹெலியோ) என்று கிரேக்கத்தில் மாறும் கொரிய மொழியில் ஹல் என்றாலும் ஹா என்றாலும் சூரியன் ஆகும். வெளிச்சம் வெள் ஆகி வெட் ஆகிறது. வ = ப என்பதால் பெட் என்றாலும் பிட் என்றாலும் கொரிய மொழியில் ஒளி ஆகும். ஞாயிறு (சூரியன்) ஞால் எனத் திரிந்து நால் எனவும் மாறுகிறது. வான் (வானம்) என்பது வ = ப = ஹ என்பதால் ஹான் ஆகிறது. தீ, 'தீ' என்றே மாற்ற மின்றி வருகிறது. மலை மயி ஆகிறது. மழையைப் பெயல் என்பர். பெய் என்பது பீ என்று கொரிய மொழியில் மாறுகிறது.

7.10 தாவரங்கள்

பூங்கோதை என்ற சொல்லை அனைவரும் அறிவர். கோதை என்பது பூங் கொத்து ஆகும். கோதையைக் 'கொத்' என்றே கொரிய மொழி கூறுகிறது.

காணம், காணி என்பன நில அளவைச் சார்ந்தன. எனவே விளையும் இடத்தையும் குறிக்கும். காணி ஹ்யென்ஜி எனத் திரிகிறது.

7.11 உயிரினம்

தமிழில் மீனுக்குச் சேல் என்ற பெயர் உண்டு. இது 'சாயிங்' என்று திரிகிறது

7.12 உண்பொருள்

வெண்ணெய் எப்போதும் ஈரப்பதம் உடையது. எனவே இதற்குப் பதம் என்ற பெயரும் உண்டு, (ஒ. நோ. : கன்னடம் : பத) இது ஆங்கிலத்தில் பட்டர் (<பத்தர் < பத) என்று மாறுகிறது. கொரியனில் 'பெட்டியோ'என மாறுகிறது. காய் சீன மொழியில் கயி என்று மாற, - ச்சாய் சோ அல்லது "க்காய் - சோ" எனத் திரிக்கிறது கொரியமொழி. சூப்பு என்பதை சூப் பெய் என்கிறது. கூழ் / குழம்பை, கு - கும்முல் என்கிறது. ரொட்டியைப் பணியாரம் என்பர். அது குறுகிப் பன் என்று மாறிடக் கொரிய மொழியில் பங் என்றாகிறது. 'கள்' ளிற்குச் சொல் விளம்பி என்ற பெயர் உண்டல்லவா? கொரிய மொழி இதனைச் சுல் என்கிறது. தண்ணீருக்கும் நீர்மைப் பொருளுக்கும் 'அம்' என்ற பெயருண்டு. இதனைக் கொரிய மொழி எம் என்று திரிக்கிறது. எம் -ருயோசு என்கிறது.

7.13 வினைச் சொற்கள்

இரு என்பதை 'இத' எனச் சிதைக்கிறது. தாவு என்பதை 'த்வி' என்கிறது. அணை (தொடு, பற்று) என்பதை அண் என்கிறது. பாதுகாத்தல் என்பது பாது கார் ஆகும். (ஒ.நோ: பாது + அரச ழு பாதுசா = பாதுகாக்கும் அரசன்). கொரிய மொழியில் பொஹோ ஆகிறது. உதவு, முன் ஒட்டுடன் தோ - உத ஆகிறது. போ, நகர் என்பதனைத் தமிழ் போலக் கொரிய மொழி 'கட' என்கிறது. நகர் (நீந்து போ) என்பதை நக(ட) என்கிறது. உண்பதில் ஒருவகை தின்னுதல். இது ஆங்கில மொழியில் உண்டு. கவ்வுதல் - இந்தி உருது மொழியில் உண்டு (காவ்). மொக்குதல் மலாய், இந்தோனேசிய மொழிகளில் இருப்பதைப் போலக் கொரிய மொழியிலும் உண்டு. சாத்து என்றால் தமிழில் வணிகம் ஆகும். கொள்ளை சாற்றி விற்றலும் உண்டு. கொரிய மொழியில் சாத்து என்றால் வாங்கு என்ற பொருளாகும். கருவியை இயக்குதலுக்கு இயலுதல்/ இயற்றல் என்ற சொல் உண்டு. கொரிய மொழியிலும் இயல் என்ற சொல் உண்டு. பகு என்பது பக் என்றாகிறது.

7.14 சொல் ஒற்றுமை

காலம் இடமின்மையால் எல்லாச் சொற்களையும் இவண்கூற இயலாது. ஏறத்தாழ 500 தமிழ்ச் சொற்கள் - அடிப்படைச் சொற்கள், கொரிய மொழியில் உள்ளன. இவற்றை நீக்கிவிட்டால் கொரிய மொழி இயங்கவே இயங்காது.

8. இலக்கணக் கூறுகள்

8.1 சுட்டுப் பெயர்கள்

தமிழ் போலவே கொரிய மொழியிலும் அ,இ,உ சுட்டுகள் ஆகும். தமிழ்

போலவே இவை தனித்தும் வரும் (எ.கா.: அ க் குதிரை) பிற உருபுகள் சொற்களுடன் கூடிச் சொல்லாக மாறியும் வரும். (எ.கா.: அங்கு, இங்கு, உங்கு) தமிழில் அ,இ, உ வின் நெடில்களும் சுட்டாக வரும். (எ.கா ஆங்கு)

தமிழ் - கொரியன்		தமிழ் - கொரியன்	
இ (இது / இந்த) →	இ(இது / இந்த)	(இ+து) இது	குத் (இது)
இவன் (இம்மனிதன்) →	இ-சாரம் (இம் மனிதன்)	(அ+து)அது	→தியு-குத்(அது)
		(உ+து) உது	→கேய்-குத் (உது)

8.2 ஒருமை - பன்மை

தமிழ் போலவே கொரிய மொழியில் ஒருமை, பன்மை மட்டுமே உண்டு. தமிழில் பன்மை தரவல்ல விகுதி அர்,இர், மார், க, கள் போன்றன ஆகும். 'க' ஐரோப்பிய மொழிகளில் சகரமாகி (எஸ், இஎஸ் போன்றன) பன்மை தரும். கொரிய மொழியில் தகரமாகும். அர் விகுதி அல் / அன் ஆகும். இரண்டும் கூடி, 'னல்' ஆகிறது. தகர ஒட்டுடன் 'தெனல்' என்ற கூட்டுருபு உருவாகிறது. தமிழ் போலவே அஃறிணைப் பெயர்களுக்கு ஒருமை - பன்மைப் பாகுபாடு அதிகம் தேவை இல்லை மார் பன்மை கொரிய மொழியில் முரி ஆகும்.

8.3 பால் பாகுபாடு

தமிழ் போலவே கொரிய மொழியிலும் இலக்கணப் பால் பாகுபாடு கிடையாது.

8.4 வேற்றுமையும் உருபுகளும்

தமிழில் வேற்றுமைகள் எட்டு என்று வகைப்படுத்தி இருப்பினும் விரிவாக்கினால் எண்ணிக்கை பலவாகும். கொரிய மொழியின் தன்மையும் இவ்வாறே உள்ளது. எழுவாய்க்கு வேற்றுமை தேவையில்லை. பல உருபுகள் தமிழ் உருபு போன்றோ சற்றுத் திரிந்தோ உள்ளன. உடைமை உருபு உடைய, அது, ஆது, அ, இன் போன்று தமிழில் பல உண்டு. இர் இயி என்றாகிறது கொரிய மொழியில்.

8.5 ஒப்பு மறுப்புச் சொற்கள்

உலக முழுவதும் ஒப்பு மறுப்புச் சொற்கள் தமிழாகவே உள்ளன.

ஆம், ஆன் எனத் திரியும். பிம்ப விதிப்படி ன் ஆ > ஆகி,. 'ன் யே' எனத்

திரிகிறது. அல்ல என்ற எதிர்மறை அன் என வரும். அன்ய என்றால் அல்ல என்ற பொருளாகும் கொரிய மொழியில்.

8.6 வினாப் பெயர்கள்

(என்ன)யாது என்பதை, ம் - யுஎத் எனவும் எது, என்பதை எதியோ -ன் என்றும் என்று (எப்பொழுது) என்பதை என்றெ என்றும் கொரிய மொழி மாற்றுகிறது. எவ்விடம் (எங்கு) என்பதை ஏடி - சியோ என்று திரிக்கிறது. எவ்வளவு என்பதை எவ்வல் - மனயோ என்கிறது.

8.7 வினை எச்சம்

தமிழில் வினையுடன் அகரம் சேர்த்தால் வினை எச்சம் ஆகி விடும். செய் + அ > செய்ய. கொரிய மொழியில் வினையுடன் ட் +அ > ட சேர்க்கின்றனர். மொக் = உண். மொக்ட = உண்ண. வினையாகும் போது டகரம் நீங்கிவிடுகிறது. (ஆங்கிலத்தில் வினையைச் சொல்ல முன்னால் ட்+ உ > டு (to) சேர்க்கின்றனர். அல்லவா? வினையாகப் பயன்படும்போது டு நீங்கிவிடும் அல்லவா?).

8. தான்

தான் என்னும் சொல் உலகின் பல்வேறு மொழிகளில் முன்னிலை, படர்க்கையாய்ப் பயன்படுகின்றது(தா, தாம் : சீன மொழி : படர்க்கை) (தா : பழைய ஆங்கிலம்; தே they = (அவர்கள்) : ஆங்கிலம்) (தானிக்கு : தெலுங்கு. தா : சமஸ்கிருதம்).

9. கள ஆய்வும் கண்ட முடிவும்

தமிழ் 'சகரம்' சில போது கொரிய மொழியில் ஜகரம் ஆகிறது. பகரம், வகரம் சில போது ஹகரமாக மாறுகிறது. 5 சதவிதச் சொற்கள் பிம்ப விதியால் (பிறழ்ச்சி - முன் பின்னாக மாறல்) பாதிக்கப்படுகின்றன. க = வ விதியும், க =த = ச என்பதுவும் வ/ப க=த=ச என்பதுவும் செயல்படுகின்றன. யான் 500க்கு மேற்பட்ட சொற்களையும் ஏறத்தாழ அறுபதுக்கு மேற்பட்ட இலக்கணக் கூறு ஒற்றுமைகளையும் கண்டுள்ளேன்.

பண்பாட்டு ஆய்வுகள்

முக ஒற்றுமையிலிருந்து பல்வேறு பண்பாட்டு ஒற்றுமையைக் காண முடியும். அம்மி குழவி போன்ற தமிழ் கருவிகள் அங்கு உண்டு.

எதிர்கால ஆய்வுகள்

எதிர்காலத்தில் இன்னும் பல சான்றுகள் , தரவுகள் கிடைக்கும்போது தமிழ் - கொரிய மொழிகளுக்கு இடையே இன உறவு உள்ளது என்று நிறுவப்படலாம்.

31

A COMPARATIVE STUDY OF DRAVIDIAN AND JAPANESE

(The Velar Plosive k)

PON. KOTHANDARAMAN

Robert Caldwell in his monumental work entitled 'A comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages' has suggested family relationship between Dravidian and Japanese languages.[1] The first edition of the above said work appeared in the year 1856. No serious work was undertaken on this line until late 70s of this century. Dr. Susumu Ohno of Gikushuin University published his 'Sound correspondences between Tamil and Japanese' in the year 1980. This work has been a source for a series of research papers in Tamil-Japanese studies. The aim of the paper is to examine k in Japanese and in Dravidian languages with a view to reconstruct the protoform.

The initial k-

(1) Ta.kaṇ., 'a joint of bamboo.' Ja. kaṇ-ame, 'rivet of a fan.'

DEDR. 1160. Ma. kaṇ., Ko.kaṇ, To.koṇ, Ka. kaṇ, Tu. kaṇṇu, Te. kanu, Kol. gana, NK. khan, Go, gana, Kur. xann, Br.xan.

Tamil and Japanese show voiceless plosive k at the initial position. All South Dravidian languages have the reflex k. In the Central Dravidian Kolami and Gondi show g-while the North Dravidian Kurukh and Brahui show x-. Most of the scholars like Burrow and Emeneau are of the opinion that the initial plosive in the P. Dr. was only voiceless. The reasons for the development of voiced reflex in some languages such as Kolami and Gondi are not clear at present.

The P.Dr. *k > x in Brahui and Kurukh when followed by any vowel other than i and in some cases u. The P. Dr. *k has remained as k in other languages. The Japanese language also shows k in the initial position. The protoform may be reconstructed as *kaṇ. The nasals*ṇ and *ṉ have merged into n in Japanese.

Let us examine a few more instances where we have initial k.

(2) Ta. kavvu, 'to bite eagerly'. Ja. kab-uru

DEDR. 1222, Ta. kavvu, kappu, Ma. kavvuka, kappuka, Ka. kapa, kaba, Kod. kabb-, Tu. kappuni, Te. kamucu. Pe. kap, Mand. kap, Kui. kappa, Kuvi.kap, Kur, xappna.

The initial phoneme agrees in all instances-except the last one. As already stated the P.Dr*k has changed into x when not followed by i or u. The Japanese and Kannada languages show -kab. The P. Dr.*v represents a correspondence in which Japanese and Kannada have b. The protoform kav- seems to alternate with kam/kap-The protoform*kav has developed into kab- in Japanese.

(3) Ta. kal 'stone'

Ja.kar-a 'stone'

DEDR. 1298. Ma.kal, Ko.kal, To.kaṣ, kal, Ka.kal, Kod. kalli, Tu.kallu, Te.kallu, Nk.khal, Pa. kol, Go.kal, Pe.kal, Br. xal.

(4) Ta. kacaṭu 'dregs'

Ja. kasu 'dregs, refuse'

DEDR 1088. Ma. kacci, To.kasf, Ka.kaba, Tu.kajavu, kaba, Te.kasaṭu, Pe.kanj, Kur. kassa, Malt. kase.

(5) Ta. kaviḻ 'to be capsized'

Ja. kaferu 'to be capsized'

DEDR. 1335. Ma. kaviḻuka, To.kof, Ka.kavicu, Kod. kavin, Tu.kapparu, Go.kap, Kuwi.kap, Kur.kab-.

In all the above instances the P.Dr.*k remains as k except in xal. The Brahui form xal has developed from P.Dr.*kal. The change of P.Dr.*k>x in Brahui has been already explained.

(6) Ta.kār 'hot, pungent'

Ja. kar-a 'pungent'

DEDR 1466. Ma. kāram., Ko.kārm, To.kōrm, Ka.kāra, Kod.kāra , Tu.kāra, Te.kāramu, Kol.karot, Kond. karya, Pe. kariya, Mand. kariya, Br.xaren.

The protoform *kār has remained as kār in Ta., Ma., Ka., Kod. and Te. It has developed into xar in Brahui. The long vowels in the radical syllable changes into short ones when followed by a derivative suffix beginning with a vowel. In certain cases the short vowels alternate with long ones even at the P.Dr.level. Since it is not our main concern here, we do not go deeper into that problem, P.Dr.*a>o in Toda in certain conditions and thus we get kōrm in Toda. The Japanese language does not have contrast in vowel length.

(7) Ta.kāl 'foot, relationship, family'

Ja. kar-a 'relationship, family'

DEDR. 1479. Ma.kāl, Ko.kāl, To.kōl, Ka.kāl, Kod.kāli, Tu.kālu, Te. kālu. Kol.kāl, Pa.kēl, Ga.kāl, Go.kāl, Konda.kāl, Pe.kāl, Mand.kāl, Kui.kālu, Kuwi.kāl, Br. kal (trikkal).

P.Dr.*k is retained in all the above instances. P.Dr.*a>e in Parji when followed by an alveolar.[3] Since there is no contrast in vowel length Japanese reflex shows a. P.Dr.*l and *r have merged into r in Japanese. Due to such merger we find several homonyms in Japanese. For example, P.Dr.*kal 'stone' and kāl 'leg' have merged into kara in Japanese. It may be noted here that kara is a homonym in Japanese.

(8) Ta. kiḻi 'to tear, cut'

Ja. kir-u 'to tear, cut'

DEDR. 1581. Ma.kilikka, Ko.kig-kit-, To.kisf, Ka.kil-, Tu.giri, gili, Nk:ki.

The P.Dr.*i remains as i in all instances except the one in Toda. The P.Dr.*i changes into i in Toda when followed by a retroflex. The initial k remains as k except the items in Tulu.

In Japanese *l and *r have merged into r and thus *kil-has become kir- in Japanese.[4]

(9) Ta. kuvavu 'to gather, heap up'

Ja. kufafu 'to add'

DEDR. 1741. Ma.kuvikka, Ko.gub, To.kub-, kup, Ka.gumi, gumpu, guburu, Tu. gumugumu, Te. gumi, gumpu, gampu kuvu, Kol. gum, Nk.guma, Pa.kum. Go.gum, Konda. kumba, Kuwi. kump-, gum-.

The P.Dr.*k remains as k in all the above instances except a few where we find g. Japanese language shows only k. The P.Dr. *v has developed into f in this case.

(10) Ta. kulai 'cluster, bunch'

Ja. kura 'plant, bunch' (dial)

DEDR. 1810. Ma.kula, To.kwin, Ka.gole, gone, Kod.kola, Tu.gone, Te.gola, gela, Kuwi. gella.

The P.Dr.*k is retained almost in all the above instances except the items with voiced g in some cases. The radical vowel at the P.Dr. stage might have been u or o. The Kuwi form gella suggests that the proto form might be kol rather than kul[5].

Due to the merger of *l and *r the Japanese language shows kura.

The intervocalic -k-

(11) Ta.akal 'to spread, depart'

Ja. akaru 'to spread, disperse'

DEDR. 8. Ma.akaluka, Ko.agalm, To.oxïn, Ka.agal, Tu.agapuni, Te.agalu,

Malt.agare.

(12) Ta.vaku 'to divide'

Ja.waku 'to divide'

DEDR. 5202. Ma. vakukka, vakaiyuka, Ka.bagaru, bagi, Kod.bavtale, Tu.bage, Te. vaga, Kui.vaka, Kuwi. vaga, bakrali.

(13) Ta. viku 'to be tight, stiff'

Ja. fiku 'to be contracted, have a cramp in a leg'

DEDR. 5282. Ma.viṇṇuka, Ko.vigu, To.pixy-, Ka.bigi, Tu-bigi, bigu, Te.bigi.

(14) Ta.uku 'to be shed as feathers'

Ja.uku 'to fall off, be shed'

DEDR. 562, Ma.ukka, Ko.uc, To.uc, ux-, Ka.ugu, Tu.guppuni, Te.ucu, guppu, Pa.uy, Malt. orgare.

P.Dr.-*k-develops into x in Toda. It corresponds with -g-in most of the instances. In a very few cases -k- has changed into -v- (Kod.bavtale), y (Pa.uy) and c (Ko., To., and Te.uc-). In Japanese *-k- is retained.

(15) Ta.uruku 'to dissolve, melt'

Ja. uruk-abu 'to steep in water and make'

DEDR. 661. Ma.urukuka, Ko.uk, Ka.urku, Te.ukku, Go.uri, Konda.rug, Kui.ura, ruga, Kuwi.ruy.

(16) Ta. tukai 'to pound in a mortar'

Ja.tuk-u 'to pound in a mortar'

DEDR.3539. Ta.tuvai, Ko.tōt, Ka.tōku, Tu.tōku, Pe.tōg, Manda.tug, Kui.tōga, Kur.tōkna.

(17) Ta.pukai 'smoke, steam'

Ja.fuk-asu 'to smoke, steam'

DEDR.4240. Ma.puka, Ko.peg, pog, To.pax, Ka.poge, Kod.poge, Tu.puge, poge, Te.poga, Kol.pog, Nk.pog, Ga.pog.

(18) Ta.tukir 'red coral, coral seaweed'

Ja.tuk-i 'coral colour'

DEDR.3284. Ta.tuppu, Ka.togaru, Te.togaru.

(19) Ta.pukae 'pangyric, euology'

Ja.fok-u 'to euologize, bless'

DEDR. 4235. Ma.pukaluka, pukal, Ka.pogal, Tu. pugaruni, pogaruni, pogalu, Te.pogaḍu, Kui.ponga, Malt.pogole.

(20) Ta. pukalvu 'pride, arrogance'

Ja. fök-öru 'to be proud'

DEDR. 4234. Ka.puggu, Te.pogaru, Kuwi.pōk.

In the majority of the cases the P.Dr.*-k- has remained as k. The Japanese language has retained the P.Dr.*-k-.

Postnasal k-

In Japanese the plosive clusters with identical members are simplified. The P.Dr.*pp has changed into p in Japanese (e.g., *oppu>afu, *tuppal>tuba>aze). The postnasal plosives of P.Dr. have changed into voiced varieties in Japanese. The postnasal *k- is examined here in detail.

(21) Ta. aṅkatay 'to grieve, sorrow'

Ja. a(n)garasi 'to be grief-sticken, sorrowful'

DEDR.31.Ma.aṅgalāykka, Ko.aṅgalā-pm, Ka.aṅgal-, Tu.aṅgalappu, Te.aṅgalārucu, Kur.anglānā.

(22) Ta.kaṟaṅku 'to whirl'

Ja.kara(ṅ)gu 'to tie round'

DEDR. 1387. Ma.karaṅṅuka, Ka.gara, garagara, Tu.garu, gara.

(23) Ta.vaṅku 'orifice'

Ja.wa(ṅ)gu 'abyss' (dial)

DEDR. 5212. Ma.vaṅku, Tu.oṅika.

(24) Ta.vāṅku 'to bend'

Ja.wa(ṅ)gu 'to bend'

DEDR. 5335. Ma.vāṅṅuka, Ko.vag-, To.pag-, Ka.bagu, Kod.bang-, Tu.baguni, Te.vaṅgu, Kol.vang-, Nk.vaṅg-P*,vang-, Ga.vaṅka, Go.vaṅg, Kui.beṅkna, beṅka.

(25) Ta.nīṅku 'to leave, separate'

Ja.ni(ṅ)gu 'to run away'

DEDR. 3685. Ma.nīṅṅuka, Ko.nig-, To.nik-, ntx-, Ka.nīgu, Kod.nīṅg-, Te.īgu, nīgu.

(26) Ta. uṟaṅku 'to sleep'

Ja. ura(ṅ)gu 'to sleep, feel drowsy,

DEDR. 707. Ma.uraṅṅuka, Ko.org-, To.war-, Ka.urugu, oragu, Kod.or-, Tu.oraguni, oragu, Te.orgau, Pa.org-, Go.urug-.

(27) Ta.ōṅku 'to lift up'

Ja. a(ṅ)gu 'to lift up'

DEDR. 1033. Ma.ōṅṅuka, Ko.ōk-, To.wïk, Ka.ōga.

(28) Ta. poṅkal 'boiled rice, prosperity, shout in the harvest festival on the 15th January'

Ja.fo(ṅ) gara (> hoṅgara) (dial.) 'prosperity, shout in the harvest festival on the 15th January'

DEDR. 4469. Ma.poṅṅal, Ko.pog-, pong-, To.pig-, Ka.poṅgu, Kod.poṅṅ-, Tu. poṅguni, Te.poṅgu, Kond.pog-, Kur.pūxna, Malt.pongje.

When we examine the above items it becomes clear that the postnasal -k- of P. Dr.has changed into g in most of the languages. It is true in the case of Japanese also. What might have happened in Japanese may be diagrammatically represented as follows:

P.Dr.ṅk > ṅg > -g-

(P.Dr.) (dial.) (Std.Ja.)

Dr. Susumu Ohno is of the opinion that the dialectal forms with nasal onglide might have developed the intervocal voiced plosives in standard Japanese. It is quite convincing. It might be noted here that a similar situation is found in Telugu also (*NP>NB>B).[6]

To summarise: The initial P.Dr. k-is retained in Japanese as in Tamil. The P.Dr. intervocalic *-k- also is retained in Japanese and it is pronounced as (k) in Japanese whereas it is pronounced as (g) or (h) in Tamil and Malayalam.

The P.Dr. *-kk- is simplified as -k- in Japanese. The P.Dr. *-ṅk- has changed into -g- in standard Japanese after some intermediary changes (ṅk >ṅg>(ṅ)g>g)

From this comparative study it might be fairly clear now that the Japanese language is rightly consisdered to have family relationship with the Dravidian languages.

FOOT NOTES

1. Please see, *A Comparative Grammar of the Dravidian or South Indian Languages by Caldwell*, p.626.
2. Please see, *A Comparative Study of Tamil and Japanese* by Pon.Kothandaraman, p.32.
3. Please see, *A Comparative Study of Vowels in Dravidian* by Pon.Kothandaraman (the chapter on Parji vowels), unpublished thesis submitted (for partial fulfillment of M.A. degree) to Annamalai University in 1965.
4. Please see, *A Comparative Study of Tamil and Japanese* by

Pon.Kothandaraman, P.34.

5. The change of vowel from e to o or o to e is possible but u>e is quite unnatural, rather impossible.

6. There are a number of Telugu forms where we find such changes for example aidu ‘five’ (<aindu), vāḍu ‘he’ (<vāṇḍu), telugu ‘Telugu’ (<teluṅgu) etc.

BIBLIOGRAPHY

1. T. Burrow and M.B. Emeneau (1986) *A Dravidian Etymological Dictionary* (Second ed. reprinted), Oxford.

2. M.B. Emeneau (1970) *Dravidian Comparative Phonology - A Sketch,* Annamalainagar.

3. M.B.Emeneau (1994) *Dravidian Studies - Selected Papers.* Delhi.

4. Pon. Kothandaraman (1994) *A Comparative Study of Tamil and Japanese,* Madras.

5. N.Kumaraswami Raja (1969) *Post- Nasal Voiceless Plosives in Dravidian,* Annamalainagar.

6. K.Mabuchi - editor (1985) *Origins of the Japanese language, the international collection of essays,* Tokyo.

7. S. Ohno (1980) *Sound Correspondences between Tamil and Japanese,* Tokyo.

8. S. Ohno (1983) “*A Study on the Relationship between Tamil and Japanese Intervocalic Stops in the Two Languages*” IJDL, Vol. XII, No.2. Trivandrum.

9. P.S. Subrahmanyam (1983) *Dravidian Comparative Phonology,* Annamalainagar.

Panel Session 5 / குழு அமர்வு 5

Development of Modern Tamil / தற்காலத் தமிழ் வளர்ச்சி

32

வளரும் தமிழில் மாற்றங்கள்

வா. செ. குழந்தைசாமி

1. பொது

மனித சமுதாயத்தின் வாழ்வில், வளர்ச்சியில் மூன்று சக்திகள் முக்கியமானவை: அவை:

* உடல் வலி (Muscle Power)
* பண வலி (Money Power)
* மதி வலி (Power of the mind)

இவை மூன்றும் இன்று ஆதிக்கம் செலுத்துகின்றன என்றாலும், மனித நாகரிகம் வளர,வளர, பரிணாம வளர்ச்சியில் மனிதன் முன்னேற,முன்னேற, மனிதனின் சிந்தனை அதன் அடிப்படையில் அவன் காணத்தக்க உண்மைகள், அவன் படைக்கவிரும்பும் உலகம், அதற்கு அவன் வகுக்கும் பாதை, அமைக்கும் பாலம் ஆகியன முக்கியத்துவம் பெற்று, இன்று இந்த மூன்றிலும் மதிவலி தலைமைப் பீடம் தாங்கி நிற்கிறது.

அறிவுடையார் எல்லாம் உடையார்

என்று ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவரின் தொலைநோக்குக் கண்ட அறிவுயுகம் இன்று முழு உண்மையாக மலர்ந்திருக்கிறது.

மதியின் மிஞ்சிய வலிமை ஒன்றில்லை

என்பது நாளுக்கு நாள் செயலில் காட்டப்பட்டு வருகிறது. மதிவளத்திற்கு இன்று முன்னேறிய நாடுகள் சான்று கூறுகின்றன. அவற்றின் செல்வத்துக்கு

அடிப்படையாக அமைந்தவை,

* கல்வித்துறைகளில் அடைந்திருக்கும் உச்சநிலை
* புதியன படைப்பதில் பெற்றிருக்கும் திறன்
* அறிவுலகம் படைக்கும் கருவிகளை, செயல் முறைகளைத் தங்கள் சமுதாய, பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் ஆற்றல்

மேலே கூறிய அனைத்திற்கும்

கசடறக் கற்றலும், கற்றதன் துணைகொண்டு புதியன புனைதலும், புனைந்தவை துணைகொண்டு வளம் பெருக்கலும்

அடிப்படையாக நிற்கின்றன. 'கல்வி'யறிவு இவற்றிற்கு ஊற்றாக அமைந்திருக்கிறது.

நீரிலா வளமும், நன்செய்
நிலமிலா விளைவும், நூற்ற
நாரிலா உடையும், பல்பொன்
நலமிலாத் தொழிற்ப டைப்பும்
காரிலா மழையும் நெஞ்சம்
கருதுவ யாவும் சேர்ப்பர்
கூரிய மதியும் ஆய்வும்
கொள்கையும் கொண்ட வல்லோர்

என்பான் கவிஞன். வாழையடி வாழையென வரும் அறிஞர் தலைமுறை, உருவாக்கிய, உருவாக்கும் அறிவுச் செல்வங்கள் மொழி வழியாகத்தான் ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு விட்டுச் செல்லப்படுகிறது. இந்தத் தலைமுறை நேற்றைய நிலை வளர்ச்சியையும், இன்றைய வளர்ச்சியையும் மொழிவழிதான் பெற இயலும். தாய்மொழியில் இல்லாத எதையும் சமுதாயம் பெற இயலாது. எனவே இன்று,

பொருளாதார வளர்ச்சிக்கு, தமிழ் இன வளர்ச்சிக்குத் தாய்மொழிவழிக் கல்வி தேவைப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டு முடிவு வரை ஏற்பட்ட வளர்ச்சியைத் தன்னுள்ளடக்கித் தமிழ் மக்கட்கு வழங்கும் வலிமையும், வளமும் நமது மொழிக்குத் தேவை.

தொன்றுதொட்டு, அண்மைக்காலம் வரை இலக்கிய மொழியாகவே இருந்த

தமிழ் மற்ற துறைகள் அனைத்திலும் வளம்பெற வேண்டும். UNESCO நிறுவனம் உலக அளவில் வெளிவரும் நூல்களை 25 தலைப்புகளில் பிரித்திருக்கிறது. அவை ஒவ்வொன்றிலும் தமிழில் கணிசமான அளவில் நூல்கள் வரவேண்டும். ஒவ்வொரு துறையிலும் புதிய நூல்களை உருவாக்குவது என்பது வெறும் கலைச் சொற்கள் படைப்பது மட்டுமன்று; தொகுப்பது மட்டுமன்று. கலைச்சொற்கள் கட்டடத்துக்குச் செங்கல் போன்றவை. செங்கல் இன்றிக் கட்டடம் கட்ட இயலாதுதான். ஆனால், செங்கல்லே கட்டடம் ஆவதில்லை. மொழி ஒன்றாயினும், ஒவ்வொரு கல்வித் துறைக்கும் ஒரு நடை உண்டு; மரபு உண்டு; இலக்கணம் உண்டு. இவையனைத்தும் அந்தந்தத் துறைகளில் நூல்களை உருவாக்குவதன் மூலம் அமைவது. எனினும் இலக்கிய மொழியாக மட்டுமே, அதுவும் உரைநடை அவ்வளவாக வளராமல் செய்யுள் வடிவிலேயே சென்ற நூற்றாண்டின் மையப்பகுதி வரை இருந்துவிட்ட மொழியை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளரும் எண்ணற்ற கலைத்துறைகளைக் கொண்டதாக விரிவாக்க வேண்டுமெனின் அதற்குத் தேவையான சில மாற்றங்களைச் செய்து தீர வேண்டும். புதிய பரிமாணங்களைச் சேர்க்க வேண்டும். சங்கத்தமிழ் அந்தக் காலத்திற்கு, ஈடு இணையில்லாத வளர்ச்சி நிலையை அடைந்திருந்தது உண்மையே. ஆனால், அந்தப் பரிமாணங்களே தலைமுறை, தலைமுறைக்கும் போதுவதன்று. இது அடிப்படை உண்மை; விவாதிப்பதற்கு எதுவுமில்லை.

மலர்ந்த கலைகளை, வாழ்வின் வெளியினில்
புலர்ந்த ஒளியினைப் பொருந்தும் வகையில்
எழுதவும், தமிழில் எண்ணவும், கருத்தின்
முழுமையும் தமிழ்வழி மொழியவும் வேண்டிய
மரபின் சொற்களும் வழக்கில் நிறைந்து
பரவிய குறிகளும் பல்வகை யானும்
தவிரா ஆனால் தமிழில் இன்றுநாம்
நவிலா ஒலிகளும் நமக்கின்றுள்ள
தேவையின் விரிவும் செறிவும்

சிந்திக்கப்படவேண்டும். பல நூற்றாண்டுத் தேக்கத்தை ஈடுசெய்ய வேண்டும். 18-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தொழில் யுகம் (Industrial Age) தொடங்கியது. இருபதாம் நூற்றாண்டின் மையப்பகுதியில் உயர் தொழில் நுட்ப யுகம் (High Technology Era) தொடங்கியது. இந்தக் காலப்பகுதியின் வளர்ச்சியை நமது மொழி முழுமையாக இழந்துவிட்டது. இவையனைத்திற்கும் ஈடுகட்ட வேண்டும். அதற்கான வளர்ச்சியும் தேவை; மாற்றமும்தேவை.

மாறாத பொருளெதுவும் வளர்வதில்லை
வையத்தின் விதியிதற்கு மாற்றமில்லை

இது மொழிக்கும் பொருந்தும். இந்த மாற்றங்கள் செய்வதைத்தான் நவீனப்படுத்துதல், தமிழில் புதுமைகள் சேர்த்தல் என்கிறோம். இயன்றவரை இந்த மாற்றங்களைத் தமிழ் மொழியின் மரபிற்கேற்பவே செய்ய முயலுவது விரும்பத்தக்கது. தேவையான மாற்றங்களை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

2. ரோமன் வரிவடிவத்தில் தமிழ்ச் சொற்கள்

இன்று நமக்கு ஆங்கிலம், தமிழ் இரண்டும் ஆட்சிமொழி. ஆங்கிலம் ஆட்சிமொழியாக இல்லாத காலம் வரினும், அது உலக அளவில் தொடர்பு மொழி. அறிவியல் உலகிற்குக் கிட்டதட்டப் பொதுமொழி. எனவே, தமிழ்ப் பெயர்களை ஆங்கிலத்திலும் அதாவது ரோமன் வரிவடிவத்திலும், ஆங்கிலப் பெயர்களைத் தமிழ் வரிவடிவத்திலும் எழுத வேண்டிய தேவை தொடர்ந்து இருக்கும். இன்றும் நாம் அவ்வாறு எழுதி வருகிறோம். ஆனால், அதில் ஒருமையில்லை. அது தரப்படுத்தப்படவில்லை. தமிழில் இருக்கும் ல, ழ, ள இவற்றின் வேறுபாட்டையோ, ண, ந, ன இவற்றின் வேறுபாட்டையோ ஆங்கிலத்தில் காட்ட இயலவில்லை. ஆங்கிலத்தில் உயிர் எழுத்துக்களில் குறில், நெடில் வேறுபாடில்லை. இப்படிப் பல சிக்கல்கள். இவற்றைச் சமாளிக்கச் சில விதிகளை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பொழுது சர்வதேச அளவில் தரப்படுத்தப்பட்டுள்ள எழுத்து முறை ஒன்று இருக்கிறது. சர்வதேச அளவில் அறிஞர்களால் அது பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இம்முறையில் ரோமன் எழுத்துகளில் மேலும், கீழும், சிறு கோடுகளும், புள்ளிகளும் பயன்படுத்தப் படுகின்றன. இது எழுதுவதற்கும், தட்டச்சு , கணிப்பொறி போன்ற சாதனங்களைப் பயன்படுத்துவதற்கும் இடைஞ்சலாக இருக்கின்றது. கோடு, புள்ளிகளைத் தவிர்த்து எழுதப்படும் முறைகளில் ஒருமை இல்லை. பலர், பலமுறைகளைக் கையாளுகின்றார்கள். உலகு தழுவ எல்லோராலும் ஒப்புக்கொள்ளத்தக்க ஒரு முறையை நாம் வகுக்க வேண்டும். இன்று உலகு முழுவதும் அறிஞர்கள் வடமொழி இலக்கியங்களைத் தேவநாகரி வரிவடிவத்தில் கற்பதில்லை. ரோமன் வரிவடிவத்திலேயே கற்கிறார்கள். தமிழை அயல் மொழியினர் கற்க ரோமன் வரிவடிவத்தில் எழுதும் நிலை, எழுதும் தேவை மேலும் மேலும் அதிகப்படும். ரோமன் வரிவடிவத்தைப் பயன்படுத்துவதைத் தரப்படுத்த வேண்டும். இது அவ்வளவாகச் சிக்கல் நிறைந்த பிரச்சினையாகவோ, பெரும்புதிராகவோ எனக்குத் தோன்றவில்லை. தகுந்த அறிஞர்கொண்ட குழு இதற்குத் தீர்வுகாண இயலும். இக்குழுவில் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் அறிஞர்களும் இடம்பெறுவது நல்லது.

3. கிரந்த எழுத்துகள்

உலக மொழிகள் பலவற்றிற்குப் பொதுவாக இருக்கும் சில ஒலிகள் தமிழில் இல்லை. ஒவ்வொரு மொழிக்கும் ஒலிதான் அடிப்படை. எந்த மொழியிலும், மற்ற மொழிகளில் இருக்கும் எல்லா ஒலிகளும் இருப்பதில்லை. அது இயல்வதுமன்று. இருப்பினும் உலகஅளவில் பல மொழிகளில் பரவலாகப் பயன்படுத்தப்படும் சில ஒலிகள் நமது மொழியில் இல்லையெனின் அது சில சிக்கல்களை உருவாக்குகிறது.

வடமொழி இலக்கியங்களை மூல நூலாகக் கொண்டு அவற்றைத் தழுவித் தமிழ்க் காவியங்கள் எழுதப்பட்டபொழுது, அவற்றைத் தமிழ் ஒலி மரபிற்கேற்பவே எழுதினர். விபீஷணா - வீடணன் ஆனார். லக்ஷ்மணா - இலக்குவன் ஆனார். சீதா - சீதை ஆனார். ஆனால், நம் முன்னோர்கள் வடமொழியிலிருந்து சமய நூல்களை, தத்துவங்களைத் தமிழ்ப்படுத்திய பொழுது, மூலத்தினின்றும் மிகுதியும் மாறுபட்ட ஒலி பெயர்ப்பை விரும்பவில்லை. எனவே, தமிழ் எழுத்தின் வடிவத்தோடு இணைந்ததாக

ஹ, ஜ, ஷ, ஸ, க்ஷ, ஸ்ரீ

போன்ற எழுத்துக்களை உருவாக்கினர். இன்று நாம் ஆங்கிலத்திலிருந்து பல கருத்துக்களை ஏற்கிறோம். சித்தாந்தங்களைக் கடன் வாங்குகிறோம். அவற்றின் ஆசிரியர்கள் பெயர்களைத் தமிழில் எழுதுகிறோம். அதற்கு அடிக்கடி, சில புதிய ஒலிகள் தேவைப்படுகின்றன. சான்றாக 'f' ஒலியை எடுத்துக்கொள்வோம். நாம் உருவாக்கிய கிரந்த எழுத்துகளில் அந்த ஒலி இல்லை. தமிழிலும் இல்லை. எனவே, தமிழ்ப் புலவர்களைக் கேட்காது, இலக்கணப் புலவர்களின் அனுமதி கோராது, தமிழ்ப் பொதுமக்களே ஆய்த எழுத்தைப் பயன்படுத்தி ஒரு புதிய ஒலியை உருவாக்கிக் கொண்டார்கள்.

France என்பது ஃபிரான்ஸ்

என எழுதப்படுகிறது. இம்முறை பரவலாக வழக்கில் வந்துவிட்டது. இது தமிழறிஞர்கள் செய்யத் தவறியதைத் தமிழ் மக்களே செய்துகொண்ட மாற்றம். இதனால் தமிழுக்கு எந்தத் தீமையும் ஏற்பட்டுவிடவில்லை. எளிதில் புதிய ஒலிகளை எந்த மொழியும் ஏற்பதில்லை. ஆனால் தவிர்க்க முடியாத சூழ்நிலையில், நாம் தனித்து நிற்காது சில நெளிவு சுளிவுகளைக் கையாள்வது வாழ (survival) வளை வழிவகுப்பதாகும். பெரும்புயலில் வளையாத மரம் விழுந்துவிடும். காலம், இடம், குறிக்கோளுக்கேற்ப வளைவதிலும் வலிமை உண்டு.

தமிழில் f ஒலியை உருவாக்கியதிலும், கிரந்த எழுத்துகள் மூலமாகச் சில

புது ஒலிகளைச் சேர்த்ததிலும் ஒரு வேறுபாடு உண்டு. முதலாவதில், இருக்கின்ற தமிழ் எழுத்துகளே பயன்படுத்தப்படுகின்றன. ஒலி புதியது, வரி வடிவம் புதிதன்று. கிரந்த எழுத்துகளில் வரிவடிவம், ஒலி இரண்டும் புதியன. கி.பி. 700 போலவே கிரந்த எழுத்துகள் தமிழில் இடம்பெற்றுவிட்டன. இன்று அவற்றைத் தவிர்த்து எழுதுவோர் மிகச் சிலர். பெரிய அளவில் விற்பனையாகும் பத்திரிகைகள் எவையும் அவற்றைத் தவிர்ப்பதில்லை. தமிழ் மொழி தமிழர்கள் அனைவருக்கும் பொது. கிறித்தவர், இஸ்லாமியர், சமணர், பௌத்தர், இந்துக்கள், மற்ற சமயத்தைச் சார்ந்த தமிழர் அனைவருக்கும் தமிழ் சொந்தமானது. இஸ்லாம் சமயத்தில் பயன்படுத்தப்பபடும் பல அரபுச் சொற்களைக் கிரந்த எழுத்துகளின் துணையின்றி எழுத இயலாது. சிங்கப்பூரில் வாழும் தமிழர்கள் பல சீனப் பெயர்களை, தெருவின், நகர்ப்பகுதியின் பெயர்களைத் தமிழ் எழுத்துகளைக் கொண்டே எழுத இயலாது, தனித் தமிழ்ப்பற்றாளர் அகஸ்ட்டஸ் என்பதை 'அககுட்டசு' என எழுதுகிறார்கள். அடையாளம் காண இயலாத வகையில் பெயர் சிதைக்கப்பட்டிருப்பது பலரால் ஏற்கத்தக்கதன்று. குறிப்பாகச் சமயச் சார்புள்ள பெயர்கட்கு வரும்பொழுது கிறித்தவத் தமிழர்கள் ஏற்க மறுக்கக்கூடும். இதனினும் சற்று அதிகமான பிரச்சினைகள் அரபுச் சொற்களைத் தமிழில் ஒலிபெயர்க்கும்போது எழலாம். இதனால்தான் மொழி தமிழாகவும், வரிவடிவம் அரபு மொழியினதாகவும் கொண்ட 'அரபுத் தமிழ்' எனும் ஒரு புதுத்தமிழே முன்பு உருவானது. இன்று சமய நூல்களும், இஸ்லாமிய சமயத் தொடர்புள்ள இலக்கிய நூல்ளும் தமிழ் வரிவடிவத்தில்தான் எழுதப்படுகின்றன. ஆனால், அதற்கும் கிரந்த எழுத்துகள் தவிர்க்க இயலாதவை. எனவே, இப்பிரச்சினை சற்று ஆழமாக ஆராயப்பட்டு அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதெனச் சில ஒலிகள் ஏற்கப்பட வேண்டும்.

f ஒலிக்குப் பயன்படுத்தும் அணுகுமுறையை ஹ, ஸ போன்ற ஒலிகட்கும் பயன்படுத்துவது பற்றிச் சிந்திக்கலாம். கிரந்த எழுத்துகளை எதிர்ப்பவர்கள், அந்த வரிவடிவத்தைத்தான் எதிர்ப்பதுபோலத் தோன்றுகிறது. ஒலியை எதிர்ப்பதில்லை. ஏனெனில் காகம், பாகம், தாகம் போன்ற சொற்களில் 'ஹ' ஒலி இருக்கிறது. பாசம், காசு போன்ற சொற்களில் 'ஸ' ஒலி இருக்கிறது. 'கட்சி, மீட்சி' போன்ற சொற்களில் 'க்ஷ' இருக்கிறது. ஜ, ஷ ஒலிகள் தமிழுக்குப் புதியவை.

f ஒலிக்குப் பயன்படுத்தும் அணுகு முறையை ஹ, ஸ போன்ற ஒலிகட்கும் பயன்படுத்துவது பற்றிச் சிந்திக்கலாம்.

ஹ = ஃக

ஸ= ஃச

நாம் மேலே கூறியதுபோலத் தமிழில் இடத்தை அனுசரித்து 'ஹ' ஒலி இருக்கிறது.

சான்றுகளாக, காகம், தாகம், பாகம் போன்றவற்றைப் பார்த்தோம். ஆயின் ஹ ஒலி சொல்லில் முதல் எழுத்தாக வரும்பொழுது ‘க’ என்பது ‘ஹ’ ஒலி பெற இயலாது. சான்றாக: ‘ஹவானா’ இதை ‘ஃகவானா’, என எழுதலாம். அதுபோன்றே ‘ஸ’ ஒலி தமிழில் உண்டு. ஆனால், தனி எழுத்தில்லை. நாம் ‘அகஸ்ட்டஸ்’ என்பதை ‘அகஃச்டஃச்’ என எழுதலாம். இவ்வழியில் ஹ,ஸ இரு ஒலிகளும் தமிழ் எழுத்துகளின் சேர்க்கையால் பெறப்பட்டால், தவிர்க்க இயலாது தேவைப்படுவது ஜ, ஷ என்ற இரு ஒலிகள்தாம். க்ஷ தவிர்க்கப்படலாம். பக்ஷம் என்பதைப் பட்சம் என எழுதலாம். க்ஷணம் என்பதை, இட்சணம் எனச் சிறிது மாற்றி எழுதலாம். சுருக்கமாகக் கூறுவதாயின், உலகில் பல மொழிகளில் வழங்கப்பெற்றுத் தமிழில் இல்லாத சில ஒலிகள், வரிவடிவங்கள் தமிழ் நெடுங்கணக்கில் (247) சேர்க்கப்படவில்லை. சிலவற்றை, ஆழ்ந்த ஆய்வின் அடிப்படையில் சேர்த்துக்கொள்வது தேவை. இன்று வழக்கத்தில் இருப்பவற்றை நெறிப்படுத்தி ஏற்றுக்கொள்வது முறையாகும்.

4. புதிய தமிழ் இலக்கணம்

“இலக்கணம்,” பொதுவாக இலக்கியத்தினின்றும் பெறப்படுகிறது. அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட வழக்கு இலக்கணத்தில் தானாக இடம்பெற்று விடுகிறது. தமிழில் தொல்காப்பியத்திற்குப் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலக்கணம் “நன்னூல்.” அதன்பின் பலநூறு வருடங்களாக அதையொத்த அங்கீகாரம் பெற்ற புதிய இலக்கண நூல் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இன்றைய உரைநடையில், அது புலவர்களாலேயே எழுதப்பட்டதாயினும் நன்னூல் மரபை மீறிய பல வழக்குகளைக் காணலாம். சமுதாயத்தில் பரவலாக இடம் பெற்றுவிட்ட வழக்குகள், மாற்றங்களைப் புலவர்கள் எதிர்ப்பதன் மூலம் மட்டும் மறைந்துவிடாது; மாறிவிடாது. அவை நிலைத்தவை. இலக்கணமும்தான் மாறவேண்டும்.மொழி வரலாறும் அதுவே. நன்னூல்படி தமிழில் “ரகரம்”, “லகரம்”, “டகரம்” எனச் சில எழுத்துகள் மொழிக்கு முன்னால் வரா. அன்று அது பொருத்தமானதாக இருந்திருக்கலாம். இன்று அந்த நிபந்தனை ‘தமிழ் வளர்ச்சிக்குத்’ துணையாகாது. “ரப்பர்”, “ராடார்” என்ற சொற்களை எடுத்துக்கொள்வோம். “ர” என்ற எழுத்தை முதலாகக் கொண்ட சொற்கள் இன்று தவிர்க்க முடியாதவை. அதே போன்று, இன்று “டச்சு நாடு”, ‘டார்வின்’ போன்றவற்றை இடச்சுநாடு என்றோ, இடார்வின் என்றோ எழுதுவது முறையாகாது. ஒருவன், ஒருத்தி, ஒருவனுக்கு, ஒருத்திக்கு என்பதுதான் முறை. இன்று ஒருவன், ஒருவள், ஒருவனுக்கு, ஒருவளுக்கு என்பன வழக்கில் வந்துவிட்டன. இப்படிப்பட்ட சொல்லாட்சிகள் பல. இன்றைய இலக்கிய வழக்கை-

ஏற்றுக்கொள்ளப்பட்ட இலக்கிய வழக்கை அடிப்படையாக வைத்து இலக்கணம் எழுதப்படவேண்டும். வழக்கில் வந்துவிட்ட மாற்றங்களில், ஏற்றுக்கொள்ளத்தக்கவை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

5. வரிவடிவச் சீரமைப்பு

தமிழில் எழுத்துச் சீரமைப்புப் பற்றி அறுபது ஆண்டுகட்கு முன்பிருந்தே எழுதப்பட்டும் பேசப்பட்டும் வருகிறது. அதன் வரலாற்றை விவரித்தால், அதுவே ஒரு நூலாகிவிடும். எழுத்துச் சீரமைப்பு என்று நாம் கூறும்பொழுது, அதற்கு ஒரு விளக்கம் தேவைப்படுகிறது.

* எழுத்துச் சீரமைப்பு என்பது தமிழ் நெடுங்கணக்கில் உள்ள 247 ஒலி எழுத்துக்களில் ஒன்றைக்கூடக் குறைப்பதல்ல, ஒலியையும் இம்மியளவும் மாற்றுவதல்ல.

* ஒலிகள் தான் மொழிக்கு அடிப்படை. வரிவடிவம் அவ்வொலிகளைக் குறிக்க நாம் பயன்படுத்தும் குறியீடு. இந்தக் குறியீடுகள் எல்லா மொழிகளிலும், சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ காலத்துக்குக் காலம் மாறிவந்திருக்கின்றன. அதனால், எந்த மொழிக்கும் எந்தத் தீங்கும் நேர்ந்ததில்லை. வரிவடிவ மாற்றம் தமிழிலும் சங்ககாலம் தொடங்கி இந்த நூற்றாண்டுவரை ஏற்பட்டிருக்கிறது. அதனால் தமிழ் வளர்ந்ததேயன்றி வாட்டமுறவில்லை.

* இன்று தமிழில் இருக்கும் 247 ஒலி எழுத்துகளைக் குறிக்கத் தமிழக அரசு செய்த சீர்திருத்தத்திற்குப் பிறகு 124 குறியீடுகளைப் பயன்படுத்துகிறோம். முன்பு 131 குறியீடுகள் தேவைப்பட்டன. இவ்வளவு குறியீடுகள் தேவையில்லை. மிக எளிய மாற்றம் செய்தால் கூட 39 குறியீடுகள் போதுமானவை.

எழுத்துச் சீர்திருத்தம் பற்றி விரிவாக வாதிக்கப்பட்டிருக்கிறது. பல நூல்கள் வெளி வந்திருக்கின்றன. பல அறிஞர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

பெரியார் அவர்கள் முதல் பேராசிரியர் தெ.பொ.மீ., பேரா. மு.வ., திரு.கி.வா.ஜ., பேரா.அ.ச.ஞானசம்பந்தன், புலவர் குழந்தை போன்ற பல தமிழ்த்துறை வல்லுநர்கள் சீரமைப்பின் தேவையை வற்புறுத்தி இருக்கிறார்கள்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் முதலில் எதிர்த்தாலும் இறுதியாக உயிர்மெய் இகரம்; ஈகாரம்; உகரம்; ஊகாரம் இவற்றில் தமிழ் எழுத்து வரிவடிவத்தோடு ஒத்த வகையில், மாறுதல் செய்யலாம் என 19.3.1989 செங்கோலில் எழுதியுள்ளார்கள். எழுத்துச் சீர்திருத்தத்தை எதிர்த்த பேரா. வ. சுப. மாணிக்கம்; முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவாதம் ஆகியோரும் அவர்களது தமிழ்ப் பேரவையில் 1975-இல் ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

வரிவடிவத்தில் சீர்மைகாண வேண்டிப் பல மாற்றங்கள் பரிந்துரைக்கப்படுகின்றன. எனினும், அடிப்படையில் உயிர்மெய் இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் ஆகியவற்றிற்கு நான்கு குறியீடுகளைப் பயன்படுத்துவது என்பதை ஒப்புக்கொள்வோமானால், பின்னர் அந்தக் குறியீடுகளை, ஒரு குழு அமைத்தும், தமிழ் அறிஞர்களைக் கலந்தும், பரவலான கருத்துக்கணிப்பு நடத்தியும் முடிவு செய்து கொள்ளலாம். இந்த மாற்றம் தேவையானது. தவிர்க்க முடியாதது. இன்றில்லாவிட்டால் நாளை வரக்கூடியது. கால தாமதமின்றிச் செய்வது தமிழுக்குப் பெருநன்மை பயக்கும். அதனால் விளையும் நன்மைகள் பல இடங்களில் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. இங்கு மீண்டும் கூறுவது தேவையெனப் படவில்லை.

தமிழில் உயிர்மெய், ஆகாரம், எகரம், ஏகாரம், ஐகாரம், ஒகரம், ஓகாரம், ஒளகாரம் ஆகியவற்றிற்கு உயிர்மெய் அகரத்துடன் பிணையாமல் வலது பக்கத்திலோ, இடது பக்கத்திலோ அல்லது இரு புறங்களிலுமோ குறியீடுகளைப் பயன்படுத்துகிறோம். ஆனால் உயிர்மெய், இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம் இவற்றிற்கு ஒவ்வொரு ஒலியெழுத்துக்கும் ஒரு குறியீட்டைப் பயன்படுத்துகிறோம். எனவே, இவற்றிற்கு மட்டும் 72 குறியீடுகள் தேவைப்படுகின்றன. இதைத் தவிர்த்து மற்ற உயிர்மெய் எழுத்துக்கள் போல உயிர்மெய் இகரம், ஈகாரம் ஆகியவற்றுக்கும் உகரம், ஊகாரம் ஆகியவற்றுக்கும் ஒவ்வொன்றுக்கும் ஒரு குறியீடாக நான்கு குறியீடுகளைப் பயன்படுத்தலாம். இதன் மூலம் 68 குறியீடுகள் குறையும். குழந்தைகள் மனப்பாடம் செய்யும் சுமை குறையும். தட்டச்சு கணிப்பொறி ஆகியவற்றில் தமிழ் வரிவடிவத்தைப் பயன்படுத்துவது எளிதாக்கப்படும். வரிவடிவத்தின் தோற்றமும் செம்மையுறும்.

6. சொல்லாக்கம்

இன்றைய கல்வியறிவு வளர்ச்சிக்கு, உலகு, முழுவதிலும் உள்ள ஆய்வாளர்கள் துணைபுரிகிறார்கள். ஏராளமான புதுச்சொற்கள் உருவாகின்றன. நாம் அவற்றைத் தமிழில் ஒலி பெயர்க்க வேண்டும், அல்லது புதிய சொற்களை

உருவாக்க வேண்டும். இந்தப் பணியை எளிதாக்குவதற்கு நாம் சொல்லாக்கத்திற்குச் சில உத்திகளைக் கையாள வேண்டும். சில மரபுகளை உருவாக்கவேண்டும். சொற்களைப் படைப்பதில் சில நெளிவு சுளிவுகளைக் கையாள வேண்டும்.

சான்றாக, ஆங்கிலத்தில் National என்பதிலிருந்து Nationalise என்ற வினைச்சொல் வந்தது. ஆனால், Private என்பதிலிருந்து Privatise என்ற சொல் ஆரம்பத்தில் உருவாகவில்லை. To make private என்றே எழுதி வந்தார்கள். அண்மைக்காலங்களில் Privatise என்று எழுதப்படுகிறது. ஆனால் ஜெர்மன் மொழியில் Nazional, Nazionaliesieren Privat, Privatiezieren என்ற சொற்கள் ஆரம்பத்திலிருந்தே பழக்கத்திலிருக்கின்றன. அதே போல ஒத்திப் போடுவதை Postpone என்று கூறுகின்றோம். இதற்கு எதிராக Prepone என்பது பேச்சு வழக்கில் இருக்கிறது. ஆனால், இலக்கணம் இன்னும் இதை ஏற்கவில்லை. அகராதிகளில் இடம்பெறவில்லை. ஏனெனில் Postpone என்பது ஒரு சொல். Post, pone என்ற இரு சொற்களின் சேர்க்கையன்று. Pone என்பது ஒருவேர்ச்சொல்லுமன்று. எனினும் ஒரு நிகழ்ச்சியை முன்கூட்டியே நடத்துவதற்கு Prepone என்ற சொல் வசதியாக இருக்கிறது. 'To Advance' என்ற இரு வார்த்தைகளுக்குப்பதில் Prepone என்பது எளிதாக இருக்கிறது. Postpone என்பதற்கு எதிர் மறையாகவும் இருக்கிறது. Post, Pre என்ற விகுதிகள் அல்லது முன் ஒட்டுகள் மரபுவழிப்பட்ட சொற்கள்.

ஒருசொல்லிலிருந்து பல சொற்களை உருவாக்க வழிவகுப்பது நல்லது. சான்றாக Atom என்பதிலிருந்து atomic, atomise, atomiser, atomism, atomist, atomistic என்ற சொற்கள் உருவாக்கப்படுகின்றன. அதே போல, Equal என்ற சொல்லிலிருந்து equality, equalise, equalisation, equals, equate, equation போன்ற சொற்கள் உருவாகின்றன. தமிழில் இப்படிப்பட்ட வழி வகைகளை ஏற்படுத்த வாய்ப்புக்கள் நெறிப்படுத்தப்பட வேண்டும்.

மேலும், ஆங்கிலம், ஜெர்மன், வடமொழி போன்ற மொழிகளில் முன் ஒட்டு (Prefix) பின்னொட்டு, (Suffix) நிறையப் பயன்படுத்தப்படுகின்றன. சான்றாக Micro, Macro, Photo, Telex போன்ற முன் ஒட்டுகள்: Micro என்ற முன் ஒட்டு வந்ததும் நாம் சிறிய ஒன்று பற்றிப் பேசப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்கிறோம். Tele என்றவுடன் 'தொலைவு' பற்றிப் பேசப்படுகிறது என்பது உடனே தெளிவாகிவிடுகிறது. அதை வைத்து, Telescope, Television, Telephones, Telepathy போன்ற சொற்கள் உருவாக்கப்படுகின்றன. வடமொழியிலும் 'அ' என்பது ஒரு எதிர்மறை முன் ஒட்டாகப் பயன்படுகிறது. சான்றாக அசுத்தம், அநீதி, அநாகரிகம். அயோக்கியன், அநாதரவு, அநியாயம் போன்ற சொற்கள்: முன் ஒட்டுப் போலவே பின் ஒட்டுகளும் சொல்லாக்கத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

சான்றாக -ism, -ics, -logy, -sphere போன்றவை. நாம் '-ism' என்ற ஒட்டைப் பயன்படுத்தி Communism, Socialism, Marxism, Feminism போன்ற சொற்கள் உருவாக்குகிறோம். அதே போல '-ics' என்ற ஒட்டைப் பயன்படுத்தி Mechanics, Dynamics, Statistics, Orthopaedics போன்ற சொற்கள் உருவாக்கப்படுகின்றன. தமிழில் இதுபோன்ற முயற்சி, இங்கும், அங்குமாக நடைபெறுகின்றது. இது முறைப்படுத்தப்பட வேண்டும். இன்னும் பல உருவாக்கப்பட வேண்டும்.

புதிய சொற்களை உருவாக்குவதில் நாம் இலக்கண விதிகளைச் சற்றுத் தளர்த்தலாம். முயற்சி என்ற பெயர்ச்சொல் இருக்கிறது. இதற்கு வினைச்சொல் 'முயல்' என்பதாகும். அதனின்று முயல்தல், முயன்றான் போன்ற சொற்கள் வருகின்றன. சிலர் முயற்சி என்ற பெயர்ச்சொல்லில் இருந்து 'முயற்சித்தான்', 'முயற்சி செய்தான்' என்று எழுதுகிறார்கள். இது அனுமதிக்கப்பட வேண்டும். 'புன்னகை' என்பதில் இருந்து 'புன்னகைத்தான்' என்ற வினைச்சொல்லைச் சிலர் உருவாக்கும்பொழுது நமக்கு என்னவோ மாதிரி இருக்கிறது. இருப்பினும் ஏற்றுக்கொள்வதுதான் முறை. அடிப்படையில் தவறு எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. குறிப்பாக, சொல்லாக்கத்திற்கு புதிய உத்திகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

நாம் பல துறைகளில் கண்டுபிடிக்கும் புதிய சொற்கள் எளியவனாக இயன்றவரை, இருக்கவேண்டும். சான்றாக Budget என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். வரவு செலவுத் திட்டம் என்கிறோம். அதை நிதி பற்றியதாகவே வைத்து நிதி அறிக்கை என்கிறோம். ஆனால், இன்று water budget, energy budget எனப் பல சொற்கள் உருவாகின்றது. அதே மாதிரி, budgeting என்ற வினைச்சொல், budgetary control என்னும்போது உரிச்சொல் உருவாகின்றது. நமது வரவு செலவுத் திட்டமோ நிதிநிலை அறிக்கையோ, அப்படி வளைந்து கொடுக்கவில்லை. Budget என்பதற்குப் "பாதீடு" என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. அதிலிருந்து நீர்ப்பாதீடு, ஆற்றல்பாதீடு போன்ற சொற்களை உருவாக்கலாம். பாதீடல், பாதீட்டு நெறிமுறை, பாதீட்டுத் திட்டம் போன்ற சொற்களையும் படைக்கலாம். இதையொத்த அணுகுமுறைகளை நாம் பரவலாகக் கையாள்வது மொழி வளர்ச்சிக்கும் அதைப் பல தேவைகட்கும் ஈடு கொடுக்கச் செய்வதற்குப் பயன்படும்.

33

முதியோர் அறிசுவடி: தமிழ் எழுத்துச் சீர்திருத்த முயற்சிகளின் வரலாறு

கொடுமுடி ச. சண்முகன்

1. நோக்கம்

அச்சு இயந்திரத்தில் தமிழ் ஏறிய பின்னர் தமிழ் எழுத்துகளில் மாற்றம் எதுவும் நிகழாது என்று எண்ணியதற்கு மாறாகப் பல மாற்றங்கள் நமது கவனத்திற்கு வராமலேயே மாறிவிட்டன. கடந்த அறுபது ஆண்டுகளில் தோன்றிய மாற்றங்களுக்கான முயற்சிகள் பற்றிய வரலாற்றைத் தொகுப்பது இக்கட்டுரையின் நோக்கம். தமிழ் எழுத்துகளில் மேலும் தேவைப்படும் சில மாற்றங்களுக்கான முயற்சிகளும் இதில் அடங்கும். ஏற்பட்டுள்ள மாற்றங்களை வரிசைப்படுத்துவதும் இனி வரவேண்டிய மாற்றங்களைச் சுட்டிக் காட்டுதலும் இதில் அடங்கும். இதற்குத் துணையாக ஏடுகளில் வந்த குறிப்புகள், கட்டுரைகள், நடைபெற்ற கருத்தரங்குகள், வெளிவந்த நூல்கள் ஆகியவை தொகுக்கப்பட்டுள்ளன. தொகுப்பும்,வரலாறும் முழுமையானதல்ல. கட்டுரையாசிரியரின் கவனத்தில் வந்தவற்றிலும் ஒரு பகுதி மட்டும் இடம்பெறுகிறது.

2. கல் எழுத்துகளும், ஓலை எழுத்துகளும்

எழுதுபொருட்கள், எழுத்துகளின் உருவங்களை மாற்றிவிடும் என்பது தெரிந்த உண்மை. ஓலையும்,எழுத்தாணியும் தமிழ் நாட்டின் கருவிகள். ஓலை எழுத்துகளின் ஒளிப்பட நகல் போன்றது கல் எழுத்து. ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுதப்பட்ட கல் எழுத்துகள் எழுத்துகளின் வளர்ச்சியை அறிய உதவுகின்றன.

3. அச்சு எழுத்து

இந்தியாவில் முதலில் வெளியான அச்சுநூல் தமிழ் மொழியில் என்பது ஒரு கால கட்டம். தமிழ் அறிஞர்கள் ஒவ்வொருவரும் அந்த நூலின் எழுத்து

Doctrina Christam (page 1). 1578 en Lingua Malauar Tamil.
(The last two lines give the Tamil version of Title: *Tambiran vanakkam*)
Consists of 16 pages and is a Tamil translation by Henrique Henriques of St. Xavier's Portuguese book of the same name
Earliest example of printing in the Indian Script
By Courtesy of the Harvard University Library.


Esta letra, se fez, ē Goa: no ãnode lxxvii.

LetraTamul: feitaeCoulã: ãnodelxxviii.

Soli DEO honor, & gloria. Amen.

Doctrina Christam (page 16)

Published at Quilon in *Lingua Malabar Tamil.* The types used in the first 8 lines prepared in Goa in 1577.

(Esta letra, fe. fez. e Goa :a node ixxvii)

The thirteen following line were fashioned in Quilon in 1578.

(Letra Tamul : feitae Coula anode ixxviii)

The former types fashioned by Jonsalves & the latter by Faria?

By Courtesy of the Harvard University Library.

வடிவங்களைக் காண வேண்டும். அச்சிட்டோருக்குத் தமிழ் மேல் பற்று மிகுதி என்பது காரணமல்ல. அக்கால இந்திய மொழிகளில் எழுத்து வடிவங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது, தமிழ் மொழியில்தான். மரத்திலும், ஈயத்திலும் செதுக்கிய எழுத்துகள் பயன்பட்டன. அக்காலக் கல்வெட்டு, ஓலை எழுத்துகள் அந்நூலில் புழங்கின.

4. எழுத்துகளின் முதல் வடிவங்கள்

4. அ. க, கா போன்ற அகர, ஆகார உயிர் மெய் வடிவங்களில் வேறுபாடு தெரிந்தது. னா, ணா, றா வடிவங்களும் இருந்தன.

4. ஆ. கி, கீ போன்ற இகர, ஈகார உயிர்மெய் வடிவங்களில் வேறுபாடு குறைவு. இடம், பொருள் அறிந்து படிக்க வேண்டும்.

4. இ. கு, கூ போன்ற உகர, ஊகார உயிர்மெய் வடிவங்களில் குறிலுக்கும், நெடிலுக்கும் வேறுபாடு தெரிந்தது. ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு வகை.

4. ஈ. ெ, ே வடிவங்கள் கிடையாது. குறில், நெடில் வேறுபாடு இன்றி இடம் பார்த்துப் பொருள் கொள்ள வேண்டும்.

4 உ. ா, ர ஆகிய எழுத்துகளில் வேறுபாடு இல்லை. காடு, கரடு பிரித்துப் படிக்கத் தெரிந்து கொள்ளுதல் அறிவரியின் முதற்கட்டம்.

4. ஊ. ா போன்ற எழுத்துகளில் முதல் கோடு பாதி அளவும், இரண்டாவது கோடு முழு அளவும் இருந்தன.

4. எ. இ எழுத்து இன்றைய வடிவம் பெறவில்லை; ை எழுத்தைச் செங்குத்தாகப் போட்டது போல் ([illegible]) இருக்கும்.

5. சில மாற்றங்கள்

5.அ. எழுத்து மாற்றங்களின் தலையாய காரணம் அழகுணர்வு. அச்செழுத்து வார்த்த கலைஞர்கள் செய்த மாற்றங்கள் குறிப்பிடத்தக்கன. 4. ஊ. பிரிவில் கண்டுள்ள குறை நீங்கியது அழகுணர்வால் என்பது வெள்ளிடைமலை. 4. எ. பிரிவில் கண்ட இ வடிவம் படிப்படியாக வளர்ந்து விட்டது. எந்தத் தனிமனிதர் முயற்சியும் இல்லாமல், தானாகவே உருமாறி விட்டது. [illegible], ஆ, ஆ, ஜ, இ என்றவாறு வளர்ந்தது கண்டு மகிழத்தக்கது. இ, ஈ ஆகிய எழுத்து வடிவங்களில் ஈ எழுத்தை நீக்கிவிட்டு இ எழுத்தின் முனையில் சுழிக்கலாம் என்று பல தமிழறிஞர்கள் முயன்றனர். அந்த ஆலோசனை செயலாகவில்லை.

5.ஆ. ெ, ே குறியீடுகளின் தோற்றத்திற்கு பெஸ்கி என்னும் வீரமாமுனிவரைக் காரணமாகச் சொல்வார்கள். வீரமாமுனிவருக்குச் சற்று முன்னர் வாழ்ந்த இராணி மங்கம்மாள் மதுரை மீனாட்சியம்மை கோயிலில் வரைந்த படங்களிலேயே ெ,ே வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனினும் அவை வீரமாமுனிவர் மூலமாக அச்செழுத்து வார்ப்பவருக்குச் சென்றிருக்கலாம். இகர, ஈகார உயிர்மெய் நெரிசையில் குறில், நெடில் வேறுபாடு இக்காலத்திலேயே தோன்றிவிட்டது எனக் கொள்ளலாம். கி. கீ எழுத்துகள் அச்சில் எழுத்தின் வலநடுப்பகுதியிலிருந்து கிரீடம் போல மேலெழுந்து வரும். தட்டச்சுப் பொறிகளில் எழுத்தின் இடது மேல் முனையில் தொடங்கும். இக்கால முதல் வகுப்புப் பாடப் புத்தகத்தில், தட்டச்சு வடிவத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். ஆனால், அவற்றிற்கொப்ப நான்கு, அய்ந்தாம் வகுப்புப் புத்தகங்களிலும், மேல்வகுப்புப் புத்தகங்களிலும் மாற்றவில்லை. தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் படிப்படியாக இதனைச் செய்யவேண்டும். இத்திருத்தம் சீர்மை நோக்கியது; பாராட்டிற்குரியது.

5. இ. தற்போதைய முதல் வகுப்புப் பாடப்புத்தகத்தில் கொண்டு வந்துள்ள மற்றொரு திருத்தம் ா,ர வேறுபாடு, இதுநாள் வரை ரி, ரீ எழுத்துகளில் அடிக்கோடு இல்லை. புதிய வடிவில் அடிக்கோடு சேர்த்துள்ளார்கள். இதுவும் ஒரு மாபெரும் முன்னேற்றம். ரகர வரிசை எழுத்துகள் எல்லாவற்றிலும் அடிப்படை ரகரம் ஒரே மாதிரி இருக்கும்.

5. ஈ. பெரியார் நூற்றாண்டு விழாவின்போது தமிழ்நாடு அரசு பொது (செய்தி - மக்கள் தொடர்புத் துறையின் 1875 எண் கொண்ட 1978 - 10 - 19 நாளிட்ட அரசாணையின் மூலம் மூன்று திருத்தங்களை அறிவித்தது. ஐ, ஔ எழுத்துகளை அய், அவ் என எழுதுதல்; ஞ, ஹ, ஷ லை, ளை, னை, ணை ஆகிய எழுத்துகளை னா, ணா, றா, லை, ளை, னை, ணை என எழுதுதல். இதனால் அகர நெடில் நெரிசையும், ஔகாரக் குறில், நெடில் நெரிசையும், ஐகார நெரிசையும் சீர் பெற்றன. ஆனால் சில முதிய தமிழறிஞர்களுக்கு உயிர் மீது கை வைத்தது பிடிக்கவில்லை. குறிப்பாக முத்தமிழ்க் காவலர், ம. பொ. சி ஆகியோர் அந்நாள் முதலமைச்சர் எம். ஜி. ஆர் அவர்களை அணுகி ஐ, ஔ எழுத்துகளை நிறுத்தி வைத்தனர். கல்வித்துறையின் 4704 /த1/79.2 எண் கொண்ட 1979 - 05 - 23 நாளிட்ட அரசாணையில் இத்திருத்தம் வெளியாகியது. தமிழ்மொழி வளர்ச்சியில் இது ஒரு மாபெரும் பின்னடைவு. இக்கட்டுரையின் பின்பகுதியில் இதற்கான விளக்கம் காண்க.

6. அரசின் தலையீடு

எழுத்து வடிவங்களை மாற்றுவதில் அரசின் தலையீடு தேவையா என்பது பலரின் மனதில் தோன்றும் கேள்வி. எழுத்துகளை வழங்கும் தொழிலாளர்கள் அழகு போன்ற போர்வையில் எழுத்துகளின் வடிவங்களைச் சிதைத்து விடுகின்றனர். பழக்கத்தின் காரணமாக அவை சில நேரங்களில் பொதுமக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிலைத்து விடுகின்றன.

தந்தை பெரியார் று, றை, ரு, லை, ளை, னை, ணை, ஐ, ஔ ஆகிய எழுத்துகளைத் தானே தனது வெளியீடுகளில் அமல்படுத்திக் கொண்டிருந்ததால் இவை தேவையான மாற்றங்கள் எனத் தமிழுலகம் உணர்ந்துதான் இருந்தது. எனினும் பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கையை ஏற்காதவர்கள் இதனையும் ஏற்காதது மட்டுமல்ல எதிர்த்தும் வந்துள்ளனர்.

7. பேரரசன் இராசராசன்

இதற்கு முன்னர் தமிழ் எழுத்துகளைச் செப்பம் செய்தவர் பேரரசன் இராசராசன். அவன் காலத்தில் சோழ நாடு தவிர சேர நாடு, தொண்டை நாடு, பாண்டியநாடு, கொங்குநாடு ஆகிய பகுதிகளில் தமிழ் எழுத்துகள் வட்டெழுத்துகளாக மாறின. தன்னாட்டிலிருந்து வரும் ஓலைகளையே தன்னால் படிக்க முடியவில்லை. எனவே தனது ஆணைச்சக்கரம் செல்லும் இடமெல்லாம், தஞ்சைத் தரணி எழுத்துகளையே கையாள உத்தரவிட்டான். அதனால் தமிழகம் முழுவதும் ஒரே எழுத்து புழங்கும் நிலை உருவாயிற்று. சேர மண்டலம் மட்டும் இந்த உத்தரவைப் பின்பற்றாததால் இன்று மலையாள எழுத்துகள் தனித்து நின்றுவிட்டன. மலையாள எழுத்துகள் தமிழ் எழுத்துகளின் ஒரு படிநிலை என்பது திண்ணம்.

8. தேவை இன்னும் சில மாற்றங்கள்

அரசின் தலையீடு தேவைப்படும் ஒரே மாற்றம் உகர, ஊகார உயிர்மெய் நெரிசைகளுக்கு அடிப்படை எழுத்துடன் பக்கக் குறி சேர்த்தல் ஆகும்.

பிற திருத்தங்கள், அரசு முயற்சியில்லாமலே நிகழக் கூடியவை. அவை (அ) இகர, ஈகார நெரிசை மேல் விலங்கை எழுத்துடன் ஒட்டாமல், தனியே எழுதுதல். மெய்ப்புள்ளியை ஓரங்கட்டுதல். சுதேசமித்திரன் நாளேட்டில் அமரர் சி.ஆர்.சீனிவாசன் கையாண்டார்.

ஏற்கனவே ஒழிப்பதற்கு ஆணையிடப்பட்டு மீண்டும் உயிர் பெற்ற ஐ, ஔ

எழுத்துகளும், அவற்றின் எல்லா உயிர்மெய் எழுத்துகளும்.

இவை அனைத்திலும் உகர, ஊகார உயிர்மெய் நெரிசை ஒன்றைத் திருத்தினால் கூடப் போதும்.

9. தேவையை உணர்வோர்

9.அ. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவையை உணர்ந்தவர்கள் ஒரு சிலரே. தமிழ்ச்சிறார் அவருள் தலையாயவர். இளமழலை, முதுமழலை, முதல் வகுப்புகளில் பாடம் கற்கும் சிறார் (18+18 = 36) உயிர் மெய் உகர, ஊகார எழுத்துகளை எழுதிப் பழகும்போது, அந்தக் கொடுமைக்கார ஆசிரியைகளிடம் படும் அல்லல் அளவிடற்கரியது.

9.ஆ. அறிவொளி இயக்கத்தில் பயிலுவோரும் இந்த வகையில் பெருந்துயரம் அடைகின்றனர். 36 எழுத்துகள் குறைந்தால் பாதி சுமை குறைந்து விடும்.

9.இ. புதிதாகத் தமிழ் கற்கும் பிறமொழியாளர்கள்.

9.ஈ. கணிப்பொறி மூலம் அச்சுக்கோர்ப்போர் ஒலிவழித் தட்டச்சைப் பயன்படுத்துகிறார்கள். கஒடஉமஉடஇ எனத் தட்டினால் கொடுமுடி என அச்சாகும். எழுத்து குறைந்து ஒலிவழித் தட்டச்சு ஒழிந்தால் அவர் மகிழ்வார். இப்படி ஒரு அல்லல் இருப்பது தமிழ் உலகத்தில் யாருக்கும் தெரியாது.

9.உ. எழுத்தெண்ணிக்கை குறைந்தால் ஒரே தட்டச்சுப் பொறியில் ஆங்கிலம், தமிழ் இரண்டையும் வைத்துக் கொள்ளலாம்.

9.ஊ. தனித்தமிழ் தட்டச்சுப்பொறி 3 வரிசைகளில் அடங்கும். ஆங்கிலப் பொறியை விட மலிவாகும்.

கருவிகளை மறந்துவிடலாம். கையெழுத்திற்கே இது தேவைதான்.

10. முயற்சியின் சிறப்புக் கால கட்டங்கள்

10.அ. இந்த நூற்றாண்டின் முப்பதுகளில் தந்தை பெரியார் கும்பகோணம் கலைக் கல்லூரியில் ஆற்றிய சொற்பொழிவில் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி விரிவாகப் பேசுகிறார். உகர, ஊகார உயிர்மெய் வரிசைகளுக்குக் கிரந்தக் குறியீடுகளைப் பக்கக் குறியாகச் சேர்ப்பதை அப்போதே கூறியிருந்தார். எனினும் அவற்றை அவர் பின்பற்றவில்லை. ஐ, ஔ, லை, ளை, னை, ணை, ஞ, ணா, ரு ஆகிய எழுத்துகளை மட்டும் திருத்திக் கையாண்டார். அவர் காலத்தில் தமிழ் மக்கள் மசியவில்லை. அவர் காலத்திற்குப் பின்னராவது

நடைமுறைக்கு வந்தது குறித்து மகிழ்ச்சியடைய வேண்டும்.

10.ஆ. முப்பதுகளிலோ, நாற்பதுகளிலோ தமிழ் எழுத்தாளர் சங்கம் எழுத்துச் சீர்திருத்தம் பற்றித் தீர்மானம் நிறைவேற்றியதாகப் படித்துள்ளேன். சரியான காலம் தெரியவில்லை. எழுத்துச் சீர்திருத்தத்திற்கான உந்தல் அவ்வப்போது தோன்றிக் கொண்டே இருந்துள்ளது.

10.இ. நாடு விடுதலையடைந்த பின்னர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்தபோது கல்வி அமைச்சர் அவிநாசிலிங்கம் செட்டியார் எழுத்துச் சீர்திருத்தத்தை ஆராய ஒரு குழு ஏற்படுத்தினார். பேராசிரியர்கள் கே. சுவாமிநாதன், தி. சொக்கலிங்கம், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் போன்றோர் இருந்தனர். உகர, ஊகாரப் பக்கக்குறி உட்படத் தற்போது தேவைப்படும் எல்லாத் திருத்தங்களையும் பரிந்துரை செய்தனர். பின்னர் அமைச்சரவை மாறியது. இராசகோபாலாச்சாரியார் முதலமைச்சர் ஆனார். பரிந்துரைகள் அமலாக்கப்படவில்லை. 1952 Tamil Culture இதழில் இந்த விவரம் வெளியாகியுள்ளது.

10.ஈ. சுதேசமித்திரன் ஆசிரியர் சி. ஆர். சீனிவாசன் ஒரு சீர்திருத்தம் செய்தார். இகர, ஈகார உயிர்மெய்,வரிசைகளின் மேல் விலங்குகளை எழுத்தோடு ஒட்டி வார்க்காமல், தனித்தனியே வார்த்தார். இது மிகப் பெரிய முயற்சி. மிகச் சிறந்த முயற்சி. 17+17=34 எழுத்துகள் மிஞ்சின. டி, டீ இரண்டும் அப்படியே இருந்தன. சுதேசமித்திரன் நாளேடு 100 ஆண்டுகட்கு மேற்பட்டது. அந்த முயற்சியைத் தொடரவில்லை. அந்த ஏடு தொடர்ந்து வர இயலாது போனபோது, அதில் வந்த செய்திகளின் மீது பழி போடாமல், எழுத்தின் மீது பழி போட்ட தமிழர்களும் இருந்தனர். பெரியாருக்கு நேர்ந்த கதியேதான் இவருக்கும்; எனினும் தட்டச்சுப் பொறியில் இது அமலாயிற்று. தற்போதைய கணிப்பொறிகளிலும் புழக்கத்தில் உள்ளது.

இத்திருத்தத்திற்கு அரசின் ஒப்புதல் தேவையில்லை. மக்களே திருத்திக் கொள்ளலாம்.

10. உ. கேரள அரசு 1971 ஆம் ஆண்டு மார்ச்சு 23 ஆம் நாள் மலயாள மொழி எழுத்துகளுக்கு ஒரு திருத்தம் செய்து ஆணை பிறப்பித்தது. உகர, ஊகார உயிர்மெய் எழுத்துகளை, எழுத்தோடு பக்கக் குறி சேர்த்து எழுத ஆணையிட்டது. ஜுரம், ஜூலை சொற்களில் வரும் கிரந்தக் குறிகளை கிடைமட்டத்திலிருந்து செங்குத்தாகப் போடும் வடிவம் அறிமுகப்படுத்தப்பட்டது.

அண்டை மாநிலமான கேரளத்தில் தோன்றிய இந்த மாபெரும் முன்னேற்றம்

தமிழகத்தில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. 100 சதவீதம் எழுத்தறிவு பெற்ற மாநிலம் கேரளம். அதன் 23 ஆண்டு அனுபவத்தில் தமிழ்நாடும் பாடம் பெற்றாக வேண்டும்.

10. ஊ. 1971 ஆம் ஆண்டு புலவர் செ. இராசுவை ஆசிரியராகக் கொண்டு கொடுமுடி சண்முகப் பிரகதம் அவர்கள் கொங்கு திங்களிதழைத் தோற்றுவித்தார்கள். கடிதப் போக்குவரத்திற்காக ஒரு தமிழ்த் தட்டச்சுப் பொறி வாங்கினார். தமிழ்நாட்டில் கிடைத்த விளம்பரத்தை விட மத்திய அரசின் டிஏவிபி தொடர்ந்து விளம்பரம் மூலம் உதவி செய்தது. அவர்களோடு ஆங்கிலத்தில் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. ஆங்கிலத் தட்டெழுதி வாங்க நிதிவசதி இல்லை. ஒரே தட்டெழுதியில் ஆங்கிலம் தமிழ் வைத்துக் கொள்ள முயன்றார்கள். தமிழ் தட்டெழுதியில் மேல்தட்டில் இருந்த உகர, ஊகார உயிர்மெய் எழுத்துகளுக்கு மாற்று கண்டுபிடித்தால் போதும் எனக் கண்டார்கள். உயிர்க்குறிலோடு, கால் வாங்கி உயிர் நெடில் உண்டாக்கலாம் என்றும் கண்டனர். கேரளப் பல்கலைக்கழகத்தில் 1972 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தில் அறிவுத் தமிழ்த் தட்டச்சுப் பொறி என்ற தலைப்பில் கொடுமுடி சண்முகப் பிரகதம் ஒரு கட்டுரை படித்தார்கள்.

1973 ஆம் ஆண்டு பொங்கல் இதழில் கொண்டல் சு. மகாதேவன் கி. பி. இரண்டாயிரத்தில் தமிழ் என்னும் கட்டுரை எழுதினார். மெய்உயிர் என ஆங்கிலம் போலத் தமிழை எழுதலாம் என்றார். அக்கட்டுரை செந்தர வடிவிலும், புதிய வடிவிலும் கொங்கு இதழில் வெளியிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

கஒண்டஅல சஉ மஅகஆதஏவஅன் என்று எழுத வேண்டும். KONDAL SU MAHADEVAN என்று ஆங்கிலத்திலும் இவ்வாறு தான் எழுதுகிறோம் எனினும் தமிழறிஞர்கள் (?) இதைக் கேலியாகப் பார்த்தனர்.

இந்திய அரசாங்கம் இம்முறையை எல்லா இந்திய மொழிகளுக்கும் அறிமுகம் செய்தது. தொலைவரி (டெலெக்ஸ்) : கணிப்பொறி ஆகியவற்றில் இவ்வாறுதான் தட்ட வேண்டும் என ஏற்பாடு செய்தது.

தற்போது தமிழ்நாட்டு பத்திரிகையுலகம் இதை மிக அதிகமாகக் கையாளுகிறது. ஆனாலும் அந்தந்த ஏடுகளின் ஆசிரியர்கள் கூட, அச்சுக்கோர்க்கும் அறை சென்று இந்த முறையைக் கவனித்திருப்பாரா என்பது அய்யமே. எனினும் உகர, ஊகார நெரிசைத் திருத்தம் வந்தால் ஒலிவழித் தட்டச்சைத் தவிர்க்கலாம்.

1973 ஆம் ஆண்டு அக்டோபர் கொங்கு இதழில் கொடுமுடி சண்முகன், தமிழ் நெடுங்கணக்கு என்னும் கட்டுரை எழுதினார். இதில் உகர, ஊகார நெரிசைத்

திருத்தத்தோடு உயிர்க்குறிலோடு கால் சேர்த்து உயிர் நெடில் அமைக்கவும் பரிந்துரை செய்தார். சாதகபாதகம், புள்ளிவிவரம் எல்லாம் கொண்ட பெரிய கட்டுரை.

ஏராளமான வாசகர்கள் இதில் ஈடுபாடு கொண்டு கருத்துகளை எழுதிப் பகிர்ந்து கொண்டனர். கொங்கு தலையங்கம் புதிய வடிவிலேயே தொடர்ந்து எழுதப்பட்டது.

10.எ. நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1974 சனவரியில் இலங்கை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. மூன்று எழுத்துரைகள் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி வலியுறுத்தின.

இந்தியப் பொறியாளர் கொடுமுடி சண்முகன், லண்டன் மின்னணுவியல் பொறியாளர் வி.கே. தில்லைநாயகம், இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தட்டெழுத்தர் கோவிந்தப்பிள்ளை ஆகிய மூவரும் தன் அனுபவத்தின் இடரைச் சுட்டிக்காட்டி எழுத்துத் திருத்தம் கோரினர், உகர, ஊகார உயிர்மெய் நெரிசைத் திருத்தத்தை மூவரும் வலியுறுத்தினர்.

அடுத்து 1984 இல் மதுரையில் நடைபெற்ற அய்ந்தாவது மாநாட்டில் 10 பேருக்கு மேல் எழுத்துத் திருத்தம் கோரினார்கள். பேராசிரியை சாலினியாரின் கட்டுரை அழுத்தமாக இருந்தது. 1988 இல் மலேசியா - கோலாலம்பூரில் நடைபெற்ற ஆறாவது மாநாட்டில் 40 பேருக்கு மேல் எழுத்துத் திருத்தம் கோரினர்.

10.ஏ. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் ஆண்டுதோறும் கருத்தரங்கு நடத்துகிறது. 1974 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் மூன்றாம் நாள் புதுச்சேரி தாகூர் கல்லூரியில் கருத்தரங்கம் நடந்தது. முனைவர் சாலை இளந்திரையன், எழுத்துச் சீர்திருத்தம் பற்றிப் பேசத் தனிக்கூட்டம் ஏற்பாடு செய்தார். முனைவர் பொற்கோ, முனைவர் சாலினி அம்மையார், கொடுமுடி சண்முகன் ஆகியோர் பேசினர். பேராசிரியர்கள் கேள்விகளுக்கு உரிய விளக்கம் அளிக்கப்பட்டது.

அன்று மாலையில் நடந்த ஆட்சிக்குழுக் கூட்டத்தில் மன்றத்து வெளியீடுகளைப் புதிய எழுத்தில் கொணர வேண்டும் எனச் சாலையார் வற்புறுத்தினார். முனைவர் ச. அகத்தியலிங்கம், முனைவர் வ. சுப. மாணிக்கம், முனைவர் ந. சஞ்சீவி, முனைவர் மே. சுந்தரம், முனைவர் த. ஏ. ஞானமூர்த்தி போன்ற பலர் இருந்தனர். யார் எந்த வடிவத்தில் அனுப்புகிறார்களோ அதே வடிவில் அச்சிடுவது என முடிவு எடுத்தனர்.

சாலையார் பெரிதும் வற்புறுத்தியது ஐ,ஔ எழுத்துகளையும் அதன் உயிர்மெய் வடிவங்களையும் பிரித்து எழுத வேண்டும் என்பதே. அவர் இவ்வெழுத்துகளைப் பிரித்தே எழுதி அனுப்பியிருந்தார். அதே வடிவில் அவரது கட்டுரை வெளியாயிற்று.

கொடுமுடி சண்முகன் கட்டுரை ~, ൗ குறிகளைப் பயன்படுத்தி எழுதப்பட்டிருந்தது. அதே வகையில் கட்டுரை அச்சிடப்பட்டது. பின் வந்த ஆண்டுகளிலும் கொடுமுடியார் கட்டுரை மட்டும் இதே வடிவில் தொடர்ந்து அச்சிடப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

10.ஓ. விடுதலை ஏடு தொடர்ந்து எழுத்துச் சீர்திருத்த முயற்சியில் ஈடுபட்டிருந்தது. பெரியார் பிறந்த நாள் விழா மலர்களில் பல அறிஞர்களின் கருத்துக்களைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தது. 1972 ஆம் ஆண்டு மலரில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் கருத்துக்கோவை என்ற தொகுப்பு வெளியிட்டது. மதுரை பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனார், பன்மொழிப்புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், தமிழ்நாடு அரசு தமிழ்வளர்ச்சி இயக்குநர் பேராசிரியர் கே. எஸ். மகாதேவன், மதுரை பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர். அ. ச. ஞான சம்பந்தன், திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழக, தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் ஆகியோர் கட்டுரைகள் வெளியாயின.

1974 ஆம் ஆண்டு மலரில் தமிழ்நாடு பொது நூலக இயக்குநர் வே. தில்லைநாயகம் அவர்களின் கட்டுரை வெளியாயிற்று. கொங்கு இதழிலும் அவ்வப்போது எழுத்துத்திருத்தம் பற்றி எழுதி வந்தார். எழுத்துச் சீர்திருத்தத்தில் பெரியாரின் விடுதலை இதழ் பணி ஒப்பற்றது.

10.ஓ. தமிழகப் புலவர் குழுவின் 37 ஆவது கூட்டம் 3.11.1975 ஆம் நாள் திருச்சிராப்பள்ளி மறைமலையடிகளார் மன்றத்தில் நடைபெற்றது. 34 புலவர் கலந்து கொண்ட கூட்டத்தின் 35 ஆவது தீர்மானம் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய கூட்டம் ஆகும். 16 உறுப்பினர் கொண்ட குழு நியமிக்கப்பட்டு 22. 12. 1975 அன்று கூடி முடிவெடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

எழுத்துச் சீர்திருத்தக் குழுவின் சிறப்புக் கூட்டம் 2.2.1975 அன்று நடைபெற்றது. அந்நாள் தமிழ்வளர்ச்சி இயக்குநர் கொண்டல் சு. மகாதேவன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. டாக்டர் சி. பாலசுப்ரமணியம், டாக்டர் ந. சஞ்சீவி, டாக்டர் சண்முகம்பிள்ளை, டாக்டர் வ.சுப. மாணிக்கம் ஆகியோர்

பேசினர். விரிவான கலந்துரையாடலுக்குப் பின்னர் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. உயிர்மெய் எழுத்துகளின் வரிசையிலுள்ள எல்லா எழுத்துகளும் ஒரு சீராகக் கால் (ா) பெறும். குறிப்பாக ணா, றா, னா ஆகிய மூன்று எழுத்துகளும் ணா, றா, னா என்று எழுதப் பெறும்.

2. உயிர்மெய் எழுத்துகளில் ஐகார வரிசையில் உள்ள எல்லா எழுத்துகளும் ை குறியீடே பெறும். தும்பிக்கை வளைவுகள் நீக்கப்படும். இதன் விளைவாக ணை, லை, ளை, னை ஆகிய நான்கு எழுத்துகளும் ணை, லை, ளை, னை என எழுதப்பெறும்.

3. உயிர்மெய் எழுத்துக்களில் உகர, ஊகார வரிசைகளில் முறையே ⌐, σ என்னும் குறிகள் இடம் பெறும். இதனால் இவ்வரிசைகளில் எல்லா எழுத்துகளும் ஒரு மாற்றம் பெறும். காட்டாக:

கு - க⌐	கூ - கσ
சு - ச⌐	சூ - சσ
பு - ப⌐	பூ - பσ

இந்தக் கூட்டத்தில் முத்தமிழ்க் காலவர் கி. ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. அவருக்கு எழுத்தைத் திருத்துவது உவப்பில்லை. ஒரு திருத்தத்திற்கு இடம் கொடுத்தால், ஏராளமான திருத்தங்கள் வரும் என்பது ஒன்று. தமிழ் உயர்தனிச் செம்மொழி; திருத்த இடம் கொடுத்தால் குறையுடையது என்றாகி விடும் என்பார்.

தமிழ் எழுத்துத் திருத்தம் வேண்டுவோர் தமிழ்த்துரோகிகள் என்று பேசியும் எழுதியும் வருகிறார். அதன் மூலம், தமிழுக்கே உயர்வு தரும் தமிழகப் புலவர் குழுவையே, தன்னையறியாமலேயே, அப்பட்டியலில் சேர்த்து விடுவதை அவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

10.அ.அ. தமிழக முதல்வர் எம். ஜி. ஆர் ஒரு அதிசயமான முதல்வர். பெரியார் நூற்றாண்டு விழா 1978 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. இதை ஒரு வாய்ப்பாகக் கொண்டு, பெரியார் புழுங்கிய மூன்று மாற்றங்களை அரசு ஏற்றுக் கொண்டது. அவை ஐ, ஔ, ணை, லை, ளை, னை, ணா, றா, னா ஆகியவற்றை அய், அவ், ணை, லை, ளை, னை, ணா, றா, னா, எனத் திருத்தி எழுதுதல் ஆம். 19.10.1978 நாளிட்ட அரசாணை இதனை அறிவித்தது. அந்நாள் தமிழ் வளர்ச்சி இயக்குநர் கொண்டல் சு. மகாதேவன், கல்வி அமைச்சர் நாவலர்

இரா. நெடுஞ்செழியன் ஆகிய இருவரும் இம்மாபெரும் சாதனைக்கு உதவியவர்கள் ஆவர். எனினும் சில தமிழ் முதியோர் முயற்சியால் ஐ, ஔ மீண்டும் உயிர் பெற்றுக் கொண்டது. 23.5.1979 நாளிட்ட குறிப்பாணை இதனை அறிவித்தது. புலவர் குழு இயற்றிய தீர்மானம், அரசின் இம்முடிவிற்கு உதவியாக இருந்தது.

1978 ஆம் ஆண்டு அரசாணையில் தமிழகப் புலவர் குழுவின் உகர, ஊகார உயிர்மெய் எழுத்துகளுக்கான சீர்திருத்தம் இடம் பெறாதது வருத்தத்திற்குரியதேயாகும். புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். மலையாளம் நன்கு அறிந்தவர். கேரள அரசின் 1971 ஆம் ஆண்டின் உத்தரவை அவரது கவனத்திற்குக் கொண்டு போயிருந்தால், எளிதில் ஒப்புதல் பெற்றிருக்க முடியும். இது போன்ற வாய்ப்பு இன்னொரு முறை அமைவது அரிது.

10.அஆ. டாக்டர் கலைஞர் கருணாநிதி பெரியாரின் சீடர். அவரது வீட்டில் "மு. கருணாநிதி" என்று எழுதப்பட்டுள்ளதைப் பலரும் பார்த்திருக்கலாம். 15. 1. 1972 கொங்கு இதழில் இதனைச் சுட்டிக்காட்டி "வீட்டில் இருப்பது நாட்டிற்கு வர வேண்டும்" எனச் செய்தி வெளியிட்டது கொங்கு.

கொங்கு 1973 அக்டோபர் இதழில் வெளியான "தமிழ் நெடுங்கணக்கு" என்ற கட்டுரையைக் கலைஞரும், பேராசிரியர் அன்பழகனும் ஒரு மணி நேரத்திற்கு மேலாகக் கூடி ஆராய்ந்ததாகப் பேராசிரியரின் நேர்முக உதவியாளர் திரு சாமிநாதன் அவர்கள் கட்டுரையாளரிடம் கூறியுள்ளார். விரைவில் தேர்தலை எதிர் நோக்க வேண்டியிருந்ததால் எழுத்துத் திருத்தத்தை அப்போது அவர்களால் மேற்கொள்ள இயலவில்லை. அடுத்து ஆட்சிக்கு வந்த எம். ஜி. ஆர். இப்பெருமையைப் பெற்றுக் கொண்டார். பெரியாரின் முதன்மைச் சீடராக இருந்தபோதிலும் கலைஞர் இதனை அப்போது ஏற்கவில்லை.

அடுத்து வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் கடைசி இனமாக எழுத்துச் சீர்திருத்தம் இடம் பெற்றிருந்தது. அறிஞர்கள் கருத்தறிந்து தமிழுக்குத் தேவையான எழுத்து சீர்திருத்தம் முழுமையாகச் செய்வோம் என்று காணப்பட்டது. அந்தத் தேர்தலில் திமுக வெற்றி பெற முடியவில்லை. அடுத்து வந்த தேர்தல் அறிக்கைகளில் இது இடம் பெறவில்லை.

குமுதம் போன்ற பல ஏடுகள் புதிய எழுத்திற்கு மாறிய பின்னரும் முரசொலியில் எழுத்தை மாற்றவில்லை. தினமணியில் அய்ராவதம் மகாதேவன் பொறுப்பேற்று எழுத்தை மாற்றினார். அதன் பின்னரே முரசொலியில் எழுத்தை, மாற்றினர்.

கலைஞர் மீண்டும் ஆட்சிக்கட்டில் ஏறினார். எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய குரல் மீண்டும் ஓங்கி ஒலித்தது. முனைவர் வா. செ. குழந்தைசாமி போன்றோர் இதனை வலியுறுத்தினர். எனினும், முத்தமிழ்க் காவலர் மட்டும் கடுமையாக எதிர்த்தார். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அவர் இன்னும் வலிமையானவர். பேராசிரியர் அன்பழகன் மூலமாக, ஓர் அறிக்கை விட்டு அடங்கினார். எழுத்துச் சீர்திருத்தக் குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்றும் மக்கள் கோரினால் யோசிக்கப்படும் என்ற வகையில் அந்த அறிக்கை அமைந்தது.

உகர, ஊகார உயிர்மெய் எழுத்துகளைத் திருத்தியிருந்தால், தமிழ் எழுத்து வளர்ச்சி வரலாற்றில் அழியா இடம் பெற்றிருப்பார் கலைஞர். அந்த அரிய வாய்ப்பு அவருக்கு இதுவரை கிட்டவில்லை.

11. கருத்தரங்குகள்

எழுத்துச் சீர்திருத்தம் பற்றிப் பல கருத்தரங்குகள் நடைபெற்றன. அரசின் எழுத்துச் சீர்திருத்த ஆணைக்கு முன் நடைபெற்ற கருத்தரங்குகளில் தலையாயது 1974 சனவரியில் யாழ் நகரில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு முதன்மையானது. அதே ஆண்டு இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் புதுச்சேரி தாகூர் கல்லூரிக் கருத்தரங்கு (1974 சூன்) குறிப்பிடத்தக்கது. 1975 பிப்ரவரி இரண்டில் நடைபெற்ற புலவர் குழுவின் சிறப்புக் கூட்டம் அனைத்திலும் தலையாயது. 1978 அக்டோபரில் தமிழக அரசின் ஆணை வந்தது. பின்னர் பல கருத்தரங்குகள் நிறைவேறின. அனைத்திலும் உகர, ஊகார உயிர்மெய் எழுத்துச் சிர்திருத்தம் வலுவோடு பேசப்பட்டது.

11.அ. 24.12.1978 அன்று தந்தை பெரியார் நூற்றாண்டு விழா அரசின் கல்வித்துறை சார்பில் நடைபெற்றது.

11.ஆ. 28.2.1979 அன்று மதுரை பல்கலைக்கழகம் ஒரு கருத்தரங்கம் நடத்தியது. முனைவர் பொற்கோ, கொடுமுடி சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டனர். பேராசிரியர் முத்துச் சண்முகனார் ஏற்பாடு செய்தார்.

11.இ. 20.5.1979 அன்று அறிவியக்கப் பேரவை சார்பில் பேராசிரியர் சாலை, சாலினி தம்பதியர் சென்னை மத்திய நூலகத்தில் ஒரு கருத்தரங்கு நடத்தினர். உகர, ஊகார உயிர்மெய் எழுத்துத் திருத்தத்தைக் கொடுமுடி சண்முகனாரும், சாலினியாரும் வலியுறுத்தினர். சாலையாரும், கொண்டல் மகாதேவனும் ஐ, ஔ திருத்தத்தை வலியுறுத்தினர். பின்னர் சாலையார் தனது வெளியீடுகளில் உயிர்மெய் ஐ, ஔ எழுத்துகளை நீக்கி எழுதத் தொடங்கிவிட்டார். இதற்கு ஆதரவான கருத்துக்களைக் கொண்டலார்

ஏராளமாகத் திரட்டித் தந்துள்ளார்.

11.ஈ. 25.8.1979 அன்று தில்லித் தமிழ்ச் சங்கத்தில் பேராசிரியர் சாலை, சாலினி தம்பதியர் எழுத்துச் சீர்திருத்தக் கருத்தரங்கு நடத்தினர்.

11.உ. 5.10.1980 அன்று சென்னை மத்திய நூலகத்தில் பெரியார் பிறந்த நாள் விழாக் கருத்தரங்கம் நடைபெற்றது. கொடுமுடி சண்முகம் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி விளக்கினார்.

11.ஊ. 26,27.12.1981 நாட்களில் சென்னையிலுள்ள தமிழ், வடமொழி, பிற இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிறுவனம், அதன் இயக்குநர் ஆறு. அழகப்பன் முயற்சியால் எழுத்துத் திருத்தத்திற்கென்றே தனிக் கருத்தரங்கம் நடத்தியது. கல்வி அமைச்சர் அரங்கநாயகம் உட்பட 34 பேர் கலந்து கொண்டனர். தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செயலாளர் முனைவர் ஔவை நடராசன் அவர்கள் தலைமை ஏற்றார்கள்.

11.எ. 10.1.1982 அன்று எழுத்துச் சீர்திருத்த இயக்கம் உருவாயிற்று. முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் தலைவராகவும், தமிழாசிரியர் கழகத் தலைவர் புலவர் புகழேந்தி செயலாளராகவும் பணியாற்றினார். தினமலர் ஆசிரியர் கிருட்ணமூர்த்தி, தினமணி ஆசிரியர் அய்ராவதம் மகாதேவன், பொது நூலக இயக்குநர் வே. தில்லை நாயகம், கொடுமுடி சண்முகம் போன்ற பலர் அதில் பங்கேற்றனர். அரசிற்குப் பலமுறை கோரிக்கைகள் வைத்துக் கொண்டேயிருந்தனர்.

11.ஏ. 1984 இல் கோலாலம்பூரில் நடைபெற்ற அய்ந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடும் 1988 இல் மதுரையில் ஆறாவது மாநாடும் எழுத்துச் சீர்திருத்த முயற்சியில் மக்களின் ஈடுபாட்டை எடுத்துக்காட்டின. பிரதி செய்யும் தொழிலில் (Reprography) ஈடுபட்டவர்களே இதில் அதிகம் ஈடுபாடு காட்டினர். தமிழறிஞர்களின் ஈடுபாடு குறைவு. ஆதரவு நிலையை விட எதிர்ப்புநிலையே அதிகம்.

11.ஒ. 1988 ஆகஸ்ட் 6 ஆம் நாள் அண்ணா பல்கலைக்கழகத்தின் பாரதி அறக்கட்டளை சார்பாக ஒரு மாபெரும் கருத்தரங்கினை துணைவேந்தர் வா.செ. குழந்தைசாமி நடத்தினார். அதில் எழுத்துச் சீர்திருத்தமும், ரோமன் எழுத்துப் பயன்பாட்டில் செந்தரமும் இரண்டு தலையாய தலைப்புகள். அறிஞர்கள் அண்ணா பல்கலை வளர்தமிழ் மன்றத்தின் சார்பாக எழுத்துச் சீர்திருத்தக் குழு ஒன்று அமைத்து, பல கூட்டங்கள் நடத்தி ஆராய்ந்து ஓர் அறிக்கை தயாரித்து, அந்நாளில் கல்வி அமைச்சர் அன்பழகன், முதல்வர்

கலைஞர் கருணாநிதி ஆகியோரிடம் வழங்கினர். தினமணி இதழில் கட்டுரையாகவும் வெளியிட்டார். உகர, ஊகார உயிர்மெய் எழுத்துகளுக்குப் பக்கக் குறி சேர்த்தலும், இகர, ஈகார உயிர்மெய் மேல் விலங்குகளை எழுத்தோடு ஒட்டாமல் தனியாகப் போடுவதும் அடங்கும்.

எழுத்துச் சீர்திருத்த வரலாற்றில் முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்களுக்குத் தனி இடம் உண்டு. பல பெரும் பொறுப்புகளை வகித்த அவர் எந்த முயற்சியையும் விட்டு வைக்கவில்லை. தமிழுலகம் அவருக்குப் பெருத்த அளவு கடமைப்பட்டுள்ளது. ஒத்த கருத்துடையவர்களை இணைத்துக் கொண்டு, கூட்டு முயற்சியில் செயல்பட அவரது தலைமைப் பண்பு போற்றுதற்குரியது.

11.ஓ. அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், சென்னைப் பல்கலைக்கழகமும், எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய கருத்தரங்குகள் நடத்தின. எழுத்துச் சீர்திருத்தம் பேரியக்கமாக ஆங்காங்கு நடந்தன. எனினும், எல்லா முயற்சிகளும் நெல்லிக்காய் மூட்டை போலவே இருந்தன. தமிழ் அறிஞர்கள் ஓரளவு இதன் பொருண்மையைப் புரிந்து கொண்டபோதிலும், தமிழ்க் காவலர்கள், அவரின் கண்மூடித் தொண்டர்கள் ஆகியோரின் மனதை மாற்ற இயலவில்லை.

12. ஏடுகளும் மனிதர்களும்

எழுத்துச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரை, சில ஏடுகள் வரிந்து கட்டிக் கொண்டு செய்தி பரப்பி வந்தன. ஏடுகளின் வழியேயும், நேரடியாகவும் பலர் ஒரு வெறியோடு தொடர்ந்து பாடுபட்டுவந்தனர். அறிவியக்கம், கொங்கு, புலவர், செந்தமிழ், தினமலர், சுதேசமித்திரன், களஞ்சியம் போன்றவை குறிப்பிடத்தக்கன. அறிவியக்கம் திங்களிதழின் வாயிலாக முனைவர் சாலை, சாலினியார் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய செய்திகள் ஏராளமாக வந்தன. எழுத்துச் சீர்திருத்த மாநாட்டு மலரில், எழுத்துச் சீர்திருத்த வரலாற்றைத் தொகுத்துத் தந்துள்ளனர். 8. 7. 1979 முதல் ஐ, ஔ வரிசை உயிர் எழுத்து உயிர்மெய் எழுத்துகளை நீக்கி வெளியிட்டுச் சாதனை படைத்துள்ளனர். இதில் கொண்டல் மகாதேவன் கட்டுரைகளும் குறிப்பிடத்தக்கன. சாலினி அம்மையாரின் தட்டெழுதிச் சாவிப்பலகை மதுரை உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. சென்னையிலும், தில்லியிலும் கருத்தரங்குகள் நடத்தினர்.

கொங்கு இதழ் வழியாகக் கொடுமுடி சண்முகம், கொடுமுடி சண்முகப் பிரகதம் தம்பதியர் பல முயற்சிகள் செய்துள்ளனர். தலையங்கத்தில் உகர, ஊகார உயிர்மெய் எழுத்துகளைக் கிரந்தக் குறிகளுடன் (ு, ூ) அச்சிட்டு வந்தனர். புள்ளி

விவரங்கள் ஏராளமாகத் தந்தனர். ஆங்கிலம், தமிழ் இருமொழித் தட்டெழுதிச் சாவிப் பலகைகள் வெளியிட்டனர். கொங்கு ஐ, கொங்கு ஐஐ, கொடுமுடி ஐ, கொடுமுடி ஐஐ, பெரியார், திருவள்ளுவர் ஐ, திருவள்ளுவர் ஐஐ என்ற ஏழு தட்டெழுதிச் சாவிப் பலகைகளை அறிமுகப்படுத்தினர். அண்ணா பல்கலைக்கழகம், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ்சுக்காக ஒலிவழிச் சாவிப் பலகை அமைத்துத் தந்தனர். உகர, ஊகார உயிர்மெய்க் குறியீடுகளின் வடிவங்களை மக்கள் கணிப்பின் மூலம் தேர்ந்தெடுத்துத் தந்தனர். ஒவ்வொரு ஆண்டின் பொங்கல் வாழ்த்து அட்டைகளையும் புதிய வடிவிலேயே அச்சிட்டு அனுப்பி வந்தனர். புதிய தமிழ் வடிவம், தேவைக்கேற்ற தமிழ் இவர்களின் படைப்பு.

புலவர் திங்களிதழ் வழியாக, தமிழாசிரியர் கழகத் தலைவர் புலவர் புகழேந்தி தொடர்ந்து எழுத்துச் சீர்திருத்தத்தை வலியுறுத்தினார். தலைப்புகளைப் புதிய வடிவத்தில் வெளியிட்டார். ஓராண்டு பொங்கல் வாழ்த்தைப் புதிய வடிவில் வெளியிட்டார். இவர் மூலமாகப் பெரும்பாலான தமிழாசிரியர்கள் ஆர்வம் பெற்றனர்.

தினமலர் ஆசிரியர் கிருட்ணமூர்த்தி, எழுத்துச் சீர்திருத்தம் பற்றிப் பல கட்டுரைகள் வெளிவர ஏற்பாடு செய்தார். பண்டைய நாணயங்களில் உள்ள தமிழ் (பிராமி) எழுத்துகளையும், பட்டயத்து வட்டெழுத்துகளையும் ஆராய்ந்து சான்றுகள் வழங்கினார். தூ, றூ போன்ற எழுத்துகளைப் பிரித்து துா, றுா என்றவாறு வெளியிட்டார்.

சுதேசமித்திரன் இகர, ஈகார உயிர்மெய் வடிவங்களின் மேல் விலங்குகளைப் பிரித்துப் போட்டுத் தொடர்ந்து அச்சிட்டார். இது மிகப் பெரிய சாதனை.

செந்தமிழ் ஏட்டின் மூலம் முனைவர் பொன். கோதண்டராமன் (பொற்கோ) பல அரிய ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வந்தார். எழுத்துச் சீர்திருத்தத்திற்கு அடிப்படை ஆதாரங்கள் பல வழங்கிய பெருமை இவருக்குண்டு.

களஞ்சியம் அண்ணா பல்கலைக்கழகத்தின் வளர்தமிழ் மன்றத்தின் காலாண்டு ஏடாகும். முனைவர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் ஏற்பாடு செய்த கருத்தரங்குகள் பற்றிய தகவல் தந்தது.

கலைமகள், ஆசிரியர் கி.வா. ஜகந்நாதன் உகர, ஊகார உயிர்மெய்க் குறிகளுக்குக் கிரந்தம் (ு, ூ) பயன்படுத்த ஆதரவு தெரிவித்துக் கட்டுரை எழுதினார்.

கலைக்கதிர் முதலான பல்வேறு ஏடுகளும் அவ்வப்போது கட்டுரைகள் வெளியிட்டன.

தமிழ்நாடு மின்வாரியப் பொறியாளர் கழகப் பொதுச் செயலாளர் அ. ப. இராமசாமி 1982 ஆம் ஆண்டுப் பொங்கல் வாழ்த்தைப் புதிய வடிவில் வெளியிட்டார். ஏராளமான பேர் முயன்றுள்ளனர். நினைவில் நின்றவை எழுத்தில் வந்தன.

13. இன்றைய தேவைகள்

13.அ.உகர, ஊகார உயிர்மெய் எழுத்துகளைப் பக்கக் குறியோடு எழுதும் முறை ஒன்று இன்றியமையாதது. அரசின் வல்லாண்மை தேவைப்படுவது இதற்கு மட்டுமே.

அடிப்படை எழுத்துகளுக்குச் சமமாகத் தவிர்க்கக் கூடிய எழுத்துகள் இருப்பதைக் காண்க. இவை ஒழிந்தால் பாதிக்குப்பாதி தொல்லை குறையும். இது மாபெரும் நன்மையல்லவா? குழந்தைகளும் அறிவொளி இயக்கத்தினரும் பெரும் பயன் பெறுவர்.

அடிப்படை எழுத்துகள்

அ	இ	உ	எ	ஒ	ஃ
ஆ	ஈ	ஊ	ஏ	ஓ	ஐ
க	ச	ட	த	ப	ற
ங	ஞ	ண	ந	ம	ன
ய	ர	ல	வ	ழ	ள

உயிர்மெய்க் குறிகள்

ு	ா
ீ	ூ
ு	ி
ெ	ே
ை	

தவிர்க்க முடிந்த எழுத்துகள்

கு	சு	டு	து	பு	று
கூ	சூ	டூ	தூ	பூ	றூ
ஙு	ஞு	ணு	நு	மு	னு
ஙூ	ஞூ	ணூ	நூ	மூ	னூ
யு	ரு	லு	வு	ழு	ளு
யூ	ரூ	லூ	வூ	ழூ	ளூ

அகர ம~தல எழ~த்தெல்லாம் ஆதி
பகவன் ம~தற்றே உலக~.

13.ஆ. கிரந்தக் குறியீடு (~, ூ), மலையாளக் குறியீடு (ു, ൂ) வ. சுப. மாணிக்கனார் புலவர் குழுவுக்குச் செய்த பரிந்துரை (⊂‾, ʊ‾) ஆகிய மூன்றில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அரசாங்கம் தேர்ந்தெடுக்கும் வரை தமிழ் முதல் வகுப்பில் கற்றுத் தரும் (~, ூ) கிரந்தக் குறியீடுகளைப் பயன்படுத்தி வரலாம்.

13.இ. ஐ, ஔ உயிர் எழுத்துகளும் அதன் உயிர்மெய் வரிசை எழுத்துகளும் தவிர்க்கப்பட வேண்டியவை. சாலை இளந்திரையன் போன்று பல பேராசிரியர்கள் தொடர்ந்து எழுதி வந்தால் தானே அமலாகிவிடும். எழுதுவோர் முன்வர வேண்டும்.

13.ஈ. இகர, ஈகார உயிர்மெய் மேல்விலங்கை எழுத்தோடு ஒட்டாமல், தனியே பக்கத்தில் போட்டால் போதும். ஏற்கனவே சுதேசமித்திரன் இதழில் இவ்வாறு செய்து காட்டியுள்ளனர். தேவைக்கேற்ற தமிழில் ஒரு பக்கம் அச்சிட்டுக் காட்டப்பட்டுள்ளது. அச்சகத்தார் தானே முன்வந்துவிடுவர்.

13.உ. மெய்ப்புள்ளி எழுத்தின் தலை மேல் வைக்கப்படுகிறது. ஈய எழுத்து வார்ப்புகளில் மட்டுமே இத்தொல்லை உண்டு. தட்டெழுதி, கணிப்பொறிகளில் புள்ளியைத் தனியே வைக்கும் வசதி உண்டு. எனவே, இதற்கும் அரசின் முயற்சி தேவையில்லை.

13.ஊ. கிரந்த எழுத்துகள் நிலை தமிழ்நாட்டில் அடிக்கடி மாறிக் கொண்டே வந்துள்ளது. தமிழ்நாடு அரசாங்கம் வெளியிடும் காலண்டரில் முன்பு [illegible]ன், [illegible]லை என இருந்தன. தற்போது அவை ஜூன், ஜூலை ஆகிவிட்டன. முதல் வகுப்புத் தமிழ்ப் பாடநூலில் வடமொழி எழுத்துகள் என்று ஒரு பாடம் இருக்கும்.

தற்போதுள்ள முதல் வகுப்புப் பாடநூலில் அதை எடுத்துவிட்டார்கள். அதன் தலைப்பே தவறு. வடமொழியில் இந்த எழுத்துகள் இல்லை. ஜூன், ஜூலை எழுத இவ்வெழுத்துகள் பயன்படுகின்றன; அவை ஆங்கிலச் சொற்கள். அப்பாடத்தின் தலைப்பு கிரந்த எழுத்துகள் என்று இருக்க வேண்டும். தமிழ்நாட்டில் மூன்று, நான்காம் நூற்றாண்டில் தமிழர்களே உருவாக்கிக் கொண்டவை. புழக்கத்தில் உள்ளவை ஆறு எழுத்துகள் மட்டுமே.

ஜ	ஸ	ஷ	ஹ	க்ஷ	ஸ்ரீ

தமிழ் நாட்டு முதலமைச்சரின் பெயரை எழுதவாவது இவை இருந்தாக வேண்டியுள்ளது. எனினும் எழுதும்போது இவற்றைத் தவிர்த்து எழுதுதலே நற்றமிழ் ஆகும்.

14. நிறைவுரை

எழுத்துச் சீர்திருத்தம் என்னும்போது ஏராளமான யோசனைகள் களத்தில் உள்ளன. அவையனைத்தும் இங்கே கருதப்படவில்லை. முன்னேற்றத்திற்கான தேவை என்றுணர்ந்தவற்றை மட்டுமே திருத்தக் கோருகிறோம். திருத்தம் தாமதப்பட்டால் முன்னேற்றம் தாமதப்படும்.

இன்றியமையாத் தேவை என்பது உகர, ஊகார உயிர்மெய் நெரிசை எழுத்துகளை மாற்றுதலே ஆகும்.

நூற்றொகை

1. ஆசான், கு. வே. கி, 01. 05. 1979, அறிவியக்கம், பக். 19, கடிதம்.

2. இராசகோபாலன், குடந்தை வீரா, (1979) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் புரட்சி.

3. இளந்திரையன், சாலை. 04.01.1979 செய்தி மக்கள் தொடர்பு நெறியாளருக்குக் கடிதம்.

4. ———————— 01. 05. 1979, அறிவியக்கம், எழுத்துச் சீர்திருத்த மாநாட்டு மலர் மறுபரிசீலனை தேவையா?, பக் 1-13, எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய நீண்ட வரலாறு.

5. ———————— 1979, களத்திலே கடிதங்கள், 01. 05. 1979, அறிவியக்கம், பக். 27.

6. ———————— 01. 01. 1979, அறிவியக்கம், ஏற்றுக் கொண்டதாய்க் கடைப்பிடிக்கிறோம், பக். 10, எழுத்துக்குள்ளே கடவுள்களா?, பக். 11-12.

7. ———————— & சாலினி, 15. 09. 1974, எழுத்துச் சீர்மையில் உகர, ஊகார வடிவங்கள், கொங்கு, பக். 206 & 207.

8. இளந்திரையன், சாலினி, 01. 05.1979, அறிவியக்கம், தமிழில் தட்டெழுதி, பக். 22 - 25.

9. ———————— 1981 சனவரி, தட்டெழுதியின் சீரமைப்பில் உயிர்மெய்

எழுத்து வடிவங்கள், ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக் கட்டுரை.

10. இராஜகுள்ளி, கி, 01. 11. 1979, அறிவியக்கம், சீர்மய்ச் சிந்தனய், பக். 10.

11. ஈ.வே. ரா. பெரியார் (நமது முன்னோடிகள்), 01. 05. 1979, அறிவியக்கம், பக். 28.

12. உலகநாதன், மு, 1978, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், முத்துச் சிதம்பரனார் பதிப்பகம், மதுரை.1 01. 05. 1979, அறிவியக்கம்,பக். 27.

13. கணபதி, 1979 பிப்ரவரி, கலைமகள், திங்களிதழ், எழுத்துச் சீர்திருத்தத்தால் தட்டெழுத்துக்கு நன்மை உண்டா?, பக். 161 - 4.

14. கிருட்ணமூர்த்தி, இரா. 1978, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், தினமலர் நாளேடு, திருச்சி வெளியீடு, 01. 05. 1979 அறிவியக்கம், பக். 27.

15. குருசாமி, கொள்கைவேள், (நமது முன்னோடிகள்) 01. 05. 1979, அறிவியக்கம், பக். 31.

16. குருசாமி, புலவர் செ., திருச்செங்கோடு, 1979 சித்திரை, புலவர் இதழ் எழுத்துச் சீர்திருத்தம் தேவை, பக். 45-45.

17. குழந்தை, புலவர், 1968, தமிழெழுத்துச் சீர்திருத்தம், வேலா பதிப்பகம், ஈரோடு. 01. 05. 1979, அறிவியக்கம், பக். 27.

18. ———————— (நமது முன்னோடிகள்), 01. 05. 1979, அறிவியக்கம், மறுபதிப்பு.

19. ———————— 1979, தமிழ் எழுத்துச் சீரமைப்பு, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 01. 05. 1979, அறிவியக்கம், பக். 27.

20. குழந்தைசாமி, வா. செ. 1985, அறிவியல் தமிழ், சென்னை.

21. கோதண்டராமன், இரா, 04. 07. 1979, தினமணி எழுத்துச் சீரமைப்பு, மேலும் சில சிந்தனைகள்.

22. Govindappillai, G, 1974, The Tamil Typewriting System, University of Jaffna, Tamil Department.

23. ஜகந்நாதன், கி. வா, 1979 சனவரி, எழுத்துச் சீர்திருத்தம், கலைமகள் திங்களிதழ்.

24. சஞ்சீவி. ந. 1975 மார்ச்சு 15, பக். 73. தமிழ் எழுத்துச் சீர்மை, புலவர் குழுவின் தீர்மானம் 05. 02. 1975.

25. சண்முகப் பிரகதம், கொடுமுடி. ச., 1972, அறிவுத் தமிழ் தட்டச்சுப் பொறி, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், நான்காவது கருத்தரங்க மலர், பக். 579. கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை சார்பு வெளியீடு.

26. ―――――― 1977 தமிழ் எழுத்துகள் - ஒரு புதிய பார்வை, தேனோலை வெளியீடு.

27. ―――――― 1979 புதிய தமிழ் வடிவம், சேகர் பதிப்பகம், சென்னை. 83.

28. சண்முகன், கொடுமுடி. ச, 15.10.1973, கொங்கு, தமிழ் நெடுங்கணக்கு, பக். 241 - 249. 1993 - 11 - 15, கொங்கு பக். 278.

29. ―――――― 1973 அக்டோபர், தமிழ்நெடுங்கணக்கு, கொங்கு.

30. ―――――― 1974 சனவரி, இருமொழித் தட்டச்சு, நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுக் கட்டுரை.

31. ―――――― 18. 01. 1979 முரசொலி, அரசியல் கலப்பே இல்லை, யாழ்ப்பாணம் தமிழ் மாநாடு, பக். 2.

32. ―――――― 10. 02. 1974, சிறுநூல், இலங்கை யாழ்ப்பாணம், நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு.

33. ―――――― 1974 டிசம்பர் 1, முக்குடை, சைன இளைஞர் மன்றத் திங்களிதழ், தமிழ் எழுத்துச் சீர்மை, பக். 28.

34. ―――――― 1975 ஏப்பிரல், கலைக்கதிர், தமிழ் எழுத்துகள், பக். 14 & 15.

35. ―――――― 1977 தமிழ் வடிவங்கள், மதுரை பல்கலைக்கழகக் கருத்தரங்கக் கட்டுரை.

36. ―――――― 26 & 27.12.1981, தமிழ் எழுத்துச் சீர்மை கருத்தரங்கக் கட்டுரை, தமிழ் வடமொழி, பிற இந்திய மொழிகள் ஆராய்ச்சி நிலையம்.

37. ―――――― 1984 January, Tamil Script for Reprography, Research Paper for V International Tamil Seminar Conference held at Madurai.

38. ________________ 1988 ஜூலை, களஞ்சியம், ஒலிபெயர்ப்பில் ரோமன் எழுத்துகளைப் பயன்படுத்துவதில் ஒருமைப்பாடு, பக். 5: 1 - 18.

39. சண்முகம், செ. வை, 1978, எழுத்துச் சீர்திருத்தம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 01. 05. 1979, அறிவியக்கம், பக். 27.

40. ________________ 1985, மொழியும் எழுத்தும், அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

41. ________________ 07.10.1987, தினமணி, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்.

42. ________________ 1988 சூலை, கலைக்களஞ்சியம், தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், பக். 9 - 12.

43. சாமி, அ.மா, 1979 சூலை, ராணிமுத்து, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், பக். 9-12.

44. சுந்தரம், வெள்ளையாம்பட்டு, 1979, எழுத்துச் சீர்மை (அறிஞர் கருத்துத் தொகுப்பு), சேகர் பதிப்பகம், சென்னை.83.

45. சுப்பு ரெட்டியார், ந., 1974 விடுதலை, தந்தை பெரியாரின் 94 ஆவது பிறந்த நாள் விழா மலர், பக். 92 - 95.

46. சுப்பையா, அ. சி., சிங்கப்பூர், 1935, தமிழ் வரிவடிவ ஆராய்ச்சி, 01. 10. 1979 அறிவியக்கம், (பக். 26).

47. ஞானசம்பந்தன், அ.ச., 1974 விடுதலை, தந்தை பெரியாரின் 94 ஆவது பிறந்த நாள் விழா மலர், பக். 89 - 92.

48. ஞானதோமா; 1979 ஆனி, தமிழ்ப்பணி, தமிழ்ப்புரட்சி, பக். 13-15 (பொறியியல் கதிரிலிருந்து மறுபதிப்பு).

49. தாமோதரம், ஜி. ஆர்., 1979, சித்திரை, புலவர், தமிழ் மலர்ச்சித் திங்களேடு, எழுத்துச் சீர்திருத்தம், பக். 21 -22.

50. Thilllainayagam, V.K., 1974 January, Tamil Typewriter, Paper read at Jaffna, IV International Conference - Seminar of Tamil Studies.

51. தில்லைநாயகம், வே. (1979) விடுதலை, தந்தை பெரியார் 96 வது பிறந்த நாள் மலர், சென்னை, தமிழெழுத்துச் சீர்திருத்தம், பக். 113 - 119.

52. நடராசன், சு, 1974, தமிழ் வல்லின எழுத்துகள், 89, புதுக்கிராமம், தூத்துக்குடி- 3.

53. நாராயணன், சு.ப, (நமது முன்னோடிகள்), 01. 05. 1979, அறிவியக்கம், பக். 14 (மறுபதிப்பு).

54. ______________ 1954, பேசத் தெரியுமா?, 27 சி. தம்பி அப்துல்லாசாலை, கோலாலம்பூர். 01. 05. 1979, அறிவியக்கம், பக். 26.

55. பரமானந்தம், சிரம்பான், 1975 ஆகஸ்டு, உதயம், மூன்றாம் ஆண்டு மலர், தமிழில் இடையொலிகளும். வகையொலிகளும், பக். 28 - 29.

56. புகழேந்தி, வே, தமிழ்நாடு தமிழாசிரியர் பேரவைச் செயலர். 1980, எழுத்தைத் திருத்தி ஏற்றம் பெறுவோம்.

57. பாரதிதாசன், பாவேந்தர், 10. 11. 1959 குயில் கேள்வி - பதில் 1975 செப்டம்பர் 15, கொங்கு இதழில் மறுபதிப்பு.

58. பேனாவோட்டி, 1951, 28 எழுத்துகளில் தமிழ், கானல்வரிப் பதிப்பகம், 505, தங்கசாலை வீதி, சென்னை-3. 01. 05. 1979, அறிவியக்கம், பக். 26.

59. பொற்கோ, 1988 ஜூலை, களஞ்சியம், ரோமன் வடிவத் தமிழ் ஒலிபெயர்ப்பில் தரப்படுத்தம், பக். 4: 1 - 12.

60. மகாதேவன், கொண்டல். சு., 15. 01. 1973 கொங்கு கி. பி. இரண்டாயிரத்தில் தமிழ், பக். 32,34.

61. ______________ 1979, எழுத்தும் கருத்தும், சேகர் பதிப்பகம், சென்னை. 93.

62. ______________ (1979) விடுதலை, தந்தை பெரியார் 96 ஆவது பிறந்த நாள் மலர், சென்னை, தமிழ் வளர்ச்சியும் தமிழ் எழுத்துச் சீர்திருத்தமும், பக். 121 - 127.

63. ______________ (1974) விடுதலை, தந்தை பெரியார் 94 ஆவது பிறந்த நாள் மலர், சென்னை, பக். 85-89.

64. ______________ 1979 சித்திரைப் புலவர், தமிழ் மறுமலர்ச்சித் திங்களேடு, பெரியாரும் எழுத்துச் சீர்திருத்தமும் பக். 26.

65. மீனாட்சி சுந்தரனார், தெ. பொ. 1972, விடுதலை, தந்தைபெரியார் 94 ஆவது பிறந்த நாள் மலர், பக். 80 - 83.

66. முஸ்தபா, மணவை, 1982, காலந்தேடும் தமிழ்.

67. வரதராசனார், மு, 1974, விடுதலை, தந்தை பெரியாரின் 94 ஆவது பிறந்த நாள் மலர், பக். 74 - 80.

68. விமர்சகன் (அ. மா. சாமி), 1979 சூன், ராணிமுத்து, எழுத்துச் சீர்திருத்தம், பக். 15 - 16.

69. வீயாரெம், 13. 02. 1975, தினமணி, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம், பக்.3.

70. வீரமணி, கி, 1974, எழுத்துச் சீர்திருத்தம், பெரியார் சுயமரியாதை பிரசார நிறுவனம், மு. வரதராசன், தெ. போ. மீ. அ. ச. ஞானசம்பந்தம், கொண்டல் சு. மகாதேவன், ந. சுப்புரெட்டியார் ஆகியோர் கட்டுரை. 1974, தந்தை பெரியார் 94 ஆவது பிறந்த நாள் விழா விடுதலை மலரில் வெளியானவற்றின் மறுபதிப்பு.

34

TAMIL IN THE ROMAN SCRIPT

S. RAMAKRISHNAN, K. SRINIVASAN AND
RAJASEKHAR RAMAKRISHNAN

Introduction

Transcription is widely used both within Tamil Nadu and outside to convey Tamil names, Tamil words, Tamil literature. Transcription is needed to communicate with people who are not familiar with the Tamil alphabet. It is also needed in English language newspapers, journals and books, where the Tamil alphabet may not be available. Over the years, Tamil scholars and scholarly institutions have proposed a number of transcription schemes,each with its own rationale. At the same time, an imprecise but widely used method has taken hold with the general public, seen in the way Tamils write their names, in street and shop signs, and in English language newspapers. In this paper, we briefly review the existing transcription schemes, describe what we believe to be desirable features of a good scheme, and propose a novel transcription scheme that is close to what is in popular use, conveys pronunciation differences, and is precise and unambiguous to meet the needs of scholars.

Need for a new transcription scheme

The transcription of words and passages from Tamil based on the system adopted by the Madras University Tamil Lexicon is obviously too cumbersome with its numerous diacritical marks. It is no exaggeration to say that Tamil scholars engaged in doctoral research have no more than a passing acquaintance with the phonetic scirpt. And even those who have committed it to memory in right earnest

find it slipping away from memory. The reason is not far to seek. What is not in active use is apt to be forgotten.

Naturally, these circumstances led Tamil Culture, the scholarly journal, edited by the late lamented Dr. Thaninayakam to work out it own system of phonetic transcription. In its January 1955 issue, A. Senthamilan presented a historical account of transliteration questions, explained how diacritical marks make it difficult on a typewriter, and presented a scheme with only two diacritic signs (colon and minus sign), both easily produced on a typewriter. However, this transcription scheme did not win acceptance. We believe the main reason to be that the transcribed text with the Tamil Culture scheme is still awkward to read and not close to the usual method in vogue in Tamil Nadu. Especially problematic is the colon, needed for five vowels, and the nonintuitive specification of t for ற, c for ச, etc.

It is by now clear that any attempt to propose a system of transcription for Tamil that is based on that of the International Phonetic Association (I.P.A.), the immediate progenitor of the system adopted by the Tamil Lexicon, is foredoomed to failure.

Time was when modern scholars in Tamil were more often than not equally proficient in Sanskrit. Hence, with their mastery of the I.P.A. script necessitated by the demands of Sanskrit scholarship, they welcomed the script of the Tamil Lexicon with gusto. At that point, it may have made eminent sense to have a transcription scheme based on that for Sanskrit, with a few additions for the special characters in Tamil. The editors of the Lexicon were second to none in their love of and devotion to Tamil. Of course, they did not have the revolutionary insight to perceive that the millions of India, actively hostile to the British rulers, would soon forge the necessary sanctions for making India's demand for freedom irresistible. Naturally, they were not prepared for the big political, economic, social and cultural changes in the past six decades. The formation of linguistic states and the elevation of Tamil to the position of the official language of the liguistic state of Tamil Nadu are some of the changes that have led to the widespread demand for a thoroughgoing study of Tamil language and literature.

Now, however, the study of Tamil stands on its own strength and a simple convention customized for Tamil would be preferable. The phonetic rules of Tamil being quite different, it is logical to formulate a convention specific to Tamil. Our endeavour should be to construct in the Roman, the only other script all school-educated Tamil would be familiar with.

Desirable features of a transcription scheme

The essential requirements to write Tamil in Roman script are the following:

1. The scheme should avoid any ambiguity in meaning. For example, popular writing may use manam for மனம், மணம் and மானம் leading to possible confusion. The scholarly schemes require diacritic signs (manam, maṇam, mānam or manam, man:am, ma:nam). Neither is likely to be easily understood by the general public. We propose manam, maNam, maanam.

2. The scheme should reproduce the sound as closely as possible. Tamil alphabet letters being multi-phonetic, one should not attempt to match a single Tamil consonant to a single Roman alphabet letter. Five major consonants in Tamil (க, ச, ட, த, ப,) have two common sounds each - one voiced and the other unvoiced, leaving aside the less common aspirated and fricative forms. For example, கழகம், சிரஞ்சீவி, பட்டாடை, தந்தி, பம்பரம் each contains the voiced and unvoiced forms of a consonant. The transcription system should allow more than one representation for each of these letters so that the text in Roman conveys not only the original Tamil text but also the way the writer would pronounce the original text. We propose to transcribe the above words as kazhagam, chiranjeevi, pattaadai, thandhi, pambaram which achieves this purpose. The earlier scholarly schemes, using a single Roman character for each Tamil consonant, fail to convey variations in pronunication. e.g., kalakam in the scheme of this conference. Also, one should not write patam for படம், or paaku for பாகு. In fact, patam will be confused with பட்டம் and paaku confused with பாக்கு. This ambiguity is forced on Tamil if conventions suited for Sanskrit are used for writing Tamil. In contrast, we propose padam, pattam, paagu, paakku.

3. Ideally the script should not be burdened with any diacritical marks

so that we have the bonus of its free use in the English press catering to Tamils. This is in fact quite feasible since Tamil has far fewer consonants than Sanskrit. We can also take advantage of the fact that English is written in capitals or lower-case letters. Since Tamil has no upper-case letters, we are free to use the capital letters of the English alphabet where appropriate to indicate different Tamil letters. For instance, we propose e for எ and E for ஏ; o for ஒ and O for ஓ ; l for ல and L for ள; r for ர and R for ற; N for ண; J for ஜ; H for ஹ.

4. The Tamil phonemic rules should be fully exploited to simplify the Roman representation. Most importantly, while there are five nasals in Tamil (ங, ஞ, ண, ந, ன), the five nasals usually appear mutually exclusively; that is, the context (i.e., whether the nasal is at the beginning of a word, which consonant follows it, whether it is at the end of a word) often determines which nasal is to be used. The main rules are simple: ந at the beginning of a word (as in நாக்கு), ங் preceding க (as in நாங்கள்), ஞ் preceding ச (as in காஞ்சி), ண் preceding ட (as in ஆண்டு), ந் preceding த (as in பந்து), ன் preceding all other consonants and vowels except at word beginning (as in அன்பு, மனம்), and ன் at the end of a word (as in அவன்). So the system should allow the same letter n to be used for all five nasal consonants if possible. Thus we propose.

naakku, naangaL, kaanchi, aandu, pandhu, anbu, manam, avan for

நாக்கு, நாங்கள், காஞ்சி, ஆண்டு, பந்து, அன்பு, மனம், அவன்,

Similarly, நான், சங்கம், கொஞ்சம், வண்டு, வந்து can be transcribed using a single n: naan, sangam, koncham, vandu, vandhu. To be sure, there are some words where the rules do not apply. For instance,

naayiRu, meengaL, iLaneer, panam, aan gets all the nasals wrong:

நாயிறு, மீங்கள், இளனீர், பனம், ஆன். In order to transcribe

ஞாயிறு, மீன்கள், இளநீர் corectly, two - letter combinations are needed:

NYaayiRu, meeNngaL, iLanNeer. And for பணம், ஆண், the upper case N is needed: paNam, aaN.

It is possible to formulate further rules as well. For example, it is permissible to write onru instead of onRu for ஒன்று since the ன்ர combination never occurs and ன்ற combination does occur, but it is not permissible to write aram for அறம்.

5. The system should be close to what is already used by millions of school - educated Tamils in writing their own names, addresses, etc., in Roman script. This will make the system easy to learn and remember; even someone who does not know the system can read transcribed text easily and can even produce nearly perfect transcriptions. We believe that the scheme proposed here, using capital letters and exploiting phonemic rules, leads to transcribed text that is easily read and easily remembered. This sets it apart from earlier schemes. For instance, the transcription of the numbers from 1 to 8.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு highlights the difference:

Conference scheme: oṉṟu, iraṇṭu, mūṉṟu, nānku, aintu, āṟu, ēḻu, eṭṭu

Tamil Culture: ontu, iran:t:u, mu:ntu, nha:nku, ainhthu, a:tu, e:l:u, et:t:u

Our proposal: onRu, irandu, moonRu, naaNngu, aindhu, aaRu, Ezhu, ettu

Proposed transcription scheme

These considerations lead naturally to the system shown in the accompanying table. This system is a very slight modification of one proposed by one of us (Dr. K.Srinivasan) at the World Tamil Conference held at Kuala Lumpur in 1987. His system is incorporated in some of the earliest and most popular computer programs (such as Adami and Madurai) used to print or display Tamil text; in fact, this paper was completely produced with Dr. Srinivasan's Adami program. The system is also used widely by Tamils to communicate electronically, where the use of the English alphabet is necessary.

The table contains transcriptions for the vowels (உயிர் எழுத்துக்கள் - uyir ezhuththukkaL) and for the consonants (மெய் எழுத்துக்கள் - mey ezhuththukkaL). Consonant - vowel combination letters (உயிர்மெய் எழுத்துக்கள் - uyirmey ezhuththukkaL) are transcribed simply by the consonant followed by the vowel.

The table also has some words and phrases illustrating the use of the system. Each vowel and consonant is illustrated somewhere in the examples, e.g., ulagath, kamba and aha show the three ways to write க. Each nasal is illustrated once in a word where it can be written as n and once in a word where its two-letter transcription is needed, e.g., moonRu, naaNngu, maanNaadu.

Conclusion

In summary, then, the proposed transcription system achieves a number of goals. One, it allows Tamil text to be written in Roman script for easy pronunciation by Tamils and non-Tamils alike. Two, it allows unambiguous reconstruction of the original Tamil Text. Three, by avoiding diacritical marks, it is easy to type of print. Four, since it is very close to the common system in use in Tamil Nadu, Tamils will find it easy to learn while non-Tamils will find it useful when they visit Tamil Nadu or come across Tamil names or words written in English.

In the long run, if the system is widely used, the commonly used system may change slowly into this system, thus eliminating current ambiguities (for example, manam, maNam, maanam). In this day of ever-increasing use of computers, it may not be out of place to mention that the proposed system also allows easy electronic communication where only the English alphabet is available, and that it is well-suited for use in any Tamil word-processing program running on a computer with an English keyboard.

Until about twenty years back, the Wade-Giles scheme was used for Romanizing Mandarin Chinese names. The diacritical marks that it needed were usually left out of popular writing, leading to most non-Chinese mispronouncing Chinese names e.g., Mao Tse-tung, Chou En-lai, Teng Hsiao-ping. Since the Chinese government introduced the Pinyin system, without diacritical marks, it is easier for non-Chinese to pronounce Chinese names. Peking has become Beijing and the names given above have become Mao Zedong, Zhou Enlai and Deng Xiaoping. The scheme proposed in this paper could have the same benefit for Tamil, if adopted universally. We hope that some day, thirunelvEli and neelagiri will become the standard way of writing the names of these places.

PROPOSED TRANSCRIPTION SCHEME

a = அ aa = ஆ i= இ ee= ஈ

u = உ oo = ஊ e = எ E = ஏ

ai = ஐ o= ஒ O = ஓ ow, au, ou = ஔ

q = ஃ

k,g,h = க் n, NG = ங் ch,s,j = ச் n,NY = ஞ்

t,d = ட் n, N = ண் th,dh = த் n,nN = ந்

p,b = ப் m = ம் y = ய் r = ர் l = ல் v = வ்

zh = ழ் L = ள் R = ற் n,Nn = ன்

J = ஜ் sh = ஷ் S = ஸ்

H = ஹ் x,ksh = க்ஷ் sri = ஸ்ரீ

Each element above is illustrated below.

ulagath thamizh maanNaadu = உலகத் தமிழ் மாநாடு

kamba raamaayaNam = கம்ப ராமாயணம்

iLangOvin silapadhikaaram = இளங்கோவின் சிலப்பதிகாரம்

aha naanooRu = அக நானூறு

raaJaraaJa chOzhan = ராஜராஜ சோழன்

auvai = xsit aqRiNai = அஃறிணை

baarathiyin paanjaali sabatham = பாரதியின் பாஞ்சாலி சபதம்

onRu, irandu, moonRu, naaNngu, aindhu, aaRu, Ezhu, ettu

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு

eS. raamakirushNan = எஸ். ராமகிருஷ்ணன்

ki. srinivaasan = கி. ஸ்ரீனிவாசன்

35

A TAMIL RETREAT ON THE INFORMATION SUPER HIGHWAY

K. SRINIVASAN AND M. P. KRISHNARAJ

Introduction

Baarathiyaar dreamed: "உலகமெங்கும் தமிழ் பரவும் வகை செய்தல் வேண்டும்". He would not have imagined that it is the electronic communication high technology that has made this possible. Now every day more than 40000 people who have approaches to computers around the world click a few buttons to read a "newsgroup" called "soc.culture.tamil" and see what others are saying in another corner of the world. They immediately share their own thoughts with them in a matter of minutes by punching a few keys on their keyboard. It happens every second, all the 24 hours. We will briefly summarize its past, present and future. For more information, the best place is obviously the "soc.culture.tamil" itself.

Internet and newsgroups

Several thousand computers are able to communicate and send information to each other through a facility called internet. It started in the US and now connects most of the world including, India, Singapore, Malaysia, all west European countries, Canada, Australia, New Zealand, etc. The connection is via wires, wireless as well as via satellites. A newsgroup is like a room allocated for all talks on a particular subject. Some have a volunteer who reads, edits and decides what to allow. These are called moderated newsgroups. The others allow free expression by all. They are called unmoderated. "soc. culture.tamil" is an unmoderated newsgroup.

Purpose of "soc.culture.tamil"

The purpose is defined in the charter of the group which was formulated by Mr.M.P. Krishnaraj in 1992. The salient aspects of the charter are listed below.

I. Electronic News Magazine

- Discussions on Ancient Tamil, Literature, Culture, Philosophy, etc.
- Book, Movie, Magazine, Drama reviews, Poems, Stories, Essays, Jokes etc.
- Current news from the Tamil region
- Current news about events of Tamil interest in North America
- Projects pertinent to Tamil interests
- Matters related to investments in Tamil region
- Matters of interest to Tamils born outside the native region.

II. Computer language Society

- Software announcements, reviews, discussion
- News about Computer Software for Tamil language printing
- Learning Tamil transliteration software
- Joint effort to develop software for on-screen display and editing
- Effort for usage of Tamil language in multimedia
- Development of word processing packages for Tamil

III. Cultural and Social forum for Tamils

- SCT will become nerve center for Tamils all over the world.
- Meeting place for old friends and acquainting new friends.
- News about concerts, seminars, festivals and other programs.
- To seek and help others in education, job or travel.
- Matrimonial discussions.

- Discussion on Religion, Religious personalities
- Discussion on philosophy

IV. Tamil Literature Society

- Discussion on Tamil novels, short stories and poems in English. (Contemporary literature)
- Discussion of Tamil Literature of 19th century and early 20th Century. 1800 -1950
- Discussion of Ancient Tamil Literature. 300 B.C. to 1800 A.D.

The Past

The creation of the "soc.culture.tamil" was not an easy task. In 1990, a newsgroup called "soc.culture.indian" was proposed by people from the Indian subcontinent and voted with great zeal. It came into existence without much opposition. It was quickly followed by the formation of soc.culture.pakistan, soc.culture.sri-lanka, soc.culture.nepal and soc.culture.bangladesh. Most of these were supported by Indians in the voting process. There was hardly any objection to their coming into existence.

While some of these newsgroups had very few postings, the soc.culture.indian grew to more than 700 postings a week, as of 1992. Most of the posters were recent graduate students from India. An odd posting related to Tamil would hardly get noticed. Sometimes noticed and objected for failure to provide English version etc. Thus a large number of Tamils were restricted to discussions of general Indian interest only. The emigration of Tamils from Sri Lanka increased the Tamil population substantially in the internet world.

The desire of the Tamils to have an unrestricted medium for discussions on Tamil culture manifested in many postings often in soc.culture.indian. The idea of soc.culture. tamil was introduced in newsgroup soc.culture.indian by Mr.M.P.Krishnaraj of Old Dominion University, Virginia on Tamil New Years day April 13/14. 1992.

The internet rules require that there should be a certain minimum number of "yes" votes, and the "no" votes should not exceed a certain percentage of the total. Getting the "yes" votes was the easy part. There was a lot of interest, including non-Tamils in the Western world. The difficult part, was to minimize the "no" votes. On April 18, 1992 soc.culture.tamil (SCT) committee was established consisting twenty members. The committee worked hard to allay the fears among Indians that the soc.culture.tamil might become a parochial forum against Indian interests. The vote was won by a landslide and soc.culture.tamil was quickly followed by soc.culture.indian. telgu, alt.culture.karnataka and alt.culture.kerala.

The Present

The first major achievement of soc.culture.tamil was a tool to communicate in Tamil language. As a first step, a standard scheme for writing Tamil in Roman script was promoted. This scheme is discussd in another paper in this conference. As the next step, a group of computer experts led by Gnanasekaran Swaminathan developed a package called "Madurai" by which one would be able to read the postings immediately in Tamil native script. The words that are to be shown in Tamil Script are enclosed between \bt and \et. For example. \bt ungaLidam \et X-terminal \bt irundhaal idhu thamizh ezhuththil theriyum \et. The uniqueness of this package is that those who do not have x-terminal can still read in the most easily readable Ramanized scheme.

We can be proud that Tamil is the first in the internet to have realized such a scheme.

Many condensed versions of books have been posted, including, works of late Thiru. Kasturi Srinivasan of Coimbatore, Life history of Saint Ramanuja, etc. The month of maargazhi is observed every year by discussions on Thiruppaavai and its English translations. It has given opportunity to a group of people to get together and put all the paasurams of the aazhvaars in an electronic form. There is discussion on Thirukkural all the time. Barathiyaar, Annadurai, Periyaar, Kalki, Rajaji, Father Beschi, etc. their works and their views form part of heated discussions, quite often. Exposure to the current Tamil movies, movie songs, etc. are some of the popular subjects.

There are frequent announcements and reviews about visiting artists staging plays, giving concerts, etc. There have been some fund raising in a small way for some noble causes. There are also numerous literary as well as sociological discussions all the time broadening one's awareness of various facts and fallacies.

This Tamil conference annnouncement was posted in soc.culture.tamil by Prof.Peter Schalk of Norway and Thomas Malten of Germany.

The future

Until recently the internet linked the educational and government institutions only. Now it is extended to commercial enterprises. Even residences in North America have an access for a nominal fee just like a telephone. Practically every one in North America can be reached via electronic mail in the near future. Connections in India are also growing at a fast pace. Most cities like Madras, Bangalore, Thiruchiraapalli already have internet links. It is already possible for any one in Tamilnadu to post an article in soc.culture.tamil, even if they do not yet have access to read them. The article should be e-mailed to "soc-culture - tamil @cs. utexas.edu". Most readers of soc.culture.tamil desire postings about current happenings in the Tamil region. There is already an Indian news feed from Bombay which covers the news of broad Indian interest. A news feed concentrating on just the local area news from the south, which do not appear in national newspapers will be highly appreciated. Knowledge of current indicators and trends in the Tamil region will provide much needed information for potential entrepreneurs and well wishers.

The full potential of the newsgroup is yet to be realized. It is possible to work in teams to achieve what is not possible alone. We hope this newsgroup will provide a link to reach all the people interested in Tamil all over the world.

Acknowledgement

We wish to thank the committee members and others who participated in the voting process and voted yes. We are unable to mention everyone of their names individually in this paper. We thank the Usenet administrators and the Universities of North America for providing this great opportunity. We thank National Science Foundation, United States of America for maintaining the internet.

36

SIMPLIFIED TAMIL ALPHABET

PYNEESAMY PADAYACHY

Tamil being one of the most ancient languages, it is legitimate for the Tamils to feel proud about it, the more so, as the language is highly musical and has given birth to a rich literature spanning more than two millennia.

2. But Tamils have not rested on their laurels. Inspired by Nannul's philosophy:

"pa̱laiyana ka̱litalum
putiyana pukutalum
kāla va̱luvala . . .

they have been wise enough to accept changes in their alphabet over the centuries, in an endeavour to improve it constantly.

3. On the threshold of a new millennium, it is advisable to take stock of the situation and to ask ourselves whether the present Tamil alphabet can meet the exigencies of the modern world, which is governed by speed promoting devices like electronic typewriters, computers and offset and telex machines or there is room for improvement; in other words, whether the alphabet has already reached the summum of perfection or there is need for re-adjustment.

4. We must here pay homage to Tanthai Periyar for having initiated the process of revision of the Tamil alphabet in recent years. The innovations initiated by him have received a warm welcome.

5. However, if we analyse the present situation dispassionately, we shall

find that there is room for further improvement. Several proposals have been made for further improvement. Several proposals have been made for a further reform of the Tamil alphabet but, unfortunately, the matter has not so far received prompt attention with the result that no decisive action has been taken.

6. If we compare the Tamil alphabet with the Roman alphabet, we shall find how the Tamil alphabet is a complicated one. While the Roman alphabet contains 44 letters (26 Small and 18 different ones as Capital), Tamil alphabet contains no less than 247 letters altogether. The complexity of the Tamil alphabet which, in certain cases, defies logic, is a severe handicap for students of the languages, especially those residing outside Tamil Nadu, and is an impediment for easy and speedy communication.

7. In order to remedy the situation, I am, as a humble contribution, proposing the Simplified Tamil Alphabet, as detailed below.

8. My first porposal concerns certain vowel letters (uyir eluttukkal). I propose the following changes:

(a) Present	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
(b) Proposed	அ	ா	ி	ீ	உ	ு	எ	ஏ	ை	ெ	ே	ஒ	ஃ

9. It is important to note the following in this connection:

(a) 5 vowel letters would remain unchanged, namely அ, உ, எ, ஏ, and ஃ:

(b) the proposed new vowel letters are borrowed or adapted from existing vowel or compound letters, namely:

ா	borrowed from	மா
ி	adapted from	மி
ீ	adapted from	மீ
ு	adapted from	பு
ை	borrowed from	மை
ெ	borrowed from	மொ

ே	borrowed from மோ
ஒ	borrowed from ஒள

(c) one advantage of this first proposal is the elimination of two signs for vowel letters ஊ and ஔ.

10. My second proposal concerns the compound letters (uyirmai eḻuttukkaḷ). I propose that all vowel letters be henceforth positioned after the consonant letters as shown below, in accordance with the spirit of placing the h sign after ம in மா.

(a) Present	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
(b) Proposed	ம ி	மீ	மஉ	ம ூ	மஎ	மஏ	மஐ	மஒ	மஓ	மஔ

11. It is important to note that the second proposal contains the following advantages:

(i) elimination of a large number of complicated compound letters;

(ii) elimination of three signs to represent certain compound letters (e.g. மொ, மோ);

(iii) elimination of different and confusing ways of indicating the (a) உ and (b) ஊ sounds, e.g.:

(a) கு,சு,டு,பு,ஞு by uniform placing of உ sign after each consonant;

(b) கூ, சூ, டூ, பூ, மூ, யூ by uniform placing of ூ sign after each consonant;

(iv) elimination of same signs for different purposes, e.g.

(a) ா as in கா , கோ and ஈ

(b) ள as in ள , ஊ , ஔ and மௌ.

12. For writing purposes, the signs, ி and ீ will continue to be attached to the consonant, as is the case at present with மி and மீ. The advantage of splitting the consonant and vowel signs in such cases would accrue when typewriters and computers are used.

13. Besides those already mentioned, the above proposals would have the following advantages:

(a) non-introduction of new vowel signs for compound letters in addition to the existing vowel signs, as proposed by some;

(b) non-introduction of a multitude of new signs (as proposed by some), which would be a costly matter in altering and adjusting typewriters, types, computer, and which has proved a serious impediment in pursuing further the Tamil Alphabet Revision Project, while the utilisation of existing signs for new purposes, as proposed by me, can be done straightaway and would involve almost no additional cost. The project proposed by me is, therefore, highly cost-effective.

14. It has been proposed by some that:

(a) the dot on the consonant (as in *ம்*) be got rid of by making the present *ம* sign sound as in existing *ம்* (as English m in "him"); and

(b) the *அ* sound in existing *ம* be indicated by the introduction of a new sign after *ம*, say /to read *ம*/. I have given serious thought to the matter. I consider that the high musicality of the Tamil Language is brought forth with great effect by the dot on the first consonant whenever the consonant is doubled (as in *அம்மா, அம்மி*) and there is no better way to do this than the existing musical note represented by the present dot on the consonant.

15. The above proposals would result in the reduction of the present multitude of Tamil letters to a few, while the proposed compound letters have the merit of preserving the whole gamut of Tamil sounds.

16. The Tamils gave the world a simple but effective system of numerals but have, unfortunately, lagged behind in the matter of the alphabet.

17. The above proposals, which are designed to bring the Tamil Alphabet into line with the Computer age, deserve careful consideration on the threshold of the third millennium.

BIBLIOGRAPHY

Catchitānentan Kaṇapatippiḷḷai (1981) "Tamiḻ E̲luttin varivativaṅgaḷ-Māttrunōkku" (V ICSTS, Madurai).

Koṭappiḷḷai T. (1989) E̲luttu Sīrtiruttam Vēṇtum" (VII ICSTS, Mauritius).

Panel Session 6 / குழு அமர்வு 6
Technical Terms and Coinage of Technical Terms / கலைச்சொற்களும் கலைச்சொல்லாக்கமும்

(37)

தமிழ் இலக்கியங்களில் கலைச்சொற்கள்

சா. கிருட்டினமூர்த்தி

தமிழ் இலக்கிய வளம் செறிந்த மொழி; இந்திய மொழிகளுள் சமஸ்கிருதத்தைப் போலத் தனித்தன்மை வாய்ந்ததாகவும் தொன்மையுடையதாகவும் விளங்கும் மொழி (Sunith Kumar, *1945:8*). இம் மொழியிலுள்ள பரந்துபட்ட இலக்கியங்களில் வாழ்வியல் மற்றும் அறிவியல் செய்திகள் பொதிந்து கிடக்கின்றன. இச்செய்திகளும் அவற்றின் கலைச்சொற்களும் அவ்வக்காலச் சமுதாய மேம்பாட்டை விளக்குவனவாகவிருந்தாலும் இன்றைய மொழிப் பயன்பாட்டிற்கு அவற்றை எந்த அளவிற்குப் பயன்கொள்ள முடியும் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. எனவே தமிழிலக்கியங்கள் சிலவற்றுள் காணப்படும் சொற்களை எடுத்துக்கொண்டு அவற்றின் சிறப்பையும் இன்றைய நிலையில் அவற்றின் பயன்பாட்டையும் இக்கட்டுரை எடுத்துக்கூற முற்படுகின்றது.

மொழி வளர்ச்சி

இன்றைய அறிவியல் தொழிலியல் வளர்ச்சிகள் மொழிநிலையில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. சமுதாய வளர்ச்சியைப் பாதிக்கும் காரணிகளுள் அறிவியல் கண்டுபிடிப்புகளும் ஒன்று என்பர் (குழந்தைசாமி 1973: 39). சமுதாய வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படும்பொழுது மொழியும் பாதிப்பிற்குள்ளாகும் என்பது வெளிப்படை. மொழியைப் பொறுத்தவரை இப்பாதிப்பு என்பது வளர்ச்சி குறித்த ஒன்றாகவே கருதப்படும். தாய்மொழிவழி அறிவியல் தொழிலியல் கருத்துக்களை அளிக்கமுடியும் என்றநிலை உருவாகும் போதுதான் அவ்வளர்ச்சி முழுமை பெற்றதாக அமையும். மொழியினுடைய வளர்ச்சியென்பதும் வளர்ச்சியின்மை என்பதும் நாம் கண்கூடாகக் கண்டு ஆயக்கூடியவையாகும். பயன்பாட்டு நிலையில் மொழி என்றும் நிலைத்த நிலைப்பாக இருப்பதில்லை; அதனுடைய பயன்பாடு பரவலாக்கப்பட வேண்டும்; அவ்வாறு பரவலாக்கப்படுவதற்கேற்ற மொழியாக அந்த மொழி அமையவேண்டும்.

அப்படியில்லையென்றால் அந்த மொழி ஒரு செயலற்ற மொழியாகவே கருதப்படும் (Aquiel, *1984 : 17)*. எனவே, மொழிப்பயன்பாட்டைப் பெருக்கவேண்டும். அறிவியல் மொழியாக, பயிற்றுமொழியாக, ஆட்சிமொழியாக, அலுவலக மொழியாக மொழிப்பயன்பாடு பெருக்கப்படும்பொழுதுதான் மொழி பன்முக வளர்ச்சியடைகிறது (Mario Pei *1956: 190)*.

கலைச்சொல் கோட்பாடு

இப்பயன்பாட்டுப் பெருக்கத்திற்குப் பல கூறுகள் தேவைப்படும் என்றாலும் கலைச்சொற்கள் அவற்றுள் முதலிடம் பெறுகின்றன என்று கூறலாம். பயிற்று மொழியாகத் தமிழை அனைத்துக் கல்விநிலைகளிலும் கொண்டு வருவதற்குத் தடையாக இருப்பவை கலைச்சொற்களே என்று இப்பொழுது பேசப்பட்டு வருகின்றது. கலைச்சொற்களை உருவாக்கும் பணியில் தனிநபர்களும், தனியார் நிறுவனங்களும், கல்வி நிறுவனங்களும், அரசு அமைப்புகளும் பெரிதும் முயன்று கொண்டு தானிருக்கின்றன. பலவகைக் கலைச் சொல்லாக்கக் கோட்பாடுகளை வகுத்துத் தந்துள்ளதோடு கலைச்சொல் அகராதிகள் பலவும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள கலைச்சொல் கோட்பாடுகளுள்,

1. பழந்தமிழ் இலக்கியங்களில் நிலவும் சொற்களைத் தேவைக்கேற்ப எடுத்தாளுதல்
2. பிறமொழிச் சொற்களைக் கடன்பெறுதல்
3. புதிய சொற்களைப் படைத்துக் கொள்ளுதல்
4. நடைமுறைச் சொற்களை அப்படியே ஏற்றுக்கொள்ளுதல்
5. நாட்டுப்புற வழக்குச் சொற்களை நிலையறிந்து ஏற்றுக்கொள்ளுதல்

முதலிய பலவற்றுள் இலக்கியச் சொற்களைத் தேவைக்கேற்ப எடுத்தாளுதல் என்பது அறிஞர் பலராலும் இன்று வலியுறுத்தப்பட்டுவரும் செய்தியாகும்.

தமிழில் கலைச்சொல் இல்லையா?

தமிழில் கலைச்சொல்லே இல்லை என்று கருதிக் கூறுவாரின் கூற்றை முன்னோர் பலரும் வன்மையாக மறுத்திருக்கின்றனர். தமிழில் கலைச்சொற்கள் இல்லை என்பாரைப் பழித்துக் கூறி, நிரம்பிய கலைச்சொற்கள் இருக்கின்றன என்ற உண்மையைப் பாரதிதாசன் சுட்டிக் காட்டியுள்ளார் (பாரதிதாசன் 1984 : 289 - 293). "கலைச்சொல்லாக்கத்தார் புதுப்புதுச்சொற்களை மனம்போனபோக்கில்

ஆக்கிக் கொள்வதைவிட இயன்ற அளவிற்குப் பழந்தமிழ் இலக்கியத்தில் உள்ள சொற்களைப் பயன்படுத்த முனைதல் நன்று. எண்ணிறந்த எழில் மிக்க வண்ணத் தமிழ் சொற்கள் பழந்தமிழ் இலக்கியத்தில் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. அவற்றுள் பல கலைச் சொல்லாக்கத்தார்க்குப் பயன்படுவன" (திருஅடிகள் 1960) என்ற கருத்தும் நோக்கத்தக்கதாகும். இன்றைய பலதரப்பட்ட அறிவியல் மற்றும் தொழிலியல் செய்திகளை உணர்த்தத் தேவையான அனைத்துக் கலைச்சொற்களும் இலக்கியங்களில் உள்ளன என்று கூறுதற்கில்லை; அவ்வாறு எதிர்பார்ப்பதும் பேதைமையாகும். இலக்கியங்களில் நிலவும் ஏற்புடைய கலைச்சொல்லை எடுத்தாளுதல் என்னும் நிலையில் சில கலைச்சொற்கள் காணப்படுகின்றன. இதுமட்டுமன்றித் தமிழலக்கியங்களில் காணப்படும் கலைச்சொற்கள் ஆக்கப்பட்டுள்ள இலக்கணக்கூறுகளை இன்றைய கலைச் சொல்லாக்கக் கோட்பாட்டிற்குப் பயன்கொள்ளவும் முடியும். இதற்குத் தமிழ் இலக்கண நூல்களும் பெரிதும் துணைநிற்கும்.

தமிழில் கலைச்சொற்கள்

இலக்கிய, பண்பாட்டு வளம் செறிந்த தமிழில் காணக்கிடைக்கும் கலைச்சொற்கள் அனைத்தையும் முதற்கண் தேடித் தொகுக்கவேண்டும். இலக்கியங்கள், இலக்கணங்கள், உரைகள், கல்வெட்டுகள், நாட்டுப்புற வழக்குகள், வினைஞர்கள் முதலிய பல நிலைகளிலிருந்தும் சொற்கள் தொகுக்கப்பட வேண்டும். அவ்வாறு தொகுக்கப்படும் பொழுதுதான் தமிழில் எந்தெந்த வகையில் எவ்வளவு கலைச்சொற்கள் இருக்கின்றன என்பதை நம்மால் உணரமுடியும்.

தமிழ் இலக்கியப் பரப்பை உற்றுநோக்குகின்றபோது அரிய பல கலைச் சொற்கள் விரவியிருப்பதை நாம் காணமுடிகின்றது. இக்கலைச்சொற்களைத் தொகுத்துக் காண்பதன் மூலம் கீழ்க்காணும் பயன்பாட்டையும் நெறிமுறையையும் நாம் பெறமுடியும்.

1. இன்றைய கலைச் சொல்லாக்கத்திற்கு அச்சொற்களைப் பயன்படுத்திக் கொள்வது,
2. கலைச்சொல்லாக்கத்திற்கென நெறிமுறைகளை அறிவது.

பண்டைத் தமிழ்க் கலைச்சொற்களை இப்பொழுது பயன்படுத்திக்கொள்ள நினைக்கும்பொழுது அச்சொற்களின் பொருத்தப்பாட்டையும் பயன்பாட்டு நுட்பத்தையும் முதற்கண் தெரிந்துகொள்ள வேண்டும். நம் முன்னோர்களால் வழங்கப்பட்டு இலக்கியங்களில் பயிலப்பட்டு வந்த பல சொற்கள் இன்று வழக்கொழிந்தும், பொருள் சிதைந்தும், சொல் வடிவம் திரிந்தும்

காணப்படுகின்றன. வழக்கொழிந்த சொற்களை ஆளுகைக்குக் கொண்டு வருவது இயன்ற செயலாகலாம்; ஆனால், பொருள் சிதைந்த சொற்களை மீண்டும் முன்னைய பொருளில் வழக்கிற்குக் கொண்டு வருவது இயலாத காரியம் ஆகும். எனவே, சொல் வடிவம் சிதைந்து வழக்கிலுள்ள சொற்களையும், வழக்கிலிருந்து மறைந்த சொற்களையும் இன்றைய பயன்பாட்டிற்குக் கொண்டுவர முடியும்.

நுட்பப் பயன்பாடு

சொற்களுள், நுட்பங் கருதிச் சுட்டப்படும் சொற்களையே கலைச் சொற்கள் என்று நாம் கூறுகிறோம். துவாரத்தைக் (hole) குறிக்கத் துளை, தூம்பு, சுரை, புழை, வாயில், இல்லி, பொந்து போன்ற பல சொற்கள் உள்ளன. இவற்றுள் கண்ணுக்குத் தெரிந்த துவாரம், கண்ணுக்குத் தெரியாத துவாரம் என இருநிலைப்படுத்திப் பார்க்கும்பொழுது, மிக நுட்பமாக முன்னையோர் சொற்களைக் கலைச் சொற்களாகப் பயன்படுத்தியுள்ள திறம் போற்றத்தக்கதாக உள்ளது.

தூம்புடைய வெள்ளெயிறு *(சீவக. 1986 : 2956)*

தூம்புடைத் தடக்கை *(புறநா. 1985 : 19)*

சுருங்கைத் தூம்பின் மனை *(மணிமே. 1981 : 28,5)*

தூம்பகம் பழுநிய தீம்பிழி மாந்தி *(பதிற்றுப். 1980: 81, 21)*

சுரை எயிற்று நாகம் *(சீவக. 1986:2970)*

அகன்சூல் அஞ்சுரைப் பெய்த வல்சியர் *(அகநா. 1981 : 113)*

என 'tubilarity' (கண்ணுக்குத் தெரிந்த) உட்டுளையைக் குறிக்கச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ள தன்மையைக் காணமுடிகின்றது. ஆனால், மகளிரின் மார்பகக் காம்பிலுள்ள அறியப்படாத துளையைக் (orifice, small hole) குறிக்க இல்லி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ள நுட்பநிலையையும் அறியமுடிகின்றது.

இல்லி தூர்ந்த பொல்லா உறுமுலை *(புறநா. 1985: 164)*

இதனைப் போன்றே மட்குடத்தின் அறியப்படாத கசிவுத் துளையைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இல்லிக்குடம் *(நன்னூல் 1983: 28)*

அரிய கலைச்சொற்கள்

தமிழிலக்கியங்களில் பயின்று வந்துள்ள பல அரிய கலைச்சொற்கள் இன்று வழக்கொழிந்துள்ளன; அவற்றை மீண்டும் வழக்கில் கொணர்ந்து கலைச்சொல்லாக்கம் சிறப்படையச் செய்ய வேண்டும். இரத்தத்தைக் (blood) குறிக்க இரத்தம், குருதி என்ற சொற்கள் ஆளப்பட்டு வருகின்றன. 'ரத்தம்' என்பது

வடசொல் என்ற நிலையில் மொழிமுதலில் இகரம் சேர்க்கப்பட்டு இரத்தம் என்றும் அகரம் சேர்க்கப்பட்டு அரத்தம் என்றும் இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளன. இவற்றுள் அரத்தம் என்பது அருகிய வழக்கு; இரத்தம் என்பது பெருகிய வழக்கு.

அரத்தம் உண்டு ஒளிரும் வாளவுணர்' *(நைடதம் 1962:14)*

இரத்தம் என்ற சொல்லைக் கொண்டு இன்று பல கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டு வழக்கில் ஆளப்பட்டு வருகின்றன. இரத்தம் என்பது வடசொல்லாதலால் அதனைக் குருதி எனத் தமிழ்ச் சொல்லால் வழங்கிய நிலையும் காணப்படுகின்றது. இரத்தாட்சகன் என்பதைக் 'குருதிக்கண்ணன்'' எனத் தமிழ்ப்படுத்திய நிலையையும் நாம் காணலாம். இச்சொற்களுக்கு மேலும் இரத்தத்தைக் குறிக்க "நெய்த்தோர்" என்ற சொல் இலக்கியங்களில் ஆளப்பட்டு இன்று வழக்கொழிந்துள்ளது.

நெய்த்தோர் வாய *(நற்றிணை 1962: 2)*

ஐயோடு பித்து நெய்த்தோர் அசும்பு *(சீவக. 1986: 2938)*

இந்நெய்த்தோர் என்ற சொல் தெலுங்கில் நெத்துரு என்றும், கன்னடத்தில் நெத்தரு என்றும் வழங்கப்படுவதாக அறியமுடிகிறது. குமரி மாவட்டப் பேச்சுவழக்கில் இன்றும் 'நெத்தரு' என்று இச்சொல் பயிலப்படுகின்றது. தென்னார்க்காடு மாவட்டக் கிராமப்புறத்தில் ஒரு பிரிவு மக்களிடையே இச்சொல் 'நெத்தம்' என்று வழக்கிலுள்ளதையும் காணலாம். பேச்சுவழக்கில் வழங்கப்பட்டு வரும் இச்சொல், ஒருகாலத்தில் பரந்த வழக்கிற்குரிய சொல்லாக இரத்தத்திற்குப் பதிலாக இருந்திருக்க வேண்டும். 'இரத்தம்' என்ற கலைச்சொல் பெருவழக்குடையதாக ஆகிய பிறகு இச்சொல் வழக்கொழிந்து போயிருக்க வேண்டும்.

பெற்றெடுத்தலாகிய ஈனுகையைக் (bringing forth, yield) குறிக்க *ஈற்று* என்ற சொல் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. தொழிற்பெயராக வந்த இக்கலைச் சொல் இருதிணைப் பொருள் மேலும் சாற்றிக் கூறுவதற்கு முன்பு பயன்பட்டு வந்தது.

பெண்ணீற்று உற்றென *(புறநா. 1985: 82)*

மானினீனும் ஈற்றினிடை *(பிரபோத. 1898: 11.88)*

இப்பொழுது இச்சொல் அஃறிணைப் பொருளின் ஈனுகையை மட்டுமே குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றதேயன்றி உயர்திணைப் பயன்பாட்டில் இச்சொல் பயன்படுத்தப்படவில்லை.

'இப்பசுவிற்கு எத்தனையாவது ஈற்று', என்று கேட்கும் வழக்கம் உண்டு; ஆனால் 'இந்தப் பெண்ணிற்கு எத்தனையாவது 'ஈற்று' என்று கேட்கும் வழக்கம் இல்லை; எத்தனையாவது பேறு என்று கேட்கும் வழக்கம்தான் இருந்து வருகின்றது. இவ் ஈற்று என்ற சொல் இன்றும் நாட்டுப்புற வழக்கில், 'ஈத்து' என வழங்கப்படுகின்றது.

வாய்ச்சி 'adze' என்பது செதுக்குவதற்குப் பயன்படும் ஒரு கருவியை உணர்த்தும் சொல்லாகும். இக்கருவி மரத்தையும், செங்கல்லையும் செதுக்குகின்ற ஒரு கருவியாக இருந்தது. இன்று மரவேலை செய்பவரிடத்து மட்டுமே இக்கருவி பயன்பாட்டில் உள்ளது.

வாய்ச்சியால் இட்டிகை செய்து (சீவக. 1986: 2689)

என்பதில் செங்கல்லைச் செதுக்குகின்ற கருவியாகவும்,

வாய்ச்சி வாயுறுத்தி மாந்தர் மயிர்தொறுஞ் செத்தினாலும்
(சீவக. 1986.:2825)

என்பதில் மரத்தைச் செதுக்கும் கருவியாகவும் இக் கலைச்சொல் ஆளப்பட்டுள்ளது. வாய்ச்சி என்ற சொல் மரவேலை செய்வோரின் வழக்கில் இன்று 'வாட்ச்சி' என வழங்கப்பட்டு வருகின்றது.

மழை நீரைப் பெறாத மண் சூரிய வெப்பத்தால் சூடேறியிருக்கும். இத்தகைய மண்ணைச் சுடுமண் என்று கூறுவர். இந்தச் சுடுமண்ணை உழவர் குடிமக்கள் வெங்கார்மண் என்று பெயர்ப்படுத்தி வழங்குவர்; இன்றும் வழங்குகின்றனர். வெங்கார் மண் என்னும் இக் கலைச்சொல் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் காலத்திலேயே வழக்கிலிருந்திருக்கின்றது.

மாரி .... வெங்கார் மண்ணிலே சொரிய (நச்.சீவக. 1986 : 2503)

என்ற தொடரிலிருந்து மேற்கருத்தை உணரலாம். 'வெங்கார்' என்ற சொல் யாழ்ப்பாண வழக்காகச் சென்னைப் பல்கலைக்கழக அகராதி கூறுகின்றது. இவ் வெங்கார் என்ற சொல்லிலிருந்து வந்த வெங்காரிப்பு 'cracking of agricultural land by excessive heat' என்ற சொல் இன்றும் வழக்கில் இருந்து வருகின்றது. இதனை நோக்கும் பொழுது இக் கலைச்சொல்லின் பயன்பாட்டு விரிவாக்கத்தை உணரமுடிகின்றது.

மருத்துவத் துறையில் மருந்தாளர் என்ற சொல் இன்று வழக்கில் காணப்படுகின்றது. இச்சொல் மருந்தாளுநர் 'Pharmacist' என்றும்

வழங்கப்படுவதைக் காணலாம். இதற்கு 'மருந்து செய்திறம் கற்ற வல்லவர்' என்று பொருள். இப்பொருளைக் கொண்ட மருந்தாளர் என்ற சொல் பெருங்கதையில் இடம் பெற்றுள்ளது. அங்கு இச்சொல் மருந்தாளுநரை மட்டும் குறிக்காமல் மருத்துவரையும் குறித்ததைக் காணமுடிகின்றது.

மகாஅர் மருந்தாளரின் மறத்தகை அண்ணல்
(பெருங்கதை 1935: 2, 4, 175)

என்பது அத்தொடர். மகாஅர் மருந்தாளர் என்பதற்கு, "குழந்தைகளுக்கென மருந்து ஆய்ந்து கொடுக்கும் மருத்துவர்" எனப்பொருள் விளக்கம் அறிய முடிவதால் இன்றைய குழந்தை மருத்துவரை (Paediatrician) குறிக்கும் கலைச்சொல்லாக அது விளங்கியிருக்க வேண்டும் என்பதை நாம் உய்த்துணரலாம். இன்றைய மருந்தாளர் என்ற சொல்லாட்சி பழந்தமிழ் இலக்கியக் கலைச்சொல்லாக இருப்பதை எண்ணி நாம் பெருமைப்படாமல் இருக்க முடியாது.

அவற்றைப் போன்று இலக்கியங்களில் பயின்றுவந்த பல சொற்கள் இன்று பயன்பாட்டில் வரவேண்டிய நிலையில் உள்ளன. எடுத்துக்காட்டிற்குச் சிலவற்றைக் காணலாம்.

விலங்கின வகைகளுள் ஊர்ந்துசெல்லும் உயிரினங்களும் ஒருவகையாகும். இதற்கு 'ஊர்வன' 'reptiles' என்ற சொல் இப்பொழுது ஆளப்பட்டு வருகின்றது. கலைச்சொல் கோட்பாட்டில் சுருக்கம் (brevity) என்பது இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது. இப்பொழுது வழங்கப்பட்டு வரும் ஊர்வன என்ற சொல்லைக் காட்டிலும் மிகச் சுருங்கிய அழகிய வடிவான சொல் இலக்கியத்தில் காணப்படுவதை நோக்கும் பொழுது கலைச் சொல்லாக்கத்திற்குரிய நுட்பக்கூறுகள் அச்சொல்வழி வெளிப்படுவதை உணர முடிகின்றது.

விலங்கினம் கலைய ஊர்வைகள் மெலிய (முகியத்தீன். 1983 :33) என்ற தொடரில் அமைந்துள்ள ஊர்வை என்ற சொல் ஊர்வன என்பதைவிடவும் நேரிய சொற்செட்டுடைய சொல்லாக அமைந்துள்ளதல்லவா! ஊர்வன என்பதற்கு மாற்றுக் கலைச்சொல்லாக இதனை அமைத்துக் கொள்வதால் தவறேதும் இல்லை.

இதைப்போலவே நீர்வாழ் உயிரினங்களைக் குறிக்கச் சுருங்கிய சொல்லாகத் தமிழில் கலைச்சொல் பயன்படுத்தப்படவில்லை என்றே கூறலாம். இதனைக் குறிப்பதற்கு நீர்வாழ்வன 'aquatic creatures' என்ற சொல்தான் இப்பொழுது பயன்பாட்டில் உள்ளது. இச்சொல்லும் "நீர்வாழ் உயிரினங்கள்" என்ற சொல்லின் சுருங்கிய வடிவமாகவே கருதப்படுகின்றது. இதையும் கலைச்சொல் சுருக்கம் கருதி

இன்னும் சுருங்கிய பொருட் பொருத்தமுடைய சொல்லாக நாம் ஆக்கிக்கொள்ள வேண்டும். அவ்வாறு ஆக்கும்பொழுதுதான் எளிமையான கலைச்சொல்லைப் பெறமுடியும். இத்தகையதொரு கலைச்சொல் பட்டினத்தார் பாடலொன்றில் காணப்படுகின்றது.

நீரியாய் ஊர்வனவாய் நின்றநாள் போதாதோ

(பட்டினத்துப் 1973: 24,2)

என்ற தொடரில் காணப்படும் நீரி என்ற இரண்டெழுத்துச் சொல் நீர்வாழ் உயிரினங்கள், நீர்வாழ்வன என்பவற்றினின்றும் சுருங்கி நீரி என்று அழகிய கலைச்சொல்லாக உருவெடுத்துள்ளது. இச்சொல் சுருங்கிய வடிவில் விரிந்த பொருளைத் தந்து நிற்கின்றது. இக்கலைச் சொல்லையும் இன்றைய கலைச் சொல்லாக்கத்தார் பயன்பாட்டில் கொண்டுவருதல் வேண்டும்..

சுருங்கிய கலைச்சொல்லாகப் பிறிதொன்றைக் காணலாம். அளத்தல் 'measure' என்ற வினைக்கு அளவு என்றும், அளவை என்றும் பெயர்ச்சொற்கள் உள்ளன. இவை இரண்டும் அளவுக்கூறுகளையும் அளவின் வகைகளையும் எடுத்துக் கூறுவனவாகும். ஆனால் அளத்தற்குப் பயன்படும் கருவிகளைக் குறிக்க ஒருசொற் கலைச்சொல் இப்பொழுது பயன்பாட்டில் இல்லை. அளவு கருவி 'instrument of measurement' என்ற சொல்தான் இப்பொழுது உள்ளது. இந்த 'அளவு கருவி' என்ற சொல்லின் பொருளை உள்ளடக்கிய 'அளவி' என்ற சொல் ஒன்று திருக்கோவையாரில் காணப்படுகின்றது.

அளவியை யார்க்கும் அறிவறியோன் (திருக்கோ .1972:10)

என்று குறிப்பிடப்படும் இச்சொல்லை அளவு கருவி என்பதற்கு மாற்றாகப் பயன்படுத்தலாம். திருக்கோவையாருக்கு உரையெழுதப் புகுந்த பேராசிரியரின் உரைக்கூற்று இச்சொல்லின் பொருளை மேலும் தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளது.

துறவு துறவி என நின்றாற் போல அளவு அளவி என நின்றது

என்பது பேராசிரியரின் உரையாகும். இதனுள் துறவு துறவி என நின்றாற் போல என்பது துறத்தலை உடையவன் துறவி எனவும் துறவைச் செய்பவன் துறவி எனவும் சொல் மாற்றம் பெற்றதைச் சுட்டுகின்றது. இதைப் போன்றே அளத்தலை உடையது அளவி, அளவைச் செய்வது அளவி எனவும் பொருள் விரிவு செய்வதன் மூலம் அளவி என்பது அளவு கருவிகளைக் குறிக்கும் அரிய கலைச்சொல் என்பதை நாம் உய்த்துணரலாம்.

வழக்குத் தகுதிச் சொற்கள்

எந்த ஒரு பொருளைக் குறிக்கும் சொல்லும் அச்சொல்லால் குறிக்கப்படும் பொருளுக்குத் தகுதிக்குறைவைத் தரும் நிலை ஏற்படும்பொழுது வழக்குத் தகுதியுடைய புதுச்சொல் உருவாதல் இயற்கை. கலைச் சொல்லும் இதற்கு விதிவிலக்கன்று. இந்த வழக்குத் தகுதிச் சொற்கள் (Euphimistic terms) சமுதாய முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமையும். இதனை இலக்கணத்தில் இடக்கரடக்கல் என்று கூறுவர். சான்றிற்கு ஊமை, குருடு போன்ற சொற்களை எடுத்துக் கொள்வோம். ஊமை 'dump' என்ற சொல், ஊமை, ஊமையர், ஊமையர் பள்ளி என வழக்காறுகளைப் பெற்றிருப்பதைக் காணலாம். இச்சொற்கள் அக் குறைபாடுடையோரை அழைக்கப்பயன்பட்டாலும் நாளடைவில் அவர்களை அச்சொல்லால் அழைப்பது தகுதிக்குறைபாடுடையது என்னும் சமுதாய உணர்வு தோன்றத் தொடங்கியது. எனவே அச்சொற்களின் தகுதி குறைவைப் போக்கித் தகுதியுடைய சொற்களால் அவர்களை அழைக்க வேண்டுமென்பதால் அச்சொற்களுக்கு மாற்றாக இடக்கரடக்குச் சொற்கள் உருவாயின. ஊமையர் என்பதை வாய் பேசாதார் என்றும் ஊமையர் பள்ளி என்பதை வாய்பேசாதார் பள்ளி என்றும் மாற்றி வழங்குதற்கேற்ற வகையில் சொற்கள் உருவாக்கப்பட்டன. 'வாய் பேசுதல்' என்ற சொல் வழக்கும் இன்றைய நிலையில் அதிகமாகப் பேசுதலைக் குறிக்கப்பயன்படுகின்றது. இதற்கு எதிர்மறையான வாய் பேசாதார் என்பது அதிகம் பேசாதார் என்று பொருள் மயக்கம் தருகின்ற சொல்லாகவுள்ளது. மேலும் தகுதி கருதிய வாய்பேசாதார் என்ற சொல்லும் நாளடைவில் தகுதிக் குறைவுடைய சொல்லாகச் சமுதாயத்தால் உருவாக்கப்படும் நிலை ஏற்படலாம். எனவே ஊமை, ஊமையர் என்பதற்கும் வாய்பேசாதார் என்பதற்கும் மாற்றாக இலக்கியங்களில் சொல் கிடைப்பின் அச்சொல்லைப் பயன்படுத்தக் கருதலாம்.

அவ்வகையில் 'மூங்கை' என்ற சொல் ஊமை என்ற பொருளில் இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

ஒரு மூங்கைப் பிள்ளை ஊன்	*(இறையனார் 1976: 1)*
கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித்து	*(தேவாரம்: 1040, 2)*
மூங்கையான்	*(கம்பரா. 1976: 1, 1, 1)*
மூகைமை	*(தணிகைப்பு, வீரட்டபுரா. 3)*

போன்ற சொற்கள் காலந்தோறும் அவற்றின் பெருகிய வழக்கைச் சுட்டி நிற்கின்றன. இச்சொல் பண்பு விகுதி பெற்று மூகைமை 'dumbness' எனப் பண்புப் பெயராக

நிற்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். இலக்கியங்களுள் பெருகிய வழக்கிலிருந்த இச்சொல்லை ஊமை என்ற சொல்லிற்குரிய வழக்குத் தகுதிச் சொல்லாகக் (இடக்கரடக்குச் சொல்லாக) கலைச் சொல்லாக்கத்தார் பயன்படுத்தக் கருதலாம். அவ்வாறு கருதினால்,

மூங்கை, மூங்கையர், மூங்கையர் பள்ளி

என அழகிய சொற்களை நம்மால் பெறமுடியும்.

ஊமை என்பதைப் போன்றே குருடு என்ற சொல்லும் கருத்தில் கொள்ளத்தக்க ஒரு சொல்லாகும். இப்பொருண்மையைக் குறிப்பதற்குக் குருடர், கண்ணிலி, பார்வையிழந்தோர், பார்வையற்றோர் போன்ற சொற்கள் இன்று வழக்கிலிருந்து வருகின்றன. குருடன் என்பதற்குரிய வழக்குத் தகுதிச் சொற்களாகப் பின்னைய இரண்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. சமூக உணர்வு காரணமாகச் சொல் உருவாக்கப்படும் இத்தகைய நிலை முன்பும் இருந்திருக்கின்றது. சீவகசிந்தாமணி நச்சினார்க்கினியர் உரையில் குருடர் என்பதற்குக் 'கண் கெட்டவர்' (நச்.சீவக. 1986 : 2376) என்ற சொல் வழக்குப் பயின்று வருதலைக் கண்டு மேற்கருத்தைத் தெளியலாம்.

குருடர் என்ற பொருண்மையைச் சுட்டுவதற்குச் 'சிதடர்' 'சிதடு' என்ற சொற்கள் இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளன.

துஞ்சுபுலி இடறிய சிதடன் போல (புறநா. 1985: 73)

சிறப்பில் சிதடும் (புறநா. 1985: 28)

போன்ற தொடர்களை இதற்குச் சான்றுகளாகக் காட்டலாம். எனவே, சிதடர் என்ற இச்சொல்லைக் குருடர் என்ற சொல்லுக்குரிய இடக்கரடக்குச் சொல்லாகப் பயன்படுத்த முயலலாம். அவ்வாறு பயன்படுத்தும்பொழுது சிதடர், சிதடர் பள்ளி, சிதடர் இல்லம் என வழக்காறுகள் தோன்றக் கூடும். எனவே, சொற்கள் காலந்தோறும் உருவாக்கப்படல் வேண்டும்.

பண்டைத் தமிழர்கள் அனைத்து அறிவியல் மற்றும் கலைக்கூறுகளையும் இலக்கணப்படுத்தி வைக்கவில்லை. அவ்வாறு வைக்கப்பட்டவற்றுள் ஒருசில துறைகளைச் சார்ந்த நூல்கள் தவிர ஏனைய துறைகளுக்கு நூல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. மேலும், அறிவியல் என்ற பிரிவு அப்பொழுது இல்லை; எண், எழுத்து என்ற இருபெரும் பிரிவுகளுக்குள் அது அடங்கியிருந்தது. கற்றற்குரிய கலைகளாக அப்பொழுது கூறப்பட்டவற்றுள் பெரும்பாலான அறிவியல் துறையைச் சார்ந்தவையாக இருந்தாலும் அவற்றையும் கலை என்றே வழங்கி

வந்தனர். இவை அனைத்திற்குமுரிய நூல்கள் நமக்குக் கிடைத்தால் அன்றைய அறிவியல் சிந்தனையையும் அச்சிந்தனையின்பாற்பட்ட கலைச்சொற்களையும் நாம் பெறமுடியும்; இன்றைய கலைச்சொல் தேவைக்கு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவும் முடியும்.

கணித அறிவியல் பெரிதும் வளர்ந்த துறையாக அப்பொழுது இருந்தது. அன்றைய கணிதக் கூறுகளை இன்றைய கணிதவியலோடு ஆய்வுசெய்யும் ஆர்வம் இன்று வளர்ந்து வருகின்றது. கணக்கதிகாரம், ஆஸ்தான கோலாகலம் போன்ற கணித நூல்கள் கணிதவியல் நுட்பங்களைக் கூறுகின்றன. தொல்காப்பிய இலக்கணத்தில் எண்ணுப் பெயர்ப் புணர்ச்சி விதந்து கூறப்படுவதிலிருந்து கணிதத்தின் அன்றைய இன்றியமையாமை புலப்படுவதோடு பலவகை வணிகப் பிரிவுகளில் அக்காலத்தினர் வளர்ந்திருந்த நிலையும் புலப்படுகின்றது. அப்பொழுது நிலவிய கலைச்சொற்களுள் பல ஆழாக்கு, உழக்கு, முந்திரி, வெள்ளம், ஆம்பல், தாமரை போன்றவை இன்று வழக்கொழிந்துள்ளன. ஆயினும், தொல்காப்பியர் காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலங்களிலும் வழங்கிய கணிதவியல் சொற்கள் இன்றும் வழக்கிலுள்ளன. இன்றைய கணிதத்தில் 10^6 என்பதை Ten to the power of six என வழங்குகின்றனர். இதற்கு 10 ஐ 10-ஆல் ஐந்துமுறை பெருக்குதல், பத்தின் 6 அடுக்கு, பத்தின் 6 மடங்கு என்று பொருள் கூறலாம். இன்றைய வகுப்பறைகளில் 10^6 என்பதற்கு 10-இன் அடுக்கு 6 என்று சொல்லிக் கொடுக்கப்படுகின்றது. அடுக்கு என்பதற்கு ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்குதல் என்றுதான் பொருள். பெருக்குதல் என்ற பொருள் அச்சொல்லில் தோன்றவில்லை. Ten to the power of six என்பதில் power என்பதற்கு 'the product of a number multiplied by itself a given number of times' (Oxford Dic. 1988: 632) என்றுதான் பொருள். எனவே, பெருக்குதல் என்ற பொருளைத் தரக்கூடிய பிறிதொரு பொருத்தமான ஒருசொல் இலக்கியங்களில் பயின்று வரும்பொழுது அதனைக் கணிதவியலார் கலைச்சொல்லாக ஆய்ந்து ஏற்றுக்கொள்ளலாமே.

இலக்கியங்களில் மடி, மடங்கு என்ற சொற்கள் பரவலாக ஆளப்பட்டுள்ளன. இச்சொற்கள் ஒரு பொருளுடையன.

நான்காம் மடியன்றே (சீவக. 1986:2793)

கூற்றினும் மும்மடி கொன்றான் (கம்பரா. 1976:4,57)

இருமடங்காக எய்தும் (சூளா. 1962 : 165)

இவற்றுள் மடி, மடங்கு என்ற சொற்கள் (ஒன்றின்) பெருக்கம் என்ற பொருளைத் தருவன. இருசொற்களுள்ளும் 'மடி' என்ற சொல் மடிதல், திரும்ப வருதல் என்ற நிலையில் முதனிலைத் தொழிற்பெயராக இருப்பதால் 10^6 என்பதற்குப் 10இன்

6 மடி என்று இதனைக் கலைச்சொல்லாகப் பயன்படுத்த முயலலாம்.

இவை போன்று பல சொற்கள் இலக்கியங்களுள் மறைந்து கிடக்கக்கூடும். அவையனைத்தையும் ஒருங்கு திரட்டிப் பகுத்து ஆய்ந்து இன்றைய தேவைக்கேற்ப அவற்றைக் கலைச்சொல்லாக ஆக்கிக்கொள்ள வேண்டும். இது ஒரு தனிமனித முயற்சியாக இருக்க முடியாது. தமிழறிந்தோர், துறைவல்லுநர், கலைச்சொல்லியலார் முதலியோர் கூடியிருந்து ஆய்ந்து வழக்கு நோக்கிச் செய்யப்பட வேண்டிய முயற்சியாகும். இம் முயற்சி வளர்வதாக.

துணை நூல்கள்

அகநானூறு, 1981, இரண்டாம் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

இறையனார் அகப்பொருள் , 1976, கழகம், சென்னை.

ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும், 1980, உ.வே.சா. நூல்நிலையப் பதிப்பு, சென்னை.

கம்பராமாயணம், 1976, கம்பன் கழகம், சென்னை.

குழந்தைசாமி, வி.சி., 1973, *கலைக்கதிர்*, மலர் 25, இதழ் 5, கோயம்புத்தூர்.

சிலப்பதிகாரம் மூலமும் அடியார்க்கு நல்லாருரையும், 1985 , த.ப.க.பதிப்பு, தஞ்சாவூர்.

சீவகசிந்தாமணி மூலமும் நச்சினார்க்கினியருரையும், 1986, த.ப.க.பதிப்பு, தஞ்சாவூர்.

சுந்தரம். இராம 1994, "சொல்லும் திறமை தமிழுக்குண்டு" *இரண்டாவது உலகத்தமிழாசிரியர் மாநாடு ஆய்வடங்கல்*, கோலாலம்பூர்.

சூளாமணி, 1962 இரண்டாம் பதிப்பு, உ.வே.சா. நூல்நிலையப் பதிப்பு, சென்னை.

தணிகைப்புராணம், 1960, கச்சியப்ப முனிவர், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை.

திருஅடிகள், 1960, 'கலைச்சொற்கள்,' *செந்தமிழ்ச் செல்வி*, தொகுதி 35, கழகம், சென்னை.

திருக்குறள், 1984, மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

திருக்கோவையார், 1972, ஸ்ரீ காசிமடப் பதிப்பு, திருப்பனந்தாள்.

திருவாசகம், 1988 சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை -4

நம்பிள்ளை, 1925, ஈடு முப்பதாயிரப்படி முதற்பத்து, நோபில் அச்சுக்கூடம், திருவல்லிக்கேணி.

நற்றிணை உரையுடன், 1962 , கழகம் , சென்னை.

நன்னூல் மூலமும் சிவஞான முனிவர் திருத்திய உரையும்,1983, மறுபதிப்பு, கழகம், சென்னை.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம், 1987, மூன்றாம் பதிப்பு, கி.வேங்கடசாமி (பதி). திருவேங்கடத்தான் பெருமன்றம், சென்னை.

நைடதம் மூலமும் உரையும். 1962, கழகப்பதிப்பு, சென்னை.

பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள், 1973, கழகப்பதிப்பு, சென்னை.

பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும், 1980, உ.வே.சா. நூல்நிலையப் பதிப்பு. சென்னை.

பாரதிதாசன், 1984, மானுடம் போற்று, தூரன் (பதி.), பூம்புகார் பிரசுரம், சென்னை.

பிரபோத சந்திரோதயம் என்னும் மெய்ஞ்ஞான விளக்கம், 1898, திருவேங்கடசாமிகள், மதராசு ரிப்பன் அச்சியந்திர சாலை. மதராசு.

புறநானூறு மூலமும் உரையும், 1981, த.ப.க. வெளியீடு, தஞ்சாவூர்.

பெருங்கதை மூலமும் உரையும், 1953 , உ.வே.சா.. பதிப்பு, கபீர் அச்சுக்கூடம். சென்னை.

மணிமேகலை மூலமும் உரையும், 1981, உ.வே.சா. நூல்நிலையப் பதிப்பு, சென்னை.

முகியத்தீன் புராணம், 1983, பதிறுத்தீன் புலவர், ஆசியா பதிப்பகம், அதிராம்பட்டினம்.

Aqueil Ahmed, 1984, 'Western Science and technology in non Western cultures', *National Seminar on Social relations of scientific and*

technical changes, Edited by Aqueil Ahmed, M.A. National Institute of Science and Technology and Development Studies, New Delhi.

Marieo Pei, 1956, *Language for Everybody*, The American Library, New work.

Tamil Lexicon, 1982, i-vi volumes, University of Madras, Madras.

Vijayaraghavan, R., 1993, *Development of Tamil as a language of Science and Technology*, Ph.D. Thesis submitted to University of Mysore.

38

இன்றைய ஆட்சிக்கு அன்றைய இலக்கியங்களில் காணப்பெறும் ஆட்சிச் சொற்கள்

சி. செல்வராசு

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய" மூத்த மொழியாம் தமிழ்மொழி, தொல்பழங்காலந்தொட்டு இந்நாள் வரை தமிழகத்தின் ஆட்சிமொழியாகவே இருந்ததென்பதில் இருவேறு கருத்திற்கிடம் இல்லை. ஆயின், ஆங்கிலேயர்கள் இம்மண்ணை ஆண்ட சற்றொப்ப நூற்றி ஐம்பது ஆண்டுகள் மட்டுமே ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருந்து வந்தது. எனவே, தொல்பழங்காலந்தொட்டு இந்நாள்வரை ஆட்சிமொழியாக இருந்தது தமிழ் மொழியேயாகும்.

"ஆட்சிச் சொல்" என்றால் என்ன? அதன் பொருள் என்ன என்பதற்குத் தமிழிலுள்ள அகராதிகள், பேரகராதிகள், சொற்களஞ்சியங்கள், கலைக் களஞ்சியங்கள் ஆகியன சொற்பொருள் விளக்கங்கள் தந்துள்ளன. "ஆட்சி" என்ற சொல்லுக்கு "ஆள், ஆளுகை, உரிமை" (Tamil Lexicon 1982:215) என்றும், "ஆளுகை, உரிமை, வழக்கம்" (Winslow 1979:76) என்றும், ஆண்மை ஆளுகை, உரிமை நிலையினொன்று, நன்னிமித்தம், பழக்கம், முயற்சி" (கதிரைவேற்பிள்ளை 1981: 176) என்றும் சொற்பொருள் விளக்கங்கள் தந்துள்ளன.

அடுத்தது "ஆட்சிச் சொல்" என்ற சொற்றொடரிலுள்ள "சொல்" என்ற சொல்லுக்கு "எழுத்தினோசை, சொல், கட்டளை, புகழ், வாக்கியம், பதம், உரை, பேச்சு, மொழி, வழக்கு, விளிம்பு, வினா" என்று நா. கதிரைவேற்பிள்ளையின் "தமிழ் மொழியகராதி" (கதிரைவேற்பிள்ளை 1981:711) பொருள் விளக்கம் கூறுகிறது. இதே பொருளைத்தான் சென்னைப் பல்கலைக்கழகத்தின் 'பேரகராதியும்', வின்சுலோவின் 'தமிழ் ஆங்கில அகராதியும்', ச. பவானந்தம் பிள்ளையின் 'தற்காலச் சொல்லகராதியும்' பொருள் கூறுகின்றன.

எனவே, பல்வேறு அகராதிகள் கூறும் சொற்பொருள் விளக்கங்களை

வகுத்தும், தொகுத்தும், சுருக்கியும், ஆய்ந்து பார்க்கின் 'ஆட்சிச் சொல்' என்ற சொல்லுக்கு அரசின் அன்றாட ஆளுகையிலே, நிருவாகத்திலே, மேலாண்மையிலே, செயற்பாட்டிலே, வழக்கத்திலே, பழக்கத்திலே, அலுவலக நடவடிக்கைகளிலே வாலாயமாகப் பயன்படுத்தப்படும் சொல் எனப் பொருள் கொள்வது சாலச் சிறந்ததாகவும், பொருத்தமானதாகவும் கருதப் பெறுகிறது.

ஆட்சிச் சொல்லுக்கான மூலங்கள்

சங்க இலக்கியங்கள், சங்கம் மருவிய கால இலக்கியங்கள், இலக்கண நூல்கள், உரைகள், புதைபொருள்கள், புராணங்கள், இதிகாசங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள், செப்பேடுகள், ஒலைச் சுவடிகள், ஆவணங்கள், மேனாட்டார் குறிப்புகள், கடிதங்கள், நாட்குறிப்புகள், மேனாட்டார் எழுதிய அகராதிகள், இலக்கண நூல்கள், ஆங்கில, பிரெஞ்சு , டச்சு, போர்ச்சுக்கீசிய, கிழக்கிந்தியக் கம்பெனிகளின் ஆவணங்கள், டச்சு, போர்ச்சுக்கீசிய அடிகளார்களின் நாட்குறிப்புகள், மடல்கள், இக்காலம் வரையிலான இலக்கியங்கள், திங்கள் இதழ்கள், அரைத் திங்கள் இதழ்கள், கிழமை இதழ்கள், நாளிதழ்கள் ஆகியவற்றின் துணையின்றி ஆட்சிச் சொற்களின் அடிப்படைத் தரவுகளை, மூலங்களை ஆய்வு செய்யவியலாது. அத்தோடு வழக்கிலுள்ள சொற்கள், வட்டாரச் சொற்கள் ஆகியனவும் ஆட்சிச் சொல்லுக்கான மூலங்களை ஆய்வு செய்ய மிகவும் பயனுடையதாக அமைந்துள்ளன. மேலே கூறப்பட்ட மூலங்களில் சங்கம், சங்கம் மருவிய காலத்து இலக்கியங்களிலுள்ள சில பல ஆட்சிச் சொற்கள் மட்டுமே அங்கொன்றும், இங்கொன்றுமாகத் தொகுத்து இக்கட்டுரையிலே வழங்கப்பட்டுள்ளன.

ஆட்சிச் சொற்களை அறியக் கிடைக்கும் அடிப்படை மூலங்களுள், முதன்மையாக அமையும் இலக்கியங்களைப் பற்றியே இக்கட்டுரையில் ஆயப்பெறுகின்றது. சங்க கால ஆட்சிச் சொற்களை அறியப் பண்டைக் கால இலக்கண நூலாகிய தொல்காப்பியமும், சங்க இலக்கிய நூல்களான பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும், சங்கம் மருவிய கால இலக்கியங்களான பதினெண் கீழ்க்கணக்கும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் நமக்கு அடிப்படையாக அமைகின்றன.

சங்க நூல்களை அகப்பொருள் நூல்கள், புறப்பொருள் நூல்கள் எனப் பாகுபாடு செய்வது மரபு. அகப்பொருள் நூல்களைக் காட்டிலும், புறப்பொருள் நூல்களில், ஆட்சிச் சொற்கள் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ளன. கீழ்க்கணக்கு நூல்களின் நடையானது தெளிவாகவும், இனிமையாகவும் அமைந்துள்ளதோடு, அவை திணை நெறியையும் எடுத்தியம்புவனவாக

அமைந்துள்ளன. நீதி நூல்களும், திருக்குறளும், நாலடியாரும், பழமொழி நானூறும், பன்னூறு ஆட்சிச் சொற்களைத் தன்னகத்தே பெற்றுச் சொற்களஞ்சியங்களாகத் திகழ்கின்றன. சிலப்பதிகாரமும், மணிமேகலையும் மூவேந்தர்களின் ஆட்சியின் மாட்சிமை குறித்தும், அக்கால அரசியலமைப்புப் பற்றியும் கூறுகின்றன. இவ்விரு காப்பியங்களையும் ஆட்சிச் சொற்களின் கருவூலங்கள் என்று கூறுவது மிகையாகாது.

சுருங்கக் கூறின், சங்க கால, சங்கம் மருவிய கால நூல்களால் மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், களப்பிரர்கள் ஆகியோரது ஆட்சி குறித்து அறிய முடிகிறது. எனவே, அக்கால ஆட்சிச் சொற்களைப் பற்றி அறிய இந்நூல்கள் பெரிதும் பயன்படுகின்றன.

தொல்காப்பியத்தில் கிடைக்கும் சில பல ஆட்சிச் சொற்கள்

தொல்காப்பியம் அரியதோர் இலக்கண நூலாக மட்டுமன்றி, இக்கால ஆட்சிக்குத் தேவையான ஆட்சிச் சொற்களைத் தன்னகத்தே கொண்ட ஆட்சிச் சொல் கருவூலமாகவும் திகழ்கின்றது. இந்நூல் எழுத்து, சொல், பொருள் என்று மூன்று அதிகாரங்களாகவும், ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டதாகவும் உள்ளது. எழுத்ததிகாரம் எழுத்துக்களின் இலக்கணத்தைப் பற்றியும், சொல்லதிகாரம் சொற்களைப் பற்றியும், பொருளதிகாரம் அச்சொற்களில் அமைந்துள்ள பொருத்தத்தைப் பற்றியும் கூறுகின்றன. தொல்காப்பியர் அந்நூலில் சொல்லின் வகைகளைப் பின்வருமாறு பிரித்துள்ளார்:

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொலென்
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே
(தொல்காப்பியம் - எச்சவியல் : 391)

'இயற்சொல்', என்பது வழக்கமான, எளிய சொற்களாகும். 'திரிசொல்' என்பது செய்யுள் வடிவிலும், உரைநடையிலும் வரும் சொல்லாகும். 'திசைச்சொல்' என்பது வட்டார வழக்கிலுள்ள சொற்களாகும். 'வடசொல்' என்பது சமஸ்கிருத மொழியிலிருந்து வந்து தமிழில் வழங்கும் சொற்களாகும். இந்த நான்கு வகையான சொற்களிலுமே, இன்றைய ஆட்சிக்குத் தேவையான ஆட்சிச் சொற்கள், மிக மலிந்துள்ளன. ஆயின் , அவற்றில் பத்துச் சொற்கள் மட்டுமே காலத்தின் அருமை கருதி இவண் ஆயப்பட்டுள்ளன.

1. அமரர் .. பகைவர், வானோர் (Foes, immortals)
(தொல்காப்பியம்- பொருளதிகாரம் 79:1)

2. ஆராய்ச்சி .. சோதனை (Research, Critical study)

(தொல்காப்பியம், பொருளதிகாரம் 256:7)

3. ஊர்தி .. வண்டி, வாகனம் (Vehicle, Conveyance)

(தொல்காப்பியம் , சொல். 73:1)

4. எடுத்துக்காட்டு .. உதாரணம் (Example)

(தொல்காப்பியம், பொருளதிகாரம் 648: 3)

5. கடப்பாடு .. கடமை, முறைமை, (Duty, obligation)

(தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் 37)

6. கோட்டம் : நாடு (தொல்காப்பியம் - சொல்லதிகாரம் 321: 2)

7. சார்பு .. உதவி, துணை (Sub, help, support)

(தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் 101, சொல்லதிகாரம் 53:3)

8. செய்தி .. தகவல் (News, information)

(தொல்காப்பியம் - சொல்லதிகாரம் 81:5)

9. நாற்றம் .. நறுமணம், மணங்கமழ், கெட்ட மனம் (Smell, bad smell)

(தொல்காப்பியம் - சொல்லதிகாரம் 79:7, எழுத்ததிகாரம் - 112:1)

10. நூறாயிரம் .. இலட்சம் (Lakh)

(தொல்காப்பியம் -- எழுத்ததிகாரம் - குற்றியலுகரம் 65:1)

தொல்காப்பியர் காலத்துச் சொற்களின் இன்றைய பயன்பாடு

தொல்காப்பியத்தில் கடுஞ்சொல், செறிவுமிக்க சொற்றொடர், எளிய சொல், பழஞ்சொல், வழக்குச் சொல்,. மரபுச் சொல் ஆகியன உள்ளன. இதில் வரும் சிலபல சொற்கள் அன்றும், இன்றும் தொடர்ந்து வழங்கி வருகின்றன; வழக்கில் இருந்து வருகின்றன. நிலைப்பேறடைந்துள்ளன என்பதைப் பார்க்கும்போது இஃது ஓர் இலக்கண நூல் மட்டுமன்று, இலக்கிய நூலுமாகும் என்பது உய்த்துணர முடிகிறது. தொல்காப்பியர் காலத்துச் சில சொற்கள் இன்றும் பொருள் மாறாமல் அதே பொருள் தருகின்றன. சிலவற்றிற்குப் பொருளில் மாறுபாடுகள், வேறுபாடுகள், உயர்வுப் பொருண்மைகள் (Elevation), இழிவுப் பொருண்மைகள் (Degradation /degeneration), மாற்றுப் பொருண்மைகள், எதிர்மறைப் பொருண்மைகள் தோன்றியுள்ளன. "பார்ப்பர், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், அமரர்,

உயர்ந்தோர், இழிந்தோர், சாதி, செய்யுள் கைக்கிளை, பெருந்திணை, அகத்திணை, கிழவன், கிழவி, மானம், பெருமிதம், கரணம், பிள்ளை, நூல், வினை, மறை, களவு, ஒன்றினைய சொற்களெல்லாம் திரிபுப் பொருள் பெற்றும், புகுந்த கருத்துக்கட்கு இடம் கொடுத்தும், இலக்கிய விளக்கத்தில் ஒரு பெரும் குழப்பத்தையும், மயக்கத்தையும் உண்டாக்கி விட்டன," என்றுரைக்கிறார் வ.சுப. மாணிக்கம் (மாணிக்கம் 1984 : 13).

அவர் மேலும் கூறுவார், "தொல்காப்பியத்துக்கு உரை காண்பவர் முதலாவது காண வேண்டுவது அக்காலத்து அச்சொல்லின் வரம்பான பொருளென்ன என்பது. "பெருமிதம்", "மானம்" என்ற சொற்கள் திருக்குறள் காலத்தே முரணான பொருள்பட்டுவிட்டன. எனினும் இடைக்கால இளம்பூரணர், காலச் சொற்பொருள் உத்தியைக் கடைப்பிடித்து "புகழும் மானமும், எடுத்து வற்புறுத்தலும்" என்ற தொடரில் "மானம்" என்பதற்குக் "குற்றம்" என்றே பொருள் கண்டனர் (மாணிக்கம் 1984:14).

சங்க இலக்கியங்கள்

"சங்கப் பாடல்கள் தமிழ் இலக்கியப் பேழை, அழியாத கற்பனைக் கருவூலம், கருத்து வளமும், கற்பனைச் சிறப்பும் பொருந்திய அழகான பாடல்கள் பலவற்றைப் பெற்று மிளிர்வன. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் வாழ்ந்த வாழ்க்கையின் பெற்றியினை விளக்கி நிற்பன" (பாலசுப்பிரமணியன் 1959: 36). பாட்டும், தொகையும் சங்க இலக்கியத்தில் ஈடு இணையற்ற சொத்துக்களாகும். இப்பழந்தமிழ்ப் பனுவல்களாகிய பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் அகத்தையும், புறத்தையும் பற்றிப் பாடியுள்ளன. "மூன்றடிச் சிற்றெல்லையாகவுடைய ஐங்குறு நூற்றுப்பாடல்கள் முதல் எழுநூற்றெண்பத்திரண்டடிப் பேரெல்லை கொண்ட மதுரைக் காஞ்சி வரையில் பல சிறந்தனவாகிய பாடல்கள் பொதிந்துள்ளன" (பாலசுப்பிரமணியன், 1959 :37). இச்சங்க இலக்கியங்களில் கிடைத்த ஆட்சிச் சொற்களில் பத்துச் சொற்கள் மட்டும் இவண் தரப்பட்டுள்ளன.

1. ஆவணம் .. முறிச்சீட்டு, உரிமை (Right to property)
(நெடுநல்வாடை 44, பட்டினப்பாலை 158)

2. ஈனில் .. கருவுயிர்க்குமிடம் (Maternity Centre)
(குறுந்தொகை 85:3)

3. ஊக்குநர் : ஊக்குபவர், முயல்பவர் (Motivator)

(பதிற்றுப்பத்து 13:18, அகநானூறு 29: 19)

4. ஒப்புரவு .. ஒற்றுமை, ஒழுங்கு, சமாதானம், உபகாரம்.

(Agreement. Reconciliation, Philanthrophy)

(நற்றிணை 220:8, நாலடியார் 22:3, திருக்குறள் 213:2)

5. குற்றகம் : பிழைபட்ட மனம் (Guilty mind)

(திருமுருகாற்றுப்படை 196, மலைபடுகடாம் 344).

6. கையகப்படுவது .. ஒப்புக்கொடுத்தல், ஆட்சிக்குட்படுத்துதல்

(Acquisition) (புறநானூறு 58 : 23)

7. சான்றாண்மை - பெருந்தன்மை, ஊக்கம், பொறுமை,

(Nobility, greatness, Self control, Patience) (பரிபாடல் 20:88, நாலடியார் 126 :2)

8. சீருடை .. தனி உடை, சீரான உடை (Uniform) (புறநானூறு 72:2, பொருநராற்றுப்படை 24).

9. செய்தொழில் .. செய்யும் தொழில் (Profession)

(பரிபாடல் 10: 48, திருக்குறள் 972 :2)

10 தன் தொழில் .. சுயவேலை (Self Employment)

(நற்றிணை 153:4)

சங்க இலக்கியச் சொற்களின் இன்றைய பயன்பாடு

சற்றொப்ப ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்ட சில பல சொற்கள் தொடர்ந்து இன்றும் எவ்விதப் பொருள் மாற்றமுமின்றி , அன்றாட வாழ்விலும், ஆட்சியிலும் பயன்படுத்தப்பட்டு வரும் சிறப்பைக் காணும்போது உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழியின் பழமை, முதுமை, தொன்மை இவற்றை எண்ணி எண்ணி இறும்பூதெய்தத் தோன்றுகிறது. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த அதே நேர்வில் இன்றும் எவ்வித மாற்றமும் மாறுபாடுமின்றி ஆட்சியில் பயன்படுத்தப்பட்டுவரும் சில சொற்கள் வருமாறு: அடகு, அடங்கல், அமளி, அயலார், அரங்கு, அரசியல், ஆவணம்,

உள்ளூர், கட்டளை, கண்டனம், கண்ணோட்டம், கழகம், சங்கம், தோட்டி, நகர், நிதி, பேரணி, மண்டபம், மூடை , வல்லுநர், வாதம், வாதி, விதி, விதவை முதலியனவாகும். 'அன்று பிறந்தமேனிக்கு அழிவே இல்லை' என்ற பழமொழிக்கொப்ப அன்று பிறந்த இச்சொற்கள் எவ்வித மாற்றமுமின்றி இன்றும் பயன்பாட்டில் இருந்து வருவதைக் கண்கூடாகக் காணலாம்.

'பழையன கழிதலும், புதியன புகுதலும்' என்பது சொல்பற்றிய வழக்குமட்டுமன்று; இது மொழிக்கும் பொருந்தும். காலத்துக்குக்காலம், சொல்லும் மாறி வருகிறது, மொழியும் மாறி வருகிறது. எடுத்துக்காட்டாகத் தொல்காப்பியர் காலத்துச் சொற்கள் பல, சங்க காலத்தில் இல்லை. அதே போல் சங்க காலத்துச் சொற்கள் பல, சங்கம் மருவிய காலத்தில் இல்லை. அதே போல் இக்காலத்துச் சொற்கள் பல சங்க காலத்தோ, சங்கம் மருவிய காலத்தோ, தொல்காப்பியர் காலத்தோ இல்லை. எடுத்துக்காட்டாக "அவ்விடம்" என்னும் சொல் தொல்காப்பியர் காலத்தில் 'அதோள், ' 'அதோளி' என்றுதான் விளிக்கப்பட்டது. ஆயின் இன்று, ஏன் சங்க காலத்திலேயே, இச்சொல் வழக்கொழிந்துவிட்டது. அதே போல் 'கருப்பை'யைக் குறிக்கும் 'இல்லெலி' என்ற சங்க காலச் சொல், சங்கம் மருவிய காலத்திலேயே வழக்கொழிந்துவிட்டது. அதே போல் 'சன்னலை'க்குறிக்கும் 'சாளரம், குறுங்கண், காலதர்' என்ற சங்க காலச் சொற்கள் இன்று வழக்கொழிந்துவிட்டன. அதே போல் 'பணப்பயன்' (Monetary Benefit), அறிவொளி (Literary), கணினி (Computer) முதலிய இக்காலச் சொற்கள் தொல்காப்பியர் காலத்திலும், சங்கம், சங்க மருவிய காலத்திலும் தேடினால் கிடைக்குமா? எனவே, பழங்காலச் சொற்களின் வழக்கு வீழ்ச்சியும், புதிய சொற்களின் புதிய வழக்கும் ஏற்படுவதுதான் மொழியின் இயல்பாகும். இவ்வாறு மொழி எல்லா வகையிலும் மாற்றமடைந்து வருவது, மொழி வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாகும். இது வரவேற்கத்தக்க வளர்ச்சியேயாகும்.

பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டிய சில சங்க இலக்கியச் சொற்கள்

சங்க இலக்கியங்களிலே இன்றைய ஆட்சிக்குத் தேவையான சில பல தூய தமிழ்ச்சொற்கள் கோரிக்கையற்றுக் கிடக்கின்றன. அவற்றைத் தேடிக் கண்டுபிடித்து நிருவாகத்திற்குப் பயன்படுத்துவது தமிழை அரியணையில் தொடர்ந்து வீற்றிருக்கச் செய்ய விரும்புபவர்கள் விருப்பார்வம் கொண்டு செய்ய வேண்டிய முக்கிய பணிகளில் ஒன்றாகும். இச்சொற்களைத் தேடிக்கண்டடைந்து அவற்றைப் பயன்படுத்தி, நிலைபெறச் செய்யாவிடில் இவை வழக்கொழிந்த சொற்களாகச் சங்க இலக்கியங்களிலேயே நிரந்தரமாகத் தங்கிவிடும் நிலையை அடைந்துவிடலாம். அவற்றில் சில: அக நகர், அகன் நகர், அடியவர், அடுகளம், அருந்திறல்,

அல்லங்காடி, அறங்கூறு அவையம், இன்நகர், ஈனல், ஈனில், ஊக்குநர், ஏலாது, ஒப்புரவு, கண்ணுள் வினைஞர், கழனி, கன்னல் , சாலும், சான்றாமை, சுருங்கை, செம்பாகம், செம்மொழி, செய் கடன், செய்தொழில், தாளாண்மை, திட்பம், திருமுகம், துகில், துன்னல், தூங்கெயில், நயப்பு, நனிபல , நாளாங்காடி, பொய்யாமை , பொழிலகம், மதிமொழி, மன்பதை, மனையுறை மகளிர், முகில், முட்டுப்பாடு, முடங்கல், வளநகர், வான்கலம், விடலை, விடியல், வைகறை, வினைஞர் முதலியனவாகும்.

சங்கம் மருவிய காலத்து இலக்கியங்களில் கிடைத்த சில பல ஆட்சிச் சொற்கள்

இருள் மண்டிக் கிடந்த தமிழக வானில் ஒளிவீசும் விண்மீன்களாகச் சில தண்டமிழ் இலக்கிய நூல்கள் படைக்கப்பட்டன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியன இதில் அடங்கும். சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரண்டும் சமயங்களைச் சார்ந்த நீதிகளை அறிவுறுத்தும் காவியங்களாகும். "பதினெண் கீழ்க்கணக்கு நூல்களெல்லாம் நீதி நூல்கள் அல்ல. அவற்றுள் ஐந்து நூல்கள் காதல் பற்றியும், ஒரு நூல் போர் பற்றியும் உரைப்பவை. மற்ற பன்னிரண்டும் நீதி நூல்களே," என்கிறார் மு. வரதராசனார் (வரதராசனார் 1972: 65)

கீழ்க்கணக்கு நூல்களுள் தலைசிறந்ததாகப் பாராட்டப்படுவது, கால வெள்ளத்திற்கு இரையாகாமல் இன்றளவும் நிலைபெற்று வாழும் பேற்றினைப் பெற்ற, "திருக்குறளே" யாகும். இவற்றில் இன்றைய ஆட்சிக்குத் தேவையான சிலபல ஆட்சிச் சொற்களில் பத்து மட்டுமே இவண் தரப்பட்டுள்ளன:

1. ஆள்வினை : விடாமுயற்சி, உற்சாகம், (Continuous efforts, Enterprise, Enthusiasm) (திருக்குறள் 618:2)
2. ஆற்றுப்படுத்து : நெறிப்படுத்து, வழிப்படுத்துதல். (To direct in the right) (சிலப்பதிகாரம் 27:209)
3. ஒப்புரவாண்மை : சமாதானமாதல், ஒற்றுமையாயிருத்தல், (To reconcile, to be in agreement) (திருக்குறள் 480:1)
4. காலதர் : சாளரம், பலகணி (Window) (சிலப்பதிகாரம்: இந்திர விழா 5:8)
5. கோடாமை : நடுவு நிலைமை தவறாமை (Not taking sides) (திருக்குறள் 115:2)

6. செந்தண்மை : நன்னடத்தை, செவ்விய தண்ணளி (Good behaviour, Character) (திருக்குறள் 30:2)

7. தாளாளர் : ஊக்கம் உள்ளோர், நிறுவனப் பேராளர் (Correspondent, Person of enterprise) (நாலடியார் 191:4)

8. நுண்வினைக்கம்மியர் : கொல்லர், மிக நுட்பமான தொழில் வினைஞர் (Expert mechanic) (சிலப்பதிகாரம் 5:106)

9. பொறையுடைமை : பொறுமையுடைமை, அடக்கமுடைமை, (Patience, Forbearance, Calmness, Meekness) (ஆசாரக் கோவை 1:1, ஏலாதி 6:2)

10. வினையாண்மை : தொழிலைச் செய்து முடிக்கும் திறமை, வினையை ஆளும் தன்மை. (Capacity to accomplish, or to do a work) (திருக்குறள் 904:2)

சங்கம் மருவிய காலச் சொற்களின் இன்றைய பயன்பாடு

சங்கம் மருவிய காலத்தில் ஐம்பெருங்காப்பியங்களுள் சிறந்த காப்பியங்களான சிலப்பதிகாரமும், மணிமேகலையும் தோன்றின. நீதிநூல் இலக்கியத்திற்கே முத்தாய்ப்பு வைத்தது போல் திருக்குறளும், அதற்கடுத்த நிலையிலுள்ள நாலடியாரும் தோன்றின. கீழ்க்கணக்கு நூல்களிலும் இரட்டைக் காப்பியங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ள சில பல சொற்கள் இன்றும் ஆட்சிச் சொற்களாக எவ்வித மாற்றமுமின்றிப் பயன்படுத்தப்படுவதை நோக்கின், தமிழ் மொழி காலத்தை வென்ற மொழியாகச் செயல்படுவதைக் கண்கூடாகக் காணலாம்.

அடைக்கலம், அணிகலம், அணு, அதிகாரம், அதிசயம், அதிபதி, அநித்தியம், அபகாரம், அமர்க்களம், இங்ஙனம், இடர்ப்பாடு, ஊதியம், ஒற்றன், ஐயப்பாடு, கூலி, கைம்மாறு, சதுக்கம், சரண், சாரணர், துப்புரவு, தூது, தேசியம், தோரணம், பட்டி மண்டபம், புத்தகம், பொதுமக்கள், மணிமண்டபம், மாளிகை, முடியரசு, வாய்மொழி, வாழ்வாங்கு, வானுறை, விதிமுறை போன்ற சொற்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் எவ்வித மாற்றமுமின்றி, இன்றும் பயன்படுத்தப்பட்டு வருவது தமிழ் மொழியின் சிறப்பை உலகிற்கே எடுத்தியம்பும் என்பது திண்ணம்.

பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டிய சில பல சங்கம் மருவிய காலத்துச் சொற்கள்

சங்கம் மருவிய காலத்தில் பாலிமொழிச் சொற்களும், சமஸ்கிருத மொழிச்

சொற்களும், மிகுதியாகத் தமிழில் கலந்துவிட்டன என்பதனை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். பிற்காலத்தில் தமிழ் மொழியில் வட சொற்களும், பிறமொழிச் சொற்களும் எண்ணிறந்த அளவில் புக இது ஒரு வழிகாட்டியாக அமைந்துவிட்டது என்று கூறுவது தவறாகாது. குறிப்பாக, மணிமேகலை ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் தனது காப்பியத்தில் பாலிமொழிச் சொற்களையும், வட சொற்களையும் மிகுதியாகக் கலந்துள்ளார்.

அஃகாமை, அகநகர், அடுக்களை, அணிநகர், அறுவை வணிகர், அயலவர், அறிவாண்மை, ஆற்றுப்படுத்து, ஆகூழ், ஆள்வினை, இடுக்கண், இல்லிறப்பான், ஈட்டல், ஈன்றல், ஏமம், ஒப்புரவாண்மை, ஒல்லை, ஒருபாற் கோடாமை, கரவாது, கருவியாளர், கணக்கியல் வினைஞர், கழிநுட்பம், கழிவிரக்கம் கோடாமை, குருங்கண், குடும்பி, சால, சான்றாண்மை, செங்கோன்மை, செந்தண்மை, செறிவு, செறுபகை, செய்தொழில், தகைமை, தாளாண்மை, திறப்பாடு, தொல்லறிவாளர், நல்லறிவாண்மை, நாழிகைக் கணக்கர், நிலாமுன்றில், நீர் இலவந்திகை, நொதுமல்,பண்டம், புல்லறிவாளர், பெருந்தகைமை, பேரமைச்சர், பேராண்மை, பொய்யுரை, பொய்க்கரி, அறிஞர், வளி, விளம்பல், விலைஞர், விழுப்பம், வேணவா முதலிய ஆட்சிக்குத் தேவையான நல்ல சொற்களைத் தேவையினடிப்படையில் பயன்படுத்துவது ஆட்சி மொழிச் சொல்லாக்கத்திற்குப் பேருதவி புரிவதாக அமையும்.

இன்றைய ஆட்சியில் பண்டைய, சங்கம், சங்கம் மருவிய கால இலக்கியங்களின் தாக்கம்

தொல் பழங்காலத்திலும், சங்க காலத்திலும், சங்கம் மருவிய காலத்திலும் தமிழகத்தை முடியுடை மூவேந்தர்களும், சிற்றரசர்களுமே, சீரோடும் சிறப்போடும் ஆண்டு வந்தனர். அது முடியாட்சிக் காலமாக இருந்தபோதும் கலை, அரசியல், சமயம், கல்வி, மொழி, பண்பாடு, வாணிகம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் தமிழகம் நல்ல முன்னேற்றமடைந்திருந்தது. தொல் பழங்காலமானது மொழித் தூய்மையின் காலமாகவே இருந்து வந்துள்ளது. அக்காலத்தில் பிறமொழிச் சொற்களின் தாக்கம் விரல்விட்டு எண்ணும் அளவிலேயே இருந்தது. தொல்காப்பியர் தாம் இயற்றிய தொல்காப்பியத்தில் ஒரு சில வட சொற்களையே பயன்படுத்தியுள்ளார். தொல்காப்பியர் காலத்துக்கு அடுத்த காலமாகிய 'சங்க காலம்' தமிழ் இலக்கியத்தின் பொற்காலமாகத் திகழ்ந்தது. சங்க காலத்தில் வட சொற்களின் தாக்கம் சிறிது அதிகரிக்க ஆரம்பித்தது. வட சொற்களும் திசைச் சொற்களும் ஓரளவிற்குச் சங்க இலக்கியத்தில் தலைகாட்டத் தொடங்கின. ஆனால் சங்க காலத்திற்குப் பின் தோன்றிய சங்கம் மருவிய காலத்தில், வட சொற்களின்

தாக்கம் சற்று அதிகமாக ஆரம்பித்தது. குறிப்பாக மணிமேகலை போன்ற சமயக் காப்பியத்தில் இது சற்று அதிகமாகவே காணப்பட்டது.

சங்க இலக்கியங்களில் இன்றைய தேவைக்கான ஆட்சிச் சொற்கள் இல்லாமையும் அதற்கான தீர்வுகளும்

இன்றைய ஆட்சிமுறை மிகவும் பரந்துபட்ட ஆட்சிமுறை. பல்வேறு துறைகளைத் தன்னகத்தே கொண்டு நடைபெற்று வரும் ஆட்சி முறையாகும். இன்றைய ஆட்சி முறையில் புத்தம் புதிய துறைகள், புத்தம் புதுப்பணிகள் தோன்றிய வண்ணமே உள்ளன. ஆட்சிக்குத் தேவையான சொற்கள் அனைத்தும் சங்கம், சங்கம் மருவிய கால இலக்கியங்களிலே மட்டும் கிடைக்கும் வாய்ப்பில்லை. சுமார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் படைக்கப்பட்ட தொல்காப்பியத்திலும், திருக்குறளிலும், சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் Computer, Nodal Officer, Redeployment முதலிய சொற்களுக்குத் தமிழ்ச் சொற்களைத் தேடுவது அறிவுடைமையாகாது. சொற்கள் இல்லையென இவ்விலக்கியங்களைக் குறைகூறுவதும் முறையாகாது. அந்நூல்கள் படைக்கப்பட்ட காலத்தை எண்ணிப்பார்த்தால், இக்குறை கூறுவதற்கான வாய்ப்பே ஏழாது, ஆகவே, தமிழ் மொழியானது 'காலத்தின் சேயாக' இருக்க வேண்டுமானால் விதிமுறைகளுக்குட்பட்டுப் புதிய புதிய சொற்களைப் படைக்க வேண்டும். படைத்த சொற்களைப் பயன்படுத்தி நிலைப்படுத்த வேண்டும். வளர்ந்து வரும் மொழியானது இன்றைய அறிவியல், பொருளியல், நிருவாகவியல் வளர்ச்சிக்கேற்பத் தன்னையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் மொழியானது பயன்பாட்டிலிருந்து வரும் நாணயம்போல் செலாவணியில் இருந்துவரும் : இல்லாவிடில் அது செல்லாக்காசுபோல் கழித்தொதுக்கப்பெறும். ஆகவே, இன்றைய ஆட்சிக்குத் தேவையான சொற்களை நமது சங்க இலக்கியத்திலேயே தேடிக் கண்டடைய வேண்டும். அவ்வாறு தேடியும் கிடைக்காவிடில், புதிய ஆட்சிச் சொற்களைத் தங்கு தடையின்றி விதிகளுக்குட்பட்டுப் படைக்க வேண்டும். படைத்த சொற்களை ஏற்றுக் கொள்ள வேண்டும், ஏற்றுக்கொண்ட சொற்களை நிலைப்படுத்த வேண்டும். இவ்வாறு இன்றை ஆட்சியில் ஏற்பட்டுள்ள சொற்பஞ்சத்துக்குத் தீர்வு காண இயலும்.

முடிவுரை

இக்கட்டுரையில் தொல்பழங்காலந்தொட்டு, சங்க காலம், சங்கம் மருவிய காலம் வரையிலான ஆட்சிமுறை குறித்தும் அக்காலங்களில் தோன்றிய இலக்கியங்கள், இலக்கண நூல்கள் குறித்தும் ஆய்வு செய்துள்ளதோடு மட்டுமல்லாமல், அக்கால இலக்கியங்கள் இக்கால ஆட்சிக்குத் தேவையான

ஆட்சிச் சொற்கள் சிலவற்றை மட்டுமே பட்டியலிட்டுத் தரப்பட்டுமுள்ளது. மேலும் இக்கட்டுரையில் பண்டைய, சங்கம், சங்கம் மருவிய காலம் முதல் தொடர்ந்து வரும் ஆட்சிச் சொற்களின் சிறப்புப் பற்றியும், தொடர்ந்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட வேண்டிய ஆட்சிச் சொற்கள் பற்றியும், அக்காலச் சொற்கள் இக்காலத்தில் அடைந்துள்ள உயர்வுப் பொருண்மை, இழிவுப் பொருண்மை, மாற்றுப் பொருண்மை ஆகியன குறித்தும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இறுதியாக, இக்கட்டுரை பண்டைய, சங்கம், சங்கம் மருவிய கால இலக்கியங்களிலிருந்து இன்றைய ஆட்சிக்குத் தேவையான சிலபல சொற்களை அங்கொன்றும் இங்கொன்றுமாக வகுத்தும், தொகுத்தும் தமிழ், ஆங்கிலப் பொருள் விளக்கத்துடன், எளிதில் விளங்கும் வகையில் அளித்துள்ளது.

துணை நூல்கள்

Tamil Lexicon, University of Madras, 1982.

ஆறுமுக நாவலர் (உரை ஆசிரியர்), *நன்னூல்*, வித்தியாநுபாலன யந்திர சாலை, சென்னை - 1955.

இளம் பூரணர் (உரை ஆசிரியர்), *தொல்காப்பியம்*, கழக வெளியீடு, சென்னை, 1967.

சி. பாலசுப்பிரமணியன், *தமிழ் இலக்கிய வரலாறு*, 1959.

மு. வரதராசனார், *தமிழ் இலக்கிய வரலாறு*, 1972.

நா. கதிரைவேற்பிள்ளை, *தமிழ் மொழியகராதி*, ஏசியன் எஜூகேஷனல் சர்வீசஸ், புது டெல்லி, 1981.

பரிமேலழகர் (உரை ஆசிரியர்), *திருக்குறள் (மூலமும் உரையும்)*, கழக வெளியீடு, சென்னை, 1953.

வ.சுப. மாணிக்கம், *தொல்காப்பியத்திறன்*, 1984.

வின்சுலோ, *தமிழ் ஆங்கில அகராதி*, ஏசியன் எஜூகேஷனல் சர்வீசஸ், புது டெல்லி, 1979.

39

தமிழில் கலைச்சொல் உருவாக்குவதற்குரிய நெறிமுறைகளில் மீவிரைவுச் சொல்லாக்க முறை

ப. அருளி

கலை

"கல்" -என்பது ஓர் ஒலிப்பொருளடிச் சொல். பல்வேறுபட்ட ஓசைகளைக் குறித்தற்குக் கழக இலக்கியங்களில் இவ்வடிச் சொல் பயன்படுத்தப் பெற்றிருப்பதைக் காணலாம். (காண்க அ.கு.1)

கல் = ஒலி, ஒலியிடு, கல்+இ>கலி = ஒலி (காண்க: அ.கு.2, 2:1)

ஒலியிடுகைக் கருத்து, - பின்னர், "கற்றுக்கொள்" என்னும் பொருளுக்கும் விரிவெய்தியது,

கல் = ஒலியிடு, ஒலியிட்டுப்பயில், கற்றுக்கொள்.

கல்+வு>கல்வு+இ>கல்வி = கற்கை; கற்கப்பெறும் பாடம்.

கல்+இ>கலி = கற்றவன் (இ - ஓர் ஆண்பாலீறு (காண்க: அ.கு 3)

'கலி' - என்னும் சொல் மற்போர்க் கலையாகிய தற்காப்புக்கலையைப் பயின்றவனைக் கன்னட மொழியில் குறித்து வருதலையும் இவ்விடத்திற் கருதலாகும். அக் கல்லத்தன்மையைக் குறித்தற்குக் 'கலித்தனம்' 'Kalitana' *என்ற சொல்லையும் கன்னடியர் வழங்குகின்றனர். (காண்க: அ.கு.4) தமிழகத்தில் அச்சொல் 'காலித்தனம் (=அரம்பத்தனம்) என்னும் பொருள் விரிவில் பயன்படுத்தப்பெறுகின்றது.*

கல் + ஐ > கலை = 1. கல்வி (திவாகரம்)

2. கல்விக்குரிய நூல் (திருவாசகம்: 12:3)

கலைஞன் = கல்விமான் (திவாகரம்)

கலை = ஒரு துறையில் பெறும் திறக்கல்வி பயில்வு (காண்க: அ.கு : 5)

'கலை - என்னும் செந்தமிழ்ச்சொல், சமற்கிருதத்தில் 'கலா' Kalā எனத் திரித்துக் கொள்ளப்பெற்றது(காண்க: அ.கு : 6).

சொல்

"சொல் -எனுந் தமிழ்ச்சொல், 'ஒலி' என்னும் பொருளடிப்படையையுடையது. 'ஒல்' - எனும் மூலவேரில் - முன்மிகையேறிச் (Prothesis) சொல் எனுஞ் சொல் உருவாக்கப் பெற்றுள்ளது. கருத்தைக் குறிப்பதற்கென்று பயன்படுத்திய ஒலியே, சொல். ஒவ்வொரு சொல்லுக்குள்ளும் வரலாறு உள்ளது. அதாவது, வரலாற்றைப் பதிய வைத்துக் கொண்டுள்ள 'பொதியுறை' (Capsule) போன்றே, ஒவ்வொரு சொல்லும் ஊடாடுகின்றன.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்னும் தொல்காப்பிய நூற்பா (சொல் 5 : 1) பொருளைக் குறித்து வழங்கப்பெற்ற ஒலி அல்லது ஒலித்தொகுதியே சொல் என்னும் பொருட்பாடுடையது.

கலைச்சொல் என்பது அண்மைக்காலப் புத்தாக்கமே

ஒரு துறைத்திறப் பயிற்சியைக் குறித்துப் பொருள் வளர்ந்து வழங்கி வந்துள்ள கலை என்னும் இச் சொல்லொடு, சொல் என்னும் சொல்லையும் சேர்த்து உருவாக்கப்பட்டுள்ள "கலைச்சொல்" என்னும் கூட்டுச்சொல் ஆக்கத்தின் பயன் வழக்கு ஓர் அரை நூற்றாண்டுக்கால அளவுக்கும் உட்பட்டதேயாகும். அதாவது, இது ஓர் அண்மைக்காலச் சொல். இருபத்து மூன்றாண்டுக்கால அளவில் உருவாக்கப்பெற்ற செ.ப.க. தமிழ்ப் பேரகராதியுள்ளும் (1913 - 1936) இக் கலைச்சொல் என்னும் சொல்லாட்சி பதிவெய்தவில்லை என்பதிலிருந்தும், இச்சொல்லின் அண்மைக்காலக் காலத்தகைமையை உணரலாம்.

1983-இல் நான்காம் செம்பதிப்பாக வெளிவந்த "ஆட்சிச்சொல் அகராதி" "Technical term" என்னும் ஆங்கிலக் கலைச்சொல்லுக்கு உரிய கலைச்சொல்லாகத் "தொழில்நுட்பச் சொல்" என்றவாறே குறித்துள்ளமையிலும் - இக்"கலைச்சொல்" என்னும் சொல்லாட்சியானது பரவலான ஆழப்பதிவு எய்தாதிருந்த நிலைமையையே காட்டுகின்றது.

1965-இல் வெளிவந்த செ.ப.க. ஆங்கிலம் - தமிழ் அகராதியில் 'Terminology' என்னும் சொல்லுக்குரிய சொற்பொருள்கள்பட்டியலுள் இறுதிச்சொல்லாகத் "துறைச்சொல்'' என்னும் புத்தாக்கம் குறிக்கப் பெற்றதாயினும், வழக்கில் அது தொடரப்பெறவில்லை.

கலைச்சொல் என்னும் பொருட்பாட்டிற்கு நேரிய பழைய தமிழ் முயற்சிகளாக - அருஞ்சொல் (காண்க: அ.கு. 7 : 1), சிறப்புச்சொல் (காண்க: அ.கு. 7:2), நுட்பச்சொல் (காண்க: அ.கு 7:3) ஆகியன வழங்கப்பெற்றன எனினும், பயன்பாட்டிற் படியாது போயின.

இவ்வாறாகிய சொற்கள் குறிக்கப்படும் முன்னீடாக - இக்கலைச் சொல்லுக்கென இம் மண்ணில் திணிக்கப்பெற்று நூல்களிடையே வன்பதிவு செய்யப்பெற்ற சொற்கள் 'பரிபாஷை', 'சங்கேதம்' முதலியன. நம் தமிழ்க் கல்விமான்கள் விளங்கிக் கொள்ளவேண்டுமென்பதற்குத் தகுதிவழக்குச்சொற்கள் மூன்றனுள் ஒன்றாகிய "குழூஉக்குறி என்னும் சொல்லும் இடையிடையே சுட்டப்பெற்று வந்தது.

"பரிபாஷை, ஸங்கேதம், குழூஉக்குறி என்ற மூன்று சொல்லும் ஒரே பொருளைப் பலவகையில் குறிப்பன" என்னும் பாரதியாரின் கட்டுரை வரிகளினுள்ளும் (பாரதியார்: 1998: 208) இப் படிவை உணரலாகும்.

'பரிபாஷை' என்பதற்குக் குறியீடு, குழூஉக்குறி என்றவாறும், 'சங்கேதம்' என்பதற்குக் குறி, குழூஉக்குறி என்றவாறும் செ. ப. க. தமிழ்ப் பேரகராதி பொருள் குறித்துள்ளது. 1916-இல் அறிவியற்சொல்லாக்கம் செய்வதற்கெனச் சேலம் வழக்கறிஞர் இராசகோபாலாச்சாரியால் உருவாக்கப் பெற்ற கழகத்தின் பெயர் - "தமிழ் சாஸ்திர பரிபாஷைச் சங்கம்" என்பதுவும் இவ்விடத்திற் கருதவேண்டுவதாகும்.

பரிபாஷை, சங்கேதம், குழூஉக்குறி ஆகிய பல சொற்களில் குறிப்பிடப்பெறும் ஒரு பொருட்பாட்டுநிலை பற்றி விளக்க வந்த பாரதியார், "ஒரு கூட்டத்தார் அல்லது சாஸ்திரக்காரர் விசேஷார்த்தம் தோன்றும்படி உடன்பட்டு வழங்கும் பொது வழக்கமல்லாத சொல்" என்றவாறு வரையறைப்பாட்டையும் சுட்டினார் (பாரதியார்: 1988 :208).

கால வளர்ச்சியில் இம் மேற்கண்ட எவையும் இத்தமிழ் மண்ணில் நிலை நிற்கவில்லை. கலையையும் (கைவினையையும்) குறித்துக் கிரேக்கத்தில் வழங்கிய 'Tekne' என்னும் வடிவினின்று வளர்ந்த (technic-), technical என்னும் சொல்லும்- எல்லை, வரையறை என்பதன் கருத்துப் பொருள்கள் அடங்கிய 'terminus' என்னும் இலத்தீனச் சொல்லினின்று 'வரையறுக்கப்பட்ட பொருட்பாடுடைய சொல்' என்னும் பொருளுக்கு வளர்ந்து நின்ற 'term' என்னும் சொல்லும் - சேர்ந்து கூட்டுச்சொல்லாகி நின்ற 'technical term' என்பதற்கு இணையான -நேரிடையான துலக்கமான அமைப்பில் "கலைச்சொல்'' என்றொரு சொல் உருவாக்கப் பெற்றதும் - இதற்கென வழங்கத்

தலைப்பட்ட பிற சொற்கள் யாவும் மங்கியொதுங்கிப் போயின.

குறிப்பிடத்தக்க கலை அறிவியல் கைவினையாண்மை முதலியவற்றைச் சார்ந்ததும் வரையறைக்குட்பட்ட பொருட்பாடுகளில் `பயன்படுத்தப் பெறுவதுமாகிய சொல் எதுவோ, அதுவே கலைச்சொல்! இவ்வகைத் தேற்றம், கடந்த இருபதாண்டுகளிலேயே நிலைகொண்டுள்ளது.

பண்டைய சொல்லாக்க முறை

நாம் அன்றாடும் சமையற்பொருள்களாகப் பயன்படுத்தும் கொத்துமல்லியும், சீரகமும், பெருஞ்சீரகமும் - சின்னஆசியாவினின்று 'Asia minor' இங்கு வந்த பொருள்கள். இங்கு வந்ததும், இவ்வகைத் தமிழியப்பெயர்களை இவை பெற்றன.

பெருங்காயம் - என்னும் மணக்கூட்டுப்பொருள் ஆப்கானிசுத்தானம் என்னும் காந்தார நாட்டினின்று வேறு ஏதோ ஒரு பெயருடன்தான் உள்நுழைந்தது. இங்கு நிலைத்த பெயர்,பெருங்காயமே!.

தித்திக்கும் தீஞ்சுவையுடைய சக்கரைக்கு மூலக்கோலாகிய கரும்புகூட - அதியமான் மரபினரால் இத் தமிழகத்துள் கொண்டுவரப்பெற்றதாக நம் இலக்கியங்களில் ஆவணப் பதிவுகள் உள்ளன (காண்க. அ.கு.: 8: 1.2).

சாலித் தீவினின்று கரும்பும்-(கருவம்பூ > கராம்பு > கிராம்பு) கிராம்பும், திப்பிலியும் இந்நாட்டிற்குள் வந்தனவாக வரலாறு பட்டியலிடுகின்றது. திராட்சை இங்கு வந்ததும் கொடிமுந்திரி ஆகியது. சாம்பிராணி -சுராலை ஆகியது. பாதாம் - அடப்பம் ஆகியது.

பெரும்பாலும் உருண்டையுருவத்தையே பெற்றிருந்து - வெளிநாட்டிலிருந்து இங்கு வந்த கிழங்குவகை - 'உருளைக்கிழங்கு' எனப் புதுப்பெயர் பூண்டது. புகைப்பதற்குப் பயன்பெற்ற இலை, 'புகையிலை' ஆகியது.

பிலிப்பைன்சின் தலைநகரான "மணிலா என்னும் பகுதியிலிருந்து கப்பலில் கொண்டுவரப்பெற்ற கடலைக்கொட்டையானது, வேரில் காய்ப்பதால் 'வேர்க்கடலை' என்றும், நிலத்தின் கீழ்க்காய்ப்பதால் 'நிலக்கடலை' என்றும் காரண அடிப்படையில் சொற்களாகி வழங்குகின்றன.

மெக்சிகோவினின்று சில்லி 'Chilli' என்ற பெயரில் உள் நுழைந்த காரம் நிறைந்த காய்வகை - மிளகுக்குள்ள காரத்தையும் காய்க்கு என்றுள்ள தோற்றத்தையும்

உடையதாயிருந்தமையால், மிளகு + காய் > மிளகாய் என்றவாறு அழகிய தமிழிய வடிவங்கொண்டு தமிழர்தம் உணவிடையே ஊடிறங்கி உறப்பொடு நிலைத்தது.

பல மாதங்களுக்கு உணவில்லாமலிருப்பினும் வயிற்றை ஒட்டப்போட்டுக் கொண்டு உயிரோடு வாழவல்ல வெளிநாட்டுப் பாலை நில விலங்கு தொல்காப்பியர் காலத்துக்கும் முன்னரேயே தமிழகத்துக்கு வந்து ஒட்டகம் எனும் பெயர்பெற்று ஓங்கி நின்றது.

அரேபியாவினின்று வந்த ஒட்டத்திற விலங்கு - இங்கு - இம் மண்ணிறங்கிக் குதித்ததும் - “குதிரை” என்ற பெயரோடு தமிழருடைய வாழ்வினூடே குதிப்போட்டம் போட்டது. பல்வேறு சிறப்புநிலைப் பெயர்களையும் அது பெற்றது (காண்க : அ.கு. 9). தொல்காப்பியர் காலத்திற்கும் மிக முன்னீடாகப் - பன்னூறாண்டுகளுக்கு முன்னரேயே இக்குதிரை இங்குக் குதித்தோடவும் இயங்கவும் தொடங்கி உவமையடிப்படையில் “சேவல்” என்னும் சிறப்புப்பெயரும் கொண்டிருந்து என்பதை - வழக்கில் அப்பெயர் மறைபுற்றுக்கொண்டிருக்கையில் அதனை அவர் எழுதிய இலக்கண நூலின் மரபியற்பகுதியில் பிணைத்துக் கட்டியிருப்பதினின்று புலனாகின்றது (காண்க: அ.கு.10).

மேற்கு ஆப்பிரிக்காவினின்று வந்த மயிலையொத்த பறவை Guinea fowl - Numida melagris இங்கு வந்ததும், கோழி வகையைச் சார்ந்திருப்பது நோக்கியும் அதன் ஒலியீடு நோக்கியும், ‘வான்கோழி’ எனப்பட்டது. இதுபோலவே ஒலியீடு அடிப்படையில் ‘வாத்து’ எனும் பெயர் ஒரு பறவாப் பறவைக்கும் வழங்கப் பெற்றது.

துபி ‘Tubi’ மொழியில் ‘(a)caju’ என்றும், ஆங்கிலத்தில் Cashew என்றும் வழங்கப்பெறும் முன் தள்ளிய கொட்டையுருவையுடைய பழமும் மரக்கன்றும் இம் மண்ணுக்குள் வந்ததும் - நம் மக்களுக்கு வியப்பான வியப்பு ஏற்பட்டது.

உருத்தல் = முளைத்தல் ; தோன்றுதல்.

முந்து + உரு >முந்துரு, முந்துரு + கொட்டை > முந்துருக்கொட்டை

முந்துருக்கொட்டை > முந்திரிக்கொட்டை

முந்திரிக்கொட்டை உடைமை காரணமாக முந்திரிப்பழம், முந்திரிமரம் என்றவாறு சொல்லாக்கங்கள் கண்டு பயன்படுத்தத் தொடங்கினர்.

வெளியிலிருந்து வந்த எப் பொருளுக்கும் இயற்கைநெறிப்படி தம் மொழியிலேயே சொற்களை உருவாக்கிப் பயன்படுத்திக் கொள்ளும்இத்தகு

மானவுணர்வு மண்டியிருந்தது.

எப்பொருள் இங்கு நுழைந்தாலும் - அதைப்பற்றிய எண்ணத்தாலெழுந்த - அதற்கேயுரிய புதுப்பெயர் ஒன்று - இம்மண்ணில் வதிந்த தமிழரால் - இம் மண்ணுக்குரிய மரபுணர்வோடு உருவாக்கப்பெற்று வந்துள்ளமையை மொழி வரலாற்றில் தெளிவாகக் காண முடிகின்றது.

இந்திய நாட்டு நிலை

கோரி முகம்மது காலத்திலிருந்து (கி.பி.1193) இந்தியக் காவலர் கலகம் வரைக்குமாக (கி.பி.1857) ஏறக்குறைய ஏழு நூற்றாண்டுக்காலம் இன்றைக்கிருக்கும் டில்லியில் முகம்மதியரின் அரசாட்சியே தொடர்ந்து படிந்து நிலைப்புற்றிருந்தது. ஆகவே, அந்த டில்லி முகம்மதிய ஆட்சி, குறிப்பாக அரசு அறமன்றம், வழக்கு உசாவற் குறிப்பு, தீர்ப்பு வரைவு ஆகியவற்றிற்குப் பாரசீக மொழியையே (Persian) கடைப்பிடித்துப் பயன்படுத்தி வந்தது. பாரசீகச் சொல்லைப் பயன்படுத்துவதை ஒரு நாகரிகப் பழக்கமாகவேஅன்னவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பெரும்பான்மை மக்கள் ஏற்றுப் பயின்றனர்.

பாரசீகமொழிச் சொற்களும், அரபுமொழிச் சொற்களும் பிற பிறவும் இவ்விவ்வாறே இந்திய மொழிகளிடையே பரவலாக இரண்டறக்கலந்து வழங்கின. அத்தகைய தாக்கக்காற்று தமிழகத்திலும் ஓரளவுக்கு அடித்துச் சுழன்றது. போர்த்துக்கீசியர் - தச்சுக்காரர் - பிரெஞ்சுக்காரர் - ஆங்கிலேயர் என்றவாறு அயலவர் பல்லோர் வந்துவந்து ஆண்டுவிட்டுப் போகையில், அவ்வவரின் மொழிச் சொற்களிற் பலவும் அவரவரின்ஆட்சித்திற அளவிற்குத்தக இங்குத் தங்கி ஒலிப்புறலாயின.

தமிழக நிலை

இம் மேற்சுட்டியவாறாக, இந்நாட்டில் பல்வேறு அயலவரின் ஆட்சியேற்புகள் தொடர்ந்தும் அறுந்தும் மீண்டும் தொடர்ந்தும் மாற்றமுற்று நடக்க நடக்கவே - பெரும்பாலான இந்திய மொழிகளும் அந்தத் நிலையளவுகளுக்கேற்பத் திரிபுகளுற்றும் கலப்புகளேற்றும் பயிலப் பெறுவனவாயின. நம் பழம்பெருமை வாய்ந்த தமிழும், சமற்கிருதத்தின் பதினெட்டு நூற்றாண்டளவான பாரிய தொடர்தாக்கத்தோடு, பிற அயன்மொழிகளின் ஓதத் தாக்கத்தையும் பெற்றதாயிற்று (அருளி: 1983 : 16).

இன்று நாம் வழங்கும் தமிழ்மொழியுள் 27 மொழிக்குரிய சொற்களின் தாக்கம் பாய்ந்துள்ளது (அருளி - 1991:பட்டியல்).

பல நூற்றாண்டுகளாகத் - தமிழர்களை மத மயக்கத்தில் கிடத்திவரும் சமற்கிருதவாணர் படிப்படியே தமிழ்மொழியையும் உருக்குலைத்து வந்தனர். திக்கித் திணறிக் கொண்டிருந்தபோது, ஆங்கிலேய ஆட்சி இம் மண்ணுள் பரவியது. தாய்மொழிக் கல்விக் கொள்கைக்கு 'மெக்காலே' 'பெண்டிங்' போன்றோர் குழிதோண்டலாயினர். ஆங்கிலக் கல்விமுறையின் வாயிலாக - அவர்கள் ஆண்ட கோடிக்கணக்கான மக்களுக்கிடையில் ஒரு புதுவகைக் காட்டிக்கொடுப்புக் கூட்டத்தை உருவாக்கத் தொடங்கினர். குருதியாலும் உடல் வண்ணத்தாலும் இந்திய வடிவிலும் - அறிவு, ஆற்றல், பழக்கவழக்கம், மனப்போக்கு முதலியவற்றில் ஆங்கிலேயரைப் போலவேயும் ஆன - ஒருவகைக் கூட்டம் இந்நாட்டில் உருவாகத் தொடங்கியது.

இந்நாடு முழுமைக்கும் இதில் பங்கேற்றவர்களாகி நின்ற அவ்வகை வகுப்பினர் பெரும்பாலும் சமற்கிருதவாணர்களாகவேயிருந்தனர். தமிழகத்திலும் இதற்கு நெறிவிலக்கான நிலை அமையவில்லை. 1870-வரையிலான முப்பந்தைந்து ஆண்டுக்காலஅளவு நிலைத்து வந்த மெக்காலேயின் கல்விக் கொள்கை - தாய்மொழிக் கல்வியைப் பல வகைகளில் நசுக்கி வந்தது. 1899-இல் இந்தியப் பகர அரையராகப் 'Vice-Roy' பொறுப்பேற்றார் 'கர்சன்' அவர்கள். 1904-ல் அவரின் கல்விக்கருத்து வெளியிடப்பெற்றது. "தொடக்கநிலைக் கல்வியில் ஆங்கிலம் கற்பிக்கப்படத் தேவையில்லை; பதின்மூன்றுஅகவைக்குப் பின்னர் ஆங்கிலம் கற்பிக்கலாம். உயர்நிலைப்பள்ளிகளில் பயிற்றுமொழியாகத் தாய்மொழியே இருக்க வேண்டும்'' (சுந்தரராசன் - 1980:67) என்பது அவரின் ஆணை.

அதற்கான கருவி நூல்களை உருவாக்கும் வாய்ப்பு - பெரும்பாலும் சமற்கிருதவாணரிடமே அக்கால் இருந்தமையால் - அனைத்து நிலைகளிலும் தாய்மொழிப் பற்றும் - தாய்மொழி வழியிலான சிந்தனையும் இம்மண்ணுள் வாராதவாறு மிகநுட்பமான காரறிவோடு அறிவுக்குழப்பம் செய்து வரலாயினர். தமிழகத்தில் இந்நிலையிலான வரலாற்றுண்மைகளைத் தெளிவாகக் காணவியல்கின்றது.

தமிழில் தாய்மொழிக் கல்வியை வளப்படுத்த வேண்டும் என விரும்பி அதற்கென ஈடுபட்ட ஆங்கிலேயருக்குப் புகட்டப் பெற்ற அறிவும் சமற்கிருத நெடி கலந்தேயிருந்தது. அமெரிக்கராகிய 'சாமுவேல் கிரீன்' என்பவர் இலங்கையில் செய்த முயற்சிகளின் தொடக்கப்படிகளிடையேயும், இக் 'கொடும்போக்கு' உட்புகுந்திருப்பதைக் காணலாம். "Anatomy Physiology & Hygeine" - என்னும் நூல், கிரீன் அவர்களின் மொழிபெயர்ப்பில், "அங்காதிபாத சுகரண வாத உற்பாவன நூல்" என்றும், 'கிரீன்'- துணைநின்று மொழிபெயர்க்கத்தூண்டிய சாப்மன் என்பார். "Human Anatomy" என்னும் தம் மொழிபெயர்ப்பு நூல் "மனுஷ

அங்காதிபாதம்" என்றும் வெளிவந்தன என்பதிலிருந்தே அக்காலச் சூழலை ஓரளவுக்கு உணரவியலும். "Genetics" என்னும் "மரபியல்" அன்று "மானிடமர்மசாஸ்திரம் அல்லது சிசு உற்பத்திச் சிந்தாமணி" என்னும் தலைப்பில் வெளியிடப் பெற்றது (1908). மெய்யியல், 'தத்துவ சாஸ்திரம்' என்றும், - உடலியங்கியல் "சரீரசாஸ்திரம்" என்றும், பூதியல், 'பௌதிக சாஸ்திரம்' என்றும் தலைப்புகளிட்டு வழங்கப்பெற்றன. வைத்திய நாதசாஸ்திரி என்பவர், தம் பூதியல் நூலுக்கு - அன்றைய பௌதிக சாஸ்திரத்துக்கு" அண்ட பிண்ட வியாக்கியானம்" என்று பெயரிட்டுத் தனிநூல் வெளியிட்டார்.

கலைச் சொல்லாக்கம் என்ற பெயரில், எவரும் புரிந்துகொள்ளுதற்கென அரும்பாடுபடவேண்டியதும் - குழப்படியானதும் - கடுங்கொடுமையான அமைப்புடையதும் - ஆங்கிலக்கலைச்சொல்லினும் கலக்கந்தரக்கூடியதும் - எண்ணிப் பார்த்தற்குத் கவலைதரக்கூடியதுமான தகவற்ற முயற்சிகளே, அறிவியலறிவுப் பரப்புதலுக்கு வாய்ந்த தொடக்கக் காலத்தில் - அதாவது 19 - ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து - இவ் இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை தொடர்ந்தன.

Asphyxia - அகம்பனம், Astrophy - அபோஷம், Gastric juice - பாசகம், Kidney - பிருக்கம், Larynx- கிருஹம், Lung- புப்புசம், Orbicularis oris - லபனி, Retina தரிசி, Structure - வியூகனம், பந்திதம் (காண்க: அ.கு.11) Geitre - வீதனபம், Lymphatic glands - வபாகிரந்தி (அ.கு.12) என்றவாறான வகையிலேயே உடலியங்கியல் உடற்கூறு இயல் சார்ந்த பன்னூற்றுக்கணக்கான சொற்கள் பயில்வுக்கு முன்மொழியப்பட்டுப் பதிவுற்றன. காலம் வளர்த்த விழிப்புணர்ச்சியின் காரணமாக, இவை முறையே, - மூச்சுத்திணறல், நலிவு, இரப்பைச்சாறு, சிறுநீரகம், குரல்வளை, நுரையீரல், வாய்வளையத்தசை, விழித்திரை, கட்டமைப்பு, முன்கழுத்துக் கழலை, நிணநீர்ச்சுரப்பி என்றவாறு இன்று வழக்காறாகிப் பதிவெய்தி நிலைத்துள்ளன.

1932-ஆம் ஆண்டில் Chlorin என்பதனை 'ஹரிதகம்' என்றும், Hydrogen என்பதனை 'அப்ஜனகம்' என்றும், Nitrogen என்பதனைப் 'பாக்கிய ஜனகம்' என்றும், Flourine என்பதனைக் 'காசாதம்' என்றும், Bromine என்பதனை 'இரக்தகம்' என்றும் தமிழறிவியல் நூல்களில் பதித்த சமற்கிருத முயற்சிகள் யாவும் - இதற்கும் முன்னீடாக இருந்த பழைய பதிவுகளோ ஆட்சிகளோ அல்ல என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ளுதல் வேண்டும். இவை தேவைக்கென முயற்சி செய்து இட்டுக்கட்டி ஆக்கப்பட்ட வல்லந்த முயற்சிகள் ஆகும்.

இந்தியா முழுமைக்குமாகச் - சமற்கிருதத்தை முன்னிறுத்துவதற்குக் கரவான

உள்விருப்பம் வைத்திருந்த சமற்கிருதவாணர் - தாம் பற்றியிருந்த அறிவுத்துறைகள் யாவற்றிலும் இத்தகு முயற்சிகளைச் செய்துகொண்டேயிருந்தனர். "ஸ்ரீ காசியிலே நாகரி ப்ரசாரிணி சபையார் ஐரோப்பிய ஸங்கேதங்களையெல்லாம் எளிய ஸம்ஸ்க்ருத பதங்களிலே போட்டு, மிகப் பெரியதோர் அகராதி உண்டாக்கி வருகிறார்கள். அந்தச் சொற்களை வேண்டியவரை, இயன்றவரை தேசபாஷைகள் எல்லாவற்றிலும், ஏக காலத்தில் கைக்கொண்டு வழங்கலாம். ஐரோப்பாவில் எல்லா பாஷைகளும் லத்தீன், யவன பரிபாஷைகளைக் கைக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு செய்வதனால், நமது தேசப்பாஷைகளில் ஸங்கேத ஒற்றுமையேற்படும். அதனால் சாஸ்திரப்பயிர் தேசம் முழுவதிலும் வளர்ந்தோங்கி வருதல் எளிதாகும்" (பாரதியார்: 1988:208 - 209) எனப் பாரதியார் வரைந்த கருத்துகள் - சமற்கிருதக் கலைச்சொல்லாட்சிக்குப் பரிந்துரையும் சான்றிதழ் வழங்கலுமாகிய முயற்சிகளேயாகும். இத்தகு குறிப்புகளெல்லாம் அறிவுத் துறையைப் பற்றியிருந்த சமற்கிருதவாணவர்களுக்கு ஒலியலாக (Tonic) இருந்தன.

அனைத்திலும் - அவர்கள் மிகு கவனத்துடன் காய்களை நகர்த்தியுள்ளமை கலைச்சொல்லாக்கமுயற்சி வரலாற்றில் பதிவாகியுள்ளது.

இப்பொழுது, குடிமதிப்பு என்றவாறு நிலைத்து வழங்கிவரும் Census என்பதற்குரிய செப்பச்சொல் -முன்பு "மக்கள் தொகைக் கணக்கெடுப்பு" என்றிருந்து. 1932-இல் சென்னை மாநில அரசினரின் கலைச் சொல்லாக்கக் குழுவின், Census என்பதற்கான சொற் கண்டுபிடிப்பு, "குலஸ்திரீ புருஷ பால விருத்த ஆயவ்யய பரிமாணம்" என்பதாகும். 1938-இல் அனந்த வைத்தியநாதனால் எழுதப்பெற்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வெளியிடப்பெற்ற 'நவீன அசேதன ரசாயனம்' என்னும் நூலுள் Hydrochloric acid, Hydro bromic acid, Hydro sulphuric acid ஆகியன முறையே அப்ஜ ஹரிதகிகாமிலம்', 'அப்ஜஇரக்தகிகாமிலம்' 'அப்ஜ கந்தகிகாமிலம்' என்றவாறு குறிக்கப் பெற்றிருந்தன. பெரும்பான்மைக் கலைச் சொற் குறிப்புகளும் இத்தகையனவே.

இம்மேற் குறித்தன போன்றே பன்னூற்றுக் கணக்கான வரலாற்றுப் பதிவுகளில் - தமிழும் தமிழரும் கலையறிவுத் துறையிலும் அறிவியல் துறைகளிலும் மிகக் கரவாகக் அழுத்தி அமுக்கப் பெற்ற காட்சிகளையே நாம் காணுகின்றோம்.

மறைமலையடிகளாரின் தனித்தமிழியக்க முயற்சிகள் செயற்படச் செயற்பட வடமொழி எதிர்ப்பு வலுப்பெறத் தொடங்கியது. தமிழில் வெளிவரத் தொடங்கிய அறிவியல் நூலாக்கங்களுக்கிடையில் படிப்படியே சமற்கிருத பரிபாஷைகள் சரியத் தொடங்கி - தமிழ் மரபுக்கேற்ற புதிய சொற்கள் முளைத்து முன்னெழத் தொடங்கின. 1965-இல் சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலம் - தமிழ்

அகராதி வெளிவந்த பின்னர், இத்தகு நல்ல தமிழாக்க வழக்குகள் பல்கிப் பதிவெய்தலாயின.

என்றாலும், இன்னும் தெளிவான போக்கை இத் தமிழ் அறிவியல் உலகம் மேற்கொள்ளவில்லை என்பது மேலோட்டமான ஆய்விலேயே புலனாகின்றது.

அறிவியல் நூலெழுதுவாரிற் பலர் - கலைச்சொற்களைப் பற்றிய தெளிவும் தேற்றமும் இல்லாராய் இருப்பதனால் அவர்கள் எழுதி வெளியிடும் நூற் செய்திகளினூடும் தவறுகளும் பிழைகளும் தாண்டவமாடுகின்றன. தமிழ்வழி அறிவியல் அறிவின் வாயிலே, கரடு முரடாகவும் குண்டுங்குழியுமாகவும் இருப்பின் - எங்ஙனம் எளிதே அதனுள் நுழைய முடியும்? பன்னூற்றுக் கணக்கான பிரிவுகளாக அறிவுத்துறைகள் உலகெங்கும் கால்கொண்டு கொடியேறிப் பரந்துபட்டு ஒளிர்ந்து கொண்டிருக்கும் இப்பொழுதுங்கூட சின்னூற்றுக் கணக்கான துறைப் பெயர்களுக்குரிய தமிழாக்கங்களையே கூடத் தீரச் சிந்தித்துச் செப்பமுற உருவாக்கிக் கொள்ளும் முனைப்பு நம்மிடம் வேண்டிய அளவுக்கு விளையவேயில்லை.

நிலைப்பியல்

விசைகளின் தாக்கத்திற்குட்பட்ட ஒருபொருள் ஒய்வுற்றநிலையில் நிலைப்புப் பெற்றிருக்க விசைகள் அமைந்திருக்கையில் - அப்பொருளின் மீது தாக்கம்படுத்திய விசையின் வினையளவுகள் குறித்து விளக்குகின்ற அறிவியல், "நிலைப்பியல்" = Statics ஆகும்.

இயக்கவியல்

பொருள்களின் இயக்கத்தைப் பற்றிய ஆய்வியலாகிய "இயக்கவியல்" = Kinematis ஆகும்.

இயக்கத்தாக்கியல்

பொருள்களின் இயக்கங்களுக்கும் - அவற்றின் மீது செயற்படுகின்ற விசை மற்றும் திறன் ஆற்றல் முதலியவற்றின் தாக்கங்களுக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றிய ஆய்வியல் - "இயக்கத் தாக்கியல்" = kinetics ஆகும்.

துனைமவியல்

பொருள்களின் மீது விசைகளின் தாக்கத்தின் காரணமாக இயக்கம் ஏற்படுவதைப் பற்றிக் கூறும்ஆய்வியல், 'துனைமவியல்' - Dynamics ஆகும்.

இயக்கவியலும் இயக்கத்தாக்கியலுமாகிய இருவேறு பிரிவுகள்

ஒன்றிணைந்தியங்கும் விசைத்தாக்கியக்க ஆய்வியலாகத் துனைமவியல் இயங்குகின்றது.

விரைவையும் விரைந்த செயலியக்கத்தையும் விரைந்த வினையாண்மையையும் சுட்டுவதற்குரிய கருப்பொருளைத் தன்னகத்தேயுடைய 'துனை' என்னும் அடிச் சொல்லினின்று துனை + ம் +அம் >துனைமம் என்றவாறு ஒரு சொற்புனைவை உருவாக்கிக்கொண்டு, அப் புனைவாக்கத்தினின்று "Dynamics" என்னும் ஆங்கிலக் கலைச்சொல்லுக்கு நேரிதாக நிற்குமாறு துனைமவியல் என்னும் இவ் இயற்பெயர் உருவாக்கப் பெற்று ஈண்டுச் சுட்டப் பெறுகின்றது (காண்க : விளக்கம் : அ.கு : 13).

இயக்கெந்திரவியல்

முதற்கண் குறிப்பிட்ட "நிலைப்பியல்" -"Statics" மேற்கண் விரிப்பிட்ட துனைமவியல் 'Dynamics' ஆகிய இருபெருங்கூறுகளும் சேர்ந்திணைந்தியங்கும் பேரியலே, இயக்கெந்திரவியல் 'Mechanics' ஆகும்.

நிலையியலா? நிலை அமைவியலா? நிலைப்பியலா?

ஒரு பொருளானது ஒய்வுற்ற நிலையில் நிலைப்புற்றிருக்குமாறு அதனின் விசைத்தாக்கம் நிகழ்கையில் அவ் விசையின் வினையளவுகளின் விளக்கங்களைப் பற்றிய இவ்வாய்வியலை "நிலையியல்" எனத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவன வெளியீடு (1972) சுட்டுவதிலும், "நிலை அமைவியல்" எனச் செ.ப.க. ஆங்கிலம் - தமிழ் அகராதி (996) சுட்டுவதிலும் - "Statics" என்பதற்கு 'நிலைப்பியல்' என்னும் ஆக்கமே பொருள் செறிந்ததும் நிலைப்பாட்டுக்குரியதுமாகும்.

இயக்கெந்திரவியலா? இயங்கியலா?

இயக்கெந்திரவியல் 'Mechanics' ஒரு பேரியல். அதனுள் நிலைப்பியலும் "Statics" -இயக்கியல் Kinematics இயக்கத் தாக்கியல் Kinetics ஆகிய இருபெரும் பிரிவுகளை உள்ளடக்கிய துனைமவியலும் Dynamics அடங்கும் (காண்க : அடிப்படை விளக்கம் 14).

இயக்கெந்திரவியல் என்னும் இப் பேரியலையே செ.ப.க. ஆங்கிலம் - தமிழ் அகராதி பக்கம் 626-இல் Mechanics இயக்கவியல் என்றவாறு மிகமிகப் பிழைபடுமாறு முற்பதித்துள்ளது. அதனொடு மட்டுமன்றி, "பிழம்பின் மீது இயக்கத்தாக்குதல் பற்றி ஆயும் ஆய்வியல்துறை"என்றவாறு குழப்ப விளக்கமொன்றையும் பக்கத்திற் பதித்துள்ளது.

Dynamics என்பதற்குச் செ.ப.க. ஆங்கிலம்-தமிழ் அகராதி விசை இயக்கவியல் (பக்கம் 334) என்றும், கலைக்கதிர் வெளியீடான கலைச்சொல் அகராதி (1985 : 15) இயக்கவியல் என்றும் குறிப்பிட்டுள்ளன.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 265-ஆம் அறிவியல் வெளியீடான 'Dynamics' என்னும் கல்லூரிப் பட்டப் படிப்புக்குரிய சிறப்புநிலைப் பாடப் பொத்தகம் (Major) 1971-ஆம் ஆண்டில் சூன் திங்களில் மகாதேவன், சிவசுப்பிரமணியம், சுப்பிரமணியம் ஆகிய ஆசிரியர் பெருமக்களைக் கொண்டு, "இயக்கவியல்'' என்னும் தலைப்பில் 391 பக்கங்களடங்கிய தொகைப் பொத்தகமாக வெளியிடப்பெற்றது.

அடுத்து, அதே தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 302 -ஆம் அறிவியல் வெளியீடான 'Dynamics' என்னும் அதே கல்லூரிப் பட்டப் படிப்புக்குரிய சிறப்புநிலைப் பாடப்பொத்தகம் (Major) 1972 - மார்ச் மாதத்தில் இராசகோபாலன் அவர்களைக் கொண்டு இயக்கவிசையியல் Dynamics என்றவாறு மற்றுமொரு புதிய தலைப்பில் மாற்றப்பெற்று வெளியிடப் பெற்றது.

ஆக, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 'Dynamics' என்னும் ஒரே இயலானது- 'இயக்கவியல்' என்று முன்னரும், 'இயக்கவிசையியல்' என்றவாறு பின்னரும் மாற்றம் பெறுவதற்குப் பத்து மாதங்களாயின.

இந்த 'இயக்கவிசையியல்'என்னும் மாற்றப்பெயரும் செ.ப.க. ஆங்கிலம் - தமிழ் அகராதி ஆக்கப்படுத்தியிருந்த விசையியக்கவியல் 'Dynamics' (பக்கம் 334) என்னும் கலைச் சொல்லாக்கத்தைச் சொல்லிடம் பெயர்த்தல் என்னும் உத்தியின்வழி முன் பின்னாக்கிய புதுப் புனைவேயாகும்.

இதனினும் வியப்புக்குரிய கொடிய பிழை நிலைகளின் தொகுப்பைக் கலைக்கதிர் வெளியீடான கலைச்சொல் அகராதியுள் காணலாகும்.

இவ்வகராதியின் முதற் பகுதியுள் 15- ஆம் பக்கத்தில் "Dynamics" என்பதற்கு 'இயக்கவியல்' என்னும் கலைச்சொல்லும், அதே பகுதியுள் 26-ஆம் பக்கத்தில் Kinematics என்பதற்கு 'இயக்கவியல்' என்னும் அதே கலைச்சொல்லும் அதே 26 - ஆம் பக்கத்தில் Kinetics என்பதற்கு மேற் சுட்டியுள்ள Dynamics, Kinematics ஆகிய இரு சொற்களுக்கும் உரியதாகக் குறிப்பிட்டிருக்கும் அதே "இயக்கவியல்'' என்னும் கலைச்சொல்லும், மீண்டும் மீண்டும் அழுத்தமாகவும் வலியுறுத்தமாகவும் பதிக்கப்பட்டிருக்கின்றன.

ஆக, Mechanics, Kinetics, Kinematics, Dynamics ஆகிய யாவற்றையும்

'இயக்கவியல்' என்னும் ஓரியலாகவே சுட்டும் அறிவுக்குழப்பம் - அறிவியல் துறைப் பெயரீட்டுக் குழப்பம் நமக்குப் பெருங் கவலையையே அளிக்கின்றது.

அறிவியல் துறைகளின் பெயர்களையேகூடச் சரியாக வரையறுத்துப் பெயர்த்து வழங்குவதில் கடந்த 150 ஆண்டுக் காலத்தில் முறையான கருத்தும் கவனமும் இத் தமிழகத்தில் செலுத்தப்பெறாத போக்கையே நாம் கண்டு நைய வேண்டியுள்ளது (அருளி: 1990 : 26-33).

கலைச்சொல்லுக்குரிய பொருட்பாட்டைத் தெளியவுணராது விரைவாகச் செய்யும் தவற்றாக்கங்கள்

"Law of Conservation" என்பதற்கு "ஆற்றல் அழியா விதி'' என்று சுட்டப் பெற்றுள்ளது. அது, "ஆற்றல் அழியாமை விதி'' அல்லது நெறி என்றவாறு திருத்தமுற வேண்டும். 'Aphagia' என்பதற்கு விழுங்காமை விழுங்கலின்மை என்ற வகைகளிற் சொல்லாக்கங்கள் நடைபெற்றுள்ளன. அது "விழுங்கவியலாமை" என்றிருத்தல் வேண்டும். Agnosticism என்பது பல பதிவிடங்களில் "அறியொணாக் கொள்கை'' என்றுள்ளது. அது 'அறியொணாமைக் கொள்கை'' என்றே திருத்தமுறல் வேண்டும். சுருக்கமாகச் சொல்லவேண்டும் என்ற உணர்வுந்துதலும் இலக்கண அமைப்புத் தெளிவின்மையும் சொற்பொருளை முழுமையுற உணராமையும் சேர்ந்ததனாலாகிய இவ்வகை விரைவுவினைகள் தமிழ்க் கலைச் சொல்லாக்க முயற்சிகளிடையே மிகப் பலவுள.

சொல்லைப் பார்த்தமட்டிலேயே அடிப்படையை உணராது பெயர்த்த முயற்சிகள்

'Fanum' - என்பது கோயிலைக் குறித்து வழங்கும் இலத்தீனச் சொல். இச் சொல்லடியாகப் பிறந்ததே 'Fanaticus' என்பது. மதவியல் சார்ந்த ஆர்வக்கோளாறு வாய்ந்தவரைக் குறித்துப் பின்னர் - எல்லையற்ற மிகையார்வமுடையவர் என்னும் பொருள் விரிவாக்க வளர்ச்சியில் ஆங்கிலத்தில் Fanatic என நின்றது. இச்சொல்லின் குறுக்க வடிவமே 'Fan' என்பது. பலர்பால் வடிவாகிய 'Fanatics என்பதனின்று குறுக்கவாக்கம் பெற்ற 'Fans' என்னும் சொல்லாட்சியை மேலோட்டமாகக் கண்டுவிட்டு - 'விசிறிகள்' எனத் தவறுதலாகப் பொருள்கொண்டு - அதனையே அறியாமையால் வழங்கி வருவதலையும் காணுகின்றோம் ('Film fans Association' திரைப்பட விசிறிகள் கழகம் (சோமலெ: 1988 : 348 - 349).

பொருண்மயக்கமுறுவதையுணராது புதுச்சொற்படைத்தல்

'Navigation' என்னும் தலைப்புக்கெனக் கலைக்களஞ்சியக்

கட்டுரையொன்று வரையப்பட்டிருப்பதில் - அதற்குரிய நேரிய தமிழாக்கமென்று கருதி - கப்பலோட்டியை அல்லது கலவலவனைக் குறித்துத் தமிழில் வழக்காறு கொண்டிருந்த (மீகான் >) மீகாமன் என்பதனைத் தெரிந்தெடுத்து, Navigation மீகாமக்கலை என்று அறுதிசெய்து பதிவிட்டிருப்பதை இத்தகு தவற்றாக்கப்படைப்பு முயற்சிக்குச் சான்றாகக் காட்டலாம். “காமம்'' என்னும் புணர்ச்சிவிருப்பத்தைக் குறித்த சொல், ‘மீ’ என்னும் மிகுதிப் பொருள்அடைபெற்று, மீகாமம்-மிகையளவான காமம் என்றவாறான பொருட்பாட்டில் அமைந்துள்ளதோ என எண்ணும்படி, இக் கூட்டுச்சொல்லின் தோற்றம் மயக்கத்திற்கிடனாக நிற்பதை உணராமலேயே இம்மருட்கலைச் சொல்லாக்கம் பதியப் பெற்றுள்ளது (காண்க அ.கு 15).

‘முதுகெலும்பிலாதன’ என்னும் பொருட்பாடுடைய “Invertebrata” என்பதனை “நாணிலி”என மொழிபெயர்த்தமையிலும் இவ்வகைக் கொடிய மயக்கமுள்ளமையையும் இவ்விடத்திற் கருதிப் பார்க்கலாம்.

சொல் தோன்றிய வகைப்பாட்டை - அடிப்படையை உணராமல் - நன்கு பொருள் விளங்கித் தோன்றவேண்டும் எனக் கருத்திற்கொண்டு மிகைச் சொல் சேர்ப்பதால் ஏற்படும் குழப்பம்

பாய் > பாய் + அனம் > பாயனம் > பாசனம் = நீர்ப்பாய்வு நிலை: நீர் பாயும் அமைப்பொழுங்கியக்கம், நீர்ப்பாய்வு நிலைக்குரிய சிறப்புச் சொல்லாக வளர்ந்துவிட்ட பின்னர் - “நீர்” என்னும் அடையை மீண்டும் முன்னிருத்த வேண்டிய தேவையில்லை. ‘Irrigation’ என்னும் சொல்லுக்குரிய கலைச்சொல்லாக, “நீர்ப்பாசனம்” என்றவாறு வழங்கத் தொடங்கிய பின்னர், small irrigation என்று வருமிடத்திற்குச் “சிறு நீர்ப்பாசனம்” எனப் பெயர்த்து - நகைப்புக்கும் கிண்டலுக்கும் பொருட்படுமாறு செய்துவிட்ட நிலையை நாம் அறிவோம் “Irrigation” என்பதற்குப் “பாசனம்” என்று மட்டுமே செப்பமாகப் பயின்றுவிட்டால் small irrigation என்பதற்குச் “சிறுபாசனம்” என்றவாறு இயல்புப் பெயர்ப்பு எளிதாகப் பயனுறும்.

“நீர்” எனும் பொருட்சொல் இயல்பால் ஒரு சொல்லுக்கு முற்பட்டிருப்பின் -அதற்கு முன்னீடாக வரும் சிறுமைப் பொருள் அடையினைக் “குறு” என்னும் இணைமாற்றுச் சொல்லிணைத்து மயக்கந் தவிர்க்கலாம்.

சான்று: Coromorant = நீர்க் காக்கை

Little coromorant = குறு - நீர்க் காக்கை

கூட்டுச் சொல்லாக்கத்தில் சிலகால் நேரும் மயக்கம் போக்க இடையில் இடைக் கோடிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

தமிழ் வளமொழியாதலின் - சொற்புணர்ச்சியமைப்பின்வழி மிகப் பல்லிடங்களில் பொருள் மயக்கத்திற்கு வழியேற்பட வாய்ப்புள்ளமையைத் தவிர்த்தற்கு அவ்விடங்களில் இடைக்கோடிடுதல் வேண்டும்.

band number = *பிணைப்பெண்.* "*பிணைப்பு - எண்*"

mark = *மதிப்பெண்.* "*மதிப்பு-எண்*"

nuclear particle = *அணுக்கருத்துகள்.* "*அணுக்கருத்-துகள்*".

magnetive wave = *காந்தவலை.* "*காந்த - அலை*"

business goals = *வணிகவிலக்குகள்.* "*வணிக - இலக்குகள்*"

poly syllabic word = *1. பல்லசைச் சொல் (பல்* Teeth?*)*

2. பல +அசைச்சொல் > பலவசைச் சொல் (வசை- இழிமொழி இழிப்புமொழி)

எனவே, - பல - அசைச்சொல் என்றவாறு இடைக்கோடிட்ட நிலையால் தீர்வு செய்ய வேண்டும்.

சில இடங்களில் சாரியை சேர்த்துத் தெளிவாக்குதல் வேண்டும்.

அடிமே = மடத்துறவி

மடம் + அத்து + துறவி > மடத்துத்துறவி.

மிகச் சிக்கலுக்குரிய உருவமைப்பாக நிற்கையில் பொருந்திய கருத்துச் சொல்லொன்றை உடனிணைத்து மாற்றுருவில் அதனை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

melting = *உருக்குதல்*

melting furnace = *உருக்குமுலை*

உருக்கல் உலை (உரு + கல்) - எனும் குழப்பம்

உருக்கவுலை (உருக்கம் + உலை) - உருக்கம் - மன இளக்கம்

உருக்குலை (உரு + குலை) = 'உருவினைக் குலைத்தல் செய்' என்றவாறான குழப்பம்.

இவ்விடத்தில் - உருக்கு + "வினை" +உலை > "உருக்கு வினையுலை"

என்றவாறமைத்துத் தீர்வு செய்யலாம்.

சிலவிடங்களில் தேவையற்ற சொற்களை நீக்கித் தெளிவாக்கவேண்டும்.

flux = பாயம். flux oil = பாய எண்ணெய். நாளடைவில், இது "பாயவெண்ணெய்" என்றவாறே - வழங்கத் தலைப்படும். எண்ணெய்ப் பொருளே - தவற்று வழக்காக நின்று குழப்புகையில் - இச் சொற்களின் புணர்ச்சி வழியதான பயில்வு, மேலும் வெண்ணெய்ப் பொருளைத் தந்து வழுக்கும். எனவே, இங்கு எள்ளைப் பிரித்தெடுத்துவிட்டு, பாயம் + நெய் > பாயநெய் என்றவாறு தீர்வுற அமைக்கவேண்டும்.

பொருள் மயக்கத்திற்கு இடந்தரும் சொல்லை நீக்கிவிட்டு அவ்விடத்தில் அச் சொல்லுக்குரிய நேரிய தெளிவுச் சொல்லைப் பிணைத்துத் தீர்வு செய்தல் வேண்டும்.

moon blindness - மதிக் குருடு

அறிவுக் குருடு - என்பதுபோலும் மதிமயக்கம் தருகின்ற இச் சொலாக்கத்தில் உள்ள மதியைப் பெயர்த்துவிட்டு, நிலவைப் பதித்து - "நிலாக்குருடு" என்றவாறு மாற்றிக் கொள்ளலாம். சொல்லுக்குரிய நேர்ப்பொருளை மட்டுங் கவனித்து - அதற்கேற்பச் சொல்லாக்கம் செய்யப் பெறுகையில் நேருங் குழப்பம்: Black-hole எனும் கலைச் சொல்லுக்குக் - 'கருப்பாக இருக்கும் துளை' என்றவாறு மேலோட்டப் பொருளைக் கருதிப் பல இடங்களில் 'கருத்துளை' என்றே பெயர்ப்புச் சொல் மேற்கொள்ளப் பெற்றுப் பதிவுற்றுள்ளது. த.ப.க. அறிவியல் களஞ்சியத்துக் "கருந்துளை" (தொகுதி 1 பக்கம் 957) என்று பதிவு செய்யப்பெற்றுள்ளது. 'துளை' என்னும் சொல் இரு பக்கமுமான பொத்தற் கருத்துடையது. இவ் அறிவியற் கலைச்சொல் - குழியையும் அதன்வழிப் புறத்தில் தோன்றும் கரிய தோற்றத்தையும் மட்டுமே குறிக்கும் சொல்லாதலால், இதனைக் "கருங்குழி" என்பதே பொருந்துவதாகும். கலைக் கதிரின் கலைச் சொல்லகராதி - "கருங்குழி" என்னும் செப்பக் கலைச் சொல்லாக்கத்தைப் பதிவு செய்துள்ளது (பகுதி -1 பக்கம் 6).

இவ்வகையிலாகும் பச்சைப் பெயர்ப்புகளில் ஏற்படும் குழப்பங்களுக்கு மற்றுமொரு சான்று:

Physeter cateden என்னும் பெயருடைய பெருந்திமிங்கிலத்தின் தலைப் பகுதியினின்று எடுக்கப் பெறும் வெண்மெழுகு போன்ற நெய்மப் பொருளானது, உயவு நெய் உருவாக்கத்திற்கென்று பயன்படுத்திப் பெறும் மூலப்பொருள்களில் ஒன்றாகும். இந் நெய்மம் விந்தின் தோற்றமுடைமை கருதி, இத் திமிங்கிலத்தின்

பெயரே "Sperm whale' என ஆங்கிலத்தில் சுட்டப் பெறுகின்றது. இத் திமிங்கிலத்தினின்று எடுக்கப்பெறும் விந்துத் தோற்றமுடைய அந் நெய்க்கு ஆங்கிலத்தில் "spermaceti" என்பது பெயர். 'sperm' என்பதற்குரிய 'விந்து' என்னும் நேரிடையான பொருளையே தொடர்புடைய அனைத்துக் கலைச் சொல்லாக்கங்களிலும் பயன்படுத்துவது குழப்பத்திற்குரியதாகும்.

'sperm oil' என்னும் உயவுநெய் வகையைத் தமிழில் 'விந்தெண்ணெய்' என்றவாறே மொழிபெயர்ப்புச் செய்துள்ளனர். கருத்துக் கருவின் உருக்கெடாமல் நம் மொழியிற் கொள்ள வேண்டுமெனில், இதனை 'விந்துரு நெய்' என்று ஆக்கம் செய்வதுவே முறைமையும் சீர்மையுமாகும்.

முதற்காரணம், இது விந்துக்குத் தொடர்புடையதன்று; விந்திற்கு உருவொப்புமைத் தொடர்புடையது. எனவே, "எள்" என்னும் சொல்லொடு கூட்டாகி நிற்கும் இதனைத் தெளிவுறுத்தும் பாங்கில் எண்ணெயினின்று தேவையற்ற எள்ளைப் ('எள்' என்னும் சொல்லைப்) பிரித்தெடுத்துவிட்டு 'உரு' என்னும் சொல்லை இணைத்து நிரப்புதலே தக்கதாகும்.

'sperm - whole என்பதற்கு 'நெய்ந்தலைத் திமிங்கிலம்' என்றும், "spermaceti" என்னும் அத் திமிங்கிலத்தின் தலை நெய்யைக் குறிக்க 'விந்தனநெய்' (விந்து +அன்ன + நெய்) என்றும், sperm-oil என்பதற்கு "விந்துருநெய்" என்றும் தெளிவுபடப் பாகுபடுத்தி வழங்குதலே முறைமைப்பட்டதாகும்.

பெயர்க்கப்பெற வேண்டியது - பொருள் விரிவாக்கம் எய்திநிற்கும் இன்றைய நிலைப் பொருட்பாடே.

ஒரு கலைச் சொல்லுக்குள்அமைந்துள்ள பொருட்பாட்டை அப்படியே அனைத்திற்கும் பின்பற்றவியலாது. அங்குப் பெயர்க்கப்பெற வேண்டியது. அச் சொல்லானது படிப்படியே பொருள் விரிவாக்கம் எய்தி நிற்கும் இன்றைய நிலைப் பொருட்பாடே ஆகும்.

"symposium"-என்றவாறு கருத்தரங்கத்தைக் குறிக்கும் இன்றைய பொருட்பாட்டை நோக்காமல் - சொல்லுக்குள் அமைந்திருக்கும் பொருட்பாட்டைக் கருத்திற்கொண்டு சொல்லுருவாக்கம் செய்யின் "கூடிக்குடித்தல்" அல்லது 'குடிவிருந்து' என்றவாறே பெயர்க்க வேண்டிவரும். ஏனெனில், தொடக்கத்தில் அறிஞர்கள் ஒன்றாகக் கூடி மது அருந்திய பின்னர் அறிவுப் பொருள் பற்றிய கலந்துரையாடல் புரிந்த வரலாற்றுக் காட்சியே 'symposium' என்னும் சொல்லுக்குள் உள்ளது (காண்க: அ.கு.16). எனவே,

கலைச்சொல்லாக்கத்தில் ஆழமாகக் கவனிக்க வேண்டியவற்றுள் பொருள் விரிவாக்கத்தின் இறுதிப் பொருள் துலக்க நிலையும் ஒன்றாகும்.

தமிழில் "நொடிப்பு நிலை" என்றவாறு செப்பமுற்ற பொருளில், bankruptcy என்பதற்குரிய கலைச்சொல்லாக்கம் நிலைப்பெய்தியுள்ளது. bankruptcy என்பதற்குரிய சொற்பொருளை நேரிடையாகத் தருவதற்கு முனைந்திருந்தால் அது - 'வீச்சுப் பலகையுடைப்பு'(அமர்பலகை யுடைப்பு) என்றவாறே அமைந்திருக்கும் (காண்க: அ.கு.17). Insolvency, bankruptcy என்னும் இரு சொற்களுக்குமுரிய கலைச் சொல்லாக 'நொடிப்பு நிலை' என்னும் வழக்கு நன்கு பரவி விலைப்புற்றுள்ளது.

எளிமையாக உருவாக்கிக் கொள்ளுதற்கான ஏந்துநிலை (வசதிப்பாடு) இருந்தும் குழப்பத்தை விளைவிக்கும் வகையில் சமற்கிருத வடிவையே தமிழியப்படுத்திக் கலைச்சொல்லாக நிறுத்தும் தவறான போக்குகள்:

வெட்டுதலைக் குறித்தற்குத் தமிழில் 'செகுத்தல்' என்னும் வினைவடிவம் உள்ளது. இச் 'செகு' என்னும் சொல்லின் திரிபாகிய 'secare' (-to cut) என்னும் கிரேக்க வினைவடிவினின்றே secant, secateurs, section, sector, segment முதலிய பல சொற்கள் தோற்றமுற்றுள்ளன. பிரிதல், வெட்டுதல் பொருள்களிலான 'பகு' என்னும் வினையடியின் 'பகல்' என்னும் தொழிற்பெயர் திரிபெய்திய நிலையில் பால் என்றாகிப் பிரிவுக் கருத்தில் வழங்கிவருதலை நாம் அறிவோம் (ஒ. நோ: மகள் > மாள். துகள் > தூள். மகன் > மான். அகல் > ஆல்).

பால் என்னும் பிரிவுக் கருத்து அல்லது வகைப்பாட்டுக் கருத்திலேயே ஆண்பால், பெண்பால் முதலியன வழங்கப் பெறுகின்றன. இந்நிலையையொத்தே பிரிதற்கருத்தில் - வெட்டுதல்கருத்தில் அமைந்த (secare) sec என்பதினின்று "sex" என்னும் சொல் தோன்றியுள்ளமையும் இவ்விடத்திற் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

இதையொத்து 'அறு' என்னும் பிரிதற்கருத்தில் தோன்றிய 'ஆறு' என்னும் எண்ணுப்பெயர் போன்றே, கிரேக்கத்திலும் (secare) sec என்னும் செகுத்தற் கருத்து அல்லது அறுபடற் கருத்தின் அடிப்படையில் (sec>) sex என ஆறு என்னும் எண்ணுப் பெயரில் பதிவெய்தியுள்ளது. sex என்பதுவே ஆங்கிலத்தில் 'six' என வழங்குகிறது.

sextus என்னும் இலத்தீனச் சொல்லினின்று தோன்றி வளர்ந்த sextant என்னும் சொல்லுக்கு, ஆறு என்பதன் முன் வடிவான 'அறு' என்பதினின்று 'அறுபதின்மம்' என்றவாறொரு சொல்லை ஆக்கமுறுத்திக் கொள்ளாமல், அறுபது என்னும் எண்ணுப்பெயர் குறித்த 'சஷ்டி' என்பதனை அடிப்படையாகக் கொண்டு

"சஷ்டிமம்" என்றொரு வன்சொற் புனைவை உருவாக்கிக் கொண்டு, அதனை மேலும் தமிழியச் சொல்லுருவில் "சட்டிமம்" எனத் திரித்து வழக்காற்றில் கொண்டுவர இன்றும் தூண்டுகின்றனர். காண்க : angle sextant கோணச் சட்டிமம். கலைச்சொல் அகராதி- கலைக்கதிர் வெளியீடு - பகுதி - 1. (1985 : 206).

"சட்டி" - என்னும் சமையற்கலப் பொருட்கான பரவலான வழக்குப் பெயரை ஈண்டுக் கருத்திற் கொள்ளாமை - மயக்கப் பொருண்மை பற்றிய கருத்துத் தெளிவின்மையைக் காட்டுகின்றது.

பரவலான எளிமையான வழக்குச் சொற்கள் நிலை பெற்றிருத்தலைக் கருத்திற் கொள்ளாமலேயே செய்யப்பெறும் தவற்றுச் சொல்லாக்கங்கள்:

"இல்" என்னும் ஒளிக் கருத்து - வெண்மைக் கருத்து வேரினின்று தோன்றிய 'எல்' என்னும் பக்கவேரின் வழியில் - வெள்ளிய நிறத்ததாகிய (எல் > எலு > எலுபு) எலும்பு குறிக்கப்பெற்றது. (எல் + பு) எல்பு என்னும் வடிவம் பின்பு "என்பு" என வளர்ச்சியாக்கம் பெற்றது. எலும்பு, என்பு ஆகிய இரு வடிவங்களையும் கொண்டு, bone மற்றும் "osteo" என்னும் எலும்பைக் குறித்த கிரேக்கச் சொல் மூலம் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட அனைத்துக் கலைச் சொற்களையும் தெளிவாகத் தமிழில் அமைத்துக் கொள்ள முடியும்.

ஆயினும், Osteo என்பதினின்று திரிந்த 'அஸ்தி' என்னும் சமற்கிருதச் சொல்லை அடிப்படையாகக் கொண்டு - அதனை வடவெழுத்து நீக்கித் திருத்திய தமிழிய வடிவில் "அத்தி" என்பதாகப் பட்டியலிட்டுள்ளமை காரறிவார்ந்த தெளிவிலாப் போக்கையே காட்டி நிற்கின்றது.

அத்தி என்னும் மரப்பெயர் வழக்குள்ளமையை ஈண்டுக் கருதிப் பாராமை - மயக்கப் பொருண்மை பற்றிய கருத்துத் தெளிவின்மையைக் காட்டுகின்றது.

	பட்டியலில் உள்ளது	அமையவேண்டியது
Ossicle	= நுண்ணத்தி	- நுண்ணெலும்பு
Osteoarthrosis	= அத்திமூட்டு நோய்	- என்புமூட்டு நோய்
Osteoarthritis	= அத்திமூட்டழல்	- என்பு மூட்டழற்சி
Osteochondritis	= அத்திக் குறுத்தழல்	- என்புக் குருத்தழற்சி
Osteo Chendroma	= அத்திக் குறுத்துப் புத்து	- என்புக் குருத்துப் புற்று
Osteocyte	= அத்திச்செல்	- என்புக்குடவை

Osteoid	= அத்தியன்ன	- என்பன்ன
Osteoma	= அத்திப்புத்து	- என்புப்புற்று
Osteomalacia	= அத்திமெலிவு	- என்புமெலிவு
Oseopetrosis	= கல்லத்தியம்	- கல்லென்பியம்
Osteophage	= அத்தி விழுங்கி	- என்பு விழுங்கி
Osteophyte	= அத்திமுளை	- என்புமுளை

(கலைக்கதிர் - கலைச் சொல்லகராதி (தூய தமிழ் - சொல்லாக்க மடலம் 1. பக்கம் 154) அகரமுதலிகள் - துறையின் திருத்தங்கள்)

ஒரு பொருளுக்கு அமைந்துள்ள பயன்கூறு அடிப்படையிலான புத்தாக்கம்

பிலிப்பைன்சு நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட "Abaca" *என்னும் நிலைத்திணை வகைக்கு, நிலைத்திணை மறுபெயரீடு* (nomen - clature) Musa textilis *என்பதாகும். இந்நிலைத்திணை, வாழை இன வகையைச் சேர்ந்தது. இவ்வாழையின் பட்டை மிகக் கடுமையான நாரிழைகளைக் கொண்டது. கயிறு திரிப்பதற்குரிய மூலப்பயன்பாட்டுப் பொருளாக அமைந்திருக்கும் இந் நாரிழைகளை அடிப்படையாக வைத்து நார் + வாழை > நார்வாழை என்னும் பெயரீட்டை இதற்கு அமைத்துக் கொள்ளலாம்.*

பிலிப்பைன்சு நாட்டில் உள்ள மணிலாப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு "Manila hemp" *என்னும் மற்றொரு பெயர்வழக்கும் இதற்கு உண்டு. இதன் கடுமை வாய்ந்த நாரிழைகளாகிய சணலுக்கு உள்ளமையால் - இதனை "நார்வாழைச் சணல்" எனும் பெயரீடுவழிக் குறிப்பிடலாம்.*

இந் நார்வாழைச் சணலிலிருந்து உருவாக்கப்பெறும் தாள் வகையான 'Manila paper' *என்பதனை, "நார்வாழைத் தாள்" எனச் சுட்டலாம்.*

Abaca = *நார்வாழை.* Musa textilis = *நார்வாழை.*

Manila hemp = *நார்வாழைச் சணல்.* Manila paper = *நார்வாழைத்தாள்.*

இவ்வகையில், ஒன்றன் பயன்கூற்று நிலையை அடிப்படையாகக் கொண்டு அதற்குரிய தொடர்புச் சொற்களைப் படிப்படியே நிரலுற அமைத்துக் கொள்ளுவது ஒருவகைக் கலைச் சொல்லாக்க முறை.

எவ்வகை அடிப்படையில் சொல் அமைக்கப் பெற்றுள்ளது என மூலந் தெரியாதவிடத்து- அதற்குரிய இணைப் பெயர்களை ஒப்ப வைத்து நோக்கி அதனுள்

பொருந்தியவொன்றை அடிப்படையாக வைத்து ஆக்கப்படுத்தல்

ஆலியோத்திசு (Haliotis) என்னும் சிப்பி இன வகையுள் 'abalone' என்னும் பெயரீடு பெற்றுள்ள ஒன்று இசுப்பானியச் சொல்லினின்று தோன்றியதாகும். அச் சொல் எவ்வடிப்படையில் தோற்றமெய்தியது என்பதனை அறியவியலவில்லை என அகராதியர் சுட்டுகின்றனர். இதற்குரிய பிற பெயர்களாக ear-shell, ormer, paua ஆகிய சொற்கள் வழங்குகின்றன. தோற்றத்தில் அச் சிப்பியானது நமக்குள்ள புறச்செவி அமைப்பில் இருப்பது காரணமாக ear - shell என்னும் பொருந்திய மற்றுள்ள ஓர் இணைச் சொல்லைத் தெரிவுசெய்து "செவிச் சிப்பி" என்றவாறு ஆக்கப்படுத்திக் கொள்ளலாம். மற்றுமுள்ள ormer, paua என்னும் இரு பெயர்களுக்கும் 'செவிச் சிப்பி' என்னும் அதே ஆக்கச்சொல்லை வழங்கலாம்.

abalone = செவிச் சிப்பி

ear - shell = செவிச் சிப்பி

ormer = செவிச் சிப்பி

paua = செவிச் சிப்பி

(-புறச்செவியின் உருவையொத்த தோற்ற அமைப்பைக் கொண்டுள்ள சிப்பி இனவகை - என்றவாறு பொருள் குறிக்கலாம்.)

ஒற்றையாக்கம்

ஆங்கிலத்தில் ஒரு பொருளைக் குறித்தற்குப் பலசொற்கள் இருப்பின் அவை அனைத்துக்கும் தனித்தனியே கலைச் சொல்லாக்கம் செய்து கொண்டிருக்கத் தேவையில்லை. பொருந்திய ஒன்றனுக்கு மட்டும் உருவாக்கிக் கொண்டு பிறவற்றிற்கு அச்சொல்லை மாட்டெறிந்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

Eucoelomata என்னும் உயிரிக்கு true coelomata என்பதுவும் ஒரு பெயர். 'நர' - என்னும் கிரேக்கச் சொல் 'உண்மை' என்னும் பொருட்பாடுடையதாதலின் அச்சொல்லுக்குரிய தெளிவைப் புறங்காட்டவல்ல 'True coelomata' என்னும் மற்றொரு இணைச்சொல்லை ஆக்கப்படுத்தியுள்ளனர்.

தமிழில் அறிவியல் நூலெழுதிய ஆசிரியர்கள் eucoelomata = உண்மை உடற்குழியுயிரி, true coelomata = மெய் உடற்குழியுயிரி என்றவாறு இரண்டிற்கும் தனித்தனிக் கலைச் சொல்லாக்கங்களை மேற்கொண்டுள்ளனர்.

"மெய்" - என்பது உண்மைக்கும் உடலுக்கும் பொருந்திய பொருட்பாடு தரும் ஓர் ஒற்றைச் சொல்லாதலின் - மேற்கண்ட சொல்லாக்கங்களில் வரும்

உண்மையையும் உடலையும் நீக்கிவிட்டு - 'மெய்க்குழியுயிரி' என்றவாறு இரண்டிற்குமேற்கும் வகையில் சுட்டிச் சிக்கல் தீர்க்கலாம். இவ்வொற்றைக் கலைச் சொல்லாக்கத்தையே இரு தனித்தனிச் சொற்களுக்கும் நேரியனவாகப் பயன்படுத்தலாம்.

மரபில் அமைந்துள்ள சொல்லமைப்பு நோக்கி - அதற்கொப்ப ஆக்கிக் கொள்ளல்

வழியில் செல்லும் ஒருவரை அல்லது ஒரு குழுவினரை மடக்கி அவரிடம் அல்லது அவர்களிடம் உள்ள பொருளை ஒருவன் அல்லது ஒரு குழு பறிக்கும் நிலையைச் சுட்டுதற்குத் தமிழில் 'வழிப்பறி' என்னும் சொல் உள்ளது.

நாம் அணியும் உடையில் பை வைத்துத் தைத்துக் கொள்ளத் தொடங்கிய காலத்தினின்று - அதனின்று பறித்தெடுத்துக் கொள்ளுவதாகிய திறத் திருட்டு முறையும் இம் மண்ணிலும் வளர்ந்து தொடர்கின்றது. அதற்குரிய சொல்லாக 'Pick - pocket' என்னும் கூட்டுச்சொல் பரவலாக வழக்கமுற்றுள்ளது. உண்மையில் - இவ் ஆங்கிலக் கலைச்சொல், - (இது சட்டவியலில் ஒரு கூறான குற்றவியலுள் நிரம்பிய பயன்பாட்டுச் சொல் -) பையினின்று பறித்தெடுக்கும் குற்றவாளியாகிய திருடனைச் சுட்டிய சொல்.

இதற்குரிய பயன்படுத்த நிலையில், இவ் வகைத் திருட்டைக் குறிக்க, 'வழிப்பறி' என்பது போல - "பைப்பறி" என ஆக்கி வழங்கலாம். இப் பைப்பறியாகிய திருட்டில் ஈடுபடுபவனைப் "பைப்பறியன்" எனச் சுட்டலாம்.

மரபு வழக்கில் - அடிப்பட்ட பயன்படுத்த வழக்கில் உள்ள பிற சொல்லை அடிப்படையாகக் கொண்டு - அதனின் போன்மையமைப்பில் புதிய சொல்லை இவ்வாறு ஆக்கிக் கொள்ளலாம்.

கையில் அடக்கிக் கொள்ளும் நிலையைக் குறித்ததற்கு - நம் மொழியில் "கையடக்கம்" எனும் வழக்காறு மேற் கொள்ளப்பெற்று, கைக்கு அடங்கும் வகையிலமைந்த சிறிய நூற்பதிப்பைக் "கையடக்கப் பதிப்பு" என நாம் வழங்கி வந்துள்ளோம். இதற்குரிய நேரிய ஆங்கிலச் சொல் என்றவாறு புழங்கியபோது, தமிழ்ப் பல்கலைக்கழக திருக்குறள் மூலப் பதிப்புகளில் "பையடக்கப் பதிப்பு" என்று பதித்திருக்கும் சிறப்புப் பயன்படுத்தத்தை இவ்விடத்தில் இதனோடு கருத்திற் கொள்ளலாம்.

மரபு அடிப்படையிலான - இவ்வகைச் சொல்லாக்கத்திற்கு ஆங்கிலத்தில் உள்ள 'Pine - apple' என்னும் சொல்லுக்குரிய ஆக்கமாகச் "செந்தாழை'' என்னும் அழகிய பெயரைப் பாவாணர் உருவாக்கியமையை இவ்விடத்திற் கருதி மகிழலாம்.

மொழிபெயர்ப்பு என்பது - மொழியாக்கம் என்னும் நுண்பொருளிலேயே தமிழில் பொருள் கொள்ளப் பெற்று இயங்கிய ஒன்றாகும் (காண்க: அ. கு 18). தமிழக மண்ணில் கலைச் சொற்களை உருவாக்குகையில் - மூலமாகக் கவனிக்க வேண்டியது - இம் மக்களுக்குரிய மரபுணர்வு நிலையேயாகும். அதுதான் - இம்மண்ணில் பதிவுறவும் பயன் விளைவிக்கவும் இயலும்; ஏற்கவும் பெறுவதாகும்.

'Cheque' என்னும் கலைச்சொல் 'காசோலை' என்றும், 'Draft' என்னும் சொல் 'வரைவோலை' என்றும் ஆக்கம் பெற்றுள்ள நிலையை அனைவரும் பின்பற்றுவதில் அடிப்படையான ஒரு மரபுணர்வு இழைப்பதிவாக ஊடோடுவதை ஊன்றிப் பார்த்தால் உணரலாம்.

கருத்துப் பெயர்ப்பே அடிப்படையானது

நிரம்பிய கலைச்சொல் .படைப்பின்றி ஒரு மொழியில் அறிவியலை விளக்கப்புகுவது, அரங்கின்றி வட்டாடும் செயல் போன்றதேயாகும்.

கலைச்சொற் படைப்பில் மூலமாகக கருத்துச் செலுத்தவேண்டியது, அதனின் கருத்துப் பெயர்ப்பிலேயே! அக் கருத்துப் பெயர்ப்பானது முழுமூலத் திறமுடையதாக உருப்பெற வேண்டும்.

உருப்பதிப்பும் சுருக்கக் கட்டமைப்பும்

கலைச் சொல்லாக்கத்தில் கருத்துக்கு அடுத்ததாகக் கருத்துச் செலுத்த வேண்டியது கட்டாயமாகும்.

சுருக்கமான கட்டமைப்பைத் தமிழ் மொழியிற் செய்து கொள்ளுதல் மிக இயலக்கூடியதாகும். இதற்குரிய அடிப்படைக் கட்டுமானத்தை இது இயல்பாய்ப் பெற்றிலங்குகின்றது.

ஆங்கிலத்தில் பயிலப்பெறும் நெட்ட நெடிய நீட்டச் சொற்களைக் கூட நாம் நம் மொழியில் சுருக்கக் கட்டமைப்புடைய்தாகவே அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

"Pneumone ultra microscopicsilicovelcanoceniosis" என்பது ஒரு நோயின் பெயரைக் குறிக்கும் ஆங்கிலக் கலைச்சொல். ஆங்கிலத்திலேயே மிக நீண்ட பெயரிது! இதில் நாற்பத்தைந்து எழுத்துகள் உள (அ.க.19).

தூசுகளை மூச்சிழுக்கையின் காரணமாக ஏற்படும் நுரையீரல் நோய் வகைக்கு உரிய பெயரிது.

இதனைக் கருத்துப் பெயர்ப்புச் செய்கையின்போதும் - உருப்பதிக்கும் - போதும் - மிக நுண்ணிய இதன் கருத்துச் சாறத்தைக் கட்டமைப்பாக அமைத்துக் கொள்ளுவதே பொருத்தமானதாகும்.

இதனைத், "தூசிழுப்பு நோய்" என்றவாறு மட்டும் மொழியாக்கப் படுத்திவிட்டு - அச்சொல்லை விளக்கப்படுத்துகின்றபொழுது -

தூசிழுப்பு நோய் - பொது நுண்ணோக்கிற் காண்பதற்கியலாத கன்மத் தனிமம் (Silicon) மற்றும் எரிமலைத் துகள்களைப் போன்ற நுண்ணிய தூசுகளை மூச்சிழுக்கையின் காரணமாக - நுரையீரலுள் ஏற்படும் நோய்வகை'' என்றவாறு தெளிவுறக் குறிக்கலாம்.

மீவிரைவுச் சொல்லாக்க முறை

இன்றைய மிகப்பெரும் பாரிய அறிவியல் வேக வளர்ச்சிக்கு ஈடுகொடுத்து நாமும் முன்னேறிக்கொள்ள நாம் நம்மின் மொழியாற்றலை முழுக்கவும் முற்றவும் நன்கு பயன்படுத்த வேண்டிய காலத்தேவையின் முன்னர் நின்று கொண்டுள்ளோம்.

அதற்குரிய முழுத் தகுதிப்பாடும் தமிழுக்கு இயல்பாய் உள்ளது.

உலகத்தில் இன்றைக்கு வளர்ந்துள்ள எந்த அறிவியல் கருத்தையும் நாம் மிகவிரைந்து விளங்கிக்கொள்ளும் வகையில் உரிய கலைச்சொல் ஆக்கங்களை நம்மொழியில் மிக எளிதிற் செய்துகொள்ள முடியும்.

1) "குரு" - என்பது நிறத்தைக் குறிக்கும் மிக அரிய பழந்தமிழ்ச் சொல், உலக மொழிகள் பலவற்றுக்கும் இச்சொல்லின் மூலநிலை உயிர்ப்பாடுகின்றது. "குருவும் கெழுவும் நிறனாகும்மே" - என்பது தொல்காப்பிய உரியியல் நூற்பா (8:5).

நிறத்தைப் பொதுப்படவும் - சிவப்பு நிறத்தைச் சிறப்பாகவும் சுட்டும் அருமையான இக் "குரு" என்னும் சொல்லை அடியாக வைத்து. குரு + ம் +அம் > குருமம் என்றவாறான சொற்புனைவை ஏற்படுத்திக் கொண்டாலே போதுமானது. "chroma" என்னும் நிறப்பொருள் குறித்த கிரேக்கச் சொல்வழித் தோன்றிய பன்னூற்றுக்கணக்கான அறிவியல் கலைச் சொற்களை உடனேயே நாம் நம் தமிழில் செப்பமாக ஆக்கிக் கொள்ள இயலும்.

Chromascope	- குருமங்காட்டி
Chromate	- குருமளம்
Chromatic aberration	- குருமியத் திரிவூறு

Chromatic Printing - குருமியவச்சீடு
Chromatic Scale - குருமியவளவி
Chromatics - குருமவியல்
Chromatography - குருமவரைவியல்
Chromatometer - குருமமானி
Chromatophere - குருமப்பொறை
Chromatosphere - குருமப்புரியம்

2) ஒளியையும் கதிர் மண்டிலத்தையும் குறித்து வழங்கும் "எல்" என்னும் தமிழ்ச் சொல்லை அடுத்துத் தோன்றிய சொல்லான (எல்+ல் +இ) 'எல்லி' என்பதனொடு 'அம்' என்னும் ஈற்றைச் சேர்த்து (எல்லி + அம்) 'எல்லியம்' எனக்கொண்டு, "Helio" என்னும் கிரேக்கக் கலைச்சொல் வடிவத்தினின்று ஆக்கப் பெற்றுள்ள அத்துணை அறிவியற் கலைச் சொற்களையும் நாம் விரைந்தும் செப்பமாகவும் ஒரு போகாகவும் ஆக்கிக் கொள்ளவியலும்.

Heliochrome - எல்லியக் குருமம்
Heliometer - எல்லிய மானி
Helios - எல்லி
Heliostat - எல்லிய நில்லை
Heliotheraphy - எல்லியப் பண்டுவம்
Helioscope - எல்லியங்காட்டி
Helium - எல்லியம்
Heliology - எல்லியவியல்
Heliophyte - எல்லியப்புதல்

3) வெம்மைக் கருத்தில் சாறமுடைய 'தெறு' என்னும் சொல்லை அடியாக வைத்து தெறு+ம் +அம் > தெறுமம் என்றவாறான சொற்புனைவை ஏற்படுத்திக் கொண்டு Thermo என்றவாறான வெம்மைப் பொருள் குறித்த கிரேக்கச் சொல்வழித் தோன்றிய மிகப்பல கலைச் சொற்களுக்கு நேரியவான புத்தாக்கங்களை உடனே ஆக்கிக் கொள்ள இயலும்.

Therm - தெறுமம்
Thermae - தெறுமக்குளிப்பு
Thermal analysis - தெறுமப் பகுப்பாய்வு

Thermider - தெறுமத் தரவு
Thermit - தெறுமக்கலவை
Thermocautery - தெறுமவுணக்கம்
Thermochemistry - தெறும வேதியல்
Thermocouple - தெறுமக்காப்பு
Thermodynamics - தெறுமத் துனைமைவியல்
Thermoeletricity - தெறும மின்னாக்கம்
Thermometer - தெறுமமானி

4) குழிவு, கலம் ஆகிய பொருட்பாடுகளை மூலப் பொருள்களாகக் கொண்ட "Kutos" என்னும் கிரேக்கச் சொல்லினின்று திரிபெய்திய Cyto என்னும் இலத்தீனச் சொல்வழி - ஆங்கில மொழி இன்றைக்குப் பின்பற்றிவரும் இவ்வகையிலான அனைத்து அறிவியற் கலைச் சொற்களையும் தமிழில் வழங்கும் "குடம்'' என்னும் கலப்பொருட் சொல்லினின்று (குடவு + ஐ)> குடவை என்றவாறு ஒரு சொற்புனைவைச் செய்துகொண்டு உருவாக்கிக்கொள்ள இயலும்.

Cytobiology - குடவை உயிரியல்
Cytochemistry - குடவை வேதியல்
Cytochrome - குடவைக் குருமியம்
Cytocide - குடவை சிதைப்பான்
Cytoclasis - குடவையழிப்பு
Cytodiognosis - குடவை நாட்டம்
Cytology - குடவையியல்
Cytophysics - குடவைப்பூதியல்
Cytophysiology - குடவையுடலியங்கியல்
Cytosome - குடவையுடல்
Cytothesis - குடவைமீனிலை
Cytophotometer - குடவையொளிமானி

5) "Ege" என்னும் இலத்தினச் சொல் "நான்" என்னும் பொருள்பெறும் தன்மையொருமைப் பெயரைக் குறிப்பதாகும். அதனின்று தோன்றியனவே Egeism, egeist, egetism,egetist ஆகிய சொற்கள்.

இதற்குரிய ஒருபோகுநிலையுருவாக்கத்துக்கு "யான்" என்னும் தன்மையொருமைப் பெயரையே நாமும் கொள்ளலாகும்

யான் + மை = யான்மை - "யான்" என்னும் செருக்குத் தன்மை.

(மை : ஒரு பண்புப் பெயரீறு)

காண்க: "யான்மைதீர் வியாதன்" (சேதுபுராணம் விதுர.1)

Ege - யான்

"யான்" - என்னும் இச்செந்தமிழ்த் தன்மையொருமை பெயர்ச்சொல், இலக்கிய வழக்கிலேயே நிலைகுத்திப்போய் ஏட்டளவிலேயே இலங்கும் நிலைமையை மாற்றி அதனைப் பெயர்த்தெடுத்து "Ege" என்னும் சொல்லுக்கியையப் பயன்படுத்தலாம். இதனால் மரபுச் சொல்லொன்றை இயக்கத்துக்குக் கொண்டுவந்த நிலையும் அமையும். "யான்" என்பதன் வளர்ச்சித் திரிபான "நான்" என்னும் சொல் தனிப்பெற வழக்காற்றில் நிலைத்து நிற்பதால், வேறுபட்ட பொருள்தெளிவை "யான்" என்னும் சொல்லுக்குள் செறித்துவிடலாம்.

Egeism = யான்மை; யான்கோள் (-யான்மைக் கோட்பாடு)

Egeist = யான்மை + அன் > யான்மையன்

Egetism = யான் + ஆண்மை > யானாண்மை

Egetist = யானாளி (யான் + ஆளி)

இவ்வகையில் அத்துணை ஏந்தான - வசதியான மூல அடிப்படைக் கருக் கூறுகளைத் தமிழ்மொழி இயல்பாகப் பெற்றுள்ளது

அத்தகு திறவுரத்தை நாம்தாம் புறக்கணித்து வந்துள்ளோம்!

அறிவியலின் ஒளிவேக வளர்ச்சியோடு நம்மையும் பிணைத்துக்கொண்டு ஒத்தியங்கி ஒருப்படுவதற்கு இம் மீவிரைவுச் சொல்லாக்க முறைகள் விரைந்து பின்பற்றற்குரியனவாகும்.

அடிக்குறிப்புகள்

1 புள்ஒலி "கல்லென்புள்" (நற் 195 : 5).

குரங்கு ஒலி. "கல்லென் கருவிரலூகம்" (மலைபடு 207)

விழவு ஒலி "கல்லென் விழவு" (புறம் 31 : 11-12)

ஆற்றொலி. "கல்லென் பொருநை" (புறம். 387 : 34)

ஊர்மக்கள் ஒலி, "கல்லென் சேரி" (நற். 63 : 3)

"கல்லென் சீறூர்" (அகம். 63 : 13)

படையொலி "கல்லென் ஞாட்பு" (அகம். 57 : 16)

2. "செலவு ஆனாவே கலிகொள் புள்ளினம்" (புறம். 172 : 12)

2:1, "கம்பலை சும்மை கலியே அழுங்கல்
என்றிவை நான்கும் அரவப் பொருள" (தொல். சொல் : 349)

3. பார் + இ > பாரி. கார் + இ > காரி. ஓர் + இ > ஓரி. நள் + ள் + இ > நள்ளி.

4. (Kannada) Kalitana = state of being learned in martial arts, valour. (Mariappa Bhat: 1977: 408)

5. 5:1. "எண்ணெண் கலையோ ரிருபெரு வீதியும்" (சிலம்பு.14.167)

5:2. "எண்ணாண் கிரட்டி யிருங்கலை பயின்ற
பண்ணியன் மடந்தையர் . . . " (சிலம்பு. 23 : 138 - 139)

5:3. "கலையுற வகுத்த காமக் கேள்வி" (பெருங்கதை 1:35:86)

6. 6:1. சமற்கிருதத்தில் இச்சொற்கு மூலமில்லை. பொருள் நெறிப்பட்ட பயன்படுத்தமும் இல்லை. அறிஞர் மானியர் வில்லியம்சு, "இச் சொற்குரிய பொருள்விளக்கத்திற்கு முன்னீடாக - "இதன் மூலம் ஐயுறவானது" என்று குறித்திருப்பது கருதத்தக்கது.

Kalā f. (Etym. doubtful) (Monier Williams, 1899 : 261)

6:2. இருக்கு மறையில் வரும் Kalā என்ற சொல்லுக்கு, ஒன்றன் சிறிய பகுதி (முழுமையான ஒன்றின் தனிப்பகுதி) என்றவாறு மட்டுமே பொருள்கொள்ள இடமுண்டு.

(Skt) Kalā = a small part of anything, any single part or portion of a whole, esp. a sixteenth part. (R.V.VII. 47, 17.). any practical art, any mechanical fine art.

7. 7:1. அருஞ்சொற்கள் அடங்கிய அகராதி. கிறீன் சாமுவேல், 1875. நாகர்கோவில்.

7:2. சிறப்புச்சொற்கள் துணையகராதி, (பல எண்ணிக்கையின) தமிழ்நாடு அரசாங்கம்.

7:3. நுட்பச் சொல் அகராதி - மின் ஆய்வாளர் அலுவலகம், தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத்தொழில் நெறியாளர். சென்னை - 1966.

8:1. (அதிமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் பாடியது).

"அமரர்ப் பேணியும் ஆவுதி யருத்தியும்
அரும்பெறல் மரபின் கரும்பு இவண் தந்தும்
நீரக விருக்கை யாழி சூட்டிய
தொன்னிலை மரபினின் முன்னோர் போல -" (புறம். 99:1-4)

8:2. (அதிகமான் நெடுமான் அஞ்சியின் மகன் பொகுட்டெழினியை ஔவையார் பாடியது.)

"அந்தரத் தரும்பெற லமிழ்தம் அன்ன
கரும்பிலட் டந்தோன் பெரும்பிறங் கடையே"
(புறம். 392 : 19 - 21)

9. குதிரைக்குரிய பெயர்களிற் சில : பரி, புரவி, பாடலம், கிள்ளை, பாய்மா, அரி, இவுளி, மா, கோணம், கோடகம், கொக்கு, கொய்யுளை, கோடை, கந்துகம்.

10. "வெவ்வாய் வெருகினைப் பூசை யென்றலும்
குதிரையுள் ஆணினைச் சேவ லென்றலும்"
(தொல்காப்பியம் - பொருள் - மரபியல். 623: 4-5)

பேரா. உரை: குதிரையைச் சேவலென்றல் இக்காலத்தரிதாயிற்று. அதுவும் சிறகொடு சிவணாதாயினும் அதனைக் கடுவிசைபற்றிப் பறப்பது போலச் சொல்லுதல் அமையுமென்பது கருத்து.

ஒ.நோ:1."புள்ளியற் கலிமா உடைமையான" (தொல். பொருள். நற்பியல். 194:4).

2. "புள்ளியல் மான்தேர்" (சிலம்பு. கானல். 30)

சேவல்

(French) Cheval	= horse
(Italy) Cavalle	= horse

(Spanish) Caballe = horse

(Old French) Chevalier = horse-man, knight

(Anglo Norman) : Chevaler = horse-man, knight

(Middle English) Chevaler = horse-man, knight

(English) Chevalier = horse-man, knight

Cavalier = horseman, courtly gentleman.

(French) Chevalier Chevalerous (M.E) Chevalrous

(English) Chivalrous = knightly.

11. டி. டபிள்யூ சாப்மென். (மொ-ர்) மனுஷவங்காதிபாதம் - (1872)

12. டவன்தர் (மொ-ர்) இரணவைத்தியம் - யாழ்ப்பாணம் (1867)

13 : 1. "கதழ்வும் துணைவும் விரைவின் பொருள" (தொல். சொல். 8:7)

13 : 2. "துனைவு நொறிலும் விசையும் முடுகலும் வேகமும் விரைவே" (பிங்கலம்.2194)

13 : 3. துனை - விரைந்த செலவு, "துனை தேர் எந்தை" (அகம்.298 : 15)

- விரைந்த பரப்பியக்கம். "துனைவரி வண்டு" (கல். 92 : 29)

- விரைந்து பரவுமியக்கம் "துனையெரி பரந்த" (அகம். 179 : 3)

- விரைந்து வீசுமியக்கம் "துனைகாலன்ன புனைதேர்" (அகம். 251 : 7)

- செயலின் விரைவியக்கம். "துனை வெங்காளை" (அகம் : 397 : 9)

13 : 4. (Greek) Dunamis - *விசை, வேகம், ஆற்றல்.*

14.



15. கலைக்களஞ்சியம் - (9 தொகுதிகள்) பதிப்பாசிரியர் : அவினாசிலிங்கம். தமிழ் வளர்ச்சிக் கழகம் (1954 - 1963).

16. Gk. potare = (drink) potie (n) = drink
sympotes = fellow - drinker
symposion symposion
(English) symposium = drinking party:
convival meeting for conversation.

17. (Latin) banc = bench
ruptus = broken
(Italy) banca retta = bench broken
(M.L) ruined, broken or insolvent man
(Oxford Dictionary of English Etymology page: 73)

18. "மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தலொடு" (தொல். மரபி.99)

19. pneumone (pneumon) = lung; breath
ultra (prefix) = beyond, exceeding
Micro (Mikros) = minute, small by comparison,
scop (scopes) = watch, see
ic (suffix) = like, nature of
Silico (silicis) = flint
Volcano (Velcon; vulcun) = valcano
ceni (keniesis) = dust
esis (suffix) - disease
(New third edition) Webster's International unabridged Dictionary)

நூற்பட்டியல்

1. அருளி, ப. இவை தமிழல்ல - அறிவன் பதிப்பகம் - புதுச்சேரி - 9 (1982).

2. அருளி, ப. அயற்சொல் அகராதி - அறிவன் பதிப்பகம் - புதுச்சேரி-9 (1991).

3. அருளி, ப. இருவானொலி உரைகள் - அறிவன் பதிப்பகம் - புதுச்சேரி-9 (இரண்டாம் பதிப்பு) - (1990).

4. சுந்தரராசன், சு. *தமிழ்வழிக் கல்வி* - வளனரசுப் பதிப்பகம் - சென்னை -18 (1988).

5. நன்னன், ம. பொதுப் பதிப்பாசிரியர் - *ஆட்சிச்சொல்லகராதி*, நான்காம் பதிப்பு - தமிழ்நாடு அரசு - (1983).

6. பாரதியார். *பாரதியார் கட்டுரைகள்*-பூம்புகார் பிரசுரம் - சென்னை, மூன்றாம் பதிப்பு - (1988).

7. *சிலப்பதிகார மூலம்* - இளங்கோவடிகள் - சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்- சென்னை - 1. (1959).

8. *தொல்காப்பியம்-பொருளதிகாரம்-அகத்திணையியல்-புறத்திணையியல்* - நச்சினார்க்கினியர் உரை. (1975).

9. *தொல்காப்பியம் - பொருளதிகாரம் - மரபியல்.* பேராசிரியர் உரை - சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் - சென்னை - 1. (1975)

10. *பெருங்கதை* - கொங்கு வேளிர் - கமர்ஷியல் அச்சுக்கூடம்-சென்னை - (1924).

11. *வளரும் தமிழ்* - சோமலெ. வானதிப் பதிப்பகம்- சென்னை - (1988).

12. Chidambaranathachettiar - *English - Tamil Dictionary,* University of Madras - (1965).

13. Mariappa Bhat, Kittle's *Kannada - English Dictionary,* University of Madras - (1977).

14. Monier - Monier Williams - *A Sanskrit - English Dictionary,* Reprinted - Motilal Banarsidas - Delhi - (1981).

15. Onion - C.T. *Oxford Dictionary of English Etymology-* (1966).

40

ஆட்சிமொழிச் செயலாக்கம்

கோ.முத்துப்பிள்ளை

அரசு அலுவலகங்களில் நடைமுறையிலிருக்கும் மொழியை நாம் "ஆட்சிமொழி" என்று குறிப்பிடுகின்றோம். அரசு அலுவலகங்களில் பேசப்படும், எழுதப்படும் மொழியே ஆட்சிமொழி. அரசின் செயற்பாடுகள் எந்த மொழியின் வாயிலாக நடைபெறுகின்றனவோ அந்த மொழியே ஆட்சிமொழி. சுருங்கக் கூறின், அரசின் ஆட்சியை நடத்தும் மொழிதான் ஆட்சிமொழி. தமிழகத்தைப் பொறுத்தவரையில், நம் தாய் மொழியாகிய தமிழ்மொழியே ஆட்சி மொழியாகும். ஆங்கிலத்தில் Official Language என்றும் Administrative Language என்றும் குறிப்பிடுவார்கள். முன்னதை "அலுவல்முறைமொழி" என்றும் பின்னதை "நிர்வாக மொழி" என்றும் தெரிந்து கொள்ளலாம்'.

தொன்றுதொட்டுத் தமிழ்மொழியே ஆட்சிமொழியாக இருந்து வந்துள்ளது. இடையிடையே சில தொய்வுகள் ஏற்பட்டுள்ளன. வரலாற்று நிகழ்ச்சிகள், பல செய்திகளை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. இருண்ட காலங்களும் இருந்துள்ளன என்பதையும் நாம் அறிகின்றோம். எது எவ்வாறிருப்பினும் ஆங்கிலேயர் வருவதற்கு முன்னதாக நீண்ட நெடுங்காலமாகத் தமிழன்னையே தனியாட்சி புரிந்து வந்துள்ளாள். ஆங்கிலேயர் வந்த பின்னர் நிலைமை அடியோடு மாறிவிட்டது. ஆங்கிலேயர்கள் சிறிது சிறிதாக ஆங்கிலத்தைப் புகுத்திவிட்டனர். ஆங்கிலமொழி அரசு மொழியாக மாறிவிட்டது. தமிழ் மக்கள் ஆங்கில வேட்கையில் அகப்பட்டுக்கொண்டனர்.

ஏறக்குறைய இருநூற்றைம்பது ஆண்டுகள் இவ்வாறு ஓடிவிட்டன. தமிழறிஞர்கள் விழித்தெழுந்தனர். தமிழன்னையை மீண்டும் அரசு கட்டிலில் அமர்த்தவேண்டுமென்று குரல் கொடுத்தனர். இவ்வாறு குரல் கொடுத்த எண்ணற்ற பேரறிஞர்களுக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். நாடு விடுதலையடைந்த பிறகுதான் நல்ல காலம் பிறந்தது.

1956-ஆம் ஆண்டில் தமிழக அரசு ஆட்சிமொழிச் சட்டத்தைக் கொண்டு வந்து மக்களுக்கு மகிழ்ச்சியூட்டியது. "தமிழ்நாட்டு அரசின் ஆட்சிமொழி தமிழாக இருக்கும்" என்பது இச்சட்டத்தின் முக்கிய வாசகமாகும். The official language of the state shall be Tamil என்னும் சட்டவாசகம் யாவர்க்கும் எல்லையில்லா மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. ஆயினும், அந்நாளில் சட்டப்பேரவை முன்னர் இச் சட்டத்தைக் கொண்டு வந்து பெருங்கிளர்ச்சியுடன் நிறைவேற்றிய மாண்புமிகு சி.சுப்பிரமணியம் அவர்கள் உடனேயே ஓர் அறிவிப்பையும் செய்தார்கள். "இந்தச் சட்டத்தைச் சிறிது சிறிதாகத்தான் அமலாக்க முடியும்" என்று அவர் எடுத்துக் காட்டினார். ஆட்சிமொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, ஏறக்குறைய நாற்பத்தைந்து ஆண்டுகள் நிறைவுற்றுள்ள இந்த வேளையில் நாம் எந்த அளவிற்கு வெற்றி பெற்றுள்ளோம் என்று ஆராய்ந்து பார்ப்பது மிகமிகத் தேவைப்படுகின்றது. போதுமான முன்னேற்றம் ஏற்படவில்லையென்பது தெளிவாகத் தெரிவதால், அரசு எந்த அளவிற்குச் செயற்பட்டுள்ளதென்பதையும் மக்கள் எந்த அளவிற்கு ஊக்கம் காட்டியுள்ளனர் என்பதையும் நாம் நன்கு ஆராயவேண்டும். தடங்கல்கள் எவை, அவற்றிற்கான தீர்வுகள் எவை என்பதையும் கண்டறிய வேண்டும்.

அரசைப் பொறுத்தவரையில், அவர்கள் அரும்பணிகள் ஆற்றி வருகின்றனர் என்பதில் அணுவளவும் ஐயமில்லை. முதன்முதலில் 'மொழிபெயர்ப்புத் துறை" என்னும் ஒரு துறையை உருவாக்கினார்கள். இதன்மூலம், சட்டப்பேரவையில் வைக்கப்பெறும் செய்திகளைத் தமிழில் தருவதற்கு வகை செய்தார்கள். அதன்பிறகு "தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர்" என்னும் பதவியை ஏற்படுத்தினார்கள். இதன்மூலம், அரசுத் துறைகள் அனைத்தும் தமிழ்மொழித் திட்டத்தை நிறைவேற்றும் பாங்கினை ஆய்வு செய்யவும், முன்னேற்றத்திற்கான வழிகளை வகுத்துக் காட்டவும் வாய்ப்புகள் வழங்கினர். இதுவும் போதாமல், தலைமைச் செயலகத்திலே அரசுச் செயலாளர் ஒருவரை அமர்த்தித் திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்துமாறு ஆணையிட்டனர். ஆட்சிமொழி அகராதியும் துணை அகராதிகளும் வெளிவந்தன. படிப்படியான முன்னேற்றத்தின் மூலம் அனைத்துத் துறைகளும் ஆட்சிமொழித் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று ஆணையிட்டுள்ளனர். தமிழ்த் தட்டச்சுப் பொறிகளைத் தடங்கலின்றி வழங்கி வருகின்றனர். இத்தனைக்கும் பிறகு எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படவில்லையென்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

நோய் இன்னதென்று தெரிந்துகொண்டோம். நோய்க்குக் காரணங்கள் எவை என்பதை நுணுகி ஆராயவேண்டும். தடங்கல்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் குறித்துப் பழைய கதைகள் நிறைய உள்ளன. சென்னையில் நடைபெற்ற இரண்டாம்

உலகத் தமிழ் மாநாட்டிலே, ஓர் உறுப்பினர் ஒரு கருத்தினைத் தெரிவித்தார். "ஆங்கிலத்தில் ... Scheme, Plan, Project, Programme என்று நான்கு சொற்கள் இருக்கின்றன. ஆயினும், இவற்றைக் குறிப்பதற்குத் தமிழில் "திட்டம்" என்னும் ஒரேயொரு சொல் மட்டுந்தான் உள்ளது" என்று கூறினார். இவற்றிற்கு, "சமை திட்டம்", "அமைதிட்டம்", "ஆகுதிட்டம்", "செய்திட்டம்" என்னும் செப்பமான மொழியாக்கங்களை நான் கண்டுள்ளேன் என்பதைப் பெருமிதத்தோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இப்பொழுது இதைப்போன்ற இன்னொரு வினாவும் எழுந்துள்ளது. அது, Act, Bill, Code, Enactment, Law, Legislation என்னும் எல்லாச் சொற்களுக்கும் "சட்டம்" என்னும் ஒரேவொரு சொல்தானே உள்ளது என்பதாகும். இந்த ஆறு சொற்களுக்கும் அழகிய தமிழ்ச் சொற்களை அமைத்துக் காட்டலாம். சட்டம், வடிவுச் சட்டம், தொகுப்புச் சட்டம், செய்சட்டம், நாட்டுச்சட்டம், இயற்றுச் சட்டம் என்று எளிதாக அமைக்கலாம். எனினும் அண்மைக் காலத்தில் ஆங்கிலம் விறுவிறுவென்று வளர்ந்துவிட்ட காரணத்தால், அவற்றிற்கு ஈடான சொற்களை அமைப்பதற்குப் பன்னாட்கள் பிடிக்கின்றன என்பதையும் நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

ஆங்கிலத்திலிருந்து நாம் ஏன் மொழிபெயர்க்க வேண்டும், நேரடியாகத் தமிழிலே எழுதிவிட்டாலென்ன என்று கேட்கத் தோன்றும். எனினும், இன்றைய சூழ்நிலையில் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்ப்பது இன்றியமையாததாக இருக்கத்தான் செய்கின்றது. ஏனென்றால் அறிவுக் கலைகள் ஆங்கிலத்தில் நுட்பமாக வளர்ந்திருப்பதைப் போல ஆட்சிக் கலையும் நுட்பமாக வளர்ந்துள்ளது. Slender resources of the State என்னும் ஒரு தொடரை எடுத்துக் கொண்டால் ஆங்கிலத்தின் நுட்பம் நன்கு விளங்கும். "மாநில அரசின் நுண்ணிய வருவாய் வளங்கள்" என்று கூறலாம். "இடையோ நுடங்கு கொடி" என்று ஒரு கவிராயர் பாடியுள்ளார். இதில் வரும் "நுடங்கு" என்னும் சொல்தான் Slender என்னும் சொல்லுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும்.

அறிஞர் பெருமக்கள் ஆங்கிலத்தில் பேச ஆர்வம் பெரிதுமுடையவர்களாகத் திகழ்கின்றார்கள். உலக மொழியாகிய ஆங்கிலத்தில் புலமை பெறுவது தேவைதான். எனினும் தாய்மொழியாகிய தமிழைப் பேணிக் காப்பதும் நம் கடமையன்றோ? கிராமத்து மக்கள்கூட ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுவதில் பெருமை கொள்கின்றனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அரசுப் பணியாளர்கள் இன்னுங்கூட ஆங்கிலத்தில் எழுதுவது எளிமையாக இருக்கின்றது என்று எடுத்துப் பேசுகின்றனர். அதிகாரிகளுக்கு இன்றுங்கூட மனமாற்றம் ஏற்படவில்லை. ஆட்சிமொழியின் வளர்ச்சிக்கு இஃதொரு பெருந் தடங்கலாக இருந்து வருகின்றது.

அரசுத் தரப்பில் ஆட்சிமொழி அகராதிகள் வெளிவந்து கொண்டிருக்கின்றனவென்று முன்னரே கண்டோம். முதன்மை அகராதியும் துறைகளுக்கான தனித்தனி சிறு அகராதிகளும் வெளிவந்துள்ளன. இவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்து ஒரு முழுமையான, "அனைத்தும் - அடங்கிய" அகராதி (Comprehensive Dictionary) ஒன்று வெளியிடப் பெறவேண்டுமென்பது நீண்ட நாளைய கோரிக்கையாகும். இந்த அகராதி வெளிவந்துவிட்டால், எல்லாரும் உடனடியாகத் தமிழில் எழுதிவிடுவார்களென்று சொல்வதற்கில்லை. எனினும், இத்தகைய அகராதி ஒன்று வெளிவந்துவிட்டால், அனைவருக்கும் அது போதுமான ஊக்கத்தைத் தந்து நிற்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. சென்னைப் பல்கலைக்கழகம் பல்லாண்டுகளுக்கு முன்னர்த் தமிழ்ப் பேரகராதியை (Tamil Lexicon) வெளியிட்டது. 1926-ஆம் ஆண்டுமுதல் 1936-ஆம் ஆண்டு வரையில் ஆறு தொகுதிகள் வெளிவந்தன. அதன் பின்னர் 1938-ஆம் ஆண்டில் ஏழாவது தொகுதி வெளிவந்தது. அதன்பின்னர் ஏறக்குறைய ஐம்பத்தைந்து ஆண்டுகளாகத் திருந்திய பதிப்பு எதுவுமில்லை. ஒளிநகல் (Photostat copy) மட்டும் உலா வந்து கொண்டுள்ளது. ஆங்கில - தமிழ் அகராதி ஒன்றைச் சென்னைப் பல்கலைக்கழகம் 1965-ஆம் ஆண்டு வெளியிட்டது. அதன்பிறகு இந்த அகராதிக்கும் திருந்திய பதிப்புக் கிடையாது. இந்த அகராதிகளின் திருந்திய பதிப்புகள் வெளிவந்திருந்தால், ஆட்சிமொழிப் புதுச் சொற்களும் அவற்றில் இடம் பெற்றிருக்கக்கூடும். ஆட்சிமொழி வெற்றிபெற ஆயிரம் தடங்கல்கள் முன்னிற்கும் போலும்!.

ஒரு புதிய சொல் அமைவதற்கும் ஆட்சிக்கு வருவதற்கும் ஆண்டுகள் பல தேவைப்படுகின்றன என்பதை எளிதில் தெரிந்து கொள்ளலாம். Dearness Allowance என்னும் தொடரை, முதலில், "பஞ்சப்படி" என்று மொழி பெயர்த்தார்கள். பஞ்சப்படி என்று சொன்னால் அது Famine Allowance என்று ஆகிவிடுமெனத் தெரிந்த பிறகு, அதைக் "கிராக்கிப்படி" என்று மாற்றினார்கள். இதுவும் சரியாக அமையவில்லை. கடைசியாக "அகவிலைப்படி" என்னும் அருமையான மொழிபெயர்ப்பு அமைந்தது. Quorum என்னும் சொல்லை எடுத்துக் கொள்வோம். இதைக் "கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு" என்று மொழிபெயர்த்தார்கள். ஆட்சிமொழிக் காவலர் கீ.இராமலிங்கனார் "கோரெண்" என்று சுருக்கமாகக் கூறினார். எல்லாரும் ஏளனம் செய்தார்கள். "கோரப்படுகின்ற எண்ணிக்கை" என்று இராமலிங்கனார் கொடுத்த விளக்கம் சிறிதும் எடுபடவில்லை. ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னர்க் "கோரெண்" என்னும் அழகிய மொழிபெயர்ப்பு அரசு ஆட்சிமொழி அகராதியில் இடம் பிடித்துக் கொண்டது. பதவியில் இல்லாதவர்கள் ஒரு நல்ல மொழி பெயர்ப்பைக் கொடுத்துவிட்டால் அதை அரசின் அதிகாரிகள் ஏற்பதில்லை. இதுவும் ஒரு பெருந் தடங்கலாகும்.

ஐம்பது ஆண்டுகள் ஓடிவிட்டன. இனிமேல் நாம் செய்யக்கடவது என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். ஆட்சிமொழி என்பதால் அரசுக்குப் பெரும் பொறுப்பு இருக்கத்தான் செய்கின்றது. இனிமேல், அரசுச் சார்பிலே தண்டனை முறையைப் பின்பற்றலாம், அல்லது ஊக்கமூட்டும் முறைகளைச் சிந்தித்துப் பார்க்கலாம். அரசுப் பணியாளர்களுக்கு இரண்டு ஊதிய வளர்ச்சி முன்னதாகக் கொடுக்கப்படும் (two advance increments) என்று அறிவித்துவிட்டால் எல்லாருமே இனிய தமிழில் எழுத முன் வந்துவிடுவார்கள். பொதுமக்களும் போதுமான அளவு ஆர்வங்காட்ட வேண்டும். ஆட்சிமொழிச் சொற்களை அனைவர்க்கும் தெரியும்படியாக விளம்பரம் செய்யலாம். அவர்களின் சிந்தனைகளைத் தூண்ட அரசும் முயற்சி செய்யலாம். இன்று ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் ஒரு சில துறைகளே உவகையுடன் பணிபுரிகின்றன. பல்வேறு துறைகள் பதுங்கி வாழ்கின்றன.

இந்நிலையில் தீவிரமான திட்டம் தேவை என்பது வெள்ளிடை மலையாகும். தகுதி, திறமைகள் மேலிருந்து கீழிறங்கும் தன்மையுடையன என்று கூறுவார்கள். அரசுத் தலைமைச் செயலகந்தான் எல்லாத் துறைகளுக்கும் தலைமையகம். தலைமைச் செயலகத்திலே இன்று தமிழ்க்காற்று நன்கு வீசவில்லை. மிகப்பெரும்பான்மையோர் வழக்கம்போல், இன்னும் ஆங்கிலத்திலேயே எழுதிக் கொண்டுள்ளனர். தலைமைச் செயலகத்திலேயிருந்து பிறப்பிக்கப்படும் ஆணைகள் ஆங்கிலத்திலேயே அலைமோதி வருகின்றன. தலைமைச் செயலகம் மாறிவிட்டால், தமிழகத்தின் அத்தனை அரசுத் துறைகளும் மாறிவிடுமென்பது திண்ணம். எனவே வருகின்ற பத்தாண்டுக் காலத்திற்குத் தலைமைச் செயலகத்திற்குப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போதெல்லாம், தமிழில் எம்.ஏ., பட்டம் பெற்றவர்களை மட்டுமே தேர்ந்தெடுப்போம் என்னும் துணிகர முடிவினை எடுத்தல் வேண்டும். தமிழகத்துத் தமிழ் எம்.ஏ. பட்டதாரிகள் வேலை வாய்ப்பின்றி வேதனையில் மூழ்கிக் கிடக்கின்றனர். "ஒரு கல்லில் இரண்டு மாங்காய்" என்னும் முறையில் அவர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும், ஆட்சித் தமிழ்த் திட்டமும் அமோக வெற்றிபெறும்.

நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் - குறள் 948.

41

அடுத்த நூற்றாண்டின் அறிவியல் தமிழ்: கருத்தும் எழுத்தும்

நெல்லை சு.முத்து

1.1 முன்னுரை

அறிவியல் என்பது வாழ்வின் நடைமுறை அனுபவங்களிலிருந்து பெறப்படும் காரிய காரண விளக்கங்களின் வகைப்பாடும், அவ்விளக்கங்கள் உணர்த்தும் உண்மைகளின் தொகைப்பாடும் ஆகும்.

அறிவியல் உண்மைகளிலிருந்து மனிதன் செயற்கையாக உருவாக்கும் பொருள் சேர்ந்த வளர்ச்சி நுட்பங்களிலிருந்து தொழில் நுட்பவியல் பிறக்கிறது.

இந்தத் தொழில் நுட்பவியல் மானிட இனத்திற்கு விளைவிக்கும் நன்மையும் தீமையும் கருதிப் பயன்பாடு எழும் என்க.

அறிவியல் - தொழில்நுட்பம் - பயன்பாடு (Science - Technology - Application) ஆகிய மூன்று களங்களில் விரிவடையும் தகவல், கருத்துக் கோர்வைகளை விவரிக்கும் தமிழ் - 'அறிவியல் தமிழ்'.

உட்பெருக்கமும், அழுத்தமும் அதிகரிக்குந் தருணத்தில் எப்பொருளும் விரிவடைவதும், உடைபடுவதும், பிரிந்து சிதைவதும் எல்லாம் கதிரியக்க இயற்பியலில் மட்டுமன்றி வாழ்வியலிலும், மதங்களிலும், கட்சி அரசியலிலும் எங்கும் கண்கூடு. ஆதலின், இன்று அறிவியல் தமிழாக (Scientific Tamil) மலர்ந்துள்ள நம் தாய்மொழி அடுத்த நூற்றாண்டின் தொழில்நுட்பத் தமிழாக (Technological Tamil), பயன்பாட்டுத் தமிழாக (Applied Tamil) பரிணமித்து வருகிறது. இதன் கருத்து மற்றும் எழுத்து வடிவங்களை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கம்.

1.2 அறிவியல் தமிழ்-கருத்து

அறிவியல் தத்துவார்த்தமானது; உலகளாவியது. இனம், மொழி, மதம், இடங்களாகிய வட்டாரங்களுக்கு அப்பாற்பட்டது. மனிதன் சிந்திக்கத் தொடங்கிய அன்றே அறிவியல் மலர்ந்துவிட்டது எனலாம்.

நிலம், தீ, நீர், வளி, விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் (தொல். மரபியல் 91-92)

என்றார் தொல்காப்பியனார்.

மண் திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீயொடு முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை (புறம். 2:1-6)

என்கிறார் சங்கப் புறநானூற்றுப் புலவன் முரஞ்சியூர் முடிநாகராயர். மண் அடர்ந்த நிலம், நிலம் தாங்கிய வானம், வானில் நிறைந்துள்ள காற்று, காற்று நின்றெரிக்கும் நெருப்பு, நெருப்புக்கு முரணான நீர் என்று அருமையான அந்தாதிப் பொருள் தோன்ற வருணிக்கப்படுகின்றன பஞ்ச பூதங்கள்.

அன்றைய தமிழர் இயற்பியல் கற்றிருந்ததாக வாதிடத் தேவையில்லை, என்றாலும் இன்று நாம் கண்டறிந்துள்ள பொருட்களின் நிலைகள் தாம் இவை என்பதில் ஐயமில்லை.

திட, திரவ, வாயு நிலைகள் கடந்த நான்காவதான பிளாஸ்மா (Plasma) என்னும் மின்ம நிலை பற்றியே பலரும் பேசி வருகின்றனர். இவற்றையும் கடந்து வெறுமம் (Vacuum) என்கிற வெற்றிட நிலையும் சேர்ந்ததே இன்று இயற்பியலார் வழங்கும் பஞ்சபூதங்கள்.

நிலம்	- திண்மம் (Solid)	.. மூலக்கூறுகள் செறிந்த நிலை.
நீர்	- நீர்மம் (Liquid)	.. மூலக்கூறுகள் அடர்வு குறைந்த நிலை.
காற்று	- வளிமம் (Gas)	.. மூலக்கூறுகள் செறிவற்றுப் பரந்த நிலை.
நெருப்பு	- மின்மம் (Plasma)	.. அணுக்கூறு நிலை.
வான்	- வெறுமம் (Vacuum)	.. மின் துகள்கள் அங்கிங்காகப் படர்ந்த நிலை.

அடர்த்திக் கூடிய பொருண்மையிலிருந்து பொருள் திரிவற்ற ஆற்றல் நிலையைத் தான் $E=mc^2$ என்கிற சமன்பாட்டில் வரையறுத்தான் ஐன்ஸ்டீன். உண்மையில் அறிவியல் தமிழ் இலக்கியங்களில் செறிந்துள்ளதாக எடுத்துரைப்பதும் நம் கடன். ஏதோ பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுவாக்கில் ஐரோப்பியக் கருவறையில் உதித்ததே அறிவியல் என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருப்பது தமிழறிஞர்க்கு அழகல்ல. கருத்தோட்டம், சிந்தனை வீச்சு என்கிற அளவில் அந்நாளைய மொழிப் பக்குவத்தில் உணர்த்தப் பெற்ற உண்மைகளை இன்றைய நடப்புக்கேற்ப அங்கீகரித்தல் அறிவியல் தமிழ் ஆய்வுப் பணியாகும். சான்றாக, ஃபெர்டினன்டு டி சசூர் பற்றிப் பிரஸ்தாபிக்கும் அறிஞர்கள் தொல்காப்பியரின் அக்காலத்திய மொழியியல் பெருமையினை உலகறியச் செய்ய முயல வேண்டுமல்லவா?.

இன்று மேனாட்டறிஞர்கள் வாய்மொழியாக உதிர்த்த விஞ்ஞான விதிகளையே நம் முன்னோர் பாடல்களாகவும், பாசுரங்களாகவும் அறநெறிச் செய்யுளாகவும் படைத்துச் சென்றனர் என்பதே உண்மை.

தத்துவ மலர்ச்சியே "புதிய தத்துவ" (New Philosophy) மாகி அறிவியலானது மேனாட்டில்! அறவியலே மருவி அறிவியல் உண்மைகளுக்கு இடமளிக்கிறது நம் நாட்டில்!

உடலில் ஏதேனும் கட்டி புறப்பட்டால் அதன் துர்நீர் உடல் முழுவதும் பரவி குருதியினைக் கெடச் செய்து விடும். அதனால் அக்கட்டியினை அறுத்துச் சீழ் களைந்து, கெட்ட ரத்தத்தையும் பீற்றி வெளியேற்றி விட வேண்டும். அதன் பின் ஒரு சூட்டுக் கோலால் அந்தக் கட்டி இருந்த இடத்தையும் சுட்டுக்கரித்து - அந்தப் புண் ஆற வேறொரு மருந்தினைத் தடவ வேண்டும் (லேசர் கதிரால் குறிபார்த்து சுட்டுப் புண் ஆற்றுகிறோம் இன்று).

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன்

(நாலாயிரத் திவ்விய பிரபந்தம், பெருமாள் திருமொழி 5:4)

என்கிறார் குலசேகராழ்வார்.

கம்பராமாயணம் யுத்தக் காண்டம் காட்டும் சிகிச்சை முறையும் இது.

உடலிடைத் தோன்றிற் றொன்றை
அறுத்(து) அதன் உதிரம் ஊற்றிச்
சுடலுறச் சுட்டு வே றோர்
மருந்தினால் துயரம் தீர்வர்

(கம்ப. யுத்தம். கும்பகர்ணன் வதைப்படலம் பாடல் 146 : 1-2).

நம் நாட்டு இலக்கியங்கள், புராணங்கள் அன்றைய அறிவியலின் புறவடிவங்கள், வாழ்வியல் அகவடிவங்கள்.

இந்துமத வேதங்களும், விவிலியமும், குரானும் முதலாவது உயிரினும் கடலில் தோன்றியதை ஏற்றுக் கொள்கின்றன. இன்றைய டார்வின் பரிணாம உண்மையும் இது தானே!

திருமாலின் அவதாரங்கள் மச்சம், கூர்மம், வராகம் எனப் படிப்படியாக நீரிலிருந்து கரையேறி, நரசிம்மமாக உடல் பாதி மனிதனாகப் பரிணமிப்பதை வெறும் புனைகதையாக ஒத்துக் கொள்ள இயலவில்லை. இதே மாதிரியான கிரேக்கக் கட்டுக் கதைகளில் அறிவியல் என்று அகழ்ந்து வழங்கியனவற்றைத் தானே இன்று கூசாமல் ஏற்றுக் கொள்கிறோம்.

மேனாட்டு அறிவியல் விதிகளை, தத்துவங்களை இன்று அவரவர் சொல்லாட்சிகளில் புகட்டுவதில் பெருமையில்லை. இந்திய அறிவியல் வரலாற்றினை உலகினுக்கு விளம்புவதோடு இவ்வுண்மைகளின் மூலங்கள் நம் நாட்டைச் சார்ந்தவை எனவும் தயங்காமல் எடுத்துரைக்க வேண்டும்.

'குவாண்டம் பிசிக்ஸ்' (Quantum Physics) என்கிற ஆற்றல்கட்டுக் கொள்கை இயற்பியல், குவார்க் (Quark) துகளெல்லாம் நம் முன்னோர் கருவி வழி கண்டிருக்கவில்லை. அஃதாவது தொழில் நுட்பம் இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் அறிவார்ந்த கருத்தோட்டம் இருந்தது திண்ணம்.

1.3 தொழில் நுட்பத் தமிழ்

இன்று நாம் வாழ்வியல் வசதிக்கேற்பக் கண்டுபிடித்துள்ள எளிய இயந்திரங்கள், உபகரணங்கள், கருவிகள் அனைத்துமே பலநாட்டுத் தொழில் நுட்ப வளர்ச்சியின் விளைபொருட்கள். நாம் அவற்றைப் பெரும்பாலும் பின்பற்றவோ, கையாளவோ, பயன்படுத்தவோ அன்றி அதன் வழி முன்னேற்றம் காணவும் மட்டுமே முயன்று வருகின்றோம். புதிதாக ஒன்றைக் கண்டுபிடிக்க முனைவதில்லை. காரணம் நாம் தமிழ்வழி சிந்திக்க மறுக்கிறோம். ஆதலின், அந்நியச் சொற்களை கடன் வாங்கவும் தேவைக்கேற்பத் தமிழாக்கவும் முனைப்பாகச் செயல்பட்டு வருகின்றோம்.

தூய அறிவியலை (Pure Science) "அறிவொளி" என்றால் பயன்பாட்டு அறிவியலை (Applied Science) "பயன்கனி" எனலாம்.

அறிவொளி என்பது சிந்தனை சார்ந்தது. பயன்கனி என்பது தொழில் திறன் சார்ந்தது.

முன்னது மெல்லறிவியல் (Soft Science); பின்னது வல்லறிவியல் (Hard Science)

அமெரிக்க வாஷிங்டன் பல்கலைக்கழகம், இங்கிலாந்துஅரசவைச் சங்கம் (Royal Society) போன்றவை மேனாடுகளில் நடத்திய வாக்கெடுப்பு வரலாற்றுக் குறிப்புகளின்படி முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அங்கெல்லாம் பயன் "கனி"க்குத் தான் ஆதரவு அதிகமிருப்பதாகத் தெரிந்ததாம். இந்தியாவிலும் தமிழகத்திலும் இதே நிலை தான் இன்று.

நம்மிடை அறிவியலின் 'ஒளி' வேண்டும் என்றாலும், 'கனி' வேண்டும் என்றாலும் நம் மொழி வளர வேண்டும்.

ஏதாயினும் கணிதவியல், இயற்பியல், வேதியல், உயிரியல், பொறியியல், மருத்துவம் முதலான நவீன துறை சார்ந்த தொழில் நுட்பங்களைத் தமிழர்க்கு அறிமுகப்படுத்தும்போது கலைச் சொல்லாக்கம் பற்றிய சிந்தனை துளிர்விடுகிறது.

1.3.1 கலைச் சொல்லாக்கம்

அறிவியல், தொழில் நுட்பக் கலைச் சொல்லாக்கத்திற்கு அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகத்தின் முதலாவது கருத்தரங்கிலும் (செப்டம்பர் 1988)-தமிழக அறிவியல் பேரவையின் இரண்டாவது கருத்தரங்கிலும் (நவம்பர் 1993) நாம் ஏற்கனவே வலியுறுத்திய வகைமுறைகளை மீறி அறிவியல் தமிழ்ப்படைப்பாகக் கட்டமைப்பினையும் இங்கு நினைவுகூரலாம்.

1. மொழிபெயர்ப்பு (Translation)
2. ஒலிபெயர்ப்பு (Transliteration)
3. வரிபெயர்ப்பு (Transcription)

ஆகிய முந்நிலைகளுக்கு அப்பால் அறிவியல் தமிழ்ப் படைப்பாக்கம் (Transcreation) அடுத்த நூற்றாண்டில் முதன்மை பெறும்.

1.3.1.1 மொழிபெயர்ப்பு

தாவர இயல், உடற்கூறியல், உடலியங்கு இயல், உயிரியியல், மரபியல், பொறியியல் ஆகிய துறைகளில் புழங்கும் மரபான அனைத்துத் தமிழ்ப் பெயர்ச் சொற்கள், பண்புபெயர்கள் மட்டுமன்றி ஏனை வினைப்பெயர்கள், காலப்பெயர்கள் ஆகியனவற்றையும் தமிழில் மொழிபெயர்த்தல் எளிது. புதிய கலைச் சொற்கள் தேடி அலைய வேண்டுவதில்லை. வழக்குச் சொற்கள், இலக்கிய மரபுச் சொற்கள்,

பழமொழி சொல்லாட்சிகள், புராண இதிகாசப் பெயர்கள், இயற்கைப் பொருள் பெயர்கள், அறிஞர் பெயர்கள் முதலானவற்றால் அழுத்தமுறும் இயல்பான மொழியாக்கம் அடுத்த நூற்றாண்டிலும் தொடரும்.

1.3.1.2 ஒலிபெயர்ப்பு

ஆயின், வேதிமப் பெயர்கள், மருந்துப் பெயர்கள், தலப் பெயர்கள், ஆள்பெயர்கள், பன்னாட்டு அளவைப் பெயர்கள் போன்ற அனைத்துமே மேலைச் சொற்களின் ஒலி பெயர்ப்பாதல் சிறப்பு. இதன்வழி எதிர்காலத்தில் இந்திய நாட்டின் வேறு மாநிலங்களில் அறிவியல் கருத்து பரிமாற்றத்திற்கு மட்டுமன்றி உலகின் எந்த மூலையிலும் தமிழறிஞரோடு அறிவியல் கருத்தாட இயலும்.

1.3.1.3 வரிபெயர்ப்பு

அறிவியல், தொழில் நுட்பத் தமிழ் யாரால் யாருக்கு எழுதப்படுகின்றது எனும் நோக்கமும், ஆக்கமும் மிக முக்கியம். அறிவியலார் அல்லது பொறியியலார்-ஆய்வேடு, உயர்ந்த ரகத் தொழிற்நுட்பக் கருத்துரை அல்லது பயிற்றுரை எழுதும் பட்சத்தில் அயல் மொழி வரிவடிவங்களையும் தமிழில் குறியீடுகளாக தடம்பிறளாமல் எடுத்தாள நேரும்.

இத்தகைய கலைச்சொல்லாக்கத்தின் உதவியினால் தீட்டப் பெறும் படைப்பாக்கமே அனைவருக்கும் செவ்விய பயன் நல்கும். சுருங்கக் கூறின் ஒலி பெயர்ப்பால் இந்திய செந்தரச் சான்றிதழும் (ISI - Indian Standards Institute) வரிபெயர்ப்பால் பன்னாட்டு செந்தரச் சான்றிதழும் (ISO - International Standards Organisation) அறிவியல் தமிழுக்கு வாய்க்கும்.

1.4 பயன்பாட்டுத் தமிழ்

அறிவியல் தமிழாக அரும்பி, தொழில் நுட்பத் தமிழாக மலர்ந்து பயன்பாட்டுத் தமிழாக மணம் வீச இன்று நாம் வழங்கிவரும் அறிவியல் தமிழின் கோளமைப்பினை (Scientific Tamil Sphere)ப் புரிந்து கொள்ளுதல் நலம். (காண்க: படம் 1)

1.4.0 பயனாளர் தர மதிப்பீடு

இயற்றப்படும் அறிவியல் தமிழால் பயன்பெறுவோர் குறித்துத் தெளிவான முன் சிந்தனையும் கட்டுக்கோப்பாக அமைதல் நலம். அவ்வாறே மொழிநடையில்-மொழி பெயர்ப்பு, ஒலிபெயர்ப்பு, வரிபெயர்ப்புச் சொற்கள் கலப்பு விகிதமும் பெரும்பங்கு வகிக்கிறது (படம் - 2).

1.4.10 அறிவியல் துணுக்குகள் (Science Tit-bits)

இதழ்களில் துணுக்குச் செய்தி எழுதுபவர்கள் பெரும்பான்மை வாசகராகவே இருப்பதால் அவர் படைக்கும் அறிவியல் நறுக்குத் துக்கடாக்கள் பிழையானதாகவும் நம்பகத் தன்மையற்றதாகவும் தெளிவில்லாததாகவும் இருக்க வாய்ப்புண்டு. ஒரு வேளை பாமரருக்கு இவை உகந்ததாகலாம்.

1.4.9 தகவல் குறிப்புரை (Data Notes)

அறிவியல் அறிஞர், பேராசிரியர், இதழாசிரியர், நூலாசிரியர், அன்றி செய்தியாளர் பல்வேறு நூல்களிலிருந்து திரட்டி எழுதிடும் தகவல் குறிப்புகளை அறிவியல் தமிழாக அங்கீகரிக்க இயலாது. இவர்கள் மொழிபெயர்ப்பை விடவும் ஒலிப்பெயர்ப்பில் அதிக நாட்டம் உடையவர். ஏனெனில், ஆங்கிலச் செய்திகளிலிருந்து நகலெடுப்பது இவர்க்கு எளிதில் கைவரும். ஆயின், சராசரி வாசகருக்கு இதுவே போதுமான அறிவியல் தமிழ்.

1.4.8 செய்திக் கட்டுரை (News Article)

இதழ்கள், பத்திரிகைகளில் அறிவியல் தமிழ் பெரும்பாலும் நிருபர்கள் வழி சேகரித்து எழுதப்படுவதால் அவற்றின் நம்பகத்தன்மை முழுமையாக இராது. அறிவியல் ஆர்வமிக்க இதழாளர்கள், அறிவியல் எழுத்தாளர்கள் படைக்கும் அறிவியல் செய்திக்கட்டுரைகளே அறிவார்ந்த வாசகருக்கும், ஆரம்ப நிலை மாணவருக்கும் பயன் தருவதாகும். இச்சூழலில் மட்டுமே அறிவியல் தமிழ் செய்தித்தளத்திலிருந்து பாடத்தளத்திற்கு உயரும்.

(ஆயின் இன்று சில ஏடுகள் செய்தித் தளத்தினின்று ஆய்வுத்தளத்திற்கு ஒரே தாவலாகப் பாய்ந்து எடுத்துரைக்கும் பாங்கில் ஆங்கிலச் சொற்களை அடைப்புக் குறிகளுக்குள் இடாமல் நேரடியாகவே தமிழ்க் கட்டுரைகளில் வெளியிட்டும் வருகின்றன. இதனை "அவசரத் தமிழ்" என்று சுட்டலாம்).

1.4.7 ஆரம்ப வகுப்பு பனுவல் (Primary Standard Text)

பள்ளி ஆரம்பநிலை வகுப்புகளுக்குரிய பாடக் கட்டுரையில் மொழிபெயர்ப்பு இன்னும் சிறப்பாக எளிமையாக அமைதல் வேண்டும். குழந்தைப் பாடல்கள் வடிவிலும் அறிவியலை எடுத்துரைக்கலாம். தேவையானால் மட்டுமே ஒலிப்பெயர்ப்புச் சொற்கள் இன்றியமையாத இடங்களில் கையாளப்படலாம். வரிபெயர்ப்பினை உதறிவிடல் வேண்டும். ஆயின் வரைபடங்கள் சேர்க்கப்படுவது அவசியம்.

1.4.6 நடுநிலைப் பனுவல் (Middle School Text)

பாடநூல் கல்வியாளர்கள் மற்றும் பேராசிரியர்களால் எழுதப்பெறும் நடுநிலைப் பாடக் கட்டுரைகள், மொழிபெயர்ப்பையே அதிகம் உட்கொண்டிருக்கும், கூடிய மட்டும் ஒலிபெயர்ப்புச் சொற்கள் மிகக் குறைந்த அளவிலும், வரிபெயர்ப்பு தேவைக் கேற்பவும் அமையும்.

1.4.5 உயர்நிலைப் பனுவல் (High School Text)

அறிஞர் மற்றும் பேராசிரியர்களால் கல்லூரி மற்றும் உயர்நிலைப் பள்ளி மாணவர்க்கென்று எழுதப்படும் பாடக் கட்டுரைகளில் மொழிப்பெயர்ப்பே விஞ்சி நிற்க வேண்டும். ஒலிபெயர்ப்புச் சொற்களை மிதமாகவும், தேவைக்கேற்பவுமே கையாளவேண்டும். வரிபெயர்ப்புக் குறியீடுகள் வேதிய, கணிச் சமன்பாடுகள் ஆய்வேடுகளில் இடம்பெறுவதில் பாதியளவாகவும் இருக்கலாம்.

தவிரவும் இத்தளத்தில் உயர்நிலைப்பள்ளி மாணவருக்கு ஏட்டுப் பாடம் அதிகரித்து வகுப்பறைக் கேள்விப்பாடம் சற்றுக் குறைந்து, பரிசோதனைக் கூடங்களில் செய்முறை வகுப்புகளும் குறிப்பிடத்தக்கதாக அமையும். ஆயினும் முழுநேர ஆய்வு மாணாக்கர் அல்லது தொழில் நுட்பப் பயிலக மாணவரைப் போன்று அதிகநேரச் செய்முறை வகுப்புகள் உயர்நிலைப்பள்ளி மாணவர்க்கு அமைவதில்லை.

1.4.4 அறிவியல் ஆய்வறிக்கை (Scientific Report)

பல்கலைக்கழகப் பேராசிரியர் தமது முனைவர் பட்டத்திற்குத் தமிழில் எழுதும் அறிவியல் ஆய்வேடு மற்றும் ஆய்வரின் தொழில் நுட்ப அறிக்கை (Technical Report) ஆகியவற்றில் மொழிபெயர்ப்பும் ஒலிபெயர்ப்பும் சம தகுதியுடனும், வரிபெயர்ப்பு அதில் பாதியளவாகவும் இடம் பெறலாம். இது ஆய்வு மாணவர்க்கும், கல்லூரி விரிவுரையாளருக்கும் உதவுமாறு எழுதப்படுவதாகும்.

பாடத்தளத்தின்று அறிவியல் தமிழ் ஆய்வுத்தளத்திற்கு உயரும் தறுவாய் இது. அதாவது மாணவர் வகுப்பறைப் பாடங்களோடு கூடவே பெரிதும் பரிசோதனைக்கூட ஆராய்ச்சிகளில் ஈடுபடும் தருணம். இந்நிலையே பின்னர் அறிவியல், தொழிற்கூடங்களில் பயின்று மக்கட் பயன்பாட்டுக்குரிய ஆய்வுகளில் முனையும் செம்மாந்த உச்சநிலையாகும்.

1.4.3 தொழில் நுட்ப விரிவுரை (Technical Lecture)

ஆய்வுக்கூடங்களில் அறிவியலார் அல்லது தொழில் நிபுணர் ஊழியருக்குத்

தொழில் நுட்பத்தினைப் போதிக்கும்போது மொழிபெயர்ப்பினை விட மும்மடங்கு ஒலிபெயர்ப்புச் சொற்களையும், மொழிபெயர்ப்பின் அதே மடங்கு வரிவடிவ எழுத்துக் குறியீடுகளையும் பயன்படுத்தி விளக்குகின்றனர் என்பது ஒரு பொதுவான அலசல்.

1.4.2 தொழில் நுட்பப் பயிற்றுரை (Technical Instruction)

தொழிற்சாலைகளில் அன்றி தொழிலகப் பயிற்சிக் கூடங்களில் பயிற்றுநர் வழங்கும் தொழில் நுட்பப் பயிற்சியின்போது பொதுவாக மொழிபெயர்ப்புச் சொற்களை விட ஒலிபெயர்ப்புச் சொற்களே அதிகம்; சுமார் நான்கு மடங்காக இருக்கும். வரிபெயர்ப்பும் போதிய அளவில் இடம் பெறும்.

1.4.1 தொழில் நுட்பக் கலந்துரை (Technological Deliberation)

அறிவியலார் அல்லது பொறியியலார், கல்வியாளர் மற்றும் பத்திரிகையாளருடன் கருத்துப்பரிமாறும்போதும், தொழில்நுட்பக் கருத்தரங்குகளில் பிறதுறைத் தொழில்நுட்பவாதியருடன் விவாதிக்கும்போதும், உயர்ந்த ஆய்வருடன் கலந்துரையாடும்போதும் மொழிபெயர்ப்பை விட ஒலிபெயர்ப்பே ஏழுமடங்காகவும், வரிபெயர்ப்போ மொழிபெயர்ப்புக்கு இரட்டிப்பு அளவிலும் இடம்பெறக் காணலாம். தமிழில் மட்டுமின்றி ஏனைய மொழிகளிலும் இந்தப் பொதுத்தன்மை புலப்படுகிறது.

இனி, இன்று நாம் எதிர்கொண்டுள்ள அறிவியல் தமிழ்க் கருத்தாக்கச் சிக்கல்களை தீர ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்.

அறிவியல் படைப்பாக்க முக்கோணத்தில் (படம்-2) மேலே விவரித்த 10 நிலைகளில் கையாளப்பெறும் மொழிபெயர்ப்பு, ஒலிபெயர்ப்பு மற்றும் வரிபெயர்ப்புகளில் விகிதாச்சரப்புள்ளிகள் இடம் பெறுகின்றன. அதன் வரைபடக் கோட்டினுள் அடைப்பட்டுள்ள "அறிவியல் தமிழ்" அடுத்த நூற்றாண்டில் முக்கோண வலது மூலைக்கு நகர்ந்தால் தமிழ் தமிழாகப் பிழைக்கும். அன்றி, மேல் மூலைக்கு ஏறினால் தமிழில் எழுதப்பெறும் அந்நிய ஒலிப்பெயர்ப்புச் சொற்களே அறிவியல் தமிழினை ஆக்கிரமிக்கும். எனினும் தமிழ்மொழி எழுத்துக்களாவது அங்கு பிழைக்கும். மீறி அவ்விரண்டு நிலைகளுக்கு அப்பால் முக்கோணத்தின் இடது மூலைக்கு நகர்ந்தால் தமிழ் என்கிற பெயரில் அயல் எழுத்துக்களே நிலைபெறும்.

மொழிபெயர்ப்பு, ஒலிபெயர்ப்பு, வரிபெயர்ப்பு ஆகிய மூன்று நிலையிலான கலைச்சொற்களின் சரிவிகிதக் கலப்பினப்படுத்தலே (Rationalisation /

Proportionalisation) இன்று நம் தேவை.

2.1 எழுத்து முன்னுரை

இன்று தமிழ் அறிந்த மூதறிஞர் பலருக்கும் கணிப்பொறி தெரியாது. கணிப்பொறி அத்துப்படியான நம் இளைஞர்கள் அநேகருக்குத் தமிழ் தெரியாது. இத்தகைய விநோதமான சூழலில் தான் இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டு நுழைவாயிலில் பரிதாபமாக நிற்கிறோம் நாம்! ஆயினும் தொழில் நுட்பக் கருவியான கணினிக்கும், கலாச்சாரக் கருவியான தமிழுக்கும் மணப்பொருத்தம் அவ்வளவு சாமானியமல்ல!

கன்னித்தமிழ் கணிப்பொறியினை மணந்து கணினித் தமிழாக மாறும்போது கணினி நம் வீட்டு மாப்பிள்ளையாக இருக்க வேண்டுமே அன்றி, கணினியிடம் சோரம் போகக் கூடாது. ஆயின், தமிழும் பிறந்த வீட்டுப் பெருமை பேசாமல் நடந்து கொண்டால் நம் பாக்கியம்! சுற்றி வளைத்துச் சொல்வானேன்! கணினிக்கேற்ற தமிழ்! தமிழுக்கேற்ற கணினி! இன்று நம் தேவை இந்தப் பரஸ்பர இணக்கம். ஆம், கணிப்பொறி தமிழ் அச்செழுத வேண்டும். தமிழ் வாசிக்க வேண்டும். தமிழ் பேச வேண்டும். தமிழைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழின் ஆணைத் தொகுப்புக்கு உகப்ப நடந்து கொள்ள வேண்டும். கையிலெடுத்துச் செல்ல தக்கதாய் இருக்க வேண்டும். அனைத்தினும் மேலாக "நிறுவனத்துக்கோர் கணிப்பொறி"! என்கிற நிலைமாறி "மேசைக்கோர் கணிப்பொறி" வந்து விட்ட வளர்ச்சியில் இனி வீட்டுக்கோர் கணிப்பொறி, ஆளுக்கோர் கணிப்பொறி என்னும் நிலை நடைமுறைக்கு வர வேண்டும்.

தேசீய நீரோட்டத்தில் இந்த இருபதாம் நூற்றாண்டின் விளிம்பில் 'குடும்பந்தோறும் ஒரு கரும்பலகை' எனும் திட்டம் (Operation Blackboard) நிறைவேறப்புகும் தருணம் இது! அடுத்த நூற்றாண்டு ஆளுக்கொரு கையடக்கமான கணிப்பொறி (Hand-held computer) கைப்பெட்டிக்குள் எங்கும் எடுத்துச் செல்லத்தகும் கணினி (Brief-case Portable Computer) தமிழகத்தில் சர்வமாய் வியாபகம் செய்தாக வேண்டும்!

கணினித் தமிழ் குறித்து தீர்க்கமானதும் நிதானமானதுமான ஆழ்ந்த முடிவுகள் எடுக்க வேண்டிய கருத்தரங்கில் அவசரத் தீர்மானங்கள் ஆபத்தானவை! மேலும் ஒரே ஒரு துறை நிபுணத்துவம் என்கிற தகுதி கூட அறிஞர் அவையத்து தகுதியின்மை ஆகிவிடும் (இது திருக்குறள் அல்ல! இருந்தாலும் ஒரு வகை வேதவாக்கு). ஆங்கிலத்தில் கூறுவதானால், "For an expert in a single area, his qualification becomes a disqualification when exposed to group-thinking".

கணிப்பொறிஇயல், மொழியியல், ஒலியியல், உடலியங்கியல், உளவியல், சமூகவியல், வணிகவியல், கணிதவியல், மின்னணுவியல், இயற்பியல் போன்ற பலதுறை அறிவும் ஒருதுறை நிபுணருமே இன்று நாம் அறிவியலில் வலியுறுத்தி வருவது. இந்தப் பன்முக, ஊடுபிணைந்த (Multi-and-inter disciplinary) கண்ணோட்டம் மிக முக்கியம்!

இத்தகைய கூர்த்த சிந்தனையோட்டத்தின் முதற்கட்டமாக 1994 ஆகஸ்டு 5,6 நாட்களில் சென்னை அண்ணா பல்கலைக்கழகம் நடத்திய "தமிழும் கணிப்பொறியும்" கருத்தரங்கில் 'முத்துக் கணினி 34' என்றொரு கட்டுரையினை விண்வெளி விஞ்ஞானமும் தமிழறிவும், அறிவியல் கண்ணோட்டமும் கலந்து வழங்கினேன். தமிழின் வருங்கால 'எழுத்துச் சீர்மை' பற்றியது!

"பெரியாரின் "லை" எழுத்துச் சீர்திருத்தம்" அமுலுக்கு வர எத்தனையோ பத்தாண்டுகள் ஆயினவே! அதனால் இதெல்லாம் வீண்வேலை" என்று திரு. சுஜாதா சொன்னதற்கு முனைவர் ஔவை நடராசன் சாட்சி. ஒரு சிந்தனை நடைமுறைக்கு வர நாளாகும் என்பதாலேயே சிந்தனைக் கலைப்பு அவசியமா? பின்னால் நடைமுறைக்கு வந்தது என்கிற நிஜ வரலாறு போதாதா? ஆரம்பத்தில் நாம் குறிப்பிட்ட அவசரத்தனம் அனாவசியம்!

"சிக்கல் நிறைந்த சீனம், ஜப்பானியம் போன்ற மொழிகள் கணினி யுகத்தினுள் அடியெடுத்து வைத்தவுடனேயே, மின்னியல் கருவியல் செய்திகளை எளிதில் உட்புகுத்துவதற்கான ஆய்வுகளில் ஈடுபடத் தொடங்கின. இந்த ஆய்வுகளின் வழி கிடைத்த கருவிகளே இன்று நடைமுறையில் இருக்கின்றன" என்று கருதும் சிங்கப்பூர் பேராசிரியர், திரு. நா. கோவிந்தசாமியினை வழிமொழிவது போல் எழுத்தாளர் சுஜாதாவும், சீன ஜப்பானிய மொழியின் பட எழுத்துக்களையே சமாளிக்கும்போது தமிழ் வரிவடிவங்களைச் சமாளிப்பது எம்மாத்திரம். அதனால் கணிப்பொறிக்கு எழுத்துக் குறைவு தேவையில்லை. அதிகப்படி வேண்டுமென்றால் கணினியாளர்களின் பாஷையில் "நோ ப்ராப்ளம்" என்கிறார்.

அறிவியல் அறிஞர், முனைவர் வா.செ. குழந்தைசாமி தமது "தமிழ் எழுத்துச் சீரமைப்பு" நூலின் முடிவுரையில் "ஜப்பானிய மொழி வலமிருந்து தொடங்கி மேலிருந்து கீழாக செங்குத்தாக எழுதப்பட்டு வந்தது. அறிவியல் தொழில்நுட்பத் துறைக்கு இம்முறை ஏற்றதாக இல்லை. இன்று அறிவியல் துறைகள் முழுவதிலும் அது படுக்கையாக இடமிருந்து வலமாக எழுதப்படுகிறது. இது எவ்வளவு மகத்தான மாற்றம் என்பதைச் சிறிது சிந்தித்தாலும் உணரமுடியும். 'கஞ்சி' (Kanji) என்பது தான் ஜப்பானிய வரிவடிவம், அறிவியல் தொழில்நுட்பத் துறையில் மேலைநாடுகளில் ஏற்படும் வளர்ச்சியை ஜப்பானிய மொழி தன்

வயப்படுத்திக் கொள்ள, நவீன கருவிகளைப் பயன்படுத்திக் கொள்ள, "கஞ்ச்சி" வரிவடிவம் அவ்வளவு ஏற்றதாக இல்லை. எனவே கதாகானா (Katakana) ஹிராகானா (Hiragana) என்ற இரு புதிய துணை வரிவடிவங்களையும் பயன்படுத்துகிறார்கள். 'கஞ்ச்சி' வடிவத்தை விட இவை இரண்டும் மிக எளிதானவையாகும். நாளுக்கு நாள் இப்புதிய வரிவத்தையும் இயன்ற வரை எளிதாக்கி எண்ணிக்கையையும் கணிசமாகக் குறைத்து விட்டார்கள்" என்றும்,

"இது கணிப்பொறியுகம், கணிப்பொறி பயன்படுத்தப்படாத துறைகளே இல்லை. மேலைநாடுகளில் அச்சு முழுவதும் கணிப்பொறி மயமாகி விட்டது. தட்டச்சில் மின்னியல் புரட்சியும், கணிப்பொறிகளின் கூறுபாடும் இடம் பெற்று விட்டன. இந்த மாற்றங்கள் நமது கதவுகளையும் தட்டிக் கொண்டிருக்கின்றன. நாம் தாளிட்டுக்கொண்டு இருட்டறையில் வாழ இயலாது. வாழக்கூடாது" என்றும், தமிழ் எழுத்துக்களில் இன்று வழக்கிலுள்ள கொக்கி முதலான மேல் விலங்குகளையும், பிற கீழ் விலங்குகளையும் (descenders) "இவையனைத்தையும் கணிப்பொறியும் தட்டச்சும் தொலையெழுதியும் சமாளிக்க இயலும் என்றாலும் பாறாங்கல்லை இடுப்பில் கட்டிக் கொண்டு ஆற்றைக் கடக்க நீந்துவது போன்றாதாகும்" என்றும் எச்சரிக்கின்றார். இந்தக் கருத்து எமக்கு முழு உடன்பாடு!

2.2 பயன்பாட்டுத் தமிழுக்கோர் கருவி

கணிப்பொறி அச்செழுதும்; ஆயின் கணிப்பொறி வெறும் தட்டச்சுப் பொறி மட்டுமல்ல என்பதனை நினைவில் கொள்ள வேண்டும்.

கணிப்பொறி தன் பல்வேறு பயன்பாடுகளை மூவகைப்படுத்தலாம்.

1. தனியார் கணிப்பொறி (Personal Computer)
2. வணிகத்துறை கணிப்பொறி (Business Computer)
3. தொழில் நுட்பப் பயன்பாட்டுக் கணிப்பொறி (Technological Application Computer)

2.2.1 தனியார் பயன்பாடு

தனிநபர் தம் சொந்த வங்கிக் கணக்கு, வட்டிக் கணக்கு, பங்குச் சந்தை நிலவரம், பங்கெடுக்க வேண்டிய முக்கிய நிகழ்ச்சி நிரல், சுயகல்வி, மொழி பயிலுதல், ஒளிப்பட விளையாட்டு, பொழுதுபோக்கு, முகவரி முதலான தகவல் சேமிப்பு களஞ்சியமாகத் தனியார் கணிப்பொறி உதவுகிறது.

2.2.2 வணிகத்துறை பயன்பாடு

பொது வணிகர் தம் கணக்கு வழக்குகள், பங்குச் சந்தை முதலீடுகள், பங்குகள் வாங்கலும் கொடுத்தலும், பொருளாதாரத் தீர்மானங்கள், பொருள் காப்பீடு (Insurance), விலை நிர்ணயம், உபகரணத் தரக்குறிப்புகள், விற்பனை முதலான வியாபாரத்தில் உதவி, உபகரண பராமரிப்பும் பழுது தடுப்பு நடவடிக்கைகளும், துறைப் பயிற்சி, கல்வி, நிதி முதலீட்டு பகுப்பாய்வு (Investment analysis), நிகழ்ச்சிகளைத் திட்டமிடல், நேர ஒதுக்கீடு, தகவல் தெரிவிப்பும், கையாளுகையும், நிதியாளுகை, பொருளாளுகை (Inventory), திட்ட மேலாண்மை (Project Management), தொழிலகத் துறைக் கணிப்பீடுகள், வணிக, பொருளாதார வரி நிலவரம், தேய்மானம் முதலான பலவித கணிப்புகளுக்கு வணிகத்துறை கணினி உதவும்.

2.2.3 தொழில் நுட்பத்துறை பயன்பாடுகள்

புள்ளியியல், கணிதவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வேளாண்மை, காடு வளர்ப்பு, சுற்றுச் சூழலியல், புவியியல், புவிவளம், கடல் வளம், மானுடவியல் முதலான இயற்கை அறிவியல் துறைகள்; நோய்குறிக் காணல் (Clinical and diagonostic), வைரஸ்நோய் இயல் (Virology), நோய் எதிர்ப்பியல் (Immunology), மருந்தியல் (Pharmocology), கண்ணியியலும் ஒளியியலும் (Opthalmology and optics) முதலான உயிர் வாழ்வியல் துறைகள்; வானூர்தியியல், எந்திரவியல், வேதியியல், அணுக்கருவியல், கட்டிடவியல், ஒருங்கியல் (Systems), கணிப்பொறியியல், மின்னியியல், மின்னணுவியல் முதலான பொறியியல் துறைகள், வானவியல், நில அளவியல், நிலநடுக்கவியல் (Seismology) அடுமன், சிற்பம் முதலான தொழில் நுட்பத் துறைகள், அரசியல், வாழ்வியல், உளவியல், மனநோய் மருத்துவம், சட்டம், நீதி முதலான வாழ்வியல் மற்றும் ஒழுங்கியியல் துறைகள், நீர்வளம், நிலவளம், உணவு வளம், எண்ணெய் மற்றும் எரிவாயு முதலான மரபு சார்ந்த இயற்கை ஆற்றல் வளத்துறைகள் எனத் துறைதோறும் தமிழுக்குக் கணினி உதவுகிறது.

2.3 தகவல் பரிமாற்றக் கருவிக்கான தமிழ்

கணிப்பொறியினைத் தகவல் களஞ்சியமாகவும், அச்சடிக்கும் கருவியாகவும், பகுத்தாராயும் கருவியாகவும் பயன்படுத்துவது ஒரு புறம் இருக்க தகவல் பறிமாற்ற அடிப்படையில் கணிப்பொறி நமக்கு நான்கு வழிகளில் உதவ வேண்டும். இவ்வகையில் கணிப்பொறி தன் வசதிக்கேற்ப மொழிக்கருவியும் தனது வரி மற்றும் ஒலிவடிவங்களில் எளிமையான சில மாற்றங்களைக் கிரகித்துக் கொள்ள வேண்டியதும் இன்றியமையாதது.

கணிப்பொறி கீழ்வரும் நான்கு விதங்களில் நம்முடன் ஊடாட வேண்டுமாயின் தமிழ் எழுத்துகளில் ஒலிக்கேற்ற வரிவடிவங்களும் செந்தரப்படுத்தப்பட்ட குறியீட்டு வடிவங்களும் தேவை. இதற்கெனப் புதிதாக எழுத்துகளை வடிவமைப்பதை விடவும் ஏற்கனவே புழக்கத்தில் உள்ள குறியீடுகளைக் கையாண்டுக் கணினித் தமிழை உருவாக்க முயன்றதன் ஆய்வுப்பலன் இனி விவரிக்கப்படுகின்றது.

1. வரிவடிவம் புரிதல் (Character recognition)
2. ஒலிவடிவம் புரிதல் (Phoneme recognition)
3. ஒலிவடிவில் பேசுதல் (Artificial articulation)
4. வரிவடிவில் அச்சடித்தல் (Orthographical printing)

2.3.1 தமிழ் வரிவடிவம் புரிதல்

தமிழில் நாம் எழுதிக் கொடுக்கும் எழுத்துகளைப் பதித்து தகவல்களைத் தன் நினைக் குதிரில் (Memory) சேமித்து வைத்துச் செயல்பட வேண்டியது எதிர்காலத் தமிழ்க் கணினியின் தேவை. இன்று தமிழில் கையாளப்படும் வரிவடிவங்கள் மொத்தம் 107. ஆங்கிலத்தின் 52 சிறிய, பெரிய எழுத்துகளின் (Small and capital letters) முழு எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு அதிகம்.

உயிர்	11 (ஔ நீங்கலாக)
ஆய்தம்	1
ஒற்றுப்புள்ளி	1
மெய்	18
ஆகாரத் துணையெழுத்து	1
இகர உயிர்மெய்	18
ஈகார உயிர்மெய்	18
உகர உயிர்மெய்	18
ஊகார உயிர்மெய்	18
ஐகாரத் துணையெழுத்து	1
எகரத் துணையெழுத்து	1
ஏகாரத் துணையெழுத்து	1
	107

இவற்றுள், ஙி, ஞி, ஙீ, ஞீ,ஙு, (ஙு), ஞு (ஞு), ஙூ (ஙூ), ஞூ (ஞூ) ஆகிய இகர, ஈகார, உகர, ஊகார மேறிய ங், ஞ் மெய்களின் எட்டு உயிரின மெய்கள் அதிகம் புழக்கத்தில் இல்லை என்பதனால் இந்த வரிவினங்களைத் தவிர்த்து 99 வடிவங்களை மட்டுமே சிபாரிசுச் செய்கிறார் எழுத்தாளர் சுஜாதா. ஆயின் மலையாள ஒலிபெயர்ப்பின்போது பங்ஙி (அழகு), பஞ்ஞி (பஞ்சு), அங்ஙு (அங்கு), மஞ்ஞு (மஞ்சு) போன்ற பல சொல்லாட்சிகள் தமிழுக்கு அச்சில் தேவைப்படும். ஆகவே இந்த எட்டு உயிர்மெய் வரிவடிவங்களை வெட்டிக் குறைக்க வேண்டியதில்லை அல்லவா? மாறாக, சிக்கலான உயிர்மெய்க் குறியீடுகளைப் பொதுமைப்படுத்தும் (Generalisation) மட்டுமே அவசியம் என்க.

அறிஞர்கள் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், வா.செ. குழந்தைசாமி, ஐராவதம் மகாதேவன் போன்றோர் உயிர்மெய்க்குரிய 8 குறியீடுகளையும், கும்பகோணம் கோ. ஜெயபாலன் 9 குறியீடுகளையும், புலவர் வே. புகழேந்தி 11 குறியீடுகளையும், கலைமகள் (ஏப்ரல் 1990) இதழில் திரு. பி. பாலகிருஷ்ணன் தமிழ் உயிர்களுக்கு 10 புது வரிவடிவங்களையும் திரு. கந்தையா, திரு. எஸ். சிவசேகரம் இருவரும் இணைந்து தமிழுக்குரிய உயிர்மெய் வரிவடிவங்கள் தவிர ஆங்கில ஒலிச்சாயல் கொண்ட அகரம், ஆகாரம், இகரம், ஈகாரம், ஒகரம், ஓகாரங்களுக்கு ஆறு புது வரி வடிவங்களையும் கண்டுபிடித்துக் காட்டுகிறார் (காண்க : அட்டவணை - 1).

ஆகாரம் ஏறிய உயிர் மெய்கள் எழுத 'ா' துணையெழுத்து ஒன்று போதும். இகர ஈகாரங்களுக்கும் முறையே ി ,ீ ஆகிய இரண்டு குறியீடுகள் பொது. ஆயின் 38 உகர, ஊகாரங்களுக்கு மட்டும் பெரும்பாலும் தனித்தனி வரியுடைய 21 வரிவடிவங்களும் குறிகளும் (அட்டவணை-2) இவற்றைக் குறைக்க சில பொதுமையாக்க விதிகளைப் பின்பற்றலாம்.

எ,ஏ முதலான இதழ்விரி உயிர்கள் (unrounded vowels) ஏறிய மெய்யெழுத்துகளுடன் 'ா' சேர்த்து ஒ, ஓ முதலான இதழ்குவி உயிர்கள் (rounded vowels) ஏறிய உயிர்மெய்யெழுத்துகளைப் பெறுவது போலவே-எகர மோனைகளான இகரம், ஈகாரங்களுடன் 'ா' சேர்த்து உகர, ஊகாரங்கள் ஆக்கலாமே!

எடுத்துக்காட்டு

கெ + ா = கொ

கே + ா = கோ

அவ்வாறே,

கி + ா = கிா (கு)

கீ + ா = கீா (கூ)

இதன்வழி உகர, ஊகார எழுத்துகளுக்குத் தனித் தனி வரியன்களே இல்லை. இகர, ஈகார குறிகளுடன் கூடிய கால் எழுத்து கைகொடுக்கின்றது.

அண்ணா பல்கலைக்கழக முன்னாள் கணிதத் துறைத் தலைவர், பேராசிரியர் க. வைத்தியநாதன் உயிர் மெய்களுக்குத் தற்போது வழக்கிலுள்ள 14 குறியீடுகளின் அடிப்படையில் கணினி மூலம் "தமிழ் எழுத்துக்களை அடையாளம் கண்டு கொள்வதில் வடிவமைப்புகளின் சிறப்பியல்புகள்" குறித்து விளக்குகிறார் ("தமிழும் கணிப்பொறியும்", கருத்தரங்கு கட்டுரைத் தொகுப்பு, பக்கம் 95).



இந்த 14 உயிர்மெய்க் குறிகளில் இரண்டினைக் குறைத்தாலும் 12 தனிக் குறியீடுகள் தேவை. ஆயின், எண்ணி ஐந்தே ஐந்து குறியீடுகளை 'முத்துக்கணினி 34' முன் வைக்கிறது (ா, ֿ, ு, ெ, ே)

குறைந்த வரிவடிவங்களைப் புரிந்து கொள்ள (Optical character recognition) கணினிக்கு இனி அதிகப் பிரயாசம் இராது.

மேலும் "கோல இயல்வழி கையெழுத்து அறிதல்" குறித்து அண்ணா பல்கலைக்கழக கணிப்பொறி அறிவியல் தொழில் நுட்பத்துறைத் தலைவர் பேராசியர் முனைவர் வெ. கிருஷ்ணமூர்த்தி தமது ஆய்வில் - "தொடக்க நிலைத் தயாரிப்பில் உள்ள ஒரு கட்டளை நிரல் தற்பொழுது 15 எழுத்துக்களை அடையாளம் காண்கிறது" என்கிறார். 'முத்துக்கணினி' எடுத்துக்காட்டும் 34 வரிவடிவங்களை இதன்வழி கணினி எளிதில் புரிந்து கொள்ள ஏதுவாகும். ஐம்பது விழுக்காடு பணி இதோ நிறைவேறிற்றே.

மேலும் அா (ஆ), இா (ஈ) உா (ஊ), எா(ஏ) ஒா (ஓ) என்றும் உயிர் நெடில்களை பொதுமைப்படுத்தலாம். இதன் வழி எ-ஏ, ஒ-ஓ, ா-ஈ-ர் போன்ற ஒரின வடிவச்சாயல் கொண்ட எழுத்துகளைக் கணிப்பொறி குழப்பமின்றிப் புரிந்து கொள்ளுதல் எளிதாகும்.

2.3.2 ஒலிவடிவம் புரிதல்

ஒலியன்கள் (Phonemes) அடிப்படையில் எழுத்துகளுக்கு வரியன்கள் (Graphemes) அமைந்தால் "உரையிலிருந்து பேச்சையும் (Text to Speech),

பேச்சிலிருந்து உரையையும் (Speech to Text) கணிப்பொறி வழி உருவாக்க முடியும்". என்பது தமிழ்ப் பல்கலைக் கழக கணிப்பு மைய வழியமைப்பாளர் திரு. ச. பாஸ்கரன் கூற்று. (தமிழும் கணிப்பொறியும், பக்கம் : 73).

ஒலிகளின் பௌதீகத் தன்மைகளைப் பகுத்தறிந்து பேச்சினை கேட்டுப் புரிந்து கொள்வது கேட்புமுறை ஒலியியல் (Auditory Phonetics). ஆயின் ஒலிப்புமுறை ஒலியியல் (Articulatory Phonetics) குறித்தும் சற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

தமிழின் எழுத்து ஒலிக்கும் முறைகள் இருவகை. வாய்மூடிய நிலையில் உச்சரிக்கப்படும் மெய்யெழுத்துகளும், வாய்திறந்த நிலையில் "உயிர்" ஏறிய பிறகே ஒலியன்கள் ஆகின்றன.

கடையண்ணம் (Velar), இடையண்ணம் (Palatal), வளைநா (Retroflex), நுனியண்ணம் (Alveolar), பல் (Dental) மற்றும் ஈரிதழ் (Bilabial) - ஆகிய 6 ஒலிப்பான்கள் ஒவ்வொன்றிலும் பிறக்கும் கனனொலி, உரசொலி (Fricative), ஆடொலி (Trill), அடைப்பொலி (Stop), மருங்கொலி (Lateral), அடியொலி (Tap) ஆகிய 6 வித ஒலிப்புமுறைகளினால் மெய்யொலிகளும் கிரந்த ஒலிகளும் எழுகின்றன (காண்க அட்டவணை:3).

ஆய்த எழுத்தின் உதவியினால் வல்லின மாற்றொலிகள் (Allophones) பெறப்படுகின்றன: ஃக (G), ஃச (sz), ஃட (D), ஃத (dh), ஃப (F) ஃவ (B).

"அய்" என்கிற இணையொலி (Diphthong) தன் கூட்டு வரிவடிவமே 'ஐ' என்பர். ஆங்கிலத்தில் I (அய்), Y (ஒய்) என்பது போல பிரெஞ்சு மொழியில் U (உய்) இருக்கிறது. தமிழுக்கு இந்த இணையொலி வரிவடிவம் தனியாகத் தேவையில்லை. அவ்வாறு 'ஔ' கூட அதிகப்படிதான். 'அவ்' போதும்.

2.3.3 ஒலிவடிவில் பேசுதல்

ஏற்கனவே குறிப்பிட்டபடி 6 ஒலிப்பான்களில் (Articulators) பிறக்கும் 6 வித ஒலிகள் வீதம் 36 ஒலியன்கள் தோன்ற வாய்ப்புண்டு. ஆயின் மூச்சுக்காற்று, மார்பு, மூக்கு, கழுத்திலிருந்து பிறப்பதற்கு ஏற்ப ஒவ்வொன்றும் மூவிதமாக ஒலிக்கக் கூடும். ஆக மொத்தம் 108 ஒலியன்கள். ஆயின், அவற்றில் 28 ஒலியன்கள் மட்டுமே தமிழில் நாம் புழங்குகின்றோம் (காண்க அட்டவணை:3). இந்த மெய்யொலிகளுடன் இதழ் திறந்த நிலை (அ,ஆ), இதழ் விரிந்த நிலை (இ,ஈ,எ,ஏ), இதழ் குவிந்த நிலை (உ,ஊ, ஒ,ஓ),என்கிறபடியான தொகுப்புகளினால் தமிழின் 28 ஒலியன்களையும் கணிப்பொறிச் சில்லுகளில் அடைத்து வைக்கலாம்.

ஒலிஅலை வரைவி (Oscillograph) முதலான மின்னணுக்கருவிகள் உதவியால் ஒலியதிர்வெண், அலைவீச்சுகளைப் பிரித்து ஆராய்ந்து அவற்றைத் தக்க முறையில் இணைத்துச் செயற்கைப் பேச்சை உருவாக்க இயலும். இந்த இயல்புமுறை ஒலியியல் (Acoustic Phonetics) மேனாடுகளில் வளர்ச்சியடையத் தொடங்கி விட்டாலும் தமிழுக்குரிய முயற்சி துரிதமடைய இந்த அடிப்படை வகைப்பாடுகள் உதவும்.

2.3.4 வரிவடிவம் அச்சடித்தல்

தமிழின் எழுத்துச் சீர்திருத்தம் நம்மை அறியாமலேயே நடைமுறைக்கு வந்தாயிற்று. இன்றைக்குப் பழைய யானைகொம்பு (ஙெ)பெரியார் வழி செந்தரப்படுத்தினோம். தட்டச்சுக்கு உதவிற்று (ை).

"நூ" என்று துணையெழுத்துடன் சில நாளேடுகள் பிரசுரித்து வருகின்றன. புரிந்து கொள்கிறோம், அது "நூ" என்கிற நெடில் என்று.

கி, தி போன்ற இகரங்களுக்குக் கொம்பு, எழுத்தின் இடது இடுப்பிலிருந்து தொடங்கிய நிலை மாறி இன்று கணிப்பொறியில் தி, சி, கி போன்ற எழுத்துக்களில் மேல் கோட்டு விளிம்பிலிருந்து தொங்க ஆரம்பித்து விட்டது (விதிவிலக்கு டி,டீ).

சொல்லப்போனால், பண்டைய கல்வெட்டு வட்டெழுத்தும் பாளைமடல் கண்ணெழுத்தும், ஓலைச்சுவடி கோலெழுத்தும் இன்றைய காகித வரியெழுத்தும் (Orthograms) ஒன்றல்லவே. தேவை எழும்போது சீர்திருத்தங்கள் இயற்கை. எழுதுவதற்குக் கரங்களை நம்பியிருந்த நாம் கருவிகளை நாடத் தொடங்கிய பிறகு - அச்சடித்தலில் கணிப்பொறி விசைப்பலகை கையடக்கமாக இருக்க வேண்டுவது அவசியம். தேவையற்ற குறியீடுகள் அகற்றப்படவும் வேண்டும்.

(1) இன்றைக்கு 'ணு' என்கிற எழுத்தினை நரசிம்ம அவதாரமாகப் பிளந்து வலது பாதியினைத் தட்டச்சு பொறியின் கீழ்த்தளத்திலும் (ண) இடது பாதியினை மேல்தளத்திலும் (ɹ) போட்டு ஒட்ட வைத்து எழுதி வருகிறோம். இந்த இரண்டு துணுக்குக் குறிகளுடன், று, து, லு,ரு, நு, னு, கு, மு, து, மு, டு, சு -ஆகிய 12 எழுத்துகளும் 'சு' - தனி வடிவமும், 'கூ' - தனிவடிவமும் பு, யு, வு, நு ஆகியவற்றிற்கு தேவையான கீழ்க் கம்புக் குதறி (ு) ஒன்றும், இவற்றின் ஊகாரமாக்கி பூ,யூ, வூ, நூ என்று எழுத உதவும் பூண்கட்டிய கால்விலங்கு (ூ) ஒன்றும், கு,மு, ரு, ஞு, மு, டு ஆகியற்றினை நெடிலாக்க உதவும் மேல் சுழி வட்டம்(ெ) ஒன்றும், து,று,நு,லு,னு,து,ஞு ஆகியவற்றை நெடிலாக்க உதவும் ஒற்றைக்கால் துணையெழுத்து (T) ஒன்றும், இவை தவிர பெரும்பாலும் கையாளப்படாத ங்,ஞ் மெய்களை உகரம் உகாரங்கள் ஆக்குகிற 2 கிடையான நீண்ட மேல் விலங்குகளும்

(ு,ூ) ஆக உகர ஊகாரங்களுக்கு 22 இடங்களும், பழைய ஐகாரத்திற்குரிய யானைக்கொம்பு (ை) சுழி ஒன்றும், தேவையற்ற ஞ,ணு ஆகிய ஆகார நெடில்களும் - ஆக 25 வடிவங்கள் தட்டச்சுப் பொறியின் பயனுள்ள 33 எழுத்துச் சாவிகளில் முக்கால் பாகத்தை அடைத்துக் கொள்கின்றன.

தவிர, சில உகர, ஊகாரங்கள் இரண்டு ரீதியில் எழுதப்பட்டும் வருகின்றன.

ங் + உ = ஙு, ஙு

ஞ் + உ = ஞு, ஞு

ள் + உ = ளு, ளு

ங் + ஊ = ஙூ, ஙூ

ஞ் + ஊ = ஞூ, ஞூ

ள் + ஊ = ளூ, ளூ

(2) "அயல் நாட்டு மொழிகள் சதுரமானவை. ஆதலால் அவைகளில் கொம்பு, சுழி, புள்ளி ஆகியவை இல்லை. சதுர உருவம் உள்ளதால் வலதுபுறம் இடதுபுறம் கொடுக்கப்படும் காலி இடம் சமமாக இருக்கும். அதனால் எழுத்துகளுக்கு இடையே உள்ள இடம் (Inter character spacing) சமமாக இருக்கும். நம்முடைய எழுத்துகள் மேடும், பள்ளமுமாக உள்ளதால் பார்த்துப் பார்த்துப் பொறுமையாகச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் தயாரிப்பளவு குறைகிறது" என்கிறபடி "கணிப்பொறியில் தமிழ் எழுத்துக்களை உருவாக்குவதில் உள்ள சிக்கல்கள்" குறித்து வருத்தப்படுகிறார் 'ஸாஃப்ட் வியூ கம்ப்யூட்டர்ஸ்' நிறுவனத்தின் ஊழியர் திரு. ஆண்டோ பீட்டர்.

(3) உண்மையில் தமிழ் உயிர்மெய் நெடுங்கணக்கில் ஆ,ஏ, ஐ, த, ந, ற, ழ, ர போன்ற இயற்கையான ஒரு சில எழுத்து வடிவங்கள் கீழ் விலங்குகள் (Descenders) உடையன. தவிர்க்க முடியாதவற்றைத் தாங்கிச் சமாளிக்கலாம். ஆனால் உகரம், ஊகாரங்கள் ஏறிய 36 உயிர்மெய்யெழுத்துகளில் ஞு, ஙு, ஞூ, ஙூ, சு, சூ ஆகிய 6 எழுத்துக்கள் தவிர ஏனைய 30 எழுத்துகளும் கீழ் விலங்குகள் (Descender) கொண்டவையே. இந்த 30 உகர ஊகாரங்கள் குறைந்தது 6 விதச் சாயல்களில் (ு, ூ, ு, ு, ூ, ூ) கீழ் விலங்குகள் உடையன (சான்று பு,பூ, ரு, ரூ, து, ணூ). ஆக 107 வரிவடிவங்களில் 30 உகர, ஊகாரங்கள் கீழ் விலங்குகள் உடையன. இது சுமார் 28 விழுக்காடு.

நமது எழுத்துச் சீர்மையில் இந்த உகர, ஊகாரங்களுக்குக் கீழ் விலங்குகள் இல்லை.

(4) இன்று 'புள்ளி அணிக்கோவை'(Dot matrix) என்கின்ற நுட்பத்தில்

எழுத்துகளை அச்சுத் தலையில் வடிவமைக்கும்போது கூடுதலான நீள் வரிசை (Row) குத்துவரிசை (Column) அடுக்குகள் தேவைப்படுகிறது. ஆயின் எழுத்துச் சீர்மைவழி முயன்றால் வழக்கமான 5x7 புள்ளிகள் அல்லது 5x9 புள்ளிகள் அடங்கிய அணிக்கோவையில் தமிழில் அனைத்து எழுத்துக் குறியீடுகளையும் வடிவமைக்க முடியும். தேவையற்ற கீழ் விலங்குக் குறியீடுகளும், உகர ஊகாரங்களும் குறைந்தால் மட்டுமே இந்த உபரி வசதி.

(5) ஐந்தாவதாகக் கணிப்பொறி அச்சடிப்பானில் பராமரிப்புப் பிரச்சனைகள். அண்ணா பல்கலைக்கழகக் கணிப்பொறித்துறை மாணவர்கள் எம். மதனும், ஏ. செந்திலும் வருந்துவது போல் - "ஃெகா ஹெர்ட்ஸ்" வேகத்தில் விரையும் மின்னனுக் கணிப்பொறியின் விசைப் பலகையில் பழைய தட்டச்சுப் பொறியிலுள்ளது மாதிரி நகராச்சாவிகள் இருப்பது அதன் திறமைக்குத் தடை. அதுவும் கி, கு, கூ, பூ போன்ற எழுத்துகளின் கொம்புகளை (Projections) முதலில் தட்டிய பிறகும் அச்சுத் தலைக்கூடு (Carriage) நகராமல் இறந்தது போல் அசையாது அதே இடத்தில் நிற்க வேண்டும். தொடர்ந்து ஒரு மெய்யெழுத்தினைத் தட்டி விட்டாலே வண்டி இடம் பெயர முடியும். கணிப்பொறி அச்செழுதிக்கு இது ஒரு உபத்திரவம். இதில் பராமரிப்பு பிரச்சனைகளும் உண்டு" என்று தமது ஆங்கில கட்டுரையில் சங்கடப் படுகின்றனர். ("Need for standardisation of Tamil Keyboards", 'தமிழும் கணிப்பொறியும்', பக்கம் 113-114).

இதே கருத்தினை அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் முனைவர் மு. ஆனந்தகிருஷ்ணன் அவர்களும் வலியுறுத்துகிறார்.

இருபதாம் நூற்றாண்டுக் கணிப்பொறியின் எழுத்தெண் பலகைத் தளங்களின் இத்தனைச் சிக்கல்களுக்கு தீர்வுகாணாமல் கரையேற இயலாது.

சுருங்கக் கூறினால் - உகர, ஊகார புழக்கம் தமிழில் 1%க்கும் குறைவு. அவை விசைப்பலகையில் கைப்பற்றி வைத்துள்ள இடமோ 70 விழுக்காடு. தவிர, இவை தமிழில் கீழ் விலங்குப் பிரச்சனை கொண்ட வரிவடிவங்கள் சுமார் 30 விழுக்காடு.

கணிப்பொறி தன் அச்சடிப்பானுக்கும் விசைப்பலகைக்கும் இடையே சமரசம் செய்து வைக்க வேண்டுமானால் நமது எழுத்துச் சீர்மை அங்கீகரிக்கப்பட்டாக வேண்டும்.

2.4 கணிப்பொறிக்கு உகந்த தமிழ்

இந்த ஆய்வில் பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பெற்று, மரபு அச்சுக்கூடத்திலோ, நவீன கணிப்பொறி கூடத்திலோ அச்சான நூல்கள், இதழ்கள்

- அதிலும் வெறும் கட்டுரை அல்லது இலக்கண விளக்கம், அன்றி அறிவியலிலோ மற்றும் அறிவொளி பாடநூல், இதழ் என்கிற வகையிலோ பிரதிநிதிகளாக மொத்தம் பத்துப் பிரதிகள் (மேற்கோள் நூல் வரிசை எண்: 1 முதல் 10 வரை) தேர்வுச் செய்யப்பட்டன.

அவற்றில் அங்கிங்கான மாதிரி (Random sampling) பகுதிகளிலிருந்து ஒலி எழுத்துகளை பொறுக்கி அவற்றிற்குரிய வரிவடிவங்களையும் கணக்கிட்டுக் கணிப்பொறி உதவியினால் நடத்திய வரியெண் நிகழ்வெண்ணிக்கை ஆய்வு (Grapheme Frequency Analysis) முடிவுகள் - அட்டவணை எண்: 4 -லும், படங்கள் 3 முதல் 12 வரையிலும் தரப்பட்டுள்ளன.

10 நூல்கள், இதழ்களிலிருந்து மொத்தம் 6576 ஒலியெழுத்துகளும் 8124 வரியன்களும் ஆராயப்பட்டன. தமிழில் தற்போதுள்ள 63 அச்சுவரியன்களில் புழக்கத்தினையும் அவற்றின் நிலைப்பாட்டு வரிசையில் முறையே அட்டவணைகள் 5,6-லும் படங்கள் 13,14 - லும் வழங்கியுள்ளேன்.

2.4.1 கவனிப்புகள்

1) சுமார் ஒரு விழுக்காடும் அதற்குக் குறைந்த அளவிலும் கையாளப்படும் மொத்தம் 40 வரிவடிவங்களில் 17 உகர ஊகார குறியீடுகள் இடம் பெற்றுள்ளன (மொத்தத்தில் 22 உகர ஊகார குறியீடுகளே புழக்கத்தில் உள்ளன என்பதை நினைவு கூர்க).

2) கிரந்த எழுத்துகள் அனைத்தும் ஒரு விழுக்காட்டிற்கும் குறைவு. ஆயினும் அறிவியல் தமிழ் எழுதவும் பொருள் பொதிந்து உச்சரிக்கவும் இந்த ஐந்து எழுத்துகளையும் ஏற்றுக் கொண்டு விட்டோம்.

3) இகரம், ஈகாரங்கள் பொதுக்குறியீடுகளினால் சுட்டப் பெற்றாலும் டி,டீ ஆகியன விதிவிலக்குகள். இகர, ஈகாரப் புழக்கமும் 1%க்கும் குறைவே. எனினும் கணிப்பொறியில் இந்த இரண்டு வரியன்களும் தற்போதைக்கு மாற்றமில்லை.

4) பொதுவாக உயிர் எழுத்துகளில் அகரம் தவிர அனைத்தும் ஒரு விழுக்காட்டிற்கும் குறைவாகவே புழங்குகின்றன. ஆதலின் உயிர் நெடில்களைக் குறிப்பிட 'ா' துணையெழுத்து மட்டும் போதும்.

5) ஒரு விழுக்காட்டிற்கும் குறைந்த ஐ, ஔ தவிர்க்கப்படலாம். இவற்றின் ஒலிவடிவங்களை அய், அவ் என்று தனித்தனியே எழுதிச் சமாளிக்க முடியும்.

ஆக மொழியியல், ஒலியியல், வரியியல் மற்றும் புழக்க அடிப்படையில்

வடிகட்டி வார்த்ததில் கீழ்க்கண்ட 37 வரிவடிவங்களே மிஞ்சும்.

உயிரெழுத்து	5
ஆய்தம்	1
மெய்	18
ஒற்றுப்புள்ளி	1
கிரந்த எழுத்துக்கள்	5
உயிர்மெய்க் குறியீடுகள்	5
டி	1
டீ	1
	37

2.5 முன்னோட்ட முத்துக்கணினி 34

இன்று பாரதி முதலான கணிமங்கள் கணிப்பொறி தன் அஸ்கி (ASCII) தகவல் இடைமாற்றத்திற்கான அமெரிக்க செந்தர குறியீட்டு (American Standard Code for Information Interchange) இட ஒதுக்கீட்டில் 10,11 ஆகிய இரண்டு குறியீட்டு வரிசையிலும் 32 இடம் வீதம் உள்ள மொத்தம் 64 இடங்களையும் தமிழ் அச்செழுத்துக்காக ஆக்கிரமிக்கின்றன. கீழ்த் தளத்தில் தமிழ் எழுத்துகளும் (11), மேல் தளத்தில் ஆங்கிலமும் (10) தொகுத்துக் கொள்ளுதல் நலம் (காண்க : படம் - 15).

அண்ணா பல்கலைக்கழக கருத்தரங்கில் படிக்கப்பட்ட முகிழ்நிலை முத்துக்கணினி எடுத்தாண்ட 34 வரிவடிவங்களுடன் ஸ்ரீ, டி, டீ ஆகிய வடிவங்களும் சேர்ந்து மேம்பட்ட முத்துக்கணினி விசைப்பலகையில் 37 வரியன்களும் கால்புள்ளி, முற்றுப்புள்ளி ஆகியனவும் சேர்ந்து 39 இடங்களை எடுத்துக் கொள்கின்றன. இவற்றில் கிரந்த எழுத்துகள் ஐந்தையும் எண் குறியீட்டுச் சாவிகளின் வரிசை மேல் தளத்தில் ஏற்றி விட்டால் "முன்னோட்ட முத்துக்கணினி - 34" உருவாகும்.

2.6 எழுத்துச் சீர்மையின் பயன்பாடுகள்

இனி இந்த நவீன எழுத்துகளின் சீர்மையின் பல்துறை மேன்மையினைப் பட்டியல் இடுவோம்.

1. முத்துக்கணினி 34-ன் விசைப்பலகை (சாவிப்பலகை, எழுத்தெண் பலகை, கையகம்) தட்டச்சுப் பொறிக்கும் உகந்தது. ஒரே பொறியின் கீழ்த் தளமும்

மேல்தளமுமாகத் தமிழும் ஆங்கிலமும் பொதிந்து வைக்கலாம். ஷிப்ட் (SHIFT) மட்டும் போதும். 'மோட்' (MODE) மாற்றத் தேவையில்லை.

2. இந்த விசைப்பலகையின் எழுத்துகளை இரு கை பத்து விரல் புழக்கத்திற்குத் தோதுவாக எழுத்துகள் 'நிகழ்வெண்ணிக்கை ஆய்வு' (Frequency Analysis) அடிப்படையில் அமைத்துள்ளேன். இது ஏற்கனவே தட்டச்சு அறிந்தவர்க்கு அதிகபயிற்சியின்றி எளிதில் கைவரும் (காண்க. அட்டவணைகள் 7,8; படங்கள் 16,17).

3. தவிரவும் நமது முன்னோட்ட முத்துக்கணினி - 34 விசைப்பலகையின் எழுத்து முதல் வரிசை சாவிகளும், இரண்டாவது வரிசை சாவிகளும், முன்றாவது வரிசை சாவிகளும் முறையே மரபான தட்டச்சுப் பொறியின் கையாளுகை விழுக்காட்டிற்கு ஒத்ததாக இருக்கின்றது (காண்க படங்கள் 18,19).

4. மேலும் இடதுகை, வலது கை விரல்களின் தட்டச்சுப் புழக்கத்திற்கேற்பவே புதிய விசைப்பலகையும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

5. இந்த விசைப்பலகை தமிழ் எழுதுகிற போக்கில் எழுத்து வடிவங்களை அச்சடிக்கும் வகையிலும் இலகுவானது. மற்றபடி "முத்து" என்பதனை அச்சடிக்கும்போது 'ம உ த த உ' என்று தட்டச்சச் செய்ய வேண்டியதில்லை. தற்போதைய சிங்கப்பூர் பேராசிரியர் நா. கோவிந்தசாமி வடிவமைத்த கணினியின் விசைப்பலகையில் நாம் எழுதுவது போல தட்டச்சு செய்ய இயலாது. தவிரவும் மெய்யுடன் உயிரைத் தட்டியதும் உயிர்மெய் எழுத்து கணினியில் எழுதப்பட வேண்டும். இது தேவையற்றது.

6. சொல்லெழுதி (Word Processor) அமைப்பில் தமிழ் எழுத்துக்களினூடே பன்னாட்டுச் செந்தர அளவைக் குறியீடுகளான - α(அல்ஃபா துகள்), β(பீற்றா துகள்), γ(காமா துகள்), λ (அலைநீளம்), μ(மைக்ரோன்), π (சுற்றளவுக்கான விட்டமடங்கு), ω(கோண விரைவு) போன்ற அயல் வரியன்களுடன் உயர் தொழில்நுட்ப அறிவியல் தமிழ் ஆய்வேடுகள் எழுதவும் முத்துக்கணினியில் இடங்கள் உண்டு.

7. எதிர்காலத்தில் கணிப்பொறி உதவியுடன் உலகத்தின் ஒரு மூலையிலிருந்து மறுமூலையில் நிற்பவருடன் மின்னணு அஞ்சல் தொடர்பு (E-Mail) மட்டுமன்றி சாரக்ஸ் (SAREX - Satellite Amaetur Radio Experiment) (படம்.10), இருடியம் - 77 முதலான திட்டங்கள் வழி தொலைத்தகவல் தொடர்புக்குரிய கையடக்கமான விசைப்பலகைக்குக் குறைந்த எழுத்து குறியீட்டு இயற்கை மொழியே உகந்ததாகும்.

இருபதாம் நூற்றாண்டில் ஐகாரத்தைப் பொதுமைப்படுத்தி விட்டோம். இருபத்தொன்றாம் நூற்றாண்டில் உகர ஊகாரங்களை எளிமைப்படுத்தி (அட்டவணை - 9) கணித்தமிழ் மலரச் செய்வோம்.

உதவிய நூல்கள்

1. துளசி. இராமசாமி, நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113, மார்ச் 1985, பக்கம் 15.

2. மா. இளைய பெருமாள், லீலா திலகம் (மணிப்பிரவாள இலக்கணம்) தமிழ்ப் புத்தகாலயம், சென்னை -600 005, ஆகஸ்ட் 1971 பக்கம் 75-77.

3. தொலைக்காட்சி, தமிழ்ப்பாடநூல், பள்ளிசாராக் கல்வி மற்றும் வயதுவந்தோர் கல்வி ஆணையம், சென்னை - 600 006.

4. 'அட்சர தீபம்' எழுத்தறிவு மாத இதழ் மலர் 1, இதழ் 9, செப்டம்பர் 1993, திருவனந்தபுரம்,

5. ஞா. ராசராசேசுவரி, மனிதனும் மரபியலும், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மார்ச் 1986, பக்கம் 5

6. நெல்லை. சு. முத்து, ஒருமைப்பாட்டிற்கு விண்வெளி, விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர், 1993, பக்கம் 72-73

7. சட்டகக் கட்டமைப்புகளின் நிலைத்தன்மை (அண்ணா பல்கலைக்கழக ஆய்வுச் சுருக்கம்: முனைவர் அ. இளங்கோவன், திரு. கா. சரவணன்) களஞ்சியம், தொகுதி 8, இதழ் 1 வளர்தமிழ் மன்ற வெளியீடு, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை - 600 025.

8. இரா. இந்து, நிலா நடுக்கம், கலைக்கதிர், சூன் 1994.

9. ஆர். நடராஜன், எங்கே இருக்கிறோம், தினமணி நாளிதழ், கோவைப் பதிப்பு, செப்டம்பர் 7. 1994.

10. 'கன்ஸ்யூமர் கன்ஸல்டேஷன்' பகுதி, 'ஜூனியர் போஸ்ட் 2-9-94'

11. கு. பரமசிவன், இக்கால மொழியியல் அறிமுகம், திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 1984.

12. சி. கோவிந்தராசனார், தமிழெழுத்தின் வரிவடிவம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு, நவம்பர் 1993.

13. வா. செ. குழந்தைசாமி, *தமிழ் எழுத்துச் சீரமைப்பு*, பாரதி பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, மார்ச் 1990.

14. கொடுமுடி சண்முகப் பிரகதம், *தேவைக்கேற்ற தமிழ்*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, நவம்பர் 1990.

15. சிவசேகரம், கந்தையா "The Tamil Script: Characteristics and Problems, and a Proposal for its Reform", *Indian Linguistics*, Journal of Linguistic Society of India, டெக்கான் கல்லூரி, புனே, தொகுதி 45, எண். 1-4, மார்ச் - டிசம்பர் 1984.

16. பி. பாலகிருஷ்ணன், "பத்தொன்பதே எழுத்துகளில் பைந்தமிழ்", கலைமகள், ஏப்ரல் 1990.

17. தமிழும் கணிப்பொறியும், கணிப்பொறி அறிவியல் தொழில் நுட்பத் துறை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை - 600 025. (கருத்தரங்கு - ஆகஸ்டு 5,6, 1994).

அட்டவணை-1

எழுத்துச் சீர்திருத்தம் - சில முன்னோடிகள்

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
தெ.பொ.மீனாட்சி சுந்தரம் வா.செ.குழந்தைசாமி ஐராவதம் மகாதேவன்	-	ா	ி	[illegible]	[illegible]	[illegible]	ெ	ே	ை	-	-	-
கும்பகோணம் ஜெயபாலன்	-	ா	ி	ீ	[illegible]	[illegible]	ெ	ே	-	[illegible]	[illegible]	-
வே.புகழேந்தி	-	ா	ி	ீ	[illegible]	[illegible]	ெ	ே	ை	[illegible]	[illegible]	ற
பி.பாலகிருஷ்ணன்	— (அ)	[illegible]	[illegible]	[illegible]	உ	[illegible]	ெ	ே	×	[illegible]	[illegible]	×
கந்தையா -	-	ா	ி	•	[illegible]	[illegible]	ெ	ே	ை	ொ	ோ	ௌ
எஸ். சிவசேகரம்	[illegible] (KA)	[illegible] (KAA)	[illegible] (KE)	[illegible] (KEE)	-	-	-	-	-	[illegible]	[illegible]	-

அட்டவணை-2

<u>உகர, ஊகாரச் சிக்கல்கள்</u>

உகர மேல்கொம்பு	1	ஙு, ஞு
உகரக் கால் ஒட்டு	1	(ழு), பு, வு, யு
கு - வகை உகரம்	7	கு, டு, மு, ஞு, ரு, ழு, (ளு)
து - வகை உகரம்	6	து, ஙு, ணு, னு, (ஞு), லு, நு, (று)
தனி உகரம்	1	சு
ஊகார மேல்கொம்பு	1	ஙூ, ஞூ
ஊகாரக் கால்விலங்கு	1	(ழூ), பூ, வூ, யூ
டூ - வகை ஊகாரக் குறி	1	டூ, மூ, ரூ, கூ, மூ
தூ - வகை ஊகாரக் குறி	1	தூ, ஙூ, ணூ, னூ, (ஞூ), லூ, நூ, (றூ)
தனி ஊகாரம்	1	சூ

அட்டவணை-3

மெய்நிரல் - ஒலியன்களும் வரியன்களும்

ஒலிப்பான்	ஒலிப்பிடம்						
	மார்பு				மூக்கு	கழுத்து	
	கனவொலி	உரசொலி	ஆடொலி	அடைப்	பொலி	மருங்கொலி	அடியொலி
கடையண்ணம்	ஃக்	உற்	---	க்	ங்	ழ்	---
இடையண்ணம்	ஜ	---	---	ச்	ஞ்	ய்	---
வளைநா	ஃட்	ஷ	---	ட்	ண்	ள்	---
நுனியண்ணம்	---	ஃச், ஸ்	ற்	---	ன்	ல்	---
பல்	ஃத்	---	---	த்	ந்	---	ர்
ஈரிதழ்	ஃவ்	ஃவ்(F)	---	ப்	ம்	வ் (உரசொலி)	---

அட்டவணை-4:
தமிழில் வரியன்கள் நிகழ்வெண்ணிக்கை ஆய்வு முடிவுகள்

வரியன்கள்	விழுக்காடு ①	②	③	④	⑤	⑥	⑦	⑧	⑨	⑩
அ	1.16	0.74	1.14	1.39	0.11	0.78	1.03	1.72	1.82	0.72
ஆ	0.31	0.63	0.43	0.40	0.57	0.78	0.66	0.38	0.33	0.72
இ	0.77	0.63	0.85	0.20	1.36	1.12	0.75	0.95	1.16	1.29
ஈ	0.00	0.11	0.00	0.00	0.11	0.34	0.00	0.00	0.00	0.00
உ	0.23	0.63	0.14	0.40	0.91	0.11	0.37	0.19	1.32	0.00
ஊ	0.08	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.17	0.14
எ	1.08	1.58	0.14	0.60	0.68	0.45	0.19	0.57	1.16	0.43
ஏ	0.31	0.42	0.00	0.00	0.00	0.34	0.09	0.38	0.17	0.29
ஐ	0.00	0.00	0.00	0.00	0.23	0.78	0.37	0.00	0.00	0.00
ஒ	0.31	0.21	0.57	0.80	0.81	0.11	0.37	0.00	0.00	0.14
ஓ	0.00	0.11	0.00	0.00	0.00	0.00	0.09	0.19	0.00	0.14
ஔ	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00
ஃ	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.09	0.00	0.00	0.14
•	18.28	22.58	17.35	17.33	16.78	21.01	16.68	36.26	21.82	24.64
க	11.03	0.21	10.53	3.19	3.29	6.48	7.59	6.97	6.78	8.02
ச	0.85	1.26	3.70	1.59	0.68	2.12	1.22	1.53	1.82	1.72
ட	4.40	3.89	5.26	2.99	4.88	5.70	7.12	4.01	2.98	4.44
ற	2.85	4.31	2.13	2.39	2.95	2.01	2.91	1.34	2.15	0.72
த	0.85	3.78	2.13	7.57	6.69	3.80	3.84	3.44	2.48	2.01
ப	5.09	4.31	2.84	3.58	5.67	2.79	8.84	4.96	2.15	2.58
ங	1.08	0.32	0.43	0.40	0.23	0.45	0.47	0.38	0.83	0.72
ஞ	0.08	0.11	0.00	0.20	0.00	0.00	0.00	0.19	0.17	0.14
ண	1.47	1.58	0.71	1.00	1.47	2.12	1.50	0.76	0.99	0.72
ன	1.23	3.78	1.71	2.38	4.31	2.79	1.41	2.29	3.14	4.30
ந	1.39	2.52	1.85	0.80	0.81	1.45	1.22	2.10	2.48	0.86
ம	6.10	2.52	5.55	7.17	4.54	2.35	6.09	3.82	3.64	3.15
ஷ	0.46	0.63	0.85	1.00	0.34	0.11	0.19	0.19	0.00	0.14
ய	3.09	0.85	2.70	1.79	1.81	4.02	2.53	1.15	2.48	2.87
ள	3.32	2.00	2.13	3.59	3.29	2.01	2.72	2.10	4.30	4.15
ல	2.62	4.41	3.27	2.99	5..10	3.13	1.31	3.44	5.45	2.87
ர	4.24	1.79	2.84	4.98	4.65	3.80	1.97	1.53	2.31	4.73
வ	4.08	5.88	6.12	3.78	2.15	3.13	2.81	1.72	4.46	1.00
கு	1.16	6.83	0.14	1.59	2.38	0.11	1.22	1.34	0.50	1.29
கூ	0.00	0.11	0.00	0.20	0.11	0.56	0.00	0.00	0.00	0.00
டு	1.47	2.31	1.28	0.60	1.13	1.01	1.03	1.15	1.16	1.00
டூ	0.23	0.00	0.28	0.00	0.00	0.00	0.00	0.19	0.00	0.00
ரு	0.15	0.53	0.00	0.20	0.34	0.11	0.66	0.00	0.17	0.00
ரு	0.85	0.32	0.43	2.39	1.13	0.34	0.56	0.76	0.50	1.29
மு	0.15	0.11	0.71	0.00	0.45	0.45	1.22	0.00	0.99	0.43
சு	0.00	0.00	0.14	0.00	0.11	0.56	0.00	0.00	0.00	0.14
து	1.62	0.85	0.00	1.20	0.45	0.67	1.22	1.15	0.99	0.72
று	0.39	0.63	1.00	0.80	0.79	0.56	0.56	0.19	1.16	0.72
ணு	0.00	0.11	0e00	0.00	0.23	0.00	0.00	0.00	0.00	0.14
ணூ	0.00	0.11	0.00	0.00	0.11	0.11	0.00	0.19	0.00	0.43
நு	0.00	0.21	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00
னு	0.39	0.85	0.00	0.20	0.45	0.34	0.00	0.19	0.17	0.00
[illegible]	0.08	0.11	0.00	0.00	0.00	0.22	0.00	0.00	0.00	0.00
[illegible]	0.23	0.32	1.42	0.60	0.79	0.56	2.06	1.34	0.33	0.29
[illegible]	0.08	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.72
[illegible]	0.23	0.00	0.28	0.00	0.00	0.00	0.00	0.00	0.83	0.43
[illegible]	0.08	0.11	0.00	0.20	0.00	0.00	0.09	0.00	0.17	0.00
ஜ	0.08	0.00	0.00	0.00	0.11	0.45	0.00	0.00	0.17	0.14
ஷ	0.00	0.00	0.00	0.20	0.00	0.00	0.00	0.00	0.00	0.00
ஸ	0.00	0.00	0.00	0.00	0.23	1.01	0.00	0.00	0.17	1.29
ஹ	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00	0.00
ஸ்ரீ	0.00	0.00	0.00	0.20	0.00	0.00	0.00	0.00	0.00	0.00
ா	3.09	6.41	7.68	6.57	7.37	5.36	3.94	5.34	1.18	7.15
ி	5.86	3.78	3.56	9.18	2.83	6.70	4.78	0.57	8.10	3.58
ீ	0.46	0.11	0.14	0.40	0.91	0.11	0.94	0.00	1.16	1.00
[illegible]	0.15	0.21	0.28	0.60	0.11	0.34	0.19	0.19	1.98	0.86
ெ	2.62	0.95	2.13	0.60	0.79	2.79	1.31	0.95	0.99	0.57
ே	1.23	1.05	1.85	1.59	1.83	1.34	0.84	0.95	0.99	1.72
ை	1.62	2.00	3.27	0.20	2.61	2.23	3.84	0.95	1.82	2.01

அட்டவணை-5: நிகழ்வெண் (அகர வரிசை)

வரியன்	எண்	விழுக்காடு
அ	1	1.080
ஆ	2	0.519
இ	3	0.908
ஈ	4	0.055
உ	5	0.430
ஊ	6	0.038
எ	7	0.686
ஏ	8	0.199
ஐ	9	0.138
ஒ	10	0.342
ஓ	11	0.053
ஔ	12	0
ஃ	13	0.023
•	14	21.37
க	15	6.608
ச	16	1.648
ட	17	4.565
ற	18	2.375
த	19	3.667
ப	20	4.382
ங	21	0.528
ஞ	22	0.088
ண	23	1.231
ன	24	2.734
ந	25	1.557
ம	26	4.491
ழ	27	0.391
ய	28	2.338
ள	29	2.960
ல	30	3.459
ர	31	3.283
வ	32	3.515
கு	33	1.655
கூ	34	0.097
டு	35	1.213
டூ	36	0.070
ரூ	37	0.215
ரு	38	0.856
மு	39	0.451
சு	40	0.095
து	41	0.895
று	42	0.678
ணு	43	0.047
ஞு	44	0.095
நு	45	0.021
லு	46	0.267
சூ	47	0.040
ீ	48	0.793
ூ	49	0.079
[illegible]	50	0.177
T	51	0.064
ஜ	52	0.094
ஷ	53	0.019
ஸ	54	0.268
ஹ	55	0
ஸ்ரீ	56	0.019
ா	57	5.436
ி	58	4.893
ு	59	0.522
	60	0.491
ெ	61	1.371
ே	62	1.350
ை	63	2.055

அட்டவணை-6 : நிகழ்வெண்ணிக்கை (புழக்க அடிப்படை)

வரியன்	நிலைப்பாடு	விழுக்காடு
•	1	21.37
க	2	6.608
ா	3	5.436
ி	4	4.893
ட	5	4,565
ம	6	4.491
ப	7	4.382
த	8	3.667
வ	9	3.515
ல	10	3.459
ர	11	3.283
ள	12	2.960
ன	13	2.734
ற	14	2.375
ய	15	2.338
ை	16	2.055
கு	17	1.655
ச	18	1.648
ந	19	1.557
ெ	20	1.371
ே	21	1.350
ண	22	1.231
டு	23	1.213
அ	24	1.060
இ	25	0.908
து	26	0.895
ரு	27	0.856
ீ	28	0.793
எ	29	0.686
று	30	0.678
ங	31	0.528
ு	32	0.522
ஆ	33	0.519
ூ	34	0.491
மு	35	0.451
உ	36	0.430
ழ	37	0.391
ஒ	38	0.342
ஸ	39	0.268
லு	40	0.267
ரூ	41	0.215
ஏ	42	0.199
[illegible]	43	0.177
ஐ	44	0.138
கூ	45	0.097
சு	46	0.095
ஞு	47	0.095
ஜ	48	0.094
ஞ	49	0.088
ூ	50	0.079
டூ	51	0.070
T	52	0.064
ஈ	53	0.055
ஓ	54	0.053
ணு	55	0.047
சூ	56	0.040
ஊ	57	0.038
ஃ	58	0.023
நு	59	0.021
ஷ	60	0.019
ஸ்ரீ	61	0.019
ஔ	62	0
ஹ	63	0

அட்டவணை-7: நிகழ்வெண் .... (அகர வரிசை)

வரியன்	எண்	விழுக்காடு
அ	1	1.377
இ	2	0.791
உ	3	0.410
எ	4	0.772
ஒ	5	0.341
ஃ	6	0.020
•	7	18.62
க	8	7.239
ச	9	0.174
ட	10	5.032
ற	11	2.670
த	12	3.988
ப	13	4.341
ஞ	14	0.460
ங	15	0.076
ண	16	1.081
ன	17	2.383
ந	18	1.426
ம	19	4.340
ழ	20	0.402
ய	21	3.849
ள	22	2.779
ல	23	3.249
ர	24	3.610
வ	25	3.350
ஜ	26	0.082
ஷ	27	0.017
ஸ	28	0.234
ஹ	29	0
ஸ்ரீ	30	0.017
ா	31	12.67
ி	32	10.67
ு	33	0.455
ூ	34	0.672
ெ	35	1.195
ே	36	1.176

அட்டவணை-8 : நிகழ்வெண்ணிக்கை பண். (பழக்க அடிப்படை

வரியன்	நிலைப்பாடு	விழுக்காடு
•	1	18.82
ா	2	12.67
ி	3	10.67
க	4	7.238
ட	5	5.032
ப	6	4.341
ம	7	4.340
த	8	3.988
ய	9	3.849
ர	10	3.810
வ	11	3.350
ல	12	3.249
ள	13	2.779
ற	14	2.670
ன	15	2.383
ந	16	1.426
அ	17	1.377
ெ	18	1.195
ே	19	1.176
ண	20	1.081
இ	21	0.791
எ	22	0.772
ூ	23	0.672
ஞ	24	0.480
ு	25	0.455
உ	26	0.410
ழ	27	0.402
ஒ	28	0.341
ஸ	29	0.234
ச	30	0.174
ஜ	31	0.082
ங	32	0.076
ஃ	33	0.020
ஸ்ரீ	34	0.017
ஷ	35	0.017
ஹ	36	0

அட்டவணை-9 : குறைந்த எழுத்துக்களில் நிறைந்த தமிழ்

்	அ	அா	இ	இா	உ	உா
க்	க	கா	கி	கீ	கிா	கீா
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙிா	ஙீா
ச்	ச	சா	சி	சீ	சிா	சீா
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞிா	ஞீா
ட்	ட	டா	டி	டீ	டிா	டீா
ண்	ண	ணா	ணி	ணீ	ணிா	ணீா
த்	த	தா	தி	தீ	திா	தீா
ந்	ந	நா	நி	நீ	நிா	நீா
ப்	ப	பா	பி	பீ	பிா	பீா
ம்	ம	மா	மி	மீ	மிா	மீா
ய்	ய	யா	யி	யீ	யிா	யீா
ர்	ர	ரா	ரி	ரீ	ரிா	ரீா
ல்	ல	லா	லி	லீ	லிா	லீா
வ்	வ	வா	வி	வீ	விா	வீா
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழிா	ழீா
ள்	ள	ளா	ளி	ளீ	ளிா	ளீா
ற்	ற	றா	றி	றீ	றிா	றீா
ன்	ன	னா	னி	னீ	னிா	னீா

எ	எா	அய்	ஒ	ஓ	[illegible]
கெ	கே	கய்	கொ	கோ	கவ்
ஙெ	ஙே	ஙய்	ஙொ	ஙோ	ஙவ்
செ	சே	சய்	சொ	சோ	சவ்
ஞெ	ஞே	ஞய்	ஞொ	ஞோ	ஞவ்
டெ	டே	டய்	டொ	டோ	டவ்
ணெ	ணே	ணய்	ணொ	ணோ	ணவ்
தெ	தே	தய்	தொ	தோ	தவ்
நெ	நே	நய்	நொ	நோ	நவ்
பெ	பே	பய்	பொ	போ	பவ்
மெ	மே	மய்	மொ	மோ	மவ்
யெ	யே	யய்	யொ	யோ	யவ்
ரெ	ரே	ரய்	ரொ	ரோ	ரவ்
லெ	லே	லய்	லொ	லோ	லவ்
வெ	வே	வய்	வொ	வோ	வவ்
ழெ	ழே	ழய்	ழொ	ழோ	ழவ்
ளெ	ளே	ளய்	ளொ	ளோ	ளவ்
றெ	றே	றய்	றொ	றோ	றவ்
னெ	னே	னய்	னொ	னோ	னவ்

43



படம் -1 : அறிவியல் தமிழ் கோளமைப்பு



படம்-2: அறிவியல் தமிழ்ப் படைப்பாக்க முக்கோணம்

படம்-3 வரியன் நிகழ்வெண்ணிக்கை (நூல்-1, அட்டவணை 4)



படம்-4 வரியன் நிகழ்வெண்ணிக்கை (நூல்-2, அட்டவணை 4)



படம்-5 வரியன் நிகழ்வெண்ணிக்கை (நூல்-3, அட்டவணை 4)



படம்-6 வரியன் நிகழ்வெண்ணிக்கை (நூல்-4, அட்டவணை 4)



படம்-7 வரியன் நிகழ்வெண்ணிக்கை (நூல்-5, அட்டவணை 4)



படம்-8 வரியன் நிகழ்வெண்ணிக்கை (நூல்-6, அட்டவணை 4)



படம்-9 வரியன் நிகழ்வெண்ணிக்கை (நூல்-7, அட்டவணை 4)



படம்-10 வரியன் நிகழ்வெண்ணிக்கை (நூல்-8, அட்டவணை 4)



படம்-11 வரியன் நிகழ்வெண்ணிக்கை (நூல்-9, அட்டவணை 4)



படம்-12 வரியன் நிகழ்வெண்ணிக்கை (நூல்-10, அட்டவணை 4)



படம்-13 : பத்து உரைகளில் வரியன் நிகழ்வெண்ணிக்கை



படம்14: பத்து உரைகளில் வரியன் நிகழ்வெண்ணிக்கை



படம்-15: 'அஸ்கி' தமிழ்க்குறியீடுகள் இட ஒதுக்கீடு
(முன்னோட முத்துக்கணினி-34)

	00000	00001	00010	00011	00100	00101	00110	00111	01000	01001	01010	01011	01100	01101	01110	01111
00	இந்த 32 இடங்களில் அச்சுப் பதிக்காதீர்! கணினி இயக்க ஆணைக்கு ஒதுக்கப்பட்டவை!															
01	இடை	!	"	ஷ	ஜ	%	ஸ்ரீ	ஙு	(	)	*	+	,	-	.	ஞு
10	ஸ	A	B	C	D	E	F	G	H	I	J	K	L	M	N	O
11	ஃ	ய	ே	ன	ண	ந	க	ப	ா	ழ	த	ம	ட	இ	அ	ி

	10000	10001	10010	10011	10100	10101	10110	10111	11000	11001	11010	11011	11100	11101	11110	11111
00	இந்த 32 இடங்களில் அச்சுப் பதிக்காதீர்! கணினி இயக்க ஆணைக்கு ஒதுக்கப்பட்டவை!															
01	0	1	2	3	4	5	6	7	8	9	:	•	<	=	>	?
10	P	Q	R	S	T	U	V	W	X	Y	Z	{	:	}	^	←
11	ெ	ண	ச	ள	வ	ர	ை	ற	உ	ல	ஒ	ு	/	ஞ	_	ஒதி

படம்-16: சீர்திருத்திய வரியன்கள் நிகழ்வெண்ணிக்கை



படம் 17: சீர்திருத்திய வரியன்கள் நிகழ்வெண்ணிக்கை
(புழக்க நிலை வரிசையில்)



படம்-18: மரபுத் தட்டச்சுப் பொறி விசைப்பலகை



படம்-19: முன்னோட்ட முத்துக்கணினி-34விசைப்பலகை



படம் 20

சாரெக்ஸ்


விண்வெளி ஓட
அலைபரப்புத் திறன்கலம்
அலைதிரட்டி
பரப்பலை வாங்கி
பையகக்
கூடு
பதிவி (Recorder)
இடைநிலைக்கூடு
செவியுள் ஒலிப்பி
வலைப்பின்னல் கணினி
(Grid computer)

42

கலைச்சொல் வழக்கில் இருமொழி வழக்கு

சு. நரேந்திரன்

"மனித சமுதாயம் வெகுதூரம் முன்னேறிவிட்டது. இன்றைய சமுதாயத் தேவையும் மாறிவிட்டது. தமிழ் மொழி அமைப்பில் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. சங்கத் தமிழ்க்கூறுகள் இன்று மொழியில் மாறிவிட்டன. எழுத்தில், சொல்லில், பொருளில் இன்று மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றை நோக்கும்பொழுது தமிழின் இன்றைய நிலையைக் காணும்பொழுது அதன் வளர்ச்சிநிலை நமக்கு புலப்படும் '' (பாலகிருஷ்ணன் 1986).

" மொழியின் பொருள்வளம்,மொழியைப் புதிய பொருள் துறைகளில் பயன்படுத்தினால்தான் கூடும். தமிழுக்கு வேண்டிய புதிய பொருள்களில் ஒன்று அறிவியல். மொழி பண்பாட்டை வெளிப்படுத்தும் கருவி என்று சொல்லும்போது இன்றைய அறிவியல் பண்பாட்டை வெளிப்படுத்தும் கருவி என்று சொல்லும்போது இன்றைய அறிவியல் பண்பாட்டைத் தமிழ் வெளிப்படுத்தவில்லை என்றால் தமிழை இக்காலத் தமிழர்களின் மொழி என்று சொல்ல முடியாது"(அண்ணாமலை 1986).

" அறிவியல் கருத்துக்களைத் தமிழில் தருவதில் கலைச்சொற்களே உயிர்நாடியாக விளங்குகின்றன'' (இராதா செல்லப்பன் 1985).

"மொழிநடை, உரைப்பாங்கு ஆகியவைகளும் அறிவியல் தமிழுக்கு அவசியம். எப்படியானாலும் கலைச் சொல்லாக்கம் அறிவியல் தமிழில் ஒரு முக்கிய பிரச்சனை என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது"(சண்முகம் 1985). அறிவியல் தமிழ் வளர்ச்சியில் கலைச் சொல்லின் தன்மையை அறிஞர்கள் மேற்கண்டவாறு எடுத்துக் காட்டியுள்ளனர். ஆனால் அறிவியல் உரையாடலில் அல்லது எழுத்தில் தமிழ்க் கலைச் சொற்களின் பயன்பாடு குறைந்து ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது மிகுதியாக உள்ளது. சில சமயங்களில் சில ஆங்கிலச் சொற்கள் மட்டும் பேசுவதும், மற்றும் சில சமயங்களில் வாக்கியங்களை அப்படியே ஆங்கிலத்தில் பேசுவதும் நடைமுறையில் உள்ளன.

மருத்துவத்தைப் பொறுத்தமட்டில் அந்நிலைக்கு ஆளாக்கப்படுவதற்கான காரணம் மருத்துவரும், செவிலியரும் தம் பாடங்களை ஆங்கிலத்தில் கற்று வருவதினாலேயே ஆகும். மேலும், மருத்துவத்திற்கு உபயோகப்படும் கருவிகள் பல ஆண்டுகள் பயன்படுத்தப்பட்ட பிறகே அதற்கான தமிழ்க் கலைச் சொற்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இக் கால இடைவெளியும் அச்சொற்களை நடைமுறையில் கொணரத் தடைவிதிக்கிறது. மேலும், மருத்துவ உண்மைகளை ஆங்கிலம் தெரிந்த பொதுமக்களும் ஆங்கிலத்தைப் பயிற்றுமொழியாகக் கொண்ட மாணவர்களும், சஞ்சிகை, பத்திரிக்கை மற்றும் ஆய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்தின் மூலம் படித்து உடன் நடைமுறைக்கு, அன்றாடப் பழக்கத்திற்குக் கொணர்ந்து விடுவதும் ஒரு காரணம். இந்தியா ஆங்கில அடிமைத்தனத்தில் 200 ஆண்டுகள் இருந்ததும் மற்றொரு காரணமாக அமைகிறது. இவைகளெல்லாம் விட மிக முக்கியமாக மருத்துவத்துறைக்குத் தமிழர்களின் பங்களிப்பு மிக மிகக் குறைவேயாகும்.

ஆகவே, கலைச் சொற்கள் தமிழில் உருவாக்கப்பட்டாலும் எல்லா இடங்களிலும், நடைமுறையில் தமிழில் சொல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஒருவர் தாம் அறுவை சிகிச்சைக்கு உட்படும் பொழுது, அதை மற்றொருவருக்குக் கூற நேர்கையில் ' எனக்கு ஆப்ரேஷன்' என்று கூறுவதும், வயிற்றில் புண் ஏற்பட்டதை 'வயிற்றுப்புண்' என்று கூறாது 'வயிற்றில் அல்சர்' என்று சொல்வதும் வழக்கத்தில் உள்ளது. இதே போல் ''Gastroscope'' என்ற சொல் இரைப்பை அகநோக்கி என்று கலைச்சொல்லாக எழுதப்பட்டாலும், அறுவை அரங்கில் வேலைபார்க்கும்பொழுது மருத்துவர், செவிலியர் மற்றும் மருத்துவ உதவியாளர் அனைவரும் ஒருவருக்கொருவர் பேச்சின்பொழுது அந்நோக்கியை 'ஸ்கோப்' என்றே கூறுகின்றனர். காரணம், சொல்லின் எளிமையும் அன்றாடப் பழக்கமும் ஆகலாம்.

மருத்துவர் நோயாளியிடம் பேசும்பொழுது அடிக்கடி ஆங்கில வார்த்தைகளையே கூறுவது சாதாரணமாகக் காணப்படும் ஒரு செயல். இதற்குக் காரணம் (1) ஆங்கிலத்தில் வார்த்தைகளை அடிக்கடி பேசினால் நோயாளி தன்னை பெரிய படிப்பு படித்த பெரிய மருத்துவர் என்று நினைப்பார் என்றும், அதற்கு ஒரு தனி மரியாதை உண்டு என்றும் எண்ணுவதால் ஆகும். சில சமயங்களில் அவரே பழக்கத்தில் ஆங்கிலச் சொற்களைத் தமிழ் என நினைத்துக் கொள்வதும் உண்டு. இதற்கு மாறாக மருத்துவர் நோயளியிடம் தமிழிலேயே மருத்துவத்தைக் கூற வேண்டும் என்று நினைத்துச் சொன்னாலும் நோயாளி அவ்வார்த்தைகளையே திரும்ப ஆங்கிலத்தில் கூறுகிறார். எடுத்துக்காட்டாக, குழாய், சுரை அல்லது குப்பி, மாத்திரை என்று மருத்துவர் கூறினாலும் நோயாளி உடன் காப்சூல் என்றும்

படுக்கை என்றால் பெட் என்றும் மாத்திரை என்றால் டாப்பிலட் என்றும் கூறுகிறார். இதே வார்த்தைகளை ஆங்கில மருந்து விற்பனைக் கூடங்களிலும் கூறியே மருந்துகளும் விற்கப்படுகின்றன. செவிலியரும் மருத்துவ உதவியாளர்களும் மேற்கூறிய வார்த்தைகளுடன் வார்டு, ஆஸ்பத்திரி, ஸ்ட்ரெச்சர் என்ற வார்த்தைகளை மருத்துவமனையில் தவிர்க்க முடியாதவைகளாக மருத்துவர் மற்றும் நோயாளியும் உரையாடலின் பொழுது பேசுவது நாமறிந்தது.

இதே மாதிரியாக, பொறியியலில் ஆங்கிலமே தெரியாத தச்சர், அல்லது கொத்தனார் ஆங்கிலம் பயின்ற பொறியியலாளர்களிடம் பேசும்பொழுது மரபு வழிச் சொற்களையே மறந்து அவரைப் போலவே தானும் பேச முயல்கிறார். இதற்குக் காரணங்கள் 1) அவருடன் சேர்ந்த பழக்கம், 2) இப்படி பேசுவதின் மூலம் தனக்குச் சமூகத்தில் தனி மரியாதை கிடைக்கும் என்ற நினைப்பு, 3) அக்கருவிகளுக்குத் தகுந்த கலைச்சொற்கள் இல்லாத நிலை (எ.கா) நட்டு, போல்ட். இவ்விடத்தில் காந்தியின் வார்த்தைகளை நினைவுகூர்வது சாலச் சிறந்தது. "அயல்மொழிக் கல்வியில் நம் குழந்தைகள் தம் சொந்த நாட்டிலேயே அயலவர்கள் போல் ஆகிவிட்டார்கள்"(காந்தியடிகள் 1925).

இருமொழிப் பயன்பாடு குறைவதற்கான ஒரே வழி எல்லா நிலைகளிலும் பயிற்று மொழி ஒன்றாக இருத்தல் வேண்டும். அது தாய்மொழியாக இருக்க வேண்டும். அந்நிலையில் அறிஞர்கள் தமிழிலேயே சிந்தித்து எழுதினால் நல்ல கலைச்சொற்கள் மொழி அமைப்பையும் வழக்கையும் ஒட்டித் தோன்றும். இதில் ஒரே சொல்லுக்குப் பல கலைச்சொற்கள் வரலாம். காலப்போக்கில் பொருத்தமானதும், பலர் ஏற்றுக் கொண்டதும் நிலைத்து நிற்கும். எடுத்துக்காட்டாக 1872-இல் ஃபிஷ்கீரினினால் மருத்துவநூல் எழுதப்பட்ட பொழுது (Anatomy) 'மனுஷ அங்காதி பாதம்' என்றும், பிறகு அதே சொல் 1932 - இல் 'தேக உறுப்புக்களைச் சொல்லும் சாஸ்திரம்' என்றும், பிறகு 'அங்கவியூகம்', 'அனாட்டமி', 'உடற்கூற்றியல்', 'உடற்கூறு இயல்', 'மெய்யியல்' எனவும் படிப்படியாக மாறி புதிய சொற்கள் உண்டாயின (இராம சுந்தரம் 1983). இன்று 'உடற்கூறு இயல்' என்பது வழக்கில் உள்ளது. இது அவரவர்க்குத் தோன்றிய புதிய சொல்; எக் குழுவினாலும் இச்சொல் உண்டாக்கப்படவில்லை.

இந்தோனேசியாவில் இராண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பிறகு பல மொழிகள் வழக்கில் இருந்து வந்தன. யுத்தத்திற்குப் பிறகு ஜப்பான் அதன் ஆட்சி பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின் டச்சு மொழியையும், மலாய் மொழியையும் தடை செய்தது. அதன் பிறகு மக்கள் ஆட்சி வந்த பின்னரும், எந்த ஒரு கட்சி அரசு பொறுப்பில் இருந்தாலும் பாஷா இந்தோனேசியா மொழி மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று ஆணையிட்டது. அவ்வாணைக்குப் பிறகு

அரசே புத்தகம் எழுத சிலரை நியமித்து அவர்களுக்கு உதவியாக மொழியியலாளர்களையும் அழைத்து அறிவியல் மொழி வளர உதவினார்கள். அதன் பிறகு பள்ளியிலிருந்து பல்கலைக்கழகம் வரை புத்தகங்கள் பாஷா இந்தோனேசியா மொழியிலேயே வெளிவருகின்றன (விடோசன் 1979). தற்போது பாஷா இந்தோனேசியாவே அங்கு கோலோச்சுகிறது.

ரஷ்யா, போலந்து, ஜப்பான்,ஜெர்மனி முதலிய நாடுகளில் அந்தந்த நாட்டு மொழிகளே கலைச்சொல் வழக்கில் உள்ளன. தவிர்க்க இயலாத சில நேரங்களில், தன்மயமாக்கப்பட்ட லத்தீன் அல்லது கிரேக்க மொழிச் சொற்கள் (Nativised Latin/ Greek) பயன்படுத்தப்படக் கூடும். ஆனால் நமது நாட்டிலுள்ளது போல, தமிழைத் தவிர்த்துவிட்டு, ஆங்கிலத்தையே பயன்படுத்தும் சூழல் அங்கு இல்லை. இன்னும் சொல்லப்போனால் ரஷ்யா,ஜப்பான் முதலிய நாடுகளில் ஆங்கிலப் பயன்பாடு குறைவாகவே உள்ளது. பயிற்றுமொழியாக அந்தந்த நாட்டு மொழிகளே உள்ளன. மருத்துவக் குறிப்புகள்,மருத்துகளைப் பயன்படுத்தும் முறைகள் முதலியன கூட அந்தந்த மொழியில்தான் உள்ளன. நம் நாட்டில் இன்னும் அவை ஆங்கிலத்தில் தான் அதிகமாக உள்ளன. எனவே, தமிழைப் பயன்படுத்த நினைத்தாலும் இயலாத ஒரு சூழல் உருவாகியுள்ளது. இதையெல்லாம் தவிர்க்கத் தமிழை மட்டும் பயிற்று மொழியாக்க வேண்டும். கோத்தாரி கல்விக் குழுவும் இதனால்தான் தாய் மொழியில் கல்வி அமையவேண்டும் எனவும், கல்வி தொடர்பான யுனெஸ்கோ அமைப்பும் கல்விக்கேற்ற மொழி தாய்மொழியே என வலியுறுத்தியுள்ளன.

குறித்த ஒரு மொழியில் சயின்ஸ் சம்பந்தமான கருத்துக்களையும் வேறுபல நுணுக்கமான விஷயங்களையும் தெளிவாக எடுத்துச் சொல்ல முடியாதென்றும் அந்த மொழியில் வளர்ச்சிக்கு இடமில்லையென்றும் சிலர் சொல்லிவருகிறார்கள். இதைவிட பெரிய மூடநம்பிக்கை வேறு கிடையாது (காந்தியடிகள் 1925).

தாய்மொழிக்கு இணையாக இன்னொரு மொழி உலகில் இருக்க முடியாது. 200 ஆண்டுகாலம் நம் தாய்மொழி மீது ஆதிக்கம் செலுத்திய ஆங்கிலத்தைத் தமிழோடு சமநிலையில் வைத்து இரண்டையும் தமிழரின் இரு கண்கள் என்று சொல்வது கூடாது. தமிழை அறிவியல் அறிவுக்கு விலக்கானது என்று கூறுவது மூடநம்பிக்கையாகும். அதைவிட ஆங்கிலம் தான் அறிவியல் கலைகளைப் போதிக்கும் ஆற்றல் உடைய மொழி என்று கூறுவது அப்பட்டமான மூடநம்பிக்கையாகும் (சிவஞானம், 1982). பயிற்று மொழி தாய்மொழியிலேயே அமையவேண்டும். அப்பொழுது ஒரு சொல்லுக்குப் பல கோணங்களில் சிந்தனை சென்று புதுப்புதுக் கலைச்சொற்கள் விரைவில் தேவைக்கேற்பக் கிடைக்கும். தமிழ் மொழி வழிக் கல்வியும் சிந்தனையும் செயலும்தாம் கலைச்சொல் வழக்கில் நிலவும் இருமொழிப் பயன்பாட்டைக் குறைக்கும். அப்படி இல்லையேல் ஒருமொழி வழக்கு நீடித்தே தீரும்.

"இன்றுவரை இயற்கைக்கு விரோதமான ஒரு இடத்தை வகித்துக்கொண்டு, ஆங்கிலமொழி அதிகாரம் செலுத்தி வருகிறது. சர்வகலாசாலைப் பேராசிரியர்கள் ஆங்கிலத்தில் தடபுடலாகப் பேசக்கூடுமாயினும் தங்களுடைய சிந்தனைகளைத் தங்கள் தங்கள் தாய்மொழியில் வெளியிட அவர்களால் முடியவில்லை. சர்.சி.வி.ராமன் செய்துள்ள ஆராய்ச்சிகள் யாவும் ஆங்கில மொழியிலேயே இருக்கின்றன. ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு அவற்றால் யாதொரு பயனும் இல்லை"(காந்தியடிகள் 1925). அதாவது, படிப்பிற்காக வாழ்வு நடக்கும்; வாழ்விற்காகப் படிப்பு அமையாது; நாட்டின் பொருளாதாரமும், பகுத்தறிவும் பயன்பாடும், அறிவியல் வளர்ச்சியும் தடைப்பட்டு நீடிக்கும்.

துணை நூற்கள்

அண்ணாமலை, இ. (1986) "அறிவியல் மொழியும் தமிழும்", அறிவியல் தமிழ்க் கோவை. பாரதியார் பல்கலைக் கழகம்.

இராதா செல்லப்பன் (1985) கலைச் சொல்லாக்கம், தஞ்சாவூர்.

காந்தியடிகள் (1921) யங் இந்தியா.

--------------- (1925) காந்திமலர், மாணவருக்கு.

-------------- (1925) நமது மொழிப் பிரச்சனை.

சண்முகம், செ.வை. (1985) தமிழ்ச் சொல்லாக்க நெறிமுறைகள்: ஒரு வரலாற்று அளவீடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சிவஞானம், ம.பொ. (1983) ஆங்கிலம் வளர்த்த மூட நம்பிக்கை, பூங்கொடி பதிப்பகம் சென்னை.

சுந்தரம், இராம (1983) "அறிவியல் இலக்கியத் தமிழாக்கம்" மொழியியல், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

பாலகிருஷ்ணன், ஒ. (1986) "அறிவியல் தமிழ்நடைக்கூறுகள்" அறிவியல் தமிழ்க்கோவை, பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

Widdowson, H.G. (1979) *Explorations in Applied Linguistics*, Oxford.

43

சொல்லாக்கமும் புதிய உத்திகளும்

மணவை முஸ்தபா

சொற்பெருக்கமே ஒரு மொழியின் உண்மையான மொழி வளமாக-வளர்ச்சியாகக் கணிக்கப்படுகிறது. ஒரு மொழியில் காலப் போக்குக்கும் தேவைக்குமேற்ப நாள்தோறும் புதிது புதிதாக உருவாகி நிலைபெறும் சொற்கள் - குறிப்பாகக் கலைச்சொற்கள் அம்மொழியின் வளர்ச்சிக்கும் ஆற்றலுக்கும் அடித்தளமாக அமைகின்றன எனலாம்.

சொல்லாக்க முயற்சி என்பது இன்று நேற்றல்ல; மொழி தோன்றிய காலம் முதலே இருந்து வரும் ஒரு தொடர் முயற்சியாகும். சில வளர்ந்த மொழிகளின் வளர்ச்சிப் போக்கில் சொல்லாக்க முயற்சி குன்றியபோது அம் மொழிகளின் வளர்ச்சியும் குன்ற நேர்ந்தது. இம் முயற்சி முற்றாக நின்றபோது அம்மொழி தொடர்ந்து காலவோட்டத்துக்கு ஈடு கொடுக்க இயலா நிலையில் 'இயங்கா மொழி' யாகவும் ஆக நேர்ந்தது. இதற்குச் சான்றாக மொழி வரலாற்றில் பல மொழிகளைக் கூற முடியும். குறிப்பாக, மேலைநாட்டில் லத்தீன் மொழியையும் கீழைநாட்டில் சமஸ்கிருத மொழியையும் கூறலாம்.

'இயங்கா மொழி' என முத்திரை குத்தப்பட்ட ஒரு மொழிக்கு மீண்டும் உயிரூட்ட, காலத்தின் போக்குக்கும் தேவைக்குமேற்ப புதிய புதிய சொல்லாக்கங்களை உருவாக்கிப் பயன்படுத்துவதன் மூலம் உயிர்ப்புத் தன்மை உண்டாக்க முடியும் என்பதற்கு இன்று ஏற்ற சான்றாக விளங்குவது ஹீப்ரு மொழியாகும். இறந்து போன 'ஏட்டு மொழி' எனக் கூறப்பட்ட 'ஹீப்ரு' மொழி இன்று புதிய புதிய சொல்லாக்கங்களைப் பெற்று, உயிரோட்டமுடைய அறிவியல் மொழியாக .உருமாற்றம் பெற்று, இன்று இஸ்ரேலியர்களின் ஆட்சி - வாழ்வு அனைத்து மட்டங்களிலும் அரசோச்சி வருவது கண்கூடு.

புதிய சொற்கள் உருப்பெற பல்வேறு காரணங்கள் உண்டு. காலப்போக்கின் தேவைக்கேற்பப் புதிய உணர்வையோ அன்றி கருத்தையோ ஏதேனும் ஒரு சொல்

வடிவில் மற்றவர்க்கு உணர்த்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவ்வாறு கருத்துணர்த்த உருவாக்கப்படும் சொல் 'காரண' அடிப்படையில் அமைந்த சொல்லாகவோ அல்லது வெறுமனே அடையாளம் காட்டும் 'இடுகுறி' சொல்லாகவோ ஒரு மொழியில் அமைவதுண்டு.

இத்தகைய சொல்லாக்கங்களை ஒரு மொழி மற்ற மொழிகளிடமிருந்தும் பெறுவதுண்டு. ஒரு மொழிப் பகுதியைச் சேர்ந்த மக்கள் வேறொரு மொழிப் பகுதியைச் சேர்ந்த மக்களோடு உறவாட நேர்கின்றபோது, அவர்களிடமிருந்து ஒரு புதிய கருத்தையோ அல்லது உணர்வையோ பெறுகின்ற வாய்ப்பு உருவாவது தவிர்க்க முடியாததாகிறது. அத்தகைய கருத்தை அல்லது உணர்வை வெளிப்படுத்தும் சொல் இயல்பாக அவர்தம் மொழியில் இடம்பெற நேர்வது தவிர்க்க இயலாததாகிறது.

இவ்வாறு ஒவ்வொரு மொழியும் தனக்குத் தானே சொற்களை உருவாக்கிக் கொள்வதோடு, காலப்போக்கில் பிற மொழிச் சொற்களும் வேறொரு மொழியில் இடம் பெற நேர்கின்றது. இவ்வாறு வந்து கலக்கும் பிறமொழிச்சொற்கள் எந்த மொழியில் இடம்பெற நேர்கிறதோ அந்த மொழியின் ஒலிப்புத் தன்மைக்கும் இலக்கண விதிமுறைகளுக்கும் ஏற்ப மாற்ற திருத்தங்களைப் பெற்று அம்மொழியின் மூலச் சொல் போன்ற தோற்றத்தைக் காலப் போக்கில் பெற்று விடுகின்றது. இதைச் சுட்டிக் காட்டுகின்ற முறையில்,

வட சொற் கிளவி வட வெழுத்தொ ரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும் மே

என்ற தொல்காப்பியச் சூத்திரம், பிற மொழிச் சொற்கள் தமிழில் வந்து கலப்பது தவிர்க்க முடியாதது என்பதைப் புலப்படுத்துகிறது.

இன்னும் சற்று ஆழ்ந்து நோக்கின் மக்களின் பேச்சு மொழியே திருத்தமடைந்து இலக்கியத்தில் இடம் பெறுகிறது. இலக்கியம் கண்டதற்கே இலக்கணம் என்பது மொழியியலார் கருத்து.

இந்த மொழியியல் நோக்கோடு தமிழ்ச் சொல்லாக்கச் சிக்கல்களையும் அவற்றிற்குரிய தீர்வுகளையும், அதற்கு ஏதுவாகக் கடைபிடிக்க வேண்டிய உத்திகளையும் பற்றி ஆய்வது பொருத்தமுடையதாயிருக்கும் என எண்ணுகிறேன்.

பண்டு தொட்டே தமிழ் சொல் வளமிக்க மொழியாகத் திகழ்ந்து வருகிறது. இலக்கியம் போன்ற பழந்துறைகள் தவிர்த்து அறிவியல், தொழில் நுட்பம், மருத்துவம் போன்ற புதுமைத் துறைகளில் தான் அதற்கு இன்று ஓரளவு சொல்

வறுமை. அந்நிலையை அடியோடு மாற்றியமைத்துச் சொல் வளமூட்ட நாம் மேற்கொண்டுள்ள முயற்சியே சொல்லாக்கப்பணி.

இலக்கியச் சொற்களினும் சற்று வேறுபட்டது அறிவியல் தொழில் நுட்பம் சார்ந்த சொற்கள். சங்க காலத் தமிழன் வணிகம் பொருட்டு உலகெங்கும் கப்பல் செலுத்தினான் என்பது வரலாற்றுச் செய்தி. இதனால் கப்பலியலில் மட்டுமல்லாது, கடலியல், வானவியல், நீரியல். கட்டடவியல், மருத்துவவியல் போன்ற அறிவியல் துறைகளில் வல்லமையுள்ளவனாக விளங்கினான் என்பது பழைய செய்தி. இத்துறைகள் தொடர்பான எத்தனையெத்தனையோ அறிவியல் கலைச் சொற்களையும் அவன் பெற்றிருக்க முடியும். அன்றைய சங்ககாலத் தமிழனிடம் எதையும் ஆராய்ச்சிப் போக்கில் ஆய்ந்துணரும் தன்மை மிகுந்திருந்தது. காலப்போக்கில் அவன் மீது ஏற்படுத்தப்பட்ட பல்வேறு சமயத் தாக்கங்கள் அவனது சமுதாய நோக்கையும் வாழ்வியல் போக்கையும் மாற்றவே, அவன் அறிவியல் பூர்வமான பாதையினின்றும் விலகி ஆன்மீகப் பாதைக்குச் செல்லலானான். இதனால், பழந்தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றிருந்த அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த சொற்கள் பயன்பாடின்மையால் காலப்போக்கில் மறைந்து போயிருக்கலாம் அல்லது காலப்போக்கில் தமிழ் மக்களால் மறக்கப்பட்டிருக்கலாம்.

மேலும், அன்றைய சமுதாய வளர்ச்சி நத்தை வேகத்தில் நகர்ந்து வந்தது. ஆனால், அறிவியல் சார்ந்த இன்றைய சமுதாயம் மின்னல் வேகத்தில் வளர்ச்சி காண வேண்டிய கட்டாயச் சூழல். ஐரோப்பாவில் உருவான தொழிற்புரட்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சியின் விளைவாக ஆங்கிலம் போன்ற மேற்குலக மொழிகளில் புதிய புதிய கலைச் சொற்கள் உருவாகி நிலைபெறலாயின.

நம் நாட்டை நீண்ட காலம் ஆண்ட ஆங்கிலேயர் அறிவியல், தொழில்நுட்பம் முதலான துறைப் பாடங்களை ஆங்கில மொழி வழி புகட்டினர். காலப்போக்கில் விடுதலை வேட்கை மக்களிடையே உருவாகி வளர்ந்தபோது அரசாண்ட ஆங்கிலேயரை மட்டுமல்லாது அரசுமொழியான ஆங்கிலத்தையும் வெறுக்கலாயினர். தாய்மொழியிலேயே அறிவியல், தொழில் நுட்ப அறிவைப் பெற முடியும் என்பதில் அழுத்தமான நம்பிக்கை கொண்டனர். அதன் விளைவாக ஆங்கிலக் கலைச் சொற்களையெல்லாம் மொழிபெயர்ப்பாகவோ ஒலிபெயர்ப்பாகவோ பயன்படுத்த முனைந்தனர்.

இதுவே, தமிழில் அறிவியல் கலைச் சொல்லாக்க முயற்சி தொடங்கிய வரலாறு. இதற்கு வேகமும் விறுவிறுப்பும் ஊட்டும் வகையில் இலங்கையில்

மருத்துவப் பணியாற்றிய அமெரிக்கரான பிஷ்கிரீனின் செயல்பாடு அமைந்தது. அங்குள்ள தமிழ் மாணவர்கட்குத் தமிழில் மருத்துவம் போதிக்க முனைந்த பிஷ்கிரீன் அதற்கு உறுதுணையாக இருக்கும் பொருட்டு மருத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளிக்கொணரலானார். இந்நூல்கள் தமிழில் உருவாக்கப்பட்டன என்று கூறப்பட்டாலும் தமிழ் எழுத்துக்களாலான சமஸ்கிருத மொழி நூல் என எண்ணும் வகையில் 85 விழுக்காட்டிற்கு மேல் சமஸ்கிருதச் சொற்களே இடம் பெற்றிருந்தன. இதற்கு அடிப்படைக் காரணம், சமய அடிப்படையில் அனைத்து மட்டங்களிலும் சமஸ்கிருதம் கொண்டிருந்த ஆதிக்கம். அத்துடன் அன்று படித்தவர்களாக விளங்கியவர்கள் சமஸ்கிருத மொழிச் சார்பாளர்களாக இருந்ததுமாகும். இவர்கள் புதிய கலைச் சொல்லாக்கத்திற்குத் தகுதி மிக்க மொழி தமிழினும் சமஸ்கிருதமே என்ற எண்ணத்தைக் கொண்டிருந்ததோடு அதனை எல்லா மட்டத்திலும் பரப்பி அழுத்தம் பெறச் செய்திருந்ததும் முக்கியக் காரணமாகும். இதன் விளைவாகத் தனிப்பட்டவர்களின் கலைச் சொல்லாக்க முயற்சிகளும் அரசுத் துறை முயற்சிகளும் கூட சமஸ்கிருத அடிப்படையில் உருவாகித் தமிழ்ப் போர்வை போர்த்தி மக்களிடையே உலவி வரலாயின.

நாட்டு விடுதலைக்குப் பின்னர் எல்லாத் துறைகளிலும் ஒருவித விழிப்புணர்வு ஏற்பட்டது போன்றே தமிழ் மொழி மீது வியக்கத் தக்க விழிப்புணர்வு உண்டாயிற்று.

தமிழ் வளர்ச்சிக்குத் தடைக்கல்லாக இருந்த ஆங்கிலத்தை மட்டுமல்ல, சமஸ்கிருதம் போன்ற பிற மொழிகளின் ஆதிக்கங்களையும் ஒதுக்க முனைந்தனர். தமிழில் கலக்கப்பட்டிருந்த பிற மொழிச் சொற்களையெல்லாம் அகற்றி அவ்விடங்களில் தூய தமிழ்ச் சொற்களை இடம் பெறச் செய்தனர். இதற்கான நல்ல தமிழ்ச் சொற்களை இலக்கிய வழக்கிலிருந்து எடுத்தாள முற்பட்டனர். தேவையை நிறைவு செய்யப் புதிய சொற்களைப் படைத்துப் பயன்படுத்துவதில் பேரார்வப் பெருக்கு ஏற்பட்டது.

இதற்காக ஆங்கிலச் சொற்களை மொழிபெயர்ப்பது போன்றே தமிழ்ச் சொல் என்ற பெயரில் உருவாக்கம் பெற்றிருந்த சமஸ்கிருதச் சொற்களையும் தூய தமிழுக்கு மொழிமாற்றம் செய்யும் முயற்சி தொடரலாயிற்று.

இலக்கியச் சொல்லில் கடைபிடிப்பது போன்று மொழித்தூய்மையை அறிவியல், தொழில் நுட்பச் சொற்களில் கையாண்டால் கருத்துச் சிதைந்து பொருட் குழப்பம் ஏற்பட ஏதுவாவதால் அறிவியல் கலைச் சொற்களில் மொழித்தூய்மையினும் கருத்துத் தெளிவுக்கே முதலிடம் என்ற எண்ணம் இன்று அழுத்தம் பெற்று வருகிறது.

இதற்கு ஆங்கில மொழிக் கலைச் சொல்லாக்க வரலாறு ஏற்ற சான்றாக இன்று விளங்கி வருகிறது. இன்று ஆங்கிலத்தில் வழங்கி வரும் கலைச்சொற்களில் பலவும் ஆங்கில மொழிச் சொற்கள் போன்ற தோற்றத்தைத் தந்தபோதிலும் அவைகளில் பெரும்பாலான கலைச் சொற்களின் மூலவடிவம் லத்தீன், கிரேக்க, ஹீப்ரு மொழிச் சொற்களே என்பதை யாருமே மறுக்க முடியாது. எனினும், அச்சொற்கள் ஆங்கில மொழி ஒலிப்புக்கேற்ப மாற்ற திருத்தங்களைப் பெற்று ஆங்கிலச் சொற்களைப் போல் விளங்கி வருகின்றன. இதனால், ஆங்கில மொழியின் தூய்மையோ, பெருமையோ சிதைந்துவிடவில்லை. மாறாக வலுவும் தெளிவுமுடைய சொற்களாக ஆங்கில மொழிக்கு வளமூட்டி வருகின்றன என்பதைக் கருத்தில் கொண்டு தமிழ்க் கலைச் சொல்லாக்க உத்திகளை அறிந்துணர முற்பட வேண்டும்.

ஆங்கில மொழி புதிய சொற்களை உருவாக்குவதற்கான வேர்ச் சொற்கள் போதிய அளவு இல்லாததால் லத்தீன், கிரேக்க மொழிச் சொற்களை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால், தமிழைப் பொறுத்தவரை வியக்குமளவுக்கு வேர்ச்சொற்களையுடைய மொழியாகத் தமிழ் விளங்குகிறது.

தமிழின் ஆழத்தை அளந்தறியவியலாத பிஷ்கிரீன் தமிழும் சமஸ்கிருதமும் வெவ்வேறல்ல என்ற மயக்க உணர்வில் தாம் உருவாக்கவிழைந்த மருத்துவக் கலைச் சொற்களுக்கான வேரை சமஸ்தகிருத வழி தேடித் தமிழ்ப்படுத்த முயன்றுள்ளார். ஆனால், காலப்போக்கில் இச் சமஸ்கிருத மொழி மாயை மறைமலையடிகளாரைப் போன்றவர்களால் உரிய முறையில் விளக்கியும் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் போன்ற தமிழர் அமைப்புகளின் முயற்சியாலும் உருவாகும் கலைச் சொற்கள் முழுக்க முழுக்கத் தமிழ்ச் சொற்களாகவே வடிவெடுத்து உலவலாயின.

சமஸ்கிருதச் சொல்லை விலக்கித் தூய தமிழ்ச்சொல் காணும் வேட்கையின் விளைவாக ஆங்கிலக் கலைச் சொற்களைத் தமிழில் மொழிபெயர்ப்பது போன்றே 'தமிழ்ச் சொல்' என்ற பெயரில் உருவெடுத்த சமஸ்கிருதக் கலைச் சொற்கள் மீண்டும் தூய தமிழுக்கு மொழிமாற்றம் செய்யப்படலாயின. இதனால் ஆங்கில மூலக் கலைச்சொற்களை மொழிமாற்றம் செய்வதன் மூலம் பெறக்கூடிய பொருள் தெளிவு ஓரளவு சிதைவடைய நேர்ந்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

சான்றாக 'அறிவியல்' என்ற சொல்லையே எடுத்துக் கொள்ளலாம். இது 'Science' -ஐ குறிக்கும் சொல்லாகும் 'Science' -ஐ குறிக்க 'அறிவியல்' என்பது சரியான சொல் அல்ல. 'Science' -ஐ குறிக்கும் சொல்லாக 'விஞ்ஞானம்' எனும் சமஸ்கிருதச் சொல் அமைந்தது. 'Science' அல்லாத துறைகள் அறிவில்லாத துறைகளா என்ன? இச் சமஸ்கிருதச் சொல்லை விரும்பாத நிலையில் 'விஞ்ஞானம்'

என்ற சொல் 'அறிவியல்' எனத் தமிழ்ப்படுத்தப் பட்டது. சமஸ்கிருத மொழிவழி அல்லாது 'Science' எனும் ஆங்கிலச் சொல் தமிழாக்கப்பட்டிருந்தால் 'ஆய்வியல்' அல்லது 'இயலாய்வியல்' என்று தான் ஆக்கப்பட்டிருக்கும். ஆயினும், நீண்ட காலப் பயன்பாட்டில் .இச் சொல் இருந்து வருவதால் அதனைத் தொடர்ந்து பயன்படுத்துகிறோம், அதில் தவறேதும் இல்லை.

புதிய கலைச் சொல் தமிழில் உருவாக்க விழையும் போது மூல ஆங்கிலச் சொல்லின் அடித்தளத்தை அறிந்து உருவாக்கினால் பொருட்செறிவுடைய சொல்லாகத் தமிழ்க் கலைச் சொல்லை உருவாக்கவியலும்.

ஆங்கிலத்தில் 'Knowledge', 'Wisdom' என்ற இரு சொற்கள் உண்டு. இரு சொற்களும் பொருள் உணர்த்துகின்ற தன்மையில் வேறுபாடு உண்டு. இரண்டு தன்மைகளையும் ஒன்றாகக் கருதி தமிழில் 'அறிவு' என்று கூறிவிடுகிறோம். 'Know' என்ற சொல்லினடியாக உருவான சொல் 'Knowledge'. கல்வியறிவாலும் பட்டறிவாலும் மேலும் மேலும் செய்திகளை அறிந்து கொள்வதால் நாம் பெறுகின்ற அறிவே 'Knowledge'. இதனைத் தமிழில் 'கல்வியறிவு' எனலாம். 'Wise' என்பதிலிருந்து உருவான சொல் 'Wisdom' என்பது. இஃது ஒருவரிடம் இயல்பாகக் 'கருவிலே திரு' என்பதற்கொப்ப கருக் கொண்டு வளர்ந்து பட்டறிவுத் திரட்சியோடு வளம் பெற்றுத் திகழ்வது. இதனைச் 'சிறப்பறிவு' அல்லது 'இயல்பறிவு' எனக் கூறுவதே பொருத்தமுடையதாக இருக்கும்.

கலைச் சொற்களைப் பொறுத்தவரை அதன் அடிப்படைத் தன்மை தெளிவுபடக் கருத்துணர்த்துவதேயாகும். சில புதிய வேற்றுமொழிக் கலைச் சொற்களைத் தமிழில் வடிக்கும் போது பொருள் விளக்கத்திற்கு முதன்மை தரவேண்டி, சற்று நீளமான சொல்லாகவோ அல்லது சொற்றொடராகவோ கூட உருவாக்குவதில் தவறில்லை. சான்றாக 'Pincode' முறையை அஞ்சல் துறை அறிமுகப்படுத்தியபோது அதனை 'அஞ்சல் குறியீட்டு எண்' என்றே குறித்தனர். நாளடைவில் அச்சொல் குறுகி 'குறி எண்' என அழைக்கப்படலாயிற்று.

அண்மைக் காலத்தில் 'Cymatics'எனும் ஒரு புதுவகை அறிவியல் துறை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அலை முடியும் போதும் அதிர்வு முடிவுறும் போதும் ஒரு குறிப்பிட்ட வடிவெடுத்தே முடிகின்றது என்பது தான் அத்துறையின் மையக் கண்டுபிடிப்பு. 'Cymatics' எனும் சொல் 'Cymatica' எனும் லத்தீன் மொழிச் சொல்லிருந்து உருமாற்றம் செய்யப்பட்ட சொல்லாகும். 'Cymatica' என்பது 'அதிர்ந்து முடியும் அலை'யைக் குறிப்பதாகும். 'Cymatics' எனும் சொல்லே ஒலி பெயர்ப்பாக யுனெஸ்கோ கூரியரின் அனைத்து மொழிப் பதிப்புகளிலும் வெளியாயின. அது தமிழ் வாசகர்கட்குப் புரிய வேண்டும் என்பதற்காக 'அலை

அதிர்வியல்', 'அலை அதிர்வு இறுதி நிகழ்வியல்' என்ற இரு சொற்களை இடத்திற்கேற்ப பயன்படுத்தினேன். இதன்மூலம் அவ்விதழைப் படிப்பவர்கள் புத்தம் புதிய கலைச் சொல்லின் பொருளைப் புரிந்து படிக்க வேண்டும் என்பதே என் வேணவா. காலப்போக்கில் இதனினும் குறுகிய பொருட் செறிவுடைய புதிய சொல் உருவாகலாம்.

நாம் கண்டுபிடிக்காத அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கான கலைச் சொற்கள் நாம் எவ்வாறு உருவாக்கிப் பயன்படுத்துவது என்ற ஒரு குற்றச்சாட்டு இன்று வலுவற்றுப் போய்விட்டதென்றாலும் ஆங்காங்கே அவ்வப்போது அக்குரல் முணுமுணுப்புடன் கேட்கப்படுவதையும் மறுப்பதற்கில்லை.

கலைச் சொற்கள் உருவாக்கத்துக்கு அடிப்படைக் காரணம் அச்சொல்மூலம் அறிவியல் கருத்தை முழுமையாகத் தாய் மொழியாகிய தமிழ் மொழி மூலம் அறிந்து உணர்வதாகும். அதன் பின் அச்சொல்லை அவ்வறிவியல் பொருள் தன்மையைக் குறிக்கும் வகையில் பயன்படுத்திப் பயனடைவதாகும்.

பன்னாட்டளவில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட என்ஸைம் (Enzyme), ஐசோடோப் (Isotope), எலக்ட்ரான் (Electron), புரோட்டான் (Proton) போன்ற மூலச்சொற்களை அப்படியே ஒலிப்பெயர்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளலாமாயினும் 'என்ஸைம்' என்பதை 'செரிமானப் பொருள்' எனவும், 'ஐசோடோப்' என்பதை 'ஓரகத் தனிமம்' எனவும், 'எலக்ட்ரானை', 'மின்னணு' எனவும், நேர்மின்னணு, எதிர் மின்னணு என்றெல்லாம் மொழிபெயர்த்துப் புதிய கலைச் சொல் உருவாக்கிப் பயன்படுத்தும்போது மூலச் சொற்கள் உணர்த்தும் பொருள் விளக்கமும் நமக்கு எளிதாகப் புரிகிறது. இதன் மூலம் தமிழுக்கும் புத்தம் புதிய சொற்கள் வந்து சேர்ந்து வளமூட்டுகிறது.

ஆனால், அதே சமயத்தில் முதலெழுத்துக்களின் கூட்டுப் பெயர்களான 'ரேடார்' (Radio Detection and Ranging - RADAR), 'லேசர்' (LASER - Light Amplification by Stimulated Emission of Radiation) போன்ற சொற்களை மொழிபெயர்க்காமல் ஒலிபெயர்ப்பாகப் பயன்படுத்தலே உசிதமானது.

அதே போன்று 'ஆம்பியர்' (Ampere), 'ஓம்' (Ohm) போன்ற நினைவு பெயர்களாக அமைந்துள்ள அறிவியல் கலைச் சொற்களையும் குறியீடுகள், வாய்பாடுகள் மற்றும் சூத்திரங்களையும் எவ்வித மாற்றமும் திருத்தமும் இல்லாது உள்ளது உள்ளவாறே ஒலிபெயர்ப்புச் செய்து வழங்குவதே முறையாகும்.

மேலும், ரப்பர், பல்பு போன்ற சொற்களை மொழி மாற்றம் செய்யாமல் பயன்படுத்தலே முறை. சிமென்ட். டிஸ்யூ போன்ற சில ஆங்கிலச் சொற்கள் ஓரளவு

சிதைந்த நிலையில் தமிழ்ச் சொல் போன்ற தோற்றத்தைப் பெற்று, சிமிட்டி, திசு என்ற வடிவங்களில் வழங்கி வருகின்றது . அவற்றை அவ்வாறே பயன்படுத்திக் கொள்வதே முறையாகும். இயன்றவரை தமிழ் ஒலிச் சாயலில் சொல்லாக்கம் செய்வது சிறப்பானதாகும்.

கலைச்சொல் உருவாக்கத்துக்கான வேர்ச் சொற்களைப் பழந்தமிழ் நூல்களிலிருந்து மட்டுமே தேட வேண்டுமென்பதில்லை. நமது அன்றாட வாழ்வில் புழங்கும் வழக்குச் சொற்களிலிருந்தும் பெறலாம். சான்றாக 'Futurology' என்ற சொல்லுக்கு வருங்காலம், எதிர்காலம் எனச் சொல்லலாமாயினும் அதற்கெனத் தனிச் சொல் உருவாக்க நான் விழைந்த போது அகநானூற்றுப் பாடலில் 'எதிர்மை' எனும் சொல் கிடைத்தது. இச் சொல்லில் உள்ள 'மை' விகுதி ஒரு எதிரிடையான பொருள் தொனிப்பைத் தந்ததால் 'எதிர்வை' என 'வை' விகுதி வைத்தபோது அது பொருள் தெளிவைத் தரவில்லை. இலக்கியத்திலிருந்து என் பார்வை வழக்குச் சொற்களை நோக்கித் திரும்பியபோது 'வாழ்நாள்' என்ற சொல் மனதிற்பட்டது. தொடக்கம் உண்டு, முடிவு தெரியாது என்பதைக் குறிப்பதே 'ஃபியூச்சர்' (Future) என்ற சொல். அதேபோன்று பிறந்தாகிவிட்டது, இறப்பு எப்போது என்பது தெரியாத நிலையில் வாழுகின்ற காலத்தைக் குறிக்க 'வாழ்நாள்' என்கிறோம். 'நாள்' என்ற சொல்லால் காலத்தைக் குறிப்பது தமிழ் மரபு. அதற்கிணங்க வருகின்ற காலத்தை 'வருநாள்' என அமைத்து 'லாஜி' (Logy) என்ற பின்னொட்டுக்கு இயல் எனக் கொண்டு 'வருநாளியல்' என்ற முழுமையான கலைச் சொல்லை உருவாக்க முடிந்தது. இது 'ஃப்யூச்சராலஜி' என்ற புது அறிவியல் கலைச் சொல்லுக்கு இணையான தமிழ்க் கலைச் சொல்லாக அமைகிறது.

சில சமயம் ஆங்கிலக் கலைச் சொல்லுக்கு நேரான தமிழ் வழக்குச் சொற்கள் கிடைப்பின் அதனை அப்படியே பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை. சான்றாக 'Cable of wooden anchor' என்ற சொற்றொடர் மீன்வளத்துறையினரால் கையாளப்படுகிறது. இதைத் தமிழில் மொழிபெயர்ப்பதென்றால் 'மர நங்கூரக்கயிறு' என்று பெயர்க்க வேண்டும். ஆனால், தமிழக மீனவர்கள் இக் கயிறை 'சீனிக்கயிறு' என்று அழைக்கிறார்கள். இச்சொல் குறுகியதாகவும் செறிவுடையதாகவும் இனிமைச் சொல்லாகவும் இருப்பதால் 'சீனிக்கயிறு' என்ற சொல்லே ஏற்றது எனப் பயன்படுத்தலாம்.

அறிவியல் கலைச் சொற்களைப் பொறுத்தவரை ஒரு சொல் ஒரு பொருள் என்ற அடிப்படையில் சொல்லுருவாக்கம் செய்தல் அவசியம். ஒரு கலைச் சொல் பல பொருள்களைத் தருமாறு அமைப்பதும் பயன்படுத்துவதும் குழப்பத்துக்கே இடமளிப்பதாயமையும். சான்றாக, Ascertain, declaration, proclamation, announcement போன்ற ஒரே மாதிரி சாயல் கொண்ட பல சொற்களுக்கு ஒரு

சொல்லுக்கு ஒரு பொருள் கொடுக்கும் வகையில், "இயம்பல், விரித்தல், மொழிதல், விளம்பல், பகர்தல், பன்னல், நவிறல், கத்துதல், உரைத்தல், கூறல், வழங்கல், குயிலல், புகலல், பேசல், நொடித்தல், பிறழ்தல், பறைதல், செப்பல், அதிர்த்தல், பணித்தல், சொற்றல், ஆடல், சொல்லுதன் என்ப" என்ற பிங்கல நிகண்டு தரும் சொற்பட்டியல் போன்றவற்றிலிருந்து பொருத்தமான சொல்லைப் பயன்படுத்தலாம்.

ஆங்கிலக் கலைச் சொல்லாக்கத்தைப் பொறுத்தவரை வரன்முறையான சில விதிமுறைகளை வகுத்து, அவற்றின் அடிப்படையில் கலைச் சொல் உருவாக்கம் நடைபெறுகிறது. நாமும் அதே முறையைக் கடைபிடித்துச் சொல்லாக்கம் செய்து கொள்வது பல்லாற்றானும் பயனளிப்பதாகும்.

ஆங்கிலம் போன்ற மேனாட்டு மொழிகள் வகுத்துப் பின்பற்றும் முக்கிய விதிகளில் ஒன்று முன்னொட்டு (Prefix), பின்னொட்டு (Suffix) பற்றியதாகும். இத்தகைய விதிமுறைகளைப் பின்பற்றாமல் சொல்லாக்கம் செய்ய முனையும்போது சொல்லாக்கப் பணி கடினமாகிறது. சில சமயம் முன்னுக்குப் பின் முரணாகவும் அமைய நேர்கிறது. சான்றாக 'Photography' என்பதை 'நிழற்படம்', 'புகைப்படம்', என்கிறோம். 'Photosynthesis'என்பதை 'ஒளிச்சேர்க்கை' என்கிறோம். 'Photo' என்ற முன்னொட்டோடு தொடங்கும் ஆங்கிலச் சொற்கள் முப்பதுக்கு மேல் ஆங்கில அகர முதலியில் காணப்படுகின்றன. 'Photo' என்ற முன்னொட்டுக்கு 'ஒளி' எனப் பொருள் கொண்டால் 'Photography' - ஒளிப்படம் , 'Photosynthesis' - ஒளிச்சேர்க்கை, 'Photostate' - ஒளி நகல் என எளிதாகச் சொல்லாக்கம் செய்து கொள்ளலாம்.

அதே போன்று 'Bio' என்ற முன்னொட்டுக்கு உயிர் எனப் பொருள் கொண்டால் அடுத்துவரும் கலைச் சொற்களுக்கு எளிதாகப் பொருள் காணவியலும்.

சான்றாக	Biology	-	உயிரியல்
	Biotechnology	-	உயிர்த் தொழில் நுட்பம்
	Bioethics	-	உயிர் அறவியல்
	Biosphere	-	உயிர் மண்டலம்

எனப் புதுப்புதுச் சொல்லாக்கங்களை எளிதாக உருவாக்க இயலும். 'Logy' எனும் ஆங்கிலப் பின்னொட்டுக்கு நீண்ட காலமாக 'இயல்' எனும் தமிழ்ப் பின்னொட்டைப் பயன்படுத்தி வருகிறோம். இவ்வாறே 'Sphere,' 'Macro', 'Micro', 'Hydro', 'Tele', 'Mono', 'Phobia', 'ics' போன்ற ஆங்கில முன்னொட்டு, பின்னொட்டுகளுக்கு நிகரான தமிழ்ப் பின்னொட்டு, முன்னொட்டுகளைக் கண்டறிந்து பயன்படுத்த முனைந்தால் தமிழில் கலைச் சொற்களை உருவாக்குவது

மிக எளிதான காரியமாக அமைந்துவிடும் என்பது திண்ணம்.

அதிக அளவிலான கலைச் சொற்கள் அறிவியல் துறைத் தொடர்பான நூலாசிரியர்கள், கட்டுரையாளர்கள், இதழாளர்கள், பாடம் புகட்டும் ஆசிரியர்கள், தனியார்வலர்கள் ஆகியோரைக் கொண்டே நிகழ்கின்றன.

'தமிழ் வழிக் கல்வி' என்ற நிலை உருவாகும் போது பெருமளவில் அறிவியல் தமிழ் நூல்கள் எழுத வேண்டிய காலக் கட்டாயம் ஏற்படுகிறது. இதனால், போதிய அளவு கலைச் சொல்லாக்கமும் நடைபெறுகிறது. பயிற்சி மொழியாகத் தமிழ் இல்லாத நிலையில் சொல்லாக்கப் பணியும் முழுவீச்சில் நடைபெற ஏதுவில்லாமல் போய் விடுகிறது.

பரவலாகப் பல்வேறு துறையினரால் அவ்வப் போது உருவாக்கும் கலைச் சொற்களும் அவரவர் மனப்போக்கிற்கும் பொருளறிவுக்கும் மொழித் திறனுக்குமேற்ப அமைகின்றனவே தவிர அவைகளில் சீர்மையைக் காணவியலவில்லை. இந்நிலை மாற வெளியிடப்படும் கலைச் சொற்கள் துறை வல்லுநர்களையும், தமிழ் அறிஞர்களையும் கொண்ட வல்லுநர் குழுவால் தரப்படுத்தம் செய்யப்படவேண்டும். இக் குழுவில் தமிழ் வழங்கும் பிற நாடுகளைச் சேர்ந்த வல்லுநர்களும் இடம் பெற வேண்டியது அவசியமாகும். தரப்படுத்தக் குழுவில் இடம் பெறுவோர் குறைந்தது பத்தாண்டு காலம் சொல்லாக்கப்பணியில் பட்டறிவு பெற்றவராக இருத்தல் வேண்டும்.

தரப்படுத்தம் செய்யப்படும் தமிழ்க் கலைச் சொற்கள் 'கலைச் சொல் வங்கி' எனும் பொது அமைப்பிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அவற்றை அவர்கள் துறை வாரியாகப் பிரித்து தேவைப்படுவோர்க்கு அவ்வப்போது வழங்க வேண்டும்.

44

வேளாண்மையில் அறிவியல் தமிழ்

அருணா. இராசகோபால்

முன்னுரை

தமிழ் உலகில் மூத்த மொழிகளில் ஒன்றெனக் கருதப்படுகிறது. "தமிழ் அல்லது திராவிடம் என்பது தென்னிந்தியாவின் ஒரு மொழி மட்டுமே என்பதில்லை. ஆரியர் வருகைக்கு முன்பு காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரை அனைத்திந்தியாவிலும் பேசப்பட்ட மொழி" என்று வரலாற்றறிஞர் பண்டர்க்கர் (1919) அவர்களை மேற்கொள் காட்டி அண்ணல் அம்பேத்கார் (1990)* அறிவித்தார். தமிழ்மொழி தமிழக, ஈழ நிலை வெல்லைகளோடு மட்டுமின்றி, உலகின் பல பகுதிகளுக்கு வேளாண்மை செய்ய பிரித்தானிய ஆட்சியாளரின் தேவைக்காக புலம் பெயர்ந்த உழைக்கும் மக்களின் மொழியுமாகும். இதனால் தமிழுக்குப் பன்னாட்டு மொழி என்னும் நிலைப்பாடும் உண்டு. மொழிகள் காலத்திற்கேற்ப புது வளமும், புது பொலிவும் பெறவேண்டும். உலகின் அறிவியல் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் நிலையில் தமிழ்வளர்ச்சி அறிவியலில் பல துறைகளிலும் வளரவேண்டும். தமிழ் மக்களின் அடிப்படைத் தொழில்களில் முதலாவது வேளாண்மை. வேளாண்மைச் சார்ந்த அரிசி (ரைஸ்ச்), ஊர் (விளை - வில்லா - வில்லேஜ்), கான் - கால்வாய் (கெனால், சேனல்) போன்ற வேளாண்மைச் சொற்களையும் தமிழ் உலக மொழிகளுக்கு வழங்கியுள்ளது.

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு

என்னும் குறள் வேளாண்மையின் பெரும் பகுதியைச் சுட்டுகிறது. தொல்காப்பியத்தில் ஓலை / இலை போன்ற அறிவியலின் தொடக்க நிலைகளைக் காணலாம். பழந்தமிழ் இலக்கியங்கள் வேளாண்மைக் கூறுகளை உள்ளடக்கியுள்ளன.

---

* 1956க்கு முன்பு எழுதப்பட்ட செய்தி, 1990-ல் மகாராஷ்டிர அரசால் நூல்வடிவில் வெளியிடப்பட்டது.

வேளாண்மைத் தகவல்கள்

பிரித்தானிய குடியேற்ற ஆட்சியும், இந்திய நடுவண் அரசும், தமிழ்நாடு அரசும் 'கூடுதல் உற்பத்தி' (Grow more) இயக்கத்தை 1950-களில் செயல்படுத்தின. இந்தியாவிலும் தமிழகத்திலும் 1960-களில் 'பசுமைப்புரட்சி' உருவானது. உயர்விளைச்சல் தரும் குட்டையான நெல் வகைகளை உயர்ந்த அளவு உரமிட்டு வளர்த்து, கூடுதல் விளைச்சல் பெற்றோம். இதற்காக நிலத்தில் உழைக்கும் மக்களும், உழவர்களும் (நிலச்சொந்தக்காரர்களும்) செய்திகளை அறியும் வண்ணம் வேளாண்மை அறிவியல் தகவல்கள் தமிழில் படைக்கப்பட்டன. அறிவியல் செய்திகளைத் தாங்கிய துண்டறிக்கைகள், கையேடுகள், சிறு நூல்கள் (Bulletins), குறுநூல்கள் (Booklets), புத்தகங்கள், கட்டுரைகள், மாத இதழ்கள், வேளாண்மைத் தொகுப்புகள் ஆகியன வெளியிடப்பட்டன. இப்படைப்புகள் எளிய தமிழில் படைக்கப்பட்ட நிலை ஒரு சிறப்பு; அதுவே, தமிழில் வேளாண்மை அறிவியல் தமிழ் (மொழி) வளர்ச்சிக்கு ஒரு குறையுமாகும். தமிழில் முழு நிறை அறிவியல் படைப்புகள் தேவைப்படுகின்றன. வேளாண்மை இயலில் அறிவியல் தமிழ் ஆக்கம் பெற முதற்கண் படைப்புகள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களுக்குப் பயன்பட வேண்டும். வேளாண்மைக் கல்வி அரங்குகளில், தமிழ் பயிற்று மொழியைச் செய்திக்கான ஒரு கருவியாகக் கொண்டு தமிழ் மக்களுக்கு உதவ வேண்டும். தமிழ்மொழி சார்ந்த மக்கள் தம் மொழி அறிவியல் செய்திகளைச் சொல்ல ஏற்ற கருவி என்னும் நம்பிக்கை கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் சமுதாய, பண்பாட்டு, வாழ்நிலை, வாழ்முறை ஆகியன தமிழ் மொழியின் வளர்ச்சியில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் பங்களிக்கின்றன.

வேளாண்மை இயல் அறிவியல் தமிழுக்கு முன் தேவைகள்

வேளாண்மை இயலைத் தமிழில் படைக்க ஏழு தேவைகள் உள்ளன. அவை:

- அறிவியல் சொல்லீடுகள் (கலைச் சொற்கள்) உருவாக்கப்படுதல்; நூல்கள் படைக்கப்படுதல்.
- தமிழில் வேளாண்மைச் செய்திகளைப் பயிலும் தேவை.
- வேளாண்மை இயலும், பிற அறிவியல் துறை நூல்களும் தமிழில் வளரச் சமுதாயத் தேவைகள்.
- வேளாண்மை இயல் நூல்கள் வழி பொருளாதாரப் பயன்கள்.
- அறிவியல் படைப்புகளுக்கு ஏற்ற ஊக்கம் அளித்தல்.

- ❖ உலகச் சமுதாய மக்கள் போல் மொழியை வளப்படுத்தும் ஆர்வ விழைவுகள்.
- ❖ அரசு,மக்கள் ஈடுபாடும், காலச் சூழலுக்கேற்ப மொழி மேம்பாட்டிற்கு அரண் அமைத்தல் ஆகியன.

வேளாண்மை இயலுக்கு அறிவியல் சொல்லீடுகள்

வேளாண்மை இயல் தனி அறிவியல் அல்ல: பல துறைகளையும் இணைத்துக் கொண்டு இத்துறைக்கே உரிய பிரிவுகளான உழவியல் (Agronomy), தோட்ட இயல் (Horticulture)ஆகியவற்றையும் கொண்டுள்ளன. இந்த இரண்டு பெரும் பிரிவுகளும் சொல்லீடுகளைப் பெற்று வளம் பெறுகின்றன.

வேளாண்மை தொழில் நுட்பங்கள் உழவர்களைச் சென்றடையும் வழியில் சொல்லீடுகள் எளிமைப்படுத்தப்பட்டு சொல்லப்பட்டன / சொல்லப்படுகின்றன. இம்முயற்சியில் நிறைகளும், குறைகளும் உள்ளன.

நிறைகள்

- செய்திகள் எளிமையாகச் சொல்லப்படுகின்றன.
- அறிவியல் சொல்லீடுகள் உழவர்கள் புரிந்துகொள்ளும் வழியில் சொல்லப்படுகின்றன.
- (எ.கா)நைட்ரஜன்- தழைச்சத்து (பச்சையான இலை வண்ணம் உருவாவதால்)
- பாஃச்பரஃச் - மணிச்சத்து (திரண்ட தானியமணி உருவாவதால்)
- பொட்டாசியம் - சாம்பல்சத்து (சாம்பலில் இச்சத்து உள்ளது)
- தகவல்கள் சுருக்கிச் சொல்லப்பட்டன.
- உழவர்கள் பயன்பெறும் நிலையில் இப்படைப்புகள் உருவாக்கப்படுகின்றன.

(Inputs- இடுமுதல்; Flume- பாய்முகம் ; Borderstrip - நெடும்பாத்தி / ஓரத்தளை; Basin - அடங்குபாத்தி)

குறைகள்

- சொல்லீடுகள் சொல்லீடுகளாக இல்லாமல் சொல்லீட்டின் விளக்கமாக உள்ளன.

- வேளாண்மைத்துறைக்குரிய சொல்லீடுகள் தொடர்புடைய பிற துறைகளுக்கு ஏற்புடையதாக இல்லை.

- எளிமையான படைப்புகளால் ஆழமான அறிவியல் செய்திகளைப் படைக்க வாய்ப்பில்லை.

- சொல் பிறப்பு தொடர்பான அகராதிகள், சொல் தெள்ளுரை (Glossory) பயன்படுத்தப்படவில்லை.

சொல்லீடுகளுக்கு வழிமுறைகள்

- தமிழ் மக்களின் வழக்கில் உள்ள சொல்லீடுகளைப் பயன்படுத்தல். (ஏர் - உழவு - தொழி - நாற்றங்கால் - கான் - கால்வாய் - வாய்க்கால்).

- தமிழ் இலக்கியங்களில் உள்ள சொற்களைச் சொல்லீடுகளாக ஆக்கிக் கொள்ளலாம். (ஓம்புதல் - ஓம்பப்பயிர்; பண்பாடு - நிலப்பண்பாடு; தழை எரு; கொழை எரு).

- மறைந்துவரும் தமிழ்ச் சொற்களையும் தமிழ்ப் பெயர்களையும் பயன்படுத்தல். (கனிப்பொன்னா - மங்குஃச்தான்; ஏனம் - பன்றி; வாகான - Optimum ; அறுந்தல் - Critical).

- சொல்லீட்டின் வேர்களை அறிந்து புது சொல்லீட்டை உருவாக்குதல் (Soil profile மண் அடுக்கு / மண் அடுக்கம் / மண் அடுக்கமைவு; Gene - பண்பகம்; Chromosome- நிறத்திறி).

- பிற திராவிட மொழிகளில் உள்ள ஏற்ற நல்ல சொற்களைப் பெறுதல் (தோவாளை - Gynandropsis phentaphylla; கத்தரி - வழுதுணங்காய்)

- ஆங்கில, செருமானிய, பிரஞ்சு மொழிகளிலிருந்து சொல்லீடுகளை ஒலிபெயர்த்தல் (Manganese - மங்கனம்; Boron - பொரிகம்).

- தமிழின் சொல்லாக்க மரபுகளைப் பின்பற்றலாம்.

  (மிளகாய் - மிளகு போன்ற பயன்தரும் காய்; மக்காச்சோளம் - மொக்கையான கதிர் உடைய மொக்கைச் சோளமாகி மக்காச் சோளமானது; பப்பாளி - பப்பையா என்பதன் ஒலிமாற்றம்; பேரி - பியர் என்பதன் ஒலிமாற்றம்; கொய்யா - கோவா என்பதன் ஒலிமாற்றம்).

- தொடர்புடைய பெயரிலிருந்து புதுப்பெயர் புனைதல்

  (இலைக்கோசு, பூக்கோசு, கிளைக்கோசு, சுருள்கோசு, சீனக்கோசு, நூல்கோசு, சிரக்கோசு).

- அறிவியலுக்கான உலகப்பொது அறிவியல் குறியீடுகளுக்கான சொல்லீடுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(π : பை; β : ப்பீட்டா; γ : க்காமா; ϕ : தீட்டா).

- தமிழில் இல்லாத வல்லொலிகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

* ஜ, ஷ, ஸ போன்ற அயல்மொழி உச்சரிப்புக்காக உருவாக்கப்பட்ட சொற்களைத் தமிழ்மொழிவாணர்கள் ஏற்கவில்லை.

* ஜ = இஞ்ஃச - இஞ் : சாவா (Java) ; இஞ்சி.

* ஷ = ஃழ் - பூசாரஃழ்மி (Pusa Rakshmi).

* ஸ = ஃச - சொலனம் ஃசாந்தோகார்ப்பம் (Solanum xanthocarpum)

* ஃ = ஆய்தம் சொல்லை மென்மைப்படுத்துகிறது ; தமிழில் இந்த உத்தி பயன்படுத்தப்படுகிறது (ஃபாத்திமா).

* எதிர் ஆய்தம் சொல்லை வன்மைப்படுத்தப் பயன்படுமா? (ஆசான், 1986).

Dunkel - ட்டங்கல் - (எதிர் ஆய்தம்) டங்கல்

Beetroot - ப்பீட்ரூட் - (எதிர் ஆய்தம்) பீட்ருட்

இது பற்றியும் கலந்துரையாடி முடிவு செய்யலாம்.

- தமிழில் இயலாத சொல்லீடுகளுக்குத் தற்காலிகமான பிற மொழிச் சொல்லீடுகளைப் பயன்படுத்தலாம் ; ஆங்கிலச் சொல்லீட்டையும் பயன்படுத்தலாம்.

- கலைச் சொல்லாக்கத்திற்கு (சொல்லீடு ஆக்கத்திற்கு) முனைவர் வா. செ. குழந்தைசாமியின் வழிமுறைகளை ஏற்கலாம்.

தமிழில் வேளாண்மைச் செய்திகளைப் பயிலும் தேவை

தமிழ்மொழி வழியிலேயே பெரும்பாலான உழவர்கள் வேளாண்மைச் செய்திகளைப் பயிலுகின்றனர். வேளாண்மைத் துறையின் சான்றிதழ், பட்டைய (Diploma) வகுப்புகள் தமிழ் வழியே நடத்தப்படுகின்றன. வானொலி , தொலைக்காட்சி சொற்பொழிவுகள் மற்றும் விளக்குமை (Demonstration) ஆகியன தமிழ்வழியே நடைபெறுகின்றன. மேல்நிலைப்பள்ளியில் செயல்பட்டு வரும் வேளாண்மைத் தொழிற்கல்வி மாணவர்களுக்கு (தமிழ் பயிற்று மொழி

மாணவர்களுக்கு) தமிழ்வழி பயிற்றுவிக்கப்படுகிறது. வேளாண்மை சான்றிதழ், பட்டயப் படிப்புகள் மேலும் விரிவடையும்போது தமிழ் பயிற்று மொழி வாய்ப்பு பெறும்; இதற்கு ஏற்ற படைப்புகளும், நூல்களும் ஆக்கப்படலாம்.

வேளாண்மை (கல்வி) பட்டப்படிப்பு நிலையில் ஆங்கில வழியிலேயே இந்தியாவின் மாநிலங்களில் புகட்டப்படுகின்றன. இந்தி மாநிலங்களில்(உ.பி.) இந்திவழி வேளாண்மை இயல் புகட்டப்படுகிறது ; ஆங்கிலப் பயிற்று மொழி வழியே பெரும்பாலும் உள்ளது. குசராத் மாநிலத்தில் குசராத்தி வழி வேளாண்மைப் பட்டப்படிப்பு நடத்தப்பட்டு இப்போது கைவிடப்பட்டு விட்டது.

வேளாண்மை பட்டப் படிப்புக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு சில நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

- விவசாய மூலம் (சுப்பையா முதலியார், 1966)
- திசுவறை மரபியல் (அஞ்சனமழகன், 1972)
- பாசன நெறிமுறைகள் (சிவனப்பன், 1974)
- தோட்ட வளம் (இராசகோபால், சண்முகவேலு, 1980)
- பயிர்நோய் இயல் (கோவிந்தசாமி, அழகிய நாகலிங்கம், 1974)

ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன. பல சிறு நூல்களும் (Bulletins), குறுநூல்களும் (Booklets) வெளியிடப்பட்டுள்ளன. வேளாண்மைப் பட்டப்படிப்பு இந்திய, பன்னாட்டு சூழல் கருதி மேற்கொள்ளப்படும் நிலையில் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு வேளாண்மை இயல் தமிழ் நூல்கள் துணைப்பயிலலுக்கு உதவும். தமிழ் அறிவியல் படைப்புகள் நூலக அளவில் பயன்படும். பாட வகுப்புகளில் வெற்று மண்டைகளோடு அமரும் மாணவர்கள் தமிழ்வழி வேளாண்மை அறிவியல் நூல்கள் வழி செய்திகளை மனத்தில் நிறுத்தலாம்; இவர்தம் புரிதலுக்கு உதவும்.

ஆங்கிலப் பயிற்று மொழி (மட்டுமே) பட்டப்படிப்பில் உள்ளது. மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ்வழி படித்த மாணவர்கள் (மாணவியரும் மாணவர்களே) 60 சதவிகிதம் வேளாண்மைப் படிப்பில் இடம் பெறுகின்றனர். இவர்கள் தமிழ் ஊடகத்திலிருந்து ஆங்கில ஊடகத்திற்குச் செல்வதற்குச் சில தனி வகுப்புகளும், ஆற்றுப்படுத்தலும் (Orientation) தேவைப்படுகின்றன. தமிழ்வழி பயிலுவதைவிட்டு தொடக்கநிலை , உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளில் ஆங்கில ஊடகத்தையே நாடும் மேட்டுக்குடிகளின் வழியை உழைக்கும் மக்களும் விரும்புகின்றனர். ஆங்கில ஊடகம் பற்றிய மாயைகளும் மக்களிடம் இடம்பெற்றுவிட்டன.

அறிவியல் தமிழுக்குச் சமுதாயத் தேவைகள்

"ஒரு மொழியின் விழும நிலை (மதிப்பீட்டு நிலை) அம்மொழி பேசும் சமுதாயத்தின் (சமூகத்தின்)விழும (மதிப்பீட்டு) நிலையைப் பிரதிபலிக்கும். ஏனென்றால் மொழியின் மாற்றம், சமுதாய மாற்றத்தைப் பின்தொடர்ந்து வருகிறது. அதாவது சமுதாயத்தில் முதலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றபடி மொழி தன்னை மாற்றி அமைத்துக்கொள்கிறது"(அண்ணாமலை,1990). தமிழ்மொழி பேசும் மக்கள் தொகுதி பல்குழுவாய்,வருணாசிரம சாதி அமைப்பால் பாழ் செய்யும் உட்பகையோடு வாழ்கிறது. இவற்றின் முதல் விளைவு: தமிழ் - தமிழர் - தமிழ்ச் சமுதாயம் - தமிழ்ப் பண்பாடு - தமிழ்த்தேய இனம் - தமிழர்களின் படைப்பாற்றல் - தமிழ் பயிற்று மொழி என்னும் அடையாளங்கள் அவலத்திற்கு ஆட்படுகின்றன.

தமிழ் அடையாளத்திற்கு அவலம்

தமிழில் பேசுவது, தமிழ்ப்பண்பாட்டு, வள்ளுவ, சங்க விழுமங்களை (மரபுகளை) வெளிப்படுத்துவது இழிவாகக் கருதப்படுகின்றன. தமிழ்ப் பெயர்களைச் சூட்டுவதும், தமிழில் முகமன் (வணக்கம்) சொல்வதும், ஊசாவுவதும் கூடத் தாழ்வாகக் கருதப்படும் நிலைகள் அடையாள அவலத்தைக் காட்டுகின்றன. தமிழ்ப் பெயர் பூண்ட மாணவர்கள், தமிழ்வழி பயின்ற மாணவர்கள், கல்லூரியில் நிகழும் சீண்டல் (ragging) இவர்களுக்குச் சற்றுக் கூடுதலாக இருக்கிறது.

தமிழ்வழி தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் போதிய வசதியின்மையால் தமிழ்ப் பயிற்று மொழி மாணவர்கள் இன்னல்களையும், இழிவுகளையும், அச்சத்தையும், மனவிகுவையும் சுமக்கின்றனர். 'பாடம் பயிற்றுவிக்க ஆசிரியர்கள் இல்லை : பள்ளிகளை நிர்வகிக்க தலைமை ஆசிரியர்கள் இல்லை : உழைக்கும் மக்களின் குழந்தைகள் பயிலும் நகராட்சிப்பள்ளிகளின் நிலை இவை" (கே.எம்.சி. 1994). ஆழ்ந்த புகட்டலும், புலமையும், சிக்கலான, தேவையான பாடங்களான வேதியியல், இயற்பியல், கணிதம் போன்ற பாடங்களுக்குரிய ஆசிரியர் பணியிடங்கள் (பதவிகள்) காலியானால் அந்த இடங்களை நிரப்பும் முயற்சிகள் இல்லை. இந்நிலை தமிழ் ஊடக வகுப்புகளுக்கு மட்டுமே உண்டு.

அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்குப் பெரும் ஊதியம் வழங்கி வரி செலுத்தும் சாமான்ய மக்களின் செல்வங்கள் கல்வியை முழுநிறைவாகப் பெறமுடியவில்லை. பத்தாம் வகுப்பு, மேல்நிலைப் பள்ளி தமிழ்ப்பாடநூல்கள் செறிவாக எழுதப்படவில்லை: தெளிவில்லாமல் எழுதப்பட்டிருப்பதாகக் கருத்தறிவிக்கப்படுகிறது. தமிழ்ப் பயிற்று மொழி மாணவர்களின் எண்ணிக்கை

மிகுதியாக இருப்பதால் அவர்களின் இறுதித் தேர்வுத் தாள்கள் முறையாக மதிப்பீடு செய்யப்படுவதில்லை என்பதும் கல்வியாளர்களின் கருத்து. தமிழ் மக்களில் உழைக்கும் மக்கள் பெருவாரியாக உள்ள நிலையில் தமிழ் ஊடகமே ஏற்புடையது. தாழ்வானதாகப் பொறுப்புடையோரால் கருதப்படுவது கணக்கில் கொள்ளத்தக்கது.

பன்னாட்டு, இந்திய (பல) மாநிலங்களின் சூழலில் ஆங்கில ஊடகம் வழி பயில்வது சிலரின் தேவையாகவும், விருப்பமாகவும் இருக்கலாம். தமிழ் பயிற்றுமொழிவழி தொடக்கநிலை, உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி அளவில் பயில்வது உழைக்கும் மக்களின் வாழ்வுரிமை. இவர்கள் கல்லூரி அளவில் ஆங்கில ஊடகத்திற்கு மாறுவதில் தடையில்லை. தேவைப்பட்டால் ஆங்கில மொழி அறிவை வளர்த்துக்கொள்ளத் தனிப்பயிற்சி பெறலாம். தமிழும், ஆங்கிலமும் தமிழ் மக்களுக்குத் துணையாக அமைய வேண்டும். ஆங்கிலம் இந்தியாவில் நிலைத்திருப்பதற்குத் தமிழகம் நடத்திய மொழிப் போராட்டமே காரணம். இந்தியாவில் மொழிச்சிக்கலில் நீதியை உருவாக்கிய தமிழர்கள் மொழிவழி தாழ்த்தப்படுவது வரலாற்றின் கொடிய அநீதியாகும்.

தமிழ்மொழி ஊடகத்தால் பொருளாதாரப் பயன்கள்

அனைத்திந்திய அளவிலும், அனைத்து நாடுகள் அளவிலும் ஆங்கிலமொழி பெரிதும் பயன்படுகிறது. அறிவியல் கல்வியைத் தமிழ்வழி கற்றுத் தேவையான உலகத் தொடர்புமொழி (ஆங்கிலம்) அறிவுபெற வாய்ப்புகள் உள்ளன. அதற்கான வசதிகளோடு செயல்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புகள் குறைந்த நிலையில் பிற மாநில, பிற நாட்டு வேலை வாய்ப்புகளை நம்பியுள்ள தமிழர்கள் ஆங்கில வழிக் கல்வியைப் பட்டம், பட்ட மேற்படிப்புகளில் ஏற்பதில் நியாயமும் உண்டு. தொடக்கக்கல்வி முதல் ஆங்கில வழி பயில வேண்டும் என்பது அவர்தம் அச்சத்தையும், வாழ்வில் நம்பிக்கையின்மையையும் புலப்படுத்துகின்றன. ஆங்கில அறிவும், புலமையும் தமிழ்ச் சமுதாயத்திற்கும், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் பயன்படவேண்டும். இத்தகு பின்புலத்தில் ஒரு அளவான முயற்சியை மேற்கொள்ளலாம். மருத்துவம் (Medicine), பொறியியல், வேளாண்மையியல், கணினிக்கல்வி, மேலாண்மை இயல் மற்றும் அறிவியல் பாடங்களில் 6 முதல் 5ல் ஒரு பங்கு பாட அளவைத் தமிழ்வழிப் படிக்க வசதிகளோடு ஏற்பாடு செய்யலாம்.

அறிவியல் படைப்புகளுக்கு ஏற்ற ஊக்கமளிப்பு

அறிவியல் படைப்புகளை உருவாக்கும் முயற்சிகள் பலரும், பலதுறை அறிஞர்களும் சேர்ந்து செய்யப்படவேண்டியவை. உரிய துறை சார்ந்த

அறிஞர்களும், தமிழ்ப் புலமை பெற்றவர்களும் ஒருங்கிணைந்து சொல்லீடுகளை உருவாக்கவேண்டும். இதற்குரிய நிதிவசதிகளை அரசும், தமிழ் அறவாணர்களும் செய்யவேண்டும். தமிழ்ப் பல்கலைக்கழகம் 1984-ல் பலதுறை அறிஞர்களைக் கொண்டு உருவாக்கிய அறிவியல் சொல்லீட்டுத் தொகுப்பை அச்சிட்டு வெளியிட வேண்டும்; வெளியிடப்படும் சொல்லீடுகளைச் செந்தரப்படுத்த வேண்டும்.

தமிழில் அறிவியல் படைப்புகளை ஊக்கப்படுத்தத் தமிழ்நாடு அரசின் சிறப்புப் பகுதியீடு மருத்துவப்படிப்பிற்குப் பட்ட வகுப்பில் இருப்பது போலப் பொறியியல், வேளாண்மை இயல், கால்நடை மருத்துவம், மீன்வள அறிவியல் போன்ற பட்டப்படிப்புகளுக்கும் சிறப்புப் பகுதியீடு (Special Category) இடஒதுக்கீடு செய்யப்படவேண்டும். மாணவர்களின் மதிப்பெண்களோடு (Marks) அவர்தம் பெற்றோரின் படைப்புகளுக்கும் ஒருபகுதி மதிப்பெண்கள் வழங்கப்பட்டு தேர்வு செய்யப்படவேண்டும். மேல்நிலைக்கல்வி தமிழ்வழிக் கற்ற மாணவர்கள் மட்டுமே இப்பகுதியில் இடம்பெற வேண்டும். தமிழ்வழிப் பயின்றவர்களுக்குக் கல்லூரி அளவில் 50 சதவிகித இடங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும்; எஞ்சிய 50 சதவிகிதம் தமிழ், ஆங்கில ஊடக மாணவர்களுக்குப் பொதுப் போட்டியாக அமைய வேண்டும். தமிழ்மொழியின்பால் உருவாகிவரும் தாக்குதல்களை எதிர்கொள்ள 'வாய்ப்புகளும் - தடைகளும் (Checks and balances) அமைக்கப்படவேண்டும்.

மொழியை வளப்படுத்தும் முயற்சிகள்

மொழி ஒரு நீண்டகால பயிற்சி. தாய்மொழிவழி கற்பது அறிவுச் செழுமைக்கும், மொழிபேசும் மக்களின் வளர்ச்சிக்கும் உதவியாக அமையும். மொழிவழி ஒரு மக்கள் தொகுதி சமுதாயப் பண்பாட்டு ஒருமைப்பாடு அமைகிறது. மக்களின் உளவியல் தேவைகளுக்கும் மொழி மேம்பாடு உதவுகிறது என்னும் உண்மையை அரசின் பொது ஊடகங்கள் வழி மக்களுக்குச் சொல்ல வேண்டும்.

"கல்வி கற்பதும், ஆலய வழிபாடும் தாய்மொழியிலேயே நிகழ வேண்டும் என்ற இயக்கம் ஐரோப்பிய நாடுகளிலும் கி.பி.1500 ஆம் ஆண்டிற்குப் பிறகே ஏற்பட்டது". அதற்கு முன்பு இலத்தீன் மொழியே பயன்படுத்தப்பட்டது. பெரும் போராட்டத்திற்கு பிறகுதான் தாய்மொழித் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது... அனைத்துக் கல்வியும் அப்படியே (இலத்தீன் மொழியிலேயே)நடைபெற வேண்டும் என்று வாதாடியது. இந்த அணி போப்பாண்டவர் தலைமை வகித்த (அர்ச்சக) பூசாரித்துவ அணி இதை எதிர்த்து பாமர மக்களுக்காக வாதாடியது மார்டின் லூதர் தலைமையில் ஏற்பட்ட... அணி... கல்வியும் வழிபாடும்

தாய்மொழியிலேயே நடைபெற வேண்டும் என்று போராடி வெற்றியும் பெற்றது (பரமசிவம், 1994).

மொழி, பண்பாட்டு அடையாளங்களை இழந்து தவிக்கும் (10 இலட்சம்) இந்திய நாடோடி மக்களின் அவல வாழ்வைப் பல்கேரியாவில் இக்கட்டுரை ஆசிரியர் நேரில் காணமுடிந்தது. "ஐரோப்பாவின் முதல் வகுப்பு மனிதர்கள் இவர்கள்" என்று வரலாற்று ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. யூதர்களின் தொடர்ச்சி (Jew's continuity) என்னும் முயற்சியில் ஃகெப்ரு மொழியும் அதன் மேம்பாடும் மையக் கூறுகளாகக் கருதப்படுகின்றன.

தமிழ்த் துறவியார் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் சீரிய முயற்சியால் தமிழில் அறிவியல் படைப்புகளைக் கருத்தரங்குகள் வழி ஊக்குவிக்கும் தமிழக அறிவியல் பேரவையின் முயற்சிகள் பாராட்டத்தக்கவை.

அரசு, மக்கள் ஈடுபாடும் அரண் அமைத்தலும்

"உலகெங்கும் ஆதிக்கங்கள் பல வடிவங்களில் உள்ளன: மொழியும் ஆதிக்கத்தின் ஒரு கருவியே' என்பது அறிஞர் அண்ணா(1981) அவர்களின் கருத்து. சமுதாய அமைப்பின் மீது செலுத்தப்படும் ஆதிக்கத்தின் வழி மொழி பாதிப்புறுவதும் கணக்கில் கொள்ள வேண்டிய உண்மை. தேவமொழி என்றழைக்கப்பட்ட சமஃச்கிருதம் படித்தால் வாழ்வில் உயர்வடையலாம், மருத்துவக்கல்லூரியில் இடம்பெறலாம் என்ற நிலை நிலவியபோது உழைக்கும் மக்களுக்கு சமஃச்கிருத மொழி கற்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டது. தாய்மொழி, ஆங்கிலம், தமிழ் பயிற்றுமொழி. ஆங்கிலமொழி வழி உயர்கல்வி, தொழில் அறிவியல் சார்ந்த கல்வித் தேவைகள் என்னும் நிலைப்பாடுகளை விரும்பும் தமிழ் மக்கள் மீது மொழிச் சுமைகள் ஏற்றப்படுகின்றன. சமஃச்கிருதமும், இந்தியும் பயிலவேண்டும் என மறைமுகமாக மிரட்டல்கள் விடப்படுகின்றன.

பயிற்றுமொழியாகத் தமிழ், அறிவியல் வளர்ச்சிகளைப் பெறும் தமிழ்மொழி, கல்விச் சூழல், சமுதாய ஒருமைப்பாடு, பிறமொழிகள் அறிவு, உரிமை, மொழிச்சமன்மை ஆகிய படிமானங்களை அணுகித், தமிழ் மக்களின் வாழ்விற்கும், தமிழ் மொழியின் மேம்பாட்டிற்கும் உதவுகின்ற வழியில் தமிழ் மக்களும், தமிழ்நாடு அரசும் ஈடுபாட்டுடன் அரணாக அமைந்து விழிப்போடு செயல்பட வேண்டும். தமிழுக்கு விழாக்கள் மட்டும் போதமாட்டா. ஆர்வ விழைவுகளும் செயல் திட்டங்களும் தேவைப்படுகின்றன.

முடிவுரை

தமிழ் அறிவியல் மொழி ஆவது வரலாற்றுக் கட்டாயம்: இயங்கியல்

வேட்புமாகும். தமிழில் அறிவியல் படைப்புகளை உருவாக்கச் சொல்லீடுகள் (கலைச் சொற்கள்) உருவாக்கப்பட வேண்டும். தமிழில் புதிய சொல்லீடுகளை உருவாக்கும் நெறிமுறைகளை முனைவர் வா.செ.குழந்தைசாமி போன்றோர் உருவாக்கியுள்ளனர். வெளியிடப்பட்ட கட்டுரைகள், நூல்கள் வழி சொல்லீடுகளைத் திரட்டலாம். நூல்கள் எழுத சொல்லீடுகளை முதலில் உருவாக்கிக் கொள்ளலாம். அறிவியல் படைப்புகளைப் பல நிலைகளில் உருவாக்கிக் கொள்வது அறிவியல் தமிழுக்கு முதல் படிமானம். அறிவியல் தமிழுக்கு இரண்டாம் படிமானம் சமுதாய இயங்கியல் தேவைகள். அறிவியல் தமிழுக்குச் சமுதாயத் தேவையாகத் தமிழ்ச் சூழல்பால் அடையாள அவலம் சுமத்தப்படுவது தடுக்கப்பட வேண்டும். தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி நிலைகளில் தமிழ்வழி மாணவர்கள் கல்விக்கான வசதியின்மையால் இன்னல்படுகின்றனர். பயிற்றுவிப்பு முதல் தேர்வுக்கான மதிப்பீடு வரை தமிழ்வழி மாணவர்கள் புறக்கணிக்கப்படுவதாகக் கருதப்படுகிறது. குறைந்தது மேல்நிலைப்பள்ளி வரை தமிழ்வழி பயில்வது தமிழ் மக்களின் வாழ்வுரிமை, கல்லூரியில் பட்டப்படிப்பு, பட்ட மேல் வகுப்புகளில் ஆங்கில ஊடகம் இருப்பது, ஒரு தவிர்க்கமுடியாத, சுமையான, சமுதாயத் தேவையாக உள்ளது. இதனையும் மாற்ற இயலும். தமிழ்வழி கல்லூரி அளவில் பட்டப்படிப்பு பெற்று உரிய மொழி அறிவுபெறச் செயல்திட்டங்கள் வேண்டும். இப்போது நிலவும் நிலைகளைக் கருத்திற்கொண்டு தொழில்கல்வி மற்றும் அறிவியல் பட்டப்படிப்புகளில் 6 முதல் 5-ல் ஒரு பங்கைத் தமிழில் புகட்டலாம். தமிழில் அறிவியல் நூல்களைப் பட்டப்படிப்பு பாடத் திட்ட அடிப்படையிலும், குறைந்தது பல தலைப்புகளில் செறிவான சிறு நூல்களை வெளியிடலாம். மொழியைச் செழுமைப்படுத்தும் முயற்சிகள் வளர்ந்த நாடுகளின் வரலாற்றுச் சான்றுகளுடன் மக்களுக்குப் பொது ஊடகங்கள் வழி சொல்லப்படவேண்டும். தமிழ் மக்களும், தமிழ்நாடு அரசும் ஈடுபாட்டுடன் தமிழுக்குத் தொண்டு செய்ய வேண்டும். தமிழ்மொழியின்பால் தொடுக்கப்படும் தாக்குதல்களை எதிர்த்தாள "வாய்ப்புகளையும் தடைகளையும்" உருவாக்க வேண்டும்.

நோக்கீடுகள்

அஞ்சனமழகன், உ.(1972) திசுவரை மரபியலும் பயிர்ச்சேய்ப் பெருக்கமும் (மொழி பெயர்ப்பு), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

அண்ணாமலை, இ. (1990) "தற்காலத்தமிழ் என்றால் என்ன?", தினமணி

சுடர் 28.07.1990, சென்னை.

அண்ணாதுரை, சி.என். (1981) வெள்ளை மாளிகையிலே, பூம்புகார் வெளியீடு, சென்னை - 600 001.

ஆசான், கு.வ.கி. (1986) முனைவர் வா.செ.குழந்தைசாமி அவர்களின் 'அறிவியல் தமிழ்' நூலுக்கான திறனாய்வு, தமிழ்த்துறை, யாதவர் கல்லூரி, மதுரை - 625 014.

இராசகோபால், அருணா, க.ஞா. சண்முகவேலு (1980) தோட்டவளம், பாப்புலர் புக் டெப்போ, சென்னை - 600 018.

கேளம்சி (1994) "பூசாரியோடு நிற்குது வரம்", தினமணி சுடர் 17.09.1994, சென்னை.

குழந்தைசாமி, வா.செ. (1985) அறிவியல் தமிழ், பாரதி பதிப்பகம், சென்னை-600 017.

கோவிந்தசாமி, சி.வி. அழகிய நாகலிங்கம் (1974) பயிர்நோய் இயல், பாப்புலர் புக் டெப்போ, சென்னை - 600 018.

சிவனப்பன், இரா.க. (1974) பாசனநெறி முறைகள், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

சுப்பையா முதலியார், வி.டி. (1966) விவசாய மூலம், அமுத நிலையம், சென்னை - 600 004.

பரமசிவம், வே.(1984) ஜெர்மனி பயணச் சிந்தனைகள் களஞ்சியம், அண்ணா பல்கலைக் கழகம், சென்னை-600 025.

Ambedkar, B.R. (1990) Untounchables, Dr. Babasaheb Ambedkar Writings and Speeches. Education Department, Government of Maharashtra (1990), Bombay - 400 032. Vol: 7:300.

45

NĀṬṬAVARS IN TAMILNADU DURING THE PANDYAN AND VIJAYANAGAR PERIODS

NOBORU KARASHIMA

The term *nāṭṭār* or *nāṭṭavar*, meaning the people of a *nāḍu*, appears in Tamil inscriptions or some other sources during the long course of South Indian history, particularly that of Tamilnadu histroy, from the seventh to the nineteenth centuries.These local corporate bodies seem to have played important roles in the local production and the maintenance of the local social order. However, their substance seems to have changed according to the developments in South Indian Society and economy. The present report deals with this point, namely to what extent they changed from those of the Chola period, by examining the Tamil inscriptions of the northern and middle parts of Tamilnadu belonging to the Pandyan and Vijayanagar periods, namely from the thirteenth to the sixteenth centuries.

The fact that most of the Chola royal orders to some locality were addressed to the *nāṭṭārs* and *brahmadēya kiḻavars* of the locality symbolises the importance of the *nāṭṭārs* in Chola administration. While *brahmadēya kiḻavars* represented the villages granted to Brahmanas, *nāṭṭārs* represented the other common villages classified as *veḷḷān-vagai* in inscriptions. According to Subbarayalu, the main inhabitants of those villages were basically Veḷḷāḷas and therefore the *nāṭṭārs* were leading Veḷḷāla landholders during the Chola period.[1] Stein regards the Chola state as a congregation or loose federation of those *nāṭṭārs*, the Chola royal family being the biggest *nāṭṭār*.[2] Although I differ from Stein on the degree of centralization of the Chola state, I too admit great importance to the role taken by *nāṭṭārs* in local production and administration.

Towards the end of the Chola rule, however, there emerged many local chiefs who held each a large extent of land obtained by purchase or some other means and held the titles granted by the king.[3] Though their emergence seems to have affected the fortune of the Chola-period *nāṭṭārs* to some extent, the latter retained their importance as local leaders in many localities even after the Chola period. We have a Valikandapuram Pandyan inscription to testify to it. [4] The inscription records the unity (*orumai*) of the *nāṭṭavars* of Vēmbār-nāḍu in the upper valley of the Vellar river. They resolved that they should pay *kaḍamai* in the estate (*paṟṟu*) prescribed for the payment of *kaḍamai*, *varisai* in the estate for *varisai* payment and *vāram* in the estate for *vāram* payment, and that they should not obey the arbitrary demands of the government officers.

We see the continuity of leadership of the *nāṭṭavars* in a nearby region during the fifteenth century. There are many inscriptions in Kugaiyur recording the resistance of the *nāṭṭavars* to the administration of the Vijayanagar *nāyakas* who oppressed the local people by heavy taxation.[5] In this regard these *nāṭṭavars* were different from those of the Chola period who actually remained loyal to the government. At the same time they too took leadership in the pursuance of local administration. The importance of *nāṭṭavars* as local leaders is thus obvious in these inscriptions also. Judging from the title *nāṭṭuveḷān* held by some of their representatives,[6] they also seem to have been composed of *Veḷḷāḷa* landholders.

However, the change of social order affecting the *nāṭṭavars* in some localities is also revealed by inscriptions of the thirteenth century. A Chengama inscription of North Arcot District dated AD 1258 records the feud of two local chiefly families. [7] Various groups of people summed up as "all castes" (*anaittu-chātigaḷ*) are enumerated in the inscription as those involved in the trouble. Though the term *nāṭṭavar* is also found in the enumeration, its relation to the people expressed in terms of caste is not ascertainable. It is clear from this inscription, however, that the social order was no longer maintained by the authority of *nāṭṭavars*. It shows that the people other than *Brāhmaṇa* and *Veḷḷāḷa* had increased their strength by the thirteenth century.

A Pandyan inscription coming from Tirukkachchur in Chingleput District

and dated AD 1263 records the misbehaviour of some Brāhmaṇa brothers, who became wicked and behaved like low-caste people (*kīl-jātigaḷ*) causing much trouble and terrorizing the people.[8] The residents of the Brāhmaṇa and Veḷḷāḷa villages and the towns (*nagarams*) of this locality assembled in the precincts of a temple in order to solve the problem and asked a local chief to catch the brothers. This inscription depicts the situation in which the authority of the Brāhmaṇas and Veḷḷāḷas were being threatened by the increased power of other communities including the residents of towns, though the former two communities still retained their power to a certain extent.

However, it is interesting to notice that the words *nāṭṭu turōhi (drōhi)* meaning "the traitor to the *nāḍu*" appears in the Chengama inscription. We also find the same words in a Tiruvorriyur Sambuvaraya inscription recording the decision of the *mahēsvarar, sthānattār* and *nāṭṭār* on the service to be performed by some communities in a temple.[9] The words are mentioned in the inscription together with two more similar expressions, namely *śiva- turōhi* (the traitor to the god) and *ina-turōhi* (the traitor to the caste). The apperance of the words *nāṭṭu-turōhi* in these two inscriptions indicates that the traditional social order maintained by the *nāṭṭavars* was still thought to be esteemed by the people in the thirteenth and fourteenth centuries.

Increasing strength of the communites other than Brāhmaṇas and Veḷḷāḷas revealed by the Chengama inscription is well attested to by the following inscriptions. A Pandyan inscription from Aduturai of the thirteenth century records the rearrangement of certain services in a śiva temple of Irayānpuñchai (Aduturai) by the *pan-nāṭṭavar* of many localities.[10] The rearrangement was actually made by the Paḷḷis of the region bounded by the Vīranārāyaṇan tank in the east, the Pachchai hills in the west, Kāvēri river in the south and Peṇṇāru river in the north, and in the middle part of the inscription and at the end the term *Paḷḷi-nāṭṭavar* is used in the place of the *pan-nāṭṭavar*. Paḷḷis, otherwise known as Vanniyar, were the people who came down from the hilly areas during the eleventh century and were employed as soldiers by the Chola kings.[11] They seem to have established their power during the subsequent centuries in the locality mentioned in this inscription to the extent that they formed their own *pan-nāṭṭavars* (literally

"several *naṭṭavars*") different from the *naṭṭavars* which were supposed to have been composed of the Veḷḷāḷas.

Another example is the Ūrāḷi-*naṭṭavars* which appeared in a thirteenth-century Pandyan inscription of Ratnagiri in Tiruchirapalli District.[12] The term Ūrāḷi indicates that they were of a peasant caste. Yet another instance comes from Padaividu inscription of the early Vijayanagar period (AD 1403) recording the decision made by Vaṇḍuvarāpati-*naṭṭavar* of Maḻa-nāḍu to assign certain contributions to their members for the worship in the Padaividu temple.[13] Vaṇḍuvarāpati-*naṭṭavars* were herders who called themselves Śrīgōpālas also.[14]

The emergence of these new *naṭṭavar* organisations other than those of the Veḷḷāḷas seems to have led to the formation of *periya-naṭṭār* or *periya- naṭṭavar* which were composed of more than one caste group.[15] The attribute *"periya"* (big) of the *periya- naṭṭavars* certainly related to a big region larger than a *nāḍu,* but it must have related to its inter-caste organisation also. Pandyan and Vijayanagar inscriptions of this period indicate that Valaṅgai (right-hand) and Iḍaṅgai (left-hand) groups composed of a large number of communities relating to direct production and service sometimes constituted the *periya-naṭṭavars.*[16] Though the Valaṅgai and Iḍaṅgai people who revolted against the Brāhmaṇa and Veḷḷāḷa landlords and the government officers in AD 1429 did not employ the designation of *periya-naṭṭavar* for themselves, the (ordinary) *naṭṭavar* is included in the enumeration of groups of people in the locality in the concerned inscriptions.[17]

While the above inscriptions indicate the occurrence of changes in the *naṭṭavars'* character, which had been caused by the changing social order, there are many inscriptions which seem to suggest that the *naṭṭavars* remained somewhat stable in certain localities. In Kugaiyur referred to above we have many inscriptions in which *naṭṭavars* were recorded to be cooperating with *nāyakas* in the remission of certain taxes in favour of temples.[18] One of them records that they decided together with an agent of a *nāyaka, ūravar* (village representatives) and *tānattār* (temple authorities) the establishment of a market in order to raise fund for repairing a temple.[19] In Valikandapuram, an inscription (AD 1491) records the decision of the *naṭṭavars* of Van-nāḍu that each village in the *nāḍu* including Brāhmaṇa villages, should contribute certain amount of castor oil for burning 300 lamps

in Valikandapuram temple.[20] Though the *naṭṭavars* were incorporated into the *nāyakas'* ruling network by the end of the fifteenth century, they seem to have retained their function as local leaders even in the sixteenth century in the upper valley of the Vellar river.[21]

In Chingleput District we have an interesting inscription which records that the *naṭṭavars* of six *koṭṭams* (*vaḷanāḍus*) in Vēdagiri-dēsam established a *maṇḍapam* in a Vishṇu temple in Harivāsapuram (Nagalapuram) and made assignments of certain extents of land in the villages included in their *nāḍus* for instituting certain services in the *maṇḍapa.*[22] The interesting point of this record is that the number of villages, in which the assignment of land was made, is mentioned for the *nāḍus* in those six *koṭṭams.* They are:

120 villages in Eḻumūr-nāḍu, Āguḍi-nāḍu, Kānappēru-nāḍu, Vengal-nāḍu, Ambattūr-nādu in Puḻar-kōṭṭam,

160 villages in Puliyūr-kōṭṭam (alias Kulōttuṅgachōḻa vaḷanāḍu),

60 villages in the southern half of Īkkāṭṭu-kōṭṭam,

32 villages in Kachchūr-nāḍu in the northern half (of Īkkāṭṭu- kōṭṭam),

? villages in Maṇavūr-koṭṭam,[23]

45 villages in Paiyūr-kōṭṭam,

72 villages in Illattūr-nāḍu, Mangaḷūr-nāḍu, Pōḻiyūr-nāḍu and Taṇigai-nāḍu.

28 villages in Malaippaṟṟu-nāḍu

42 villages in Niṉṟaiyūr-nāḍu,

17 villages in Añjūr- nāḍu and,

30 villages in Sō-nāḍu (in Kuṉṟavattana - kōṭṭam)

This record suggests the existence of a tight administrative network linking the *naṭṭavars* during Krishṇadēvarāya's reign in Vēdagiri-dēsam corresponding to the northern part of the present Chingleput District.

Another example of the administrative network binding the *naṭṭavars* comes from the sixteenth century South Arcot District. There are five inscriptions which

record granting remission of certain taxes to the Kaṇmāḷa community by the *nāṭṭavars* in the Pennai and Gadilam valleys.[24] In those inscriptions dated AD 1572/73 the *nāṭṭavars* and some other bodies (*mahājanas and tānattārs*) in each region decided the remission of three taxes levied on the Kaṇmāḷas by the previous *nāṭṭavars*, from which the Kaṇmāḷas had suffered much, and swore the fulfilment of their decision to the Vijayanagar king (Śrīraṅgadēva), a *nāyaka* as the king's agent and the *nāyaka's* agent (*rāyasam*) . These inscriptions clearly show a picture of the *nāṭṭavars* being incorporated within the state administration just as that seen during the Chola period.

However, these five South Arcot inscriptions reveal also the significant change that the *nāṭṭavars* of the time had undergone. That relates to the composition of those *nāṭṭavars,* which can be ascertained from these inscriptions by a study of the names of the *nāṭṭavars*. Elavanasur inscription[25] gives eight names which seem to have been the *nāṭṭavars* of Panniraṇḍu-paṟṟu (*nāḍu*) and one name for Piḍāgai-paṟṟu; Tiruvadi inscription[26] gives fourteen names for four paṟṟus; Edaiyar inscription,[27] three names for two *paṟṟus*; Tirunamanallur inscription,[28] seven names for three (sīṛmais (*nāḍu*); and Tiruvamattur inscription, [29] five names for one *paṟṟu*. It is really significant that the names of those representatives reveal a multi-caste composition of the *nāṭṭavars*. They included Reḍḍis, Mudaliārs and Piḷḷais. Though we are not sure whether those terms indicated community or title, Reḍḍis were certainly the ancestors of the later Reḍḍi community who migrated from Andhra Pradesh into this region following Vijayanagar armies. The Mudaliārs may be the Kaikkōḷa weavers, while the Piḷḷais must have been Veḷḷāḷas settled earlier in this region. If these representatives were big landholders, we can add Seṭṭis also, as they also became big landholders during the Vijayanagar period,[30] though they did not appear in these five inscriptions.

Another noticeable point is the number of *nāṭṭavars* for one *nāḍu (paṟṟu, sīrmai*). Though all the cases are not ascertainable, in case of Elavanasur inscription only one name of the *nāṭṭavar* is mentioned for Piḍāgai-paṟṟu. Edaiyar inscription gives three names of the *nāṭṭavar* for both Iḍaiyāṟṟu-paṟṟu and Siṟṟingūr-paṟṟu, though the word *uḷpaṭṭa* (inclusive of) is added afterwards. These cases may urge

us to abandon the idea that *nāṭṭavars* were still corporate bodies. Individuals seem to have increased their strength greatly during the Vijayanagar period. It is clear, therefore, that the *nāṭṭavars* of the Vijayanagar period differed in their caste composition and in their corporate character as well from their predecessors of the Chola period.

The multi-caste compostion of the *nāṭṭavars* of the Vijayanagar period revealed from the South Arcot inscriptions would gain more significance, if we consider the point of their solidarity. Under the social regime in which the ascendancy of the Brāhmaṇa and Veḷḷāḷa communities in the caste hierarchy was firmly established and not challenged by any other community, the *nāṭṭavars* composed of the leading Veḷḷāḷa landholders were able to control the local life and production without any difficulty. However, under the social regime in which communities other than Brāhmaṇas and Veḷḷāḷas began to assert their rights and when the unity of the *nāṭṭavars* in terms of caste was lost, they were able to function only under the tight network enforced and maintained by an efficient government. That was the case seen in Chingleput District under the reign of Krishṇadēvarāya in the beginning of the sixteenth century. However, once the control of the government was lost or loosened, they must have ceased to function as the local leaders, since their solidarity as one community had already been lost. From the sixteenth century onwards we do not have any inscription which shows the solidarity of the *nāṭṭavars* or mentions the words *nāṭṭu turōhi.*

Though we have some seventeenth century inscriptions which record activities of *nāṭṭavars*, and though the term *nāṭṭavar* continued to be used in some regions even upto the British period,[31] their importance as the local corporate bodies seems to have been lost forever in most parts of Tamilnadu after the sixteenth century. Thus the Pandyan and Vijayanagar periods should be regarded as the course of time when the traditional social order established under the Chola rule was gradually being overtaken by the new social order which became predominant during the subsequent period.

NOTES

1. Y.Subbarayalu, *Political Geography of the Chola Country,* State Department of Archaeology,Govt. of Tamilnadu, Madras, 1973, pp.35

and 36.

2. Burton Stein, *Peasant State and Society in Medieval South India,* Oxford University Press, Delhi, 1980, p.286.

3. Noboru Karashima, *South Indian History and Society: Studies from Inscriptions AD 850 - 1800,* Oxford University Press, Delhi, 1984, pp.19 and 20.

4. *AR* 1943/44-282.

5. Noboru Karashima, *Towards a New Formation: South Indian Society Under Vijayanagar Rule,* Oxford University Press, Delhi, 1992, pp. 46-48.

6. *AR* 1918-114, 117 and 124.

7. *SII.* vii, 118.

8. *SII,* xxvi, 383.

9. *SITI,* 525 (*AR* 1912-212).

10. *AR* 1913-35.

11. There are some Chola inscriptions which record the acquisition of land by Churutimans who worked as soldiers for the Chola kings. See Karashima, *South Indian History and Society,* p.30.

12. *AR* 1914-173.

13. *AR* 1940/41-81.

14. A Srirangam inscription (*SII,* xxiv, 136) dated AD 1184 records the grant of a village to the temple by Śrīgōpālas.

15. K.G.Krishnan, *Studies in South Indian History and Epigraphy,* New Era publications, Madras, 1981, p. 60 and Stein, *Peasant State and Society.* p.216 ff.

16. The Valaṅgai and Iḍaṅgai groups consisting of a variety of communities in the middle valley of Vellar river fixed for each of their members the due for instituting the *periyanāṭṭār* service in Vriddhachalam temple in 1429. *AR* 1918-91.

17. Karashima, *Towards a New Formation,* p.145.
18. Karashima, *Towards a New Formation.* pp.46-48.
19. *AR* 1918-112.
20. *AR* 1964/65-312.
21. Karashima, *Towards a New Formation*, p.50
22. *SII,* xvii, 680.
23. The number of villages is not given for Maṇavūr-kōṭṭam
24. Karashima, *Towards a New Formaticn,* p. 159.
25. *AR* 1938-493.
26. *AR* 1921-378.
27. AR 1929-293.
28. AR 1940-273.
29. *AR* 1922-65.
30. Karashima, *Towards a New Formation,* pp. 22 and 136.
31. Tsukasa Mizushima, *Nattar and the Socio-economic Change in South India in the 18th - 19th Centuries,* Institute for the study of Languages and Cultures of Asia and Africa, Tokyo, 1986.

46

NATTAR A CORPORATE BODY OF VELLALA LANDHOLDERS IN THE CHOLA PERIOD TAMIL NADU

Y. SUBBARAYALU

The term *nattar* is met within inscriptions of south India, particularly in Tamil inscriptions from the middle of the 6th century onwards to denote a corporate group of the micro-region called *nadu*. The micro-region *nadu*, of which there were several hundreds in medieval south India, may be defined as a cluster of villages formed around an irrigation source like a channel or tank and it was perhaps an ethnically cohesive territory in the initial stages, having an area ranging from twenty to a hundred square kilometers (Subbarayalu, 1973). Though much has been written on the *nattar*, there still remains some uncertainty over the real connotation of this term. The inscriptional record being discontinuous and fragmentary, a definitive statement is difficult to make. This paper is an attempt to review the evidence in the Chola period inscriptions in the light or recent studies.

The term *nattar* literally means 'those of the *nadu*' and therefore may be simply interpreted as people of the territory *nadu* (The term *nadu* itself is used on several occasions as a synonym of *nattar*). It can be shown, however, from a contextual analysis, that it denoted only the most important people of the area. This body is referred to in several royal documents of the 6th to the 11th centuries in the context of demarcating the boundaries of some special settlements newly created for the benefit of Brahmins (*brahmadeya*) or in rare cases for temples (*devadana*). The records give the impression that though the orders for the creation of the new settlements always originated from the king, the participation of the

nattar of the concerned *nadu* was crucial at the execution stage. The new settlements were generally freed from the customary revenue demands and given some special privileges and rights. One of the prominent immunities granted to the donees of the new settlement is said to be non-payment of *nadatchi*, i.e., 'the fee for the *nadu* administration.

The above facts may be taken as evidence to consider the *nattar* as an administrative body of the *nadu* vis-a-vis the king's government. There is no denying the fact that the *nattar* had some administrative duties in relation to the respective *nadu*. The administrative aspect of the *nattar* is, however, a secondary thing. It can be suggested on the basis of circumstantial and contextual evidence that primarily the *nattar* were a body of landholders of a *nadu*. The body, however, comprised until the 11th century the landholders of only the customary kind of villages, namely the *vellanvagai* villages and excluded the special villages, *brahmadeya, devadana*, etc. if any, within the concerned *nadu* (Subbarayalu, 1973:34). When the landholders of the Brahmin villages (i.e. the *brahmadeya-kilavar*) and others were also present in a general gathering, they were usually named separately along with the *nattar*. Actually such joint gathering is found only in post-10th century records. Earlier only the *nattar* body is met with signifying the primacy of the *nattar* (*TASSI*, 1958-59, pp.103-08; *EI*-xxii, No.34, etc.).

A careful analysis of the contexts in which *nattar* figure reveals some structural change that the body had been undergoing over the centuries. In the earlier documents, going up to about the middle of the 10th century, the identity of the individual members of this body is never revealed. So too was the case of the *urar*, the village level corporate body of the *vellanvagai* villages during the same period. This phenomenon of referring only to the group and not to the individual member may be attributed to the prevailing communal solidarity in those villages, which in turn was based upon common ownership of the land (Karashima, 1984: 1-15). Now, what will happen to the implied ethnic cohesiveness of the *nadu* micro-regions if and when the communal ownership broke down giving birth to individual ownership?

Widespread appearance of private landholding replacing the earlier communal

landholding by the thirteenth century has been clearly established by Karashima (*Ibid*: 30-31). The process, of course, must have started in the middle Chola period, i.e., from the 11th century onwards and it took some two centuries to mature. The breakdown of communal ownership entailed some other important changes in the agrarian society of the day. One of them is the emergence of new landholders among the erstwhile martial communities (*Ibid*; Subbarayalu, 1981). It is therefore inevitable that the earlier suggestion made by the present writer that the *nattar* were only the Vellala landholders holds good only for the early stage, namely until the 11th century. Thereafter they became multi-ethnic in composition.

Another significant fact to be noted is the decreased importance of the *nattar* from bodies from the late 11th century to almost the end of the 13th century in most parts of the Chola empire, particularly in the central parts. This fact is also supported by a study by Heitzman (1985) who analysed *nattar* data from some five different, taluk-size areas. Quite strikingly from the latter half of the 11th century onwards the Chola royal records almost ignore the *nattar* body. That is, the administrative significance of that body, whatever it had been earlier, seems to have become minimal by the end of the eleventh century. As far as the central part of the Chola kingdom is concerned, the *nattar* surface again only in the late 13th century inscriptions of the Pandya rulers who took over this area. The reasons for the temporary disappearance of the *nattar* in the central area may be the following: 1) the direct involvement of the Chola government through its own bureaucracy in the administration of their core area, 2) the creation and superimposition of bigger administrative territory called *valanadu* over and above the *nadu*s and 3) the increase as well as elaboration of the *brahmadeyas* until the middle of the 11th century and the still larger increase of the *devadanas* throughout the Chola period under the royal patronage. 4) It seems, moreover, that in many localities local magnates holding such titles as *nadudaiyan* (holder of *nadu*), *nadalvan* (ruler of *nadu*), etc.seem to have encroached upon the prerogatives of the *nattar* corporate bodies.

The comparatively drier areas outside the Chola core area, such as the area north of the Kaveri river, present a somewhat different picture. It is here that we come across for the first time the *chittirameli-periya-nattar*, literally the 'Greater

Heitzman,J.(1987) "State Formation in South India, 850 - 1280". *The Indian Economic and Social History Review.* Vol. 24-1.

Karashima.N (1984) *South Indian History and Society - Studies from Inscriptions A.D. 850-1800,* Delhi: Oxford University Press.

———— (1985)"Nayaka Rule in North and South Arcot Districts in South India during the Sixteenth Century". *Acta Asiatica.* 48.

———— (1986) "Vijayanagar Rule and Nattavars in Vellar Valley in Tamilnadu during the 15th and 16th Centuries". *Toyo Bunka*

Kenkyuusho Kiyou. 101.

_________ (1989) "Nayaka Rule in the Tamil Country during the Vijayanagar Period". *Journal of the Japanese Association for South Asian Studies. 1*

_________ (1992) *Towards a New Formation South Indian Society under Vijayanagar Rule.* Delhi: Oxford University Press.

Karashima, N. et. al. (1988) *Vijayanagar Rule in Tamil Country as Revealed through a Statistical Study of Revenue Terms in Inscriptions.* Tokyo: ILCAA, Tokyo University of Foreign Studies.

Kotani, H. (1985) "The Vatan - System in the 16th - 18th Century Deccan - Towards a New Concept of Indian Feudalism". *Acta Asiatica.* 48.

Mizushima, T. (1980) "Village Records on Landholding in South India and the Ways for Processing Them" *Studies on Agrarian Relation in South Asia.* Vol.5. Tokyo. ILCAA, Tokyo University of Foreign Studies.

_________ (1983) "Changes, Chances and Choices - The Perspective of Indian Villagers. Socio - Cultural Change in Villages in Tiruchirapalli District, Tamilnadu, India". Part 2-1. Tokyo: ILCAA, Tokyo University of Foreign Studies.

_________ (1986) Nattar and the Socio - Economic Change in South India in the 18th -19th Centuries. Study of Languages and Cultures of Asia & Africa, *Monograph* Series No.19, Tokyo: ILCAA, Tokyo University of Foreign Studies.

_________ (1987) *Minami-Indo Zaichi Syakai no Kenkyuu (A Study of Local Society in South India).* Tokyo: ILCAA, Tokyo University of Foreign Studies.

_________ (1990a) "Shohyou: Kotani Hiroyuki Indo no Chuusei Syakai (Review Article: H.Kotani's Medieval Society of India)". R*ekishi -Gaku Kenkyuu.* No.605.

_________ (1990b) "A Study of Local Society in South India". *Regional Views.* Komazawa University. No.3

________ (1991) *18-20 Seiki Minami Indo Zaichi Syakai no Kenkyuu (A Study of Local Society in South India in the 18th-20th Centuries)* Tokyo: ILCAA, Tokyo University of Foreign Studies.

Mizushima, T. & Nara, T. (1983) "Social Change in a Dry Village in South India, An Interim Report. Studies in Socio-Cultural Change in Rural Villages in Tiruchirapalli District, Tamilnadu, India". No.4, Tokyo: ILCAA, Tokyo University of Foreign Studies.

Murton, B.J. (1973) "Key People in the Countryside: Decision - Makers in Interior Tamilnadu in the late Eighteenth Century". *The Indian Economic and Social History Review.* Vol. X-2.

Saberwar, Satish. (1971) "Regions and Their Social Structures". *Contributions to Indian Sociology*: New Series. No.V.

Stein, B. (1977) "Circulation and the Historical Geography of Tamil Country". *Journal of Asian Studies.* Vol. XXXVII-1.

________ (1977) "Privileged Landholding": *The Concept Stretched to Cover the Case. Land Tenure and Peasant in South Asia.* ed. R.E.Frykenberg. Delhi: Orient Longman.

________ (1980) *Peasant State and Society in Medieval South India.* Delhi: Oxford University Press.

________ (1982) "South India: Some General considerations of the Region and its early History". *The Cambridge Economic History of India.* Vol. I. ed. T.Raychaudhuri and I.Habib, London: Cambridge University Press.

Stokes, E. (1977) "Privileged Land Tenure in Village India in the Early Nineteenth Century". *Land Tenure and Peasant in South Asia.* ed. R.E.Frykenberg. Delhi: Orient Longman.

Subbarayalu, Y (1973) *Political Geography of the Chola Country.* Madras: Tamilnadu State Department of Archaeology.

Thurston, E. (1909) *Castes and Tribes of Southern India.* Vol. I. Madras: Government Press.

48

தமிழகக் காசுகள் (அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள்)

ஆறுமுக சீதாராமன்

ஒரு நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்ளக் கல்வெட்டுகள், செப்பேடுகள், காசுகள் ஆகியன புறச்சான்றுகளாகவும், இலக்கியம் கருவி நூலாகவும் நமக்கு உதவுகின்றன. ஆய்வுத்துறையில் நாணயவியல் ஒரு முக்கிய பங்கைத் தழுவியுள்ளது. சில வரலாற்று ஆய்வுகளுக்குக் காசுகளின் பங்கு மிகவும் பயனுள்ள வகையில் அமைகின்றது. காசுகளை ஆய்வு செய்யும் போது காசுகளில் காணும் மன்னர்களின் சிறப்புப் பெயர்கள்அல்லது இயற்பெயர்கள், அவர்கள் பின்பற்றிய சமயங்கள், அவர்கள் வணங்கிய தெய்வங்கள், அத்தெய்வங்களின் வடிவமைப்புகள், ஆட்சிமொழிகள், அம்மொழியின் வளர்ச்சிகள், எழுத்துவகைகள், வடிவங்கள், உலோகங்கள், அச்சான விதங்கள், உள்நாட்டு வாணிக நிலைகள், வெளிநாட்டு வாணிக நிலைகள், பெருமளவில் வாணிகம் நடந்த இடங்களை வைத்து மன்னர்களின் ஆட்சிப்பரப்புகள், செங்கோல் செலுத்தியதற்கான வரலாற்றுத் தடயங்கள், நாட்டின் தொழில் நுட்பத் திறன்கள், பொருளாதார வளர்ச்சிகள் ஆகிய அனைத்தையும் 'நாணயவியல்' கொண்டு அறிய இயலும்.

வாணிகத் துறையில் நாணயங்கள் முன்னோடியாகத் திகழ்ந்தன. ஒரு நாட்டின் நாணயம் மற்றொரு நாட்டின் கடற்கரைப்பகுதிகளிலும், மற்ற இடங்களிலும் கிடைப்பது ஒரு நாடு மற்றொரு நாட்டோடு வாணிபம் செய்ததற்கான ஆதாரங்களைக் காட்டுகிறது. இது போன்று எத்தனையோ உண்மைகள் பண்டை நாணயங்களை ஆராயும் போது கிடைக்கின்றன. ஒவ்வொரு நாட்டினரும் அவரவரது தகுதிக்கேற்ப, வளர்ச்சிக்கேற்பத் தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை, ஈயம் போன்ற உலோகங்களைப் பயன்படுத்தி நாணயங்களை அச்சடித்து வெளிக் கொணர்ந்தனர். இந்நாட்களில் கூடப் புதைந்து கிடக்கும் நாணயங்கள் பூமியை அகழும்போது கிடைத்தவண்ணமிருக்கின்றன. இவ்வகை நாணயங்கள் புதிய வரலாற்றைப் படைத்துக் கொண்டேயிருக்கின்றன. இவ்வகை நாணயங்கள்

பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

'தமிழகக் காசுகள்' என்ற இந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ள அனைத்துக் காசுகளும் தமிழ் எழுத்து பொறிக்கப்பட்ட காசுகளே ஆகும். இந்தக் காசுகள் அனைத்தும் என்னுடைய களப்பணியின்போது அண்மைக்காலங்களில் சேகரிக்கப் பட்டவையாகும். கிடைத்த காசுகளைப் பற்றிய அனைத்துக் கருத்துகளும் கீழ்வரும் பகுதிகளில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

1. சங்க காலச் சேரர் இரும்பொறை காசு

சங்க காலச் சேர மன்னர்களின் வரலாற்றை அறிய இலக்கியச் சான்றுகள் மிகுதியாகக் கிடைக்கப் பெற்ற நூல்களில் 'பதிற்றுப்பத்து' ஒரு கருவி நூலாக உள்ளது. அந்நூலின் முதற்பத்தும், கடைசி பத்தும் இப்பொழுது கிடைக்காத காரணத்தால், முதலிலும் இறுதியிலும் கோலோச்சிய சங்ககாலச் சேரமன்னர் யார் என்று வரையறுத்துக் கூற இயலவில்லை. ஆயினும், இருவழி சேர மன்னர்கள் ஒரே காலத்தில் பூசல்கள் இல்லாநிலையிலும் ஆண்டு வந்தமை இந்நூலின் மூலம் அறியக்கிடக்கின்றது. சேரர் ஆதிக்கம் கருவூர் அல்லது வஞ்சியில் நிலை நாட்டப்பட்டது எனத் தெரிகின்றது. புறம் (11, 36,39), அகம் (93) ஆகிய சங்க நூல்களும், கருவூர் அல்லது வஞ்சி சேரரின் தலைநகராக விளங்கியது எனக் குறிக்கின்றன. அந்துவன் சேரல் இரும்பொறை என்பவன் பொறையர்க்குல முதல்வன் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இவனது காலம் யாது என்பது தெரியவில்லை. இரும்பொறை என்பது குலப்பெயராக அல்லது பொதுப் பெயராக இருக்கலாம். இரும்பொறைக் குல மன்னர்கள் பதிற்றுப்பத்தில் 7-ஆம் பத்து முதல் 9 - ஆம் பத்து வரையில் உள்ள பாக்களின் பாட்டுடைத் தலைவர்கள். சங்ககாலத்தில் இவர்களது ஆதிக்கம் கணைக்கால் இரும்பொறையின் ஆட்சியோடு முடிவடைகிறது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இரும்பொறையின் காசு சேரரின் தலைநகரான கரூரில் அமராவதி ஆற்றுப்படுகையில் கிடைத்துள்ளது.[1] இந்தக் காசு கிறிஸ்துவ சகாப்தத் தொடக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கலாம். காசில் பண்டைத் தமிழ் எழுத்துகளில் பின்வரும் வாசகம் எழுதப்பட்டுள்ளது: கொல் இரும்புறைய்.

மன்னரின் பெயரைக் கொல் + இரும்புறைய் என இரண்டாகப் பிரிக்கலாம். நாம் இரண்டையும் சேர்த்துக் 'கொல்லிரும்புறைய்' என்று வாசிக்கலாம். இலக்கியத்தில் காணும் பொறை என்ற சொல் கல்வெட்டிலும், நாணயத்திலும் புறை என்று எழுதப்பட்டுள்ளது. புகளூரில் உள்ள சங்க காலச் சேரர் கல்வெட்டுகளில் புறை, பொறை ஆகிய இரண்டு வகைச் சொற்களும் வருகின்றன.

இந்தக் காசின் முன்பக்கத்தில் தோரணவாயின் உட்புறத்தில் ஓர் அரசன்

கம்பீரமான தோற்றத்துடன் முழு உருவத்தோடு தோற்றமளிக்கின்றான். மன்னனின் இடதுபக்கம் நெடிய வேலியிட்ட மரம் (காவல்மரம்) ஒன்றும், வலதுபக்கம் மூன்று மீன்கள் ஒன்றன் பின் ஒன்றாக மன்னரின் பாதங்களுக்குக் கீழாக வேலியிட்ட மரத்தை நோக்கி நீந்தும் நிலையிலும் காணப்படுகின்றன. காசின் பின்பக்கத்தில் இரண்டு ஜோடி இணைக்கயல்களை ஒவ்வொன்றும் ஒன்றையொன்று பார்க்கும் நிலையில் அமைத்துள்ளார்கள். அதைச்சுற்றி மூன்று ஆமைகள் ஒன்றன் பின் ஒன்றாகச் செல்வது இணைக்கயல்களுக்கு வேலி வைத்தாற் போல் காணப்படுகிறது. எஞ்சியுள்ள பகுதியில் சேரர் இலச்சினையாகிய வில், அம்பைப் பெரிதாகப் பொறித்து, வலதுபக்கம் ஆறு முகடுகளைக் கொண்ட மலைகளையும், இடதுபக்கம் இரண்டு மீன்களைக் கொண்ட ஒரு மீன் தொட்டியையும் பொறித்துள்ளார்கள். காசின் எடை 8.2 கிராம். இரும்பொறை வழிவந்த மன்னர்களிலேயே சிறப்பாகப் போற்றப்படுவனாகிய பெருஞ்சேரல் இரும்பொறையே இந்தக் காசை வெளியிட்டு இருக்கலாம். தற்போது கண்டெடுக்கப்பட்டுள்ள கொல்லிரும் பொறையனின் காசு சேரர்கால எழுத்துகளையும், காசுகளில் பொறிக்கப்படும் சின்னங்களையும் பற்றிப் பல அரிய செய்திகளையும் உணர்த்துகிறது.

2. முதலாம் மகேந்திரவர்மன் காசு

முற்காலப் பல்லவர்களின் தலைநகராகிய காஞ்சிபுரத்திலிருந்து சில வெள்ளிக் காசுகள் எனது நாணய சேகரிப்பின்போது கிடைத்துள்ளன. [2] இதில் என்வசம் இருக்கும் ஒரு வெள்ளிக் காசு முதலாம் மகேந்திரவர்மனுடைய காசாகும். இந்தக் காசின் முன்பக்கத்தில் வலது பக்கம் நோக்கி நிற்கும் காளையின் மேல் பல்லவர் காலத்தமிழில் 'பகாபிடு(கு)' என்று கி. பி. 7 -ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் எழுதி உள்ளது. 'கு' என்ற எழுத்து விளிம்பின் வெளியே போயிருக்க வேண்டும். 'பகாபிடு' என்று மட்டுமே உள்ளது. பின் பக்கத்தில் உள்ள சக்கரத்தைச் சுற்றிலும் பூவிதழ்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. காசின் எடை 3 கிராம். செங்கை எம்.ஜி. ஆர். மாவட்டம் வல்லம் குடைவரையில் உள்ள தமிழ்க்கல்வெட்டு 'பகாபிடுகு, லளிதாங்குரன்' என்று முதலாம் மகேந்திரவர்மனின் இரு விருதுப் பெயர்களைத் தருகிறது. 'பகாபிடுகு' என்ற சொல்லுக்குப் பகைவர்மேல் இடிபோலப் பாய்பவன்' என்று பொருள் கொள்ளலாம். குடைவரையில் உள்ள தமிழ் எழுத்துகளும், இக்காசில் உள்ள தமிழ் எழுத்துகளும் ஒன்று போல் காட்சியளிக்கின்றன. அதனால் இந்தக் காசு முதலாம் மகேந்திரவர்மனின் (கி. பி. 600 - 630) விருதுப் பெயருடன் வெளியிட்ட பல்லவர் கால முதல் தமிழ்க் காசாகும். தமிழகத்தில் இதுவரை கிடைத்துள்ள பல்லவர்

காசுகள் எல்லாம் பல்லவ கிரந்த எழுத்திலேயே உள்ளன. ஆனால் இந்தக் காசு தமிழில் கிடைத்திருப்பது தமிழக நாணய வரலாற்றில் அரிய கண்டுபிடிப்பாகும்.

3. தென்காசி பாண்டியர் காசு

கி. பி. 14 - ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்து கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை தென்காசி, பாண்டிய மண்டலத்தின் தலைநகராக விளங்கி வந்துள்ளது. கி. பி. 1422 முதல் கி. பி. 1506 வரை ஆட்சி செய்த பாண்டிய மன்னர்களைப் பற்றியும், கி. பி. 1534 - ல் இருந்து கி. பி. 1609 வரை ஆட்சியில் வீற்றிருந்த பாண்டிய மன்னர்களைப் பற்றியும் அறிந்து கொள்ளக் கல்வெட்டு ஆதாரங்கள், இலக்கிய ஆதாரங்கள் கிடைக்கும்போது, கி. பி. 1507 முதல் கி. பி. 1534 வரை அரசாண்ட மன்னர்கள் யார் என்று அறிந்து கொள்ளத் தக்க சான்றுகள் கிடைக்கவில்லை, ஆனால், புதுக்கோட்டை செப்பேடுகளின் வாயிலாக 'அபிராம பராக்கிரம பாண்டியன்' 'ஆகவராமன்' என்ற உடன் பிறப்பினர் இருந்தமை அறியப்படுகிறது. வரலாற்றில் இவ்விருவரைப் பற்றிய சான்றுகள் இதுகாறும் கிடைக்காத நிலையில் திருச்சி மாவட்டம், கிருஷ்ணராயபுரம் என்ற ஊரில் (லாலா பேட்டை அருகில்) தென்காசி பாண்டியரின் ஒரு தமிழ் செப்புக்காசு கிடைத்துள்ளது.[3] காசின் எடை 7 கிராம். இந்தக் காசின் முன்பக்கத்தில் கண்டபேருண்ட பறவையும், பின்பக்கத்தில் திரிசூலம், சூரியன், பிறை, மன்னனின் பெயர் ஆகியவையும் பொறிக்கப்பட்டுள்ளன. 'ஆகவராமன்' என்ற மன்னனின் பெயரில் உள்ள எழுத்துக்கள் கி. பி. 16 - ஆம் நூற்றாண்டின் எழுத்து அமைதியைத் தழுவியுள்ளது. கி.பி.16-ஆம் நூற்றாண்டு முற்பகுதியில் ஆகவராமன் என்ற மன்னன் தென்காசிப் பகுதியை ஆட்சி செய்திருக்க வேண்டும். கண்ட பேருண்ட பறவை, காசில் காணப்படுவதால், விஜய நகரப் பேரரசின் கீழ் ஆகவராமன் ஆட்சி செய்த போது, பொதுமக்களின் புழக்கத்திற்காகக் காசை வெளியிட்டுள்ளான். பாண்டிய மரபில் கடைப்பிடித்து வந்த மீன் சின்னத்தைத் தென்காசி பாண்டியர்கள் கடைப்பிடிக்க இயலவில்லை என இக்காசு உணர்த்துகின்றது. இப்போதுதான் முதன் முதலாக, தென்காசி பாண்டியரின் தமிழ்க்காசு கிடைத்துள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

4. செஞ்சி நாயக்கர் காசு

முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சியில் வெளியிடப்பட்ட மிக அரிய செப்புக்காசு ஒன்று சம்புவராயர் மாவட்டம் பேரூரில் கிடைத்துள்ளது.[4] காசின் எடை 3.2 கிராம். இது தமிழ் எழுத்துக்களுடன் கூடிய செஞ்சி நாயக்க மன்னரின் முதற் காசாகும். வடமொழி, தெலுங்கு மொழி பற்றுள்ள நாயக்கர்களுள்,

இவருக்குத் தமிழ்ப் பற்றும் இருந்ததால் தன்னுடைய பெயரைக் 'கிட்டிணப்ப நாயக்கர்' என்று நான்கு வரிகளில் அச்சிட்டு இந்தக் காசை வெளியிட்டுள்ளார். இந்தக் காசின் முன்பக்கத்தில் இடப் பக்கம் நோக்கி நிற்கும் காளையும், பின் பக்கத்தில் 'கிட்டிணப்ப நாயக்கர்' என்று நான்கு வரிகளில் பெயரும் காணப்படுகின்றது. எழுத்துகள் கி. பி. 16 - ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியைக் கொண்டுள்ளன. ட், டி, கூட்டெழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இவர் செஞ்சியை ஆட்சி செய்த ஆண்டு கி . பி. 1567 - லிருந்து 1575 வரை ஆகும். தமிழகத்தில் கிடைத்த நாயக்கர் காசுகளில் இன்று வரை 'நாயக்கர்' என்ற பெயர் கிடைக்கவில்லை. இப்போதுதான் முதன் முதலாக இந்த அரிய தமிழ்க் காசு தமிழகத்தில் கிடைத்துள்ளது.

5. தஞ்சை நாயக்கர் காசு

விஜயரகுநாதன் ஆட்சியில் வெளியிட்ட ஒரு செப்புக்காசு தஞ்சையில் திருவையாற்றுப் பகுதியில் கிடைத்துள்ளது.[5] இது தமிழ் எழுத்துக்களுடன் கூடிய நாயக்க மன்னரின் முதற் காசாகும். காசின் எடை 2.7 கிராம். தஞ்சை நாயக்கர் காசுகளை ஆய்வு செய்தபோது நாகரி எழுத்துகளுள்ள காசுகள் தான் இதுவரை கிடைத்துள்ளன. வடமொழி, தெலுங்குமொழி பற்றுள்ள நாயக்கர்களுள் இவருக்குத் தமிழ்ப் பற்றும் இருந்ததால் தன்னுடைய பெயரை 'விசைய ரகுநாதன்' என்று நான்கு வரிகளில் தமிழில் அச்சிட்டுச் சிறப்பு நாணயமாக வெளியிட்டுள்ளார்.

இந்தக் காசின் முன்பக்கத்தில் திருமகள் (லட்சுமி) அமர்ந்த நிலையிலும், மறுபக்கம் 'விசைய ரகுனாதன்' என்று நான்கு வரிகளில் பெயரும் காணப்படுகின்றன. கி. பி.1600 முதல் கி. பி.1634 வரை தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த விஜயரகுநாத நாயக்க மன்னன் இந்தக் காசை வெளியிட்டுள்ளான்.

இரகுநாதன் சிறந்த போர் வீரனாகவும், சிறந்த ராம பக்தனாகவும் வைணவ மதத்தில் அதிக பற்றுள்ளவனாகவும், வட மொழியிலும், தெலுங்கு மொழியிலும் பல காவியங்களையும், பிரபந்தங்களையும் இயற்றி ஒரு மகாகவியாகவும், இசைக் கலையில் ஒரு மாமேதையாகவும் திகழ்ந்தான்.

6. கோவிந்த தீட்சிதர் காசு

கோவிந்த தீட்சிதர் பெயரால் வெளியிடப்பட்ட ஒரு செப்புக்காசு கும்பகோணம் காவிரி ஆற்றுப் படுகையில் கிடைத்துள்ளது.[6] இது தமிழ்

எழுத்துக்களுடன் கூடிய அமைச்சர் பெயரில் வெளிவந்த முதற்காசாகும். எந்த இந்திய மன்னர்களும் அமைச்சர் பெயரில் காசுகள் வெளியிட்டதாகத் தெரியவில்லை. கிடைக்கவும் இல்லை. அதனால் தஞ்சை நாயக்கர் அமைச்சர் பெயரில் காசு வெளியிட்டிருப்பது வரலாற்றில் சிறப்பிடம் வகிக்கிறது. காசின் முன்பக்கத்தில் தோரண வாயிலுக்குள் நாயக்க மன்னர் உருவம் நின்ற நிலையிலும், பின் பக்கத்தில் மூன்று வரிகளில் தமிழில் 'கொவிந்தய்யர்' என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. காசின் எடை 2.5 கிராம்.

செல்வப்ப நாயக்கன், அச்சுதப்ப நாயக்கன், இரகுநாத நாயக்கன் என்னும் மூன்று தஞ்சை நாயக்க மன்னர்களுக்கும் அமைச்சராகவும், ஆசிரியராகவும், புலவராகவும் திகழ்ந்தவர் கோவிந்த தீட்சிதராவார். இவர் கருநாடக அந்தணர் குலத்தில் பிறந்தவர். செல்வப்பன் கி. பி. 1535 - இல் தஞ்சை மன்னனாக முடிசூடியதிலிருந்து அவரது அமைச்சராகப் பணி புரியத் தொடங்கினார். சுமார் 70 ஆண்டுகளுக்கு மேலாக இவரது பணி சோழ நாட்டிற்குக் கிடைத்தது.

இரகுநாதனைக் குழந்தைப்பருவத்திலிருந்து வளர்த்துச் சிறந்த வீரனாக, இசை வல்லுநனாக, பெரும் புலவனாகச் செய்த பெருமை கோவிந்த தீட்சிதரையே சாரும். இரகுநாதன் போர் மேற்சென்றபோதெல்லாம் அரண்மனை நடவடிக்கைகளைக் கவனித்ததுடன் போர் முகாம்களுடன் நாள்தோறும் தொடர்பு கொண்டு வழி நடத்திய சான்றோர் இவர் என ரகுநாதன் காலத்து இலக்கியங்கள் புகழ்கின்றன ரகுநாதன் தான் அடைந்த வெற்றிக்கு கோவிந்த தீட்சிதரே காரணம் என்று கருதி இவர் பெயரில் சிறப்பு வெளீயிடாக இக்காசை வெளியிட்டு இருக்க வேண்டும். வடமொழி மற்றும் தெலுங்கு மொழி பற்றுள்ள நாயக்கர்களுள் இரகுநாதன் தமிழ்ப் பற்றும் உடையவனாக இருந்ததால் 'கொவிந்தய்யர்' என்று தமிழில் வெளியிட்டுள்ளான். இந்தக் காசு இரகுநாதன் ஆட்சியின்போது கி. பி. 1600 - 1634க்குள் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். தஞ்சை மாவட்டத்தில் தீட்சிதர் பெயரால் கோவிந்தக்குடி, கோவிந்தபுத்தூர், ஐயன்பேட்டை, ஐயங்கடை வீதி, ஐயங்குளம், ஐயன் வாய்க்கால் போன்ற இடங்கள் இன்றும் உள்ளன.

7. சேதுபதி மன்னர் காசுகள்

அ. தளவாய் சேதுபதி காசு (இரண்டாம் சடைக்கத் தேவன் - கி. பி. 1635 - 45)

சேதுபதி மன்னர்களால் வெளியிடப்பட்ட பெரும்பாலான நாணயங்களில் 'சேதுபதி' என்ற தமிழ் எழுத்துள்ள பலவகையான நாணயங்களே இதுவரை கிடைத்திருக்கும் நேரத்தில் எனக்கு மன்னர் பெயர் பொறித்த மூன்று செப்புக் காசுகள் பரமக்குடியில் கிடைத்தன.[7] ஒரு நாணயத்தின் முன்பக்கத்தில் மயில் நிற்கும்

உருவம் காணப்படுகிறது. மயிலின் மேலே மூன்று புள்ளிகள் காணப்படுகின்றன. பின்பக்கம் 'தளவாய்' என்று இரண்டு வரிகளில் தமிழில் எழுதப்பட்டுள்ளது. இந்த நாணயம் 'தளவாய் சேதுபதி' என்ற மன்னரால் வெளியிடப்பட்ட நாணயமாகும். பெரும்பாலான சேதுபதி காசுகளில் மயிலின் உருவம் காணப்படுகிறது. அதே போல் 'தளவாய்' நாணயத்திலும் மயில் காணப்படுகிறது. சேதுபதி செப்பேடுகளில் கூடத் 'தளவாய் சேதுபதி' என்ற எழுத்து தமிழில் அழகாக எழுதப்பட்டுள்ளது. இதுவே பிற்கால சேதுபதி காசுகளில் மன்னன் பெயரோடு கிடைத்த முதல் காசாகும். இந்தக் காசு தளவாய் சேதுபதி ஆட்சியில் இருக்கும்போது (1635 - 45) வெளியிட்டு இருக்கலாம். பொதுவாக எந்தப் பாளையக்காரரும் போர் முகத்துக்கு நேரில் வருவதில்லை. ஆனால் சடைக்கன் சேதுபதி மட்டும் எப்போதும் போரை நேரில் வந்தே நடத்துபவர். அதன் காரணமாகவே அவருக்கு 'தளவாய் சேதுபதி' என்ற பெயர் ஏற்பட்டது.

ஆ. ஸ்ரீஉடையதேவர் காசு (விஜயரகுநாத சேதுபதி 710 - 20)

ஸ்ரீஉடையதேவர் ஆட்சிக்காலத்தில் போடப்பட்ட காசுகளில் முன்பக்கத்தில் காளை வலது முகமாக நின்று கொண்டும், அதன் மேலே ஒரு லிங்கமும் லிங்கத்தின் மேலே மாலையும் லிங்கத்தில் வலதுபக்கத்தில் ஒரு சூரியன், பிறை ஆகிய இரண்டும் காணப்படுகின்றன. பின்பக்கத்தில் 'ஸ்ரீஉடைய' என்று தமிழில் இரண்டு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. சில காசுகளில் ஸ்ரீஉடையதே, ஸ்ரீஉடையத்தேவ என்றும் பொறிக்கப்பட்டுள்ளன. திருஉடையதேவர் சிவபக்தி நிறைந்தவர், தர்மசீலர், இராமேஸ்வர ஆலயத்திற்கு நிறைய மானியங்களை அளித்து ஒவ்வொரு நாளும் மாலை பூஜையின்போது தானே நேரில் ஆலயத்துக்கு வந்து வழிபட்டும், கண்காணித்தும் வந்தார்.

8. விஜயநகரமன்னர் காசு

விஜயநகரப் பேரரசின் நான்காவது மரபான அரவீட்டின் இறுதிப் பேரரசன் மூன்றாம் சீரங்கன் ஆவான். பேரரசின் தலைநகரம் அழிவுற்றபின் நான்காவது மரபின் தலைமையிடமும் தமிழகத்தை நோக்கியே பெனுகொண்டா, சந்திரகிரி, வேலூர் ஆகிய நகரங்களுக்கு மாற்ற நேர்ந்தது. இறுதியில் பேரரசு வேலூர் அரசாகவே நடைபெற்றது. இக்காரணத்தால் வேலூர் திருநகரை 'ராயவேலூர்' என்றே இன்றும் அழைக்கக் காண்கிறோம்.

மூன்றாம் வேங்கடனுக்குப் பின் கி. பி. 1642-ல் பேரரசு மரபுக்கு மூன்றாம் சீரங்கன் உரியவனானான். துணிகர வீரமும், சூழ்ச்சியும் தன்னகத்தே கொண்டு விளங்கினாலும் சூழ்நிலைக்கேற்ப செயல்படத் தவறியதால் சீரங்கன் ஆட்சிக்

காலத்திலேயே பேரரசு மரபுக்கு ஒரு முடிவு ஏற்படலாயிற்று. உதயகிரிப்போர், வேலூர் போர் ஆகிய இரண்டு போர்களையும் முறியடித்த சீரங்கனால் கி. பி. 1647-ல் ஏற்பட்ட வேலூர் முற்றுகையைத் தகர்க்க இயலவில்லை. விளைவாக, அரசனிடமிருந்து பொன்னும், யானைகளும் போர்த்தண்டமாகப் பறிக்கப்பட்டன என்றும், பீஜப்பூர் பிடியிலிருந்து தப்பி ஓடும் நிலையை எய்தினான் என்றும் அறிகிறோம்.

சீரங்கன் தமிழர் வாழ்வுடன் நகமும், சதையுமாகப் பிரிக்க முடியாதவாறு இரண்டறக் கலந்து தமிழரசனாகவே செயல்பட்டுள்ளான் என்பதற்கு எடுத்துக் காட்டாக இவன் காலத்தில் வெளியிடப்பட்ட ஒரு செப்புக்காசு அண்மையில் ராணிப் பேட்டையில் கிடைத்துள்ளது.[8] இக்காசு 2.4 கிராம் எடையுள்ளது. காசின் முன்பக்கத்தில் அனுமார் நின்ற நிலையும், பின்பக்கத்தில் தமிழ் எழுத்துகளில் 'சிரங்கன்' என்று இரண்டு வரிகளில் 17 - ம் நூற்றாண்டின் எழுத்தமைதியுடன் பொறிக்கப்பட்டுள்ளது.

மும்மை நாணயத் திட்டத்தின் கீழ்க் கொணர்ந்த காசுகளில் பேரரசர்கள் தங்களது பெயர்களைப் பொறிப்பதற்குக் கன்னடம், நந்தி நாகரி, தேவ நாகரி, தெலுங்கு ஆகிய மொழிகளைப் புகுத்தவில்லை என்பதை அறிய முடிகிறது. மாறாகத் தன்னுடைய காசில் தமிழ் எழுத்துக்களைப் புகுத்தியுள்ளான். சமயச் சார்புள்ள சின்னத்தைப் பொறிப்பதில் எவ்வித மாற்றத்தையும் கையாளவில்லை என்பதை இக்காசு எடுத்துக்காட்டுகிறது.

9. மதுரை நாயக்கர் காசு

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் கடைசியாக ஆண்ட மீனாட்சி அரசி தன் பெயரில் செப்புக் காசுகளை வெளியிட்டுள்ளாள். இந்தக் காசு மதுரை நகரில் கண்டெடுக்கப்பட்டது.[9] மீனாட்சி அரசி (கி. பி. 1732 - 36) வெளியிட்டுள்ள காசின் முன்பக்கத்தில் சிங்கம் நின்ற நிலையில், முன்காலைத் தூக்கிக் கொண்டு காணப்படுகிறது. பின்பக்கத்தில் 'மீனாட்சி' என்று தமிழில் இரண்டு வரிகளில் எழுதப்பட்டுள்ளது. மீனாட்சி மதுரையை ஆட்சி செய்யும்போது இந்தக் காசை வெளியிட்டு இருக்கலாம்.

10. சிவகங்கைச்சீமை காசு

சிவகங்கைச் சீமையின் வரலாறு நாலுகோட்டை உடையத் தேவரின் மகன் சசிவர்ணத்தேவருடன் தொடங்குகிறது. சசிவர்ணத் தேவர், கிழவன் சேதுபதியின் சகோதரி மகனான திருஉடையத் தேவர் மகள் அகிலாண்டேசுவரியைத் திருமணம் செய்து கொண்டு மறவ நாட்டின் ஒரு பகுதியான சிவகங்கைக்கு மன்னரானார்.

இதன் பிறகே சிவகங்கைச் சீமை சேது சமஸ்தானத்திலிருந்து பிரிந்து தனியரசாயிற்று.

சசிவர்ணத் தேவர் சிறந்த வீரராகத் திகழ்ந்தார். கி. பி. 1730 முதல் 1750 வரை சிவகங்கைச் சீமையைச் சீரும் சிறப்புமாக ஆண்டு வந்தார். இவர் காலத்தில் வெளியிட்ட ஒரு தாமிரப் பட்டயத்தின் மூலம் சிவகங்கையில் அக்கசாலை (நாணய சாலை) செயல்பட்டதைப் பற்றி அறிய முடிகிறது. அந்த அக்கசாலையில் எந்தவித நாணயம் வெளியிடப்பட்டது என்று அறிந்து கொள்ளச் சான்றாக சிவகங்கையில் இரண்டு செப்புக் காசுகள் கிடைத்துள்ளன.[10] காசின் எடை 3.6 கிராம். இந்தக் காசு இவர் சிவகங்கைச் சீமைக்கு மன்னரானவுடன் மக்களின் புழக்கத்திற்காக வெளியிட்டிருக்கலாம். செப்புக்காசின் முன் பக்கத்தில் ஒரு சிவலிங்கம். லிங்கத்திற்கு அழகூட்ட மேல்பகுதியில் ஒரு தொடர்மாலை போடப்பட்டுள்ளது. பின்புறத்தில் தமிழில் 'சசிவறனன்' என்று மூன்று வரிகளில் எழுதப்பட்டுள்ளது. காசில் லிங்கம் காணப்படுவதால் மன்னர் சிறந்த சிவபக்தராக இருக்கவேண்டும். சிவகங்கைச் சீமையைத் தோற்றுவித்தவர் சசிவர்ணத் தேவரே ஆகும். இந்தக் காசிலிருந்து மன்னன் பெயர், சமயம், வணங்கிய தெய்வம், தமிழ் எழுத்தின் வளர்ச்சி ஆகிய பல அரிய செய்திகளை அறிந்து கொள்ளமுடிகிறது.

11. ஆர்க்காடு நவாபு காசுகள்

கி.பி. 1710 -ல் நவாயத்து மரபைத் தோற்றுவித்த நவாபு சாதத்துல்லாகான், முகலாயர் பிடியிலிருந்து தன்னை விடுவித்துச் சுயேச்சையான நவாப் ஆட்சியை ஆர்க்காட்டில் நிறுவினான். சுயேச்சை நிலைகண்ட 'வாலாஜா' மரபினைத் தோற்றுவித்த அன்வருதீன் சூழ்நிலை, சூழ்ச்சி ஆகியவற்றைப் பயன்படுத்தி நவாயத்து பரம்பரையை அழித்து விட்டு கி. பி. 1744-ல் ஹைதராபாத் நிஜாமின் அங்கீகாரத்துடன் ஆர்க்காடு நவாபாகப் பதவியேற்றுத் தானே அரியணையில் அமர்ந்தான். அவனது ஆட்சிக்காலத்தில் வெளியிட்ட செம்புக் காசுகள் தஞ்சையில் கிடைத்துள்ளன.[11]

1. அன்வருது காசு

காசின் முன்பக்கத்தில் கொடி ஒன்றும், கொடிக்குள் சூரியன், பிறை ஆகிய சின்னங்களும், கொடியின் கீழ் ஐந்து புள்ளிகளும் உள்ளன. பின்பக்கத்தில் மூன்று வரிகளில் 'அன்வருது' என்று நவாபின் பெயர் தமிழில் உள்ளது.

ஆம்பூர் போரில் வாலாஜா மரபின் முதல் தோன்றல் அன்வருதீன் நவாபு இறந்ததும் இவனுடைய மகனான மமுதலி (முகமது அலி) வாலாஜா கி. பி. 1754-ல்

ஆர்க்காடு நவாபாக முடிசூட்டப்பட்டான். ஆங்கில ஏகாதிபத்தியத்தைத் தமிழகத்தில் நிலைநாட்டுவதற்கு வழிவகுத்த மமுதலியின் ஆட்சிக்காலத்தில் வெளியிட்ட செம்புக் காசுகள் திருச்சியில் கிடைத்துள்ளன.

2. மமுதலி காசு

காசின் முன்பக்கத்தில் வலது பக்கம் நோக்கி முன்காலைத் தூக்கிய நிலையில் ஒரு சிங்கம் நின்ற நிலையில் உள்ளது. பின்பக்கத்தில் இரண்டு வரிகளில் 'மமுதலி' என்று நவாபின் பெயர் தமிழில் உள்ளது.

கி. பி. 1752 - ல் மதுரையில் நாயக்கர் ஆட்சியை மீண்டும் உயிர்ப்பிக்க மறவர் சீமை அரசுகள் சேர்ந்து எடுத்த முயற்சியை முளையிலேயே கிள்ளி எடுக்க அன்வருதீனுடைய மற்றொரு மகனாகிய மாபூசுகான் தலைமையில் ஒரு படை அனுப்பப் பட்டது. வெற்றி கொண்ட மாபூசுக்கு மதுரையில் ஆளுநர் பதவி கிட்டியது. சுயேச்சையாக செயல்பட்ட மாபூசுகான் ஒரு கிளர்ச்சியை மேற்கொண்டதால் அதை அடக்கும் பொருட்டு கி. பி. 1759 - ல் கான்காசிப் என்பவனை மதுரை ஆளுநராக அமர்த்தினார்கள். கி. பி. 1752 முதல் கி. பி. 1759 வரையில் உள்ள இடைவெளியில் சுயேச்சையாக மதுரை சுபாவிற்கு நவாபாகச் செயல்பட்டுள்ளான் என்பதை நிரூபிக்கும் வகையில் அவனால் வெளியிட்ட செம்புக் காசுகள் மதுரையில் கிடைத்துள்ளன.

3. மாபூசுகான் காசு

காசின் முன்பக்கத்தில் வேலைப்பாடுடன் கூடிய ஏழு இதழ்களைக் கொண்ட மலர் ஒன்றும், இதழ்களினுள் ஒவ்வொரு புள்ளியும் உள்ளன. பின்பக்கத்தில் நான்கு வரிகளில் 'மாபூசுகான்' என்ற பெயர் தமிழில் உள்ளது. சில காசுகளில் பூசுகான் என்றும், மாபூசு என்றும் உள்ளன.

காசுகளில் உள்ள தமிழ் எழுத்துகள் அனைத்தும் கி. பி. 18 - ம் நூற்றாண்டின் எழுத்தமைதியைத் தழுவியுள்ளன. நாவாபுகளுக்குப் பாரசீக மொழியே ஆட்சி மொழியாயினும் காசுகளில் தங்களது பெயர்களைப் பொறிக்கும்போது தமிழுக்கும் முக்கியத்துவம் கொடுத்துக் காசுகளைத் தமிழில் வெளியிட்டுள்ளனர் என்பது தெள்ளத் தெளியப் புலனாகிறது.

குறிப்புகள்

1. ஆறுமுக சீதாராமன், 'சங்ககாலச் சேரரின் அரிய காசு', தினமணி, 17 . 11 . 1989.

2. ஆறுமுக சீதாராமன், 'முதலாம் மகேந்திரவர்மனின் தமிழ்க்காசு,' *தினமணி* 5 . 4 . 1994.

3. ஆறுமுக சீதாராமன், 'தென்காசி பாண்டியரின் தமிழ்க்காசு,' *தினமணி*, 7.10.1990

4. ஆறுமுக சீதாராமன், 'செஞ்சி நாயக்கரின் அரிய தமிழ்க்காசு,' *தினமணி*, 23 . 6 . 1992.

5. ஆறுமுக சீதாராமன், 'தஞ்சை நாயக்கரின் அரிய தமிழ்க்காசு,' *தினமணி*, 24 . 1 . 1990.

6. ஆறுமுக சீதாராமன், 'கோவிந்ததீட்சிதர் காசு,' *தினமணிச்சுடர்*, 20 . 8 . 1994.

7. ஆறுமுக சீதாராமன், 'மறவர் நாணயங்கள்', *சிவகங்கை வரலாற்று பேரவை, முதலாவது வரலாற்றுக் கருத்தரங்கம்* 9 . 12 . 1989.

8. ஆறுமுக சீதாராமன், 'விஜய நகர மன்னனின் தமிழ்க்காசு,' *தினமணி*, 12 . 12 . 1991.

9. ஆறுமுக சீதாராமன், 'மதுரை நாயக்க மன்னனின் தமிழ்க்காசுகள்,' *தினமணி*, 25 . 7 . 1990.

10. ஆறுமுக சீதாராமன், 'சிவகங்கைச் சீமையின் சீரிய தமிழ்க்காசு', *தினமணி*, 14 . 3 . 1990.

11. ஆறுமுக சீதாராமன், 'ஆர்க்காடு நவாபுகளின் தமிழ்க்காசுகள்', *தினமணி*, 16 . 7 . 1992.

ஒளிப்படங்கள் அட்டவணை

1. சங்ககாலச் சேரர் இரும்பொறையின் தமிழ்க்காசு, கொல் இரும்புறைய், முன்புறமும் பின்புறமும்.

2. முதலாம் மகேந்திரவர்மனின் தமிழ்க்காசு, பாகபிடுகு, முன்புறமும் பின்புறமும்.

3. தென்காசி பாண்டியரின் தமிழ்க்காசு, ஆகவராமன், முன்புறமும் பின்புறமும்.

4. செஞ்சி நாயக்கரின் தமிழ்க்காசு, கிருஷ்ணப்ப நாயக்கர், முன்புறமும் பின்புறமும்.

5. தஞ்சை நாயக்கரின் தமிழ்க்காசு, விஜயரகுநாதன், முன்புறமும் பின்புறமும்.

6. கோவிந்த தீட்சிதரின் தமிழ்க்காசு, கோவிந்தய்யர், முன்புறமும் பின்புறமும்.

7. சேதுபதி மன்னரின் தமிழ்க்காசு,

அ. தளவாய் சேதுபதி, முன்புறமும் பின்புறமும்.

ஆ. ஸ்ரீஉடையதேவர் சேதுபதி, முன்புறமும் பின்புறமும்.

8. விஜயநகர மன்னனின் தமிழ்க்காசு, சிரங்கன், முன்புறமும் பின்புறமும்.

9. மதுரை நாயக்க அரசியின் தமிழ்க்காசு, மீனாட்சி, முன்புறமும் பின்புறமும்.

10. சிவகங்கைச் சீமையின் தமிழ்க்காசு. சசிவர்ணன், முன்புறமும் பின்புறமும்.

11. ஆர்க்காடு நவாபுகளின் தமிழ்க்காசுகள்.

அ. அன்வருது, முன்புறமும் பின்புறமும்.

ஆ. மாபூசுகான், முன்புறமும் பின்புறமும்.

இ. மமுதலி, முன்புறமும் பின்புறமும்.

ஒளிப்படங்கள்

சங்க காலச் சேரர் காசு



1



பல்லவர் காசு

௨

தென்காசி பாண்டியர் காசு

3

செஞ்சி நாயக்கர் காசு

4



தஞ்சை நாயக்கர் காசு



5

அமைச்சர் கோவிந்த தீட்சிதர் காசு.



6



7 (அ)

↕ சேதுபதி காசுகள் ↕



7 (ஆ)

விஜயநகரக் காசு

8

9

மதுரை நாயக்கர் காசு

10

சிவகங்கை காசு

11 (அ)



ஆர்க்காடு நவாபு காசுகள்

11 (ஆ)



11 (இ)

49

PRESERVATION OF COINS IN TAMIL NADU

V. JEYARAJ

1. Introduction

Literary evidences show that coins were used in the early days and the use of gold coins are referred in Tamil inscriptions. Gold coins are referred as 'Pon', 'Kanam', 'Thulaippon' and 'Videl Vidugupon'[1]. There are also literary evidences to show that both pure and debased gold coins were also in use[2]. The places where the coins were minted were called "Akkasalai", "Thangasalai", "Kampattam",[3]etc. Tamil Nadu has unearthed millions of coins of the past dynasties by various means. They belong to both pre and post- Christian era. They were made of gold, silver, lead, copper, tin, zinc, nickel, aluminium, etc. Even though a large portion of the coin treasures have been destroyed unknowingly or deliberately by melting for making ornaments etc., plenty of them have been preserved in the museums or kept in the custody of coin collectors / dealers.

2. Source of Ancient coins

In those days coins were buried for safety in brass or terracotta vessels and even kept in mud wall cabinets[4]. The buried and forgotten ancient metallic coins are now brought out, through various means i) explorations ii) chance discoveries, iii) excavations.

2.1 Exploration

Mounds are supposed to indicate the sites inhabited by the ancients. Sometimes, a heavy shower of rains may disclose buried materials and bring them

to the surface. River beds, terraces also constitute a viable place for the collection of coins. The surface explorations have a vital role to play in shedding light on the nature and distribution of coins and/or cultures not only in a localised site but also spread over wider regions around the site. In the river beds even today people search for coins and have collected them in plenty[5].

2.2 Chance discoveries

Except for a few, most of the archaeological discoveries of the present day are accidental. They are found during digging of a well, laying of foundation for buildings, canals, laying of railway tracks, ploughing/ tilling of the land, etc. These activities have unearthed objects buried in the bygone days. Certain natural agents like flooding of river and sea erosion at times suddenly uncover the presence of ancient sites and coins.

2.3 Excavation

Archaeological excavations gradually uncover each successive stratum in the history of a site and also the antiquities at each level. Excavations in Tamil Nadu are being carried out by the Archaeological Survey of India; State Archaeology Department, Government of Tamilnadu; Department of Archaeology and Ancient Hisotry, University of Madras and the Department of Epigraphy, Tamil University, Thanjavur in the various regions in Tamil Nadu.

2.4 Acts to preserve antiquities

In order to preserve the antiquities Government of India has enacted Acts. 1. Treasure Trove Act No.VI of 1878. 2) Antiquities (Export Control) Act 1947.

2.4.1 Indian Treasure-Trove Act No. VI of 1878

Whenever any treasure exceeding in amount or value ten rupees is found, the finder shall, as soon as practicable, give to the Collector notice in writing

(a) of the nature and amount or approximate value of such treasure;

(b) of the place in which it was found;

(c) of the date of the finding

and either deposit the treasure in the nearest Government treasury or give the Collector such security as the Collector thinks fit to produce the treasure at such time and place as he may from time to time require. The Collector fixes the value of the antiquities in addition to 20% antique value in consultation with the Director of Museums after enquiries and the treasure is deposited in the Government Museum, Madras. The finder gets 60% and the land owner gets 40% as compensation.

The Government Museum, Madras has received 170 treasures from 1991 and among them 61 treasures contained coins; 2510 gold coins, 527 silver coins, 1379 copper coins and 27 kilograms of Raja Raja Chola copper coins. In the past four years it is noticed that Dharmapuri, North Arcot, Ambedkar, South Arcot Salem, Madurai districts have contributed large coin treasures.

The confiscated coins are deposited in the nearest Government Museums by the Judiciary Department.

2.5 Antiquities (Export Control) Act. 1947

In order to prevent the export of antiquities and art objects the Government of India enacted Antiquities (Export Control) Act of 1947. According to this Act, coin, sculpture, manuscript, epigraph or other works of art or craftmanship, any article, object or thing detached from a building or cave; any article object or thing illustrative of science, art, crafts, literature, religion, costumes, morals or policies in bygone ages; articles, any object or thing declared by the Central Government by notification in the official Gazettee to be antiquity for the purpose of this Act- which has been in existence for not less than one hundred years.

3. Metals used in coins

In India the earliest coins found are Indian punch marked coins and Roman gold, silver and copper coins. Both copper and silver punch marked coins are found in plenty. Gold coins were also in use. The following table tells the various metals used in coin minting in Tamil Nadu.

TABLE 1

Alloys used in coins and their constituents

Name of the Metal/ Alloy	Constituent	Metals
Red gold	Gold 90%	Copper 10%
White gold	Gold 90%	Silver 10%
Electrum	Silver 70%	Gold 30%
Debased Silver	Silver 60-90%	Copper 40-10%
Pewter	Lead 20%	Tin 80%
Coinage Bronze	Copper 90%	Tin 10%
Bell-Metal	Copper 78%	Tin 22%
Billon	Copper	Silver
Potin	Copper, Tin,	Lead, Silver

4. Minting of Coins

Coins were minted in mints from ancient times. Both metallic and terracotta moulds[6] were used for the minting of coins. Two methods were in vogue in minting coins[7]. One is by casting of coins in moulds and the other is by punching marks on cut metal sheets. The cast-coins are durable whereas worked coins corrode easily.

5. Conservation of Coins

In order to preserve the coins well one must have some knowledge about the metals, composition of the coin, condition of the coin and the environment at which the coins were found in the past.

5.1 History of metals

5.1.1 Gold

Gold was found in nature in Libya and Spain and was used for coinage at about 700 B.C. Later it was used until about 400 B.C. Pure gold is never

present in coins, as gold is a very soft metal.

5.1.2 Silver

Silver is rare in nature. Silver came into use only after gold. The earlier use of silver was found in Harappa and Mohenjodaro.

5.1.3 Lead

Lead was considered to be the chief metal in the early days. The Egyptians used lead even prior to 5000 B.C. In Tamil Nadu Pandya lead belonging to 200 A.D. had been received as treasure trove [8].

5.1.4 Copper

Copper had been used in North Iran around 8500 B.C. In India copper was in use in the Indus Valley and its period is B.C.4000-3000.

TABLE 2

Physical properties of metals

Metals	Gold	Silver	Lead	Copper	Zinc	Tin	Aluminium	Nickel
M.Pt.°C.	1063	961	327	1084	419	232	658	1455
Sp. Gr.	1933	10.1	11.4	8.9	7	7.3	2.6	8.9

5.2 Factors affecting coins

Metals as materials have more strength and flexibility of manipulation than stone, clay or wooden objects; but when it comes to chemical stability (except gold, silver) fall far short of the latter. They are susceptible to many factors which bring about their deterioration, resulting in the formation of deleterious compounds conducive to further deterioration and the ultimate transformation into forms (ores/ minerals) in which form(s) they occur in nature.

When coins are buried for a long time under certain conditions that are reasonably constant, they tend to attain a state of equilibrium. On accidental digging, these coins are once again exposed to yet another entirely new enviornment

up setting the earlier equilibrium in which they had been conditioned; and owing to such series of changes, most of the coins are profoundly affected. Metallic objects buried in salty ground are exposed not only to moisture but also to the action of corrosive salts dissolved in the ground water. In short when buried coins are exposed to a new environment it may cause a new type of corrosion to break out afresh as they once again tend to adapt themselves to the new conditions. The deteriorating factors affecting coins are, (i) relative humidity/temperature, (ii) air/ contaminated air and (iii) lack of maintenance.

5.2.1 Relative humidity/temperature

Humidity is the measure of moisture content in air/soil. Humidity brings about deleterious effects on metallic antiquities. Under excessive wet conditions corrosion of coins is encouraged. In damp and hot conditions bacterial and fungal growth further facilitate corrosion.

In Tamil Nadu the tropical climate is prevailing and it is unfavourable for the upkeep of the coins. Generally, the relative humidity in Madras is very high, i.e. above 90% during July to January. The humidity is very low down to 27% during the month of June. There is always a difference in the relative humidity and temperature inside and outside the galleries, which are not favourable for the long term preservation of antiquities. Relative humidity between 45% - 60% and temperature between 20-25°c is ideal for coins under which condition the deterioration will be minimal.

5.2.2 Air/Pollutants

Oxygen, Carbon dioxide, oxides of sulphur and nitrogen, hydrogen sulphide, chloride spray, etc. present in the air adversely affect the coins forming oxides, carbonates, sulphates, sulphides, nitrides and other complex corrosion products. The chloride salt spray present in the atmosphere along sea shores adversely affect metal antiquities, forming the corresponding chlorides. Hydrogen sulphide tarnishes metallic surfaces to the corresponding sulphides.

5.2.3 Lack of maintenance

Prolonged exposure to unoptimised temperature, humidity, etc., careless handling, improper package, storage, transit, etc. also affect coins to a great extent.

6. Technical Study of Coins

To have a better understanding of the preservation of coins one must know the composition of coins, corrosion products and the metallographic structure of the coins.

6.1 Composition of Coins

The constituents of the coins are analysed both by non-destructive and destructive means.

6.1.1 Non-destructive analysis

The author has collected samples by non-destructive means, electrograhicall[9] and analysed by Weisz ring oven technique.[10] Electron spectroscopy for chemical analysis is yet another non-destructive instrumental method, the author has successfully employed to find out the composition. Specific gravity measurements is the physical method by which the composition of coins has also been found out.

6.1.2 Destructive means

Samples have been filed from the coins and atomic absorption spectroscopic analysis and gravimetric analysis have been carried out when duplicate coin is available for analysis.

6.2 Metallographic Studies

metallographic studies are made on the polished surfaces of coins to see whether the coins are cast or worked. The corrosion type is also revealed from metallographs.

TABLE 3

Precentage composition of some of the Tamil Coins

Coin	Silver	Lead	Copper	Tin	Zinc	Iron	Gold
South Indian Panam (Gold)	17.3	-	13.9	-	-	-	68
Punch marked (Silver)	70.8	1.25	25.0	-	1.85	-	-
Raja Raja Chola (Silver)	89.82	-	10.18	-	-	-	-
Early Paṇdya (Lead)	0.0038	65.24	30.76	0.004	3.75	0.0372	-
Satavahana (Lead)	0.004	95.01	0.0017	0.0035	4.25	0.0004	-
Pandya Andipatti (Lead)	0.00042	95.0	0.081	0.0051	4.5	0.0008	-
Pallava (Lead)	0.0008	42.18	18.00	23.93	2.95	11.31	-
Punchmarked (copper)	5.14	1.05	52.02	-	1.08	0.30	-
Pandya (Copper)	0.0046	3.25	84.14	3.469	2.90	5.90	-
Kongu Chera (Copper)	0.0001	3.75	79.02	10.93	3.15	2.9	-
Raja Raja Chola (Copper)	0.0004	0.43	95.01	1.374	2.50	1.01	-
Kulothunga Chola (Copper)	0.0123	2.75	79.13	14.01	3.25	1.70	-
Sundara Pandya (Copper)	0.0012	3.65	89.12	1.85	3.42	1.80	-

7. Conservation of Coins

Two important aspects of conservation of coins are:

1) Removal of the corrosion products from the coins and

2) arresting the corrosion of the coins.

7.1 Removal of the corrosion products

If we remove the corrosion products of the coins completely then only it is possible for the protection of the coins from further deterioration. Coins of different metals and alloys can be cleaned by (a) physical method, (b) chemical method and (c) electro chemical / reduction method, (d) combination of all or combining one with the other

7.1.1 Physical method

The silicious adherent matter and corrosion products are removed by means of chisel and hammer, knife, needle, vibro tools, etc. The patination (aesthetic colour) of the coins will be retained by these techniques. Ultrasonic cleaner, using soap solution, cleans off the unwanted adherent materials. Since no chemical is used in this method it is the safest method, but a time consuming one. Careless cleaning will remove the details of the coins.

7.1.2 Chemical method

The removal of unwanted matter and the corrosion products on the coins by chemicals is chemical method. Only mild and less concentrated solutions are used in this method. Citronella oil has been found much useful to remove the copper corrosion products from the coins.

7.1.2.1 Gold Coins

Gold coins do not corrode; but all found to be covered with some brown or white adherent matter. In such cases, the coins were cleaned with lissapal, a soap solution. The gold coins appear bluish green due to the transfer of corrosion products from the brass container or the copper present in the coins. In such cases, they are immersed in a 10% solution of ammonia and washed with warm water. If the gold coins are covered with white calcareous materials, the gold coins are kept in 2% nitric acid for 3 minutes and washed.

7.1.2.2 Silver Coins

Buried silver coins appear bluish green, due to the corrosion of copper

associated with silver. In such cases the coins are cleaned by immersing them in alkaline Rochelle salt solution (15 gms of Rochelle salt, 5 grams of Sodium hydroxide in 100 cc of distilled water). This treatment removes the corrosion due to copper. Silver coins appear black (Silver sulphide) or white (Silver chloride) depending on the type of corrosion. The black corrosion is removed by immersion and brushing in 10% formic acid. If the black colour is hard the coins are immersed in hot 10% formic acid. If, the coins appear white, it is due to silver chloride. These coins are immersed in dilute ammonia solution. If the white deposit is hard, then methylated ammonia is used to remove the hard white deposits. In case the silver coins are found to contain black and white deposits the coins are treated in formic acid and ammonia alternatively.

7.1.2.3 Lead coins

Lead coins are covered with lead carbonate powder. Unless the corrosion products are removed completely the corrosion goes deeper into the coins and they are completely damaged [10]. Lead coins are immersed in 5% dil Acetic acid and then immersed in 5% sodium hydroxide to neutralise the acid and then washed, dried and a protective coating is given. Too much immersion in sodium hydroxide solution will destroy lead metal and therefore the coins should not be kept too long in sodium hydroxide.

Ion-exchange resin treatment is yet another approach to treat, especially, corroded lead antiquities. The corroded lead coin is placed in contact with granules of treated ion-exchange resin (Amberlite IR 120) covered with warm distilled water for about 20-30 mts. Metallic lead is unaffected, but incrustations of lead carbonate / basic lead carbonate gradually dissolve away and lead cations are removed by the Amberlite IR - 120. The resin can be rejuvenated by dilute nitric acid.

7.1.2.4 Copper coins

If we examine the layers of corrosion of copper it is found that bluish green corrosion layer is found over brown corrosion layer. In order to remove the bluish green layer the coins are immersed in alkaline Rochelle salt solution.

Sometimes there will be a reddish brown oxide layer, which can be removed by immersing the coins in 10% citric acid. Immersions in these solutions are repeated till the corrosion products dissolve. At times a 10% solution of hydrogen peroxide is used to clean copper coins after the immersion in alkaline Rochelle salt solution. If the aesthetic bluish green colour is to be preserved the coins are immersed in 10% sodium sesque carbonate solution till the solution gets faintest blue tinge. By this procedure the metal chlorides get converted into oxides and / or to other harmless yet protective products and thereby the coins are preserved.

Buried coins coated with a heavy white deposits of calcareous materials such as calcium carbonate and magnesium carbonate are soaked for about a week in 5% aqueous sodium hexameta phosphate in which the calcareous deposits are soluble.

7.1.3 Electrochemical method

The electrochemical reduction involves the reduction of the corrosion products by nascent hydrogen evolved by the action of 10% sodium hydroxide on zinc granules/powder on the affected spots.

7.1.4 Electrolytic reduction

The corrosion (oxidation) of metallic artefacts is usually an electrolytic process. The removal of the oxidative corrosion process can be effected through reductive electrolyses. Reduction is usually carried out in an electrolytic cell keeping the antiquity as the cathode with two strips of iron gauze suspended on either side of the coin or a cylinder of the same material enclosing the objects all round, as the anode in a 5% aqueous sodium hydroxide/sodium carbonate/ acetic acid or formic acid electrolytic bath. Current is passed from direct current supply from a 1-50 volts source and an optimum density (2 amps per dm^2 with respect to cathodic object) for a few to several hours depending on the thickness of the encrustations. The corrosion products on the antiquity are reduced and removed by alternate burshing and washing until the hidden details are exposed with all its intrinsic artistic details[11].

7.2 Arresting corrosion

In some of the excavated and treasure trove objects it is noticed that the corrosion has proceeded to an extreme stage where very little metal is left intact. In such cases objects can best be conserved by stablising the corrosion products formed. 2% Benzotriazole in water or alcohol forms a complex with chlorides and oxides. This process arrests further corrosion. In case the corrosion is so severe, this treatment may be preceded by a 5% sodium carbonate immersion.

8. Intensive washing

Intensive washing is very important in the conservation of coins. Chemicals are used in the treatment of coins it should be seen that the residual chemicals should be removed otherwise the residual chemicals will react further and coins get deteriorated. The coins are washed well to remove all the residual chemicals. This process is repeated with hot water to ensure complete removal of chemicals. Alternate heating and cooling will successfully remove the residual chemicals.

9. Consolidation and protective coating

The coins which are very fragile and highly mineralised need to be packed up with a consolidative material which is reversible. In the Government Museum, Madras in the 1950s 17.5% Paraffin wax in benzene, 2% Celluloid, 12% vinyl acetate in spirit were used for protective coating on coins[12], But, nowadays 2% solution of polyvinyl acetate in acetone-toluene mixture is either applied on the coins or the coin is impregnated with it.

10. Training

The coins have to be checked periodically and treated whenever necessary. Unless the custodians know the preservation methods the coins under their custody will get deteriorated. With this idea, a course on 'Care of Museum Objects' is conducted in the Conservation Laboratory of the Government Museum, Madras for a month. Moreover, this subject is being familiarised through lectures and publications with the idea of propagating the preservation techniques.

11. Storage of Coins

At present in the Department of Museums, coins are kept under paper envelopes properly labelled and kept under wooden and steel cabinets. Proper better storage is under consideration.

Metals can corrode if there are certain volatile materials in the enviornment in which they are stored. Acid- free papers should be used; wooden cabinets to be avoided for lead coins.

Well seasoned wood and wood composites such as plywood, fibre board and block board are generally suitable for gold and silver. Plastic cabinets and trays are suitable for all types of coins. Stove enamelled metal cabinets can be used for storage of all types of coins. Paper/boards used should be of archival quality.

It is always better to keep coins without abrasion, also without the contact of the atmospheric pollutants and moisture.

12. Conclusion

Coins received through various means should be well documented, analysed, and catalogued. By this way forgery can be avoided. Custodians of coins, curators, coin collectors should have a thirst for the preservation of coins, then only the coins under their custody will be checked and suitable preservation methods will be adapted for their preservation for posterity. The general public who notices the treasures should help the Government by handing them over to the Collector for preserving them in the museums.

BIBLIOGRAPHY

1. Nandhivarman III grant to Sabha Rieshvara Temple, Epigraphia,vol xx,52
2. Sekkilar, *Periyapuranam*,verses,568-570.
3. Kandiya,H.N,(1981),'Vahalakad Inscription', *Tamil Malar*, Madurai.
4. Thirugnanasampandam, K.A,(1989), *Kanchi Pallava coins*, Erode.

5. Jeyaraj,V., (1991), 'Story of coins', *Tamilarasu*, Madras.

6. Raman,K.V., and Shanmugam,P. (1991), *Terracotta coin moulds from Kanchipuram, Studies in South Indian coins*, Vol I, Madras.

7. Jeyaraj, V., (1990), *Correlation between composition, metallograpic structure and corrosion products of metallic antiquities*, Madras University (Thesis).

8. Harinarayana, N., *(1977), Some observations on the treatment of a hoard of lead coins from Andipatti, Archaelogical studies*, Vol II,65-70.

9. Fritz, H.Z,(1929),Anal.Chem., 78,418.

10. Herbert Weisz (1970), *Micro analysis by Ring oven technique*, Pergamon Press.

11. Paramasivan, S., (1941), 'Electrolytic restoration of bronze statues and inscribed copper plates', *Proceedings of the Indian Academy of Sciences, Vol*-XIII, No.1, sect A.

12. *Preservation Register*, Government Museum, Madras.

Panel Session 11 / குழு அமர்வு 11

Tamils Migration / தமிழர் புலம்பெயர்வு

50

அயல்நாடுகளில் தமிழரும் தமிழும்

பழ. முத்தையா

முன்னுரை

இருபத்தியாறு ஆண்டுகாலமாக மேலைநாடுகளில் வாழ்ந்து வரும் நான் நேரடியாகப் பெற்ற அனுபவத்தைக் கொண்டும், நான் செய்த ஆய்வுகளுக்குக் கிடைத்த முடிவுகளைக் கொண்டும், நான் படித்து அறிந்த செய்திகளின் துணைகொண்டும், உலகில் பரந்து வாழ்ந்து வரும் தமிழர் அனைவருக்கும் பயன்தரும் என்று கருதி இக்கட்டுரையை எழுதியுள்ளேன். தமிழர்கள் எப்பொழுது, எதற்காக, எப்படித் தாய்நாடு விட்டு இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலேசியா, தென்ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கானடா, நியுசிலாந்து, ஜெர்மனி, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கும், சிங்களம், புட்பகம், சாவகம், மொரீசியசு, ஃபிஜி போன்ற தீவுகளுக்கும் குடியேறினர் என்று ஆய்வு செய்யும்போது கீழே கண்ட உண்மைகள் தெளிவாகின்றன.

1000 ஆண்டுகளுக்குமுன்பே தமிழர்கள் தாயகத்தை விட்டு வாணிகத்தின் பொருட்டும், தொழில் செய்வதற்காகவும் வேற்றுநாடுகளுக்குச் சென்றுள்ளார்கள். மொரீசியசு நாட்டில் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகத் தமிழர்கள் குடியேறியதாக வரலாறு கூறுகின்றது. 1850 ஆம் ஆண்டு முதல் பர்மாவுக்கு நகரத்தார் சென்றதாக ஆய்வுகள் கூறுகின்றன. அதன் பிறகு, இடைப்பட்ட காலத்தில் வேலை தேடியும், வேற்றுநாடுகளில் வாழ்வதற்காகவும் தமிழர் சென்றுள்ளனர். சமீபகாலத்தில் மேலை நாடுகளில் கல்வி பயிலுதற்காகவும், தொழில் நுணுக்கப் பயிற்சி பெறுவதற்காகவும், அந்த நாடுகளில் வாழ்வதற்காகவும் சென்றுள்ளனர்.

மேலே குறிப்பிட்ட காரணங்களுக்காக அயல்நாடுகளுக்குச் சென்ற தமிழர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

* தமிழை முறையாகப் பயின்ற பிறகு வேற்று நாடுகளுக்குச் சென்றவர்கள் -இவர்களுக்குத் தமிழ் பேசப் படிக்கத் தெரியும். இவர்கள் தமிழ் இலக்கியங்களிலும், கலை மற்றும் கலாச்சாரத்திலும் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள்.

* பள்ளிச் சிறுவர் சிறுமிகளாக இருந்தபோதே, தம் தாய்தந்தையரோடு வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் - இவர்கள் பள்ளிகளில் கொஞ்சம் தமிழ் கற்றவர்கள்.

* கைக்குழந்தைகளாக இருந்தபோதே வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் - இவர்களுக்குத் தம் தாய்தந்தையரிடம் இருந்தே தமிழைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. இவர்கள் தமிழை மழலை மொழியில் பேசத் தெரிந்தவர்கள்.

